# உட்டோப்பியன் சோஷலிஸமும் விஞ்ஞான சோஷலிஸமும்

வி. இ. லெனின்



# உட்டோப்பியன் சோஷலிஸமும்
# விஞ்ஞான சோஷலிஸமும்

PUBLIC LIB.
5 -DEC1973
MADRAS

# உட்டோப்பியன் சோஷலிஸமும் விஞ்ஞான சோஷலிஸமும்

கட்டுரைகளும் சொற்பொழிவுகளும்


**வி. இ. லெனின்**

தமிழாக்கம்:

ஆர். எச். நாதன்



PUBLIC LIBRARY

5-DEC 1973

MADRAS



நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்.,

6, நல்லதம்பி செட்டி தெரு,

சென்னை-2.



NCBH

முதல் பதிப்பு : ஆகஸ்டு, 1973

Tamil Translation of
ON UTOPIAN AND SCIENTIFIC, SOCIALISM
(Articles and Speeches)
by *V. I. LENIN*
Original Published by
PROGRESS PUBLISHERS, MOSCOW

விலை ரூ. 5-00

அச்சிட்டவர்:
நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ்
சென்னை-2

# உள்ளடக்கம்


பக்கம்

முன்னுரை ... 1

1. மக்களின் நண்பர்கள் எப்படிப் பட்டவர்கள் அவர்கள், சமூக ஜனநாயக வாதிகளை எப்படி எதிர்த்துப் போராடுகிறுர்—*என்பதிலிருந்து* ... 12

2. நமது செயல் திட்டம் ... 18

3. நரோடிஸத்திலிருந்து மார்க்ஸிஸத்திற்கு *கட்டுரை ஒன்று* ... 25

4. சோஷலிசமும் விவசாயிகளும் ... 35

5. குட்டி பூர்ஷ்வா சோஷலிஸமும், பாட்டாளி மக்களின் சோஷலிஸமும் ... 48

6. 'விவசாயிகள் காங்கிரஸ்' வி. காலினினுடைய கட்டுரைக்கு இடையில் *சேர்ந்ததிலிருந்து* ... 61

7. பாட்டாளி மக்களும், விவசாயிகளும் ... 62

8. முதல் ரஷ்யப் புரட்சியில் 1905—1907 சமூக ஜனநாயகத்தின் நிலவுடைமை பற்றிய செயல் திட்டம் *—என்பதிலிருந்து* ... 68

9. ஹெர்சன் நினைவாக ... 76

10. சீனுவில் ஜனநாயகமும் நரோடிஸமும் ... 87

11. இரண்டும் உட்டோப்பியாக்கள் ... 96

12. மார்க்ஸியத்தின் மூன்று உற்பத்தி ஸ்தானங்களும், மூன்று உறுப்புகளும் *என்பதிலிருந்து* ... 103

13. இடதுசாரி நரோடிஸமும், மார்க்ஸியமும் ... 106

14. கார்ல் மார்க்ஸ் ... 110

மார்க்ஸியத்தின் ஒரு மேலோட்ட விளக்கத்தோடு

வாழ்க்கைபற்றி சுருக்கமான வருணனையும்

சோஷலிசம் ... 110

பாட்டாளி மக்களின் வர்க்கப்

போராட்டத்தின் செயல் தந்திரங்கள் ... 115

15. மார்க்ஸியத்தின் ஒரு கேலிச்சித்திரமும்,

ஏகாதிபத்திய பொருளாதார வாதமும்—

என்பதிலிருந்து ... 122

16. பயமுறுத்திக் கொண்டிருக்கும் ஆபத்து, அதை

எப்படி சமாளிப்பது என்பதிலிருந்து ... 124

சோஷலிசத்தை நோக்கி முன்னேறுவதற்கு

நாம் அஞ்சினால் நாம் முன்னேறிச் செல்ல

முடியுமா ? ... 124

17. அரசும் புரட்சியும்—என்றதிலிருந்து அரசு புரட்சியில்

பாட்டாளி மக்களின் கடமைகள் ஆகியவை

பற்றி மார்க்ஸிஸ்டு தத்துவம். 5ஆம் அத்தியாயம்

அரசு உலர்ந்து போவதின் பொருளாதார

அடிப்படை ... 130

1. மார்க்ஸ் இந்தப் பிரச்சினையை அறிமுகப் படுத்துவது ... 130

2. முதலாளித்துவத்திலிருந்து, கம்யூனிஸத்திற்கு மாறிச் செல்வது ... 133

3. கம்யூனிஸ்ட் சமுதாயத்தின் முதல் வளர்ச்சிப்படி ... 141

4. கம்யூனிஸ்ட் சமுதாயத்தின் உயர்ந்த வளர்ச்சிப்படி ... 146

18. அனைத்து ரஷ்ய மத்திய நிர்வாகக் குழுவின்

கூட்டம் நவம்பர் 4 (17) 1917 ... 157

5-DEC 1973
MADRAS


| | | |
|---|---|---|
| | இடதுசாரி சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களின் ஒரு கேள்விக்குப் பதில் ... | 157 |
| 19. | தொழிலாளர்களுக்கும், உழைக்கிற, சுரண்டப்பட்ட விவசாயிகளுக்கும் இடையே நேச அணி ... | 159 |
| | 'பிராவ்தா'வுக்கு ஒரு கடிதம் | |
| 20. | போட்டியை எப்படி உருவாக்குவது? ... | 163 |
| 21. | சோவியத் சர்க்காரின் உடனடியான கடமைகள் என்பதிலிருந்து ... | 178 |
| | உழைப்பின் உற்பத்தித்திறனை உயர்த்துவது ... | 178 |
| | சோவியத் ஸ்தாபனத்தின் வளர்ச்சி ... | 181 |
| 22. | *1918*-மே *26* பொருளாதாரக் கவுன்சில்களின் முதல் காங்கிரசில் சொற்பொழிவு ... | 187 |
| 23 | ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்ஷவிக்) நகரில் கொள்கைத் திட்டத்திலிருந்து ... | 196 |
| | ரஷ்யாவின் பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தின் அடிப்படையான கடமைகள் ... | 196 |
| 24. | ஒரு மகத்தான துவக்கம் என்பதிலிருந்து பின்னணியில் உள்ள தொழிலாளர்களின் ஒரு பெரும் செயல் வீரம் 'கம்யூனிஸ்ட் ஸுப்போட்னிக்குகள்' ... | 215 |
| 25. | பாட்டாளி மக்களின் சர்வாதிகார சகாப்தத்தில் அரசியலும், பொருளியலும் ... | 238 |
| 26. | ரஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷவிக்) மாஸ்கோ நகர மாநாட்டில் ஸுபோட்னிக்குகளைப் பற்றிய அறிக்கை டிசம்பர் *20, 1919* ... | 255 |
| 27. | இடதுசாரி கம்யூனிசம் ஒரு இளம் பிள்ளைக் கோளாறு—என்பதிலிருந்து ... | 264 |
| | VI பிற்போக்குத் தொழிற் சங்கங்களில், புரட்சிக்காரர்கள் வேலை செய்யலாமா? ... | 264 |
| | X பல்வேறு முடிவுகள் ... | 265 |

28. வாலிபர் கழகங்களின் கடமைகள் ரஷ்ய இளங் கம்யூனிஸ்ட் கழகத்தின் மூன்றுவது அகில ரஷ்ய காங்கிரசில் சொற்பொழிவு அக்டோபர், 2, 1920 ... 270

29. எட்டாவது அகில ரஷ்ய சோவியத்துகளின் காங்கிரஸ் டிசம்பர் 2_-29, 1920 ... 295

மக்கள் கமிசார்கள் (அமைச்சரவை) குழுவின் வேலை அறிக்கையில் இருந்து; டிசம்பர் 22, ... 295

30. கூட்டுறவு பற்றி ... 303

31. நமது புரட்சி (என். ஸுகனேவின் குறிப்புக் களுக்குச் சேர்க்கை) ... 314

32. குறிப்புக்கள் ... 321

33. பெயர்ப்பட்டியல் ... 359

5-DEC

# முன்னுரை

உலகத்தின் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானவர்கள் முதலாளித்துவ சமூக உறவுகளை ஒழித்து விட்டு, சோஷலிஸத்தை நிர்மாணித்து விட்டார்கள், அல்லது நிர்மாணித்துக் கொண்டிருக்கிறார்கள். முன்னேற்றமடைந்த முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் முற்போக்கு சக்திகள் சோஷலிஸத்திற்காகச் செயலாற்றி வருகின்றன. ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் காலனி, அரைக்காலனி ஒடுக்கு முறையிலிருந்து சற்று முன் விடுதலை பெற்ற நாடுகள் ஒன்றன் பின் ஒன்றாக மேன்மேலும் முதலாளித்துவப் பாதையை நிராகரித்து விட்டு, சோஷலிஸத்தின் பால் பார்வையைத் திருப்பி வருகின்றன.

மனித இனத்திற்கு அபரிமிதமாகப் பேரிடர்களை இழைத்த சமூக அமைப்பு என்ற நிலையில் முதலாளித்துவம் அம்பலப்படுத்தப்பட்டு நிற்கிறது. விரல் விட்டு எண்ணக் கூடிய ரொக்கப் பண, தொழில் பெரு முதலாளிகள் கோடானு கோடி உழைக்கும் மக்களைச் சுரண்டுகிறார்கள்; காலனிகளில் உள்ள மக்களை காலனி ஆதிக்கம் ஈவிரக்கமின்றி அடக்கி ஒடுக்குகிறது; பெரும்பாலோரைக் கொன்று குவித்து வருகிறது. இரண்டு உலக மகாயுத்தங்கள் லட்சோபலட்சம் மக்களின் உயிரை மாய்த்தன; முதலாளித்துவ அரசுகளில் உள்ள அதி தீவிர பிற்போக்காளர்களின் வட்டாரங்கள் ஒரு மூன்றாவது உலக மகா யுத்தத்திற்கு தயாரிப்புகளைச் செய்து வருகின்றன. இது, மனித இனத்திற்குப் பேரழிவைக் கொடுக்கக்கூடிய முறையில் அச்சுறுத்தி வருகிறது. சரித்திரத் தின் குற்றவாளிக் கூண்டில் நிற்கின்ற முதலாளித்துவத்தின் முகம் இவ்வாறுதான் இருக்கிறது.

சோஷலிஸத்தை நோக்கிச் செல்லும் இன்றைய விரிவான வலிமை மிக்க இயக்கம் ஒரு இயல்பான, தவிர்க்க முடியாத வளர்ச்சிப் போக்காக இருக்கிறது. விஞ்ஞான சோஷலிஸ்டு

தத்துவத்தில் உலகம் முழுவதும் அமோகமாக அக்கறை காட்டப்படுவதை, இது விளக்கிக் காட்டுகிறது.

லெனினின் படைப்புக்களின் இந்தத் திரட்டு, வாசகர்களுக்கு விஞ்ஞான சோஷலிஸத்தின் பிரதானமான ஆழமான கருத்துரைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பைக் கொடுக்கிறது; மேலும் மார்க்ஸீயத்திற்கு முந்திய விஞ்ஞான ரீதியில் இல்லாத உடோபிய சோஷலிஸ்டு கருத்துக்களிலிருந்து, மார்க்ஸ் வகுத்த விஞ்ஞானத்திற்கு மாறிச் சென்றதைப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பைக் கொடுக்கிறது: மார்க்ஸின் முடிவுகள் சமூக உறவுகளின் ஆழமான, புரியக் கூடிய தத்துவ ரீதியான ஆராய்ச்சியின் ஆதாரங்களால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன; சரித்திரத்தின் முழு வளர்ச்சிப் போக்கும் இதை நிரூபித்துக் காட்டியிருக்கிறது. அப்படியானால், சோஷலிஸம் என்றால் என்ன?

1833-ல் பிரெஞ்சு உடோபிய சோஷலிஸ்டான பீரே லீரோ என்பவர் இந்த வார்த்தையை முதலில் உபயோகித்தார். சோஷலிஸம் என்பது, தீர்க்க முடியாத முரண்பாடான வர்க்கங்கள், அற்ற அல்லது சுரண்டல் இல்லாத, உற்பத்தி சாதனங்கள் சமூக உடமையாக இருப்பதை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயம். இத்தகைய ஒரு சமுதாயத்தைப் பற்றிய தொலை நோக்கைப் பற்றிய பிரதிபலிப்புகள் லீரோ எழுதுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே மனிதர்களின் மனதில் தோன்றி மறைந்து போயிருக்கின்றன. அடக்கி ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்கள், அவர்களுடைய சகிக்க முடியாத நிலைமைகளை எதிர்த்து ஆர்வத்தோடு ஆட்சேபணையைத் தெரிவித்ததையே இவை பிரதிபலித்தன.

மனித இனத்தின் உன்னதமான உள்ளங்கள்—16-வது நூற்றாண்டில் ஆங்கிலேயரான தாமஸ் மூர், 17-வது நூற்றாண்டில் இத்தாலியரான தொம்மாஸோ காம்பனெல்லா, 19-வது நூற்றாண்டில் பிரெஞ்சுக்காரர்களான ஹென்றி தா ஸென்ட்ஸைமன், சார்லஸ் பூரியர், ஆங்கிலேயரான ராபர்ட் ஓவன், ரஷ்யர்களான அலெக்ஸாண்டர் ஹெர்ஸன், நிகோலாய் செர்னி ஷெவ்ஸ்கி ஆகியவர்கள்—சோஷலிஸக் கொள்கையின் அடிப்படையில் சமுதாயத்தைப் புனரமைக்க வேண்டியது அவசியம் என்று பிரகடனம் செய்தார்கள்; அது எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றி அதிகமாகச் சிந்தனை செய்தார்கள். நமது இன்றைய காலத்தின் வெளிச்

-சத்தில் பார்த்தால், அவர்கள் தெரிவித்த கருத்துக்களில் பல சூதுவாதற்ற எளிமையானதாகவும், ஏற்றுக் கொள்ள முடியாததாகவும் இருக்கின்றன; அதே சமயத்தில் அவர்கள் சில அற்புதமான முறையில் பின்னால் வரப்போவதை முன் கூட்டியே கூறியிருக்கிறார்கள்.

இந்த உடோபிய சோஷலிஸ்டு சித்தாந்தங்களின் மிகவும் பலவீனமான பாகம் எது என்றால், இந்த சமூக லட்சியத்தை அடைவதற்கு என்ன செய்வது, அது எந்த விதத்திலும் சாத்திய மானதுதானா என்பதுதான். இந்த விஷயத்தில் உடோபிய சோஷலிஸ்டுகள் எதுவும் செய்யக்கூடிய சக்தியற்று விளங்கி ஞர்கள் என்பது தெளிவு. முதலாளித்துவத்தில் உள்ள குறை பாடுகள் அனைத்தும், தனி உடமையிலிருந்து உதயமாகின்றன என்று அவர்கள் கருதினார்கள். அவர்கள் கருத்து முற்றிலும் சரியானதேயாகும். ஆனால், மனித சமுதாயத்தில் தனி உடமை எவ்வாறு வந்து நிலைநாட்டப்பட்டது என்ற கேள்விக்கும், அல்லது அதை எவ்வாறு நீக்குவது என்ற கேள்விக்கும் அவர்களிடம் பதில் இல்லை. சோஷலிஸ்டு கருத் துக்களைப் பரப்புவதிலும், அன்று அதிகாரத்தில் இருந்தவர் களுக்கு வேண்டுகோள் விடுவதிலும் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டார்கள். உடோபிய சோஷலிஸத்தில் உள்ள முக்கிய மான குறைபாடு என்னவென்றால், சோஷலிஸத்திற்கு அழைத்துச் செல்லும் பாதையைக் கண்டு பிடிக்கும் சக்தி இல்லாமையும், சோஷலிஸத்திற்கான போராட்டம் ஒரு திட்டவட்டமான சமூக சக்தியைச் சார்ந்திருக்க வேண்டும் என்பதை உணரத் தவறியதுமேயாகும். உடோபிய சோஷ லிஸமானது "..... முதலாளித்துவ சமுதாயத்தைக் குறை கூறிற்று; அதைக் கண்டித்தது; சபித்தது......ஒரு சிறந்த முறையைப் பற்றி அதற்கு பார்வை இருந்தது; சுரண்டலின் ஒழுக்கக் கேடைப்பற்றி பணக்காரர்கள் புரிந்து கொள்ளும்படி செய்ய அது முயன்றது. ஆனால், உடோபிய சோஷலிஸம் உண்மையாகவே தீர்வு காணும் பாதையைச் சுட்டிக்காட்ட முடியவில்லை'' என்று லெனின் கூறினார்.

அதை எங்கு கண்டு பிடிப்பது? அதற்கு ஒரே ஒரு விடை மாத்திரமே இருந்தது. சமுதாயத்தை மாற்றியமைக்கும் சக்திகளையும் சாதனங்களையும் சமுதாயத்திலேயே தேடிக் கண்டு பிடிக்க வேண்டும். ஆனால், இதற்கு பொதுவாக சமு தாயத்தை தழுவி நிற்கிற விதிகளையும், குறிப்பாக முதலா ளித்துவ சமுதாயத்தைத் தழுவி நிற்கிற விதிகளையும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மனித சமுதாயத்தின் வளர்ச்சியைத் தழுவி நிற்கும் விதிகளை மார்க்ஸ்-ும் எங்கல்ஸ்-ும் கண்டு பிடித்தார்கள். இந்த அடிப்படையான கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு சரித்திர இயல் பொருள் முதல்வாத தத்துவத்தை அவர்கள் வகுத்தார்கள்; மனிதர்களின் விருப்பங்களுக்கும், எண்ணங்களுக்கும் புறம்பாக, எதார்த்த புற நிலை விதிகளுக்கு உகந்த முறையில் சமுதாயம் வளர்ச்சியடைகிறது; உற்பத்தியில் ஏற்படுகிற முன்னேற்றம்தான் அதன் வளர்ச்சியின் அடிப்படையாக இருக்கிறது என்பவையே இந்த நியதிகளின் அடிப்படை. "தங்கள் வாழ்க்கையின் சமூக உற்பத்தியில், மனிதர்கள் திட்டவட்டமான உறவு கொண்டு இறங்குகிறார்கள்; அவை, அவர்களுடைய விருப்பத்திற்கு உட்படாமல் சுயேச்சையாகவும், தவிர்க்க முடியாதவையாகவும் இருக்கின்றன; உற்பத்தி உறவுகளானது, பொருளியல் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியின் திட்டவட்டமான விதிகளுக்கு உகந்த முறையில் இருக்கின்றன. இந்த உற்பத்தி உறவுகளின் ஒட்டு மொத்தமான அமைப்பானது சமுதாயத்தின் பொருளாதார அமைப்பாக அமைகிறது; இந்த உண்மையான அஸ்திவாரத்தின் மீதுதான் ஒரு சட்ட ரீதியான அரசியல் மேல் கட்டமைப்பு எழுகிறது; அதற்கு உகந்த முறையிலேயே சமூக உணர்வின் திட்டவட்டமான வடிவங்கள் இருக்கின்றன. பொருளியல் வாழ்க்கையின் உற்பத்தி முறை பொதுவாக சமூகம், அரசியல், அறிவியல் ஆகியவற்றின் வாழ்வின் வளர்ச்சிப் போக்குகளை நிர்ணயிக்கிறது" என்று மார்க்ஸ் எழுதினார்.

மார்க்ஸ் தத்துவத்தின் வெளிச்சத்தில், சோஷலிஸமானது சமூக வளர்ச்சியின் புற நிலை வளர்ச்சிப் போக்கின் தவிர்க்க முடியாத விளைவுதான். இதன் பலனாக, ஒரு அநியாயமான சமூக முறையைக் கண்டனம் செய்வதானது, சமூக வளர்ச்சியின் விதிகளையும், எதிர்கால வாய்ப்புக்களையும் புரிந்து கொள்வதற்கு இடமளிக்கிறது. ("மக்களின் நண்பர்கள் எப்படி இருக்கிறார்கள், சமூக ஜனநாயக வாதிகளுடன் அவர்கள் எப்படி போராடுகிறார்கள்" என்ற லெனின் நூலில், பக்கம் 13-16- பார்க்கவும்.) அப்படியானால் : முதலாளித்துவத்தைத் தொடர்ந்து, அதன் முதல் கட்டம் சோஷலிஸம் என்று அழைக்கப்படுகிறது. கம்யூனிஸ்டு சமுதாய—பொருளாதார அமைப்பு தவிர்க்க முடியாத வகையில் ஏன் ஏற்பட்டுத் தீர வேண்டும்? என்ற கேள்வி எழுகின்றது

மார்க்ஸ் இதற்கு முழுமையாகப் பதில் கூறியிருக்கிறார்' அவர், முதலாளித்துவ சமூக—பொருளாதார அமைப்பைப் பரிசோதனை செய்வதற்கு கறாராக விஞ்ஞான ரீதியான பரிசிலனையைக் கைக்கொண்டு அது விலகுவதற்கு அமைந்துள்ள உள் அமைப்புகள் காரணமாகவே, முதலாளித்துவ சமுதாயமானது, இறுதியாக தன்னையே வீழ்த்தக்கூடிய சக்திகளை உண்டுபண்ணக்கூடிய தன்மை கொண்டுள்ளது. தொடர்ந்து ஒரு புதிய, மேலும் உயர்ந்த வடிவத்திலுள்ள சமூகக் கட்டமைப்பு, அதாவது கம்யூனிஸ்டு சமூக—பொருளாதார அமைப்பு உதயமாகிறது என்பதையும் நிலை நாட்டினார்.

உற்பத்தியில் அராஜகம், வேலையில்லாத் திண்டாட்டம், நெருக்கடிகள், வறுமையின் மிகுதி ஆகியவை ஒரு முனையிலும், மற்றொரு முனையில் செல்வமும் என்ற இரண்டோடும் தவிர்க்க முடியாத வகையில் இணைத்துக் கொண்டுதான் முதலாளித்துவம் வளர்கின்றது.

உற்பத்தி சாதனங்களில் தனி உடமை என்பதன் அடிப்படையில் வளர்கிற சமூக உறவுகளின் படைப்புதான் இவை அனைத்தும்; சமூக ரீதியில் உற்பத்தி, அதைத் தனிப்பட்ட முறையில் அபகரிப்பது ஆகிய இரண்டுக்கும் இடையே ஆழமாகிக் கொண்டிருக்கும் ஒரு முரண்பாட்டிலிருந்து இது ஏற்படுகிறது; முதலாளித்துவ உற்பத்தி முறை என்பதன் அடிப்படையில் கட்டப்பட்டுள்ள ஒரு ஏற்பாடு இது. ஆகவே, தர்க்கத்திற்கு இடமளிக்காத·முடிவு இதுதான்; முதலாளித்துவத்தைக் "குணப்படுத்தவும்" முடியாது, அல்லது "திருத்தவும்" முடியாது; அதை "சுபீட்சமானதாகவும்" மாற்றியமைக்க முடியாது; குறைபாடுகள் இல்லாததாகவும் மாற்றியமைக்க முடியாது. இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது; அதாவது முதலாளித்துவ உற்பத்தி முறையையே நீக்கிவிட வேண்டும். முதலாளித்துவ சமுதாயத்தின் எதார்த்த வளர்ச்சிப்போக்கு அந்தத் திசையில் தான் துல்லியமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. உற்பத்தியின் சமூகத் தன்மையையும், முதலாளித்துவத்தின் கீழ் மேன் மேலும் அது சமுதாயத் தன்மை அடைவதைப் பாருங்கள். ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கு ஏராளமானவர்கள் தேவைப்படுகிறார்கள்; ஆனால், அந்தப் பொருள், பலரது உழைப்பின் படைப்பான அந்தப் பொருள், ஒரே ஒரு மனிதனின் சொத்தாக மாறுகிறது; அதாவது தொழிற்சாலை, இயந்திரம், சுரங்கம் போன்றவைகளைச் சொந்தமாக வைத்திருக்கும் மனிதனின் சொத்தாக

மாறுகிறது. உற்பத்தியின் சமூகத் தன்மைக்கு உகந்த முறையில் அபகரிக்கும் வடிவத்தைக் கொண்டுவர வேண்டிய பொருளாதாரத் தேவையானது, ஒவ்வொரு தடை வேலிக்கும் குறுக்கே வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.

விஞ்ஞான ரீதியில் வகுக்கப்பட்ட சோஷலிஸ்டு தத்துவமானது, தனிச் சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவம் தவிர்க்க முடியாத வகையில் நீக்கப்பட்டு, சோஷலிஸம் வெற்றி பெறும் என்பதை நிரூபித்துக் காட்டி விட்டது.

குறிப்பிட்ட விதிகளின் அடிப்படையிலான சமுதாய வளர்ச்சியே சரித்திரம் என்ற விஞ்ஞான ரீதியான சரித்திரம் பற்றிய கருத்தும், முதலாளித்துவ சுரண்டலின் சாரத்தை அம்பலப்படுத்தி முதலாளித்துவம் தனது வளர்ச்சியின் மூலமாகவே தனது அழிவிற்கான பாதையைச் செப்பனிட்டுக் கொள்கின்றது என்று நிரூபணம் செய்து காட்டிய மார்க்ஸின் பொருளாதார சித்தாந்தமும், ஆகிய இவை இரண்டு அம்சங்களும் தான் சோஷலிஸ்டு உடோப்பியாவை, சோஷலிஸ்டு விஞ்ஞானமாக மாற்றியமைத்தன.

இங்கு மற்றொரு முக்கியமான அம்சம் இருக்கிறது. மனிதனுடைய விருப்பத்திற்கு அப்பால் சுயேச்சையாக எதார்த்த புற நிலைமை விதிகளுக்கு உகந்த முறையில் சரித்திரம் வளர்ச்சியடைகிறது என்பது உண்மையே; ஆனால் அதன் அர்த்தம், சரித்திரத்தில் எல்லாமே தானாகவே நிகழ்கிறது என்பதல்ல. சரித்திரம் இயற்கையிலிருந்து எதில் மாறுபடுகிறது என்றால், மனிதனின் செயல் மூலமாகத்தான் அதன் விதிகளை நடைமுறை சாத்தியமாக்க முடியும். அப்படியானால், நடை முறையில் சோஷலிஸத்தை நிலைநாட்டுவது எவ்வாறு சாத்தியமாகும்? கண்ணில் முதலில் தெரிவது என்னவென்றால், எல்லா மனிதர்களும் சோஷலிஸத்தை விரும்பவில்லை என்பதுதான். ஆளும் வர்க்கங்கள் பழைய சமூக முறையைப் பேணிப் பாதுகாப்பதையே விரும்புகிறார்கள். ஆகவே நமது கடமை என்னவென்றால் "நம்மைச் சுற்றிலும் உள்ள சமுதாயத்திலேயே சக்திகளைக் கண்டுபிடிக்க வேண்டும்; இந்த சக்திகள், அவைகளின் சமூக நிலைமை காரணமாக வலிமை மிக்க சக்தியாக அமைய முடியும், அமைய வேண்டும்: அதாவது, பழையனதைத் துடைத்தெறிந்து, புதியதைச் சிருஷ்டிக்கக்கூடிய சக்தி படைத்ததாக இருக்க வேண்டும்; போராட்டத்திற்கு அந்த சக்திகளுக்கு அறிவொளி ஊட்டி, ஸ்தாபன

ரீதியாக அமைக்கும் சக்தி படைத்ததாக இருக்க வேண்டும்'' இந்த சக்தி யார் என்றால், நமது இன்றைய காலத்தில் உள்ள இயந்திரத் தொழிலாளர்கள், அதாவது பாட்டாளி மக்கள். ஆனால், ஏன் பாட்டாளி மக்கள்? ஏனெனில், முதலாளித் துவத்தின் கீழ் இந்த வர்க்கம் தான் அதிகமாகக் கஷ்டப்படு கிறது; ஏனென்றால், தனக்குச் சொந்தமாக தனிச் சொத்து எதுவும் இல்லாததால், முதலாளித்துவத்தைப் பேணிப் பாது காப்பதில் இதற்கு ஆதாயம் எதுவும் கிடையாது. நிச்சய மாக, அதன் தளைகளைத் தவிர, அது வேறு இழக்கப் போவது எதுவும் கிடையாது அப்போதுகூட, உற்பத்தியில் பெரிதும் வளர்ச்சியடைந்த வடிவங்களோடு நெருங்கிய தொடர்புடை யது இந்த வர்க்கம் தான். சோஷலிஸம் தேவைப்படுகிறது என்பதில் இந்த வர்க்கத்திற்கு மாத்திரம் தயக்கம் எதுவும் கிடையாது. தொழிலாளி வர்க்கம் தனது விமோசனத்திற் காக மாத்திரம் போராடவில்லை, அடக்கி ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட அனைவரோடும் கூட்டாகச் சேர்ந்து கொண்டு போராடுகிறது என்பது உண்மையே. இறுதி முடிவைப் பார்த்தால், சோஷலிஸம் சமுதாயத்தின் உறுப்பினர்கள் அனைவரதும் நலனையும் பாதுகாக்கிறது என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமே கிடையாது. ஆனால், அதை நிலை நாட்டுவதற்காக நடத்தப்படும் போராட்டத்தில் வெற்றி பெற வேண்டுமானால், தனது நேச சக்திகளை நம்பியிருக்கும் தொழிலாளி வர்க்கம் தலைமை தாங்க வேண்டும். முடிவில் லாமல் தொடர்ச்சியாக தொழிலாள வர்க்கத்தை உற்பத்தி செய்வதால், முதலாளித்துவமானது தனது சொந்தச் சவக் குழியைத் தோண்டுகிறவர்களை உருவாக்குகிறது.

ஒரு வர்க்கம் என்ற நிலையில் முதலாளித்துவத்தை வீழ்த் தும் பொறுப்பை பாட்டாளி மக்களிடம் சரித்திரம் ஒப் படைத்திருக்கிறது என்ற முடிவானது, விஞ்ஞான சோஷ லிஸத்தின் மகுடத்திற்கு முத்துப்பதித்தது போல் திகழ்கிறது.

தனது சரித்திர பூர்வமான பொறுப்பை நிறைவேற்று வதற்கு, பாட்டாளி மக்கள் கடைப்பிடிக்கும் வழி வகைகள் என்னென்ன? வர்க்கப் போராட்டத்தைப் பற்றி, மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் ஆகியவர்கள் எழுதியுள்ள நூல்களில் பதில் கொடுக்கப்பட்டுள்ளன; உடோபிய சோஷலிஸத்தி திலிருந்து, விஞ்ஞான சோஷலிஸத்தை வேறுபடுத்திக் காட்டும் அம்சங்களில் இது ஒன்றாகும்.

சோஷலிஸமானது, ஒரு புனிதமான விருப்பம் அல்ல; ஒரு சுபீட்சமான எதிர்காலத்தைப் பற்றிய ஒரு மேலெழுந்த

வாரியான கருத்தும் அல்ல; ஆம், நிச்சயமாக அப்படி எல்லாம் இல்லை. அது, விட்டுக் கொடுக்காத வர்க்கப் போராட்டத்தின் உற்பத்திப் பொருளும், விளைவுமாகும். முதலாளித்துவத்தின் அதிகாரம் இருக்கும் வரை வேறு எவ்வித மாறுதலும் சாத்தியமில்லை அல்லது அந்த மாறுதலில் சோஷலிஸ அம்சம் இருக்காது.

ரஷ்ய புரட்சிகரமான இயக்கத்தின் அனுபவத்தை மேற்கோள் காட்டி, லெனின் நன்கு சுட்டிக் காட்டியிருப்பது போல், வேறு எந்த விதமான கருத்தும் உடோபயனிஞகவே இருக்கும். (உதாரணமாக, "முதலாவது ரஷ்யப் புரட்சியில் 1905—1907—சமூக ஜனநாயகத்தின் விவசாய கொள்கை திட்டம்", "நரோடிஸத்திலிருந்து, மார்க்ஸிஸத்திற்கு" என்ற லெனின் கட்டுரைகளைப் பார்க்கவும்). "மார்க்ஸின் விஞ்ஞான சோஷலிஸம் மாறுதல் வேண்டும் என்ற ஆர்வத்தை திட்டவட்டமான ஒரு வர்க்கத்தின் போராட்டத்தோடு இணைத்த போதுதான், சோஷலிஸ்டு கனவுகள் லட்சோப லட்சம் மக்களின் சோஷலிஸ்டு போராட்டமாக மாற்றப் பட்டது. வர்க்கப் போராட்டத்திற்கு வெளியே, சோஷலிஸமானது வெற்று வார்த்தையாக இருக்கும் அல்லது சூதுவாதற்ற கனவாக இருக்கும்" என்று லெனின் எழுதினார். அதனால் தான், சோஷலிஸத்தை வெற்றி பெறச் செய்வதற்கு சாத்தியமான, ஒரே ஒரு வழி என்னவென்றால், எல்லா வகையிலும் வர்க்கப் போராட்டத்தை வளர்க்க வேண்டும்; முதலாளித்துவத்திற்கு எதிராக உறுதியாக நடவடிக்கை எடுக்கக்கூடிய திறம் படைத்த சக்திகளை ஒன்று திரட்ட வேண்டும்; தயாரிப்புக்களைச் செய்து, சோஷலிஸ்டுப் புரட்சியை நடத்த வேண்டும். சோஷலிஸம் என்ற விஷயம், சம்பந்தமாக, சோஷலிஸ்டு சமுதாயத்தின் அடிப்படையான கோட்பாடுகளின் விஞ்ஞான ரீதியான குணும்சங்களை வாசகர்கள் கீழ்க்கண்ட நூல்களில் காணலாம்! "காரல் மார்க்ஸ்", "அரசும், புரட்சியும்", "ஒரு மகத்தான துவக்கம்" போன்ற லெனின் எழுதிய நூல்களைப் பார்க்கவும்.

விஞ்ஞான ரீதியான சோஷலிஸத்திற்கும், உடோபிய சோஷலிஸத்திற்கும் இடையே உள்ள மாறுபாடுகள் இவ்வாறு தான் பொதுவாக இருக்கின்றன. விஞ்ஞானத்திற்கு எல்லா விதமான அனுகூலங்களும் இருக்கின்றன; சரித்திரமே இதைச் சிறந்த முறையில் ஊர்ஜிதம் செய்திருக்கிறது. "மார்க்ஸீயக் கருத்துக்கள் பிசகற்றவை என்பதை, நடைமுறையில் உள்ள இன்றைய சமுதாயங்களின் எல்லா வகையான—அரசியல்,

பொருளாதார—வளர்ச்சியும், புரட்சிகரமான இயக்கத்தின் முழு அனுபவமும், அடக்கி ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் போராட்டமும் ஊர்ஜிதம் செய்திருக்கின்றன'' என்று லெனின் எழுதினார்.

நமது சொந்த காலத்திற்குத் திரும்பி வருவோம். காலனி அடிமைத் தனத்திலிருந்து புதிதாக விடுதலையடைந்த ஏராளமான நாடுகள் ஒரு சோஷலிஸ்டு சமுதாயத்தை நிர்மாணம் செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கின்றன. அவை முதலாளித்துவப் பாதையை நிராகரிக்கின்றன; பொது மக்களுக்கு வேதனை தரக்கூடியதாகவும், நம்பமுடியாத அளவு கஷ்டமானதாகவும் இருக்கிற மேற்கத்திய அனுபவத்தினூடே செல்ல அவைகள் மறுக்கின்றன. வேறு வகையில் கூறுவதென்றால், முதலாளித்துவத்தைத் தாண்டிச் சென்று, சோஷலிஸத்தை நோக்கி அவை போய்க் கொண்டிருக்கின்றன.

இது சாத்தியமானதுதானா? விஞ்ஞான சோஷலிஸம் முடியும் என்று கூறுகிறது; நவீன நிலைமைகளில், அது சாத்தியமே என்பது மாத்திரமல்ல, உண்மையில் அது தேவையும் கூட.

காலனி அடிமைத்தனத்திலிருந்து தப்பிக்கும் நாடுகள் முதலாளித்துவம் அல்லாத பாதையைப் பின்பற்ற முடியும் என்ற கருத்தை முன் வைத்தது. இதை மத்திய ஆசியாவிலுள்ள சோஷலிஸ்டு குடியரசுகளின் அனுபவமும் மங்கோலிய மக்கள் குடியரசின் அனுபவமும் நிரூபித்துக் காட்டியிருக்கிறது. ஆப்பிரிக்கா, ஆசியா, ஆகியவற்றின் அதிகமாக வளர்ச்சியடையாத நாடுகளில் இந்தப் பாதையில் முன்னேறிச் செல்வதற்கு விசேஷமாக அனுகூலமான நிலைமைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. முதலாவதாக, சக்திகளின் உலக அமைப்பில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இன்று, உலக சோஷலிஸ்டு அமைப்பானது, சமூக வளர்ச்சியில் மேன்மேலும் தனது நிர்ணயிக்கத்தக்க செல்வாக்கைச் செலுத்தி வருகிறது. உலக சோஷலிஸ்டு அமைப்பு இருப்பது விவசாயிகள், நகரத்தில் உள்ள சாதாரண நடுத்தர வர்க்கங்கள், சிறிய நடுத்தர முதலாளிகள், தேசபக்தி மனோபாவமுள்ள அறிவாளிகள் ஆகியவர்களின் ஆதரவோடு, அவர்களின் நலனுக்காக—இதை வலியுறுத்த வேண்டியிருக்கிறது; நிறைவேற்றப்பட்டுவரும் புரட்சிகரமான—ஜனநாயக மாறுதல்களுக்குச் சாதகமான நிலைமைகளைச் சிருஷ்டித்து வருகிறது; சோஷலிஸ்டுக் கொள்கையின் அடிப்படையில்

சமூக வாழ்வு முழுவதையும் புனர் நிர்மாணம் செய்வதற்கு சாதகமான நிலைமைகளைச் சிருஷ்டித்து வருகிறது. உலக சோஷலிஸ்டு அமைப்பானது, தேச விடுதலைக்காகவும், உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் சதி செய்யப்படும் எதிர்ப் புரட்சித் திட்டத்தை எதிர்த்தும் போராடிவரும் இளம் அரசு களின் முற்போக்கு சக்திகளுக்கு ஆதரவு கொடுத்து வருகிறது. புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளுக்கு சோஷலிஸ்டு அரசுகள் மகத்தான பொருளாதார உதவியைக் கொடுத்து வருகின்றன. அவைகளின் தொழில் வளர்ச்சியின் வேகத்தை மேலும் துரிதப்படுத்துவதன் மூலமாக ஏகாதிபத்திய அரசு களைப் பொருளாதாரத் துறையில் சார்ந்திருக்கும் தளைகளி லிருந்து தப்பிப்பது சுலபமாகப் படுகிறது.

புதிதாக விடுதலையடைந்திருக்கும் நாடுகளில் புரட்சிகர மான மாற்றங்களின் உண்மையான உள் அடக்கத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால், லெனின் எழுதி யிருக்கும் கட்டுரைகளைப் படிக்க வேண்டும்; அதாவது "நரோடிஸத்திலிருந்து மார்க்ஸிஸத்திற்கு'' என்ற கட்டுரை யையும், குறிப்பாக, "ஜனநாயகமும், சீனாவில் நரோடிஸமும்'' என்ற கட்டுரையையும் படிக்க வேண்டும்; இந்தக் கட்டுரை களில், லெனின் புரட்சிகரமான முதலாளித்துவ ஜனநாயகம், அதன் நடவடிக்கைகள் ஆகியவற்றின்பால் விஞ்ஞான சோஷலிஸத்தின் கண்ணோட்டம் என்ன என்பதில் கவ னத்தைச் செலுத்தியிருக்கிறார். அவை தாமாகவே சோஷ லிஸ்டு அல்ல; ஆனால், அவைகளின் முற்போக்குத்தன்மை பெரும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருப்பதால், அவைகளை முரணில்லாமல் தொடர்ச்சியாக செயல்படுத் தினால், அவை முதலாளித்துவமல்லாத பாதையில் வளர்ச்சி யைத் துவங்க முடியும், துவங்கி வருகிறது. இது சம்பந்தமாக லெனின் பின்வருமாறு எழுதினார்: "ஜனநாயகப் புரட்சியைப் பூர்த்தி செய்வதில் நாம் அதிக அளவுக்கு வெற்றியைப் பெற்றால், அந்த அளவுக்கு சோஷலிஸ்டுப் புரட்சியின் கடமை களை நாம் நெருக்கமாக அணுகுவோம்.''

இது, இன்றுகூட மெய்யாகவே இருக்கிறது. விடுதலை யடைந்த நாடுகளில் முற்போக்கு சக்திகளுக்கு தலைமை தாங்கும் புரட்சிகரமான ஜனநாயக வாதிகளின் பொதுவான ஜனநாயகச் செயல் திட்டத்தில் நிலப்பிரபுத்துவ உறவுகளை நீக்குவது, விவசாயச் சீர்திருத்தம், தனிப்பட்டவர்கள் மூல தனத்தைக் கட்டுப்படுத்துவது, ஒரு அரசு துறையை ஏற்படுத்துவது, அலலது ஒரு சோஷலிஸ்டு அமைப்பைக்கூட

ஏற்படுத்துவது, ஜனநாயகத்தை வளர்ப்பது, பொது மக்களின் பொது நலனையும், கலாச்சார மட்டத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பது, ஆகியவை அடங்கியிருக் கின்றன; இவைகளை முரணில்லாமல் தொடர்ச்சியாகச் செயல்படுத்தினால், இளம் நாடுகள் சோஷலிஸ்டு மாற்றங்களை நோக்கி அழைத்துச் செல்லும்.

விஞ்ஞான சோஷலிசத்தின் தத்துவத்தை ஆழமாகக் கற்றுக் கொள்வதும் மிக முக்கியமாக அதை நடைமுறையில் செயல்படுத்தும் திறமையும் சமூக முன்னேற்றத்தைப் பெரும் அளவிற்கு துரிதப்படுத்தும்; மேலும், முதலாளித்துவமல்லாத பாதையில் வெற்றிகளைப் பெருக்கும்.

இளம், விடுதலையடைந்த வளர்ச்சியடைந்து வருகிற நாடுகள் கஷ்டமான பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருக் கிறது. முதலாளித்துவமல்லாத பாதையைப் பின்பற்றி வரும் நாடுகள், சோவியத் குடியரசின் தொடக்க கால அனுப வத்திலிருந்து மகத்தான உதவியைப் பெறமுடியும்; லெனின் இதை ஆராய்ந்து, தொகுத்துக் கொடுத்திருக்கிறார். இந்தப் பிரச்சினைகள் சம்பந்தமாக ஏராளமான விவரங்களை இந்தத் தொகுப்பு வாசகர்களுக்கு வழங்குகிறது; ஏனெனில் லெனின் வாழ்கைமாலை சூடிய மக்களின் தொடக்க கால நடவடிக்கைகளில் அதிகமாகக் கவனத்தைச் செலுத்தினார்.

இவை அனைத்தையும் பற்றி இங்கு விரிவாக ஆராய்வது சாத்தியமல்ல, அல்லது தேவையும் அல்ல; ஆனால், ஒரு விஷயத்தை மாத்திரம் வலியுறுத்திக் கூற வேண்டியிருக்கிறது. மிக முக்கியமானது என்று லெனின் எதை திரும்பத்திரும்ப வலியுறுத்திக் கூறினார் என்றால், பொது மக்களின் அறிவு ஆற்றலையும், முன் முயற்சியையும் கட்டவிழ்த்து விட வேண்டியது அவசியமாகும்; எல்லாவகையான சமூகப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதில் பொது மக்களை ஈடு படுத்த வேணடும்; கருத்துக்களுக்கும், ஞானத்திற்கும் உயிர் கொடுக்கும் ஊற்று என்ற நிலையில் அவர்களைத் தொடர்ச்சி யாக அணுக வேண்டும். புதிய சமுதாயத்திற்காக அன்றாடப் போராட்டத்தில், பொது மக்களின் நாட்டங்களோடும், தேவைகளோடும், போராட்டத்தோடும், படைப்புத் திறன் உள்ள முயறசிகளோடும ஒன்றாக இணைவதில் வெற்றி பெறு கிறவர்கள், வெல்ல முடியாதவர்களாவார்கள்.

**இ. பெஸ்செரெவனிக்**

## "மக்களின் நண்பர்கள்" எப்படிப்பட்டவர்கள், அவர்கள் சமூக ஜனநாயக வாதிகளை எப்படி எதிர்த்துப் போராடுகிறார்கள்— என்பதிலிருந்து

சமூதாய இயலில் பொருள் முதல்வாதம் என்ற கருத்தே ஒரு மாமேதைத் தன்மை நிறைந்ததாகும். இயல்பாகவே, கொஞ்சகாலத்திற்கு அது மேலாராய்வுக்கு அடிப்படையான தற்காலிகக் கருத்தாக மாத்திரமே இருந்தது; ஆனால், சரித்திர இயல், சமூக இயல் பற்றிய பிரச்சினைகளைக் கண்டிப்பான முறையில் விஞ்ஞான ரீதியில் அணுகும் சாத்தியத் தன்மையை முதலில் சிருஷ்டித்தது அது தான். இதுவரையிலும் உற்பத்தி போன்றவைகளின் எளிமையான, முதன்மையான உறவுகளில் எப்படி ஈடுபடுவது என்பதைத் தெரிந்து கொள்ளாத சமூக இயல் வாதிகள் சட்டரீதியான, சமூகரீதியான வடிவங்களை நேரடியாக ஆராய்ச்சி செய்வதையும், கற்பதையும் மேற் கொண்டார்கள்; சம்பந்தப்பட்ட காலகட்டத்தில் உள்ள குறிப்பிட்ட மனித இனத்தின் கருத்துக்களிலிருந்து இந்த வடிவங்கள் தோன்றுகின்றன என்ற நிகழ்ச்சியின் மேல் தடுக்கி விழுந்து, அங்கேயே அவர்கள் நின்று விட்டார்கள்; சமூக உறவுகள் மனிதரின் மன நிலையால் நிலைநாட்டப் பட்டது போல் தோன்றிற்று. ஆனால் "சமுதாய ஒப்பந்த"[1]த்தின் கருத்துக்களில் முழுமையாகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் இந்த முடிவு, (உடோபிய சோஷலிஸத்தின் எல்லா வகையான முறைகளிலும் இதன் தடங்களைக் காணலாம்.) சரித்திர ரீதியான கருத்துக் குறிப்புகள் அனைத்திற்கும் முற்றிலும் முரணாக இருந்தது. சமுதாயத்தின் உறுப்பினர்கள் அவர்கள் வாழ்ந்து வருகிற சமூக உறவுகளின் சாராம்சத்தை ஏதோ ஒரு திட்டவட்டமான, முழுமையான, ஊடுருவிப் பரவுகிற ஏதோ ஒரு விதியால் கருத்தில் உருவாக்குகிறார்கள் என்ற நிகழ்ச்சி ஒருக்காலும் நிகழ்ந்ததே கிடையாது, அல்லது இப்பொழுது அவ்வாறு நிகழவும் கிடையாது. அதற்குமாறாக, மக்கள் திரள் இந்த உறவுகளுக்கு தன் உணர்வு இல்லாமல் தாங்களாகவே தங்களை மாற்றியமைத்துச் கொள்கிறார்கள்; திட்ட வட்டமான, சரித்திர ரீதியான சமூக உறவுகள்

அவை என்பது பற்றிய கருத்துக் கொள்ளுதல் அவர்களுக்குக் கொஞ்சம் தான் இருந்தது; உதாரணமாக, எந்த பரிமாற்ற உறவு களின் கீழ் மக்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கிறார் களோ, அதைப்பற்றிய ஒரு விளக்கம் சமீப காலத்தில் தான் கிடைத்தது. மனிதனுடைய சமூகக் கருத்துக்கள் முதலில் தோன்றியது வரையிலும் மிக ஆழமாக ஆராய்ச்சியை நடத்தி, இந்த முரண்பாட்டை பொருள் முதல் வாதம் நீக்கிற்று; கருத்துக் களின் படிப்படியான முன்னேற்றமானது, பொருள்களின் படிப் படியான முன்னேற்றத்தைச் சார்ந்திருக்கிறது என்ற அதன் முடிவு. ஒன்றே ஒன்றுதான். விஞ்ஞான ரீதியான உளநூலுக்கு முரணில்லாமல், இணக்கமானதாக இருக்கிறது. மேலும், மற்றொரு அம்சத்திலிருந்தும் சமூக இயலை விஞ்ஞானத் தின் மட்டத்திற்கு முதலில் உயர்த்தியது இந்த மேலாராய்வுக்கு அடிப்படையான தற்காலிகக் கருத்துதான். இதுவரையிலும், சமூக தோற்றத்தின் சிக்கலான வலை பின்னியது போன்ற அமைப் பில் எது முக்கியமானது, எது முக்கியமற்றது என்பதை வேறு படுத்திக் காட்டுவது சமூக இயல் வாதிகளுக்கு மிகக் கஷ்டமான காரியமாகவே இருந்தது (சமூக இயலில் தன்னேக்குப் பார்வைக்கு இதுதான் மூல வேராக இருந்தது); இத்தகைய ஒரு எல்லைப் பிரி வினைக்கு எதார்த்தமான எந்த அடிப்படைத் தத்துவத்தையும் அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. சமுதாயத்தின் அடிப் படை அமைப்பு என்ற நிலையில் “உற்பத்தி உறவுகளை”த்தனியே பிரித்தெடுப்பதன் மூலமாகவும், திரும்பத்திரும்ப நிகழ்வதின் பொதுவான விஞ்ஞான ரீதியான தத்துவத்தை இந்த உறவுகளுக்கு அனுஷ்டிப்பதைச் சாத்தியமாக்கியதன் மூலமாகவும் (சமூக இயலில் இதை அனுஷ்டிப்பதைத் தன்னேக்குப் பார்வையாளர்கள் மறுத்தார்கள்) பொருள் முதல் வாதம் முற்றிலும் எதார்த்தமான தத்துவத்தை நல்கிற்று. எண்ண முதல்வாத சமூக உறவுகளில் அவர்கள் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தது வரையிலும், (அதாவது அவை உருவெடுப்பதற்கு முன்பு, மனிதனின் உணர் வுகள் மூலம் கடந்து செல்கிறது என்பன போன்றவை) * பல் வேறு நாடுகளின் சமூகத்தோற்றங்களின் திரும்பத்திரும்ப நிகழ் வதையும், உருவொழுங்கையும் கவனித்துப் பார்க்க முடியவில்லை; ஆகவே, அவர்கள் விஞ்ஞானமும்— அதில் உள்ள நல்ல அம்சங்களை எடுத்துக் கொள்வது என்றால்— இந்தத் தோற்றங்களை விவரிப்ப தாகவும், கச்சாப் பொருள்களைத் திரட்டுவதாகவும் மாத்திரமே இருந்தது. பொருளியல் சமூக உறவுகளின் ஆராய்ச்சியானது (அதாவது மனிதனின் உணர்வுகள் மூலமாகக் கடந்து செல்லாமல்

* எல்லாக் காலத்திலும் சமூக உறவுகளின் உணர்வுகளைத் தான் குறிப் பிடுகிறோமே தவிர வேறு எதையும் அல்ல.

உருவெடுப்பவைகள்; உற்பத்திப் பொருள்களைப் பரிமாற்றம் செய்யும் போது, இங்கு உற்பத்தியின் ஒரு சமூக உறவு இருக்கிறது என்பதைக்கூட உணராமலே, மனிதர்கள் உற்பத்தி உறவுகளில் ஈடுபடுகிறார்கள்)— பொருளியல் சமூக உறவுகளின் ஆராய்ச்சி யானது, திரும்பத்திரும்ப நிகழ்வதையும், ஒழுங்கு படுத்தி இயங்கும் சக்திகளையும் உடனே கவனிக்கவும். ஒரே அடிப்படையான பொதுக் கருத்தில் - சமூக உருவமைப்பில் — பல் வேறு நாடுகளின் முறை களைப் பொதுமைப்படுத்துவதையும் சாத்தியமாக்கிறது. இந்தப் பொதுமைப்பாடு மாத்திரம் தான் சமூக தோற்றத்தை விவரிப்ப திலிருந்து (ஒரு மானசீகமான கண்ணோட்டத்தில் இவைகளை மதிப்பீடு செய்வதிலிருந்து) அவைகளைக் கண்டிப்பான விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி செய்வதைச் சாத்தியமாககிற்று; இது, உதார ணத்தின் மூலமாகச் சொல்வதென்றால், ஒரு முதலாளித்துவ நாட்டை மற்றொரு முதலாளித்துவ நாட்டிலிருந்து வேறு படுத்திக் காட்டுவதைத் தனியே பிரிக்கிறது; மேலும், அவை அனைத்திற்கும் பொதுவாக இருப்பதைப் பரிசிலனை செய்கிறது.

மூன்றாவதாகவும், இறுதியாகவும் மேலாராய்வுக்கு அடிப் படையான தற்காலிகக் கருத்தானது முதல் தடவையாக ஒரு விஞ்ஞான ரீதியான சமூக இயலை எப்படி சாத்தியமாக்கிற்று என்ப தற்கு மற்றொரு காரணம் என்ன வென்றால், சமூக உறவுகளை, உற் பத்தி உறவுகளாக உருமாற்றம் செய்து, பின்னால் கூறப்பட்டதை உற்பத்தி சக்திகளின் மட்டத்திற்கு உருமாற்றம் செய்தது, சமுதா யம் உருவெடுக்கும் வளர்ச்சியானது ஒரு இயல்பான சரித்திரத்தின் வளர்ச்சிப் போக்காகும் என்ற கருத்தமைவுக்கு ஒரு உறுதியான அஸ்திவாரத்தை நல்கிற்று. இத்தகைய ஒரு கருத்து இல்லை யென்றால், ஒரு சமூக விஞ்ஞானமே இருக்க முடியாது என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமே கிடையாது. (உதாரணமாக, தன்னுக்குப் பார்வையாளர்கள் சரித்திர ரீதியான தோற்றம் விதிக்கு ஒத்திருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டாலும் கூட, அவைகளின் பரிணாம வளர்ச்சி இயல்பான சரித்திரத்தின் ஒரு வளர்ச்சிப் போக்கு என்று கருதும் திறன் அவர்களிடம் கிடை யாது; திட்டவட்டமாக அதற்குக் காரணம் என்ன வென்றால், மனிதனின் சமூகக் கருத்துக்கள், லட்சியங்கள் ஆகியவற்றின் முன்பு அவர்கள் நின்று விடுகிறார்கள்; அவைகளை பொருளியல் சமூக உறவுகளாக உருமாற்ற முடியவில்லை. ஆயினும், பிறகு நாற்பதாம் ஆண்டு காலத்தில் இந்த மேலாராய்வுக்கு அடிப் படையான தற்காலிகக் கருத்தைத் தெரிவித்த மார்க்ஸ், உண்மை நிகழ்ச்சியோடு தொடர்பு கொண்ட (பின் வருவதைக் கவனிக் கவும்) மூலப்பொருளைக் கற்கத் துவங்கினார். சமூக பொருளா

தார உரு அமைவுகளில் ஒன்றை — பண்ட உற்பத்தி முறையை— எடுத்துக் கொண்டார்; ஏராளமான புள்ளி விவரங்களின் அடிப்படையில் (இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் இவைகளை அவர் ஆராய்ந்தார்) இந்த அமைப்புச் செயல்படுவதை ஆட்கொண்டு இயக்குவிக்கும் விதிகளைப்பற்றி, மிக்க விரிவான கூறுபாட்டாராய்ச்சியைக் கொடுத்தார். இந்தக் கூறுபாட்டா ராய்ச்சியானது, சமுதாயத்தின் உறுப்பினர்களிடையே உள்ள உற் பத்தி உறவுகள் என்ற ஒரே ஒரு எல்லைக்குள் தன்னைக் கட்டுப்படுத் திக் கொண்டிருந்தது; ஒரு விளக்கம் கொடுப்பதற்காக, இந்த உற் பத்தி உறவுகளின் துறைக்கு வெளியே உள்ள அம்சங்களுக்கு எக்கா லத்திலும் போகாமல், சமூக பொருளாதாரத்தின் பண்ட அமைப்பு எவ்வாறு வளர்கிறது என்பதையும், எவ்வாறு அது முதலாளித்துவ அமைப்பாக மாறுகிறது, என்பதையும், எவ்வாறு அது முத லாளி-பாட்டாளிகள் என்ற முரணுன வர்க்கங்களை (உற்பத்தி உறவுகளின் எல்லைகளுக்குள் முரணுக இருக்கின்றன) சிருஷ்டிக்கின் றன என்பதையும், சமூக உழைப்பின் உற்பத்தித் திறனை எவ்வாறு அது வளர்க்கிறது என்பதையும், அதன் மூலமாக இந்த முதலாளித் துவ அமைப்பின் அஸ்திவாரங்களுக்கே தீர்க்க முடியாத வகையில் முரணுக மாறுகிற ஒரு அம்சத்தை அது எவ்வாறு புகுத்துகிறது என்பதையும் பார்ப்பதைச் சாத்தியமாக்கினுர் மார்க்ஸ்.

"மூலதனத்தின் எலும்புக்கூடு" இப்படித்தான் இருக்கிறது. ஆயினும், முக்கியமான விஷயம் என்ன வென்றுல், இந்த எலும்புக் கூட்டோடு மார்க்ஸ் திருப்தி அடையவில்லை; "பொருளாதார தத்துவத்தில்" — இந்த வாசகத்தின் சாதாரண அர்த்தத்தில்— அவர் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள வில்லை; உற்பத்தி உறவு களின் மூலமாக மாத்திரமே சமுதாயத்தின் குறிப்பிட்ட உரு வமைப்பின் அடிப்படை அமைப்பையும், வளர்ச்சியையும் பற்றி விளக்கம் கொடுத்த அவர், அதே சமயத்தில் எல்லா இடங்களி லும் தொடர்ச்சியாகவும் இந்த உற்பத்தி உறவுகளுக்குப் பொருந்துகிற மேல் கட்டுமானத்தைக் கூர்ந்து ஆராய்ந்தார். இந்த எலும்புக் கூட்டிற்கு தசையையும் இரத்தத்தையும், கொடுத்தார். "மூலதனம்" இந்த அளவுக்கு அமோகமாக வெற்றி பெற்றதற்குக் காரணம், ஒரு "ஜெர்மானிய பொருளாதாரவாதி" யால் எழுதப்பட்ட இந்தப் புத்தகம் ஒரு உயிருள்ள பொருளைப் போல் வாசகர்களுக்கு முதலாளித்துவ சமூக உருவமைப்பு முழு வதையும் அதன் தினசரி அம்சங்களோடும், உற்பத்தி உறவு களில் இயல்பாகவே இருக்கும் வர்க்க முரண்பாடுகளின் உண்மை யான சமூக வெளிப்படையான தோற்றத்தோடும், முதலாளித் துவ வர்க்கத்தின் ஆட்சியைப் பாதுகாக்கிற முதலாளித்துவ

அரசியல் மேல் கட்டுமானத்தோடும், சுதந்திரம், சமத்துவம் போன்ற முதலாளித்துவ கருத்துக்களோடும், முதலாளித்துவ குடும்ப உறவுகளோடும் — எடுத்துக் காட்டினர். டார்வினேடு ஒப்பிடுவது முற்றிலும் சரியானதாக இருக்கும் என்பது இப் பொழுது தெளிவாக இருக்கும்; அதாவது: சரியான மாண்ட் பிளாங்கின் உண்மை விபரங்களைச் சேகரம் செய்து அதற்குச் சிகரம் வைத்தாற் போல நெருக்கமாகப் பின்னிப் பிணைந்து பொதுமைப் படுத்தப்பட்ட கருத்துக்கள்தான் மூலதனமே தவிர வேறொன்றும் இல்லை. யாராவது ஒருவர் "மூல தனத்"தைப் படித்து, இந்தப் பொதுமைப் படுத்தும் கருத் துக்களைக் கவனிக்காமலிருக்க சூழ்ச்சி செய்திருந்தால், அது மார்க்ஸின் தவறல்ல; நாம் பார்த்திருப்பது போல், அவர் முன்னுரையில் கூட இந்தக் கருத்துக்களைச் சுட்டிக்காட்டியிருக் கிறர். அது முழுமையானதல்ல; இத்தகைய ஒரு ஒப்பிடுத லானது வெளிப்புற அம்சத்திலிருந்து மாத்திரமல்ல, (தெரியாத ஏதோ ஒரு காரணத்தால், திரு. மிக்கேலாவ்ஸ்கிக்கு குறிப்பாக அக்கறை உள்ளதாக இருக்கிறது) உட்புற அம்சத்திலிருந்தும் கூட, சரியானதேயாகும். மிருகங்களும், தாவரங்களும் தொடர்பின்றி, தற்செயலாக "கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது" மாருமல் நிலை யாக இருப்பது, என்ற கருத்திற்கு டார்வின் முற்றுப் புள்ளி வைத்தது போல், உயிரினங்கள் ஒன்றன் பின் ஒன்ருக வருகின்றன, நிலையாக இல்லாமல் மாறுகின்றன என்பதை நிலை நாட்டுவதன் மூலமாக உயிர் நூலை முற்றிலும் விஞ்ஞான அடிப்படையில் டார்வின் முதலில் வைத்தது போல், மார்க்ஸீயம் சமுதாயமானது தனி நபர்கள் அறிவுத் திறமற்ற முறையில் ஒன்ருகச் சேர்க்கப் பட்டிருக்கிருர்கள் என்ற கருத்திற்கும், இது அதிகாரிகளின் விருப்பப்படி (அல்லது, நீங்கள் விரும்பினுல், சமுதாயத்தின் விருப்பப்படியும், சர்க்காரின் விருப்பப் படியும்) எல்லா வகை களிலும் திருத்தி அமைக்கப் படுவதையும் அனுமதிக்கிறது என்ற கருத்திற்கும், இது தற்செயலாக தோன்றுகிறது, தற்செயலாக மாறுகிறது என்ற கருத்திற்கும் முற்றுப் புள்ளி வைத்தார்; சமுதாயத்தின் பொருளாதார உருவ அமைப்பின் கருத்தானது, குறிப்பிட்ட உற்பத்தி உறவுகளின் மொத்தம்தான் என்பதை நிலை நாட்டியதின் மூலமாகவும், இத்தகைய உருவ அமைப்புக் களின் வளர்ச்சியானது இயல்பான சரித்திரத்தின் ஒரு இயல்பான வளர்ச்சியாகும் என்ற உண்மையை நிலை நாட்டியதன் மூலமாக வும் சமூக இயலை ஒரு விஞ்ஞான அடிப்படையில் முதலில் வைத்தவர் மார்க்ஸ்.

"மூலதனம்" தோன்றியதற்குப் பிறகு, சரித்திரத்தின் பொருள் முதல்வாதக் கருத்தானது, இப்பொழுது மேலாராய்

வுக்கு அடிப்படையான, ஒரு தற்காலிகக் கருத்தாக இன்னும் இப்பொழுது நீடிக்க வில்லை; மாருக, விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப் பட்ட ஒரு அறுதியுரையாகி விட்டது. சமுதாயத்தின் ஏதாவது உருவமைப்பின் வளர்ச்சி, செயல்படுவது ஆகியவை பற்றி விஞ்ஞான ரீதியான விளக்கத்தைக் கொடுக்க வேறு ஏதாவது முயற்சி நடைபெறுவது வரையிலும், சமூகத்தின் உருவமைப்பு என்பதை மனதில் வைத்துக்கொள்ளவும், சில நாடுகள், அல்லது மக்கள், அல்லது வர்க்கம் போன்றவைகள் அல்ல— பொருள் முதல் வாதத்தைப் போல், "பொருத்தமான விவரங்களில்" விதி முறைகளைப் புகுத்தக்கூடிய திறம் படைத்த மற்ருெரு முயற்சி நடைபெறுவது வரையிலும், அதாவது, கண்டிப்பான விஞ்ஞான முறையில் விளக்கம் கொடுத்து, அதே சமயத்தில் ஒரு திட்ட வட்டமான உருவமைப்பின் உயிருள்ள காட்சியைக் கொடுக்கும் திறமை படைத்ததாக இருப்பது வரையிலும், சரித்திரத்தின் பொருள் முதல் வாத கருத்தும் சமூக விஞ்ஞானமும் ஒன்றென்ப தாகவே இருக்கும். பொருள் முதல் வாதமானது, திரு. மைக்கே வோவ்ஸ்கி நினைப்பது போல், சரித்திரத்தின் பிரதானமான விஞ்ஞான ரீதியான கருத்து என்றிருக்க மாட்டாது. மாருக அதன் ஒரே விஞ்ஞான ரீதியான கருத்தாக இருக்கும்.

1894-ல் இளவேனிற்
காலத்திலும், கோடை
காலத்திலும் எழுதப்பட்டது.

1894-ல் கையெழுத்துப்படி
எடுக்கும் கருவியால் அச்சடிக்
கப்பட்டது.

திரட்டப்பட்ட நூல்கள் 1
தொகுப்பு—1
பக்கம் 139-42

# நமது செயல் திட்டம்

சர்வதேச சமூக ஜனநாயகமானது தற்சமயம் சித்தாந்த ரீதியில் ஊசலாடும் நிலையில் இருக்கிறது. இதுவரையிலும் மார்க்ஸூம், எங்கல்ஸூம், புரட்சிகரமான தத்துவத்தின் உறுதியான அஸ்திவாரமாகக் கருதப்பட்டார்கள்; ஆனால், இந்தக் கோட்பாடுகள் பற்றுக்குறையானது என்றும், வழக்கற்றுப் போய் விட்டது என்றும், பிரகடனம் செய்யும் குரல்கள் எல்லா இடங்களிலும் எழுப்பப்படுகின்றன. எவர் ஒருவர் தன்னை ஒரு சமூக ஜனநாயகவாதி என்று பிரகடனம் செய்து, சமூக ஜனநாயகப் பத்திரிகையைப் பிரசுரிக்க விரும்புகிறாரோ, அவர் ஜெர்மனிய சமூக ஜனநாயக வாதிகளை மாத்திரமின்றி, மற்றவர்களின் கவனத்தையும் பிறவழியில் செல்ல விடாமல் ஈர்த்திருக்கும் ஒரு பிரச்னைபற்றி தனது கண்ணோட்டத்தைத் திட்டவட்டமாக வரையறுத்துக்கூற வேண்டும்.

நாம் மார்க்ஸிஸ்டு தத்துவ ரீதியான நிலையை முழுமையாகப் பின்பற்றுகிறோம். மார்க்ஸிஸம் மாத்திரம்தான், முதலில் சோஷலிஸத்தை ஒரு உடோபியாவிலிருந்து, ஒரு விஞ்ஞானமாக மாற்றிற்று; இந்த விஞ்ஞானத்திற்கு உறுதியான ஒரு அஸ்திவாரத்தை முதலில் போட்டது; அதை, மேலும் வளர்ப்பதற்கும், அதன் எல்லா அம்சங்களையும் மேலும் விரிவுபடுத்துவதற்கும், பின்பற்ற வேண்டிய பாதையை முதலில் சுட்டிக் காட்டிற்று. நிலம், தொழிற்சாலைகள், சுரங்கங்கள் இன்னும் இவை போன்றவைகளின் சொந்தக்காரர்களான, விரல் விட்டு எண்ணக் கூடிய முதலாளிகள் தொழிலாளர்களை வாடகைக்கு அமர்த்துவதும், உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குவதும், சொத்து உடமையற்ற கோடானுகோடி மக்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதை மூடி மறைக்கிறது, என்பதை விளக்குவதன் மூலமாக நவீன முதலாளித்துவத்தின் தன்மையை அது திறந்து காட்டிற்று. எல்லா நவீன முதலாளித்துவ வளர்ச்சியும், சிறிய முறையில் உற்பத்தி செய்வதை நீக்கி, பெரிய அளவில் உற்பத்தி செய்யும் மனப்போக்கை வெளிப்படையாகத் தெரிவிக்கிறது என்பதையும், சமுதாயத்தை சோஷலிஸ்டு முறையில் அமைப்பதை

சாத்தியமானதாகச் செய்கிற, அவசியமானதாகச் செய்கிற நிலைமைகளை அது சிருஷ்டிக்கிறது என்பதையும், அது சுட்டிக் காட்டிற்று. பிணச் சீலைக்கும் கீழே ஆழமாக வேரூன்றியிருக்கும் பழக்க வழக்கங்கள், அரசியல் தில்லு முல்லுகள், எளிதில் புரிந்து கொள்ள முடியாத சட்டங்கள், சிக்கலான கோட்பாடுகள் ஆகியவற்றிற் கெதிரான வர்க்கப் போராட்டத்தை, எல்லா வகைப் பட்ட சொத்துடைமையாளர்களின் வர்க்கங்களுக்கும், சொத்துடைமையே இல்லாத மக்களுக்குத் தலைமைத் தாங்கும் சொத்துடைமையற்ற மககளுக்கும், அதாவது பாட்டாளி மக்களுக்கும் இடையே நடைபெறும் போராட்டத்தை எப்படிப் பார்ப்பது என்பதை அது நமக்குக் கற்றுக் கொடுத்தது. புரட்சிகரமான சோஷலிஸ்டு கட்சியின் உண்மையான கடமையை அது தெளிவுபடுத்திற்று; அதாவது சமுதாயத்தின் பாணியை மாற்றியமைக்க திட்டங்களைத் தீட்டாமல், தொழிலாளர்களின் நலனை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று முதலாளிகளுக்கும், அவர்களை அண்டி வாழ்கிறவர்களுக்கும் உபதேசம் செய்யாமல், சதியாலோசனைத் திட்டங்களை வகுக்காமல், அதற்குமாறாக பாட்டாளி மக்களின் வர்க்கப் போராட்டத்தை அமைக்கும்படியும், பாட்டாளி மக்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி, ஒரு சோஷலிஸ்டு சமுதாயத்தை அமைப்பதையே இறுதி லட்சியமாகக் கொண்ட இந்தப் போராட்டத்திற்கு தலைமை தாஙகும்படியும் கடமையைத் தெளிவாக எடுத்துக் காட்டிற்று.

ஆகவே, இப்பொழுது நாம் பின் வருமாறு கேட்கிறோம்; நமது இன்றைய காலத்தில் உரக்கக் கூச்சல் போடுகிறவர்களும், ஜெர்மானிய சோஷலிஸ்டு பெர்ன்ஸ்டீனைச் சுற்றிலும் தாமாகவே ஒன்று சேர்ந்திருக்கிறவர்களும், உரத்த குரலுடையவர்களுமான "புதுப்பிப்பவர்கள்" இந்தத் தத்துவத்தில் புதிதாக எதையும், புகுத்தியிருக்கிறார்களா? நிச்சயமாக ஒன்றுமே கிடையாது. மார்க்ஸும், எங்கல்ஸும் வளர்க்கும்படி கட்டளையிட்டிருக்கும் இந்த விஞ்ஞானத்தை ஒருபடி கூட அவர்கள் முன்னுக்குக் கொண்டு வரவில்லை; எந்த விதமான புதிய போராட்ட முறைகளையும் அவர்கள், பாட்டாளி மக்களுக்குக் கற்றுக் கொடுக்கவில்லை; அவர்கள் பின்னோக்கி மாத்திரம் போயிருக்கிறார்கள்; பின் தங்கிய தத்துவங்களின் துண்டு துணுக்குகளைக் கடனாக வாங்கியிருக்கிறார்கள். பாட்டாளி மக்களுக்கு போராட்டத்தின் தத்துவத்தை உபதேசம் செய்யவில்லை; சலுகைகளை விட்டுக் கொடுக்கும் தத்துவத்தைப் பாட்டாளி மக்களுக்கு உபதேசம் செய்திருக்கிறார்கள்; அதாவது சோஷலிஸ்டுகளுக்கு தூண்டில் இரை போடுவதில் புதிய வழிவகைகளைக் கண்டு பிடிப்பதில் ஒரு காலத்திலும் களைத்துப்

போகாத முதலாளித்துவ கட்சிகள், சர்க்கார்கள், ஆகிய பாட்டாளி மக்களின் கொடிய எதிரிகளுக்கு சலுகைகளை விட்டுக் கொடுக்கும் தத்துவத்தை உபதேசம் செய்தார்கள். ரஷ்ய சமூக ஜனநாயகத்தை முதலில் அமைத்தவர்களிலும், தலைவர்களிலும் ஒருவரான பிளக்கானேவ் பெர்ன்ஸ்டீனுடைய கடைசி "ஆராய்ச்சிக் கட்டுரையை"[2] ஈவிரக்கமின்றி விமர்சனம் செய்திருப்பது முற்றிலும் சரியானதுதான்; ஜெர்மனிய தொழிலாளர்களின் பிரதிநிதிகளும்கூட (ஹானோவர் காங்கிரஸில்[3]) பெர்ன்ஸ்டீனுடைய கருத்துக்களை இப்பொழுது நிராகரித்து விட்டார்கள்.

இந்த வார்த்தைக்காக, கடல் மடை திறந்தாற்போல் கண்டனக்குரல் எழுப்பப்படும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்: சோஷலிஸ்டு கட்சியை "உண்மையாகவே நம்புகிறவர்களின்" கட்சியாக மாற்ற நாம் விரும்புகிறோம் என்றும், சுயேச்சையாகத் தெரிவிக்கும் ஒவ்வொரு கருத்திற்காகவும், "கோட்பாடி"லிருந்து மாறுபட்டுச் செல்வதற்காகவும் "மாறுபட்ட கருத்துடையவர்கள்" என்று கூறி தண்டனைக்கு ஆளாக்குகிறோர்கள் என்றும் கூச்சல் கிளம்பப்போகிறது. இத்தகைய நாகரிக பாணியிலான, குத்தலான சொற்றொடர்களைப்பற்றி நமக்கு நன்கு தெரியும். ஒரு விஷயம் என்னவென்றால், அவைகளில் இம்மியளவேனும் உண்மையோ அல்லது அர்த்தமோ கிடையாது என்பதுதான், சோஷலிஸ்டுகள் அனைவரையும் ஒன்று படுத்துகிற புரட்சிகரமான தத்துவம் இல்லாமல் ஒரு வலிமைமிக்க சோஷலிஸ்டுக் கட்சி இருக்கவே முடியாது; இதிலிருந்து அவர்கள் கொள்கையில் திட நம்பிக்கைப் பெறுகிறார்கள்; இதை அவர்கள் தங்களுடைய போராட்ட முறைகளிலும், செயல்படும் வழிவகைகளிலும் அனுஷ்டிக்கிறார்கள். ஆதாரமற்ற தாக்குதல்களுக்கும், அதை ஊழலாக்குவதற்கும் எடுக்கப்படும் முயற்சிகளுக்கும் எதிராக, உங்கள் அறிவுக்கு எட்டியது வரையிலும் உண்மை என்று நீங்கள் கருதுகிற இத்தகைய ஒரு தத்துவத்தைப் பாதுகாத்தால், எல்லா விதமான விமர்சனங்களுக்கும் நீங்கள் ஒரு எதிரி என்று மறைமுகமாகச் சுட்டிக் காட்டுவது சரியல்ல, மார்க்ஸின் தத்துவமானது பூரணமானது என்றோ, மாறத்தகாதது என்றோ நாங்கள் கருதவில்லை; அதற்கு மாறாக, விஞ்ஞானத்தின் அடிக்கல்லை மாத்திரம்தான் அது போட்டிருக்கிறது என்றும், வாழ்க்கையோடு ஒட்டிப்போக விரும்பினால் எல்லா அம்சங்களிலும் அதை சோஷலிஸ்டுகள் வளர்க்க வேண்டும் என்றும் நாங்கள் உறுதியாக நம்புகிறோம். மார்க்ஸின் தத்துவத்தை சுதந்திரமாக விரிவுபடுத்த வேண்டியது ரஷ்ய சோஷலிஸ்டுகளுக்குச் சிறப்பாக அவசியம் என்று நாங்கள் கருதுகிறோம்; ஏனெனில் இந்தத் தத்துவம் பொதுப்படையாக வழிகாட்டும் கோட்பாடு

களைத்தான் அளிக்கிறது; இவைகள் முக்கியமாக இங்கிலாந்தில் பிரான்ஸுக்கு மாறுபட்டும், பிரான்ஸில் ஜெர்மனிக்கு மாறுபட்டும், ஜெர்மனியில் ரஷ்யாவுக்கு மாறுபட்டும் அனுஷ்டிக்கப்படு கின்றன. ஆகவே, தத்துவ ரீதியான பிரச்சினைகளைப்பற்றிய கட்டுரைகளுக்கு நமது பத்திரிக்கையில்[4] மகிழ்ச்சியோடு இடம் ஒதுக்கித் தருகிறோம்; மேலும் தர்க்கத்தில் இருக்கும் விஷயங்கள் பற்றி பகிரங்கமாக விவாதிக்கும்படி எல்லா தோழர்களையும் நாங்கள் அழைக்கிறோம்.

சமூக ஜனநாயக வாதிகள் அனைவருக்கும் பொதுவாக இருக் கும் கொள்கை திட்டத்தை, ரஷ்யாவில் செயல்படுத்துவதில் எழும் முக்கியமான பிரச்சினைகள் எவை? இந்த கொள்கை திட்டத்தின் சாராம்சம் என்ன என்றால், பாட்டாளி மக்களின் வர்க்கப் போராட் டத்தை அமைக்க வேண்டும். இந்தப் போராட்டத்திற்கு தலைமை தாங்க வேண்டும், இதன் இறுதி லட்சியம் பாட்டாளி மக்கள் அரசியல் சுதந்திரத்தைக் கைப்பற்றி, ஒரு சோஷலிஸ்டு சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்பதுதான் என்று நாம் கூறியிருக்கிறோம். பாட்டாளி மக்களின் வர்க்கப் போராட்டத்தில் பொருளாதாரப் போராட்டமும் (தொழிலாளர்களின் நிலைமைகளை அருவிருத்தி செய்வதற்காக தனிப்பட்ட முதலாளியை எதிர்த்தும் அல்லது முதலாளிகளின் தனிப்பட்ட குழுக்களையும் எதிர்த்துப் போராடுவதும்) அரசியல் போராட்டமும் (பொது மக்களின் உரி மைகளை விஸ்தரிப்பதற்காக, அதாவது ஜனநாயகத்திற்காக, பாட் டாளி மக்களின் அரசியல் அதிகாரத்தை விஸ்தரிப்பதற்காக சர்க் காரை எதிர்த்து போராடுவதும்) அடங்கியிருக்கின்றன. சில ரஷ்ய சமூக ஜனநாயக வாதிகள் (அவர்களில் "ரபோசயா மிஸில்"[5] பத்திரிகையை நடத்துகிறவர்கள்) பொருளாதாரப் போராட்டம் தான் ஒப்பிட முடியாத வகையில் மிகவும் முக்கியமானது என்று கருதுகிறார்கள்; அரசியல் போராட்டத்தை அநேகமாக தொலைவில் உள்ள எதிர்காலத்திற்கு ஒத்திப்போட வேண்டும் என்ற அளவுக்குப் போகிறார்கள். இந்த நிலை பாடு முற்றிலும் தவறானதாகும். தொழி லாள வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்தை அமைக்க வேண்டிய அவசியம் என்பதையும் இந்த அடிப்படையில் தொழி லாளர்களிடையே கிளர்ச்சி செய்ய வேண்டியது அவசியம் என்பதை யும், அதாவது முதலாளிகளை எதிர்த்து தொழிலாளர்கள் தினசரி நடத்தும் ஒவ்வொரு போராட்டத்திற்கு உதவி செய்வதிலும், கவனத்திற்குக் கொண்டுவருவதிலும், இந்த வழியில் ஒன்று சேர் வதின் அவசியத்தை அவர்களுக்குத் தெளிவு படுத்துவதிலும் எல்லா சமூக ஜனநாயக வாதிகளும் கருத்து ஒருமைப்பாடு வைத்திருக் கிறார்கள். ஆனால், பொருளாதாரப் போராட்டத்திற்காக, அரசியல்

போராட்டத்தை மறப்பதானது. சர்வதேச சமூக ஜனநாயகத்தின் அடிப்படையான கோட்பாட்டிலிருந்து பிரிந்து செல்வது என்பது தான் அதன் அர்த்தம்; தொழிலாளர் இயக்கத்தின் முழுச் சரித்திரமும் எதைக் கற்றுக் கொடுத்திருக்கிறதோ, அதை மறப்பது தான் அதன் அர்த்தம். முதலாளித்துவத்தின் ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஆதரவாளர்களும், அதற்குச் சேவை செய்யும் சர்க்காரின் ஆதரவாளர்களும் சுத்தமான பொருளாதார சங்கங்களை அமைக்கவும், இந்த வழியில் "அரசியலில்" இருந்து, சோஷலிஸத்திலிருந்து அவர்களை திசை திருப்பி விடவும் திரும்பத்திரும்ப முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள். ரஷ்ய சர்க்காரும்கூட இதே மாதிரியான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதும் நன்கு சாத்தியமானதே; தங்களுக்கு உரிமைகள் எதுவும் கிடையாது, அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கிறோம் என்ற சிந்தனையிலிருந்து பொது மக்கள் கவனத்தை வேறு திசையில் திருப்பிவிடும் நோக்கத்தோடு, சிறு அப்பத்துண்டுகளை, அல்லது போலி அப்பத்துண்டுகளைப் பொது மக்களிடம் வீசி எறிய ரஷ்ய சர்க்கார் எப்பொழுதும் முயன்றிருக்கிறது, எந்தப் பொருளாதாரப் போராட்டமும் தொழிலாளர்களுக்கு நிரந்தரமான நிவாரணத்தைக் கொடுக்கவே முடியாது; அல்லது, தொழிலாளர்களுக்கு சுதந்திரமாகப் பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கும், சங்கங்களை அமைப்பதற்கும் உரிமை இல்லை என்றால், சொந்த பத்திரிக்கைகளை நடத்துவதற்கு உரிமை இல்லை என்றால், ஜெர்மனியிலும், ஏனைய ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் (துர்க்கி, ரஷ்யா தவிர) தொழிலாளர்கள் செய்வது போல், தேசிய சட்ட சபைகளுக்கு தங்கள் பிரதிநிதிகளை அனுப்பும் உரிமை இல்லை என்றால் பொருளாதாரப் போராட்டத்தைக்கூட விரிவான முறையில் நடத்த முடியாது. ஆனால், இந்த உரிமைகளைப் பெறும் பொருட்டு, ஒரு அரசியல் போராட்டத்தை நடத்த வேண்டியது அவசியமாகும். ரஷ்யாவில் தொழிலாளர்கள் மாத்திரமல்ல, எல்லா மக்களின் அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. ரஷ்யாவில் தன் விருப்பப்படி ஆள்கிற, வரம்பற்ற முடியாட்சி இருக்கிறது. ஜார் தனியாகவே சட்டங்களைப் பிரகடனம் செய்கிறார், அதிகாரிகளை நியமிக்கிறார், அவர்களைக் கட்டுப்படுத்துகிறார். இந்தக் காரணத்தால், ரஷ்யாவில் ஜாரும், ஜாரின் சர்க்காரும் எல்லா வர்க்கங்களையும் சார்ந்திராமல் தனியே சுயேச்சையாக இருப்பது போலவும், அனைவரையும் ஒரே மாதிரியாக நடத்துவது போலவும் தோற்றமளிக்கிறது. ஆனால், எதார்த்தத்தில் அதிகாரங்களும் சொத்துடைமை உள்ள வர்க்கத்திலிருந்தே பொறுக்கி எடுக்கப்படுகிறார்கள். இவர்கள் அனைவரும் பெரிய முதலாளிகளின் சொல்லிற்கு உட்பட்டவர்கள்தான்; இந்தப் பெரிய முதலாளிகள் மந்திரிகளை ஆட்டி வைக்கிறார்கள்; அவர்கள் விரும்புவதைப் பெற்றுக் கொள்கிறார்கள்,

ரஷ்யத் தொழிலாள வர்க்கத்தின் தோளில் இரண்டு நுகத்தடிகள் சுமத்தப்பட்டிருக்கின்றன; முதலாளிகளும், நிலச் சுவான்தாரர்களும் அவர்களைச் சூறையாடுகிறார்கள், கொள்ளையிடுகிறார்கள். அவர்களை எதிர்த்துப் போராடுவதிலிருந்து தடுப்பதற்காக, போலீஸார் அவர்கள் கைகளையும், கால்களையும் கட்டிப் போடுகிறார்கள். வாயைக் கட்டிப் போடுகிறார்கள்; மக்களின் உரிமைகளைப் பாது காப்பதற்காக, எடுக்கும் ஒவ்வொரு முயற்சியையும் அடக்கு முறைக்கு ஆளாக்குகிறார்கள். ஒரு முதலாளியை எதிர்த்து நடத்தும் ஒவ்வொரு வேலை நிறுத்தத்திலும் தொழிலாளர்கள் மீது போலீஸும், ராணுவமும் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. ஒவ்வொரு பொருளாதாரப் போராட்டமும், அவசியமாகவே ஒரு அரசியல் போராட்டமாக மாறுகிறது; ஆகவே, சமூக ஜனநாயக வாதிகள் கலைக்க முடியாத வகையில் ஒன்றை மற்றொன்றோடு, பாட்டாளி மக்களின் ஒரே வர்க்கப் போராட்டமாக இணைக்க வேண்டும். இத்தகைய ஒரு போராட்டத்தின் முதலாவதும், முக்கியமானது மான லட்சியம் அரசியல் உரிமைகளைப் பெறுவதாகவும் அரசியல் சுதந்திரத்தை பெறுவதாகவும் இருக்க வேண்டும். சோஷலிஸ்டுகளின் சிறு உதவியோடு ஸெண்ட் பீட்டர்ஸ் பர்கிலுள்ள தொழிலாளர்கள் தனிமையாக சர்க்காரிடமிருந்து வேகமாக ஒரு சலுகையை வலிந்து பறிக்க முடியுமானால் — வேலை நேரத்தைக் குறைக்கும்[6] சட்டத்தைக் கொண்டு வரும்படி — அப்பொழுது ரஷ்ய தொழிலாள வர்க்கம் ஒட்டு மொத்தமாக தனித்து, ஒரே ரஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியின் தலைமையின் கீழ் விடாப்பிடியான போராட்டத்தில் ஒப்பிட முடியாத வகையில் இன்னும் அதிகமாக முக்கியமான சலுகைகளைப் பெற முடியும்.

மற்ற எந்த வர்க்கமும் உதவிக்கு வரவில்லையென்றாலும் கூட: ரஷ்ய தொழிலாள வர்க்கம் தனித்து பொருளாதார, அரசியல் போராட்டங்களை நடத்த முடிந்திருக்கிறது. ஆனால், அரசியல் போராட்டத்தில் தொழிலாளர்கள் தனிமையாக நிற்கவில்லை, மக்களுக்குப் பூரணமாக உரிமைகள் இல்லாமல் இருப்பதும் கொடுமைக்கும், கொள்ளைக்கும் பேர்போன அதிகாரிகளின் மிருகத்தனமான சட்டத்துக்குக் கட்டுப்படாத நடவடிக்கைகளும் நேர்மையான அறிவாளிகளின் கோபக்கனலைத் தூண்டி விடுகின்றன; சுதந்திரமான எண்ணத்தையும், சுதந்திரமான பேச்சையும் அடக்கி ஒடுக்குவதை நேர்மையான அறிவாளிகள் சகித்துக் கொண்டு வாளாயிருக்க முடியவில்லை; அடக்கு முறைக்கு ஆளான போலந்துக்காரர்கள், பின்லந்துக்காரர்கள், யூதர்கள், ரஷ்ய சமய வாதிகள் ஆகியவர்களின் கோபத்தைத் தூண்டிவிடுகின்றன; சிறிய வியாபாரிகள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியவர்களின் கோபத்

தைத் தூண்டி விடுகின்றனர்; இவர்களுக்கு அதிகாரிகளும், போலீஸாரும் அடக்கு முறைக்கு ஆளாக்குவதிலிருந்து, பாதுகாப்பே கிடையாது. இந்தக் குழுக்கள் அனைத்தும் தனித்தனியாக ஒரு அரசியல் போராட்டத்தை நடத்த சக்தியற்றவைகளாக இருக்கின்றன. ஆனால், தொழிலாளி வர்க்கம் இந்தப் போராட்டக் கொடியை உயர்த்தும்போது, எல்லாத் தரப்பிலிருந்தும் அதற்கு உதவி கிடைக்கும். ரஷ்ய சமூக ஜனநாயகமானது, மக்களின் உரிமைகளுக்காகப் போராடுகிறவர்கள் அனைவருக்கும், ஜனநாயகத்திற்காகப் போராடுகிறவர்கள் அனைவருக்கும் தலைமை தாங்கும். அது வெல்ல முடியாதது என்பதும் நிரூபணமாகும்.

இவைதான் நமது அடிப்படையானக் கருத்துகள்; நமது பத்திரிகையில் ஒவ்வொரு அம்சத்திலிருந்தும் அவைகளை முறையாக நாம் வளர்ப்போம். பிரசுரிக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் ரஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சி சுட்டிக்காட்டியிருக்கும் பாதையில் இவ்வாறு நாம் நடந்து செல்வதில் நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

1899 - அக்டோபருக்கு முன்
எழுதப்பட்டதல்ல

1925 – முதலில்
"லெனின் பகலணியில் (III)
பிரசுரிக்கப்பட்டது.

திரட்டப்பட்ட
நூல்கள் - தொகுப்பு 4
பக்கம் - 210 - 14

# நரோடிஸத்தி[7] லிருந்து மார்க்ஸீஸத்திற்கு

## கட்டுரை ஒன்று

எதேச்சாதிகாரத்தை எதிர்க்கிற மாறுபட்ட வர்க்கங்களிடையே, நிலவும் நல உரிமைகளின் "தீர்க்க முடியாத முரண்பாடுகளில்" ஈடுபடுவதற்கு இது தக்க தருணமல்ல என்று ஒரு சட்ட பூர்வமான பத்திரிகை, அண்மையில் கருத்தைத் தெரிவித்தது. இந்தக் கருத்து புதிதல்ல. "ஒஸ்வோ போஸ்தெனியே"[8] பத்திரிக்கை, "ரெவலூஷினயா ரோஸியா"[9] பத்திரிக்கை ஆகியவற்றின் பத்திகளில் ஏதாவது ஒரு வகையில் இடம் ஒதுக்கப்பட்டு இவ்வாறு பிரசுரிக்கப் பட்டிருப்பதை நாம் சந்தித்திருக்கிறோம், என்பது உண்மையே. முதலாளித்துவ ஜனநாயக வாதிகளின் பிரதிநிதிகளிடையே இத்தகைய கண்ணோட்டம் நிலவிவருவது இயல்புதான். சமூக ஜனநாயக வாதிகள் சம்பந்தப்பட்ட வரையிலும், இந்தப் பிரச்சினையில் அவர்களிடையே இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கவே முடியாது. எதேச் சாதிகாரத்தை எதிர்த்து பாட்டாளி மக்களும், முதலாளித்துவமும் கூட்டாக இணைந்து போராடுவதானது, அதற்கும், சொத்து உடமை வர்க்கங்களுக்கும் இடையே நல உரிமைகளில் தீர்க்க முடியாத முரண்பாடு இருப்பதை பாட்டாளி மக்கள் மறக்கும்படி செய்ய முடியாது, செய்யவும் கூடாது. இந்தத் தீர்க்க முடியாத முரண்பாட்டைப் பற்றி ஒரு தெளிவான கருத்தைப் பெறுவதற்கு, மாறுபட்ட கருத்துப் போக்குகளின் கண்ணோட்டங்களுக்கு இடையே ஆழமான மாறுபாடுகள் நிலவுவதைப் பற்றி தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். மற்ற கருத்துப் போக்குகளைப் பின் பற்றுகிற சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள்,[10] மிதவாதிகள் போன்றவர்களோடு, நமது கட்சியின் இரண்டாவது காங்கிரஸ்[11] சமூக ஜனநாயக வாதிகளுக்கு அனுமதி கொடுத்திருப்பது போல், தற்காலிகமாக உடன்பாடுகளைச் செய்து கொள்ளலாம் என்பதை நாம் நிராகரிக்க வேண்டும் என்று இது பொருள் படவில்லை நமது முதலாளித்துவ ஜனநாயகத்தின் அதி தீவிர இடதுசாரிக் குழுவின் பிரதிநிதிகளாக சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் இருக்

கிறார்கள் என்று சமூக ஜனநாயக வாதிகள் கருதுகிறார்கள். சோஷலிஸ்டுபுரட்சிக்காரர்கள் அவர்களைப்பற்றிய இந்தக் கருத்தை எதிர்க்கிறார்கள். ஒரு எதிரியை அவமானப்படுத்துவதற்கும், அவனுடைய அந்தரங்க சுத்தியையும், நாணயமான விசுவாசத்தையும், சந்தேகப்படும்படி செய்வதற்கும் எடுத்துக் கொள்ளும் தரக்குறைவான முயற்சி என்று அவர்கள் இதைக் கருதுகிறார்கள். உண்மையில், இத்தகைய ஒரு கருத்திற்கும், சந்தேகப்படுவதற்கும் சம்பந்தமே கிடையாது; சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களின் கருத்தின் வர்க்க மூலம், வர்க்கத் தன்மை ஆகியவைப்பற்றி ஒரு வெறும் மார்க்ஸீய வரையறுப்பே தவிர, வேறு எதுவும் கிடையாது. சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் எந்த அளவுக்கு அதிகத் தெளிவாகவும், திட்ட வட்டமாகவும் அவர்கள் கருத்துக்களை வெளியிடுகிறார்களோ, அந்த அளவுக்கு அதிகமாக அவர்களைப் பற்றிய மார்க்ஸீய இலக்கணத்தை அவர்கள் ஊர்ஜிதம் செய்கிறார்கள். "ரெவலூஷியா ரோஸியா" எண் 46-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களின் கட்சியின் நகல், கொள்கை திட்டம் இந்த விஷயத்தில் பெரிதும் கவனத்தைக் கவரக்கூடியதாக இருக்கிறது.

இந்த நகல் கோட்பாடுகளைத் தெளிவாக எடுத்துரைக்கிறது என்பது மாத்திரமல்ல, பொதுவாக கணிசமான அளவு ஒரு படி முன்னேற்றமாகவும் இருக்கிறது. கோட்பாடுகளின் உள் அடக்கத்திலேயே முன்னேற்றத்தைக் காணலாம்; அதாவது நரோடிஸத்திலிருந்து மார்க்ஸிஸத்திற்கு முன்னேறியிருப்பதிலும், ஜனநாயகத்திலிருந்து சோஷலிஸத்திற்கு முன்னேறியிருப்பதிலும் காணலாம். சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களை நாம் விமர்சனம் செய்வது பலனளித்திருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது; அது, அவர்களுடைய சோஷலிஸ்டு நல்லெண்ணங்கள், மார்க்ஸிஸத்தோடு ஒத்திருக்கிற அவர்களுடைய கருத்துக்கள் ஆகியவற்றை வலியுறுத்துவதில் அவர்களை நிர்ப்பந்தம் செய்திருக்கிறது. மறுபுறத்தில், அவர்களுடைய பழைய நரோட்னிக் கருத்துக்கள், தெளிவில்லாத ஜனநாயகக் கருத்துக்கள் ஆகியவற்றின் அம்சங்கள் பெரிதும் வெளிப்படையாக இருந்தன. நாம் நேர்மாறாக இருக்கிறோம் என்று நம்மைக் குறைகூற விரும்புகிறவர்களுக்கு (சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களின் சோஷலிஸ்டு நல்லெண்ணங்களை அங்கீகரித்து, அதே சமயத்தில் அவர்களுடைய சமூகத்தன்மையை முதலாளித்துவ ஜனநாயகத் தன்மை வாய்ந்தது என்று கூறுவதை முரண்பாடானது என்று கூற விரும்புகிறவர்களுக்கு, சிறு முதலாளித்துவ ரகத்தைச் சேர்ந்த சோஷலிஸம் மாத்திரமல்ல, முதலாளித்துவ ரகத்தைச் சேர்ந்த சோஷலிஸம் பற்றியும், இன்னும் இது போன்ற ரகங்களில் உள்ள சோஷலிஸம் பற்றியும் நீண்ட காலத்திற்கு

முன்பே ''கம்யூனிஸ்ட் அறிக்கையில்'' [12] வரையறுத்துக் கூறப்பட்டிருப்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம். ஒரு சோஷலிஸ்டாக இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணமானது, முதலாளித்துவ ஜனநாயக சாராம்சத்தை ஒதுக்கித் தள்ளவே முடியாது. நகலைக் கவனமாகப் படித்துப் பார்த்தால், சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களின் உலகக் கண்ணோட்டத்தின் மூன்று முக்கியமான அம்சங்களைப் புரிந்து கொள்ளலாம். முதலாவது தத்துவ ரீதியாக மார்க்ஸீயத்தைத் திருத்திக் கூறுவது, இரண்டாவது விவசாயப் பிரச்சினை, உழைக்கும் விவசாயிகளின் பிரச்சினை ஆகியவை சம்பந்தப்பட்ட கருத்துக்களில் நரோட்னிக்குகளின் மீத மிச்சங்கள் நிலைத்திருக்கின்றன. மூன்றாவதாக, நடக்கவிருக்கும் ரஷ்யப் புரட்சியானது, முதலாளித்துவம் அல்லாத தன்மை கொண்டது என்று அவர்கள் கருதுவதிலும் அதே நரோடிஸத்தின் மீத மிச்சங்கள் நீடித்திருக்கின்றன. மார்க்ஸீஸத்திற்கு "திருத்தங்கள்" என்று நான் கூறினேன். திட்டவட்டமாகவே தான். சிந்தனையின் முக்கியமான, முழுமையான கருத்துப் போக்கும், கொள்கை திட்டத்தின் முழுமையான அமைப்பும் நாரோடிஸத்தின் மீது மாக்ஸீஸம் வெற்றியடைந்திருப்பதையே சுட்டிக் காட்டுகிறது. பின்னால் கூறப்பட்டது இன்னும் உயிரோடிருக்கிறது (சமீப காலபாணியில் திரிபுவாதத்தைப் புகுத்துவதன் மூலமாக அவ்வாறு நீடித்து வைக்கப்பட்டிருக்கிறது). ஆனால் மார்க்ஸீஸத்திற்கு அரை குறையாகத்தான் ''திருத்தம்'' செய்யப்பட்டிருக்கிறது. முக்கியமானது பொதுப் படையான தத்துவரீதியான திருத்தத்தை— அதாவது முதலாளித்துவத்தின் நல்ல அம்சங்களுக்கும், கெட்ட அம்சங்களுக்கும் இடையே உள்ள சாதகமான, சாதகமற்ற உறவு பற்றிய தத்துவத்தை— எடுத்துக் கொள்வோம் என்ற இந்தத் திருத்தம். பூரணமாக குழப்பப்படாமலிருப்பதால், மார்க்ஸீஸத்திற்கு பழைய ரஷ்ய தன் நோக்குப் பார்வையைப் புகுத்துகிறது. முதலாளித்துவத்தின் "படைப்புத்திறம் படைத்த'' சரித்திரபூர்வமான நடவடிக்கையை அங்கீகரிப்பது — அதாவது முதலாளித்துவம் உழைப்பை சமூகமயமாக்குகிறது. சமுதாயத்தை மாற்றியமைக்கும் திறம் படைத்த "ஒரு சமூக சக்தியே'' அதாவது பாட்டாளி மக்கள் என்ற சக்தியைச் சிருஷ்டிக்கிறது என்பது— நரோடிஸத்திலிருந்து பிரிந்து, மார்க்ஸீஸத்தை நோக்கி மாறிச் செல்கிறது என்பதைக் குறித்துக் காட்டுகிறது. சோஷலிஸத்தின் தத்துவமானது, பொருளாதார சக்திகள். வர்க்கப்பிரிவினை ஆகியவற்றின் எதார்த்த வளர்ச்சியின் மீது உருவாக்கப்பட்டிருக்கிறது. திருத்தம் பின்வருமாறு; "தொழிலின் சில கிளைகளிலும், குறிப்பாக விவசாயத்திலும், கிராமப்புறங்கள் முழுவதிலும்" முதலாளித்துவத்தின் நல்ல அம்சங்கள், கெட்ட அம்சங்கள் ஆகியவற்றிற்கு

இடையே உள்ள உறவு "சாதகமாக இருக்கும் நிலை மேன்மேலும் (அவை எந்த அளவுக்கு முன்னேறியிருக்கின்றன!) குறைந்து கொண்டே வருகிறது." இது ஹெர்ட்ஸ், டேவிட், நிக் ஆகியவர்கள் கூறியிருப்பதைத் திருப்பிச் சொல்வதாகும். "ரஷ்யாவில் முதலாளித் துவத்தின் விசேஷ தலைவிதி" என்ற வி. வி.யின் தத்துவத்தைத் திருப் பிச் சொல்வதாகும். பொதுவாக ரஷ்யாவின் பின் தங்கிய நிலையும், குறிப்பாக ரஷ்ய விவசாயத்தின் பின்தங்கிய நிலையும் முதலாளித் துவத்தின் பின் தங்கிய நிலை என்று கருதப்படவில்லை; ஆனால், பின் தங்கிய தத்துவத்தை நியாயப்படுத்தும் ஒப்பற்ற தனிப்பண்பாகக் கருதப்படுகிறது. சரித்திரத்தின் பொருள்முதல்வாதக் கருத்தோடு கூடவே, காலாவதியாகிப் போன கருத்தையும் பார்க்கிறோம் அதாவது இந்தக் கருத்துப்படி, அறிவாளிகள் நாட்டிற்குக் கிட்டத் தட்ட சாதகமான பாதைகளைத் தேர்ந்தெடுக்கும் திறம் படைத் தவர்களாம்: மேலும், வாழ்க்கையின் பழைய வடிவங்களை முதலாளித்துவம் அழித்ததால் தோன்றிய ஒரு வர்க்கத்திற்காகப் பரிந்து பேசுகிறவர்களாக அல்ல, அதற்குமாறாக முதலாளித் துவத்தின் வர்க்கத்திற்கு அப்பாற்பட்ட நீதிபதிகளாம் அறிவாளிகள். முதலாளித்துவத்திற்கு முந்திய உறவுகளின் மீதமிச்சங்கள் நீடித்து நிலைத்திருப்பதால், ரஷ்யாவில் முதலாளித் துவச் சுரண்டல் விசேஷமாக வெறுப்புணர்ச்சி யூட்டக்கூடிய பாதையில் போய்க்கொண்டிருக்கிறது என்ற உண்மையைப் பார்த்தும் பார்க்காததுபோல் இருப்பது அசல் நரோடிஸ பாணியாகும்.

விவசாயிகள் சம்பந்தப்பட்ட கருத்துக்களில் நரோட்னிக் தத்துவத்தை மேலும் தெளிவாகப் பார்க்கலாம். நகல் முழுவதி லும், கொஞ்சம் கூட வேறுபடுத்திக் காட்டாமல் கீழ்க்கண்ட வார்த்தைகளும், சொற்றொடர்களும் உபயோகிக்கப் பட்டிருக் கின்றன: உழைப்பாளிகள், சுரண்டப்பட்டவர்கள். தொழிலாளி வர்க்கம், வேலை செய்கிற மக்கள் திரள், சுரண்டப்பட்டவர்களின் வர்க்கம், சுரண்டப் பட்டவர்க்கங்கள், இதன் ஆசிரியர்கள் கடைசி சொற்றொடர் சம்பந்தமாக ("வர்க்கங்கள்") சிந்தனை செய்வார் களேயானால் — அவர்களுடைய கவனக்குறைவால் இந்த சொற்றொடர் வந்துவிட்டது. சிறு முதலாளிகளும்,— அதே போல் பாட்டாளி மக்களும் வேலை செய்கிறார்கள் என்பதையும், முதலா ளித்துவத்தின் கீழ் சுரண்டப்படுகிறார்கள் என்பதையும், அவர்கள் உணர்வார்கள். சட்டபூர்வமான நரோட்னிக்குகளைப்பற்றி என்ன சொன்னோமோ, அது சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களுக்கும் பொருத்தமானதாகும். இது வரையிலும் கண்டும், கேட்டுமிராத பாணியில் சிறு முதலாளித்துவம், இல்லாத ஒரு முதலாளித்துவத்

தைக் கண்டு பிடித்திருக்கும் பெருமை அவர்களுக்கே உரியதாகும் அவர்கள் உழைக்கிற விவசாயிகளைப்பற்றிப் பேசுகிறார்கள்; ஆனால். நிரூபிக்கப்பட்ட, ஆராய்ந்து கற்றுணர்ந்த பரிசீலனை செய்து பார்த்து, விவரிக்கப்பட்ட, சிந்தனை செய்து பார்த்த ஒரு உண் மையை அவர்கள் கண்ணை மூடிக் கொண்டு பார்க்க மறுக்கிறார்கள். அதாவது: நமது உழைக்கிற விவசாயிகளிடையே விவசாய முதலாளிகள் தான் திட்ட வட்டமாக இப்பொழுது மேலாதிக்கம் வகிக்கிறார்கள்: உழைக்கிற விவசாயிகள் என்ற பட்டத்திற்கு அருகதையுள்ளவர்களாக இருந்தாலும் கூட, வசதி படைத்த விவசாயிகள் கூலிக்கு தொழிலாளர்களை ஈடுபடுத்தாமல் விவசாயம் செய்ய முடியாது; விவசாயிகளின் உற்பத்தி சக்திகளில் பாதிக்கும் மிகுதியானவை ஏற்கெனவே இவர்கள் கைவசமிருக்கின்றன.

இந்தக் கருத்தின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களின் கட்சி, தனது குறைந்த பட்ச செயல் திட்டத்தில் நடைமுறைக்குக் கொண்டு வருவதில் தன்னை ஈடுபடுத்தியிருக்கும் இலக்கானது உண்மையில் விநோதமான தாகவே இருக்கிறது; "சோஷலிஸத்தின் நலன்களுக்காகவும் முதலாளித்துவ சொத்துடமைக் கோட்பாடுகளுக்கு எதிரான போராட்டத்தின் நலனுக்காகவும், பொதுவாக உழைப்பாளிகள் என்ற நிலையிலும், கிராம கம்யூன்களின் உறுப்பினர்கள் என்ற நிலையிலும், குறிப்பாக நிலம், உழைப்பாளி மக்கள் அனை வரதும் பொதுச்சொத்து என்று விவசாயிகளின் கருத்து இருப்பதாலும் ரஷ்ய விவசாயிகளின் எண்ணங்கள், பாரம்பரி யங்கள், வாழ்க்கை முறைகள் ஆகியவற்றைப் பயன் படுத்த வேண்டும்". தொடக்கத்திலேயே நோக்கமானது, சாதுவான தாகவும், நீண்ட காலத்திற்கு முன்பே தத்துவமும் வாழ்வும் தவறு என்று நிரூபித்திருக்கும் உடோபியாக்களின் கிராம கம்யூன் களை முற்றிலும் கல்வி அளவில் திருப்பிக் கூறுவதாகவும் தோன்று கிறது. ஆயினும், எதார்த்தத்தில், ரஷ்யப் புரட்சியானது மிக அண்மையில் தீர்ப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கும் ஒரு அவசர அவசியமான அரசியல் பிரச்சினையில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். யார், யாரைச்சாதகமாகப் பயன் படுத்திக் கொள்வார்கள்? தங்களை சோஷலிஸ்டுகள் என்று தாமாகவே நம்புகிற புரட்சிகரமான அறிவாளிகள் முதலாளித்துவச் சொத்துடமைக் கோட்பாடு களுக்கு எதிரான போராட்டத்தின் நலன்களுக்காக, விவசாயி களின் உழைப்பாளிகள் என்ற எண்ணங்களைப் பயன் படுத்து வார்களா? அல்லது, சோஷலிஸத்திற்கு எதிரான போராட்டத் தின் நலன்களுக்காக புரட்சிகரமான ஜனநாயக அறிவாளிகளின் சோஷலிஸ்டு சொற்றொடர்களை முதலாளித்துவ சொத்துடமை

யாளர்களும், அதேசமயத்தில் உழைக்கும் விவசாயிகளும் பயன் படுத்துவார்களா?

இரண்டாவதாகக் கூறப்பட்டதின் நோக்கம்தான் (நமது எதிர்ப்பாளர்களின் விருப்பத்திற்கும், உணர்வுகளுக்கும் விரோதமாக) நிறைவேறும் என்று நாம் கருதுகிறோம். அது நிறைவேறும் என்பதில் நாம் நம்பிக்கை வைத்திருப்பதற்குக் காரணம், அதில் பத்தில் ஒன்பது பங்கு ஏற்கனவே நிறைவேறி விட்டது, "முதலாளித்துவ சொத்துடைமையாளர்களும் (அதே சமயத்தில் உழைக்கும்) விவசாயிகளும் நரோட்னிக் ஜனநாயக அறிவாளிகளின் சோஷலிஸ்டு சொற்றொடர்களை ஏற்கெனவே நல்ல முறையில் பயன் படுத்தியிருக்கிறார்கள்; இந்த அறிவாளிகள், ஆர்டெல்கள், கூட்டுறவு சங்கங்கள், கால் நடைகளின் தீவனத்தை வளர்ப்பது, கலப்பைகள், ஜெம்ஸ்ட்வோ கிட்டங்கிகள், வங்கிகள் ஆகியவை மூலமாக "உழைப்பாளிகளின் பாரம்பரியங்களையும், வாழ்க்கை முறைகளையும்" பேணிப் பாதுகாப்பது என்ற மாயமாலங்களுக்கு இடம் கொடுத்தார்கள். ஆனால், இவை கிராம கம்யூன்களுக்குள்ளேயே உண்மையில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியை ஊக்குவித்தன. நாளைக்கு ரஷ்ய அரசியல் சரித்திரம் எதை நிரூபிக்கப்போகிறதோ, அதை ரஷ்ய பொருளாதார சரித்திரம் இவ்வாறு நிரூபித்திருக்கிறது. பூர்ஷ்வா உழைக்கும் விவசாயிகளின் முற்போக்கான, புரட்சிகரமான அபிலாஷைகளுக்கு ஆதரவு கொடுப்பதை எந்த வகையிலும் நிறுத்தாமல், கிராமப்புற பாட்டாளி மக்களிடம் எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு எதிரான ஒரு போராட்டம் தவிர்க்க முடியாதது என்பதை வர்க்க உணர்வு படைத்த பாட்டாளி மக்கள் விரிவாக்கிக்கூறக் கடமைப்பட்டிருக்கிறார்கள்; நிலத்தைச் சரிசமமாக பகிர்ந்து கொடுப்பது என்ற முதலாளித்துவ ஜனநாயக கற்பனைகளுக்கு விரோதமான சோஷலிஸத்தின் உண்மையான லட்சியங்களை, கிராம பாட்டாளி மக்களுக்கு விளக்கிக் கூறவேண்டும். பண்ணை அடிமை முறையின் மீதமிச்சங்களுக்கு எதிராக, எதேச்சாதிகாரத்திற்கும் சமயகுருமார்களுக்கும், நிலச்சுவான்தார்களுக்கும் எதிராக முதலாளித்துவ விவசாயிகளோடு சேரவேண்டும்; பொதுவாக முதலாளித்துவத்திற்கு எதிராகவும், குறிப்பாக முதலாளித்துவ விவசாயிகளுக்கு எதிராகவும் நகர பாட்டாளி மக்களோடு சேரவேண்டும்— கிராமப்புற பாட்டாளி மக்களுக்கு இது மாத்திரம்தான் சரியான கோஷம்; இன்றைய கட்டத்தில் ரஷ்ய சமூகஜனநாயகத்திற்கு இது மாத்திரம்தான் சரியான விவசாய கொள்கைதிட்டம். நமது இரண்டாவது காங்கிரஸ் நிறை வேற்றிய கொள்கை திட்டமும் இது தான். ஜனநாயகத்திற்காக விவசாய முதலாளித்துவத்தோடு

சேர வேண்டும். சோஷலிஸத்திற்காக, நகர பாட்டாளி மக்களோடு சேரவேண்டும்— இந்த கோஷமானது, நரோடிஸத்தில் குதித்து ஆடுகிற சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களின் ஆடம்பரமான, அதே சமயத்தில் அர்த்தமில்லாத கோஷங்களைக் காட்டிலும் அதிகமாகக் கவர்ச்சி ஊட்டக்கட்டியதாக இருக்கும்.

இப்பொழுது நாம் மேலே குறிப்பிட்ட நகலின் முக்கியமான விஷயங்களில் மூன்றுவதை எடுத்துக் கொள்வோம். அதன் ஆசிரியர்கள் இப்பொழுது முரணில்லாத நரோட்னிக்குகளின் கருத்துக்களோடு தொடர்பை அறுத்துக் கொண்டு விட்டார்கள். இந்த முரணில்லாத நரோட்னிக்குகள் அரசியல் சுதந்திரத்தை எதிர்க்கிறார்கள்; காரணம், அரசியல் சுதந்திரம் கிடைத்தால் அதன் விளைவாக அதிகாரம் முதலாளித்துவத்தின் கைக்குமாறி விடுமாம். ஆனால், நகலில் எதேச்சாதிகாரமும் அதன் பால் பல்வேறு வர்க்கங்களின் கண்ணோட்டமும் என்பது பற்றி விளக்கம் கொடுக்கும் பகுதியில் நரோடிஸத்தின் மீதமிச்சங்கள் தெளிவாக இருக்கின்றன. எப்பொழுதும் போல், இங்கு கூட சிறு முதலாளித் துவ புரட்சிகரமான அறிவாளிகள் எதார்த்தம் பற்றிய தங்கள் கருத்தைத் தெளிவுபடுத்த முயலும்போதே, அது அவர்களின் முரண்பாடான, பழமை காரணமாகப் பயன் படுத்தும் தகுதி யற்றுப்போன கருத்துக்கள் தவிர்க்க முடியாத வகையில் பூரண மாக அம்பலப்படுவதைக் காணலாம். ஆகவே, சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களோடு நமக்கு இருக்கும் தகராறுகளை எப்பொழு தும் எதார்த்தம் சம்பந்தமாக அவர்களுடைய கருத்து என்ன என்ற பிரச்சினைக்குச் சுருக்க வேண்டும் என்று இடை மறித்துக் கூறுகிறோம்; ஏனெனில், இந்தப்பிரச்சினை ஒன்றே ஒன்று தான் அரசியலில் வெவ்வேறு திசையில் பிரிந்து செயல் படுவதற்கு ஆழ்ந்த தன்மையுள்ள காரணமாக இருக்கிறது),

"வேறு எந்த இடத்தைக்காட்டிலும் அதிகமாகப் பிற்போக் காளர்களாக இருக்கும் பெரிய தொழிலதிபர்கள், வியாபாரிகள் ஆகியவர்களின், வர்க்கம் பாட்டாளி மக்களுக்கு எதிராக எதேச் சாதிகாரத்தின் பாதுகாப்பு மேன்மேலும் தேவைப்படுகிறது" என்று நகல் கூறுகிறது, இது பொய்யாகும்; ஏனெனில், முன்னேற்ற மடைந்த முதலாளித்துவம் எதேச்சாதிகார ஆட்சி வடிவத்தின்பால் அக்கறையில்லாமல் இருப்பது நமது நாட்டில் தெளிவாகத் தெரிவது போல், ஐரோப்பாவில் எங்குமே பார்க்க முடியாது. பாட்டாளி மக்களைக் கண்டு பயந்தாலும் கூட, முதலாளிகளிடையே எதேச்சாதிகார ஆட்சி மீது அதிருப்தி அதிகரித்துக் கொண்டிருக்கிறது; இதற்குக் காரணம், ஓரளவு,

போலீசாரிடம் வரம்பில்லாமல் அதிகாரம் குவிந்திருந்தாலும் கூட, தொழிலாளி வர்க்கத்தின் இயக்கத்தை நசுக்க முடியவில்லை, பெரிய தொழிலதிபர்களின் "வர்க்கம்". என்று பேசப்படும் பொழுது நகலானது முதலாளித்துவத்திற்குள்ளேயே உள்ள உட்பிரிவுகளையும், குழுக்களையும் ஒரு வர்க்கம் என்ற நிலையில் முதலாளிகள் அனைவரோடும் சேர்த்துக் குழப்புகிறது. எதேச்சாதிகாரம் என்று நடுத்தர, சிறு முதலாளிகளைத்தான் திருப்தி செய்யக் கூடிய சக்தி கொஞ்சம் கூட இல்லாமல் இருக்கிறது என்று கூறுவதில் தான் தவறு மிகத்தெளிவாக வெளிப்படுகிறது.

"... கிராமங்களில் உழைக்கிற மக்கள் திரளுக்கு எதிராக பெரிய தனக்காரரர்களுக்கும், கிராம குலாக்குகளும் இத்தகைய ஆதரவு மேன்மேலும் தேவைப்படுகிறது—" உண்மையாகவா? அப்படியானல், ஜெம்ஸ்ட்வோ மிதவாதம் எங்கிருந்து வருகிறது? மேம்பட்ட (ஜனநாயக) அறிவாளிகள் மீது முன்னேறி கொண்டிருக்கும் ரஷ்ய விவசாயிக்கு எங்கிருந்து கவர்ச்சி ஏற்படுகிறது? அதே மாதிரியாக இவர்களுக்கு, அவர்கள் மீது எப்படி கவர்ச்சி ஏற்படுகிறது? அல்லது முன்னேறிக் கொண்டிருக்கும் ரஷ்ய விவசாயிக்கும் குலாக்கிற்கும் இடையே பொதுப்படையானது எதுவும் கிடையாதா? "நிலவி வரும் எதேச்சாதிகாரத்திற்கும் நாட்டின் முழுமையான பொருளாதாரம், சமூக அரசியல், கலாச்சாரம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் இடையே தீர்க்க முடியாத, வளர்ந்துக் கொண்டிருக்கிற முரண்பாடு தலைதூக்கிக் கொண்டிருக்கிறது ......" இதில் அவர்களுடைய சொந்த அபத்தக்களஞ்சியம் அடைப்பட்டுள்ள இடத்தை சுருக்கிக் கொண்டுள்ளார்கள். ஒரு நாட்டின் முழுமையான பொருளாதாரம் இன்னும் இதைப்போன்ற வளர்ச்சிகள், வர்க்கங்களின் மனோ நிலைகளில் பொருளாதாரம் மேலாதிகாரம் வகிக்கும் போது பிரதிபலிக்கப்படாத நிலையில் இவற்றிற்கிடையில் "சமரசம்" காணமுடியாத முரண்பாடுபற்றி சிந்தித்துப் பார்ப்பது சாத்தியமா? இரண்டில் ஏதாவது ஒன்றாக இருக்கவேண்டும் ஒன்று! ஏதேச்சாதிகாரம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உண்மையாகவே ஒவ்வாததாக இருக்க வேண்டும். அப்படியானல், தொழிலதிபர்கள், வியாபாரிகள், நிலச்சுவான்தார்கள், முன்னேறிக் கொண்டிருக்கும் விவசாயிகள் ஆகியவர்களின் வர்க்கம் முழுவதின் நலன்களுக்கும்கூட ஒவ்வாதாக இருக்க வேண்டும். 1861-ம் ஆண்டிலிருந்து [18] இந்த வர்க்கம்தான் "நமது" பொருளாதார வளர்ச்சியில் ஆதிக்கம் வகித்துவந்தது; ஒரு சமயம் சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களுக்குக் கூட இந்த விஷயம் தெரியாமல் இருக்கலாம். (அவர்களுக்கு வேறு விதமாக வி. வி. கற்றுக் கொடுத்திருந்தார்.) பொதுவாக முதலா

ளித்துவ வர்க்கத்திற்கு ஒவ்வாத ஒரு சர்க்கார், முதலாளித்துவத் திற்குள்ளேயே உள்ள குழுக்களுக்கும், பிரிவுகளுக்கும் இடையே நடைபெறும் முட்டி மோதல்களை தன்னல மேம்பாட்டிற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதையும், வியாபார சுதந் திரம் வேண்டும் என்று கோருகிறவர்களுக்கு எதிராக பாதுகாப்பு வேண்டும் என்று கோருகிறவர்களோடு அது சமாதானம் செய்து கொள்ள முடியும் என்பதையும், ஒரு பிரிவுக்கு விரோதமாக மற்றொரு பிரிவின் ஆதரவைத் திரட்ட முடியும் என்பதையும், இந்த நடு நிலைமையாளர்களை மனம் தளராமல் வருடக் கணக்கில், பத்து வருடக்கணக்கில் வைத்திருக்க முடியும் என்பதையும் ஐரோப்பா வின் சரித்திரத்தின் போக்கு முழுமையும் ஊர்ஜிதம் செய்திருக் கிறது. அல்லது, நமது நாட்டில், தொழிலதிபர்களும், நிலச்சுவான் தார்களும், விவசாய முதலாளிகளும் எதேச்சாதிகாரத்தை "மேன் மேலும் வேண்டி நிற்பவர்களாக உள்ளனர்." இந்த விஷயத்தில், ஒரு வர்க்கம் என்ற நிலையில் ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண் டாலும் கூட நாட்டின் பொருளாதார பிரபுக்களான அவர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் நலன்களைப் புரிந்து கொள்ள வில்லை என்றும், இந்த வர்க்கங்களின் முன்னேற்றமடைந்த, கல்வி அறிவுபடைத்த, அறிவாளிகளான பிரதிநிதிகளும் தலைவர்களும்கூட இந்த நலன்களைப் புரிந்துக் கொள்ளவில்லை, என்று நாம் ஊகிக்க வேண்டியிருக்கிறது!

ஆனாலும்கூட, நமது சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள்தான் நிலைமையைப் புரிந்து கொள்ளவில்லை என்று ஊகிப்பது அதிக இயல் பாக இருக்க முடியும் அல்லவா? சற்று பாருங்கள்; சிறிது தூரத்திற்கு அப்பால் அவர்கள் தாங்களாகவே முன்வந்து "மிதவாத ஜனநாயக எதிர்ப்பு அணி ஒன்று இருக்கிறது; அது, முக்கியமாக (வர்க்கம் சம் பந்தப்பட்ட விஷயத்தில்) அறிவாளிகள் சமுதாயத்தின் நடுத்தரத் தட்டில் உள்ளவர்களைக் கொண்டதாக உள்ளது" என்று கூறி அதை ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால், நமது அறிவாளிகளது சமுதாயம் ஒரு முதலாளித்துவ சமுதாயம் அல்லவே? வியாபாரிகள், தொழி லதிபர்கள், நிலச்சுவான்தார்கள், முன்னேறிக் கொண்டிருக்கும் விவ சாயிகள் ஆகியவர்களோடு ஆயிரக்கணக்கான பிணைப்புகளோடு அவர்கள் கட்டுண்டு கிடக்கிறார்கள் அல்லவா? மிதவாத ஜனநாயக எதிர்ப்பு அணியானது, முதலாளித்துவ ஜனநாயக எதிர்ப்பு அணி யாக இல்லாத ஒரு முதலாளித்துவத்தை ரஷ்யாவுக்கு கடவுள் கட்டளையிட்டிருக்க முடியுமா? சரித்திரத்தில் இதற்கு ஒரு முன் உதாரணமாக ஏதாவது இருப்பதாக சோஷலிஸ்டு புரட்சிக்காரர் களுக்குத் தெரியுமா? அல்லது, எதேச்சாதிகார ஆட்சிக்கு முதலாளித்துவத்தின் எதிர்ப்பு மிதவாத, படித்த "சமுதாயத்

தின்" மூலமாகத் தெரிவிக்காத, அல்லது தெரிவிக்கமுடியாத ஒரு நிகழ்ச்சியை அவர்கள் ஊகிக்க முடியுமா?

நரோட்னிஸத்தை மார்க்ஸிஸத்தோடு போட்டுக் குழப்பியதன் தவிர்க்க முடியாத விளைவுதான் நகலில் தாறு மாருகப் பல விஷயங்கள் கலந்து குழப்பப்பட்டிருக்கிறது. ஜனநாயகத்திற்கான போராட்டத்திற்கும், சோஷலிசத்திற்கான போராட்டத்திற்கும் இடையே உள்ள உறவுகள்பற்றி மார்க்ஸிஸம் மாத்திரம்தான் விஞ்ஞான ரீதியான சரியான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறது; இதை எதார்த்த உண்மைகள் மேன்மேலும் ஊர்ஜிதம் செய்து வருகிறது. உலகத்தின் மற்ற பகுதிகளில் இருப்பதுபோல், இங்கும் முதலாளித்துவ ஜனநாயகமும், சோஷலிஸ ஜனநாயகமும் இருக்கின்றன. உலகத்தின் மற்ற பகுதிகளைப்போலவே, சமூக ஜனநாயக வாதிகளாகிய நாமும், முதலாளித்துவ ஜனநாயக வாதிகளின் தவிர்க்க முடியாத மாய மயக்கங்களையும், அவர்களுடைய சொந்தத் தன்மைபற்றிய அறியாமையையும் ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்த வேண்டும். பூர்ஷ்வா ஜனநாயக வாதிகள் எதேச்சாதிகாரத்தை எதிர்த்தும், பண்ணை அடிமை முறையை எதிர்த்தும், எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தும்பொழுது, நம்முடன் கூடவே உலகத்தின் இதர பாகங்களைப் போலவே வர்க்க உணர்வு படைத்த பாட்டாளி வர்க்கம் பூர்ஷ்வா ஜனநாயகவாதிகளுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் ஆனல் எப்பொழுதும்; தான் தனியானதொரு வர்க்கம் என்பதையும், பூர்ஷ்வா வர்க்கத்தைத் தூக்கி எறிய வேண்டிய வர்க்கக் குறிக்கோள் தனக்கு உண்டு என்பதையும் ஒருகணம் கூட மறக்காமல் இதைச் செய்தல் வேண்டும்.

'உபர்யாட்" எண் - 3
1905 - ஜனவரி - 24 (11)

திரட்டப்பட்ட நூல்கள்
எண் - 8 பக்கம் - 88-89

# சோஷலிஸமும் விவசாயிகளும்

ரஷ்யாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் புரட்சியானது, மக்கள் அனைவருடையதுமான ஒரு புரட்சியாகத் திகழ்கிறது.[14] எதேச்சாதிகார சர்க்காராக, அல்லது அதைத் தாங்கி நிற்கிறவர்களாக அமைந்திருக்கும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரோடு மக்கள் அனைவரது நல உரிமைகள் சமரசம் காண முடியாத வகையில் முட்டி மோதிக் கொண்டிருக்கின்றன. பல்வேறு வர்க்கங்களதும், மக்கள் குழுக்களதும் நல உரிமைகள் மிகுந்த அளவில் மாறுபட்டதாகவும், முட்டி மோதிக் கொண்டிருப்பதாகவும் இருக்கிற பண்ட உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட இன்றைய சமுதாயம் நிலைத்திருக்க வேண்டுமானால், எதேச்சாதிகாரத்தை ஒழித்து, அரசியல் சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டும்; அரசின் அமைப்பிலும் நிர்வாகத்திலும் மேலாதிக்கம் வகிக்கும் வர்க்கங்களின் நல உரிமைகளை பகிரங்கமாகவும், நேரடியாகவும் வெளிப்படுத்த வேண்டும். சமூக, பொருளாதாரத் தன்மையில் முதலாளித்துவமாக இருப்பதால், புரட்சியானது முதலாளித்துவ சமுதாயம் முழுவதின் தேவைகளையும் வெளிப்படுத்தாமல் இருக்க முடியாது.

ஆயினும், இந்த சமுதாயமானது, எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் கூறுபடாத முழு மொத்தமானதாக இப்பொழுது தோன்றுகிறதெனினும், மூலதனத்திற்கும், உழைப்பிற்கும் இடையே உள்ள பெரும் வெடிப்பால் சரிக்கட்ட முடியாத வகையில் அது பிளவுப்பட்டிருக்கிறது. எதேச்சாதிகாரத்திற்கு விரோதமாக கிளர்ந்தெழுந்திருக்கும் மக்கள் ஒரு ஒன்றுபட்ட மக்களாக இல்லை. முதலாளிகள்—கூலிக்கு உழைக்கும் தொழிலாளர்கள் என்றும், பொருட்படுத்த முடியாத அளவுக்கு ஒரு சில பணக்காரர்கள் ("மேல் தட்டின் பத்தாயிரம்") என்றும், சொந்தமாக சொத்து இல்லாத, லட்சோப லட்சம் உழைப்போர் என்றும் பிரிந்திருக்கிறார்கள்; நீண்ட காலத்திற்கு முன்பு பத்தொன்பதாவது நூற்றுண்டின் முதல் அரைப் பகுதியிலேயே தூர பார்வையுள்ள ஒரு ஆங்கிலேயர் கூறியது போல் இவை "இரண்டு நாடுகள்" ஆக இருக்கின்றன.[15] ஐரோப்பா முழுவதும் பாட்டாளி மக்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையேயான இந்தப் போராட்டம்

இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்று விட்டது. இந்தப் போராட்டம் நீண்ட காலத்திற்கு முன்பே ரஷ்யாவிலும் பரவி யிருக்கிறது. இன்றைய ரஷ்யாவில் புரட்சியின் உள் அடக்கமாக அமைந்திருப்பது, இரண்டு போரிடுகிற சக்திகள் அல்ல; அதற்கு மாறாக, மாறுபட்ட, வித்தியாசப்படுத்திக் காட்டுகிற இரண்டு சமூக யுத்தங்கள்; ஒன்று, இன்றைய எதேச்சாதிகார நிலப் பிரபுத்துவ அமைப்பிற்குள் நடத்தப்படுகிறது; மற்றொன்று, எதிர்கால முதலாளித்துவ ஜனநாயக அமைப்பிற்குள் நடத்தப் படுகிறது; இதன் தோற்றத்தை நாம் ஏற்கெனவே பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒன்று, சுதந்திரத்திற்காக (முதலாளித்துவ சமுதாயத்தின் சுதந்திரத்திற்காக); ஜனநாயகத்திற்காக, அதாவது மக்களின் ஆட்சி உரிமைக்காக, மக்கள் அனைவரும் நடத்தும் போராட்டம்; மற்றொன்று, ஒரு சோஷலிஸ்டு சமுதாய அமைப் பிற்காக முதலாளித்துவத்தை எதிர்த்து பாட்டாளி மக்கள் நடத் தும் வர்க்கப் போராட்டம்.

இவ்வாறு சோஷலிஸ்டுகள் மீது கஷ்டமான, வலிமை மிக்க கடமைகள் சுமத்தப்படுகிறது—அதாவது ஒரே சமயத்தில் இரண்டு யுத்தங்களை நடத்த வேண்டும்; இந்த யுத்தங்கள் அவைகளின் தன் மையிலும், லட்சியங்களிலும் இரண்டில் ஒவ்வொன்றிலும் முடி வான பாத்திரத்தை வகிக்கும் சமூக சக்திகளின் சேர்க்கையிலும் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கின்றன. சமூக ஜனநாயக இயக்கம் இந்தக் கஷ்டமான கடமையில் வெளிப்படையாகத் தன்னை ஈடுபடுத்தியிருக்கிறது. நிச்சயமாக அதைச் சமாளித் திருக்கிறது. விஞ்ஞான ரீதியான சோஷலிசத்தை, அதாவது மார்க்ஸிஸத்தை அதன் திட்டத்தின் அடிப்படையாகக் கொண்ட தால் இது சாத்தியமாயிற்று; உலக சமூக ஜனநாயகத்தின் படை யின் ஒரு விரிவாக அது மாறியதால் இது சாத்தியமாயிற்று; ஐரோப்பாவில் பெரிதும் பல்வேறு வகைப்பட்ட நாடுகளில் பல ஜனநாயக, சோஷலிஸ்டு இயக்கங்களின் அனுபவத்தின் அடிப் படையில் மார்க்ஸிஸத்தின் கோட்பாடுகளை, உலக சமூக ஜன நாயகம் சரி பார்த்திருக்கிறது, ஊர்ஜிதம் செய்திருக்கிறது, விளக்கம் கொடுத்திருக்கிறது, விரிவுபடுத்தி வளர்த்திருக்கிறது.

புரட்சிகரமான சமூக ஜனநாயகம் நீண்ட காலத்திற்கு முன்பே, மிதவாத நரோட்னிக்கிலிருந்து துவங்கி ஒஸ்வோபோஸ் தெனியே வரையிலும் உள்ள பல்வேறு வகைப்பட்ட ரஷ்ய ஜன நாயகத்தின் முதலாளித்துவத் தன்மையைச் சுட்டிக் காட்டியிருக் கிறது, நிரூபித்தும் காட்டியிருக்கிறது. பூர்ஷ்வா ஜனநாயக மானது, தவிர்க்க முடியாத வகையில் அரை குறை மனது கொண் டதாகவும், வரம்புக்குட் பட்டதாகவும், குறுகிய தன்மை படைத்த

தாகவுமே இருக்கும் என்பதை அது எப்பொழுதுமே சுட்டிக்காட்டி வந்துள்ளது. ஜனநாயகப் புரட்சியின் கால கட்டத்திற்கு, சோஷலிஸ்டு பாட்டாளி மக்களின் கடமைகளை அது வரையறுத்திருக்கிறது—அதாவது, விவசாய மக்கள் திரளைத் தன் பக்கத்திற்கு வெல்ல வேண்டும்; முதலாளித்துவத்தின் நிலையற்ற தன்மையை செயலற்றதாக்க வேண்டும், எதேச்சாதிகாரத்தை நொறுக்கித் தள்ளி, நசுக்க வேண்டும். பாட்டாளி மக்கள், விவசாயிகள் ஆகியவர்களின் ஒரு புரட்சிகரமான ஜனநாயக சர்வாதிகாரம் என்ற வடிவத்தில் மாத்திரம் தான் ஜனநாயகப் புரட்சியின் ஒரு முடிவான வெற்றி சாத்தியமானதாகும். ஆனால், இந்த வெற்றியை எவ்வளவு விரைவில் பெறுகிறோமோ, எவ்வளவு முழுமையாக அது இருக்கிறதோ, அவ்வளவு வேகமாகவும் அவ்வளவு ஆழமாகவும் முழுமையாக ஜனநாயக மயமாக்கப்பட்ட முதலாளித்துவ அமைப்பிற்குள் புதிதாக முரண்பாடுகளும், ஒரு புதிய வர்க்கப் போராட்டமும் வளர்ச்சியடையும். ஜனநாயகப் புரட்சியை எவ்வளவு அதிகபட்ச அளவு நாம் பூரணமாகப் பெறுகிறோமோ, அந்த அளவுக்கு நெருக்கமாக சோஷலிஸ்டுப் புரட்சியின் கடமைகளை நாம் அணுகுவோம். முதலாளித்துவ சமுதாயத்தின் அஸ்திவாரங்களுக்கே எதிராக பாட்டாளி மக்களின் போராட்டமும் மிகுந்த அளவு கூர்மையாகவும், கடுமையாகவும் இருக்கும்.

இந்த முறையில் தெளிவு படுத்தப்பட்டுள்ள பாட்டாளி மக்களின் புரட்சிகரமான ஜனநாயகக் கடமைகள், சோஷலிஸ்டுக் கடமைகள் ஆகியவற்றிலிருந்து எந்த வகையிலாவது விலகிப் போவதை எதிர்த்து, சமூக ஜனநாயகவாதிகள் உறுதியாகப் போராட வேண்டும். இன்றைய புரட்சியின் ஜனநாயகத் தன்மையை அதாவது சாராம்சத்தில் முதலாளித்துவத் தன்மையை உதாசீனம் செய்வது முட்டாள்தனமாகும்; ஆகவே, புரட்சிகரமான கம்யூன்களை அமைப்பது போன்ற கோஷங்களை முன்வைப்பது முட்டாள்தனமாகும். ஜனநாயகப் புரட்சியில் உதாரணமாக விவசாயிகள், பாட்டாளி மக்கள் ஆகியவர்களின் புரட்சிகரமான ஜனநாயக சர்வாதிகாரம் என்ற கோஷத்தைப் புறக்கணித்து பாட்டாளி மக்கள் பங்கு கொள்ளும் கடமைகளை—அதில் தலையாய முறையில் பங்கு கொள்ளும் கடமையை—சிறுமைப்படுத்துவது அபத்தமானது, பிற்போக்குத் தனமானது, ஒரு ஜனநாயகப் புரட்சியின் கடமைகளையும், முன் தேவைகளையும் சோஷலிஸ்டு புரட்சியின் கடமைகளோடும், முன் தேவைகளோடும் சேர்த்துக் குழப்புவது அபத்தமாகும். இரண்டும் அவைகளின் இயல்பிலும், அவைகளில் பங்கெடுக்கும் சமூக சக்திகளின் சேர்க்கையிலும், வித்தியாசப்படுகிறது என்பதை திரும்பவும் கூறுகிறோம்.

கடைசியாகக் குறிப்பிட்டிருக்கும் தவறு பற்றி விரிவாகப் பரிசீலனை செய்ய உத்தேசித்திருக்கிறோம். பொதுவாக மக்களிடத்திலும், குறிப்பாக விவசாயிகளிடத்திலும் வர்க்க முரண்பாடுகள் வளர்ச்சியடையாத நிலையில் இருப்பது, ஒரு ஜனநாயகப் புரட்சியின் கால கட்டத்தில் தவிர்க்க முடியாத ஒரு நிகழ்ச்சித் தோற்றமாகும். இந்தப் புரட்சியானது முதல் தடவையாக முதலாளித்துவத்தின் விரிவான வளர்ச்சிக்கு உண்மையிலேயே அடித்தளங்களைப் போடுகிறது. பொருளாதார வளர்ச்சியின் பற்றாக்குறை நிலையானது பிற்போக்குத் தன்மைவாய்ந்த சோஷலிஸத்தை ஏதாவது ஒரு வடிவத்தில் நீடிக்கச் செய்வதிலோ, அல்லது மீண்டும் தலைதூக்குவதிலோ தான் கொண்டு போய்விடும். இத்தகைய சோஷலிஸம் குட்டி பூர்ஷ்வாத் தன்மை கொண்டதாகும். ஏனெனில் அதன் சீர்திருத்தங்கள் குட்டி பூர்ஷ்வா அமைப்புக்கு அப்பால் செல்லாமல் இருப்பதற்குரிய லட்சியத் தன்மையுள்ளதாகும். "முழு பரிபூரண சுதந்திரமும்", எல்லா நிலத்தையும் "மிகமிக நியாயமாக" வினியோகம் செய்வதும் முதலாளித்துவத்தை அழிப்பதற்குப் பதிலாக, சிறப்பாக விரிவாகவும், வலிமை மிக்க முறையிலும் முதலாளித்துவம் வளர்ச்சியடைவதற்கு நிலைமைகளை உண்டு பண்ணுகின்றன என்ற விஷயத்தை விவசாய மக்கள் திரள் புரிந்து கொள்ளவில்லை, புரிந்து கொள்ளவும் முடியாது. ஆகையால், சமூக ஜனநாயகமானது இந்த விவசாயிகளின் பேரார்வங்களில் புரட்சிகரமான ஜனநாயக சாராம்சத்தை மாத்திரம் தனியாகப் பிரித்து, அதை ஆதரிக்கிறது; சிறு முதலாளித்துவ சோஷலிஸம் விவசாயிகளின் இந்த அரசியல் பிற்பட்ட நிலையை ஒரு தத்துவ நிலைக்கு உயர்த்துகிறது; அப்பழுக்கற்ற ஒரு ஜனநாயகப் புரட்சியின் கடமைகளையும், முன் தேவைகளையும், ஒரு மானசீக சோஷலிஸ்டுப் புரட்சியின் கடமைகளோடும், முன் தேவைகளோடும் சேர்த்து குழப்புகிறது, அல்லது தாறுமாறாகக் கலக்குகிறது.

இந்தத் தெளிவற்ற சிறு முதலாளித்துவ சிந்தாந்தத்தை "சோஷலிஸ்டு புரட்சியாளர்களின்" கொள்கைத் திட்டம், அல்லது நகல் கொள்கைத் திட்டம் குறிப்பிடத்தக்க முறையில் வெளிப்படுத்துகிறது. இவர்கள் அவசரப்பட்டு வேகமாகத் 'தங்களை ஒரு கட்சி என்று பிரகடனம் செய்தார்கள்'; அவர்களில் வளர்ச்சிக் குறைவு உள்ளவர்கள்தான் ஒரு கட்சிக்கு முன் நிபந்தனையாகவும், தகுதி நிலையாகவும் இருந்தார்கள். அவர்களுடைய நகல் கொள்கைத் திட்டத்தை ஆராய்ந்து பரிசீலனை செய்யும்பொழுது, ("வெபர்யாட்" எண்—3—பார்க்கவும்*) சோஷலிஸ்டு புரட்சியாளர்

* இந்தப் புத்தகத்தில், "நரோட்நிஸத்திலிருந்து மார்க்ஸீஸத்திற்கு" என்ற தலைப்பில் உள்ள கட்டுரையைப் பார்க்கவும். (ஆர்)

களின் கருத்தானது ரஷ்யாவின் பழைய நரோட்னிக்குகளின் கருத்திலிருந்து தோன்றுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட நமக்கு ஏற்கெனவே ஒரு வாய்ப்புக் கிடைத்திருந்தது. ஆயினும், ரஷ்யாவின் முழுபொருளாதார வளர்ச்சியும், ரஷ்யப்புரட்சியின் முழு வளர்ச்சிப் போக்கும் சுத்தமான நரோடிஸத்தின் அஸ்திவாரங்களையே ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும் பயனற்றதாகச்செய்து வருவதால், சோஷலிஸ்டு புரட்சியாளர்களின் கருத்துக்களும் தவிர்க்க முடியாத வகையில் பல கொள்கைகளுக்கு உகந்த முறையில் மாறுவதையே நாடுகின்றன. நரோட்னிக் கருத்துகளில் நில வாடகைகளை நவநாகரீக சந்தர்ப்ப வாத முறையில் மார்க்ஸிஸத்தை ''சிறிது ''விமர்சனம் செய்து'' ஒட்டுப்போட அவர்கள் முயல்கிறார்கள்; ஆனால், இது கிழிந்துபோன ஆடையை அணிந்துகொள்ளும்படி சீர்படுத்தவே முடியாததுபோல்தான். மிக முக்கியமாக, அவர்களுடைய கொள்கை திட்டமானது முற்றிலும் உயிரற்ற, தானாகவே முன்னுக்குப் பின் முரணாக இருக்கிற ஒரு தஸ்தாவேஜே தவிர, வேறு ஒன்றுமே அல்ல. இந்தத் தஸ்தாவேஜோ, பண்ணை அடிமை முறை ரஷ்யாவிலிருந்து, முதலாளித்துவ ரஷ்யாவுக்குப் போகும் பாதையில், "நரோடிஸத்திலிருந்து• மார்க்ஸீஸத்திற்குப்'' போகும் பாதையில், ரஷ்ய சோஷலிஸத்தின் சரித்திரத்தில் ஒரு கட்டத்தை மாத்திரம்தான் வெளிப்படுத்துகிறது. இந்த வரையறுப்பும் கூட ஒரே காலத்து புரட்சிகரமான எண்ணத்தின் கிட்டத்தட்ட ஏராளமான சிறிய நீரோடைகளை ஒத்திருக்கிறது, "பிரெட்ஸ்விட்'' [17] பத்திரிக்கையில் எண் 6—8—ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் போலந்து சோஷலிஸ்டு கட்சியின் (பி.எஸ்.பி.[18]) சமீபகால நகல் கொள்கைத் திட்டத்திற்குப் பொருத்தமானதாகவே இருக்கிறது.

இந்த நகல், விவசாய கொள்கை திட்டத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கிறது. முதல் பகுதி, "சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதற்கு, சமூக நிலைமைகள் ஏற்கெனவே பக்குவமடைந்திருக்கிறது'' என்பதை விவரிக்கிறது; இரண்டாவது பகுதி, "முதல் பகுதியில் விவரித்துள்ள விவசாய சீர்திருத்தங்களைப் பூர்த்தி செய்வது பற்றியும் முறைப்படுத்திக் கூறுகிறது'' முதலாவது பகுதி, அதன் முறையாக, மூன்று உப பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது; (அ) தொழிலாளருக்கு பாதுகாப்பு—விவசாய பாட்டாளி மக்களின் நலனுக்காக கோரிக்கைகள்; (ஆ) விவசாய சீர்திருத்தங்கள் (குறுகிய அர்த்தத்தின், அல்லது விவசாயிகளின் கோரிக்கைகள் என்றும் கூறலாம்); (இ) கிராமப்புற மக்களின் பாதுகாப்பு (சுயாட்சி இன்னும் இது போன்றவை).

அதிகப்பட்ச கொள்கை திட்டத்திலிருந்து குறைந்த பட்ச கொள்கை திட்டம் என்ற தன்மையில் சிலவற்றைத் தனியே பிரிக்க முயல்வதிலும், பிறகு சுத்தமாக பாட்டாளி மக்களின் தன்மையில் கோரிக்கைகளை முற்றும் சுயேச்சையாக வரையறுத்திருப்பதிலும் இந்தச் செயல் திட்டமானது மார்க்ஸிஸத்தை நோக்கி ஒரு படி முன்னேறிச் சென்றிருக்கிறது. மேலும், இந்தக் கொள்கைத் திட்டத்தின் முன்னுரை சோஷலிஸ்டுகள் "விவசாயிகளின் சொத்து உடைமை உணர்வைப் புகழ்வதை" முற்றிலும் அனுமதிக்க முடியாது என்பதை அங்கீகரிக்கிறது. உண்மையில் பின்னால் கூறப்பட்ட கருத்துரையின் வாசகத்தில் உள்ள உண்மையைப் போதிய அளவு சிந்தனை செய்து பார்த்தால், அதன் தர்க்க ரீதியான முடிவுக்குக் கொண்டு சென்றால், அது கறாராக மார்க்ஸீய செயல் திட்டத்தில் தவிர்க்க முடியாதவகையில் கொண்டு போய்விட்டிருக்கும். கஷ்டமான விஷயம் என்னவென்றால், மார்க்ஸிஸத்தைச் சந்தர்ப்பவாதமுறையில் விமர்சனம் செய்யும் ஊற்றிலிருந்து சுய விருப்பத்தோடு பி. எஸ். பி. தனது கருத்துகளைப் பெறுவதால், அது முன்பின் முரணில்லாத ஒரு பாட்டாளி மக்களின் கட்சியாகத் திகழவில்லை. "நில உடமை நிலத்தைக் குவிப்பதை நாடுகிறது என்பது நிரூபிக்கப்படவில்லை", என்று செயல் திட்டத்தின் முன்னுரையில் பின்வரும் வாசகத்தைக் காண்கிறோம். "நில உடமையில் குவியல் ஏற்படும் போக்கு நிரூபிக்கப்படாததால் முற்றிலும் அந்தரங்க சுத்தியோடும், உறுதியோடும் இந்த வடிவத்திலுள்ள பொருளாதாரத்தை ஆதரிப்பது என்பதை நினைக்கவே முடியாது; சிறிய பண்ணைகள் தவிர்க்க முடியாத வகையில் மறைந்து போய்விடும் என்பதை விவசாயிகள் நம்பும்படி செய்வதையும் நினைக்கவே முடியாது."

இது, முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் ஒரு எதிரொலியே தவிர, வேறு எதுவும் அல்ல. சிறிய சுதந்திரமான விவசாயிகளின் நலன்களுக்கு உகந்த முறையில் முதலாளித்துவம் இருக்கிறது என்ற கருத்தை சிறு விவசாயிகளிடையே புகுத்துவதற்கு முதலாளித்துவ பொருளாதார வாதிகள் தங்களால் முடிந்ததை எல்லாம் செய்கிறார்கள். அதனால்தான், நிலச்சொத்து குவிந்து வரும் பிரச்சினையைக் குறிப்பாக வலியுறுத்துவதன் மூலமாக பண்ட உற்பத்தி, மூலதனத்தின் நுகத்தடி, சிறு நில விவசாயம் தாழ்வுற்று, அழிந்துபோய்க் கொண்டிருப்பது ஆகிய பொதுவான பிரச்சினைகளை அவர்கள் மூடி மறைக்கிறார்கள். விவசாயத்தில், சந்தையில் விற்பனை செய்வதற்காகச் சில குறிப்பிட்ட பண்டங்களை விரிவான அளவில் உற்பத்தி செய்யும் முறையும் கூட சிறு நிலத்திலும், நடுத்தர நிலத்திலும் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது என்பதையும், நிலத்தை அனுபவிக்கும் உரிமையைக் கு

தகைக்கு விடுவது என்ற முறை அதிகரித்து வருவதாலும் நிலத்தை அடகுவைத்திருக்கும் பெரும்பளுவாலும், கொள்ளை வட்டியின் நிர்ப்பந்தத்தாலும் இத்தகைய நிலத்தில் நில உடமைப் பறிபோய்க் கொண்டிருக்கிறது என்பதையும் அவர்கள் பார்க்க மறுக்கிறார்கள். விவசாயத்தில் விரிவான அளவில் உற்பத்தி செய்யும் முறையானது, தொழில் நுட்பத்தில் மற்ற சிறு நில விவசாய முறையைக் காட்டிலும் சிறந்ததாக இருக்கிறது என்ற மறுக்க முடியாத உண்மையை அவர்கள் மறைக்கிறார்கள்; மேலும், முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுவதில் விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் குறைகிறது என்ற உண்மையையும் அவர்கள் மறைக்கிறார்கள். இன்றைய டேவிட்களால் புத்துயிரளிக்கப்பட்டிருக்கும் முதலாளித்துவ தப்பெண்ணங்களைத் திருப்பிக் கூறுவதை தவிர, வேறு எதுவும் பி. எஸ். பி. யின் அறிக்கையில் கிடையாது.

சித்தாந்த ரீதியில் கருத்துக்கள் சரியற்றவையாக இருந்தால் அது நடைமுறை திட்டத்தையும் பாதிக்கிறது. முதலாவது பகுதியை எடுத்துக் கொள்வோம்—விவசாய சீர்திருத்தங்களை அதன் வாசகத்தின் குறுகிய அர்த்தத்தில் பார்ப்போம். ஒரு புறத்தில், ஐந்தாவது உப பகுதியில், "நிலத்தை வாங்கும் உரிமை மீது விதிக்கப்பட்டுள்ள எல்லாத் தடைகளையும் ரத்து செய்வது'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது; ஆறாவது உப பகுதியில், "ஸர்லார்க்[18] கையும் வண்டிக் கூலியையும் (கட்டாய சேவை) ரத்து செய்வது'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவை அனைத்தும் சுத்தமாக மார்க்ஸிய குறைந்த பட்ச கோரிக்கைகளாகும். அவைகளை முன் வைப்பதன் மூலமாக (குறிப்பாக ஐந்தாவது உப பகுதி) நமது சோஷலிஸ்டு புரட்சியாளர்களோடு ஒப்பிடும் பொழுது பி. எஸ். பி. ஒரு படி முன்னேறிச் செல்கிறது; சோஷலிஸ்டு புரட்சியாளர்களுக்கு "மாஸ்கோவ்ஸ்கியேவெடாமோஸ்தி''[19] பத்திரிகையாளர்களோடு சேர்ந்து கொண்டு "ஒதுக்கீட்டு நிலத்தை விற்பனை செய்யக் கூடாது'' என்று தற்பெருமையடித்துக் கொள்ளும் பலஹீனம் இருந்தது. இந்தக் கோரிக்கைகளை முன் வைப்பதன் மூலமாக, இன்றைய காலகட்டத்தில் விவசாய இயக்கத்தின் உள் அடக்கமும், அடிப்படையும் என்ற நிலையில், பண்ணை அடிமை முறையின் மீத மிச்சங்களை எதிர்த்துப் போராடுவது சம்பந்தமாக பி. எஸ். பி. மார்க்ஸிய கருத்தின் விளிம்பிற்கு வருகிறது இந்தக் கருத்தின் விளிம்பிற்கு பி. எஸ். பி. வந்தாலும் கூட, அதை உணர்வு பூர்வமாகவும், முழுமையாகவும் ஏற்றுக் கொள்வதிலிருந்து, நெடுந்தூரத்தில் இருக்கிறது.

நமது பரிசீலனையில் இருக்கும் குறைந்த படச கொள்கை திட்டத்தின் முக்கியமான ஷரத்துக்கள் பின்வருமாறு: "(1) மத

குருமார்களுக்குச் சொந்தமான நிலத்தையும் அரச குடும்பத்திற்கும், அரசுக்கு சொந்தமான நிலங்களையும் நிலத்தோடு சேர்ந்த கட்டிடங்களையும், மற்றும், மடாலயங்களுக்குச் சொந்தமான பண்ணை நிலங்களையும் பறிமுதல் செய்வதன் மூலமாக தேச உடமையாக்க வேண்டும்; (2) நேரடியான வாரிசுகள் இல்லையென்றால், பெரிய நிலச்சுவான்தார்களின் நிலத்தை தேச உடமையாக்க வேண்டும்; (3) காடுகளையும், ஆறுகளையும், ஏரிகளையும் தேச உடமையாக்க வேண்டும்.'' இந்த கொள்கை திட்டத்தின் முக்கியமான கோரிக்கை நிலத்தை தேச உடமையாக்க வேண்டும் என்று இருப்பதால், இந்தக் கோரிக்கைகளில் ஒரு கொள்கைத் திட்டத்திலுள்ள குறைபாடுகள் அனைத்தும் இருக்கின்றன. பொதுமக்களுக்கு பூரணமாக அரசியல் சுதந்திரமும், ஆட்சி உரிமையும் இல்லாத வரையிலும், ஒரு ஜனநாயகக் குடியரசு நடைமுறையில் இல்லாத வரையிலும், தேச உடமையாக்குவது என்ற கோரிக்கையை முன் வைப்பது பக்குவக் குறைவானது என்பதோடு காலத்திற்குப் பொருத்தமற்றதாகவும் இருக்கிறது; எவ்வாறெனில், தேச உடமையாக்குவது என்றால் அதன் அர்த்தம் அரசுக்கு மாற்றுவது என்பதுதான்; இன்றைய அரசோ போலீஸ் அரசாகவும், வர்க்கத்தின் அரசாகவும் இருக்கிறது; எந்த வகையிலாவது எதிர்கால அரசும் ஒரு வர்க்கத்தின் அரசாகத்தான் இருக்கும். ஜனநாயக மயமாக்குவதை நோக்கி முன்னேக்கி அழைத்துச் செல்வதற்காகக் கொடுக்கப்பட்ட ஒரு கோஷம் என்ற நிலையில் இந்தக் கோஷமானது முற்றிலும் பயனற்றதாகும்; எவ்வாறெனில், அது நிலச்சுவான்தார்கள் விவசாயிகளின் உறவுகள் என்ன என்பதை (விவசாயிகள் நிலச்சுவான்தார்களின் நிலத்தை எடுத்துக் கொள்வார்கள்) வலியுறுத்தவில்லை; ஆனால், அரசின்பால் நிலச்சுவான்தார்களின் உறவுகளை வலியுறுத்தியிருக்கிறது. விவசாயிகள் நிலத்திற்காக நிலச்சுவான்தார்களையும், நிலச்சுவான்தார்களின் அரசையும் எதிர்த்து ஒரு புரட்சிகரமான வழியில் போராடிக் கொண்டிருக்கும்பொழுது, இன்று இருப்பது போன்ற ஒரு கால கட்டத்தில் இந்தப் பிரச்சினையை இவ்வாறு முன் வைப்பது முற்றிலும் தவறாகும். பறிமுதல் செய்வதற்கு ஒரு சாதனம் என்ற நிலையில், பறிமுதல் செய்வதற்காக விவசாயிகளின் புரட்சிகரமான குழுக்களை அமைக்க வேண்டும்; இத்தகைய ஒரு காலகட்டத்தின் தேவைகளை இந்த கோஷம் ஒன்றே ஒன்று தான் பூர்த்தி செய்கிறது; நிலச்சுவான்தார்களுக்கு எதிரான வர்க்கப் போரட்டத்தை ஊக்குவித்து, வளர்க்கிறது; நிலச்சுவான்தார்களின் அரசை புரட்சிகரமாக அழிப்பதோடு பிரிக்க முடியாமல் பின்னிப் பிணைந்திருக்கிறது இந்த வர்க்கப் போராட்டம்.

பி. எஸ். பி. யின் நகல் கொள்கைத் திட்டத்தில் உள்ள குறைந்த பட்ச விவசாய கொள்கைத்திட்டத்தில் மற்ற ஷரத்துக்கள் பின் வருமாறு: "(4) சொத்து உரிமைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்; விவசாயத்தில் அபிவிருத்தியை உண்டு பண்ணுவதற்கு அது முட்டுக்கட்டையாக இருக்கிறது; சம்பந்தப்பட்டவர்களில் பெரும்பாலோர் இத்தகைய அபிவிருத்தி தேவை என்று கருதினல்... (?) நெருப்பு. ஆலங்கட்டி மழை ஆகியவற்றுல் தானியங்கள் அழிக்கப்பட்டால். தொத்து நோயால் கால் நடைகள் அழிந்து போனுல் நஷ்ட ஈடு பெறும் காப்புறுதி நிறுவனங்களை தேச உடமையாக்குவது; (8) விவசாய கூட்டுறவு சங்கங்களை அமைக்க அரசு உதவி செய்வதற்காக சட்டம் இயற்றுவது (9) விவசாயப் பள்ளிக் கூடங்கள்", இந்த ஷரத்துக்கள் சோஷலிஸ்டு புரட்சியாளர்களின் உணர்வில் இருக்கின்றதை அல்லது (அதற்குச் சமமாக இருக்கிற) முதலாளித்துவ சீர்திருத்தங்களாக இருக்கின்றன. அவைகளில் புரட்சிகரமானவை எதுவும் கிடையாது. அவை முற்போக்கானவை என்பது உண்மையே — ஒருவரும் அதுப்பற்றி தாவா செய்யவில்லை; ஆனல், சொத்துக்குச் சொத்தமானவர்களின் நல உரிமைகளுக்குச் சாதகமாக இருக்கிறது என்ற நிலையில் முற்போக்கானது. ஒரு சோஷலிஸ்டு இவைகளை முன் வைக்கிறுர் என்றல், அதன் அர்த்தம் சொத்துடமை இயல் புணர்ச்சியை முகத்துதி செய்வதே தவிர வேறு எதுவும் அல்ல, விவசாயத்தில் . கூட்டுறவு சங்கங்கள், காப்பீடு நிறுவனங்கள் போன்றவைகளைக் காட்டிலும் கொஞ்சம் கூட "முற்போக்குத் தன்மையில்" குறைவில்லாத பெரும் முதலாளிகளின் டிரஸ்டுகள், கார்டெல்கள், சிண்டிகேட்டுகள், உற்பத்தியாளர் சங்கங்கள் ஆகியவைகளுக்கு அரசு உதவி செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைப்பது போலவே இருக்கிறது. அந்தக் கோரிக்கைகளை முன்வைப்பதும் இவை அனைத்தும் முதலாளித்துவ முன்னேற்றம் தான். அதில் அக்கறை காட்டுவது நமது விவகாரமல்ல; முதலாளிகள், தொழிலதிபர்கள் ஆகியவர்களின் விவகாரம் அது. சிறு முதலாளித்துவ சோஷலிஸத்திலிருந்து தெளிவாக மாறுபட்டிருக்கும் பாட்டாளி மக்களின் சோஷலிஸமானது சிறிய, பெரிய நிலச்சுவான்தார்களின் கூட்டுறவு சங்கங்களைக் கவனிக்கும் பொறுப்பை கௌன்ட்டி ரோக்குக்னியிடமும், நில உடமையாளர்களான ஜேம்ஸ்ட்லோ உறுப்பினர்களிடமும், மற்றவர்களிடமும் ஒப்படைத்துவிட்டு, நிலச்சுவான்தார்களை எதிர்த்துப் போராடும் நோக்கத்திற்காக கூலிக்கு உழைக்கும் தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கங்களில் தனது முழுக் கவனத்தையும் செலுத்தும்.

இந்தச் செயல் திட்டத்தில் இரண்டாவது பகுதியைப்பற்றி நாம் இப்பொழுது பரிசீலனை செய்வோம். அதில் ஒரே ஒரு விஷயம்

தான் அடங்கியிருக்கிறது: "பறிமுதல் செய்வதன் மூலமாக பெரிய நிலச்சுவன்தார்களின் நிலங்களை தேச உரிமையாக்குவது. இவ்வாறு மக்களால் கைவசப்படுத்தப்பட்ட விவசாயத்திற்கு லாயக்கான நிலத்தையும், புல்வெளிப் பிரதேசத்தையும் பங்கிட்டு, நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும்; கொஞ்சம் நிலத்தை வைத் திருப்பவர்களுக்கு, உத்திரவாதத்தோடு நீண்டகால குத்தகைக்குக் கொடுக்க வேண்டும்."

குறைபாடில்லாத அருமையான "முழு நிறைவேற்றமும்" என்பது உண்மைதான்! "விவசாய சீர்த்திருத்தங்களை முழு நிறைவான நிறைவேற்றம்" என்ற முகமூடியின்கீழ் தன்னை சோஷலிஸ்டு என்று அழைத்துக் கொள்ளும் ஒரு கட்சி சமுதாயத்தை சோஷலிஸ்டு முறையில் எந்த வகையிலும் அமைக்காமல் அதற்குமாருக முட்டாள் தனமான சிறு முதலாளித்துவ கற்பனை சமுதாயத்தைப் பிரரேபிக்கிறது. ஜனநாயக, சோஷலிஸ்டுப் புரட்சிகளை முற்றிலும் குழப்புவதற்கும், அவைகளின் லட்சியங்களில் உள்ள வித்தியாசங்களை முற்றிலும் புரிந்துகொள்ளத் தவறுவதற்கும் மிகுந்த பயனுள்ள ஒரு உதாரணத்தை நாம் இங்கு பார்க்கிறோம். நிலச்சுவான்தார்களின் நிலத்தை விவசாயிகளுக்கு மாற்றுவது, ஜனநாயகப் புரட்சியின் ஒரு பகுதியாக இருக்கலாம் — உண்மையில் ஐரோப்பாவில் எல்லா இடங்களிலும் இப்படித்தான் நடைபெற்றது — முதலாளித்துவப் புரட்சியில் பல கட்டங்களில் ஒன்ருகவும் இருக்கலாம்; ஆனுல், முதலாளித்துவ தீவிரவாதிகள் தான் இதை முழு நிறைவேற்றம், அல்லது இறுதியான உண்மையான நிறைவேற்றம் என்று அழைக்கலாம். பல்வேறு வகைப்பட்ட உடமையாளர்களிடையிலும், விவசாயிகளில் பல்வேறு வகைப்பட்ட வர்க்கங்களிடையிலும் நிலத்தை விநியோகம் செய்வது ஜனநாயகத்தின் வெற்றிக்கும், பண்ணை அடிமை முறையின் அடிச்சுவடுகளைத்துடைத்தெறிவதற்கும், மக்கள் திரளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், முதலாளித்துவ வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கும், இன்னும் இது போன்றவைகளுக்கும் தேவையாகவும் அனுகூலமாகவும் இருக்கலாம்; ஒரு ஜனநாயகப் புரட்சியின் சகாப்தத்தில் சோஷலிஸ்டு பாட்டாளி மக்கள் இத்தகைய ஒரு நடவடிக்கையை உறுதியோடு ஆதரிக்க வேண்டியது இன்றியமையாத கடமையாகும்; ஆனுல், சிறு நில விவசாய உற்பத்தி அல்ல, சோஷலிஸ்டு உற்பத்திதான் "முழுமையான நிறைவேற்றமாகவும், இறுதியான நிறைவேற்றமாகவும்" அமைய முடியும். சிறுநில குத்தகைதார்களுக்கு உத்திரவாதம் அளித்து" அதே சமயத்தில் பண்ட உற்பத்தியையும், முதலாளித்துவத்தையும் பாதுகாத்து வைத்திருப்பதானது, பிற்போக்குச் சிறு முதலாளித்துவ கற்பனை சமுதாய நடவடிக்கையே தவிர, வேறு எதுவும் அல்ல.

பி, எஸ். பி. யின் அடிப்படையான தவறு அந்தக் கட்சிக்கு மாத்திரம் சிறப்பாக நிகழ்ந்திருப்பதல்ல, தொடர்பில்லாமல் தனியாக அதற்கு மாத்திரம் நேரிட்ட நிகழ்ச்சியல்ல, அல்லது ஏதோ தற்செயலாக நிகழ்ந்த நிகழ்ச்சியும் அல்ல என்பதை நாம் இப்பொழுது பார்க்கிறோம். விவசாயப் பிரச்சினையில் மாஸ்கோவில்[20] அண்மையில் நடைபெற்ற (செப்டம்பரில்) ஜெம்ஸ்ட்வோ காங்கிரஸ் விவாதத்தில் கருத்துக்களைத் தெரிவித்த முதலாளித்துவ மிதவாதமும், தீவிர வாதமும் உள்பட ரஷ்ய நரோடிஸம் முழுமையின், ரஷ்ய முதலாளித்துவ மிதவாதம், தீவிரவாதம் அனைத்தின் அடிப்படையான தவறை அது தெளிவான; மேலும் வித்தியாசப் படுத்திக்காட்டுகிற வடிவத்தில் (சோஷலிஸ்டு புரட்சியாளர்கள்) பெருமையாகப் பேசுகிற, அவர்களே புரிந்து கொள்ள முடியாத 'சோஷலிஸ மயமாக்குவதை''க் காட்டிலும்) தெரிவிக்கிறது.

இந்த அடிப்படையான தவறைப் பின் வருமாறு எடுத்துரைக்கலாம்.

உடனடியான லட்சியங்களை முன்வைப்பதில், பி. எஸ். பி. யின் செயல் திட்டம் புரட்சிகரமானதல்ல. அதன் இறுதி லட்சியங்களிலும், அது சோஷலிஸ்டு அல்ல.

வேறு வகையில் கூறுகிறேன். ஜனநாயகப்புரட்சிக்கும், சோஷலிஸ்டுப்புரட்சிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளத் தவறுவது ஜனநாயக லட்சியங்களின் உண்மையான புரட்சிகரமான அம்சங்களைத் தெரிவிக்கத் தவறுவதில் இழுத்துச்செல்கிறது. அதே சமயத்தில் முதலாளித்துவ ஜனநாயக உலகப் பார்வையின் எல்லா விதமான தெளிவற்ற தன்மைகளும் சோஷலிஸ்டு லட்சியங்களில், புகுத்தப்படுகின்றன. அதன் விளைவு என்னவென்றால், முன்வைக்கும் கோஷம் ஒரு ஜனநாயக வாதிக்குப் போதுமான அளவு புரட்சிகரமானதாக இல்லை; இது ஒரு சோஷலிஸ்டுக்கு மன்னிக்க முடியாத அளவு குழப்பம் நிறைந்ததாக இருக்கிறது.

மறுபுறத்தில், சமூக ஜனநாயகத்தின் கொள்கைத் திட்டமானது. உண்மையான புரட்சிகரமான ஜனநாயகத்தை ஆதரிப்பது தெளிவான சோஷலிஸ்டு லட்சியங்களை முன்வைப்பது. ஆகவே இரண்டையும், செய்து எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. இன்றைய காலத்து விவசாயிகளின் இயக்கத்தில் பண்ணை அடிமை முறையை எதிர்த்து ஒரு போராட்டத்தையும், நிலச் சுவான்தாரர்களை எதிர்த்து ஒரு போராட்டத்தையும், நிலச்சுவான் தார்களின் அரசை எதிர்த்து ஒரு போராட்டத்தையும் நாம் பார்க்

கிறேம். இந்தப் போராட்டத்திற்கு நாம் முழு ஆதரவையும் கொடுக்கிறேம். இத்தகைய ஆதரவுக்குச் சரியான ஒரே ஒரு கோஷம் என்னவென்றல், புரட்சிகரமான விவசாயிகளின் குழுக்கள் மூலமாக பறிமுதல் செய்வது என்பதுதான். பறிமுதல் செய்யப்பட்ட நிலத்தை என்ன செய்வது என்பது இரண்டாம் பட்சப்பிரச்சினையாகும், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது நாம் அல்ல, விவசாயிகள் தான். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற நிலை வரும் பொழுது, விவசாயிகளுக்குள்ளேயே பாட்டாளி மக்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே ஒரு போராட்டம் துவங்கும். அதனுல் தான் இந்தப் பிரச்சினையை முடிவெடுக்காமல் அப்படியே விட்டு விடுகிறேம் (சிறு முதலாளித்துவத் திட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இது கசப்பாக இருக்கிறது) அல்லது, நிலச்சுவான்தார்கள் கைவசப்படுத்தியிருக்கும் விவசாயிகளின் நிலத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்[21] என்று கேட்பதன் மூலமாக பின் பற்ற வேண்டிய பாதையின் தொடக்கத்தை மாத்திரம் சுட்டிக்காட்டுகிறேம் (சமூக ஜனநாயகவாதிகள் ஏராளமாக விளக்க உரைகளைக் கொடுத்திருந்தாலும் கூட, சிந்தனை செய்யாத நபர்கள் இயக்கத்திற்கு இதில் ஒரு முட்டுக்கட்டை இருப்பதாகப் பார்க்கிறுர்கள்).

விவசாய சீர்திருத்தம் புரட்சிகரமான பாத்திரத்தை வகிக்கும்படி செய்வதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது—இன்றைய ரஷ்யாவில் அது தவிர்க்க முடியாததாகும். விவசாயிகள் தாங்களாகவே எடுக்கும் புரட்சிகரமான முன் முயற்சியால் அதைச் செயல்படுத்த வேண்டும்; நிலச்சுவான்தார்களும், அதிகாரவர்க்கமும். அரசும் எதிர்த்தாலும்கூட, அதைப் புரட்சிகரமான முறைகளால் செயல்படுத்த வேண்டும். இன்று இருப்பதைக் காட்டிலும், மிக மோசமான முறையில் இத்தகைய ஒரு சீர்திருத்தத்திற்குப்பிறகு நிலம் வினியோகிக்கப்பட்டாலும், இது தான் சிறந்ததாகும். புரட்சிகரமான விவசாயிகளின் குழுக்களை அமைக்க வேண்டும் என்று நாம் மிக முக்கியமான கோரிக்கையை வைக்கும் பொழுது, இந்தப் பாதையைத் தான் நாம் சுட்டிக் காட்டுகிறேம்.

ஆனுல் அதே சமயத்தில், கிராமப்புற பாட்டாளி மக்களுக்கு நாம் பின் வருமாறு கூறுகிறேம். "விவசாயிகளின் அதி தீவிரமான வெற்றியானது — இதை அடைவதற்கு இப்பொழுது நீங்கள் உங்கள் சக்தி முழுவதையும் ஈடுபடுத்தி உதவவேண்டும்— உங்கள் ஏழ்மையை அகற்றி விடாது. ஒரே ஒரு வழி மூலமாகத்தான் இதை அடைய முடியும். அதாவது, பாட்டாளி மக்கள் அனைவரும் — இயந்திரத்தொழில் பாட்டாளி மக்களும், விவசாயப் பாட்டாளி மக்களும் — முதலாளித் துவத்தை முறியடித்து வெற்றி பெற்று, சோஷலிஸ்டு சமுதாயத்தை அமைக்க வேண்டும்."

விவசாய நில உடமையாளர்களோடு சேர்ந்து கொண்டு நிலச்சுவான்தார்களுக்கும், நிலச்சுவான்தார்களின் அரசுக்கும் எதிராக; நகரத்திலுள்ள பாட்டாளி மக்களோடு சேர்ந்து கொண்டு, முதலாளிகள் அனைவருக்கும், விவசாய நில உடமையாளர் அனைவருக்கும் எதிராக வர்க்க உணர்வு படைத்த கிராமப்புற பாட்டாளி மக்களின் கோஷம் இது தான். சிறு நில உடமையாளர்கள் இந்த கோஷத்தை உடனடியாக ஏற்றுக் கொள்ள வில்லையென்றால், அல்லது அதை முற்றிலும் ஏற்றுக் கொள்ள மறுத்தால், அப்படியிருந்தாலும் கூட அது தொழிலாளர்களின் கோஷமாக மாறும்; புரட்சியின் முழுவளர்ச்சிப் போக்காலும் தவிர்க்க முடியாத வகையில் அது வலியுறுத்தப்படும்: அது சிறு முதலாளித்துவ மாயமயக்கங்களை நம்மிடமிருந்து அகற்றிவிடும்; தெளிவாகவும், திட்டவட்டமாகவும் நமது சோஷலிஸ்டு இலக்கைச் சுட்டிக் காட்டும்.

''பிராலதேரி''; எண் 20.
1905-அக்டோபர் 10
நவம்பர் 27)

திரட்டப் பட்ட நூல்கள்
தொகுப்பு-9
பக்கம் 307-15

# குட்டி பூர்ஷ்வா சோஷலிஸமும், பாட்டாளி மக்களின் சோஷலிஸமும்

பல்வேறு வகைப்பட்ட சோஷலிஸ்டு சித்தாந்தங்களில் மார்க்ஸிஸம் மட்டுமே இப்பொழுது ஐரோப்பாவில் மேலாதிக்கம் செலுத்துகிறது; ஒரு சோஷலிஸ்டு சமுதாயத்தை அமைப்பதற்கான ஒரு போரட்டம் அநேகமாக, முழுமையாகவும் சமூக ஜன நாயகக் கட்சிகளின் வழிகாட்டலின் கீழும் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு போராட்டமாகவே நடத்தப்படுகிறது. மார்க்ஸிஸத்தின் போதனைகளில் ஆழமாக வேரூன்றியிருக்கும் பாட்டாளி மக்களின் சோஷலிஸத்தின் இந்தப் பூரண மேலாதிக்கத்தைத் திடீரென்று உடனே பெறவில்லை; அதற்கு மாறாக, செல்லரித்துப்போன சித்தாந்தங்கள் குட்டி பூர்ஷ்வா சோஷலிஸம், அராஜக வாதம் இன்னும் இது போன்ற சிந்தாந்தங்களை எதிர்த்து ஒரு நீண்ட காலப் போராட்டத்தை நடத்திய பிறகுதான் சாத்தியமாயிற்று, சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஜெர்மனியில் கூட மார்க்ஸிஸம் ஆதிக்கம் வகிக்கவில்லை; அங்கு அச்சமயத்தில் நிலவிய கருத்தானது. உண்மையில் குட்டி பூர்ஷ்வா சோஷலிஸத்திற்கும், பாட்டாளி மக்களின் சோஷலிஸத்திற்கும் இடையிலான மாறுதலை அடைந்து கொண்டிருக்கிற கலப்படமான, எல்லாக் கொள்கைகளையும் ஏற்றுக்கொள்கிற கருத்துக்களாக இருந்தது. லத்தீன் மொழி பேசும் நாடுகளிலும், பிரான்ஸ், ஸ்பெயின், பெல்ஜியம் ஆகிய நாடுகளிலும் உள்ள முன்னேற்றமடைந்த தொழிலாளர்களிடையே பெரும் அளவு பரவியிருந்த சித்தாந்தங்கள் பிரௌதானிஸம் [24] பிளாங்கூயிஸம் [25] அராஜகவாதம் ஆகியவைதான், இவை, பாட்டாளி மக்களின் கருத்தை வெளிப்படுத்தவில்லை; அதற்கு மாறாக குட்டி பூர்ஷ்வாக்களின் கருத்தையே வெளிப்படுத்தின என்பது தெளிவாகத் தெரிகிறது,

கடந்த பத்துக்கணக்கான ஆண்டு காலத்தில் வேகமாகவும் பூரணமாகவும் மார்க்ஸிஸம் இவ்வாறு வெற்றி பெற்றதற்குக் காரணம் என்ன? அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும், சம காலத்து சமூகங்களின் எல்லா வளர்ச்சியிலும், அடக்கி ஒடுக்கப்

பட்ட வர்க்கங்களின் புரட்சிகரமான இயக்கம், போராட்டம் ஆகியவற்றின் மொத்த அனுபவத்தாலும் மார்க்ஸியக் கருத்துக்கள் பிசகற்றவை என்பது மேன்மேலும் பெரும் அளவிற்கு ஊர்ஜிதம் செய்யப்பட்டது. குட்டி பூர்ஷ்வாக்களின் நலிவு கட்டாயம் எப்போதாவது ஒரு சமயத்தில் தவிர்க்க முடியாத வகையில் குட்டி பூர்ஷ்வாக்களின் பல்வேறு வகைப்பட்ட தப்பெண்ணங்கள் மறைந்து போவதை நோக்கி இழுத்துச் சென்றது. அதே சமயத்தில், முதலாளித்துவத்தின் வளர்ச்சியும், முதலாளித்துவ சமுதாயத்திற்குள்ளேயே வர்க்கப்போராட்டம் தீவிரமடைந்ததும் பாட்டாளி மக்களின் கருத்துக்களுக்கான கிளர்ச்சியின் சிறந்த அம்சங்களாக அமைந்தன.

நமது நாட்டில் பல்வேறு, வழக்கற்றுப் போன சோஷலிஸ்டு சித்தாந்தங்கள் ஆழமாக வேரூன்றுவதற்குக் காரணமாக இருந்தது' இயல்பாகவே ரஷ்யாவின் பின் தங்கிய நிலைதான், கடந்த கால் நூற்றுண்டு காலத்து ரஷ்ய புரட்சிகரமான சிந்தனையோட்டத்தின் முழுச்சரித்திரமும் குட்டி பூர்ஷ்வா நரோட்னிக் சோஷலி ஸத்தை எதிர்த்து மார்க்ஸிஸம் நடத்திய போராட்டத்தின் சரித்திரமாக இருக்கிறது. ரஷ்ய தொழிலாள வர்க்க இயக்கத்தின் வேகமான வளர்ச்சியும், குறிப்பிடத்தக்க வெற்றியும் ரஷ்யாவிலும் கூட ஏற்கெனவே மார்க்ஸிஸத்திற்கு வெற்றியைக் கொடுத்திருக் கிறது என்ருலும் கூட, மறுபுறத்தில் சந்தேகத்திற்கு இடமற்ற புரட்சிகரமான ஒரு விவசாயிகள் இயக்கத்தின் வளர்ச்சி குறிப்பாக, 1902-ல்[24] உக்ரேனில் நடந்த பிரபல விவசாயிகளின் புரட்சிக் கலகங்களுக்குப் பிறகு — முதுமையால் நலிவுற்ற நரோடிஸம் ஒரு குறிப்பிட்ட அளவு புத்துயிர் பெற்றதற்குக் காரணமாக இருக்கிறது. பழைய, நாகரிக ஐரோப்பிய சந்தர்ப்ப வாதத்தால் அலங்கரிக்கப்பட்ட (திருபுவாதம் பெர்ன்ஸ்டீனிஸம்,[25] மார்க்ஸை குறை கூறுவது) நரோட்னிக் சித்தாந்தங்கள் சோஷலிஸ்டு புரட்சிக் காரர்கள் என்று அழைக்கப்படுகிறவர்களின் அசல் சித்தாந்தச் சரக்குகளையெல்லாம் ஈடுசெய்கிறது. அதனல் தான், சுத்தமான நரோட்னிக்குகள், சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் ஆகியவர்க ளோடு மார்க்ஸிஸ்டுகளுக்கு இருக்கும் கருத்து மாறுபாட்டில் குவிமையமாக இருக்கிறது விவசாயிகளின் பிரச்சினை. நரோடிஸம் ஒரு குறிப்பிட்ட அளவு முழுமையான, முரணில்லாத ஒரு கோட் பாடாக இருக்கிறது. ரஷ்யாவில் முதலாளித்துவத்தின் ஆதிக் கத்தை அது மறுத்தது; பாட்டாளி மக்கள் அனைவரின் முன்னணி யில் நின்று போராடும் பாத்திரம் தொழிற்சாலைத் தொழிலாளர் களுக்கு இருப்பதை அது மறுத்தது; அரசியல் புரட்சி, முதலாளித் துவ அரசியல் சுதந்திரம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அது

மறுத்தது; அது உடனடியாக ஒரு சோஷலிஸ்டு புரட்சியைத் துவங்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்தது; சிறிய வடிவங்களில் விவசாயம் செய்யும் விவசாயிகளின் சமுதாயத்திலிருந்து இந்தக் கருத்து தோன்றுகிறது. இந்த முழுமையான சித்தாந்தத்தி லிருந்து இப்பொழுது மிச்சமாக இருப்பது வெறும் துண்டு துக்கா ணிகள் தான். ஆனால், புத்திசாலித்தனமாக இன்றைய கருத்து மாறுபாடுகளைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், இந்தக் கருத்து மாறுபாடுகள் வெறும் கூச்சலிடும் பூசலாக இழிவான நிலைக்கு மாறுவதிலிருந்து தடுக்க வேண்டுமானால், நமது சோஷலிஸ்டு புரசிக்காரர்களின் தவறுகள்தான் நரோட்னிக்குகளின் பொது வான அடிப்படையான வேர்கள் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நரோட்னிக்குகள் விவசாயியை ரஷ்யாவின் எதிர்கால மனிதன் என்று கருதினார்கள் முதலாளித்துவத்தின் எதிர்காலத்தில் நம்பிக்கையில்லாமையிலிருந்தும், விவசாயிகளின் சமுதாய அமைப்பில் சோஷலிஸ்டுத் தன்மை இருக்கிறது என்ற நம்பிக்கை யிலிருந்தும், இந்தக் கருத்து தோன்றுகிறது. மார்க்ஸிஸ்டுகள் தொழிலாளியை ரஷ்யாவின் எதிர்கால மனிதனாகக் கருதுகிறார்கள்; விவசாயத்துறையிலும், தொழில்துறையிலும் ரஷ்ய முதலாளித் துவத்தின் வளர்ச்சி இந்தக் கருத்தை மேன்மேலும் ஊர்ஜிதம் செய்துவருகிறது. ரஷ்யாவில் தொழிலாள வர்க்க இயக்கம் தன்னுடைய அங்கிகாரத்தை தானாகவே பெற்றிருக்கிறது; ஆனால், விவசாயிகள் இயக்கம் சம்பந்தப்பட்ட வரையிலும், நரோடிஸத் தையும், மார்க்ஸிஸத்தையும் தனியே பிரித்து வைத்திருக்கும் பிளவுக்குக் காரணம் என்ன என்பதை, அவர்களின் மாறுபட்ட வியாக்கியானங்களே வெளிப்படுத்துகின்றன. மார்க்ஸிஸம் தவறானது என்பதை நிரூபிப்பதற்கு விவசாயிகள் இயக்கம் ஆதாரமாக இருக்கிறது என்று நரோட்னிக்குகள் கருதுகிறார்கள் விவசாயிகள் இயக்கம் நேரடியாக சோஷலிஸ்டுப் புரட்சியை நாடிச் செல்கிறது; அது, முதலாளித்துவ அரசியல் சுதந்திரத்தை அங்கீகரிக்கவில்லை; அது விரிவான, அளவில் அல்ல, சிறிய அளவில் உற்பத்தி செய்வது என்பதிலிருந்து தோன்றுகிறது, ஒரே வார்த்தையில் கூறுவது என்றால், நரோட்னிக்குகளுக்கு விவசாயிகள் இயக்கம் தான் அப்பழுக்கற்ற, உண்மையான சோஷலிஸ்ட் இயக்கமாக உடனடி யான சோஷலிஸ்டு இயககமாக இருக்கிறது. விவசாய சமுதாய அமைப்பில் நரோட்னிககுகள் நம்பிககை வைத்திருப்பதும், நரோட் னிகின் அராஜகமும் இத்தகைய முடிவுகள் ஏன் தவிர்க்க முடியாதவைகளாக இருககின்றன என்பதை விளக்கிக் கூறுகின்றன.

மார்க்ஸிஸ்டுகளுக்கோ, விவசாயிகள் இயக்கமானது ஒரு ஜனநாயக இயக்கமே தவிர, ஒரு சோஷலிஸ்டு இயக்கமே அல்ல, மற்ற நாடுகளில் இருந்தது போல், ரஷ்யாவில் ஜனநாயகப்புரட்சியின் கூடவே அவசியம் தொடர்ந்து வர வேண்டியதாகும்; சமூக, பொருளாதார உள் அடக்கத்தில் அது முதலாளித்துவமாக இருக்கிறது. முதலாளித்துவ சமூக அமைப்பின் அஸ்திவாரங்களுக்கு எதிராகவோ பண்ட உற்பத்தி முறைக்கு எதிராகவோ, அல்லது மூலதனத்திற்கு எதிராகவோ அது கொஞ்சம்கூட திருப்பி விடப்படவில்லை. அதற்குநேர்மாறாக, கிராமப்புறங்களில் உள்ள முதலாளித்துவத்திற்கு முந்திய பழைய, நிலப்பிரபுத்துவ உறவுகளுக்கு எதிராக, பண்ணை அடிமை உடமையின் மீதமிச்சங்களின் முக்கியமான ஆதாரமாக இருக்கும் நிலச்சுவான்தாரி முறைக்கு எதிராகவும் அது திருப்பிவிடப்படுகிறது. இதன் விளைவாக, இந்த விவசாயிகளின் இயக்கத்தின் முழு வெற்றியானது முதலாளித்துவத்தை ஒழிக்காது; அதற்கு நேர்மாறாக, அதன் வளர்ச்சிக்கு விரிவான அஸ்திவாரத்தை அது சிருஷ்டிக்கும்; முற்றிலும் முதலாளித்துவ வளர்ச்சியை அது துரிதப்படுத்தி தீவிரப்படுத்தும். விவசாயிகள் பேரெழுச்சியின் முழு வெற்றியானது, ஒரு ஜனநாயக முதலாளித்துவ குடியரசுக்கான ஒரு கோட்டையை மாத்திரமே சிருஷ்டிக்க முடியும்; அதற்குள்ளேயே முதலாளித்துவத்தை எதிர்த்து பாட்டாளி மக்களின் போராட்டம் முதல் தடவையாக அதன் அதி பரிசுத்தமான வடிவத்தில் வளர்ச்சியடையும்.

ஆகவே, சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களுக்கும், சமூக ஜனநாயகவாதிகளுக்கும் இடையே கோட்பாடுகள் அடிப்படையில் இருக்கும் பிளவைப் பரிசீலனை செய்ய விரும்புகிறவர்கள் இந்த மாறுபட்ட இரண்டு கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு கருத்துப்படி, விவசாயிகளின் இயக்கமானது சோஷலிஸ்டாக இருக்கிறது: அதே சமயத்தில், மற்ற கருத்துப்படி அது ஒரு ஜனநாயக முதலாளித்துவ இயக்கமாக இருக்கிறது. ஆகவே, மாறுமலே இருக்கும் மூல மார்க்ஸிஸ்டுகள் விவசாயிகளின் பிரச்சினையை உதாசீனம் செய்து விட்டார்கள் என்று நூறுவது தடவையாகத் திருப்பித் திருப்பிச் சொல்லும் போது (உதாரணமாக "ரெவலூஷன்யா ருஷியா"வில், எண் 75-ல் பார்க்கவும்) நமது சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் எத்தகைய அறியாமையை வெளிப்படுத்துகிறார்கள் என்பதைப் பார்க்க முடியும். இத்தகைய மிதமிஞ்சிய அறியாமையை எதிர்த்துப் போராடுவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது; அதாவது, அ. ஆ. வைத் திருப்பச் சொல்வதன் மூலமாகவும், பழைய முரண்பாடற்ற நரோட்னிக் கருத்துக்களை விளக்கிக் கூறுவதன் மூலமாகவும், விவசாயப் பிரச்சி

னைக்குத் தீர்வு காண்பதை விரும்புகிறோமா, அல்லது விரும்ப வில்லையா என்பதிலோ, அல்லது அதை ஏற்றுக் கொள்கிறோமா, அல்லது ஏற்றுக் கொள்ளவில்லையா என்பதிலோ நம்மிடையே உள்ள வேறுபாடுகளைப் பார்க்கக்கூடாது என்பதையும், அதற்கு மாறாக ரஷ்யாவில் இன்றைய விவசாய இயக்கத்தைப் பற்றியும், இன்றைய விவசாயப் பிரச்சினைப் பற்றியும் மாறுபட்ட மதிப்பீடு செய்வதில் தான் நம்மிடையே மாறுபாடுகள் இருக்கின்றன என்பதையும் நூறு தடவை, அல்லது ஆயிரம் தடவை சுட்டிக் காட்டுவதன் மூலமாகவும் அவர்கள் அறியாமையை எதிர்த்துப் போராட வேண்டும். மார்க்ஸிஸ்டுகள் விவசாயப் பிரச்சினையை ரஷ்யாவில் "உதாசீனம்" செய்கிறார்கள் என்று எவன் சொல் கிறானோ, அவன் முதலாவதாக ஒரு முழு அறிவிலிதான்; காரணம், பிளாக்கானோவின் "நமது வேறுபாடுகள்" என்ற புத்தகத்திலி ருந்து தொடங்கி (இது இருபது ஆண்டுகளுக்கு முன்பு பிரசுரிக்கப் பட்டது) இன்று வரை ரஷ்ய மார்க்ஸிஸ்டுகள் எழுதிய முக்கிய மான நூல்கள் முழுவதும், ரஷ்ய விவசாயப் பிரச்சினையில் நரோட்னிக்குகளின் தவறான கருத்துக்களை விளக்கிக் கூறுவதில், முக்கியமாக ஈடுபட்டிருந்தன. இரண்டாவதாக, மார்க்ஸிஸ்டுகள் விவசாயப் பிரச்சினையை "உதாசீனம்" செய்கிறார்கள் என்று எவன் சொல்கிறானோ, அதன் இதன் மூலமாக கோட்பாடுகளில் உண்மை யாகவே நிலவும் மாறுபாடுகளைப் பற்றிய முழுமையான மதிப்பீடுக் கொடுப்பதையும், இன்றைய விவசாயிகளின் இயக்கம் முதலாளித் துவ ஜனநாயகத்தன்மை வாய்ந்தா, இல்லையா என்ற கேள்விக்கு பதில் கொடுப்பதையும், பண்ணை அடிமை முறையின் மீதமிச்சங் களுக்கு எதிராக அது எதார்த்தத்தில் திருப்பப்பட்டிருக்கிறதா, இல்லையா என்ற கேள்விக்குப் பதில் கொடுப்பதையும் தவிர்க்க விரும்புகிறான் என்பதையே நிருபிக்கிறான்.

இந்தக் கேள்விக்கு சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் தெளிவான, திட்டவட்டமான ஒரு பதிலைக் கொடுத்ததே கிடையாது, பதில் கொடுப்பதற்கு அவர்களுக்கு எப்பொழுதும் சக்தியும் கிடையாது; ஏனெனில், ரஷ்யாவில் விவசாயப் பிரச்சினை சம்பந்தமாக அவர்கள் பழைய நரோட்னிக் கருத்துக்களுக்கும் இன்றைய மார்க்ஸிஸ்டு கருத்துகளுக்கும் இடையே படுமோசமாகச் சிந்தனையில் தட்டுத்தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். சோஷ லிஸ்டுப் புரட்சிக்காரர்கள் குட்டி பூர்ஷ்வாக்களின் கருத்தை பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள். என்று குட்டி பூர்ஷ்வாக்களின் சித்தாந்தவாதிகளாக இருக்கிறார்கள் என்று) மார்க்ஸிஸ்டுகள் கூறுகிறார்கள்: விவசாயப் பிரச்சினையை மதிப்பீடு செய்வதில் குட்டி பூர்ஷ்வா மாயமயக்கங்களையும், நரோட்னிக்குகளின் கற்பனைகளை

யும், அவர்கள் தங்களை விட்டு வெளியே அகற்ற முடியாது என்ற ஒரே ஒரு காரணத்தால் அவ்வாறு கூறுகிறார்கள்.

அதனால் தான் நாம் மீண்டும் ஒரு முறை அ. ஆ. வுக்குப் போகவேண்டியிருக்கிறது. ரஷ்யாவில் இன்றைய விவசாயிகள் இயக்கம் எதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. நிலத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும், இந்த இயக்கத்தின் பூரண வெற்றியின் முக்கியத்துவம் என்ன? சுதந்திரத்தை வென்ற பிறகு, அரசை நிர்வாகம் செய்வதில் நிலச்சுவான்தார்கள், அதிகாரவர்க்கத்தினர் ஆகியவர்களின் ஆட்சியை அது ஒழித்து விடும். நிலத்தைக்கைப் பற்றிய பிறகு, நிலச்சுவான்தார்களின் நிலங்களை அது விவசாயி களுக்குக் கொடுக்கும். பூரண சுதந்திரமும், நிலச்சுவான்தார் களின் நிலத்தைப் பறிமுதல் செய்ததும் பண்ட உற்பத்தியை ஒழித்து விடுமா? இல்லை, அது ஒழித்து விடாது. முழுச்சுதந் திரமும், நிலச்சுவான்தார்களின் நிலத்தைப் பறிமுதல் செய்ததும் சமுதாய நிலத்திலும், அல்லது "பொதுவுடமையாக்கப் பட்ட" நிலத்திலும் விவசாயிகளின் குடும்பங்கள் தனிப்பட்ட முறையில் விவசாயம் செய்வதை ஒழித்து விடுமா? இல்லை, அது செய்யாது. முழுச்சுதந்திரமும், நிலச்சுவான்தார்களின் நிலத்தைப் பறிமுதல் செய்ததும் ஏராளமாகக் குதிரைகளையும், பசுமாடுகளையும் வைத் திருக்கும், பணக்கார விவசாயிகளை பண்ணை ஆட்களிலிருந்து— தினசரி கூலிக்கு உழைப்பவர்களிலிருந்து— தனியே பிரிக்கிற ஆழமான பிளவை, அதாவது விவசாய முதலாளிகளை, கிராமப்புற பாட்டாளி மக்களிலிருந்து தனியே பிரிக்கிற பிளவை மூடிவிட முடியுமா? இல்லை, அது செய்யாது. அதற்கு மாறாக, எந்த அள வுக்கு அதிக முழுமையாக மிகப்பெரிய சமூக எஸ்டேட்டுகள் (நிலச்சு வான்தார்கள்) துரத்தப்படுகிறார்களோ, துடைத்தெறியப்படுகிறார் களோ, அந்த அளவுக்கு அதிக ஆழமாக முதலாளிகளுக்கும், பாட்டாளி மக்களுக்கும் இடையே வர்க்க வித்தியாசம் இருக்கும், விவசாயிகள் பேரெழுச்சியின் பூரண வெற்றியின் எதார்த்த முக்கியத்துவம் எவ்வாறு இருக்கும்? இந்த வெற்றியானது, பண்ணை அடிமை முறையின் எல்லாவிதமான மீத மிச்சங்களையும் ஒழித்து விடும்; ஆனால், அது எந்த வகையிலும் முதலாளித்துவ பொருளா தார அமைப்பு முறையை அழித்து விடாது; அது முதலாளித் துவத்தை அகற்றிவிடாது,— அல்லது, சமுதாயத்தை வர்க்கங் களாக— பணக்காரன், ஏழை என்ற முதலாளி பாட்டாளி என்ற— பிரிவினை செய்வதையும் அகற்றிவிடாது. இன்றைய விவசாயிகளின் இயக்கம் ஒரு ஜனநாயக முதலாளித்துவ இயக்க மாக ஏன் இருக்கிறது? ஏனென்றால், நிலச்சுவான்தார்கள், அதிகார வர்க்கத்தினர், ஆகியவர்களின் ஆட்சியை அழித்த பிறகு, ஒரு

ஜனநாயக அமைப்பு சமுதாயத்தை அது உருவாக்கும்; ஆயினும், அந்த ஜனநாயக சமுதாயத்தின் முதலாளித்துவ அஸ்திவாரத்தை மாற்றிவிடாது; மூலதனத்தின் ஆட்சியையும் அழித்து விடாது. இன்றைய விவசாயிகளின் இயக்கத்தை, வர்க்க உணர்வு படைத்த தொழிலாளி — சோஷலிஸ்டு— எவ்வாறு கருத வேண்டும்? அவன் இந்த இயக்கத்தை ஆதரிக்க வேண்டும்; மிகுந்த அளவு வலிமையோடு விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும்; நிலச்சுவான்தார்கள், அதிகார வர்க்கத்தினர் ஆகியவர்களின் ஆட்சியை அறவே ஒழிப்பதற்கு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அதே சமயத்தில், எப்படியிருந்தாலும் நிலச்சுவான்தார்கள், அதிகார வர்கத்தினர் ஆகியவர்களின் ஆட்சியை ஒழிப்பதோடு நின்றுவிடக்கூடாது என்பதை அவன் விவசாயிகளுக்கு விளக்கிக்கூற வேண்டும் * அந்த ஆட்சியை வீழ்த்திய பிறகு, அதே சமயத்தில் மூலதனத்தின் ஆட்சியை, முதலாளித்துவத்தின் ஆட்சியை ஒழிப்பதற்காக அவர்கள் தயாரிப்புக்களைச் செய்ய வேண்டும்; அந்த நோக்கத்திற்காக முழுமையான சோஷலிஸ்டு— அதாவது மார்க்ஸிஸ்டு — சிந்தாந்தத்தை உடனே பரப்பவேண்டும்; விவசாய முதலாளிகளுக்கு எதிரான, ரஷ்ய முதலாளிகள் அனைவருக்கும் எதிரான போராட்டத்திற்காக கிராமப்புற பாட்டாளி மக்களை ஒன்றுக இணைக்க வேண்டும். ஒன்றுகத் திரட்ட வேண்டும், ஸ்தாபன ரீதியாக அமைக்க வேண்டும். வர்க்க உணர்வுபடைத்த ஒரு தொழிலாளி சோஷலிஸ்டு போராட்டத்திற்காக ஜனநாயகப் போராட்டத்தை மறக்க முடியுமா? அல்லது, பின்னுல் கூறப்பட்டதற்காக, முன்னுல் கூறப்பட்டதை மறக்க முடியுமா? முடியாது, இரண்டு போராட்டங்களுக்கும் இடையே உள்ள உறவை அவன் புரிந்து கொண்டிருக்கிற காரணத்தால், ஒரு வர்க்க உணர்வு படைத்த தொழிலாளி தன்னை ஒரு சமூக ஜனநாயகவாதி என்று அழைத்துக் கொள்கிருன். ஜனநாயகத்தின் மூலமாக அல்லாமல், அரசியல் சுதந்திரத்தின் மூலமாக அல்லாமல் சோஷலிஸத்திற்கு வேறுபாதை எதுவும் கிடையாது என்பது அவனுக்குத் தெரியும். ஆகவே, அவன் இறுதி இலக்கை — சோஷலிஸத்தை —அடைவதற்காக, பூரணமாகவும் நிரந்தரமாகவும் ஜனநாயகத்தைப் பெறமுயல்கிருன். ஜனநாயகப் போராட்டத்திற்கான நிலைமைகள், சோஷலிஸ்டு போராட்டத்திற்கான நிலைமைகளுக்குச் சமமாக ஏன் இல்லை?" ஏனென்ருல், இந்த இரண்டு போராட்டங்களின் ஒவ்வொன்றிலும் தொழிலாளர்களுக்கு நிச்சயமாக வெவ்வேறு நேசசக்திகள் இருப்பார்கள். தொழிலாளர்கள் ஜனநாயகப்

---

* கையெழுத்துப் பிரதியில் "வேண்டும்" என்ற வார்த்தையைத் தொடர்ந்து "தளரா முயற்சியுடன்," என்ற வார்த்தை இருக்கிறது (ஆர்)

போராட்டத்தை முதலாளித்துவத்தில் ஒரு பகுதியோடு சேர்ந்து கொண்டு குறிப்பாக குட்டி பூர்ஷ்வாக்களோடு சேர்ந்து கொண்டு நடத்துவார்கள். மறுபுறத்தில், தொழிலாளர்கள் சோஷலிஸ்டு போராட்டத்தை முதலாளிகள் அனைவரையும் எதிர்த்து நடத்து வார்கள். அதிகார வர்க்கத்தினருக்கும், நிலச்சுவான்தார்களுக்கும் எதிரான போராட்டத்தை எல்லா விவசாயிகளோடும். பணக்கார விவசாயிகளோடும், மத்தியதர விவசாயிகளோடும் கூட சேர்ந்து கொண்டு நடத்த வேண்டும். மறுபுறத்தில், முதலாளித்துவத் திற்கு எதிரான போராட்டத்தை கிராமப்புற பாட்டாளி மக்க ளோடு மாத்திரம் சேர்ந்து கொண்டு நடத்த வேண்டும்; இதனால், பணக்கார விவசாயிகளையும் கூட எதிர்த்து முறையாகப் போராட முடியும்.

சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் அலசி ஆராய்வதை எப்பொழு தும் தவிர்ப்பதையே விரும்புகிற இந்த மூல தத்துவமான மார்க் ஸிஸ்டு உண்மைகள் அனைத்தையும் நாம் மனதில் வைத்துக் கொண்டால், பின்னால், கூறப்பட்டவர்கள் கீழ்க்கண்ட விஷயங் களைப்பற்றி மார்க்ஸிஸத்தை ஏன் "அண்மையில்" எதிர்க்கத் துவங்கியிருப்பதை மதிப்பீடு செய்வதில் கஷ்டமே இருக்காது;

"நிலச்சுவான்தாருக்கு எதிராக விவசாயிகளைப் பொதுவாக முதலில் ஆதரிக்கும் அவசியம் என்ன இருக்கிறது? அதற்குப் பிறகு (அதாவது அதே சமயத்தில்) நிலச்சுவான்தாருக்கு எதிராக பாட்டாளி மக்களை உடனே ஆதரிப்பதற்குப் பதிலாக பொதுவாக, விவசாயிகளுக்கு எதிராக பாட்டாளி மக்களை ஆதரிக்கும் அவசியம் என்ன இருக்கிறது? இது சம்பந்தமாக மார்க்ஸிஸம் என்ன சொல் கிறது? கடவுளுக்குத்தான் தெரியும்" என்று "ரெவலுஷனயா ருஷிய" (எண்- 75) ஆச்சரியத்தோடு கேட்கிறது.

அராஜக வாதத்தின் மிகுந்த அளவு நாகரிக முதிர்ச்சியற்ற காலத்திற்குரிய, பச்சைக் குழந்தையைப் போல் சூதுவாதற்ற வகையில் உள்ள நிலைபாடு இதுதான். ஒவ்வொரு விதமான எல்லாவகைச் சுரண்டலையும் "உடனே" துடைத்தெறிய வேண்டும் என்று மனித இனம் பல நூற்றுண்டுகளாக, ஏன் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக, கனவுகண்டு கொண்டிருந்தது. இயற்கை யாகவே படிப்படியாக வளர்ச்சியடைந்து கொண்டு போய்க் கொண்டிருக்கும் திசையில், முதலாளித்துவ சமுதாயத்தை மாற்று வதற்காக, உலகம் முழுவதிலும் உள்ள கோடானுகோடி சுரண்டப் பட்ட மக்கள் ஒரு முரணில்லாத, நம்பிக்கை உறுதியோடு அனைத்

தையும் உட்கொண்ட ஒரு விரிவான பாராட்டத்தை நடத்தும் பொருட்டு, ஒன்றுபடத் துவங்கியதற்கு முன்னால், இந்தக் கனவுகள் வெறும் கனவுகளாகவே இருந்தன. மாறுதல் வேண்டும் என்ற விருப்பார்வத்தை ஒரு திட்ட வட்டமான வர்க்கத்தின் போராட்டத்தோடு மார்க்ஸின் விஞ்ஞான ரீதியான சோஷலிஸத்தால் இணைக்கப்பட்டபோது மாத்திரமே, சோஷலிஸ்டு கனவுகள், கோடானு கோடி மக்களின் சோஷலிஸ்டு போராட்டமாக மாறின. வர்க்கப் போராட்டத்திற்கு வெளியே இருக்கும் சோஷலிஸம் அர்த்தமற்ற வெறும் சொற்றொடராகவோ அல்லது சூதுவாதற்ற கனவாகவோ இருக்கும். ஆயினும், ரஷ்யாவில், நமது கண்களுக்கு முன்னாலேயே இரண்டு வெவ்வேறு விதமான சமூக சக்திகளின், இரண்டு வெவ்வேறு விதமான போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. எங்கெல்லாம் உற்பத்தியில் முதலாளித்துவ உறவுகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் பாட்டாளி மக்கள் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள் (அவை நிலவிக் கொண்டிருக்கின்றன); விவசாயிகளின் சமுதாய அமைப்பிலும்கூட, அதாவது சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களின் நிலைபாட்டிலிருந்து நூறு சதவிகிதம் "பொதுவுடைமையாக்கப்பட்ட நிலத்திலும் கூட அது இருக்கிறது என்பதை சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் தெரிந்து கொள்ளட்டும்). சிறு நிலச்சுவான்தார்களின், குட்டி பூர்ஷ்வாக்களின் ஒரு வகையைச் சேர்ந்தவர்கள் என்ற நிலையில், விவசாயிகள் பண்ணை அடிமை முறையின் மீதமிச்சங்களை எதிர்த்து, அதிகார வர்க்கத்தினரையும், நிலச்சுவான்தார்களையும் எதிர்த்து போராடி வருகிறார்கள். அரசியல் பொருளாதாரத்தைப் பற்றி கொஞ்சம்கூடத் தெரியாதவர்களும், உலகம் முழுவதும் நடைபெறும் புரட்சிகளின் சரித்திரத்தைப் பற்றி கொஞ்சம்கூடத் தெரியாதவர்களும் மாத்திரம் தான் இவை இரண்டும் வித்தியாசப் படுத்திக் காட்டுகிற வெவ்வேறு விதமான சமூகப்போர்கள் என்பதைப் பார்க்கத் தவற முடியும், "உடனடியாக"ச்செய்து முடிக்க வேண்டும் என்று கோருவதன் மூலமாக, இந்தப்போர்களின் மாறுபட்ட தன்மைகளைப் பார்க்க மறுத்து, கண்களை மூடிக்கொள்வதானது, எதார்த்தத்தைப் பற்றி எவ்விதமான மதிப்பீடும் செய்ய மறுத்து தன் தலையை தனது சிறகடிக்கும் கீழ் வைத்துக் கொள்வது போலாகும்.

பழைய நரோட்னிக் கருத்துக்களின் முழுமையான நேர்மை நிலையை இழந்திருக்கும் சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள், நரோட்னிக்குகளே கூறிய போதனைகளில் பலவற்றையும் மறந்து விட்டார்கள். அதே "ரெவலூஷனயா ருஷியா" அதே கட்டுரையில் பின் வருமாறு எழுதுகிறது: "நிலச்சுவான்தார்

களின் நிலத்தைப் பறிமுதல் செய்ய விவசாயிகளுக்கு உதவி செய்வதன் மூலமாக, திரு. லெனின், முதலாளித்துவ விவசாய முறையின் ஏறக்குறைய வளர்ச்சியடைந்த வடிவங்கள் வீழ்ச்சி யடைந்திருப்பதால், அவைகளின் மீது ஒரு குட்டி பூர்ஷ்வா பொருளாதார அமைப்பை உருவாக்க தன்னுணர்வின்றி உதவி செய்கிறுர். மூலத்திலிருந்து மாருமல் அப்படியே இருக்கும் மார்க்ஸிஸத்தின் நிலை பாட்டிலிருந்து இது ஒருபடி பின்னோக்கிச் செல்வதல்லவா?''

வெட்கம், கனவான்களே! உங்களுடைய சொந்த வி. வி. யை நீங்கள் ஏன் மறந்து விட்டீர்கள்? வி. வி. எழுதிய "முதலாளித் துவத்தின் தலைவிதி'' என்ற புத்தகத்தையும், திரு. நிக்கோலாய் எழுதிய ''அவசரக் குறிப்புகள்'' என்ற புத்தகத்தையும், இன்னும் இது போன்ற உங்களுடைய மதி நுட்பத்தின் மூல ஊற்றுக்களைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு பாருங்கள். அப்பொழுது ரஷ்யாவில் நிலச்சுவான்தாரி முறையில் விவசாயம் செய்வதானது அதற்குள்ளேயே முதலாளித்துவத்தின் அம்சங்களையும், பண்ணை அடிமை முறையின் அம்சங்களையும் இணைத்திருக்கிறது என்பதை நீங்கள் மீண்டும் நினைவிற்குக் கொண்டு வருவீர்கள். அப்பொழுது, உழைப்பின் மூலமாக சேவை செய்வதை [26] அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அமைப்பு இருப்பதை— இலவசமாக ஊழியம் செய்யும் [27] முறையிலிருந்து தோன்றிய இந்த முறையை நீங்கள் பார்க்க முடியும். மேலும், மார்க்ஸின் மூலதனத்தின் மூன்ருவது தொகுப்பு போன்ற மூலத்திலிருந்து மாருத ஒரு மார்க்ஸீய நூலை நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டால், குட்டி பூர்ஷ்வா விவசாய முறையின் [28] மூலமாக அல்லாமல் இலவச ஊழிய முறையானது முதலாளித்துவ விவசாய முறையாக எங்கும் வளர்ச்சியடைய வில்லை என்பதையும், எங்குமே வளர்ச்சி யடைய முடியாது என்பதையும் பார்க்க முடியும். மார்க்ஸி ஸத்தை உடைத்தெறியும் முயற்சியில், நீங்கள் மிகமிகப் பண்டைக் காலத்து முறைகளையும், மிகமிக நீண்ட காலத்திற்கு முன்பே அம்பலப் படுத்தப்பட்ட முறைகளையும் கடைப்பிடிக்கிறீர்கள், இலவச ஊழிய முறையை அடிப்படையாக கொண்ட பெரிய அளவில் விவசாயம் செய்யும் முறையிலிருந்து நேரடியாகவும் அடுத்தபடியாகவும் பெரிய அளவில் விவசாயம் செய்யும் முதலா ளித்துவ முறை தோன்றுகிறது என்ற விசித்திரமான, மிகுந்த அளவு எளிமையாக்கப்பட்ட கருத்து மார்க்ஸிஸத்திற்கு உரியது என்று கூறுகிறீர்கள். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பண்ணை களைக் காட்டிலும், நிலச்சுவான்தார்கள் உற்பத்தி செய்யும் பண்ணை களில் விளைச்சல் அதிகமாக இருப்பதால், நிலச்சுவான்தார்களின்

நிலத்தைப் பறிமுதல் செய்வதானது, பின்னோக்கி ஒருபடி செல்லும் நடவடிக்கையாகும் என்று நீங்கள் வாதாடுகிறீர்கள். இந்த வாதம் நான்காம் படிவ மாணவனுக்குத்தான் தகுதியானது. கனவான்களே, இதைச் சற்று கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள்: பண்ணை அடிமை முறை ஒழிக்கப் பட்டபோது, அதிக விளைச்சலைக் கொடுத்த நிலச்சுவான்தார்களின் நிலத்திலிருந்து, குறைவாக விளைச்சலைக் கொடுக்கும் விவசாயிகளின் நிலத்தைப் பிரித்தது; "ஒருபடி பின்னோக்கிச் செல்லும்" நடவடிக்கை அல்லவா?

ரஷ்யாவில் உள்ள இன்றைய நிலச்சுவான்தாரி முறை பொருளாதார அமைப்பு முதலாளித்துவம் பண்ணை அடிமை முறை ஆகியவற்றின் இரண்டு அம்சங்களையும் இணைத்து வைத்திருக்கிறது. எதார்த்தத்தில், இன்று நிலச்சுவான்தார்களை எதிர்த்து விவசாயிகள் நடத்தும் போராட்டம்,பண்ணை அடிமை முறையின் மீத மிச்சங்களை எதிர்த்து நடத்தும் ஒரு போராட்டமாகும். ஆயினும், எல்லா தனிப்பட்ட நிகழ்ச்சிகளையும் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு விவரிப்பதற்கும் ஒவ்வொரு தனிப்பட்ட நிகழ்ச்சியையும் சீர்தூக்கிப் பார்ப்பதற்கும் முயற்சி செய்து, பண்ணை அடிமை முறை எங்கு முடிவு பெறுகிறது, சுத்தமான முதலாளித்துவ முறை எங்கு துவங்குகிறது என்பதை ஒரு மருந்து வியாபாரி தராசில் நிறுத்து, துல்லியமாக எடை கண்டு பிடிப்பதுபோல் ஆராய்ச்சி செய்து முடிவு கூறுவது, ஒருவன் தனது சொந்த கல்விச் செருக்கை மார்க்ஸிஸத்தின் மீது புகுத்துவதாகும். ஒரு பெட்டிக் கடையிலிருந்துவாங்கிய ஒரு பொருளின் விலையில், எந்தப் பகுதி உழைப்பின் மதிப்பைப் பிரதிபலிக்கிறது, எந்தப் பகுதி மோசடியைப் பிரதிபலிக்கிறது என்பதை நாம் கணக்குப் போட்டுக் கூறமுடியாது. அப்படியானால், அதன் அர்த்தம், கனவான்களே உழைப்பின் மதிப்பு சம்பந்தப்பட்ட சித்தாந்தத்தை நாம் நிராகரிக்க வேண்டும் என்பதா?

இன்றைய காலத்து நிலச்சுவான்தாரி பொருளாதார அமைப்பானது, முதலாளித்துவம், பண்ணை அடிமை முறை ஆகிய இரண்டின் அம்சங்களையும் இணைத்து வைத்திருக்கிறது. ஆனால், இதிலிருந்து, ஒவ்வொரு குறிப்பிட்ட நிகழ்ச்சியிலும், ஒவ்வொரு நுணுக்கமான அம்சத்தையும் நிறுத்துப் பார்த்து ஒவ்வொன்றாக எண்ணிப்பார்த்து ஏதாவது ஒரு சமூக ரகத்தில் பொருத்தி அடுக்க வேண்டியது நமது கடமையாகும், என்ற முடிவுக்கு கல்விச் செருக்குடையவர்கள்தான் வருவார்கள். ஆகவே, உடோபியர்கள் தான், இரண்டு வெவ்வேறு விதமான சமூகப் போர்களுக்கு இடையே வித்தியாசத்தைப் பிரித்துக் காட்ட வேண்டிய "அவசியம் கிடையாது" என்ற முடிவுக்குவர முடியும். இதிலிருந்து தோன்றும் உண்மையான ஒரே ஒரு முடிவு என்ன வென்றால்

நம்முடைய கொள்கைத் திட்டம், செயல் தந்திரம் ஆகிய இரண்டிலும் முதலாளித்துவத்திற்கு எதிரான முற்றிலும் பாட்டாளி மக்களின் போராட்டத்தை, பண்ணை அடிமை முறைக்கு எதிரான பொதுவான ஜனநாயக (மேலும் பொதுவான விவசாயிகளின்) போராட்டத்தோடு இணைக்க வேண்டும் என்பதாகும்.

இன்றைய காலத்து நிலச்சுவான்தாரி அரை நிலப்பிரபுத்துவ பொருளாதார அமைப்பில் முதலாளித்துவ அம்சம் எந்த அளவுக்கு அதிகமாக குறிப்பிடத்தக்க முறையில் இருக்கிறதோ அந்த அளவு அதிக அவசரமாக கிராமப்புற பாட்டாளி மக்களைத் தனியாக ஸ்தாபன ரீதியாக அமைப்பதில் நாம் ஈடுபட வேண்டும்; ஏனெனில் நிலத்தைப் பறிமுதல் செய்யும் நிகழ்ச்சி எப்பொழுது நடைபெற்றாலும், சுத்தமாகவே முதலாளித்துவ முரண்பாடுகள், அல்லது சுத்தமாகவே பாட்டாளி மக்களின் முரண்பாடுகள் தாமாகவே விரைவில் வலியுறுத்திக் கூறுவதற்கு இது உதவி செய்யும். நிலச்சுவான்தாரி முறை பொருளாதார அமைப்பில், முதலாளித்துவ அம்சங்கள் எந்த அளவுக்கு அதிகமாக குறிப்பிடத்தக்க வகையில் இருக்கிறதோ, அந்த அளவுக்கு விரைவாக ஜனநாயக ரீதியில் நிலத்தைப் பறிமுதல் செய்வதானது சோஷலிஸத்திற்கான உண்மையான போராட்டத்திற்கு ஒரு தூண்டும் திறனைக் கொடுக்கும்; இதன் விளைவாக, "பொது உடமையாக்குதல்" என்ற கோஷத்தை உபயோகிப்பதன் மூலமாக ஜனநாயகப் புரட்சியின் குறிக்கோளைத் தவறுனதாகச் செய்வது மேலும் அபாயகரமாக இருக்கும். நிலச்சுவான்தாரி முறை பொருளாதார அமைப்பானது முதலாளித்துவம், பண்ணை அடிமை முறை ஆகிய உறவுகளைக் கொண்டது என்ற உண்மையிலிருந்து இத்தகைய முடிவுக்குத் தான் வரவேண்டும்.

இவ்வாறு சுத்தமான பாட்டாளி மக்களின் போராட்டத்தை, பொதுவான விவசாயிகளின் போராட்டத்தோடு நாம் இணைக்க வேண்டும்; ஆனல், இரண்டையும் போட்டுக் குழப்பக்கூடாது. பொதுவான ஜனநாயகப் போராட்டத்தை, பொதுவான விவசாயிகள் போராட்டத்தை நாம் ஆதரிக்க வேண்டும்; ஆனல், இந்த வர்க்கப்போராட்டமல்லாத போராட்டத்தில் நாம் மூழ்கிப்போய் விடக்கூடாது; "பொது உடமையாக்குதல்"; போன்ற கோஷங்களை உபயோகித்து, அது தான் குறிக்கோள் என்று பொய்யாக ஒருக்காலும் கூறக்கூடாது; அல்லது, நகர பாட்டாளி மக்களையும், அத்துடன் கிராமப்புற பாட்டாளி மக்களையும் சமூக ஜனநாயகத்தின் முற்றிலும் சுயேச்சையான ஒரு வர்க்கக் கட்சியில் ஸ்தாபன ரீதியாக அமைக்க வேண்டிய அவசியத்தை

ஒரு கணம்கூட மறக்கவே கூடாது. மிகவும் உறுதியான ஜன நாயகத்திற்கு, அதிகப்பட்சம் உதவி அளிக்கும்போதே, பண்ட உற்பத்தி முறையின் கீழ் " சரிசம நிலையாக்குதல்" என்ற பிற்போக்குத் தனமான கனவுகளுக்கும், சோதனைகளுக்கும் இடமளித்து, புரட்சிகரமான பாதையிலிருந்து திசை திருப்பிச் செல்வதை கட்சி அனுமதிக்காது, நிலச்சுவான்தார்களை எதிர்த்து விவசாயிகள் போராடுவது, இப்பொழுது ஒரு புரட்சிகரமான போராட்டமாகும்; பொருளாதார, அரசியல் பரிணாம வளர்ச்சியின் இன்றைய கட்டத்தில், நிலச்சுவான்தார்களின் நிலத்தைப் பறிமுதல் செய்வது, ஒவ்வொரு அம்சத்திலும் புரட்சிகரமானதாகும்; ஆகவே, நாம் இந்தப் புரட்சிகரமான ஜனநாயக நடவடிக்கையை ஆதரிக்கிறோம். ஆயினும், இந்த நடவடிக்கையை "பொது உடமையாக்குதல்" என்று அழைப்பதும், பண்ட உற்பத்தி முறையின் கீழ் நிலத்தைச் "சரிசமமாக" பங்கிட்டுக் கொடுக்கும் சாத்தியமதை இருக்கிறது என்று தன்னையும், பொது மக்களையும் ஏமாற்றுவதும், ஒரு பிற்போக்கு குட்டி பூர்ஷ்வா உடோபியாவாகும்; இதை சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களுக்கே நாம் விட்டு விடுவோம்.

"பிராவதேரி"
எண் - 24
நவம்பர் 7 (அக்டோபர் 25) 1905

திரட்டப்பட்ட நூல்கள்—
எண்-9 பக்கம் 481-46

## "விவசாயிகள் காங்கிரஸ்"[29] வி. காலினினுடைய கட்டுரைக்கு இடையில் சேர்த்ததிலிருந்து

## I

ஆகவே, நிலச்சுவான்தார்களுக்கும், அதிகார வர்க்கத்தினருக்கும் எதிரான புரட்சிகரமான போராட்டத்தில் விவசாயிகளில் எந்தப் பகுதிக்கும், வசதி படைத்த பகுதிக்கும் கூட முரணில்லாத சோஷலிஸ்டுகள் நிபந்தனையின்றி ஆதரவு கொடுக்க வேண்டும் என்பதை நாம் பார்க்கிறோம். ஆயினும், விவசாயிகளால் விரும்பப்படும் "பொதுவான விநியோகம்"[30] சோஷலிஸமாக இருப்பதற்குப் பதிலாக, அதற்கு வெகு தொலைவில் உள்ளதாகும் என்பதை முரணில்லாத சோஷலிஸ்டுகள் தெளிவாகப் புரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும். பணமூட்டைகளின் அதிகாரத்தையும், மூலதனத்தின் அதிகாரத்தையும், உற்பத்தி சாதனங்களில் எல்லா விதமான தனி உடைமைகளையும், பண்ட உற்பத்தியையும் ஒழிக்க வேண்டும் என்று சோஷலிஸம் கோருகிறது. நிலமும், தொழிற்சாலைகளும் உழைக்கும் மக்கள் கைக்கு மாற வேண்டும் என்று சோஷலிஸம் கோருகின்றது; இவர்கள் ஒரு முழுமையான திட்டத்தைத் தொடர்ந்து, பெரிய அளவில்—சிறிய அளவிலும், சிந்திச் சிதறிக் கிடக்கும் முறையிலும் அல்ல—உற்பத்தியை அமைப்பார்கள்.

நிலத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும் நடைபெறும் விவசாயிகளின் போராட்டம் சோஷலிஸத்தை நோக்கி பெரிய ஒரு படி எடுத்து வைப்பதாகும்; ஆனால், அது சோஷலிஸத்திலிருந்து வெகு தூரத்தில் இருப்பதாகும்.

"பிராவதேசி"
எண்—25
1905—நவம்பர் 16 (3).

திரட்டப்பட்ட நூல்கள்
தொகுப்பு—9.
பக்கம் 455.

# பாட்டாளி மக்களும், விவசாயிகளும்

இப்பொழுது மாஸ்கோவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விவசாயிகளின் காங்கிரஸ்[31] மீண்டும் ஒரு முறை விவசாயிகள் இயக்கத்தின் பால் சமூக ஜனநாயக வாதிகளின் கண்ணோட்டம் என்ன என்ற ஜீவாதாரமான பிரச்சினையை எழுப்பியிருக்கிறது. ரஷ்ய மார்க்ஸிஸ்டுகளுக்கு அவர்களுடைய கொள்கைத் திட்டத்தையும், செயல் தந்திரத்தையும் வரையறுக்கும் பொழுது அது ஒரு ஜீவாதாரமான பிரச்சினையாக எப்பொழுதும் இருந்து வருகிறது. தொழிலாளர் விடுதலைக் குழு[32]வால், 1884-ல் வெளி நாட்டில் பிரசுரிக்கப்பட்ட ரஷ்ய சமூக ஜனநாயக வாதிகளின் முதலாவது நகல் கொள்கை திட்டத்திலேயே விவசாயிகளின் பிரச்சினைக்கு மிக மிக அக்கறையோடு கவனம் செலுத்தப்பட்டது.

அதற்குப் பிறகு பொதுவான பிரச்சினைகள் பற்றி எழுதாத முக்கியமான மார்க்ஸீய நூல் ஒன்றுகூட கிடையாது; அல்லது மார்க்ஸீய கருத்துக்களையும், கோஷங்களையும் திரும்பப் பிரசுரிக்காத, அல்லது மேலும் வளர்க்காத, அல்லது குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு அதைப் பொருத்தாத சமூக ஜனநாயக பத்திரிக்கை ஒன்றுகூடக் கிடையாது.

இன்று விவசாயிகள் இயக்கத்தின் பிரச்சினை தத்துவ ரீதியில் மாத்திரமின்றி, மிகவும் நேரடியான நடைமுறை அர்த்தத்திலும் ஜீவாதாரமானதாக மாறியிருக்கிறது. இப்பொழுது புரட்சிகரமான பாட்டாளி மக்கள், புரட்சிகரமான விவசாயிகளுக்கு நேரடியாக வேண்டுகோள் விடும் முறையில் நமது பொதுவான கோஷங்களை நாம் மாற்ற வேண்டியிருக்கிறது. ரஷ்யாவில் வாழ்க்கையை ஒரு புதிய வழியில் உணர்வு பூர்வமாக அமைப்பவர்கள் என்ற நிலையில் விவசாயிகள் முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் காலம் இப்பொழுது வந்து விட்டது. மகத்தான ரஷ்யப் புரட்சியின் வளர்ச்சிப் போக்கும், விளைவும் பெரும் அளவிற்கு விவசாயிகளின் அரசியல் உணர்வின் வளர்ச்சியைச் சார்ந்திருக்கிறது.

புரட்சியிலிருந்து விவசாயிகள் எதை எதிர்பார்க்கிறார்கள்? புரட்சியானது விவசாயிகளுக்கு எதைக் கொடுக்க முடியும்? அர

சியல் துறையில் தீவிரமாக செயல்படுகிற எந்த நபரும், குறிப்பாக அரசியலில் ஈடுபடுகிற வர்க்க உணர்வு படைத்த ஒவ்வொரு தொழிலாளியும்—முதலாளித்துவ அரசியல் வாதிகளால் கொச்சைப்படுத்தப்பட்ட அர்த்தத்தில் அல்ல, அதற்கு மாருக அந்த வார்த்தையின் சிறந்த அர்த்தத்தில்—இந்த இரண்டு கேள்விகளுக்கும் பதில் சொல்லத்தான் வேண்டும்.

விவசாயிகள் நிலமும், சுதந்திரமும் வேண்டும் என்று கேட்கிருர்கள். இந்த விஷயத்தில் இரண்டுவிதமான கருத்துக்கள் இருக்கவே முடியாது. தங்கள் முழுச் சக்தியோடு வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்கள் அனைவரும் புரட்சிகரமான விவசாயிகளுக்கு ஆதரவு கொடுக்கிருர்கள். வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்கள் அனைவரும் எல்லா நிலத்தையும், முழுச் சுதந்திரத்தையும் விவசாயிகள் பெறவேண்டும் என்று விரும்புகிருர்கள், அதற்காகப் போராடுகிருர்கள். "எல்லா நிலத்தையும்" என்ருல் அதன் அர்த்தம் அரை குறையான சலுகைகளையும், பிச்சை போடுவதையும் ஏற்றுக் கொள்வது என்பது அல்ல; அதன் அர்த்தம் கணக்குத் தீர்ப்பது என்பதுதான். விவசாயிகளுக்கும் நிலச்சுவான்தார்களுக்கும் இடையே சமரசம் செய்வதன் மூலமாக அல்ல, அதற்கு மாருக, நிலச்சுவான்தார்களின் நில உடமையை ஒழிப்பதன் மூலமாகத்தான். வர்க்க உணர்வு படைத்த பாட்டாளி மக்களின் கட்சியும், சமூக ஜனநாயக வாதிகளும் இந்தக் கருத்தை உயிர்த்துடிப்போடு பிரகடனம் செய்திருக்கிருர்கள். கடந்த மே மாதத்தில்[33] நடைபெற்ற மூன்ருவது காங்கிரசில் ரஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சி தனிப்பட்ட முறையில் சொந்தமாக வைத்திருக்கும் எல்லா நிலங்களையும் பறிமுதல் செய்வது என்பது உள்பட விவசாயிகளின் புரட்சிகரமான கோரிக்கைகளுக்கு ஆதரவு கொடுப்பதாக நேரடியாகப் பிரகடனம் செய்யும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிற்று. வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்களின் கட்சி எல்லா நிலத்தையும் கொடுக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை ஆதரிக்கிறது என்பதை இந்தத் தீர்மானம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. நமது கட்சியின் மற்ருெரு உறுப்பான மகாநாடு நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்தின் உள்ளடக்கம் இந்த விஷயத்தில் ரஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியின் மூன்ருவது காங்கிரசால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு முற்றிலும் ஒத்திருக்கிறது

''பூரண சுதந்திரம்'' என்ருல் அதன் அர்த்தம் பொது விவகாரங்களையும், அரசு விவகாரங்களையும் நிர்வாகம் செய்கிற அதிகாரிகளையும், மற்ற காரியாலயப் பொறுப்பாளர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதுதான். ''பூரண சுதந்திரம்''

என்ருல், அதன் அர்த்தம், முழுமையாக மக்களுக்குப் பொறுப்பில்லாமல் இருக்கிற மக்களிடமிருந்து தனித்து விலகி நிற்கிற, மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத, மக்களுக்கு பதில் கூறும் பொறுப்பில்லாத, மக்களால் திருப்பி அழைக்கும் உரிமைக்கு உட்படாத அரசு நிர்வாகத்தை அறவே ஒழிக்கவேண்டும் என்பது தான். "பூரண சுதந்திரம்" என்ருல் அதன் அர்த்தம் அதிகாரிகளுக்கு மக்கள் கீழ்ப் பணியாளர்களாக இருப்பது என்பது அல்ல, அதற்கு மாருக அதிகாரிகள் மக்களுக்கு கீழ்ப் பணியாளர்களாக இருப்பது என்பதுதான்.

நிலத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடுகிற விவசாயிகள் அனைவரும் போராட்டம் எந்த அர்த்தத்தைக் குறித்துக் காட்டுகிறது என்பதைப் பூரணமாகப் புரிந்து கொண்டவர்கள் அல்ல ; குடியரசு வேண்டும் என்ற அளவுக்கு அவர்கள் கோரவும் தயாராக இல்லை. ஆனுல், இவை ஒரு புறமிருந்தாலும் கூட, விவசாயிகளின் கோரிக்கைகளில் ஜனநாயகக் கருத்துப்போக்கு இருப்பதில் சந்தேகத்திற்கே இடமில்லை. ஆகவே, பாட்டாளி மக்கள் இந்தக் கோரிக்கைகளை ஆதரிப்பார்கள் என்பதை விவசாயிகள் உறுதியாக நம்பலாம். நகரங்களில் உயர்த்தப்பட்டிருக்கும் சிவப்பு பதாகையானது, தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், ஆகியவர்களது மாத்திரமின்றி, நிலத்தை உழும் லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான சிறு விவசாயிகளதும் உடனடியான, ஜீவாதாரமான கோரிக்கைகளுக்காகப் போராடுகிற பதாகையாகும் என்பதை விவசாயிகள் தெரிந்துகொள்ள வேண்டும்.

எந்த வடிவத்திலாவது இன்றுவரை நீடித்து வரும் பண்ணை அடிமை முறையின் மிச்ச சொச்சங்கள் விவசாய மக்கள் அனைவருக்கும் கொடுமையான ஒரு சுமையாக இருக்கின்றன; சிவப்பு பதாகையின். கீழ் பாட்டாளி மக்கள் இந்தச் சுமை மீது யுத்தப் பிரகடனம் செய்திருக்கிருர்கள்.

சிவப்புப் பதாகை என்ருல் அதன் அர்த்தம் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பாட்டாளி மக்கள் ஆதரவு கொடுப்பது என்பதைக் காட்டிலும் விரிவானதாகும். பாட்டாளி மக்களின் சுதந்திரமான கோரிக்கைகள் என்பதும் கூட அர்த்தமாகும். அதன் அர்த்தம் நிலத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராட்டம் என்பது மாத்திரமல்ல, அதோடு கூடவே எல்லா விதமான, மனிதனை மனிதன் சுரண்டுவதை எதிர்த்துப் போராட்டம், மக்கள் திரளின் ஏழ்மையை எதிர்த்துப் போராட்டம், மூலதனத்தின் ஆட்சியை எதிர்த்துப் போராட்டம் என்பதாகும். இங்கு தான்

இரண்டாவது பிரச்சினையை நாம் நேரிடுகிறோம். விவசாயி களுக்கு புரட்சி எதைக் கொடுக்கமுடியும்? விவசாயிகளின் உண்மையான நண்பர்களில் பலர் (அவர்களில், உதாரணமாக, சோஷலிஸ்டு புரட்சியாளர்களும் இருக்கிறார்கள்) இந்தப் பிரச்சினையை உதாசீனம் செய்கிறார்கள். அதன் முக்கியத்துவத்தை உணரவில்லை, விவசாயிகள் நிலம், சுதந்திரம் வேண்டும் என்று கேட்கும் பிரச்சினைக்குத் தீர்வுகாண, அந்தப் பிரச்சினையை எழுப்பி அதைத் தீர்த்து விடலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இது மிகப்பெரிய தவறாகும். பல்வேறு அதிகாரிகளிலிருந்து அரசின் தலைமை வரையிலும் அனைவரையும் தேர்ந்தெடுத்தாலும்கூட, பூரண சுதந்திரம் மூலதனத்தின் ஆட்சியை ஒழித்து விடாது; ஒரு சிலர் சொத்து வைத்திருப்பதையும், மக்கள் திரளின் ஏழ்மை யையும் ஒழித்து விடாது, தனி நபர் நில உடைமையைப் பூரணமாக ஒழிப்பதும்கூட, மூலதனத்தின் ஆட்சியையும், அல்லது மக்கள் திரளின் ஏழ்மையையும், ஒழித்து விடாது, தேசம் முழுமைக்கும் சொந்தமாக இருக்கும் நிலத்திலும்கூட, சொந்தமாக மூலதனம் வைத்திருப்பவர்கள்தான், உழவு கருவிகள், கால் நடைகள், இயந்திரக் கருவிகள், விதைகள், பொதுவாக ரொக்கப்பணம் ஆகியவற்றை வைத்திருப்பவர்கள்தான் சுதந்திரமாக விவசாயம் செய்ய முடியும். வேலை செய்வதற்குத் தங்கள் கைகளைத் தவிர வேறு எதுவும் இல்லாதவர்களைப் பொறுத்தவரையிலும், ஒரு ஜனநாயகக் குடியரசிலும்கூட, நிலம் தேசம் முழுவதற்கும் சொந்தமாக இருந்தாலும் கூட தவிர்க்க முடியாத வகையில் மூலதனத்திற்கு அடிமையாகவே இருப்பார்கள். மூலதனத்தைப் பொதுவுடைமையாக்காமல் நிலத்தைப் "பொது உடமை" ஆக்கமுடியும் என்ற கருத்தானது, மூலதனமும், பண்ட உற்பத்தி பொருளாதாரமும் நடைமுறையில் இருக்கும் பொழுது சரிசமமாகப் பகிர்ந்து கொடுக்கப்பட்ட நில உடமை சாத்தியமானது என்ற கருத்தும் ஒரு மாய மயக்கம்தான். ஐரோப்பாவில் அநேகமாக எல்லா நாடுகளிலும், ஏதாவது ஒரு வகையில் இதுபோன்ற மாய மயக்கம் நிலவி வந்த கால கட்டங்களை சோஷலிஸம் அனுபவித்திருக்கிறது. இத்தகைய ஒரு தவறு எவ்வளவு அபாயகரமானது என்பதை எல்லா நாடுகளிலும் தொழிலாள வர்க்கப் போராட்டத்தின் அனுபவம் நடைமுறையில் எடுத்துக் காட்டியிருக்கிறது; இன்று ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் உள்ள சோஷலிஸ்டு பாட்டாளி மக்கள் தாங்களாகவே இதை அறவே தவிர்த்து விட்டார்கள்.

இவ்வாறு, வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்களின் சிவப்புப் பதாகை என்றால் அதன் அர்த்தம் முதலாவதாக பூரண சுதந்திரத்திற்காகவும், நிலம் அனைத்தையும் பெறுவதற்காகவும் விவசாயிகள் நடத்தும் போராட்டத்திற்கு நமது முழுச் சக்தியோடும்

நாம் ஆதரவு கொடுக்கிறோம் என்பதுதான்; இரண்டாவதாக, அதன் அர்த்தம் நாம் இத்துடன் நின்று விடமாட்டோம், மேலும் போவோம் என்பதுதான் சுதந்திரத்திற்காகவும், நிலத்திற்காக வும், போராடுவதோடு கூடவே நாம் சோஷலிஸத்திற்காகவும் போராட்டத்தைத் தொடுத்துக் கொண்டிருக்கிறோம். சோஷலி ஸத்திற்காக நடத்தும் போராட்டமானது, மூலதனத்தின் ஆட்சியை எதிர்த்து நடத்தும் போராட்டமாகும். நேரடியாகவும், முழுமையாகவும் மூலதனத்தைச் சார்ந்திருக்கும் கூலிக்கு உழைக்கும் தொழிலாளர்களால், முதலாவதாகவும் முக்கியமாகவும் இந்தப் போராட்டம் நடத்தப்படுகிறது. சிறு விவசாயிகளைப் பொறுத்த வரையிலும், அவர்களில் சிலர் சொந்தமாக மூலதனம் வைத்திருக்கிறார்கள்; அடிக்கடி அவர்களே தொழிலாளர்களைச் சுரண்டுகிறார்கள். ஆகவே, சோஷலிஸத்திற்காகப் போராடு கிறவர்கள் வரிசையில் எல்லா சிறு விவசாயிகளும் சேருவது கிடையாது; இதில் சேருகிறவர்கள்தான் மூலதனத்திற்கு விரோதமாக தொழிலாளர்களையும் தனி உடமைக்கு எதிராக பொதுச் சொத்துரிமையும் உணர்வு பூர்வமாகவும், உறுதியாகவும் ஆதரிக்கிறார்கள்.

அதனால்தான், விவசாயிகள் அனைவரோடும் ஒன்று சேர்ந்து கூட்டாக நிலச்சுவான்தார்களையும், அதிகாரிகளையும் எதிர்த்துப் போராடுகிறோம் என்றும், இத்துடன் கூடவே நகரத்திலுள்ள பாட் டாளி மக்களும், கிராமத்திலுள்ள பாட்டாளி மக்களும் ஒன்று சேர்ந்து, கூட்டாக மூலதனத்தை எதிர்த்துப் போராடுகிறோம் என்றும், சமூக ஜனநாயகவாதிகள் கூறுகிறார்கள். நிலத்தித்காகவும், சுதந்திரத்திற்காகவும் நடத்துகிற போராட்டம் ஒரு ஜனநாயகப் போராட்டமாகும். மூலதனத்தின் ஆட்சியை ஒழிப்பதற்காக நடத்தும் போராட்டம் ஒரு சோஷலிஸ்டுப் போராட்டமாகும்.

ஆகவே, பூரண சுதந்திரத்திற்காகவும், நிலம் அனைத்தையும், பெறுவதற்காகவும் ஒன்று சேர்ந்து. உறுதியாகவும், தன்னலமின்றி யும், ஊசலாட்டமின்றியும் போராடுவது என்று முடிவு செய்திருக்கும் விவசாயிகள் சங்கத்திற்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்களை அனுப்புவோம். இந்த விவசாயிகள் உண்மை யான ஜனநாயக வாதிகள். ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவை களின் கடமைகள் சம்பந்தமாக அவர்கள் கருத்துக்கள் எங்கு தவறானவைகளாக இருக்கின்றன என்பதையும், மகத் தான பொதுப் போராட்டத்தில் நேச சக்தி என்ற நிலையில் அவர்களோடு நாம் ஒன்று சேர்ந்திருக்கிறோம் என்பதையும், அவர் களுக்கு நாம் பொறுமையாகவும், உறுதியாகவும் விளக்கவுரை கொடுக்க வேண்டும். இந்த விவசாயிகள் உண்மையாகவே புரட்சி

கரமான, ஜனநாயக வாதிகள்; இன்றைய புரட்சியின் பூரண வெற்றிக்காக அவர்களோடு நிச்சயமாகச் சேர்ந்து கொண்டு போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும். ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கு அறை கூவல் விடுக்கும் திட்டத்தை நாம் பூரணமாக ஆதரிக்கிறோம்; நகரத்திலுள்ள தொழிலாளர்களோடு கிராமப்புற ஏழை விவசாயிகளும், ஒன்று சேர்ந்து அடுத்த தடவை கூட்டாகச் செயல்பட வேண்டும் என்ற முடிவையும் நாம் பூரணமாக ஆதரிக்கிறோம். வர்க்க உணர்வு படைத்த எல்லாத் தொழிலாளர்களும் இந்த திட்டத்தை நிறைவேற்றும் பணிக்கு உதவி செய்ய எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்வார்கள். மிகவும் நேர்மையான, மிகவும் உறுதியான புரட்சிகரமான ஜனநாயக வாதிகளோடுகூட கூட்டணி கிடையாது என்ற கருத்து, மேலும் பெரிய மேலும் முக்கியமான இலக்கை—அதாவது சோஷலிஸத்திற்கான போராட்டத்தை, மூலதனத்தின் ஆட்சியை பூரணமாக ஒழிக்கும் போராட்டத்தை, எல்லா விதமான சுரண்டலிருந்தும் எல்லா உழைக்கும் மக்களையும் விடுதலை செய்வதற்கான போராட்டத்தை — பாட்டாளி மக்கள் எப்பொழுதும் மறக்கும்படி செய்யும். நிலத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும், நடைபெறும் பொது போராட்டத்தில் தொழிலாளர்களே, விவசாயிகளே, முன்னேறிச் செல்லுங்கள்! சோஷலிஸத்திற்கான போராட்டத்தில், சர்வதேச சமூக ஜனநாயகத்தால் ஒன்று திரட்டப்பட்டுள்ள பாட்டாளி மக்களே, முன்னேறிச் செல்லுங்கள்!

''நொவாயாழிசின்'' எண் — 11.
1905 — ல் நவம்பர் — 12
கையெழுத்து — என். லெனின்.

திரட்டப்பட்ட நூல்கள்
தொகுப்பு — 10
பக்கம் 40 - 43,

# முதல் ரஷ்யப் புரட்சியில்—1905-1907— சமூக ஜனநாயகத்தின் நில உடமை பற்றிய செயல்திட்டம்—என்பதிலிருந்து.

## 7 — நிலத்தை நகரசபை மயமாக்குதலும், நகரசபை சோஷலிஸமும்.

ஸ்டாக்ஹோமில் நில உடமை பற்றிய கொள்கைத் திட்டத்தை நிறைவேற்றும்படி செய்த அதே மென்ஷ்விக்குகள் இந்த இரண்டு வாசகக் கருத்துக் கூறுகளும் சம அர்த்தமுள்ளவை களாகச் செய்தார்கள். காஸ்ட்ரோவ், லாரின் ஆகிய இரண்டு பிரபல மென்ஷ்விக்குகளின் பெயர்களை மாத்திரம் குறிப்பிட்டால் போதும் என்று நினைக்கிறேன். "சில தோழர்கள் நகரசபை சொத்து வைத்துக் கொள்வது என்பதுபற்றி முதல் தடவையாகக் கேள்விப்படுவது போல் தோன்றுகிறது. மேற்கு ஐரோப்பாவில் 'நகரசபை சோஷலிஸம்' (இங்கிலாந்தில்) என்று அழைக்கப்படுகிற முற்றிலும் ஒரு அரசியல் கருத்துப்போக்கு (! திட்டவட்டமாக! ) இருக்கிறது என்பதையும், இது நகரத்திலும், கிராமத்திலும் உள்ள நகரசபைகள் சொத்து வைத்துக் கொள்ளும் கொள்கையை விஸ்தரிக்கும்படி வாதாடுகிறது என்பதையும், இதை நமது தோழர் களும்கூட ஆதரிக்கிறார்கள் என்பதையும், ஞாபகப்படுத்த விரும்பு கிறேன். பல நகர சபைகள் நிலத்தை உடமையாக வைத்திருக் கின்றன; இது நமது செயல் திட்டத்திற்கு முரணானதல்ல. நகர சபைகளுக்கு நிலத்தை இலவசமாகப் (!) பெறும் (!!) சாத்தி யதைகள் இப்பொழுது இருக்கின்றன; இதை நாம் அனுகூலமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் பறிமுதல் செய்யப்பட்ட நிலத்தை நகரசபை மயமாக்க வேண்டும் என்பது உண்மையே" என்று காஸ்ட்ரோவ் ஸ்டாக் ஹோமில் கூறினார் (பக்கம் 88).

"இலவசமாக சொததைப் பெறக் கூடிய சாத்தியதைகள் இருக் கின்றன" என்பது பற்றிய கள்ளம் கபடமற்ற கருத்தை அற்புத மான முறையில் இங்கு தெரிவித்திருக்கிறார். இந்த விசேஷ கருத்துப் போக்கானது, முக்கியமாக இங்கிலாந்தின் தனிச்

சிறப்புப் பண்பாக இருக்கிறது, என்று இந்த நகரசபை "சோஷலிசக்" கருத்துப் போக்கின் "உதாரணத்தை மேற் கோளாக காட்டும்போது, இந்தப் பேச்சாளர் இது ஏன் மிக அதிகமான சந்தர்ப்பவாத கருத்துப்போக்காக இருக்கிறது என்பதைப்பற்றி ஒரு கணம்கூட சிந்திக்கவே இல்லை. 'ஆங்கிலேய பேபியன்[34] அறிவாளிகளின் மிக அதிகமான அளவில் உள்ள இந்த சந்தர்ப்பவாதத்தை விளக்கி ஸோர்ஜ் என்பவருக்கு கடிதங்கள் எழுதியபோது, எங்கல்ஸ் இந்த "நகரசபை மயமாக்கும்" திட்டங்களின்[35] குட்டி பூர்ஷுவா தன்மையை ஏன் வலியுறுத்தினர்?

காஸ்ட்ரோவுக்கு ஒத்த வகையில் மென்ஷ்விக்குகளின் செயல் திட்டத்தைப்பற்றி தமது கருத்தைத் தெரிவிக்கும்போது, லாரின் பின் வருமாறு கூறுகிறுர்; "குதிரை வண்டிப் போக்குவரத்தையோ, அல்லது மிருக வதைக் கொட்டடிகளையோ நகர மன்றங்கள் நிர்வாகம் செய்வதுபோல், சில பிராந்தியங்களில் மக்களின் ஸ்தல சுயாட்சி ஸ்தாபனங்களே இந்தப் பெரிய நிலச் சொத்துக்களை ஒரு சமயம் நிர்வாகம் செய்யலாம்; அவைகளிலிருந்து கிடைத்த லாபம் அனைத்தையும் (!!) பொது மக்கள் அனைவரிடமும் அவர்கள் விருப்பம்போல், அதைப் பயன்படுத்திக் கொள்ளக் கொடுக்கலாம்"* எனது அன்பு லாரின் அவர்களே, ஸ்தல முதலாளிகளிடம் அல்லவா?

மேற்கு ஐரோப்பிய நகரசபை சோஷலிஸத்தின் வெற்று வேட்டு வீரர்களின் வெற்று வேட்டு மனோ மயக்கத் தன்மைகளை உணரவைக்கும் நிலைமையை அதாகவே ஏற்படுத்தியுள்ளது. முதலாளித்துவம் அதிகாரத்தில் இருக்கிறது, என்ற உண்மையை மறந்து விட்டார்கள்; அதே மாதிரியாக, மொத்த ஜனத் தொகையில் பாட்டாளி மக்களின் சதவிகிதம் அதிகமாக உள்ள நகரங்களில் மட்டுமே நகரசபை சர்க்கார்களிடமிருந்து உழைக்கும் மக்களுக்கு சிற்சில அனுகூலங்கள் கிடைப்பது சாத்தியம் என்பதையும், மறந்து விட்டார்கள். ஆனுல் இவை அனைத்தும் போகிற போக்கில் வரக் கூடிய விஷயங்கள். நிலத்தை நகரசபை மயமாக்கும் முனிசிபல் "சோஷலிஸ"க் கருத்தின் முக்கியமான போலி வாதம் பின் வருமாறு.

ஆங்கிலேய பேபியன்களைப்போல் மேற்கத்திய முதலாளித்துவ அறிவாளிகளும், நகரசபை சோஷலிசத்தை ஒரு விசேஷ "கருத்துப் போக்காக" உயர்த்துகிறுர்கள்; இ.'ற்கு திட்டவட்டமான காரணம் என்னவென்றுல், அது சமூக அமைதியையும், வர்க்க சமரசத்தையும், கனவு காண்கிறது; மேலும், மொத்தமாக பொருளாதார அமைப்

* "விவசாயிகள் பிரச்சினையும், சமூக ஜனநாயகமும்" — பக்கம் — 66.

பின் அடிப்படையான பிரச்சினைகளிலிருந்தும், மொத்தமாக அரசின் அமைப்பிலிருந்தும் பொதுமக்களின் கவனத்தை வேறு திசையில் திருப்பி, சாதாரண பிரச்சினைகளான ஸ்தல சுயாட்சி மீது கவனத்தைச் செலுத்தும்படி செய்கிறது. முதல் ரகத்தைச் சேர்ந்த பிரச்சினைகளின் துறைகளில், தீர்க்க முடியாத வர்க்க முரண்பாடுகள் கூர்மையாக இருக்கின்றன; நாம் சுட்டிக்காட்டியிருப்பது போல், அந்தத்துறைதான் முதலாளித்துவத்தின் வர்க்க ஆட்சியின் அஸ்திவாரத்தையே பாதிக்கிறது. ஆகவே, அந்தத் துறையில் தான் சோஷலிஸத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டு வரும் வெற்று வேட்டு, பிற்போக்கு உடோபியா நம்பிக்கைக்கு இடமற்ற வகையில் இருக்கிறது. முக்கியத்துவம் இல்லாத ஸ்தல பிரச்சினைகளின் துறைகளில் கவனம் செலுத்தப்படுகிறது; முதலாளித்துவத்தின் வர்க்க ஆட்சியின் பிரச்சினையின்பால் கவனத்தைத் திருப்பி விடாமல், அந்த ஆட்சியின் முக்கியமான கருவிகளின் பால் கவனத்தைத் திருப்பி விடாமல், 'ஜனத்தொகையின் தேவைகளுக்காக'' பணக்கார முதலாளிகள் வீசி எறியும் அற்பப் பொருக்குகளை வினியோகம் செய்யும் பிரச்சினையின்பால் கவனத்தைத் திருப்பி விடப்படுகிறது. இயல்பாகவே, அற்பத் தொகையைச் செலவு செய்யும் பிரச்சினைகளில் (முதலாளித்துவத்தின் மொத்த உபரி மதிப்போடும், அரசின் மொத்தச் செலவோடும் ஒப்பிடும் பொழுது) அதாவது பொது சுகாதாரத்திற்கு முதலாளித்துவம் தானுகவே ஒதுக்கி வைக்க விரும்புகிற பிரச்சினையில் (''வீட்டுப்பிரச்சினை'' என்ற நூலில், முதலாளிகளே நகரங்களில் தொத்து நோய் பரவுவதை கண்டு பயப்படுகிறூர்கள் என்று எங்கல்ஸ் சுட்டிக்காட்டினுர்) அல்லது கல்விக்காக சிறு தொகை ஒதுக்கும் பிரச்சினைகளில் (உயர்ந்த தொழில் நுணுக்கத்தின் மட்டத்திற்கு பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் முதலாளிகளுக்கு அவசியம் தேவைப்படுகிறது) இன்னும் இது போன்ற பிரச்சினைகளில் கவனத்தைத் திருப்பி விடுவதால், இத்தகைய அற்பப் பிரச்சினைகளில் ''சமூக அமைதி''யைப் பற்றியும். வர்க்கப் போராட்டத்தின் தீமையைப் பற்றியும், இன்னும் இவை போன்றவைப்பற்றியும், கருத்துக்களை முன் வைப்பதற்கு இடம் கொடுக்கிறது. முதலாளித்துவம் தானுகவே பொது சுகாதாரம், கல்வி, "பொது மக்களின் தேவைகள்'' ஆகியவைகளுக்கு பணத்தைச் செலவு செய்வதால், எந்த வர்க்கப் போராட்டம் இருக்க முடியும்? ஸ்தல சுயாட்சி நிறுவனங்கள் மூலமாக, மெதுவாகவும், படிப்படியாகவும் "கூட்டு முறையில் சொத்துடைமையையும்,'' 'சமூதாய' உற்பத்தியையும் போற்றுதலுக்குரிய ஒய். லாரின் பொருத்தமாகக் குறிப்பிட்டிருப்பது போல் குதிரை வண்டி போக்குவரத்தையும், இறைச்சிக்காக ஆடு, மாடுகளை வதை செய்யும்

கொட்டடிகளையும் "பொது உடமையாக்கி"னுல் ஒரு சமூகப் புரட்சிக்கு தேவை ஏதாவது இருக்கிறதா?

"நகரசபை சோஷலிஸத்தின்" குறுகிய எல்லைகளை மக்கள் மறந்து விடுவார்கள் என்ற உண்மையில்தான் அந்தக் "கருத்துப் போக்கின்" வெற்றுவேட்டு சந்தர்ப்ப வாதம் அடங்கி இருக்கிறது. (ஆங்கிலேய சமூக ஜனநாயக வாதிகள் பேபியன்களோடு வாதப் பிரதிவாதம் செய்யும்போது சுட்டிககாட்டியது போல், எதார்த்தத்தில் அது ஒரு நகரசபை முதலாளித்துவம்தான்). முதலாளித்துவம் ஒரு வர்க்கம் என்ற நிலையில் ஆட்சி செய்வது வரையிலும், அதன் ஆட்சியின் உண்மையான அஸ்திவாரங்களின் மேல் எந்த விதமான ஆக்கிரமிப்பையும், "நகரசபை" கருத்தின் அடிப்படையிலும் கூட அது அனுமதிக்க முடியாது என்பதை அவர்கள் மறந்து விடுகின்றுர்கள்; மேலும், முதலாளித்துவம் "நகரசபை சோஷலிஸத்தை" அனுமதிக்கிறது, சகித்துக் கொள்கிறது, என்றுல், அதற்குக் காரணம் இது. அதன் ஆட்சியின் அஸ்திவாரங்களைத் தொடவே இல்லை. அதன் செல்வத்தின் முக்கியமான மூல ஊற்றுக்களைத் தொடவே இல்லை. அதே சமயத்தில் ஸ்தல வரவு செலவு என்ற குறுகிய துறைக்கு மாத்திரம் அதை விஸ்தரிக்கிறது; "பொது மக்களே" இதை நிர்வாகம் செய்யும் உரிமையை முதலாளித்துவமே அனுமதிக்கிறது; மேற்கத்திய நாடுகளில் உள்ள "நகரசபை சோஷலிஸ"த்தைப் பற்றி ஒரளவு பரிச்சயம் கொண்டால் போதும். அது பற்றிய உண்மை நிலையைத் தெரிந்து கொள்ளலாம்: அதாவது. சோஷலிஸ்டு நகரசபைகள் தொழிலாளர்களுக்கு கணிசமான அளவு நிவாரணம் கொடுக்காத சாதாரண, சொற்ப நடவடிக்கைகளின் எல்லைக்கு அப்பால் இம்மியளவேனும் போவதற்கு ஏதாவது முயன்றுல், மூலதனத்தில் தலையிட ஏதாவது முயன்றுல், முதலாளித்துவ அரசின் மத்திய அதிகாரிகள் தொடர்ச்சியாக மிக்க உறுதியான முறையில் தடுத்து நிறுத்தும் உரிமையை உபயோகிப்பார்கள்.

இந்த அடிப்படையான தவறை, மேற்கு ஐரோப்பிய பேபியன்கள், பாஸிபிலிஸ்டுகள், பெர்ன்ஸ்டீனியர்கள் ஆகியவர்களின் இந்த சிறு முதலாளித்துவ சந்தர்ப்பவாதத்தை நகரசபை மயமாக்க வேண்டும் என்று வாதாடுகிறவர்கள் கடைப்பிடிக்கிறுர்கள்

"நகரசபை சோஷலிஸம்" என்றுல், ஸ்தல சுயாட்சி நிறுவனங்களின் விஷயங்களில் சோஷலிஸம் என்று அதன் அர்த்தம். அதவாது, ஸ்தல நலன்களின் எல்லைகளுக்கு அப்பால் போகாத எதுவும், அரசின் நிர்வாகத்தின் எல்லைகளுக்கு அப்பால் போகாத

எதுவும், அதாவது ஆளும் வர்க்கங்களின் மூலவருமானத்தின் முக்கியமான மூல ஊற்றுக்களைப் பாதிக்காத எதுவும், அரசின் நிர்வாகத்தை மாத்திரமல்ல, அரசின் அடிப்படை அமைப்பைப் பாதிக்காத எதுவும் அதனுல் "நகரசபை சோஷலிஸ"த்தின் துறைக்கு அப்பால் போகும் எதுவும் என்று அர்த்தம். ஆனுல் நமது போலி மேதைகள், இந்தக் கூர்மையான தேசியப் பிரச்சினையைத் தட்டிக்கழிக்கிருர்கள்; நேரடியாக ஆளும் வர்க்கங்களின் ஜீவாதாரமான நலனைப் பாதிக்கும் இந்த நிலப்பிரச்சினையை "ஸ்தல சுயாட்சிப் பிரச்சினைகளின்" துறையிடம் ஒப்படைப்பதன் மூலமாக தட்டிக்கழிக்கிருர்கள். மேற்கத்திய நாடுகளில் குதிரை வண்டி போக்குவரத்து, இறைச்சிக்காக ஆடு, மாடுகளை வதை செய்யும் கொட்டடிகள் ஆகியவைகளை நகரசபை மயமாக்கு கிருர்கள்— ஆகவே, நாம் எல்லா நிலத்திலும் வளச்செறிவுள்ளதை ஏன் நகரசபை மயமாக்கக் கூடாது?— என்று ரஷ்ய அறிவாளிகள் வாதாடுகிருர்கள். மத்திய சர்க்காரில் ஜனநாயகம் வரும் நிகழ்ச்சி ஏற்பட்டாலும், முழுமை பெருத ஜனநாயக மயமாக்கக்கூடிய நிகழ்ச்சி ஏற்பட்டாலும்; இரண்டிற்குமே அது உதவிகரமாக இருக்கும்.

ஆகவே, ஒரு முதலாளித்துவ புரட்சியில் ஒரு நில உடமை சோஷலிஸத்தை நாம் பெறுகிறோம்; மிகுந்த அளவு சிறு முதலாளித்துவ ரகத்தைச் சேர்ந்த ஒரு சோஷலிஸத்தைப் பெறுகிறோம்; ஸ்தல சுயாட்சியை மாத்திரம் பாதிக்கிற, அற்ப பிரச்சினைகளின் துறையில் ஜீவாதாரமான பிரச்சினைகளை ஒப்படைப்பதன் மூலமாக ஜீவாதாரமான பிரச்சினைக்காக நடத்த வேண்டிய வர்க்கப் போராட்டத்தை மழுங்கவைப்பதை குறிக்கோளாகக் கொண்டிருக்கிற சோஷலிஸத்தைப் பெறுகிறோம். உண்மையில், நாட்டில் நல்ல நிலத்தை வினியோகம் செய்யும் பிரச்சினையானது ஸ்தல பிரச்சினையும் அல்ல, நிர்வாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினையும் அல்ல. மொத்தமாக அரசைப் பாதிக்கும். பிரச்சினையாகும்; கட்டமைப்பு சம்பந்தப்பட்டதாகும். நிலச்சுவான்தார்கள் மாத்திரமின்றி, முதலாளித்துவ அரசின் அடிப்படை அமைப்பைப் பாதிக்கும் பிரச்சினையாகும். சோஷலிஸ்டு புரட்சியை நடத்தி முடிப்பதற்கு முன்பு, விவசாயத் துறையில் "நகரசபை சோஷலிஸத்தை" வளர்க்க முடியும் என்ற கருத்தை மக்களிடம் ஆசை காட்டி ஏமாற்றுவதானது, கொஞ்சம் கூட அனுமதிக்க முடியாத போலிக்கிளர்ச்சி முறையை நடைமுறையில் செயல் படுத்துவதாகும். முதலாளித்துவப் புரட்சியின் கொள்கை திட்டத்தில் தேசியமயமாக்குவதையும் சேர்த்துக் கொள்வதை மார்க்ஸீஸம் அனுமதிக்கிறது. காரணம், தேசியமயமாக்குவது

முதலாளித்துவ நடவடிக்கையாகும்; அதற்கும் காரணம், நிலையான நிலவாடகை, முதலாளித்துவத்தின், வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக இருக்கிறது; நிலத்தில் தனி உடமை, முதலாளித் துவத்திற்கு ஒரு தடையாக இருக்கிறது. ஆனால், முதலாளித்துவப் புரட்சியின் கொள்கை திட்டத்தில் பெரிய நிலச்சுவான்தாரிகளின் நிலத்தை நகரசபை மயமாக்க வேண்டும், என்பதைச் சேர்த்துக் கொள்வது என்றால், பேபியன் அறிவாளிகளின் சந்தர்ப்பவாதமாக மார்க்ஸீஸத்தைப் புதிய மாதிரியில் திருத்தி அமைக்க வேண்டும்.

முதலாளித்துவப் புரட்சியில் குட்டி பூர்ஷ்வா முறைகளுக்கும், பாட்டாளி மக்களின் முறைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை இங்கு தான் நாம் பார்க்கிறோம். குட்டி பூர்ஷவாக்கள் அதிதீவிர வாதிகள் கூட—நமது சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் உள்பட — முதலாளித்துவப் புரட்சிக்குப் பிறகு, வர்க்கப் போராட்டமே இருக்காது என்றும், அதற்கு மாறாக, உலகளாவிய சுபீட்சமும், சமாதானமும் இருக்கும் என்றும் எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, முன் கூட்டியே அது "தனது கூட்டைக் கட்டுகிறது" முதலாளித்துவப் புரட்சியில் குட்டி பூர்ஷ்வா சீர்திருத்தங்களுக்கான திட்டங்களை அது புகுத்துகிறது; நில உடமை பற்றிய தொழிலாளர் கோட்பாடுகளைப் பலப்படுத்துவது பற்றிய சிறிய அளவில் விவசாயம் செய்வது பற்றிய பல்வேறு "கட்டளைச்சட்டங்களையும்". ஒழுங்கு முறைகளையும் பேசுகிறது. குட்டிபூஷ்வா முறையானது, சாத்தியமான அளவு அதிகப்பட்சம் சமூக சமாதானத்திற்கு இடமளிக்கிற உறவுகளை உருவாக்கும் முறையாக இருக்கிறது. முற்றிலும் தனிப்பட்ட பாட்டாளி மக்களின் முறையானது மத்திய காலத்துக்குரியவைகளை எல்லாம் பாதையிலிருந்து அகற்றி வர்க்கப் போராட்டத்திற்கான பாதைக்குத் தயார் செய்வதாகும். ஆகவே, நிலஉடமை பற்றிய "கட்டளைச்சட்டங்கள்" அனைத்தையும் விவாதிக்கும் பொறுப்பை சிறு உடமையாளர்களிடம் பாட்டாளி மக்கள் விட்டு விட முடியும்; நிலச்சுவான்தார்களின் பெரிய பண்ணைகளை ஒழிப்பதிலும், விவசாய அரங்கில் வர்க்கப் போராட்டத்திற்கு கடைசி முட்டுக் கட்டையாக இருக்கும் நிலத் தனிஉடமையை ஒழிப்பதிலும் மாத்திரமே பாட்டாளி மக்கள் அக்கறை கொண்டிருக்கிறார்கள். முதலாளித்துவப் புரட்சியில், சிறு முதலாளித்துவ சீர்திருத்தங்களில் நமக்கு அக்கறை கிடையாது; அமைதிப்படுத்தப் பட்ட சிறு நில உடமையாளர்களின் எதிர்கால "கூட்டில்" நமக்கு அக்கறை கிடையாது; அதற்கு மாறாக, ஒரு முதலாளித்துவ அடிப்படையில் உள்ள எல்லா சிறு முதலாளித்துவ அமைதி நிலைக்கு எதிராக பாட்டாளி மக்களின் போராட்டத்திற்கான நிலைமைகளில் மாத்திரமே அக்கறை கொண்டிருக்கிறோம்

முதலாளித்துவ நிலஉடமைப் புரட்சியின் செயல்திட்டத்தில் பாட்டாளி மக்களுக்கு விரோதமான அம்சத்தை நகர சபை மயமாக்குவது புகுத்துகிறது. எவ்வாறெனில், மென்ஷ்விக்குகளின் ஆழமான போலி வாதம் ஒரு புறம் இருந்தாலும்கூட, நகரசபை மயமாக்குவது வர்க்கப் போராட்டத்தை விஸ்தரிக்காது, கூர்மைப் படுத்தாது; அதற்குமாருக, அதே சமயத்தில் மழுங்க வைக்கிறது, மையத்தைப் பரிபூரணமாக ஜனநாயக மயமாக்காமலே ஸ்தல ஜனநாயகம் சாத்தியமானது என்று அனுமானிப்பதன் மூலமாகவும், வர்க்கப் போராட்டத்தை மழுங்க வைக்கிறது. "நகரசபை சோஷலிஸம்" என்ற கருத்தின் மூலமாகவும் அது வர்க்கப் போராட்டத்தை மழுங்க வைக்கிறது; காரணம், முதலாளித்துவ சமுதாயத்தில் போராட்டத்தின் நெடுஞ்சாலையில் இருந்து வெளியே வெகு தொலைவில் மாத்திரமே. "நகரசபை சோஷலிஸத்தைப்பற்றி எண்ணிப்பார்க்க முடியும். தனது வர்க்க ஆட்சிக்குப் பாதகம் ஏற்படாத முறையில் முதலாளித்துவம் கூட அற்ப, முக்கியத்துவம் இல்லாத, ஸ்தல பிரச்சினைகளை விட்டுக் கொடுக்கலாம், சமரசமும் செய்து கொள்ளலாம்.

நிலத்தை முதலாளித்துவ தேச உடமை ஆக்குவது உள்பட, முதலாளித்துவப் புரட்சியின் சுத்தமான, மிகவும் முரணில்லாத, சிறிதும் விட்டுக் கொடுக்காத கொள்கைத் திட்டத்தை முதலாளித்துவ சமூகத்திற்கு தொழிலாளவர்க்கம், கொடுக்க வேண்டும். முதலாளித்துவப் புரட்சியில் குட்டி பூர்ஷ்வா சீர்திருத்த வாதத்தை பாட்டாளி மக்கள் அருவெறுப்போடு நிராகரிக்கிறார்கள்; போராட்டத்திற்கான சுதந்திரத்தில் நாங்கள் அக்கறை கொண்டிருக்கிறோமே, தவிர வெற்றுவேட்டு பேரானந்தத்திற்கான சுதந்திரத்தில் அல்ல.

இயல்பாகவே, அறிவாளிகளின் சந்தர்ப்பவாதம் தொழிலாளர் கட்சியில் வேறொரு பாதையைப் பின் பற்றுகிறது. முதலாளித்துவப் புரட்சியின் விரிவான புரட்சி கரமான கொள்கைத்திட்டத்திற்குப் பதிலாக, குட்டி பூர்ஷ்வா, உடோபியாவின் மீது கவனத்தைச் செலுத்துகிறது; மையத்தைப் பூரணமாக ஜனநாயக மயமாக்காமல் ஸ்தலத்தில் ஜனநாயகத்தைப் பெறுவதற்கும், மகத்தான "கொந்தளிப்பிற்கு வெகு தூரத்திற்கு" அப்பால் விலகிச்சென்று, ஒரு சிறிய மூலையில் நகரசபை நடவடிக்கையில் அற்ப சீர்திருத்தங்களைப் பெறுவதற்கும், ஒரு முக்கியமான தேசியப் பிரச்சினையை சிறிய, ஸ்தல பிரச்சினையின்

துறைக்கு ஒப்படைப்பதன் மூலமாக, அசாதாரணமான முறையில் கூர்மையாக, முட்டி மோதிக் கொண்டிருக்கும் நிலப் பிரச்சினையைத் தட்டிக் கழிப்பதற்கும் கவனத்தைத் திருப்பி விடுகிறது.

1907-ல் நவம்பர் டிசம்பரில் எழுதப் பட்டது.
1908-ல் முதலில் பிரசுரிக்கப்பட்டு, (பறிமுதல் செய்யப்பட்டது)

திரட்டப் பட்ட நூல்கள் - தொகுப்பு-13 பக்கம்- 358-68

''ஜீஸின் இ ழநாயே'' பிரசுராலயத்தாரால் 1917-ல் புத்தக வடிவத்தில் பிரசுரிக்கப்பட்டது.

# ஹெர்ஸனின் நினைவாக

ஹெர்ஸன் பிறந்து ஒரு நூறு ஆண்டுகள் கடந்து விட்டன. மிதவாத ரஷ்யா முழுவதும் அவருக்கு மரியாதை செலுத்துகிறது: ஆயினும் கவலையுடன் கவனிக்கப்பட வேண்டிய சோஷலிஸப் பிரச்சினைகளைக் கவனத்தோடு தவிர்க்கிறார்கள்; புரட்சியாளனை ஹெர்ஸனை ஒரு மிதவாதியிலிருந்து எது வேறுபடுத்திக் காட்டியதோ, அதை மூடி மறைக்க சிரமமெடுத்துக் கொள்கிறார்கள். வலதுசாரி பத்திரிகைளும் கூட ஹெர்ஸனின் நூறுண்டு நிறைவு நினைவு விழாவைக் கொண்டாடுகின்றன; அவருடைய காலத்தில் ஹெர்ஸன் புரட்சியை நிராகரித்தார் என்று பொய்யாக அடித்துக் கூறுகின்றன. வெளி நாட்டில் மிதவாதிகளும், நரோட்னிக்குகளும் ஹெர்ஸனைப் புகழ்ந்து சொற்பொழிவுகளை ஆற்றியதில், வீண் வார்த்தைகள் மேலோங்கியிருந்தன.

தொழிலாளி வர்க்கத்தின் கட்சி ஹெர்ஸனின் நூறுண்டு நிறைவு நினைவு விழாவைக் கொண்டாட வேண்டும்; வெற்று வெட்டு முறையில் ஏற்றிப் போற்றுவதற்காக அல்ல; அதற்கு மாறாக, அதன் சொந்த கடமைகளைத் தெளிவு படுத்தும் நோக்கத்திற்காகவும், ரஷ்யப் புரட்சிக்கான பாதையைத் தயார் செல்வதில் ஒரு மகத்தான பாத்திரத்தை வகித்த இந்த எழுத்தாளர் சரித்திரத்தில் அவர் பெற்றிருந்த உண்மையான இடத்தை ஆராய்ந்து கண்டு பிடிக்கும் நோக்கத்தோடும்தான்.

கடந்த நூற்றுண்டின் முதல், அரைப் பகுதியில் நிலப் பிரபுக்கள், நிலச்சுவான்தார்கள் ஆகியவர்களிலிருந்து வந்த புரட்சிக்காரர்களின் தலைமுறையைச் சேர்ந்தவர் ஹெர்ஸன். நிலப்பிரபுக்கள் ரஷ்யாவுக்கு பைரன்களையும் அராக்சேயெவ்களையும், கணக்கற்ற "குடிகார அதிகாரிகளையும், கூலிக்காக எளியவர்களை கொடுமைப்படுத்துகிறவர்களையும், சூதாடுகிறவர்களையும், விழாக்களின் வீரர்களையும், வேட்டை நாய்களின் எஜமானர்களையும், பெரும் கூச்சலிட்டு கூத்தாடுகிறவர்களையும், சவுக்கால் அடிப்பவர்களையும், காமந்தரகர்களையும்" அதேபோல் "இனிய இயல்புடைய மானிலோவ்களையும்[86] கொடுத்தார்கள். ஆனல், அவர்களிடையே டிசம்பர் 14-[87] யை சேர்ந்த மனிதர்களும்

உருவானுர்கள்; ஒரு காட்டு விலங்கின் பாலில் ரோமுலஸ், ரோமுஸ் ஆகியவர்களைப்போல் பேணி வளர்க்கப்பட்ட ஒரு வீரர் படையும் உருவாயிற்று......அவர்கள் அசல் ராட்ஷசர்களைப் போல் வலிமை மிக்கவர்கள். பாதத்திலிருந்து தலைவரையிலும் சுத்தமான எஃகிலிருந்து சம்மட்டியால் அடித்து உருவாக்கப் பட்டவர்கள்; சக போராட்ட வீரர்கள்; ஒரு புது வாழ்வுக்கு இளம் தலைமுறையைத் தட்டி எழுப்புவதற்காகவும், கொடுங்கோலாட்சி, அடிமைத்தனம் ஆகியவற்றின் ஒரு சுற்றுச் சார்பில் பிறந்த குழந்தைகளை தூய்மைப்படுத்துவதற்காகவும், சாவு நிச்சயம் என்பதைத் தெரிந்து கொண்டு தாமாகவே சாவை நோக்கிச் சென்முர்கள்'' என்று ஹெர்ஸன் எழுதினுர். [38]

ஹெர்ஸன் அந்தக் குழந்தைகளில் ஒருவராக இருந்தார். டிசம்பரிஸ்டுகளின் பேரெழுச்சி அவரைத் தட்டி எழுப்பி, அவரைத் "தூய்மைப்'' படுத்திற்று. பத்தொன்பதாவது நூற்றுண்டின் நாற்பதாவது வருட காலக் கட்டத்தில் நிலப்புரத்துவ ரஷ்யாவில் அவர் ஒரு உச்சிக்கு உயர்ந்தார். அது அவர் காலத்து மிகப் பெரிய சிந்தனையாளர்களின், மட்டத்தில் அவரை வைத்தது. அவர் ஹெகலின் தர்க்க இயலைக கரைத்துக் குடித்தார். அது "புரட்சியின் இயற்கணிதம்'' என்பதைப் புரிந்துகொண்டார். அவர் ஹெகலைக் காட்டிலும் ஒரு படி முன்னேறிச் சென்முர்—போயர்பாக்கைப் பின்பற்றி பொருள் முதல்வாதத்திற்குச் சென்முர். 1844-ல் அவர் முதன் முதலாக எழுதிய "இயற்கையின் ஆராய்ச்சி பற்றிக் கடிதங்கள்'' "எண்ண முதல்வாதமும் அனுபவவாதமும்'' என்ற நூல்கள், ஏராளமான நவீன அனுபவவாத இயற்கை விஞ்ஞானிகள், இன்றைய பெரும் திரளான எண்ண முதல் வாததத்துவ ஞானிகள். அரை—எண்ண முதல்வாததத்துவ ஞானிகள். ஆகியவர்களைக் காட்டிலும் இன்றுகூட மேம்பட்ட ஒரு சிந்தனையாளர் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. ஹெர்ஸன் தர்க்க இயல் பொருள் முதல்வாதம் வரையிலும் தவறுகள் செய்யாமல் நேராக வந்தார்; அதற்குப் பிறகு சரித்திர இயல் பொருள் முதல்வாதத்திற்கு வருவதற்கு முன்பு நின்றுவிட்டார்.

1848-ம் ஆண்டு புரட்சியின் தோல்விக்குப் பிறகுதான் இம்மாதிரி "நின்றது''. ஹெர்ஸனின் உற்சாகமான மனம் உடைந்து போவதற்குக் காரணமாக இருந்தது. ஹெர்ஸன் ரஷ்யாவை விட்டுச் சென்று விட்டார்; இந்தப் புரட்சியை மிக அருகாமையில் இருந்து கூர்ந்து கவனித்தார். அச்சமயத்தில் அவர் ஒரு ஜனநாயக வாதியாகவும், ஒரு புரட்சிக்காரராகவும், ஒரு சோஷலிஸ்டாகவும் இருந்தார். ஆனல், அவரது சோஷலிஸமோ 1848-ம் வருட கால கட்டத்தில் முதலாளித்துவ, குட்டி பூர்ஷ்வா சோஷ

லிஸம் எண்ணற்ற வடிவங்களிலும், ரகங்களிலும் இருந்ததில் அதுவும் ஒன்ருக இருந்தது. அந்த ஆண்டில் ஜூன் நாட்களில் அவைகளுக்கு சாவு மணி அடிக்கப்பட்டது. மெய்யாகவே, அது எந்த வகையிலும் சோஷலிஸமே அல்ல; அதற்கு மாருக அவை உணர்ச்சிவசப்பட்ட சொற்ருெடர்களாகவும், இரக்க மனப் பான்மை கொண்ட கனவுக் காட்சிகளாகவும், இருந்தன; அச் சமயத்தில் முதலாளித்துவ ஜனநாயக வாதிகளின் புரட்சிகரமான தன்மையைத் தெரிவிக்கும் சொற்ருெடர்களாக இருந்தன. அதே போல், அந்த ஜனநாயக வாதிகளின் செல்வாக்கிலிருந்து இன்னும் தன்னை விடுதலை செய்து கொள்ளாமலிருக்கும் பாட்டாளி மக்களின் தன்மையைத் தெரிவிப்பதாகவும் இருந்தது.

1848-ம் வருடத்திற்குப் பிறகு ஹெர்ஸனின் உற்சாகமான மனம் உடைந்து போனதும், கொள்கையில் ஆழமாகச் சந்தேக மும், நம்பிக்கையின்மையும் அவருக்கு ஏற்பட்டதும் சோஷலிஸம் பற்றிய முதலாளித்துவத்தின் மாயத்தோற்றங்கள் சுக்குநூருக உடைந்து போவதற்கும் காரணமாக இருந்தன. முதலாளித்துவ ஜனநாயக வாதிகளின் புரட்சிகரமான தன்மை ஏற்கெனவே செத்து மடிந்து போய்க்கொண்டிருக்கும் தருணத்தில் (ஐரோப் பாவில்) சோஷலிஸ்டு பாட்டாளி மக்களின் புரட்சிகரமான தன்மை, பக்குவத்தை இன்னும் அடையாத நிலையில் இருக்கும் தருணத்தில் ஹெர்ஸனின் ஆன்மீக நாடகம் உலக சரித்திரத்தில் அந்த சகாப்தத்தின் பிரதிபலிப்பாகவும், ஒரு பலனுகவும் இருந் தது. கொள்கையில் ஹெர்ஸனுக்கு ஏற்பட்டிருந்த சந்தேக மனப் பான்மையைப் பற்றி வார்த்தைகளை வாரி வீசுவதன் மூலமாக, தங்களுடைய எதிர்ப்புரட்சித் தன்மையை இப்பொழுது மூடி மறைக்கும் ரஷ்ய மிதவாத வாய்ச்சொல் பிரபுக்கள் இதைப் புரிந்துகொள்ள முடியாது, புரிந்துகொள்ளவும் மாட்டார்கள். 1905-ம் வருடத்திய புரட்சிக்குத் துரோகம் செய்த, புரட்சிகரமான என்ற பெயரை நினைப்பதைக் கூட மறந்துபோன இந்தப் பிரபுக்கள் சம்பந்தப்பட்ட வரையிலும், இவ்வாறு கொள்கையில் சந்தேகம் ஏற்பட்டிருப்பதானது ஜனநாயகத்திலிருந்து மித வாதத்திற்கு—அதாவது அடிமைபோல் நடக்கிறது, இழிவான அருவெறுப்பான, மிருகத்தனமான மிதவாதத்திற்கு, '1848-ல் தொழிலாளர்களை சுட்டுவீழ்த்திய மிதவாதத்திற்கு, சின்னபின்ன மாகச் சிதறுண்டுபோன சிம்மாசனங்களைத் திரும்பவும், அதிகாரத் தில் வைத்து, மூன்ருவது நெப்போலியனைப் பாராட்டிய மிதவா தத்திற்கு, வர்க்கத்தன்மையைப் புரிந்துகொள்ள முடியாமல், ஹெர்ஸன் சாபமிட்ட மிதவாதத்திற்கு; மாறிச்செல்லும் ஒரு வடிவமாக இருக்கிறது.

ஹெர்ஸன் சம்பந்தப்பட்ட வரையிலும் கொள்கையில் சந்தேக மானது, ''வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட'' ஒரு முதலாளித்துவ ஜன நாயகத்தின் மாயமயக்கத்திலிருந்து, பாட்டாளி மக்களின் பயங்கர மான, பிடிவாதமான, வெல்ல முடியாத வர்க்கப்போராட்டத்திற்கு மாறிச் செல்லும் ஒரு வடிவமாக இருந்தது. அதற்கு ஆதாரம் அவர் இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு, 1869-ல் பக்குனினுக்கு ஹெர்ஸன் எழுதிய ''ஒரு பழைய தோழருக்குக் கடிதங்களில்'' ஹெர்ஸன் அராஜகவாதியான பகுனினோடு தொடர்பை அறுத்துக் கொள்கிறார். உண்மைதான். ஹெர்ஸன் இந்தத் தொடர்பு அறுத்தலை செயல் திட்டத்தில் ஒரு வெறும் கருத்து மாறுபாடாக இன்னும் பார்க்கிறாரே தவிர, தனது வர்க்கத்தின் வெற்றியில் நம்பிக்கை வைத்திருக்கிற பாட்டாளி மக்களின் உலகப் பார்வைக் கும், அவர்களுடைய விமோசனத்தை நிராசையாக்கிய, சிறு முதலாளித்துவத்தின் உலகப் பார்வைக்கும் இடையே உள்ள ஒரு பிளவாக இதைப் பார்க்கவில்லை. போதுமான அளவு உண்மைதான். அதேபோல் இந்தக் கடிதங்களிலும் ஹெர்ஸன் பழைய முதலாளித் துவ ஜனநாயகச் சொற்றொடர்களைத் திருப்பிக் கூறுகிறார்; அதாவது, சோஷலிஸம் ''தொழிலாளிக்கும், எஜமானனுக்கும் விவ சாயிக்கும், நகரத்திலுள்ளவனுக்கும் சமமாக போதனை செய்ய வேண்டும்'' என்று கூறுகிறார். ஆயினும், பக்குனினோடு தொடர்பை அறுத்துக்கொண்டதால், ஹெர்ஸன் தனது கவனமான பார் வையை மிதவாதத்தின் மீது செலுத்தாமல் அகிலத்தின் மீது மார்க்ஸ் தலைமை தாங்கும் அகிலத்தின் மீது, பாட்டாளி மக்களின் ''படைகளை ஒன்றுதிரட்ட''த் துவங்கியிருக்கிற, ''உழைக்காமல் அனைத் தையும், அனுபவிக்கிறவர்களின் உலகத்தை உதறித்தள்ளிக் கொண்டிருக்கும்'', ''உழைப்பாளிகளின் உலகத்தை'' ஒன்றுதிரட்டிக் கொண்டிருக்கிற அகிலத்தின் மீது பார்வையைச் செலுத்தினார்.[39]

1848-ம் வருடத்திய முழு இயக்கத்தின் முதலாளித்துவ ஜன நாயகத் தன்மையை அவர் புரிந்துகொள்ளத் தவறியதால், மார்க் ஸிய சோஷலிஸத்திற்கு முந்திய எல்லா சோஷலிஸ்டு வடிவங் களையும் அவர் புரிந்துகொள்ளத் தவறியதால், ஹெர்ஸன் ரஷ்யப் புரட்சியின் முதலாளித்துவத் தன்மையை இன்னும் குறைவாகத் தான் புரிந்துகொள்ள முடிந்தது. ரஷ்ய ''சோஷலிஸத்தை'' ''நரோடிஸத்தை'' முதலில் துவக்கியவர் ஹெர்ஸன். விவசாயிகள் நிலத்தோடு விடுதலை பெறுவதில் சமுதாய நிலச்சொத்துரிமையில், ''நிலத்தில் உரிமை வேண்டும்'' என்ற விவசாயிகளின் கருத்தில் அவர் சோஷலிஸத்தைப் பார்த்தார். இந்தப் பிரச்சினை சம்பந்த மாக தமக்குப் பிரியமான கருத்தை கணக்கற்ற தடவைகளில் விவரித்தார்.

ஹெர்ஸனின் இந்தச் சித்தாந்தத்திலும், அதேபோல் நிச்சய மாக ரஷ்ய நரோடிஸம் முழுவதிலும், இன்றைய சோஷலிஸ்டுப் புரட்சிக்காரர்களின் சாயம் வெளுத்த நரோடிஸம் உள்பட இவை எதிலும் சோஷலிஸம் உண்மையில் ஒரு குண்டுமணி அளவுகூட கிடையாது. மேற்கில், பல்வேறு வடிவங்களில் இருந்த "1848-ம் வருடத்தில் சோஷலிஸம்" போல், இதுவும் அதே வகையைச் சேர்ந்த உணர்ச்சி வசப்பட்ட சொற்றொடர்களாகவும், இரக்க மனப் பான்மை கொண்ட கனவுக் காட்சிகளாகவும் இருக்கின்றன. ரஷ்யா வில், முதலாளித்துவ விவசாய ஜனநாயகத்தின் புரட்சிவாதம் இதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 1861-ல் விவசாயிகள் மேலும் அதிக மாக நிலத்தைப் பெற்றிருந்தால், அதற்கு இன்னும் குறைவாக விவசாயிகள் பணம் கொடுத்திருந்தால், நிலப்பிரபுத்துவ நிலச் சுவான்தார்களின் அதிகாரம் மேலும் குறைக்கப்பட்டிருக்கும். ரஷ்யாவில் முதலாளித்துவம் மேலும் வேகமாகவும், சுதந்திரமாக வும், விரிவாகவும், வளர்ச்சியடைந்திருக்கும். "நிலத்தில் உரிமை வேண்டும்". "நிலத்தைச் சரிசமமாகப் பங்கிட வேண்டும்" என்ற கருத்தானது, நிலச்சுவான்தார முறையைப் பூரணமாக ஒழிப்பதற் காகவும், நிலச்சுவான்தார்களின் அதிகாரத்தைப் பூரணமாக வீழ்த் துவதற்காகவும் போராடிக் கொண்டிருக்கும் விவசாயிகள், சரிசமத் துவத்திற்காகப் போற்றி வளர்த்த புரட்சிகரமான அபிலாஷைகளை முறைப்படுத்திக் கூறுவதைத் தவிர வேறு ஏதும் அல்ல.

1905-ம் வருடத்திய புரட்சியால் இது முழுமையாக நிரூபிக்கப் பட்டது. ஒருபுறத்தில், சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியை அமைத்திருந்ததால், புரட்சிகரமான போராட்டத்தின் தலைவனாக பாட்டாளி மக்கள் சுயேச்சையாகத் தோற்றமளித்தார்கள். மறு புறத்தில், நிலச்சுவான்தாரி முறையின் எல்லா வடிவத்தையும் ஒழிப்பதற்காக, "ஏன் நிலத்தைத் தனிச் சொத்தாக வைத்திருப் பதையும் கூட ஒழிப்பதற்காக"ப் போராடிய புரட்சிகரமான விவசாயிகள் (டுரோ டோவிக்குகளும்40, விவசாயிகள் சங்கமும் 41) தெளிவாக உரிமையாளர்கள் இத்தகையாளர்கள் என்ற நிலையிலும் போராடினார்கள்.

இன்று, நிலத்தில் உரிமை போன்றவைகளில் "சோஷலிஸ்டுத் தன்மை" இருக்கிறதா, இல்லையா என்ற வாதப் பிரதிவாதமானது, ரஷ்ய முதலாளித்துவப் புரட்சியில் மிதவாத முதலாளிகள், புரட்சி கரமான விவசாயிகள் ஆகியவர்களின் நல உரிமைகளின் வித்தியா சங்கள் சம்பந்தப்பட்ட உண்மையான, முக்கியமான பிரச்சினையை மூடிமறைப்பதற்கும், மங்கவைப்பதற்கும் மாத்திரம்தான் பயன் படும். வேறு வகையில் கூறுவது என்றால், மிதவாத, ஜனநாயக பிரச்சினையில், "சமரசம் செய்து கொள்ளும்" (முடியாட்சி)

கருத்துப் போக்கும், குடியரசு கருத்துப் போக்கும் அந்தப் புரட்சியில் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டன. இந்த விஷயத்தின் சாராம்சத்தின்பால் நாம் நமது கவனத்தைத் திருப்பினால், அதற்கு மாறாக வார்த்தைகளின்பால் அல்லாமலும், "தத்துவங்கள்" "கோட்பாடுகள்" ஆகியவைகள் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படை என்ற நிலையிலும். அதற்கு மாறாக அல்லாமலும் நாம் இதை ஆராய்ந்து பரிசீலனை செய்தால் "கோலோகோல்"[42] (1857-67) என்ற பத்திரிகையில் ஹெர்ஸன் முன் வைத்திருக்கிறாரே, அதுதான் இந்தப் பிரச்சினை.

வெளிநாட்டில் ஒரு சுதந்திரமான பத்திரிகையை ஹெர்ஸன் துவங்கினார்; அது, அவர் ஆற்றிய மிகப் பெரிய சேவையாகும். டிசம்பரிஸ்டுகளின் பரம்பரையை "போல்யார்நயாஸ்வெஸ்தா"[43] தொடர்ந்தது. முழு ஆற்றலோடும் "கோலோகோல்" விவசாயிகளின் விடுதலையை ஆதரித்துப் போராடியது. அடிமைத்தனமான மௌனம் உடைந்தது.

ஆனால், ஹெர்ஸன் ஒரு நிலச்சுவான்தார். நிலப்பிரபுத்துவ சமுதாயச் சூழ்நிலையிலிருந்து வந்தவர். 1847-ல் அவர் ரஷ்யாவை விட்டு வெளி நாட்டிற்குச் சென்றார்; புரட்சிகரமான மக்களை அவர் பார்க்கவில்லை; எனவே அதில் அவர் நம்பிக்கை வைத்திருக்க முடியாது. இதனால்தான், "மேல் தட்டில்" உள்ளவர்களுக்கு அவர் மிதவாத வேண்டுகோள் விடுகிறார். அதனால்தான் தூக்கில் போட்டுக் கொலை செய்கிறவனை இரண்டாவது அலெக்சாண்டருக்கு முகவரியிட்டு "கோலோகோலி"ல் ஏராளமான இனிய கடிதங்களை எழுதினார்; இந்தக் கடிதங்களை இன்று ஒருவன் திடீர் மனமாற்றம் இல்லாமல் படிக்கவே முடியாது. புரட்சிகரமான "ரேஸ்னோசின்ட்ஸி"யின் புதிய தலைமுறையைப் பிரதிநிதித்துவப் படுத்தும் செர்னி ஷெவ்ஸ்கி, தோப்ரோ லியூபாவ், ஸெர்னோ—ஸோலோவியேவிச் ஆகியவர்கள் ஜனநாயகத்திலிருந்து, மிதவாதத்திற்கு ஹெர்ஸன் மாறிச் சென்றதைக் கண்டித்தது ஆயிரம் மடங்கு சரியானதே. ஆயினும், ஹெர்ஸன்பால் நேர்மையாக நடந்து கொள்வது என்றால், ஜனநாயகத்திற்கும், மிதவாதத்திற்கும் இடையே அவர் பெரும் அளவுக்கு ஊசலாடினாலும்கூட, அவரிடம் ஜனநாயகத் தன்மைதான் மேலோங்கி இருந்தது என்பதைச் சொல்லத்தான் வேண்டும்.

மிதவாத அடிமைத் தனத்தை மிகவும் வெறுப்பூட்டக் கூடிய விரிவுரையாற்றுகிறவர்களில் ஒருவரும், மிதவாதக் கருத்துக்களை வெளியிட்ட காரணத்தால் "கோலோகோலை" ஆர்வத்துடன் ஆதரித்தவருமான காவெலின், ஒரு அரசியல் அமைப்பிற்கு

எதிராக கிளர்ந்தெழுந்தபோது, புரட்சிகரமான கிளர்ச்சியைத் தாக்கினர்; "வன் முறைக்கு" எதிராகக் கிளர்ந்தெழுந்து, அதற்காக வேண்டுகோள் விட்டு, சகிப்புத் தன்மையைப் போதிக்கிறார்; ஹெர்ஸன் இந்த மிதவாத முனிவரோடு தொடர்பை அறுத்துக் கொண்டார். "மிதவாதி என்று பாசாங்கு செய்யும் ஒரு சர்க்காரின் தனிப்பட்ட வழிகாட்டியாக" எழுதப்பட்ட "கவெலினுடைய" வலுவற்ற, முட்டாள் தனமான, பாதகம் விளைவிக்கக்கூடிய "துண்டுப் பிரசுரத்தை" ஹெர்ஸன் தாக்கினர். காவெலினினுடைய "உணர்ச்சி வசப்பட்ட அரசியல் நீதி மொழிகளை" ஹெர்ஸன் நிராகரித்தார்; இது "ரஷ்ய மக்களை காட்டு மிருகங்கள் என்றும், சர்க்காரை புத்திசாலித்தனத்தின் கருத்துருவம் என்றும்" வர்ணித்தது. "கல்லறை வாசகம்" என்ற தலைப்பில் "கோலோகோல்" ஒரு கட்டுரையைப் பிரசுரித்தது; "பேராசிரியர்கள்; அவர்களுடைய கர்வமுள்ள புறக்கணிக்கக்கூடிய கருத்து, என்ற சிலந்திக் கூட்டின் அறுந்து போகக் கூடிய மெல்லிய நூலாம் படையை நெய்து கொண்டிருக்கிறார்கள்; முன்னாள் பேராசிரியர்கள் ஒரு காலத்தில் திறந்த மனதோடு இருந்தார்கள்; பிறகு கோபமடைந்திருக்கிறார்கள்; காரணம், ஆரோக்கியமான வாலிபர்கள் அவர்களுடைய கண்யமான சிந்தனைக்கு ஆதரவு கொடுக்காததைக் கண்டார்கள் என்று அந்தக் கட்டுரை சாட்டை அடி கொடுத்தது. இந்தச் சொல்லோவியத்தில் காவெலின் தன்னைத் தானே கண்டு கொண்டார்.

செர்னிஷெவ்ஸ்கி கைது செய்யப்பட்டபோது, மட்டரகமான காவெலின் பின்வருமாறு எழுதினன்: "கைது செய்திருப்பதில், அதிர்ச்சியடையக் கூடிய எதையும் நான் பார்க்கவில்லை...... சர்க்காரைக் கவிழ்ப்பதற்கு எல்லா வழிவகைகளும் நேர்மையானதே என்று புரட்சிகரமான கட்சி கருதுகிறது; தனது சொந்த வழிவகைகளால் சர்க்காரோ, தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறது." செர்னிஷெவ்ஸ்கியின் விசாரணை சம்பந்தமாக, இந்தக் காடேட்டுக்கு பதிலடி கொடுப்பதுபோல் ஹெர்ஸன் பின்வருமாறு எழுதினர்: "இதோ இருக்கிறார்கள், இழிவானவர்கள், களை போல் உபயோகமற்ற மனிதர்கள், இழுது மீன்கள்; இவர்கள், நம்மை ஆட்சி புரியும் திருடர்களும், கயவர்களும் சேர்ந்த கும்பலை நாம் கண்டிக்கக் கூடாது என்று கூறுகிறார்கள்."

மிதவாத துர்கெனேவ் தனிப்பட்ட முறையில் இரண்டாவது அலெக்சாண்டருக்கு ஒரு கடிதம் எழுதி அவருடைய விசுவாசத்திற்கு உறுதி கூறி போலந்தில் நடைபெற்ற புரட்சிக் கலகத்தை அடக்கியபோது காயம் அடைந்த சிப்பாய்களுக்காக இரண்டு தங்கத்துண்டுகளை நன்கொடையாக கொடுத்தபோது

"கோலோகோல்" "நரைத்த மயிர்கொண்ட மக்தலேன் (ஆண் பாலைச் சேர்ந்த) தான் உறக்கத்தையே அறியாது போய்விட்டதாகவும், தன்னிடம் ஏற்பட்டுள்ள பிராயசித்த மாற்றம் பற்றி ஜாருக்குத் தெரியாதிருக்கிறதே என்ற சிந்தனை தன்னை சித்திரவதை செய்வதே இதற்குக் காரணம் என்று ஜாருக்கு எழுதினார்," என்று எழுதிற்று. துர்கனேவ் உடனே இது தன்னைத்தான் என்பதைப் புரிந்துகொண்டார்.

போலந்தை ஆதரித்ததற்காக, ரஷ்ய மிதவாதிகள் கூட்டம் அனைத்தும் ஹெர்ஸனை விட்டு விலகி அவசரமாக ஓடியபோது "படித்த சமுதாயம் முழுவதும்" "கோலோகோலை" கைவிட்டபோது, ஹெர்ஸன் பயமும், திகைப்பும் அடையவில்லை. அவர் தொடர்ந்து போலந்தின் சுதந்திரத்திற்கு ஆதரவு கொடுத்தார்; இரண்டாவது அலெக்சாண்டருக்கு கைக் கூலிகளாக இருப்பவர்களையும் அடக்கி ஒடுக்குகிறவர்களையும், கொலைகாரர்களையும், தூக்கில் போட்டு கொலை செய்கிறவர்களையும் சவுக்கால் அடித்தார். ரஷ்யாவின் கௌரவத்தை ஹெர்ஸன் பாதுகாத்தார். "நாங்கள் ரஷ்யாவின் பெயரின் கௌரவத்தைப் பாதுகாத்திருக்கிறோம்; அவ்வாறு செய்ததற்காக, அடிமைத்தனமான பெரும்பாலோரால், பாதிக்கப்பட்டிருக்கிறோம்" என்று துர்கெனேவுக்கு அவர் எழுதினார்.

ஒரு பண்ணை அடிமையின் திருமண உறுதி செய்யப்பட்ட பெண்ணின் மானத்திற்குப் பங்கம் விளைவிக்க முயன்ற ஒரு நிலச்சுவான்தாரை ஒரு விவசாய பண்ணை அடிமை கொன்று விட்டான் என்ற செய்தியைக் கேட்டவுடன், ஹெர்ஸன் "கோலோகோல்" "பத்திரிகையில் "நல்ல காரியம் செய்தாய்!" என்று அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். "விடுதலையின் அமைதியான" முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காக, ராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்ற செய்தியைக் கேட்டவுடன், "விவசாயிகளை நசுக்குவதற்குப் பதிலாக, தன்னுடை படைப்பிரிவோடு விவசாயிகள் பக்கம் சேரும் முதலாவது புத்திசாலியான தளபதி, ரோமனோவின் அரியாசனத்தில் அமர்வார்" என்று ஹெர்ஸன் எழுதினார். ரெய்டர்ன் என்ற தளபதி, தூக்கில் போட்டு கொலை செய்யும் கொலைகாரர்களுக்கு தாம் உதவியாளராக இருக்க விரும்பாததால் வார்ஸாவில் (1860) தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு இறந்த செய்தியைக் கேட்டவுடன் ஹெர்ஸன் "யாரையாவது சுடவேண்டியிருந்தால். நிராயுதபாணிகளான விவசாயிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படி உத்தரவிடுகிற தளபதிகளைத் தான் சுடவேண்டும்" என்று எழுதினார். பெஸ்டினோவில் ஐம்பது விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டபோது, அவர்களுடைய

தலைவர் அன்டன் பெத்ரோவ் தூக்கிலிடப்பட்ட போது (1861-ஏப்ரல் 12) "கோலோகோலி"ல் ஹெர்ஸன் பின்வருமாறு எழுதினார்.

"ரஷ்யாவின் பூமியில் உழைக்கிறவர்களே, கஷ்டப்படுகிறவர்களே, என்னுடைய வார்த்தைகள் மாத்திரம் உங்களுக்கு எட்டுமேயானால்!...... ஒரு ஜெர்மானிய ஜாராலும், ஸைன்ட்பீட்டர்ஸ்பர்க் சமயகுருமார்களின் குழுவாலும் உங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் ஆன்மீக ஆட்டிடையர்களை வெறுக்கும்படி எவ்வளவு நன்றாக உங்களுக்கு நான் கற்றுக் கொடுப்பேன்......நிலச்சுவான்தார்களை நீங்கள் வெறுக்கிறீர்கள், அதிகாரியை நீங்கள் வெறுக்கிறீர்கள், அவர்களைக் கண்டு நீங்கள் அஞ்சுகிறீர்கள், அது சரியானதுதான்; ஆனால், நீங்கள் இன்னும் ஜாரையும், பிஷப்பையும் நம்புகிறீர்கள் ....அவர்களை நம்பாதீர்கள். ஜார் அவர்களோடு இருக்கிறார்; அவர்கள் அவருடைய ஆட்கள்தான் அவரைத்தான் இப்பொழுது நீங்கள் பார்க்கிறீர்கள்—பெஸ்டினாவில் கொலை செய்யப்பட்ட வாலிபனின் தகப்பனாகிய, நீர்; பென்ஸாவில் கொலை செய்யப்பட்ட ஒரு தகப்பனின் மகனாகிய நீர்...உங்களுடைய ஆட்டிடையர்கள் உங்களைப்போல் அறியாமையில் இருக்கிறார்கள். உங்களைப்போல் ஏழைகளாக இருக்கிறார்கள்......இப்படித்தான் மற்றொரு அந்தோனி (பிஷப்கள் தோனி அல்ல, பெஸ்டினாவின் ஆன்டன்) இவர் காஜானில் உங்களுக்காகக் கஷ்டப்பட்டார்......உங்களுடைய தியாகிகளின் பிணங்கள் நாற்பத்தெட்டு அதிசயங்களைச் செய்து காட்ட முடியாது; அவர்களுக்காக பிரார்த்தனை செய்வதால், பல் வலியைக் கூட குணப்படுத்தாது; ஆனால் அவர்களுடைய உயிருள்ள நினைவு ஒரு அதிசயத்தை உண்டுபண்ணலாம்—உங்களுடைய விடுதலையை"

இது அடிமைப் புத்தியுள்ள "சட்டபூர்வமான" பத்திரிகையில் அகழி தோண்டி உட்கார்ந்திருக்கும் நமது மிதவாதிகளால் எவ்வாறு அருவருக்கத்தக்க முறையிலும், இழிவாகவும் ஹெர்ஸன் அவதூறு செய்யப்படுகிறார் என்பதையும், இவர்கள் ஹெர்ஸனின் பலஹீனமான விஷயங்களை எவ்வாறு மிகைப்படுத்துகிறார்கள். எவ்வாறு வலுவான விஷயங்களைப் பற்றி ஒன்றுமே கூறுவதில்லை என்பதையும் எடுத்துக்காட்டுகிறது. 1840-ம் வருட காலத்தில் ரஷ்யாவிலேயே புரட்சிகரமான மக்களை ஹெர்ஸன் பார்க்க முடியாதது, அவரது குற்றமல்ல. ஆனால் அவருடைய துரதிர்ஷ்டம். தான். அவர் அறுபதாம் ஆண்டுகாலத்தில் புரட்சிகரமான மக்களைக்

காண வந்தபோது, மிதவாதத்திற்கு எதிராக, பயமின்றி புரட்சிகர மான மக்கள் பக்கம் சேர்ந்துகொண்டார். ஜாரிசத்தின் மீது மக்கள் வெற்றி கொள்வதற்காக அவர் போராடினர்; மிதவாத முதலாளித்துவத்திற்கும், நிலச்சுவான்தார்களின் ஜாருக்கும் இடையே விட்டுக்கொடுத்து சமரசம் செய்வதற்காக அல்ல, புரட்சி யின் கொடியை அவர் வானளாவத் தூக்கிப் பிடித்தார்.

ஹெர்ஸனின் நினைவு விழாவை நாம் கொண்டாடும்போது, ரஷ்யப் புரட்சியில் தீவிரமாகச் செயல்பட்ட மூன்று தலைமுறை களையும். மூன்று வர்க்கங்களையும் நாம் தெளிவாகப் பார்க்கிறோம். முதலில் பிரபுக்கள், நிலச்சுவன்தார்கள், டிசம்பரிஸ்டுகள், ஹெர் ஸன் ஆகியவர்களாக இருந்தார்கள். இந்தப் புரட்சிக்காரர்கள் ஒரு குறுகிய குழுவைத்தான் அமைத்தார்கள். அவர்கள் மக்களிட மிருந்து நெடுந்தூரம் விலக்கப் பட்டிருந்தார்கள். ஆனால், அவர் களுடைய முயற்சி வீணாகவில்லை, டிசம்பரிஸ்டுகள் ஹெர்ஸனைத் தட்டி எழுப்பினார்கள். ஹெர்ஸன் புரட்சிகரமான கிளர்ச்சி வேலையைத் துவங்கினார்.

இந்தப் பணி, புரட்சிகரமான ''ராஸ்னோசின்ட்ஸி''யால்— செர்னிஷெவ்ஸ்கியிலிருந்து, நரோட்னயாவால்யாவின் வீரர்கள் வரையிலும்—எடுத்துக் கொள்ளப்பட்டது, விஸ்தரிக்கப்பட்டது, பலப்படுத்தப்பட்டது, பக்குவப் படுத்தப்பட்டது. போராட்டக் காரர்களின் வீச்சு எல்லையும் விரிவடைந்தது; மக்களோடு அவர்கள் தொடர்பும் மேலும் நெருக்கமாயிற்று. ''குவிந்து கொண்டிருக்கும் புயலின் இளம் கப்பலோட்டிகள்'' என்று ஹெர்ஸன் அவர்களை அழைத்தார். ஆனால், இன்னும் அது தானா கவே புயலாகவில்லை.

தாமாகவே மக்கள் நடத்தும் இயக்கம்தான் புயல். முற்றிலும் புரட்சிகரமாக இருக்கும் ஒரே ஒரு வர்க்கமான பாட்டாளி வர்க்கம் மக்களுக்குத் தலைமை பூண்டு கிளர்ந்தெழுந்தனர்; இவ் வாறு, முதல் தடவையாக, லட்சோப லட்சம் விவசாயிகளை பகிரங்க மான புரட்சிகரமான போராட்டத்திற்குத் தட்டி எழுப்பினார்கள். இந்தப் புயலின் முதல் தாக்குதல் 1905-ல் நடைபெற்றது. நமது கண்ணுக்கு முன்னால், அடுத்தது வளரத் துவங்கியிருக்கிறது.

ஹெர்ஸன் நினைவு விழாவைக் கொண்டாடும்போது, பாட் டாளி மக்கள் புரட்சிகரமான தத்துவத்தின் மகத்தான முக்கியத் துவத்தைச் சரியாக உணர்ந்து கொள்வதற்கு அவருடைய உதா ரணத்திலிருந்து கற்றுக் கொள்கிறது. புரட்சிக்கும், மக்களிடையே புரட்சிகரமான பிரச்சாரத்திற்கும் தன்னலமற்ற முறையில் அர்ப்

பணித்துச் சொன்வது வீண் போகாது. விதைப்பதிலிருந்து அறுவடை காலம் நீண்டதாக இருந்தாலும் கூட—என்பதை பாட்டாளி மக்கள் கற்றுக்கொண்டு வருகிறார்கள்.

ரஷ்யப் புரட்சியிலும், சர்வதேசப் புரட்சியிலும், பல்வேறு வர்க்கங்களின் பாத்திரத்தைக் கண்டுபிடிக்க பாட்டாளி மக்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் படிப்பினைகளால் செழுமைப் படுத்தப்பட்டு, மக்கள் திரளிடம் தமது சுதந்திரமான ரஷ்ய வார்த்தையைப் பேசி, போராட்டத்தின் மகத்தான கொடியை முதன் முதலில் ஹெர்ஸன் யாருக்கு எதிராக உயர்த்தினாரோ அந்த ஜாரின் முடியாட்சியை, அந்த அருவறுக்கத் தக்க அரக்கனை நசுக்கிய பிறகு பாட்டாளி மக்கள், எல்லா நாடுகளிலும் உள்ள சோஷலிஸ்டு தொழிலாளர்களோடு சுதந்திரமாகக் கூட்டணி சேர முயன்று முன்னேறுவார்கள்.

சோஷியல்
டெமோகிராட்''
எண்—26.
1912—மே மாதம் 8
(ஏப்ரல்—25).

திரட்டப்பட்ட
நூல்கள், எண்
18.
பக்கம் 25—31

# சீனாவில் ஜனநாயகமும், நரோடிஸமும்

"லெ பீப்பில்" என்ற பிரஸ்ஸல்ஸ் சோஷலிஸ்டுப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டிருக்கும் சீனக் குடியரசின் தற்காலிக ஜனாதிபதியான சன் யாட் சென்னின் கட்டுரை, ரஷ்யர்களாகிய நமக்கு அசாதாரணமான அக்கறையை உண்டாக்கக் கூடியதாக இருக்கிறது.

விளையாட்டின் பெரும் பகுதியை பார்வையாளர்தான் பார்க்கிறார் என்று சொல்லப் பட்டிருக்கிறது. சன்யாட்சென்னோ. பெரிதும் அக்கறையை உண்டாக்கக்கூடிய "ஒரு பார்வையாளராக" இருக்கிறார்; எவ்வாறெனில் அவர் ஐரோப்பிய கல்வியைப் பெற்றிருக்கிறார் என்றாலும்கூட, ரஷ்யாவைப்பற்றி கொஞ்சம்கூடத் தெரியாதவர் போல் அவர் தோன்றுகிறார். அதே சமயத்தில் ரஷ்யா, ரஷ்யாவின் அனுபவம், ரஷ்யாவின் இலக்கியம் ஆகியவற்றின் ஆதாரம் கொஞ்சம்கூட இல்லாமல், சுயேச்சையாகவே ஒரு குடியரசை வென்றிருக்கும் போர்க்குணம் படைத்த, வாகை மாலே சூடிய சீன ஜனநாயகத்தின் அறிவு ஒளி படைத்த பிரதிநிதி சுத்தமாக ரஷ்யப பிரச்சினைகளைப் பற்றி விளக்குகிறார். ஒரு முற்போக்கு சீன ஜனநாயகவாதி, ஒரு அசல் ரஷ்யனைப் போல் வாதாடுகிறார். ஒரு ரஷ்ய நரோட்னிக்கிற்கு அவர் பெரும் அளவில் ஒத்திருப்பதால், பல தனிப்பட்ட மனப்போக்கைத் தெரிவிக்கும் தொடர்மொழிகளும், அடிப்படையானக் கருத்துக்களும் பூரணமாக ஒரே மாதிரியாகவே இருக்கின்றன.

விளையாட்டின் பெரும் பகுதியை பார்வையாளர்தான் பார்க்கிறார். மகத்தான சீன ஜனநாயகத்தின் நோக்கங்கள் — சன் யாட் சென்னின் கட்டுரை அதைத்தான் பிரதிநிதித்துவப் படுத்துகிறது — ஆசியாவில் நவீன முதலாளித்துவப் புரட்சிகளில் ஜனநாயகத்திற்கும், நரோடிஸத்திற்கும் இடையே உள்ள உறவை அண்மையில் நடைபெற்ற உலக நிகழ்ச்சிகளின் வெளிச்சத்தில் புதிதாகப் பரிசீலனை செய்ய ஒரு அனுகூலமான வாய்ப்பைக் கொடுப்பதோடு, நம்மையும் அவ்வாறு செய்யத் தூண்டுகிறது. 1905-ல் ஆரம்ப

மாகியிருக்கும் புரட்சிகரமான சகாப்தத்தில் ரஷ்யா எதிர் நோக்கும் மிக முக்கியமான பிரச்சினைகளில் இதுவும் ஒன்றாகும்; இது ரஷ்யாவை மாத்திரமல்ல, ஆசியா முழுவதையும் எதிர் நோக்கு கிறது என்பதை சீன குடியரசின் தற்காலிக ஜனாதிபதியின் நோக்கங் களிலிருந்தும், குறிப்பாக ரஷ்யா, துருக்கி, பாரசீகம், சீனா ஆகிய நாடுகளில் புரட்சிகரமான வளர்ச்சியோடு இந்த நோக்கங்களை ஒப்பிடுவதிலும் பார்க்கலாம்.[45] உண்மையான பல அம்சங்களில் சாராம்சத்தில் சந்தேகத்திற்கு இடமின்றி ரஷ்யா ஒரு ஆசிய நாடாகவே திகழ்கிறது; முக்கியமாக, மிகவும் இருளடைந்த, பத்தாம்பசலி, வெட்கப்படத்தக்க பின் தங்கிய ஆசிய நாடுகளில் ஒன்றாக இருக்கிறது.

ரஷ்ய முதலாளித்துவ ஜனநாயகத்திற்கு, அதன் நெடுந்தூரத் தன்னந்தனிமையான உயர் குடிமகனை ஹெர்ஸன் முன்னோடியி லிருந்து துவங்கி 1905-ல் விவசாயிகள் சங்க உறுப்பினர்கள் என்ற பொது ஜனபிரதிநிதிகள் வரையிலும் 1906 - 12 - ல்[46] முதல் மூன்று டூமாக்களின் டுரோடோவிக் பிரதிநிதிகள் வரையிலும் நெடுக நரோட்னிக் சாயம் இருந்தது. சீனாவில் முதலாளித்துவ ஜனநாயகத்திற்கு — நாம் இப்பொழுது பார்பதுபோல் — அதே மாதிரியான நரோட்னிக் சாயம் இருக்கிறது. சன் யாட் சென்னை ஒரு உதாரணமாக வைத்துக் கொண்டு, உலக முதலாளித்துவ நாகரீகத்தின் நீரோட்டையில் இறுதியில் ஈர்க்கப்பட்டிருக்கும் கோடானு கோடி மக்களின் ஆழமாகப் போய்க் கொண்டிருக்கும் புரட்சிகரமான இயக்கத்தால் உண்டு பண்டப்பட்ட கருத்துக்களின் சமூக முக்கியத்துவத்தை இப்பொழுது நாம் பரிசீலனை செய்வோம்,

சன் யாட் சென்னின் நோக்கங்களின் ஒவ்வொரு போக்கும் போர்க்குணம் படைத்த, அந்தரங்க சுத்தியான ஜனநாயகத்தின் உயிர்த் துடிப்பை வெளிப்படுத்துகிறது. ஒரு "இன"ப் புரட்சியின் பற்றாக் குறையை முற்றும் புரிந்து கொண்டிருப்பதை அது வெளிப் படுத்துகிறது. அதில் அரசியல் பிரச்சினைகளை அலட்சியம் செய்வது, அல்லது அரசியல் சுதந்திரத்தைக் குறைத்து மதிப்பிடுவது ஆகிய வற்றின் தடத்தையே பார்க்க முடியாது; அல்லது சீன "சமூக சீர்திருத்தம்" சீன அரசியல் அமைப்பு சீர்திருத்தங்கள், இன்னும் இது போன்றவை சீன எதேச்சாதிகாரத்தோடு இணக்க மாக இருக்க முடியும் என்ற கருத்தின் தடத்தையே அதில் பார்க்க முடியாது. அது பரிபூரணமான ஜனநாயகத்தை ஆதரிக்கிறது. ஒரு குடியரசைக் கோருகிறது. மக்களின் நிலைமை, பொது ஜனப் போராட்டம் ஆகிய பிரச்சினைகளை வெளிப்படையாக எழுப்புகிறது அது, உழைக்கிற, சுரண்டப்பட்ட மக்களுக்கு அனுதாபத்தைத் தெரிவிக்கிறது; அவர்கள் சக்தியில் நம்பிக்கையைத் தெரிவிக்கிறது;

அவர்கள் லட்சியத்தின் நியாயத்தில் நம்பிக்கையைத் தெரிவிக்கிறது.

உண்மையான ஒரு மகத்தான மக்களின், உண்மையிலேயே மகத்தான சித்தாந்தம் நமக்கு முன்னால் இருக்கிறது; நீண்ட நெடுங்காலமாக இருக்கும் அடிமைத்தனத்திற்காக வருந்துவதோடு, சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் கனவு காண்பதோடு, சீனவை நீண்ட நெடுங்காலமாக அடக்கி ஒடுக்கி வருகிறவர்களை எதிர்த்துப் போராடும் சக்தியையும் பெற்றிருக்கிறது.

இருள் சூழ்ந்த, மந்தமான ஆசியாவில் உள்ள சீனவில் குடியரசின் தற்காலிக ஜனதிபதியை ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் கலாச்சாரத்தில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் உள்ள பல்வேறு குடிரசுகளின் ஜனதிபதிகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு ஒருவர் இயல்பாகவே விரும்புகிருர். அந்தக் குடியரசுகளில் உள்ள ஜனதிபதிகள் அனைவரும் வர்த்தகர்களாகவும் உள்ளும் புறமும் அழுகிப்போன ஒரு முதலாளித்துவத்தின் தரகர்களாகவும், கைப்பாவைகளாகவும் இருக்கிருர்கள்; அடி முதல் உச்சிவரை அவர்கள் உடலை ரத்தமும் சகதியும் கறைப்படுத்தியிருக்கின்றன; அது சக்கிரவர்த்திகள், பாதுஷாக்கள் ஆகியவர்களின் ரத்தமல்ல, முன்னேற்றம், நாகரீகம் என்ற பெயரால் வேலை நிறுத்தம் செய்யும் பொழுது சுட்டு வீழ்த்தப்பட்ட தொழிலாளர்களின் ரத்தம் அது. அந்த நாடுகளில் ஜனதிபதிகள் முதலாளித்துவத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிருர்கள்; இந்த முதலாளித்துவம் நீண்ட காலத்திற்கு முன்பே அதன் இளமைப்பருவ லட்சியங்கள் அனைத்தையும் நிராகரித்துவிட்டது; தானகவே தனது தரத்தை முற்றும் குறைத்துக் கொண்டிருக்கிறது. இவர்கள் லட்சாதிபதிகளுக்கும். கோடீஸ்வரர்களுக்கும், முதலாளிகளாக மாறியிருக்கும் நிலப்பிரபுகளுக்கும் இன்னும் இவர்களைப் போன்றவர்களுக்கும், தங்கள் உடலையும், உயிரையும் தாங்களாகவே விற்று விட்டார்கள்.

சீனவில், குடியரசின் ஆசிய, தற்காலிக ஜனதிபதி ஒரு புரட்சிகரமான ஜனநாயகவாதியாக இருக்கிருர். வீழ்ச்சியடைந்து கொண்டிராத, அதே சமயத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிற ஒரு வர்க்கத்தின், எதிர்காலத்தைக் கண்டு அஞ்சாத, அதே சமயத்தில் அதில் நம்பிக்கை வைத்திருக்கிற சுயநலமின்றி அதற்காகப் போராடுகிற ஒரு வர்க்கத்தின் தன்னுடைய சிறப்பான சலுகைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பழமையைத் திரும்பவும் கொண்டு வருவதிலும், அதைப் பாதுகாப்பதிலும் ஒட்டிக் கொண்டிராத, அதே சமயத்தில் பழமையை வெறுக்கிற, செத்துமடிந்து

மூச்சை அடைக்கும் அளவுக்கு அழுகி நாற்றமெடுத்திருப்பதை, எப்படி வீசி எறிவது என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிற ஒரு வர்க்கத்தின் பேறுகளைப் பெற்றிருக்கிறார்.

அப்படியானால், அதன் அர்த்தம், பொருள் முதல்வாத மேற்கு கொஞ்சங்கூட நம்பிக்கையே இல்லாத முறையில் அழுகிப்போய் விட்டதா? மாயமான, மத நம்பிக்கை நிறைந்த கிழக்கிலிருந்துதான் ஒளி பிரகாசிக்கிறதா? இல்லை, அதற்கு முற்றிலும் நேர்மாறானதாகும். கிழக்கு திட்டவட்டமாக மேற்கத்தியப் பாதையைக் கடைபிடித்திருக்கிறது. மேற்கு ஏற்கெனவே தனக்காகத் திட்டமிட்டிருந்த லட்சியங்களை அடைவதற்காக இனிமேல் கோடானு கோடி புதிய மக்கள் போராட்டத்தில் பங்கு கொள்வார்கள் என்பது தான் அதன் அர்த்தம். எது அழுகிப் போயிருக்கிறது என்றால் மேற்கத்திய முதலாளித்துவம்தான்; அதன் புதை குழியைத் தோண்டிக் கொண்டிருக்கும் பாட்டாளி மக்களை அது ஏற்கெனவே எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், ஆசியாவிலோ, அந்தரங்க சுத்தியான, போர்க் குணம் படைத்த, முன்பின் முரண் இல்லாத ஜனநாயகத்திற்காகப் பரிந்து போராடும் சக்தி படைத்த ஒரு முதலாளித்துவம் இன்னும் இருக்கிறது; இது பிரான்ஸ் தேசத்தின் மறுமலர்ச்சியின் மகத்தான மக்களோடும், பதினெட்டாவது நூற்றாண்டின்[47] இறுதியில் இருந்த மகத்தான தலைவர்களோடும் ஒப்பிடக்கூடிய தகுதி வாய்ந்த தோழன்.

சரித்திர பூர்வமான ஒரு முற்போக்கு லட்சியத்தை ஆதரிக்கும் சக்தியை இன்னும் பெற்றிருக்கும் இந்த ஆசிய முதலாளித்துவத்தின் முக்கியமான பிரதிநிதி, அல்லது முக்கியமான சமூக அரண் யார் என்றால், விவசாயிகள்தான். அவனுக்குப் பக்கத்தில் கூடவே, ஒரு மிதவாத முதலாளித்துவம் ஏற்கெனவே இருக்கிறது; அதன் தலைவர்கள்—யுவான் ஷீகேய் போன்ற மனிதர்கள்—மிகமுக்கியமாக துரோகம் செய்யும் திறமையுள்ளவர்களாக இருக்கிறார்கள்; நேற்று அவர்கள் சக்கரவர்த்தியைக் கண்டு அஞ்சினார்கள்; அவனுக்கு முன்னால் மண்டியிட்டுக் கெஞ்சினார்கள்; பிறகு, அவர்கள் புரட்சிகரமான ஜனநாயக்கத்தின் பலத்தைப் பார்த்த பொழுது, வெற்றியைத் தெரிந்து கொண்ட பொழுது அவனுக்குத் துரோகம் செய்தார்கள்; நாளைக்கோ, ஏதாவது ஒரு புதிய, அல்லது பழைய "அரசியல் அமைப்புக்கு" உட்பட்ட சக்கரவர்த்தியோடு ஒரு உடன்பாட்டிற்கு வரும் பொருட்டு ஜனநாயகவாதிகளுக்கு துரோகம் செய்வார்கள்

மகத்தான அந்தரங்க சுத்தியான ஜனநாயக ஆர்வம் இல்லாமல் பண்டைக் காலத்திலிருந்து நீடித்து வரும் அடிமைத் தனத்திலிருந்து சீன மக்கள் உண்மையாகவே விடுதலையடைவது

சாத்தியமல்ல; இது, உழைக்கும் மக்கள் திரளைத் தட்டி எழுப்பிக் கொண்டிருக்கிறது; இது, அற்புதங்களைச் செய்யும் சக்தி படைத்த வர்களாக அவர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது; சன்யாட் சென்னின் நோக்கங்களின் ஒவ்வொரு வரியிலிருந்தும் இது தெளி வாகிறது.

ஆனால், சீன நாரோட்னிக் இந்தப் போர்க் குணம் படைத்த ஜனநாயகத்தின் 'சித்தாந்தத்தை' முதலில் சோஷலிஸ்டு கனவுக ளோடும், முதலாளித்துவப் பாதையைச் சீனா தவிர்க்கும் நம்பிக்கை களோடும், முதலாளித்துவத்தைத் தடுக்கும் நம்பிக்கைகளோடும் இணைக்கிறார்; இரண்டாவதாக, தீவிரமான விவசாய சீர்திருத்தத் தின் ஒரு திட்டத்தோடும் பரிந்துரைகளோடும் இணைக்கிறார். இந்தக் கடைசி இரண்டு சித்தாந்த, அரசியல் கருத்துப் போக்குகள் நாரோடிஸத்தை உருவாக்கும் மூல அம்சமாக அமைகின்றன; நாரோடிஸம் என்ற சொல்லின் திட்டவட்டமான அர்த்தத்தில், ஜனநாயகத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டும் நிலையில், ஜனநாய கத்திற்கு ஒரு அனுபந்தம் என்ற நிலையில் அமைகிறது. இந்தக் கருத்துப் போக்குகளின் மூலமும், முக்கியத்துவமும் என்ன?

மக்கள் திரளின் மகத்தான புனிதமான புரட்சிகரமான, எழுச்சி இல்லையென்றால், சீன ஜனநாயகம் பழைய அமைப்பை வீழ்த்தி, குடியரசை அமைக்கவே முடியாது. இத்தகைய ஒரு எழுச்சி உழைக்கும் மக்கள் திரளின் நிலைமைக்கு அந்தரங்க சுத்தியோடு பெரிதும் அனுதாபத்தையும், அவர்களை அடக்கி ஒடுக்குகிறவர்கள் மீதும், சுரண்டுகிறவர்கள் மீதும் கடுமையான வெறுப்பையும் முன் கூட்டியே தோற்றுவிப்பதோடு தூண்டவும் செய்கிறது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் முதலாளித் துவத்தில் இருந்து விடுதலை — அதாவது சோஷலிஸம் — என்பது உடனடியான கடமையாகும்; முற்போக்காளர்களான சீனர்களும் இந்த எழுச்சியை அனுபவித்த சீனர்கள் அனைவரும் இந்த நாடுகளி லிருந்துதான் விடுதலைக் கருத்துக்களை இரவல் வாங்கியிருக்கிறார்கள். சீன ஜனநாயக வாதிகளிடையே சோஷலிஸத்தின்பால் அனுதா பத்தை இது நிச்சயமாக உண்டாக்கும்; இது அவர்களுடைய நன்னோக்கு பார்வையான சோஷலிஸத்தின் உறைவிடமாகவும் இருக்கிறது.

அவர்கள் நன்னோக்குப் பார்வை சோஷலிஸ்டுகளாக இருக் கிறார்கள்; ஏனெனில் அவர்கள் மக்கள் திரளை அடக்கி ஒடுக்குவ தையும், சுரண்டுவதையும் எதிர்க்கிறார்கள். ஆனால், கிட்டத்தட்ட ஐம்பது கோடி ஜனத்தொகையைக் கொண்ட பின்தங்கிய விவசாய அரைநிலப் பிரபுத்துவ நாடான சீனாவின் ஸ்தூலமான புற

நிலைமைகள் இந்த ஒடுக்கு முறை, சுரண்டல் ஆகியவற்றின் திட்ட வட்டமாக சரித்திர பூர்வமாக வேறுபடுத்திக் காட்டுகிற ஒரே ஒரு வடிவத்தைத்தான் — அதாவது நிலப்பிரபுத்துவத்தைத்தான் — நிகழ்ச்சி நிரலில் வைக்கின்றன. நிலப் பிரபுத்துவம் என்பது விவசாயம், இயற்கைப் பொருளாதாரம் ஆகியவை மேலோங்கியிருப்பதை அடிப்படையாகக் கொண்டிருக் கிறது. சீன விவசாயியின் நிலப்பிரபுத்துவ சுரண்டலின் மூல ஊற்று என்னவென்றால், ஏதாவது ஒரு வடிவத்தில் அவன் நிலத்தோடு பிணைக்கப்பட்டிருப்பதுதான். இந்தச் சுரண்டலின் அரசியல் பிரதி நிதிகள் யார் என்றால் நிலப்பிரபுக்கள்தான்; இந்த முழு அமைப்பின் தலைவன் என்ற நிலையில் சக்கரவர்த்தியோடு கூட்டாகவும், தனிப் பட்ட முறையிலும் சேர்ந்திருக்கிற நிலப்பிரபுக்கள்தான்.

ஆனால், சீன ஜனநாயக வாதிகளின் தன்னுடைக்குப் பார்வை சோஷலிஸ்டு கருத்துக்கள், செயல் திட்டங்கள் ஆகியவற்றிலிருந்து, எதார்த்தத்தில் "உண்மையான நிலச் சொத்துரிமை"யின், "எல்லா விதமான சட்டபூர்வமான அடிப்படைகளையும் மாற்றுவதற்கான" ஒரு திட்டம் மாத்திரம்தான், நிலப்பிரபுத்துவ சுரண்டலை ஒழிப்பதற் கான ஒரு திட்டம் மாத்திரம்தான் வெளியே வருகிறது என்று தோன்றுகிறது.

சென்யாட்சென்னின் நாரோடிஸத்தின் அவருடைய முதலாளித்துவ ஜனநாயக விவசாய சீர்திருத்தத்திற்கான முற் போக்கான, போர்க்குணம் படைத்த புரட்சிகரமான செயல் திட்டத்தின், அவருடைய அரைப்பகுதி சோஷலிஸ்டு சித்தாந்தத் தின் சாராம்சம் அதுதான்.

கோட்பாட்டின் கருத்தின் அடிப்படையிலிருந்து பார்த்தால், இந்தச் சித்தாந்தமானது, சிறு முதலாளித்துவ "சோஷலிஸ்டு" பிற்போக்குத்தனமாகும். ஏனெனில், சீனாவில் முதலாளித்' துவத்தைத் "தடுக்க" முடியும், அந்த நாடு பின் தங்கிய நிலைமையில் இருப்பதால் "சமூகப் புரட்சி" சுலபமானதாக ஆக்கப்படும், என்பன போன்ற கருத்துக்கள் முற்றிலும் பிற்போக்குத் தன்மை வாய்ந்த தாகும். சென்யாட் சென் ஈடற்ற இயலெளிமையோடு—ஏன் தூய் மையான என்றும் கூடக்கூறலாம்—எதார்த்தம் எதை ஏற்றுக் கொள்ளும்படி அவரை நிர்ப்பந்தம் செய்கிறதோ அதை ஏற்றுக் கொள்வதன் மூலமாக அவருடைய நரோட்னிக் சித்தாந்தத்தைத் தாமாகவே நிர்மூலம் செய்கிறார்; அதாவது, "பிரமாண்டமான தொழில் (அதாவது முதலாளித்துவ) வளர்ச்சி ஏற்படப் போகும் தருவாயில் சீனா இருக்கிறது" என்றும், சீனாவில் "வியாபாரம் (அதாவது முதலாளித்துவம்) அமோகமான அளவில் வளர்ச்சி யடையும்" என்றும், "ஐம்பது வருடங்களில் நாம் ஏராளமான

ஷாங்காய்களைப் பெறுவோம்'' என்றும், அதாவது முதலாளித்துவச் செல்வம், பாட்டாளி மக்களின் நெருக்கடி நிலை, ஏழ்மை ஆகியவை உள்ள பெரிய மையங்களைப் பெறுவோம் என்றும் கூறுகிறார்.

ஆனால், ஒரு கேள்வி எழுகிறது: சென்யாட் சென் அவருடைய பிற்போக்கு பொருளாதாரச் சித்தாந்தத்தின் அடிப்படையில் உண்மையாகவே ஒரு பிற்போக்கு விவசாய சீர்திருத்தச் செயல் திட்டத்தை உறுதியாகக் கடைப்பிடிக்கிறாரா? அதுதான் முடிவாக தீர்வு செய்யக்கூடிய பிரச்சினை; அதுதான் கவனத்தைக் கவரக் கூடிய முக்கியமான விஷயம்; அந்த ஒரு பிரச்சினையின் மேல்தான் வெட்டிச் சுருக்கி ஆற்றலைக் குறைத்த அரைகுறை மார்க்ஸிஸம் தவறான நிலையில் இருக்கிறது.

இந்த விஷயத்தில் உண்மை என்னவென்றால். அவ்வாறு செய்யவில்லை என்பதுதான். சீனாவில் சமூக உறவுகளின் தர்க்க இயல் ஒரு உண்மையைத் தானாகவே திட்டவட்டமாக வெளிப் படுத்துகிறது; அதாவது, ஐரோப்பாவில் சோஷலிஸத்திற்கு அந்தரங்க சுத்தியோடு அனுதாபம் காட்டும் அதே சமயத்தில் சீன ஜனநாயகவாதிகள் அதை ஒரு பிற்போக்கு சித்தாந்தமாக மாற்றுகிறார்கள்; முதலாளித்துவத்தைத் "தடுக்கும்'' இந்தப் பிற் போக்குச் சித்தாந்தத்தின் அடிப்படையில், சுத்தமாகவே ஒரு முதலாளித்துவ, அதிகபட்சம் ஒரு முதலாளித்துவ விவசாய சீர்திருத்த செயல் திட்டத்தை ஆதரிக்கிறார்கள்!

உண்மையில், கட்டுரையின் தொடக்கத்தில் சன்யாட்சென் சொற் பகட்டான, தெளிவற்ற முறையில் பேசும் "பொருளா தாரப்புரட்சி'' எதற்குச் சமமாக இருக்கிறது?

நில வாடகையை அரசுக்கு மாற்றுவதற்கு அது சமமாகும்; அதாவது, நிலத்தை தேசிய மயமாக்கி, ஹென்றி ஜார்ஜ் அடிப் படையில் ஏதாவது ஒரு வகையில் ஒரு முனை வரி விதிப்பதாகும் சென்யாட்சென் பிரேரேபித்து, வாதாடுகிற "பொருளாதாரப் புரட்சியில்'' எதார்த்த உண்மை இதைத்தவிர முற்றிலும் வேறு எதுவும் கிடையாது.

நிலத்தின் மதிப்பில் மூலையிலுள்ள விவசாயப் பிரதேசத் திற்கும், ஷாங்காய் நகரத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் தான் நிலவாடகையில் உள்ள வித்தியாசம், நிலத்தின் மதிப்பு தான் முதலாளித்துவ மயமாக்கப்பட்ட நிலவாடகை. "மதிப்பு உயர்த்தப் பட்ட'' நிலத்தை "மக்கள் சொத்தாக'' மாற்றுவது என்றால் அதன் அர்த்தம், நிலவாடகையை, அதாவது நில உட

மையை அரசுக்கு மாற்றுவதாகும்; அல்லது வேறுவார்த்தையில் கூறுவது என்றால் நிலத்தை தேச உடமையாக்குவதாகும்.

முதலாளித்துவத்தின் அமைப்பிற்குள் இத்தகைய ஒரு சீர் திருத்தம் சாத்தியமா? அது சாத்தியமானதே என்பது மாத்திர மல்ல, அதே சமயத்தில் சுத்தமான, பெரிதும் முன்பின் முரணில் லாத, சிறந்த முழுநிறைவான முதலாளித்துவத்தை அது பிரதி நிதித்துவப் படுத்துகிறது, மார்க்ஸ் இதை "தத்துவத்தின் வறுமை" என்ற நூலில் சுட்டிக் காட்டினார்; "மூலதனம்" என்ற நூலில் மூன்றாவது தொகுப்பில் இதை விரிவாக நிருபித்துக் காட்டினார்; "உபரி மதிப்பின் சித்தாந்தங்கள்"48 என்ற நூலில் ராட்பெர்டஸ் என்பவரோடு தர்க்கம் செய்யும் பொழுது விசேஷ தெளிவோடு இதை அபிவிருத்தி செய்தார்.

நிலத்தை தேச உடமையாக்குவது, நிலையான நில வாடகையை ஒழிப்பதற்கும், வேறுபடும் நிலவாடகையைப் புகுத்துவதற்கும் உதவுகிறது. மார்க்சின் தத்துவப்படி, நிலத்தை தேச உடமை யாக்குவது என்றால் அதன் அர்த்தம் விவசாயத்தில் மத்திய கால ஏகபோக உரிமையையும், மத்தியகால உறவுகளையும் அதிகப்பட்சம் நீக்குவதாகும்; நிலத்தை வாங்குவதற்கும், விற்பதற்கும் அதிகப் பட்சம் சுதந்திரம் கிடைக்கிறது என்பதாகும்; சந்தைக்குத் தக்க படி தன்னைத்தானே சரிக்கட்டிக் கொள்வதற்கு விவசாயத்திற்கு அதிகப்பட்சம் வாய்ப்பு நலன்கள் கிடைக்கும் என்பதுதான், சரித்திரத்தின் திருவிளையாடல் வேறு விதமாக இருக்கிறது. விவசாயத்தில் "முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுகிறோம்" என்ற மறைவிற்குப் பின்னால் இருந்துகொண்டு நரோடிஸம் ஆதரிக் கிற ஒரு விவசாய சீர்திருத்த செயல் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றினால், அதன் அர்த்தம் விவசாயத்தில் முதலாளித்து வத்தை மிக வேகமாக வளர்ப்பதாகும்.

ஆசியாவின் படுமோசமாக பின் தங்கியிருக்கும் நாடுகளில் ஒன்றில் மிக முற்போக்கான முதலாளித்துவ விவசாய சீர்திருத்த செயல் திட்டத்தை பரப்புவதற்குப் பின்னால் இருக்கும் பொருளா தார அவசியம் என்ன? நிலப்பிரபுத்துவத்தை அதன் எல்லா வடிவங்களோடும், வெளிப்படையானவை அனைத்தையும் அழிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஜப்பானையும், ஐரோப்பாவையும் விட சீனாவானது எந்த அளவுக்கு அதிகமாகப் பின் தங்கியிருக் கிறதோ அந்த அளவுக்கு அதிகமாகத் துண்டு போடப்படும். தேசிய ரீதியில் சின்னாபின்னமாகச் சிதறடிக்கப்படும், என்ற அபாயம் அதற்கு இருக்கிறது. புரட்சிகரமான மக்கள் திரளின் வீரதீரத்தால் தான் அதைப் "பழுது பார்த்து, புதுப்பிக்க"

முடியும்; இந்த வீரதீரம்தான் அரசியல் துறையில் ஒரு சீன குடியரசைப் படைக்கும் சக்தியைப் பெற்றிருக்கிறது; இந்த வீரதீரம்தான் நிலத்தை தேச உடமையாக்குவதன் மூலமாக விவசாயத்துறையில் மிக வேகமாக முதலாளித்துவ முன்னேற்றத்திற்கு உத்தரவாதத்தை அளிக்கும்.

இது வெற்றி பெறுமா, எந்த அளவுக்கு வெற்றி பெறும் என்பது வேறு விஷயம். முதலாளித்துவப் புரட்சிகளை நடத்திய பொழுது, பல்வேறு நாடுகள் பல்வேறு அளவுக்கும், மிகவும் மாறுபட்ட இணைப்புகளோடும் அரசியல், விவசாய ஜனநாயகத்தைப் பெற்றன. சர்வதேச நிலைமையும், சீனாவில் சமூக சக்திகளின் கூட்டுச் சேர்க்கையும்தான் இறுதியாக முடிவு செய்யும் அம்சங்களாக இருக்கும். பழமையை மீண்டும் கொண்டு வருவதற்கு சக்கிரவர்த்தி நிச்சயமாக நிலப்பிரபுக்களையும், அதிகார வர்க்கத்தையும், சமய குருமார்களையும் ஒன்று திரட்ட முயல்வார். மிதவாத முடியாட்சியிலிருந்து, மிதவாத குடியரசுக்கு (எவ்வளவு காலம் வரையிலும்?) இப்பொழுது தான் மாறியிருக்கும் ஒரு முதலாளித்துவத்தின் பிரதிநிதியான யுவான்ஷீகேய் முடியாட்சிக்கும், புரட்சிக்கும் இடையே சூழ்ச்சித் திட்ட முறைக்கொள்கையைக் கடைப்பிடிப்பார். சென்யாட்சென் பிரதிநிதித்துவப்படுத்தும் புரட்சிகரமான முதலாளித்துவ ஜனநாயகம் அரசியல், விவசாய சீர்திருத்தங்கள் ஆகிய பிரச்சினையில், விவசாயமக்களின் முன் முயற்சி, உறுதி, தைரியம் ஆகியவற்றை அதிகப்பட்சம் வளர்ப்பதன் மூலமாக சீனாவை "பழுது பார்த்து, புதிப்பிப்பதற்கு" வழிவகைகளைக் கண்டு பிடிக்க முயல்வது சரியானது தான்.

கடைசியாக, ஷாங்காய்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது சீனாவின் பாட்டாளி மக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். அது, ஏதாவது ஒரு வகையில் சீன சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியை அமைக்கும். அது, ஒரு புறம் சன்யாட்சென்னின் சிறு முதலாளித்துவ கற்பனைச் சித்தாந்தங்களையும், பிற்போக்குக் கருத்துக்களையும் விமர்சனம் செய்து, அதே சமயத்தில் அவருடைய அரசியல், விவசாய சீர்திருத்த செயல் திட்டம் ஆகியவற்றின் புரட்சிகரமான-ஜனநாயக அம்சத்தைத் தனியே பிரித்து, அதை ஆதரித்து, அதைவளர்ப்பதில் நிச்சயமாகக் கவனம் செலுத்தும்.

"நெவ்ஸ்கயா ஸ்வெஸ்கா"
எண் – 17
1912, ஜூலை 15.
கையெழுத்து உல். இலின்.

திரட்டப்பட்ட
நூல்கள்,
தொகுப்பு - 18
பக்கம் - 163 - 69

# இரண்டு உட்டோபியாக்கள்

உட்டோபியா என்பது ஒரு கிரேக்க வார்த்தை "ஔ" இல்லை, "டோபோஸ்" ஒரு இடம் - என்ற வார்த்தைகள் சேர்ந்து அமைந்தது. அதன் அர்த்தம், இல்லாத ஒரு இடம் — ஒரு கற்பனையிலானது, ஒரு கற்பனைத்திறம், ஒரு கட்டுக்கதை— என்பதுதான்.

அரசியலில் உட்டோபியா என்பது ஒரு விருப்பம்— ஒருக்காலும் — இப்பொழுதோ, அல்லது பிறகோ உண்மையாக வரமுடியாத. சமூக சக்திகளை அடிப்படையாகக் கொள்ளாத ஒரு ஆசை; அரசியல், வர்க்கம் ஆகிய சக்திகளின் வளர்ச்சியாலும், முன்னேற்றத்தாலும் ஆதரிக்கப்படாத ஒரு ஆசை.

ஒரு நாட்டில் எந்த அளவுக்கு சுதந்திரம் குறைவாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு பகிரங்கமாக வர்க்கப் போராட்டம் வெளிப்படையாகக் காட்சி அளித்தாலும் குறைவாகவே இருக்கும்; மக்கள் திரளின் கல்வி மட்டம் மிகத் தாழ்ந்த நிலையில் இருந்தால் அரசியல் உட்டோபியாக்கள் அதிக எளிதில் வழக்கமாகத் தலைதூக்கி, நீண்டதோர் காலத்திற்கு அவை நீடித்திருக்கும்.

நவீன ரஷ்யாவில், அரசியல் உட்டோபியாவின் இரண்டு வகைகள் அதிக அளவு விடாப்பிடியாக நீடித்திருக்கின்றன; அவை கவர்ச்சியூட்டக் கூடியதாக இருப்பதால், பொது மக்களிடையே அவை ஒரு குறிப்பிட்ட அளவு செல்வாக்கைச் செலுத்துகின்றன. அவை மிதவாத உட்டோபியா, நரோட்னிக் உட்டோபியா ஆகியவைதான்.

மிதவாத உட்டோபியாவானது, ரஷ்யாவில், ஒருவருடைய அரசியல் சுதந்திரத்திலும், ஒருவருடைய உழைக்கும் மக்களின் நிலைமைகளிலும் சமாதான ரீதியாலும் முரண்பாடில்லாமல் இணக்கமாகவும், எவராயினும் ஒருவர் மனதைக்கூடப் புண்படுத்தாமல், புரிஷ் கெவிச்சோக்களை அகற்றாமல், முடிவைக் காண்பது வரையிலும் சண்டை போடுகிற ஒரு ஈவிரக்க மற்ற வர்க்கப் போராட்டம் இல்லாமல் கணிசமான அளவு அபிவிருத்திகளைச்

செய்ய முடியும் என்று வாதாடுகிறார்கள். ஒரு சுயேச்சையான ரஷ்யாவுக்கும், புருஷ்கெவிச்சேக்களும் இடையே "சமாதான"த்தின் உட்டோப்பியாவாகும் அது.

நரோட்னிக் உட்டோப்பியாவானது நரோட்னிக் அறிவாளிகள், டுரோடோ, விக் விவசாயிகள் ஆகியவர்களின் ஒரு கனவாகும்; இவர்கள், நிலத்தை புதிதாக, நியாயமாக வினியோகம் செய்வது மூலதனத்தின் அதிகாரத்தையும், ஆட்சியையும் ஒழித்துவிடும் என்றும், கூலி அடிமை முறையை அகற்றி விடும் என்றும் கற்பனை செய்கிறார்கள்; அல்லது, மூலதனத்தின் ஆதிக்கத்தின் கீழ், பணத்தின் ஆட்சியின் கீழ், பண்ட உற்பத்தி முறையின் கீழ் நிலத்தை "நியாயமாகவும்", "சரிசமத்துவமாகவும்" வினியோகம் செய்வதைப் பேணிப் பாதுகாக்க முடியும் என்று கற்பனை செய்கிறார்கள்

இந்த உட்டோப்பியாக்கள் எழுதுவதற்கு இடமளிக்கிறது, எது? இன்றைய ரஷ்யாவில் வலுவோடு ஏன் அதை அவர்கள் விடாப்பிடியாக வலியுறுத்துகிறார்கள்?

பழைய சமூக முறைகளையும், பண்ணை அடிமை முறையையும், உரிமைகள் பற்றுக் குறையையும் எதிர்த்து, ஒரு வார்த்தையில் கூறுவதென்றால், "புரிஷ்கெவிச்சுகளை எதிர்த்து" ஒரு போராட்டத்தை நடத்துகிற, இந்தப் போராட்டத்தில் ஒரு சுதந்திரமான நிலையை எடுக்காத வர்க்கங்களின் நல உரிமைகளால் அவை உண்டாக்கப் பட்டிருக்கின்றன. உட்டோப்பியா அல்லது பகற்கனவு, இந்தப் பற்றுக்குறைச் சுதந்திரத்தின், இந்த பலஹீனத்தின் ஒரு உற்பத்திப் பொருள்தான் பகற்கனவு காண்பது பலஹீனமானவர்களின் அதிர்ஷ்டமாக இருக்கிறது.

பொதுவாக மிதவாத முதலாளிகளும், குறிப்பாக முதலாளித்துவ அறிவாளிகளும் சுதந்திரத்திற்காகவும், சட்ட பூர்வமான உரிமைகளுக்காகவும் முயலாமல் இருக்க முடியாது; இவை இல்லையென்றால், முதலாளித்துவத்தின் ஆதிக்கம் பூர்த்தியடையாததாக இருக்கும்; முழுமையானதாக இல்லாமலும், உத்தரவாதமற்றதாகவும் இருக்கும். ஆனால் முதலாளித்துவமோ, பிற்போக்கை காட்டிலும், அதிகமாக பொது மக்களின் இயக்கத்தைக் கண்டு பயப்படுகிறது. அதனால்தான் அரசியலில் மிதவாதிகளின் கருத்தைக் கவரும் முறையில், வியக்கத்தக்க முறையில் பலஹீனம், அவர்களின் வரம்பற்ற ஆற்றலற்ற தன்மை ஏற்படுகின்றன. அதனால்தான், மிதவாதிகளின் கொள்கை முழுவதிலும் முடிவே இல்லாமல் தொடர்ச்சியாக சொற் புரட்டுக்களும், பொய்யுரை

களும், போலி நடிப்புகளும், கோழைத்தனமாக சூழ்ச்சி செய்து தப்புதலும் தலை தூக்குகின்றன; பொது மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக, அவர்கள் ஜனநாயகத்தில் அரை மனதோடு ஈடுபடவே வேண்டியிருக்கிறது: ஆனால், அதே சமயத்தில், அவர்கள் ஆழமாக ஜனநாயகத்திற்கு விரோதமாக இருக்கிறார்கள்; பொது மக்களின் இயக்கத்திற்கு அவர்கள் முன் முயற்சிக்கு ஆழமாக எதிர்ப்பாக இருக்கிறார்கள்; கடந்த நூற்றாண்டில் ஐரோப்பாவில் பொது ஜன இயக்கங்களில் ஒன்றை மார்க்ஸ் வர்ணித்ததுபோல் பொது மக்களின் "வானுலகத்தைத் திடீரெனத் தாக்கி தகர்க்கும்" வழியையும் எதிர்க்கிறார்கள்.[49]

மிதவாதத்தின் உட்டோப்பியாவானது, ரஷ்யாவின் அரசியல் விடுதலை சம்பந்தப்பட்ட விஷயத்தில் வீரியமற்ற உட்டோப்பியா வாக இருக்கிறது: சுயநலவாதிகளான பணமூட்டைகளின் உட்டோப்பியாவாக இருக்கிறது; இவர்கள், புரிஷ்கெவிச்சேக்களோடு விசேஷ சலுகைகளில் "சமாதான பூர்வமாக" பங்குபெற விரும்பு கிறார்கள்: இந்த உன்னதமான நோக்கத்தை ரஷ்ய ஜனநாயகத்திற்கு "சமாதான பூர்வமான" வெற்றியின் தத்துவம் என்று கூறி ஏமாற்றப் பார்க்கிறார்கள்.

மிதவாத உட்டோப்பியா என்றால் அதன் அர்த்தம் புரிஷ்கெ விச்சேக்களை முறியடிக்காமல் எப்படி பணிய வைப்பது என்பது பற்றியும், அவர்களுக்குத் தீங்கு ஏற்படாமல் எப்படி அவர்களை அடக்குவது என்பதுபற்றியும் பகற்கனவு காண்பதாகும். இந்த உட்டோப்பியா தெளிவாகவே, பாதகம் விளைவிக்கக் கூடியதாக இருக்கிறது; இது ஒரு உட்டோப்பியாவாக இருக்கிறது என்ற காரணத்தால் மாத்திரமல்ல, அத்துடன், இது பொது மக்களின் ஜனநாயக மனதின் விழிப்பு நிலையை ஊழலுக்கு ஆளாக்குகிறது. அவர்கள் இந்த உட்டோப்பியாவில் நம்பிக்கை வைத்தால், பொது மக்கள் ஒருக்காலும் சுதந்திரத்தைப் பெற மாட்டார்கள்; அவர்கள் சுதந்திரத்திற்கும் அருகதை உள்ளவர்கள் அல்ல; அவர்கள் புரிஷ்கெவிச்சேக்களால் கொடுமைப்படுத்தப்படுவதற்கு முற்றிலும் தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள்.

நரோட்னிக்குகள், ட்ருடோவிக்குகள் ஆகியவர்களின் உட்டோப்பியா, சிறு உரிமையாளர்களின் பகற்கனவாகும்; இவர்கள் வர்க்கப்போராட்டம் இல்லாமல் கூலி அடிமை முறையை ஒழிப்பது பற்றி முதலாளிகளுக்கும், கூலிக்கு உழைக்கும் தொழிலாளர்களுக் கும் நடுவில் நிற்கிறார்கள். இன்று அரசியல் விடுதலைப்பிரச்சினை இருப் பதுபோல், ரஷ்யாவுக்கு பொருளாதார விடுதலைப் பிரச்சினையும்

நெருக்கமானதாகவும், உடனடியானதாகவும், மன எழுச்சி மிக்க தாகவும் மாறும்போது, நரோட்னிக்குகளின் உட்டோப்பியா மித வாதிகளின் உட்டோப்பியாவுக்கு எந்த வகையிலும் குறையாமல் பாதகமானது என்பது நிரூபிக்கப்படும்.

ஆனால் ரஷ்யா இன்னும் முதலாளித்துவ மயமாக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறதே தவிர, பாட்டாளி மக்கள் மயமாக்க வேண்டிய கட்டத்தில் இல்லை. பெரும் அளவுக்குப் பூரணமாகப் பக்குவமடைந்திருப்பது பாட்டாளி மக்களின் பொருளாதார விடுதலைப் பிரச்சினை அல்ல; அதற்கு மாறாக அரசியல் சுதந்திரப் பிரச்சினைதான், அதாவது (மெய்யாக) பூரணமாக முதலாளித்துவ சுதந்திரப் பிரச்சினைதான்.

பின்னால் கூறப்பட்ட பிரச்சினையில் நரோட்னிக்கின் உட்டோப்பியா, ஒரு விசித்திரமான சரித்திர பூர்வமான பாத்திரத்தை வகிக்கிறது. நிலத்தைப் புதிதாக ஒரு பிரிவினை செய்வது, பொருளாதார விளைவுகளை எப்படி ஏற்படுத்த வேண்டும் (ஏற்படுத்தும்) என்பது சம்பந்தமாக உட்டோப்பியாவாக இருந்தாலும்கூட, அது விவசாய மக்கள் திரளின் மகத்தான, பொதுஜன, ஜனநாயக எழுச்சியின் ஒரு பின் தொடர்ச்சியாகவும், தனிச் சிறப்புக் குறியாகவும் இருக்கிறது; அதாவது, முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ, நவீன ரஷ்யாவில் மக்கட் தொகையில் பெரும்பான்மையோர் விவசாய மக்களாக இருக்கிறார்கள். (சுத்தமான ஒரு முதலாளித்துவ ரஷ்யாவில்,—சுத்தமான ஒரு முதலாளித்துவ ஐரோப்பாவில் இருப்பது போல்—விவசாயிகள் மக்கட் தொகையில் பெரும்பான்மையோராக இருக்க மாட்டார்கள்).

மிதவாத உட்டோப்பியா, மக்களின் ஜனநாயக மனதில் விழிப்பு நிலையை ஊழலாக்குகிறது. நரோட்னிக் உட்டோப்பியாவானது, இது அவர்களுடைய சோஷலிஸ்டு மனதில் விழிப்பு நிலையை ஊழலாக்குகிறது—அவர்களுடைய ஜனநாயக எழுச்சியின் ஒரு பின் தொடர்ச்சியாகவும், ஒரு தனிச்சிறப்புக் குறியாகவும் ஓரளவு கருத்தை வெளிப்படுத்துவதாகவும் இருக்கிறது.

சரித்திரத்தின் தர்க்க இயல் எப்படி இருக்கிறது என்றால், நரோட்னிக்குகளும், டுரோடோவிக்குகளும் முதலாளித்துவத்திற்கு எதிரான ஒரு பரிகாரம் என்ற நிலையில், ரஷ்யாவில் விவசாயப் பிரச்சினை சம்பந்தமாக ஓர் உச்ச அளவில் உள்ள, முரண்பாடற்ற சிறிதும் விட்டுக் கொடுக்காத முதலாளித்துவ நடவடிக்கையை முன் வைத்து, அதைப் பேணி வளர்க்கிறார்கள். நிலத்

தைக் "சரிசமமாக"ப் புதிதாகப் பிரிவினை செய்வது உட்டோப்பியா வாகும்; ஆயினும், பழைய நில உடமையின் முழு அமைப்பிலும் நிலச்சுவான்தாரின் பிரித்துக் கொடுத்த நிலம், அல்லது "அரசின்" நிலம், ஆகியவற்றில் எந்தவிதமாக இருந்தாலும் சரி மிகப் பெரிய பிளவை உண்டாக்க வேண்டியது, மிகமிக அவசியமாகும். பொருளாதார ரீதியில் அது முற்போக்கானதாகும்; ரஷ்யா போன்ற ஒரு அரசுக்கு, அது முதலாளித்துவ ஜனநாயகத்தை நோக்கிச் செல்வதற்கு மிகமிக அவசரமான நடவடிக்கையாகும்.

எங்கல்ஸின் குறிப்பிடத்தக்க மூதுரையை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும்:

"சம்பிரதாயப்படி எது பொருளாதார ரீதியில் சரியில்லாததாக இருக்கலாமோ, அது அப்படி இருந்தாலும்கூட உலக சரித்திரத்தின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், சரியானதாக இருக்கலாம்." 50

உட்டோப்பிய சோஷலிஸம் சம்பந்தமாக எங்கல்ஸ் இந்த ஆழமான ஆய்வுரையை முன் வைத்தார். சம்பிரதாயமான பொருளாதார அர்த்தத்தில் சோஷலிஸம் "தவறான வாத"மாக இருந்தது. பரிமாற்றத்தின் விதிகளின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், உபரிமதிப்பானது ஒரு அநீதி என்று சோஷலிஸம் பிரகடனம் செய்தபோது, சோஷலிஸம் "தவறான வாத"மாக இருந்தது. சம்பிரதாயமான பொருளாதார அர்த்தத்தில், அந்த சோஷலிஸத்தை எதிர்ப்பதில் முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் தத்துவாசிரியர்கள் கூறுவது சரியே; ஏனெனில், பரிமாற்றத்தின் விதிகளிலிருந்து "இயல்பாகவும்" "நியாயமாகவும்" உபரி மதிப்பு உண்டாகிறது.

ஆனால், உலக சரித்திரத்தின் கண்ணோட்டத்திலிருந்து, உட்டோப்பிய சோஷலிஸம் சரியானதே; ஏனெனில், அது வர்க்கத்தின் ஒருதனிச் சிறப்புக்குறி, ஒரு கருத்துத் தெரிவிப்பு, ஒரு முன்னோடி: முதலாளித்துவத்திலிருந்து பிறந்த இந்த வர்க்கம், இப்பொழுது இருபதாவது நூற்றாண்டின் துவக்கத்தில், ஒரு பொது ஜன சக்தியாக மாறியிருக்கிறது: இது முதலாளித்துவத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும்; இந்த இலக்கை நோக்கி தடுத்து நிறுத்த முடியாமல் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது,

ரஷ்யாவில் இன்றைய நரோட்னிக், அல்லது டுரோடோவிக் உட்டோப்பியாவைப்பற்றி மதிப்பீடு செய்யும்பொழுது, எங்கல்ஸின்

ஆழமான ஆய்வுரைகளை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். (ஒரு சமயம் ரஷ்யாவில் மாத்திரமல்ல, அதே சமயத்தில் இருபதாவது நூற்றாண்டில் முதலாளித்துவ புரட்சிகளைப் புரட்சிகளினூடே போய்க் கொண்டிருக்கும் ஏராளமான ஆசிய நாடுகளும்கூட).

நரோட்னிக் ஜனநாயகமானது, சம்பிரதாயமான பொருளாதாரக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, தவறானதாக இருந்தாலும்கூட, சரித்திர பூர்வமான கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, சரியானதே! இந்த ஜனநாயகம், ஒரு சோஷலிஸ்டு உட்டோப்பியா என்ற நிலையில் தவறானதாக இருந்தாலும்கூட, விவசாய மக்கள் திரளின் தனி இயல்பான, சரித்திர பூர்வமான சூழ்நிலைக்கு உட்பட்ட ஜனநாயகப் போராட்டத்திற்குரிய மொழியில் சரியானதே; முதலாளித்துவ மாற்றத்திற்கு இது பிரிக்க முடியாத ஒரு அம்சமாகும்; அதன் பூரண வெற்றிக்கு ஒரு நிபந்தனையுமாகும்.

மிதவாத உட்டோப்பியா விவசாய மக்கள் திரள் போராடுவதை அதைரியப்படுத்துகிறது. நரோட்னிக் உட்டோப்பியா அவர்களுடைய போராடும் ஆர்வத்தைத் தெரிவிக்கிறது; அவர்கள் ஒரு சமயம் வெற்றி பெற்றால், அவர்களை பத்து லட்சம் தடவை வாழ்த்துவதாக உறுதி கூறுகிறது; அதே சமயத்தில், இந்த வெற்றியானது உண்மையில் ஒரு ஆயிரம் தடவைதான் அவர்களுக்கு வாழ்த்துகளைக் கொடுக்கும். ஆனால், போர்க்களத்திற்குப் போய்க் கொண்டிருக்கும் லட்சோப லட்சம் மக்கள், கண்டும் கேட்டுமிராத அளவு அறியாமையிலும், இல்லாமையிலும், ஏழ்மையிலும், குப்பை கூளமான நிலையிலும், கைவிடப்பட்ட அநாதை நிலையிலும் அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையிலும் பல தலைமுறைகளாக வாழ்ந்து வந்த மக்கள் ஒரு இறுதியான வெற்றியின் பலன்களை பத்து மடங்கு பெருக்க வேண்டியது இயல்பானதல்லவா?

பழைய சுரண்டுகிறவர்களின் விசேஷ சலுகைகளில் பங்கைப் பெற வேண்டும் என்ற புதிய சுரண்டுகிறவர்களின் ஆசைக்கு மிதவாத உட்டோப்பியா ஒரு முகமூடியாக இருக்கிறது. நரோட்னிக் உட்டோப்பியாவோ, பழைய, நிலப்பிரபுத்துவ சுரண்டுகிறவர்களுக்கு முழுமையாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற உழைக்கும் சிறு முதலாளித்துவத்தின் லட்சோப லட்சம் மக்களின் அபிலாஷையின் கருத்தை வெளியிடுகிறது; அதே சமயத்தில், அது அவர்களோடு கூடவே புதிய முதலாளித்துவ சுரண்டல்காரர்களையும் ஒழித்துவிட முடியும் என்ற பொய்யான நம்பிக்கையையும் கூட தெரிவிக்கிறது.

* * *

எல்லா வகையான பல்வேறு உட்டோப்பியாவுக்கும் சுத்தமாக எதிரியான மார்க்ஸிஸ்டுகள், வர்க்கத்தின் சுதந்திரத் தன்மையை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும்; இந்த வர்க்கம் அனைவருக்கும் மேலாக முழு ஈடுபாடோடு நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்துப் போராட முடியும்; ஏனெனில், அது சொத்து உடமையில் நூறில் ஒரு பங்குகூட சம்பந்தப்பட்டதல்ல; முதலாளித்துவத்தை இந்த சொத்து உடமை நிலப்பிரபுக்களின் அரைமனதோடு கூடிய ஒரு எதிரியாக மாற்றுகிறது; இத்துடன் அடிக்கடி ஒரு நேச சக்தியாகவும் மாற்றுகிறது. விவசாயிகள் சிறிய அளவில் பண்ட உற்பத்தியில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்; சரித்திர பூர்வமான சூழ்நிலையில் ஒரு அனுகூலமான, தக்க தருவாய் கிடைத்தால், மிகுந்த அளவில் நிலப்பிரபுத்துவத்தைப் பூரணமாக அவர்கள் ஒழிக்க முடியும்; ஆனால், அவர்கள் எப்பொழுதும்—தற்செயலாக அல்ல, தவிர்க்க முடியாத வகையில்—முதலாளித்துவத்திற்கும், பாட்டாளி மக்களுக்கும் இடையே மிதவாதத்திற்கும், மார்க்ஸீயத்திற்கும் இடையே ஒரு குறிப்பிட்ட அளவு ஊசலாட்டத்தைக் காட்டுவார்கள்.

நரோட்னிக் உமியிலிருந்து, விவசாய மக்கள் திரளின் நேர்மையான, உறுதியான, போர்க்குணம் படைத்த ஜனநாயகத்தின் பழுதற்ற, மதிப்பு மிக்க அரிசியை மார்க்ஸிஸ்டுகள் கவனமாகப் பொறுக்கி எடுக்க வேண்டும்.

1880-ம் வருட காலத்திய பழைய மார்க்ஸீய இலக்கியத்தில் இந்த மதிப்பு மிக்க ஜனநாயக அரிசியைப் பொறுக்கி எடுக்க முறையாக முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டதை ஒருவர் கண்டுபிடிக்க முடியும். என்றைக்காவது ஒரு நாள், சரித்திராசிரியர்கள் இந்த முயற்சியை முறையாகக் கற்றுக்கொண்டு, இருபதாவது நூற்றாண்டின் முதல் பத்து ஆண்டுகளில் "போல்ஷ்விஸம்" என்று அழைக்கப்பட்டதற்கும், இதற்கும் உள்ள தொடர்பை தேடிக் கண்டு பிடிப்பார்கள்.

1912-அக்டோபர் 5க்கு (18) முன்பு
எழுதப்பட்டது.
முதலில் 1924-ல் "மின்"
எண் 1-ல் பிரசுரிக்கப்பட்டது.
உ. இ என்று கையெழுத்திடப்பட்டிருந்தது.

திரட்டப்பட்ட நூல்கள்,
தொகுப்பு-18.
பக்கம் 355-59.

# மார்க்ஸீயத்தின் மூன்று உற்பத்தி ஸ்தானங்களும் மூன்று உறுப்புக்களும்—என்பதிலிருந்து

## III

நிலப்பிரபுத்துவம் வீழ்த்தப்பட்டு, "சுதந்திரமான" முதலாளித்துவ சமுதாயம் உலகத்தில் தோன்றியபோது, இந்த சுதந்திரத்தின் அர்த்தம் உழைப்பாளி மக்களைச் சுரண்டுகிற, அடக்கி ஒடுக்குகிற ஒரு புதிய சமூக அமைப்புதான் அது என்பது உடனே வெளிப்படையாகத் தெரிந்தது. இந்த ஒடுக்கு முறையைப் பிரதிபலிக்கும் நிலையிலும், ஆட்சேபிக்கும் நிலையிலும் பல்வேறு வகைப்பட்ட சோஷலிஸ்டுக் கோட்பாடுகள் உடனே தோன்றின. ஆயினும், ஆரம்ப காலத்து சோஷலிஸம், "உட்டோப்பிய" சோஷலிஸமாக இருந்தது. அது முதலாளித்துவ சமுதாயத்தை விமர்சனம் செய்தது; அதைக் கண்டனம் செய்தது; அதைப் பழி கூறிற்று; அதை அழிக்க வேண்டும் என்று கனவு கண்டது; இதைவிடச் சிறந்த ஒரு சமூக அமைப்பு பற்றிய கற்பனைப் பார்வைகள் அதற்கு இருந்தன; சுரண்டுதல் பாபச்செயல் என்பதை பணக்காரர்கள் உணரும்படி செய்ய முயற்சி எடுத்துக்கொண்டது.

ஆனால், உட்டோப்பிய சோஷலிஸம் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உண்மையான வழியைக் காட்ட முடியவில்லை. முதலாளித்துவத்தின் கீழ் கூலி அடிமை முறையின் உண்மையான தன்மையை அது விளக்க முடியவில்லை; முதலாளித்துவ வளர்ச்சியின் விதிகளைத் திறந்துகாட்ட முடியவில்லை; அல்லது ஒரு புதிய சமுதாயத்தைப் படைப்பவனாக மாறும் சக்தி படைத்த சமூக சக்தி எது என்பதையும் அது சுட்டிக்காட்ட முடியவில்லை.

இதற்கிடையில், ஐரோப்பாவிலும், குறிப்பாக பிரான்ஸிலும் புயல்போல் வீசியடித்த புரட்சிகளும், அவைகளைத் தொடர்ந்து, நிலப்பிரபுத்துவமும், பண்ணை அடிமை முறையும் வீழ்ச்சியடைந்ததும் எல்லா வகையிலும் வளர்ச்சியின் அடிப்படை, உந்தும் சக்தி என்ற நிலையில் இருப்பது வர்க்கங்களின் போராட்டம்தான் என்பதை மேன்மேலும் தெளிவாக எடுத்துக்காட்டின.

நிலப்பிரபுக்களின் வர்க்கத்தின்மீது அரசியல் சுதந்திரத்தின் எந்த ஒரு வெற்றியையும் முரட்டுத் துணிச்சலுள்ள எதிர்ப்புக்கு விரோதமாக இல்லாமல் வென்றதே கிடையாது. முதலாளித்துவ சமுதாயத்தின் பல்வேறு வர்க்கங்களிடையே ஜீவமரணப் போராட்டத்தின் மூலமாக அல்லாமல் எந்த ஒரு முதலாளித்துவ நாடும் ஏறக்குறைய சுதந்திரமான, ஜனநாயகமான அடிப்படையின்மேல் படிப்படியாக வளர்ச்சியடையவே இல்லை.

இதிலிருந்து உலக சரித்திரம் கற்றுக் கொடுக்கும் பாடத்தை முதலில் சாரமாக பிழிந்தெடுத்ததிலும், அந்தப் பாடத்தை முரணில்லாமல் நடைமுறையில் செயல்படுத்தியதிலும்தான் மார்க்ஸின் மாமேதா விலாசம் அடங்கியிருக்கிறது. அவர் பிழிந்தெடுத்த சாரம்தான் வர்க்கப் போராட்டத்தின் கோட்பாடு.

அரசியலில் பொதுமக்கள் எப்பொழுதும் தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்வது, ஏமாற்றப்படுவது ஆகியவற்றிற்கு முட்டாள் தனமாக பலியானர்கள்; எல்லாவிதமான நீதிநெறி, சமயம், அரசியல், சமூகம் ஆகியவை பற்றிய சொற்றொடர்கள், பிரகடனங்கள், வாக்குறுதிகள் போன்றவைகளுக்குப் பின்னல் இருக்கும் ஏதாவது ஒரு வர்க்கத்தின் நல உரிமைகளைக் கண்டுபிடிக்க அவர்கள் கற்றுக்கொள்வது வரையிலும், அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். ஒவ்வொரு பழைய நிறுவனமும்—அவை எவ்வளவுதான் காட்டுமிராண்டித்தனமாகவும், அழுகிப்போனதாகவும் தோற்றமளித்தாலும்கூட,—குறிப்பிட்ட ஆளும் வர்க்கங்களின் சக்திகளால் நீடித்து, நிலைத்து வைக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையைச் சீர்திருத்தங்களையும், அபிவிருத்திகளையும் ஆதரிக்கிறவர்கள் உணராதது வரையிலும் பழைய சமூக அமைப்பைப் பேணிப் பாதுகாத்து வருகிறவர்களால் எப்பொழுதும் ஏமாற்றப்படுவார்கள். அந்த வர்க்கங்களின் எதிர்ப்பை உடைத்தெறிவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது; அதாவது, நம்மைச் சுற்றிலும் உள்ள அதே சமுதாயத்தில், சக்திகளைக் கண்டு பிடிக்க வேண்டும்; பழைய சமூக அமைப்பைத் துடைத்தெறிந்து, புதிய சமூக அமைப்பைப் படைக்கும் திறம்படைத்த வலிமையாளராக அந்த சக்திகள் அமைய முடியும்; அவர்களுடைய சமூக அந்தஸ்து காரணமாக அவர்கள் அவ்வாறு அமைய வேண்டும்; போராட்டத்திற்காக, அந்தச் சக்திகளுக்கு அறிவுத் தெளிவைக் கொடுத்து, அவைகளை ஸ்தாபன ரீதியாகவும் அமைக்க வேண்டும்.

அடக்கி ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் அனைத்தும் இதுவரையிலும் வாடிவதங்கிக் கொண்டிருந்த ஆன்மீக அடிமைத் தனத்திலிருந்து

தப்பி வெளியேறும் பாதையை மார்க்ஸின் தத்துவ ரீதியான பொருள் முதல்வாதம் ஒன்றே ஒன்றுதான் பாட்டாளி மக்களுக்கு எடுத்துக்காட்டிற்று. முதலாளித்துவத்தின் பொதுவான அமைப்பில் பாட்டாளி மக்களின் உண்மையான நிலையை மார்க்ஸின் பொருளாதார சித்தாந்தம் ஒன்றே ஒன்றுதான் விளக்கிக் கூறியிருக்கிறது.

அமெரிக்காவிலிருந்து ஜப்பான் வரையிலும், ஸ்வீடனிலிருந்து தென் ஆப்பிரிக்கா வரையிலும் உலகம் முழுவதிலும் பாட்டாளி மக்களின் சுயேச்சையான ஸ்தாபனங்கள் பெருகிக் கொண்டிருக்கின்றன. தங்களுடைய வர்க்கப் போராட்டத்தை நடத்துவதன் மூலமாக, பாட்டாளி மக்கள் கல்வி அறிவு உள்ளவர்களாகவும், விழிப்படைந்தவர்களாகவும் மாறி வருகிறார்கள்; முதலாளித்துவ சமுதாயத்தின் தப்பெண்ணங்களிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு வருகிறார்கள்; தங்களுடைய அணிகளை மேன்மேலும் ஒன்றுபடுத்தி வருகிறார்கள்; வெற்றியின் தன்மையை மதிப்பிடவும் கற்றுக் கொண்டு வருகிறார்கள். தங்கள் சக்தியை உருக்குபோல் உரம்பெறச் செய்து வருகிறார்கள். தடுத்து நிறுத்த முடியாத முறையில் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

''பிராஸ் வெஷ்செனியே''
எண்-3, 1913 - மார்ச்-
கையொப்பம் வி. இ

திரட்டப்பட்ட நூல்கள்-
தொகுப்பு - 19
பக்கம் 27-28

# இடதுசாரி நரோடிஸமும், மார்க்ஸீயமும்

**விவசாயிகளின்** நிலம் சுதந்திரமாக கைமாறக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தைப்பற்றி, (அதாவது வாங்கவோ, விற்கவோ, அடமானம் செய்யவோ, சுதந்திரம் இருக்க வேண்டும்) மார்க்ஸிஸ்டுகள் திரும்பத் திரும்பப் பேசியிருக்கிறார்கள். இந்த உண்மையான, நடைமுறைக்கு உகந்த பிரச்சினை நரோட்னிக்குகளின் சிறு முதலாளித்துவ, நிச்சயமாக பிற்போக்குத் தன்மையையும்கூட தெளிவாக எடுத்துக்காட்டுவதற்கு ஒரு வாய்ப்பை அளிக்கிறது.

எல்லா நரோட்னிக்குகளும்—"ரூஸ் சோயே பொகாட்ட்ஸ்வோ" [51]வின் அரை காடெட்டுகளிலிருந்து (செர்னேவ், விக்லியேவ் போன்றவர்கள் தங்களைப் பிசகற்ற முறையில் அழைத்துக் கொண்டதுபோல் "சமூக காடெட்டுகள்") "ஸ்டோய் சயது மிஸ்லி" [52]வின் அதிதீவிர "இடதுசாரி நரோட்னிக்குகள் வரையிலும்—சுதந்திரமாக விவசாயிகளின் நிலம் கைமாறுவதைப் பொதுவாகவும், பிரித்துக் கொடுக்கப்பட்ட நிலம் கை மாறுவதைக் குறிப்பாகவும் எதிர்க்கிறார்கள்.

ஆயினும், மார்க்ஸிஸ்டுகள் "பொருளாதார முன்னேற்றத்தின் வளர்ச்சிப் போக்கை தடுக்கும் எந்த முயற்சியையும் எப்பொழுதும் தொடர்ச்சியாகவும் எதிர்ப்போம்" என்று தங்களுடைய கொள்கை திட்டத்தில் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்கள். உலகம் முழுவதையும் போலவே ரஷ்யாவின் பொருளாதார வளர்ச்சியும் நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவத்திற்கு, விரிவான அளவில் இயந்திர, முதலாளித்துவ உற்பத்தி முறை மூலமாக சோஷலிஸத்திற்கு முன்னேறிச் செல்கிறது.

முதலாளித்துவத்தை மேலும் வளர்த்துக்கொண்டு போவதன் மூலமாகவும், விரிவான அளவில், இயந்திர, முதலாளித்துவ உற்பத்தி மூலமாகவும் அழைத்துச் செல்கிற சோஷலிஸப் பாதையைத் தவிர, "வேறுவிதமான" ஒரு பாதையைப் பற்றி போதை

வெறி கொண்டதுபோல், கனவு காண்பது. ரஷ்யாவில் மிதவாத கனவான்கள், அல்லது பின் தங்கிய, சிறு சொத்துடைமை யாளர்கள் (சிறு முதலாளிகள்) ஆகியவர்களிடையே ஒரு குண பாவமாக இருக்கிறது. இடதுசாரி நரோட்னிக்குகள் மனதில் இன்னும் திணித்து வைக்கப்பட்டிருக்கும் இந்தக் கனவுகள் சிறு முதலாளிகளின் பின் தங்கிய நிலையையும் (பிற்போக்குத் தனத் தையும்) மன உறுதியற்ற நிலையையும் பிரதி பலிக்கின்றன.

ரஷ்யா உள்பட, உலகம் முழுவதும் உள்ள வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்கள், மார்க்ஸீயத்தின் பிசகற்ற தன்மை யில் மேன்மேலும் நம்பிக்கை வைத்து வருகிறார்கள்; காரணம் விரி வான முறையில், இயந்திர, உற்பத்தி முறையானது தொழிலாளர் களைத் தட்டி எழுப்பி வருகிறது என்பதையும், அவர்களுக்கு மறு மலர்ச்சியூட்டி, ஸ்தாபன ரீதியாக அவர்களை அமைத்து வருகிறது என்பதையும், ஒரு பொதுஜன இயக்கத்திற்கான எதார்த்த நிலைமை களை உருவாக்கி வருகிறது என்பதையும் வாழ்வு தானாகவே அவர் களுக்கு நிருபித்துக் காட்டுகிறது.

நிலப்பிரபுத்துவத்தோடு ஒப்பிடும்பொழுது முதலாளித்துவம் முற்போக்கானது என்றும், முதலாளித்துவத்தின் வளர்ச்சியைத் தடை செய்யும் கருத்தானது ஒரு உட்டோப்பியா, முட்டாள்தன மானது, பிற்போக்கானது உழைப்பாளி மக்களுக்கு தீங்கு இழைக் கக்கூடியது என்றும் யாவரும் அறிந்த மார்க்ஸீய முதுரையை "புட் பிராவ்தா"[53] திரும்பவும் ஊர்ஜிதம் செய்தபோது, இடது சாரி நரோட்னிக்கான திரு. என். ரகிட்னிகோவ் "முதலாளித்துவ தூக்குக் கயிற்றின்மேல் முலாம் பூசி வைக்கும் கௌரவமல்லாத கடமையை" மேற்கொண்டிருப்பதாக, "புட் பிராவ்தா" மீது குற்றம் சாட்டினர் (ஸ்மெலாயா மிஸில்" —என்...7).

மார்க்ஸீயத்திலும், சர்வதேச தொழிலாளர் இயக்கத்தின் அனுபவத்திலும் அக்கறை உள்ளவர்கள் அதைப்பற்றி சிந்தனை செய்து பார்க்க வேண்டும்! ஒரு சமயம் முதலாளித்துவ பொருளா தார வாதிகளிடையில் அல்லாமல், திரு. என். ராகிட்னிகோவும், இடதுசாரி நரோட்னிக்குகளும் பகிரங்கமாகத் தெரிவித்திருப்பது போல் மார்க்ஸீயத்தைப் பற்றிய வியக்கத்தக்க முறையில் இத் தகைய அறியாமையைக் காட்டியிருப்பதைப் பார்ப்பது அபூர்வம்.

"மூலதனம்", அல்லது, 'தத்துவத்தின் வறுமை", அல்லது "கம்யூனிஸ்ட் அறிக்கை" ஆகிய நூல்களை திரு. ராகிட்னிகோவ் படிக்கவே இல்லையா? அவர் படிக்கவில்லை என்றால், சோஷலிஸத்

தைப்பற்றி பேசுவதில் அர்த்தமே இல்லை. அது எள்ளி நகையாடத் தக்க முறையில் காலத்தை வீண் விரயம் செய்வதாகும்.

அவர் அவைகளைப் படித்திருக்கிறார் என்றால், அப்பொழுது மார்க்ஸின் நூல்கள் அனைத்திலும் பரவியிருக்கிற அடிப்படையான கருத்தை, மார்க்ஸ் தெரிவித்த பிறகு எல்லா நாடுகளிலும் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கும் இந்தக் கருத்தை, அதாவது நிலப்பிரபுத்துவத்தோடு ஒப்பிடும்பொழுது, முதலாளித்துவம் முற்போக்கானது என்ற கருத்தை அவர் தெரிந்திருக்க வேண்டும். இந்த அர்த்தத்தில்தான் மார்க்ஸும், எல்லா மார்க்ஸிஸ்டுகளும் "முதலாளித்துவ தூக்குக் கயிற்றின்மேல் முலாம்பூசி வைக்கிறார்கள்.!" (ராகிட்னிகோவின் அருவருப்பான, முட்டாள்தனமான வார்த்தைகளையே உபயோகிக்கிறோம்).

சரித்திர பூர்வமான வளர்ச்சியின் நிலைமைகளைப் புரிந்துகொள்ளாத அராஜகவாதிகளோ, அல்லது சிறு முதலாளிகளோ மாத்திரம்தான் இவ்வாறு கூறலாம்: முதலாளித்துவ தூக்குக் கயிறு அல்லது நிலப்பிரபுத்துவ தூக்குக் கயிறு எதுவாக இருந்தாலும் சரி—வித்தியாசமே கிடையாது; இரண்டும் தூக்குக் கயிறுகள் தான்! அதன் அர்த்தம் என்னவென்றால், கண்டனம் செய்வதில் மாத்திரம் தன்னை கட்டுப்படுத்திக்கொள்வது என்பதும், பொருளாதார வளர்ச்சியின் எதார்த்தப் போக்கைப் பார்க்கத் தவறுவது என்பதுமாகும்.

கண்டனம் செய்வது என்றால், நமது தன்னுடைய பார்வை அதிருப்தி என்பதேயாகும். நிலப்பிரபுத்துவம் முதலாளித்துமாக பரிணாம வளர்ச்சியடையும் எதார்த்த வளர்ச்சிப் போக்கானது, உழைக்கும் மக்களில் கோடானுகோடிப் பேர்களை—நகரங்கள். இருப்புப்பாதைகள், பெரிய தொழிற்சாலைகள் தொழிலாளர்கள் இருப்பிடம் மாறுவது ஆகியவற்றால்—நிலப்பிரபுத்துவத்தின் கொடுங்கோன்மை நிலைமையிலிருந்து தப்பிக்க ஏதுவாகிறது. முதலாளித்துவமே அவர்களைத் தட்டி எழுப்பி, அவர்களை ஸ்தாபன ரீதியாக அமைக்கிறது.

நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம்—இரண்டுமே—தொழிலாளர்களை அடக்கி ஒடுக்குகின்றன; அவர்களை அறியாமையில் வைத்திருக்க முயல்கின்றன. ஆனால், நிலப்பிரபுத்துவம் கோடானுகோடி விவசாயிகளை அடக்கி ஒடுக்கி. கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட நிலையில் வைத்திருக்க முடியும்; பல் நூற்றாண்டுகளாக அவ்வாறு வைத்திருந்தது. (உதாரணமாக, ரஷ்யாவில் ஒன்பதாவது நூற்

ருண்டிலிருந்து, பத்தொன்பதாவது நூற்ருண்டுவரையிலும், சீனுவில் இன்னும் அதிகமான நூற்ருண்டுகள் வரையிலும்). ஆனுல் முதலாளித்துவமோ, இயங்க முடியாத நிலையிலும், மரத்துப்போன நிலையிலும், அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையிலும், அறியாமையிலும் தொழிலாளர்களை வைத்திருக்க முடியாது.

நிலப்பிரபுத்துவம் நிலவி வந்த நூற்றுக்கணக்கான ஆண்டுகள் உழைக்கும் மக்களை மரத்துப் போனவர்களாகச் செய்த நூற்ருண்டுகளாக இருந்தன.

முதலாளித்துவத்தில் பல பத்தாண்டு கணக்கான காலம் கூலிக்கு உழைக்கும் கோடானுகோடி தொழிலாளர்களைத் தட்டி எழுப்பியிருக்கிறது.

இடதுசாரி நரோட்னிக் உடன் பிறப்பாளரான கனவான்களே, இதைப் புரிந்துகொள்ள நீங்கள் தவறியிருப்பது எதைக்காட்டுகிறது என்ருல், சோஷலிஸத்தைப்பற்றி நீங்கள் எதையும் புரிந்து கொள்ளவே இல்லை என்பதைத்தான்; அல்லது, எதார்த்த நிலைமைகளால் கோடானுகோடி மக்கள் ஈடுபட்டிருக்கும் ஒரு போராட்டத்திலிருந்து, சோஷலிஸத்தை ஒரு இரக்க மனப்பான்மையுள்ள பழைய கனவான்களின் கட்டுக்கதைக்கு மாற்றுகிறீர்கள் என்பதுதான்.

பிரித்துக் கொடுக்கப்பட்ட நிலத்தைக் கைமாற்றம் செய்வதற்கு சுதந்திரம் கொடுப்பதைக் கொஞ்சம் கட்டுப்படுத்துவது என்பது கூட, உண்மையில் பிற்போக்கானதாகும், நிலப்பிரபுத்துவத்திற்கு ஆதரவு கொடுப்பதாகும்.

பிரித்துக் கொடுக்கப்பட்ட நிலத்தைக் கைமாற்றம் செய்வதில் கட்டுப்பாடுகளை விதிப்பதானது, பொருளாதார வளர்ச்சியைத் தடை செய்கிறது; கூலிக்கு உழைக்கும் தொழிலாள வர்க்கம் உருவாவதற்கும், வளர்ச்சியடைவதற்கும், விழிப்படைவதற்கும், ஸ்தாபனத்தை அமைப்பதற்கும் முட்டுக்கட்டை போடுகிறது; தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியவர்களின் நிலைமைகளை படுமோசமாக்குகிறது; நிலப்பிரபுக்களின் செல்வாக்கை அதிகரிக்கிறது.

பெஷெக்கோனேவ்களும், ராகிட்னிகோவ்களும் விவசாயிகளின் நிலத்திற்கு கைமாற்றம் செய்யும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வாதாடும்போது, அவர்கள் திட்டவட்டமாக இந்த "ரகங்களை"ச் சேர்ந்த உண்மையான ஆதரவாளர்கள் தான்.

"ட்ருடோவாயா பிராவ்தா"—
எண் - 19
1914 - ஜூன் - 19

திரட்டப்பட்ட நூல்கள்
எண் - 20
பக்கம் - 372 - 74

# கார்ல் மார்க்ஸ்

மார்க்ஸியத்தின் ஒரு மேலோட்ட விளக்கத்தோடு, வாழ்க்கைப் பற்றி சுருக்கமான வருணனையும்.

## சோஷலிஸம்

தற்கால சமுதாய வளர்ச்சியின் பொருளாதார விதியிலிருந்து, முதலாளித்துவ சமுதாயம் சோஷலிஸ்டு சமுதாயமாக முழுமையாகவும், ஊலப்பற்ற முறையிலும் மாறி அமைவது தவிர்க்க முடியாதது என்று இறுதியான முடிவுக்கு வந்திருந்ததை மேலே குறிப்பிட்டிருப்பதிலிருந்து தெளிவாகக் காணலாம். மார்க்ஸ் இறந்த பிறகு கடந்த அரை நூற்றுண்டுகாலத்தில் உழைப்பு சோஷலிச மயமாக்கப்படுவது ஆயிரக்கணக்கான வடிவங்களில் முன்னேக்காட்டிலும் வேகமாக முன்னேறி வருகிறது; பெரிய அளவில் உற்பத்தி முறை வளர்ச்சியடைந்திருப்பதிலும், ஏகபோக முதலாளித்துவ கூட்டு நிறுவனங்களான கார்டெல்கள், ஸிண்டிகேட்டுகள், டிரஸ்டுகள் ஆகியவை வளர்ச்சியடைந்திருப்பதிலும், பண மூலதனத்தின் அதிகாரமும் வீச்சும் மிகப் பிரம்மாண்டமான அளவில் அதிகரித்திருப்பதிலும் அது தானகவே மிகத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது; இவ்வாறு உழைப்பு சோஷலிஸ மயமாக்கப்படுவதானது, சோஷலிஸம் தவிர்க்க முடியாத வகையில் உதயமாவதற்கு முதன்மையான பொருளியல் அஸ்திவாரத்தை நல்கி வருகிறது. இந்த உருமாற்றத்தின் அறிவு ஆற்றல் சார்ந்த, தார்மீக இயக்கு சக்தியும், செயல்படுத்தும் உருவ அமைப்பும் எது என்றால், முதலாளித்துவத்தாலேயே பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கும் பாட்டாளி மக்கள்தான். பாட்டாளி மக்கள் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள்: உள் அடக்கத்தில் எப்பொழுதும் செழுமையாக இருக்கும் பல்வேறு வடிவங்களில் இந்தப் போராட்டம் நடைபெறுகிறது; பாட்டாளி மக்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் அரசியல் போராட்டமாகத் தவிர்க்க முடியாத வகையில் திருப்பிவிடப்படுகிறது ("பாட்டாளி மக்களின்

சர்வாதிகாரம்''). உற்பத்தியை சோஷலிஸ மயமாக்குவதானது, உற்பத்தி சாதனங்களைச் சமுதாயத்தின் பொதுச் சொத்தாக மாற்றுவதிலும், ''அபகரித்திருப்பவர்களை அபகரிப்பதிலும்'' கூட்டுச் செல்லாமல் இருக்க முடியாது. உழைப்புத் திறன் அமோகமாக உயர்வது, வேலை நேரம் குறைவது, சிந்திச் சிதறிக் கிடக்கிற, புராதன காலத்து, சிறிய அளவில் உற்பத்தி செய்யும் முறையின் அழிந்துபோன, மீதமிச்சங்களுக்குப் பதிலாக கூட்டுமுறையிலும், அபிவிருத்தி செய்யப்பட்ட முறையிலும் உற்பத்தியை அமைப்பது இந்த உருமாற்றத்தின் நேரடியான விளைவுகள் இவ்வாறுதான் இருக்கின்றன. விவசாயத்திற்கும் தொழிலுக்கும் இடையே உள்ள பிணைப்புக்களை முதலாளித்துவம் நிரந்தரமாக அறுத்தெரிகிறது; ஆனால் அதே சமயத்தில் அதன் உயர்ந்த வளர்ச்சியின் மூலமாக அந்தப் பிணைப்புக்களுக்கு புதிய அம்சங்களைத் தயார் செய்கிறது; அதாவது உணர்வு பூர்வமாக விஞ்ஞானத்தைப் புகுத்துவது, கூட்டு உழைப்பைப் புகுத்துவது ஆகியவற்றின் அடிப்படையிலும், மனித மக்கட் தொகையை மறு வினியோகம் செய்வதன் மூல மாகவும் (இவ்வாறு பின் தங்கிய நிலையிலும், தனிமையான நிலையிலும், நாகரிகமற்ற நிலையிலும், கிராமப்புறங்கள் இருப் பதற்கும், பெரிய நகரங்களில் செயற்கையாக ஏராளமான மக்கள் திரள் குவிக்கப்பட்டிருப்பதற்கும் முற்றுப்புள்ளி வைப்பதன் மூலமாகவும்) புதிய அம்சங்கள் தயாரி செய்யப்படும்.

இன்றைய கால முதலாளித்துவத்தின் உயர்ந்த வடிவங்களால் குடும்பத்தின் ஒரு புதிய வடிவமும், பெண்களின் அந்தஸ்தில் புதிய நிலைமைகளும், இளைய தலைமுறைகளை வளர்ப்பதில் புதிய நிலைமை களும் தயார் செய்யப்படும்; பெண்களும், குழந்தைகளும், வேலை செய்வதும், ஆண் குடும்பத் தலைவன் என்ற பண்டைக்கால குடும்ப உறவை முதலாளித்துவம் அழிப்பதும் நவீன சமுதாயத்தில் பயங் கரமான, வெறுப்பூட்டுகிற, அழிவை உண்டாக்கக்கூடிய வடிவங் களை எடுப்பது தவிர்க்க முடியாத காரியமாகும். ஆயினும், ''வீட்டுத் தொழிலுககுரிய துறைக்கு வெளியே, சமூக ரீதியில் ஸ்தா பன ரீதியாக அமைக்கப்பட்டிருக்கும் உற்பத்தியின் நடைமுறைப் போக்கில் ஒரு முக்கியமான பகுதியாக இருக்கும்'' நவீன தொழில்—அது அவ்வாறு இருப்பதால் அதற்கு அத்தகைய பெயா கொடுககப்பட்டிருககிறது—பெண்களுக்கும், ஆண், பெண் இளைஞர் களுக்கும், குழந்தைகளுக்கும், குடும்ப உறவுகளிலும், ஆண்களுக் கும், பெண்களுககும் இடையே உள்ள உறவுகளிலும் ஒரு உயர்ந்த வடிவத்திற்கு அவசியமான ஒரு புதிய பொருளாதார அஸ்திவாரத் தைச் சிருஷ்டிக்கிறது. டியூடானியர்களின் கிறுஸ்தவ குடும்ப வடி வங்கள் மாற்ற முடியாதது, இறுதியானது என்று கூறுவது எந்த

அளவுக்கு முட்டாள்தனமானதோ, அந்த அளவிற்கு இந்தத் தன்மையை ரோமானிய, புராதனகால கிரேக்க, அல்லது கிழக்கு நாட்டு குடும்ப வடிவங்களுக்கு அனுஷ்டிப்பதும் முட்டாள்தனமானதாகும்; இவைகளை ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால், சரித்திரப் பூர்வமான வளர்ச்சியில் தொடர்ந்து வரும் வரிசையாக அமையும். மேலும் கூட்டாக வேலை செய்யும் குழுவில் ஆண், பெண் இருபாலாரையும் சேர்ந்த தனி நபர்களும், எல்லா வயதைச் சேர்ந்தவர்களும் அடங்கியிருப்பதால், அவசியமாகவும், பொருத்தமான நிலைமைகளின் கீழும் பண்புநயமுடைய வளர்ச்சியின் ஊற்றாக மாறுகிறது; ஆயினும் அது தானாகவே வளர்ச்சியடைந்த மிருகத்தனமான முதலாளித்துவ வடிவத்தில் இருந்தால், தொழிலாளி உற்பத்தியின் வளர்ச்சிப் போக்கிற்காக இருக்கிறானே தவிர, தொழிலாளிக்காக உற்பத்தியின் வளர்ச்சிப் போக்கு இருப்பது கிடையாது; இது ஊழல், அடிமைத்தனம் ஆகியவற்றின் அழிவை உண்டாக்குகிற ஊற்றாக இருக்கிறது என்று மார்க்ஸ் கூறுகிறார் ("மூலதனம்"— தொகுப்பு 1—13வது அத்தியாயத்தின் இறுதி) தொழிற்சாலை முறை அமைப்பானது.

"எதிர் காலத்தின் கல்வியின் ஜீவ அணுவாக இருக்கிறது; ஒவ்வொரு குழந்தையையும் எடுத்துக் கொண்டால், ஒரு குறிப்பிட்ட வயதில் கட்டுப்பாட்டுப் பயிற்சி அமைப்பு முறை, அறிவூட்டல் ஆகியவற்றோடு உற்பத்தித்திறம் வாய்ந்த உழைப்பை இணைக்கிற ஒரு கல்வியாக இருக்கும்; சமூக உற்பத்தியின் செயல் திறமையை மேலும் சேர்க்கிற முறைகளில் ஒன்றாக இருப்பதோடு, முழுமையான வளர்ச்சியடைந்த மனித உயிர்களை உற்பத்தி செய்யும் ஒரே ஒரு முறையாகவும் இருக்கும்" (முன்னால் கூறப்பட்ட நூலிலிருந்து).[54] மார்க்ஸின் சோஷலிஸம் தேசிய இனம், அரசு ஆகிய இரண்டும் சம்பந்தமான பிரச்சினைகளை அதே சரித்திர பூர்வமான அடிப்படையில்—கடந்த காலத்தை விவரிக்கும் அர்த்தத்தில் மாத்திரமல்ல, எதிர்காலத்தை தைரியமாக முன்கூட்டியே கூறுவது, அதைப் பெறுவதற்காக தைரியமாக நடைமுறையில் செயல்படுவது என்ற அர்த்தத்திலும்—வைக்கிறது. சமூக வளர்ச்சியின் முதலாளித்துவ சகாப்தத்தின் தவிர்க்க முடியாத ஒரு உற்பத்தியாக, தவிர்க்க முடியாத ஒரு வடிவமாக இருக்கிறது. நாடுகள் தொழிலாளவர்க்கமானது "ஒரு நாட்டிற்குள்ளேயே தன்னை அமைத்துக்கொள்ளாமல்" "நாட்டினராக (இல்லாமல் வார்த்தையின் முதலாளித்துவ அர்த்தத்தில் அல்ல") வலிமையானதாக வளர முடியாது, பக்குவமடைந்து, உருவெடுக்க முடியாது. ஆயினும் முதலாளித்துவ வளர்ச்சியானது தேசிய தடை வேலிகளை மேன்

மேலும் உடைத் தெறிகிறது; தனித் தேசமாக ஒதுங்கியிருப்பதை அகற்றுகிறது. தேசிய முரண்பாடுகளுக்குப் பதிலாக, வர்க்க முரண் பாடுகளைப் புகுத்துகிறது. ஆகவே, வளர்ச்சியடைந்த முதலாளித் துவ நாடுகளைப் பொறுத்த வரையிலும், "உழைக்கிற மக்களுக்கு தேசம் கிடையாது" என்பதும், குறைந்த பட்சம் நாகரிக நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் "பாட்டாளி மக்களின் விடுதலைக்காக ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டியது முதல் நிபந்தனைகளில் ஒன் ருகும்" என்பதும் முற்றிலும் உண்மைதான் ("கம்யூனிஸ்ட் அறிக்கை)[53]. ஒரு முகப்படுத்தப்பட்ட பலாத்காரமாக உரிமை யைத் தடை செய்யும் ஆட்சியாக இருக்கும் அரசு, சமுதாயத்தின் வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், அதாவது சமுதாய மானது சமரசம் காண முடியாத முரண்பட்ட வர்க்கங்களாகப் பிளவுபட்ட போது, சமுதாயத்திற்கு அப்பால் இருப்பதாக வேஷம் போடுகிற, அதே சமயத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு சமுதாயத்தி லிருந்து விலகி இருக்கிற ஒரு "அதிகாரக் குழு" இல்லாமல் நிலைத் ருக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டபோது தவிர்க்க முடியாத வகை யில் தோன்றிற்று. வர்க்க முரண்பாடுகளிலிருந்து தோன்றிய அரசு, "...பெரிதும் வலிமை பெற்ற, பொருளாதார ரீதியில் மேலாதிக்கம் வகிக்கிற வர்க்கத்தின் அரசாக மாறிற்று. இது, அரசு என்ற இடைத்தரக் கருவி மூலமாக அரசியலிலும் மேலாதிக்கம் வகிக்கும் வர்க்கமாக மாறுகிறது; இவ்வாறு, அடக்கி ஒடுக்கப் பட்ட வர்க்கத்தைச் சுரண்டுவதற்கும் அடக்கி வைத்திருப்பதற்கும் புதிய வழிவகைகளைப் பெறுகிறது; இம்மாதிரியாக, பண்டைக் காலத்து அரசு, யாவற்றிற்கும் மேலாக அடிமைகளை அடக்கி ஒடுக்கி வைத்திருப்பதற்காக இருந்த அடிமை எஜமானவர்களின் அரசாக இருந்தது; இதேபோல் நிலப்பிரபுத்துவ அரசு, விவசாயப் பண்ணை அடிமைகளையும், ஆண் அடிமைகளையும் அடக்கி ஒடுக்கி வைத்திருப்பதற்காக இருந்த பிரபுக்களின் ஸ்தாபனமாக இருந்தது; நவீன பிரதிநிதித்துவ அரசு, கூலிக்கு உழைக்கும் தொழிலாளர்களை மூலதனம் சுரண்டுவதற்காக இருக்கும் ஒரு கருவியே", ("குடும்பம், தனிச் சொத்துரிமை, அரசு ஆகியவை தோன்றியது" எங்கல்ஸ் எழுதியது; இதில் ஆசிரியர் தமது கருத் தையும், மார்க்ஸின் கருத்தையும் விவரிக்கிறுர்).[56] பெரிதும் சுயேச்சையான, முற்போக்கான வடிவத்தில் உள்ள முதலாளித்துவ அரசின் ஜனநாயகக் குடியரசு கூட, எந்த வகையிலும் இந்த உண்மைக்கு அப்பாற் பட்டதில்லை; ஆனல், அதன் வடிவத்தை மாத்திரம் மாற்றியமைக்கிறது (பங்கு மாற்று நிறுவனத்திற்கும் சர்க்காருக்கும் இடையேயுள்ள இணைப்புகள், அதிகார வர்க்கம், பத்திரிகைகள் ஆகியவைகளின் நேரடியான, மறைமுகமான ஊழல், இன்னும் இவை போன்றவை). வர்க்கங்களை ஒழிப்பதை

நோக்கி அழைத்துச் செல்வதன் மூலமாக சோஷலிஸ அரசையே ஒழிப்பதை நோக்கி அழைத்துச் செல்லும். "டூரிங்கிற்கு எதிராக" என்ற நூலில் எங்கல்ஸ் பின் வருமாறு எழுதுகிறார்; "சமுதாய முழுவதின் பிரதிநிதி என்று அரசு தன்னைத்தானே அமைத்துக் கொள்கிறது என்ற தன்மையினால், சமுதாயத்தின் பெயரால் உற்பத்தி சாதனங்களைக் கைவசப்படுத்திக் கொள்ளும் முதல் நடவடிக்கையானது, ஒரு அரசு என்ற நிலையில் அதே சமயத்தில் கடைசி சுயேச்சையான நடவடிக்கையாகவும் இருக்கிறது. சமூக உறவுகளில் அரசு தலையிடுவதானது ஒரு துறைக்குப் பின் மற்றொரு துறை என்ற அடிப்படையில் மேலெழுந்த வாரியாக இருக்கும்; பிறகு தானாகவே நின்றுவிடும். நபர்களின் சர்க்காருக்குப் பதிலாக, பொருள்களை நிர்வாகம் செய்வது என்பதும், உற்பத்தியின் நடைமுறைப் போக்கிற்கு வழிகாட்டுவது என்பதும் ஏற்படுகிறது. அரசு "ஒழிக்கப்படவில்லை", அது வாடி வதங்கிப்போகிறது".[57] "உற்பத்தியாளர்களின் சுயேச்சையான சரிசமத்துவமான கூட்டமைவு என்பதன் அடிப்படையில் உற்பத்தியை அமைக்கும் சமுதாயம் அரசு இயந்திரம் முழுவதையும் ஒரு இடத்தில் வைக்கும்; அப்பொழுது அது பண்டைக்கால பொருள்களின் கண்காட்சி சாலைக்குச் சொந்தமாக இருக்கும்; கைராட்டினத்திற்கு பக்கத்திலும், செப்புக் கோடரிக்குப் பக்கத்திலும் வைக்கப்படும்" என்று எங்கல்ஸ் எழுதுகிறார் ("குடும்பம், தனிச் சொத்துரிமை, அரசு தோன்றியது" என்ற நூலில்).[58]

இறுதியாக, சிறு விவசாயிகள் சம்பந்தமாக மார்க்ஸின் சோஷலிஸத்தின் கண்ணோட்டம் என்னவென்றால், உரிமையை அபகரிக்கப் படுபவர்களின் உரிமை அபகரிக்கப்படும் கால கட்டத்தில் நீடித்திருக்கும்; மார்க்ஸின் கருத்து என்ன என்பதைத் தெரிவிக்கும் எங்கல்ஸின் பிரகடனத்தை நாம் குறிப்பிடுகிறோம் ..... 'அரசு அதிகாரம் நமது கைவசத்தில் இருக்கும்போது, பெரிய நிலச்சுவான்தார்கள் விஷயத்தில் செய்ய வேண்டியிருப்பதுபோல், சிறு விவசாயிகளின் நிலத்தைப் பலாத்காரமாக அபகரிப்பதை பற்றி நாம் நினைக்கவே மாட்டோம் (நஷ்ட ஈடு கொடுத்தா, அல்லது நஷ்ட ஈடு கொடுக்காமலா என்பதைப் பொருட்படுத்தாமல்). சிறு விவசாயிகள் சம்பந்தமாக நமது கடமை எதில் அடங்கியிருக்கிறது என்றால், முதலாவதாக அவனுடைய தனிப்பட்ட தொழிலையும், தனிப்பட்ட உடமையையும் கூட்டுறவு சங்கங்களில் மாற்றும்படி செய்வதுதான்; பலாத்காரமாக அல்லாமல், உதாரணத்தின் மூலமாகவும், இந்த நோக்கத்திற்காக சமூக உதவி செய்ய முன்வருவதன் மூலமாகவும் இதைச் செய்யவேண்டும். அதற்குப் பிறகு, இன்று கூட விவசாயிக்குத் தெளிவாகத் தெரியவேண்டியிருக்கிற

எதிர்கால அனுகூலங்களை சிறு விவசாயிக்கு எடுத்துக்காட்டுவதற்கு நம்மிடம் ஏராளமான வழிவகைகள் இருக்கும் ("பிரான்ஸிலும், ஜெர்மனியிலும் விவசாயிகள் பிரச்சினை" எங்கல்ஸ் எழுதிய நூல் 59; பக்கம்-17. அலெக்ஸேயேவ் பிரசுரித்தது; ரஷ்ய மொழி பெயர்ப்பில் பிழைகள் இருக்கின்றன; மூலம் "டைநியூஜிட்").

## பாட்டாளி மக்களின் வர்க்கப் போராட்டத்தின் செயல் தந்திரங்கள்

தொடக்ககாலத்து பொருள் முதல்வாதத்தில் உள்ள முக்கியமான குறைபாடுகளை 1844-45-ம் ஆண்டு காலத்தின் ஆரம்பத்திலேயே பரிசீலனை செய்தபிறகு, அதாவது நடைமுறை புரட்சிகரமான நடவடிக்கைகளின் நிலைமைகளைப் புரிந்துகொள்ள முடியாமல் இருந்ததை, அல்லது அதன் முக்கியத்துவத்தைச் சரியாக மதிப்பீடு செய்ய முடியாமல் இருந்ததைப் பரிசீலனை செய்த பிறகு, மார்க்ஸ் தமது தத்துவ ரீதியான ஆராய்ச்சி வேலைகளோடு கூடவே, பாட்டாளி மக்களின் வர்க்கப்போராட்டத்தின் செயல் தந்திரம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் அவருடைய வாழ்நாள் முழுவதும் இடைவிடாமல் கவனத்தைச் செலுத்தினர். இது சம்பந்தமான ஏராளமான விவரங்கள் மார்க்ஸின் எல்லா நூல்களிலும், குறிப்பாக 1913-ல் பிரசுரிக்கப்பட்ட எங்கல்ஸுக்கு எழுதிய கடிதங்களின் நான்கு தொகுப்புகளில் அடங்கியிருக்கின்றன. இந்த விவரங்களை இன்னும் போதிய அளவு ஒன்று சேர்க்கவில்லை, திரட்டவில்லை, பரிசீலனை செய்து, கற்கவில்லை. ஆகவே, பெரிதும் பொதுப்படையான, சுருக்கமான குறிப்புரைகளை மாத்திரம் எடுத்துக் கொள்வதில், அதாவது இந்த அம்சம் இல்லையென்றால், பொருள் முதல்வாதமானது பூர்த்தியடையாதது, ஒருதலை பட்சமானது, உயிரற்றது என்று மார்க்ஸ் கருதியது நியாயமானது தான் என்பதை வலியுறுத்துவதில் நம்மை ஈடுபடுத்திக்கொள்வோமாக. அவருடைய பொருள்முதல் தர்க்கஇயல் வாதத்தின் "வெல்டான்ஷ்சாங்"கின் அடிப்படைக் கருத்திற்குக் கண்டிப்பாகப் பொருத்தமான முறையில் மார்க்ஸ் பாட்டாளி மக்களின் செயல் தந்திரத்தின் அடிப்படையான கடமையை வரையறுத்துக் கூறினர். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில், முற்றிலும் எல்லா வர்க்கங்களுக்கும் இடையிலும் உள்ள உறவுகளின் ஒட்டுமொத்தத்தைப் பற்றி எதார்த்தமான ஆராய்வு மாத்திரம் தான், அதைத் தொடர்ந்து அந்த சமுதாயம் அடைந்திருக்கும் வளர்ச்சியின் எதார்த்த சட்டத்தையும், அதற்கும் மற்ற சமுதாயங்களுக்கும் இடையே உள்ள உறவுகளின் வளர்ச்சியின் கட்டத்தையும் ஆராய்வு மாத்திரம்தான் முன்னேற்றமடைந்த வர்க்கத்தின் சரியான செயல் தந்திரத்திற்கு ஒரு அடிப்படையாகப்

பயன்படமுடியும். அதே சமயத்தில், எல்லா வர்க்கங்களும், எல்லா நாடுகளும் இடங்காமல் அசைவற்று இருக்கின்றன என்று கருதப்படவில்லை; அதற்குமாருக, இயங்கும் ஆற்றல் படைத் தவைகளாகவும் அதாவது இயங்காமல் அசைவற்று இருக்க வில்லை, இயங்கும் நிலையில் இருக்கின்றன. (ஒவ்வொரு வர்க்கத்தி னுடைய அப்பொழுது நிலவும் பொருளாதார நிலைமைகளால் அவைகளின் விதிகள் நிர்ணயம் செய்யப்படுகின்றன )

அசைவு என்பது, அதைப் பொறுத்த வரையிலும், கடந்த காலத்தைச் சேர்ந்தது என்பது மாத்திரமல்ல. ஆனால், நிகழ் காலத்தைச் சேர்ந்ததாகவும் அந்த நிலையிலிருந்து கருதப்படுகிறது. எனினும் இது, மெதுவான மாற்றங்களையே காணும். "பரிணும வாதிகள்" கொச்சையாகப் புரிந்து கொள்வதைப் போன்று அல்ல. மாருக, தர்க்க இயல் அடிப்படையிலாகும்.

வளர்ச்சியை இவ்வளவு பிரம்மாண்ட அடிப்படையில் பார்த் தால் இருபது ஆண்டுகள் என்பது ஒரு நாள்தான். பின்னர் இருபது ஆண்டுகள் உட்கொள்ளும் காலமும் வரலாம்" என்று, எங்கல்ஸுக்கு மார்க்ஸ் எழுதினார். ("பிரிஷ்வீஷல்" தொகுப்பு 3-பக்கம் 127) [60] வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு தருணத்திலும் பாட்டாளி மக்களின் செயல் தந்திர மானது மனித சரித்திரத்தின் இந்தத் தவிர்க்க முடியாத எதார்த்த தர்க்க இயலைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்; ஒரு புறத்தில், முன்னேற்ற மடைந்த வர்க்கத்தின் வர்க்க உணர்வு, பலம், போர்க்குணம் ஆகியவற்றை வளர்க்கும் பொருட்டு அரசியல் தேக்கநிலை கட்டங்களை, அல்லது "அமைதியான முறையில்" வளர்ச்சி என்று அழைக்கப்படும் மந்தமான நிலை கட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; மறு புறத்தில், இந்தப் பயன் படுத்தும் சட்டவேலைகள் அனைத்தையும் அந்த வர்க்கத்தின் முன்னேற்றத்தை "இறுதி லட்சியத்தை" நோக்கித் திருப்பி விட வேண்டும்; "இருபது ஆண்டுகளை உட்கொண்டிருக்கும்" மகத்தான காலங்களில், மகத்தான கடமைகளுக்கு நடைமுறையில் தீர்வு காணும் சக்தியை அதற்கு சிருஷ்டிக்க வேண்டும். இது சம்பந்த மாக மார்க்ஸின் இரண்டு வாதங்கள் விசேஷ முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. "தத்துவத்தின் வறுமை" என்ற நூலில் இதில் ஒன்று அடங்கியிருக்கிறது; இது பாட்டாளி மக்களின் பொருளா தாரப் போராட்டங்கள், பொருளாதார ஸ்தாபன அமைப்புக்கள் சம்பந்தப்பட்டது; மற்றொன்று "கம்யூனிஸ்ட் அறிக்கையில்" அடங்கியிருக்கிறது; இது, பாட்டாளி மக்களின் அரசியல் கடமைகள் சம்பந்தப்பட்டது. முன்னால் குறிப்பிடப்பட்டிருப்பது

பற்றி பின் வருமாறு கூறுகிறார்: "விரிவான அளவில் உள்ள தொழில் இது வரையிலும் முன் பின் தெரியாத மக்களின் கூட்டத்தை ஒரு இடத்தில் குவிக்கிறது. போட்டியானது அவர்களுடைய நலன்களைப் பிரிக்கிறது. ஆனால், கூலியைப் பாதுகாக்க வேண்டும்; முதலாளிக்கு எதிரான இந்தப் பொதுவான நலன் எதிர்ப்பு— இணைதல்—என்ற பொதுவான எண்ணத்தில் அவர்களை ஒன்று சேர்க்கிறது...... இணைவது என்பது. தொடக்கத்தில் தனித்தனியாக இருந்தபோதிலும் கூட, அவர்களைக் குழுக்களாக அமைக்கின்றன...... எப்பொழுதும் ஒன்றுபட்டிருக்கும் மூலதனத்திற்கு முன்னால், கூலியைக் காட்டிலும் அதிகமாக சங்கத்தைப் பாதுகாப்பது அவர்களுக்கு (அதாவது தொழிலாளர்களுக்கு) தேவையாக மாறுகிறது... இந்தப் போராட்டத்தில்—ஒரு அசல் உள்நாட்டுப் போரில்—நடக்க விருக்கும் ஒரு போராட்டத்திற்குத் தேவையான அம்சங்கள் அனைத்தும் ஒன்றுபடுகின்றன, வளர்கின்றன. அது இந்த முனையை ஒரு தடவை அடைந்தவுடன், சங்கம் அரசியல் தன்மையைப் பெறுகிறது."[61] இங்கு பொருளாதாரப் போராட்டத்திற்கும், எதிர்காலத்தில் பல பத்தாண்டுகளுக்கான தொழிற்சங்க இயக்கத்திற்கும், "நடக்க விருக்கும் போராட்டத்திற்கு" பாட்டாளி மக்கள் தங்களது சக்திகளைத் தயார் செய்யும் நீண்டகால கட்டத்திற்கும் அவசியமான செயல் திட்டத்தையும், செயல் தந்திரத்தையும் நாம் பார்க்கிறோம். பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தை உதாரணமாகக் காட்டி மார்க்ஸும், எங்கல்ஸும் குறிப்பிட்டிருக்கும் ஏராளமான விவரங்களோடு இவை அனைத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்; தொழிலில் "சுபிட்சம்" ஏற்படுவதானது, எவ்வாறு "பாட்டாளி மக்களை விலைக்கு வாங்குவதற்கு" முயல்வதில் இழுத்துச் செல்கிறது என்பதையும், போராட்டத்திலிருந்து அவர்களை திசைதிருப்பி விடுவதிலும் இழுந்துச் செல்கிறது என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் (பிரிஷ்வேஷல்" — தொகுப்பு-1-பக்கம் 136);[62] இந்தத் தொழில் சுபிட்சம் பொதுவாக எவ்வாறு "தொழிலாளர்களைச் சோர்வடையச் செய்கிறது" என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் (தொகுப்பு 2 பக்கம 218); பிரிட்டிஷ் பாட்டாளி மக்கள் எவ்வாறு "முதலாளித்துவ மயமாகி வருகிறார்கள்" என்பதையும், "எல்லா நாடுகளிலும் அதிகமாக முதலாளித்துவ மயமாகி இருக்கும் இந்தப் பாட்டாளி மக்கள் முதலாளித்துவத்தோடு கூடவே ஒரு முதலாளித்துவ உயர் குடியினர் ஆட்சியையும், ஒரு முதலாளித்துவ பாட்டாளி மககளையும் அமைப்பதையே வெளிப்படையாக இறுதியில் நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்" என்பதையும் சுட்டிக் காட்டினார்கள்: (தொகுப்பு 2 பக்கம் 290);[63] அதன் "புரட்சிகரமான ஆற்றல்" எவ்வாறு கரைந்துவிடு

கிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் (தொகுப்பு 3 பக்கம் 124) "வெளிப்படையான முதலாளித்துவ தொத்து நோயிலிருந்து பிரிட்டிஷ் தொழிலாளர்கள் தங்களை விடுவித்துக் கொள்வதற்கு" எவ்வாறு நீண்ட காலம் தேவைப்படும் என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் (தொகுப்பு 3 பக்கம் 127); "பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கமானது எவ்வாறு "சார்ட்டிஸ்டுகளின்[64] மன உறுதி போதிய அளவு இல்லாமல் இருக்கிறது" என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். (1866-தொகுப்பு-3-பக்கம், 305) [65] பிரிட்டிஷ் தொழிலாளர்களின் தலைவர்கள் எவ்வாறு "ஒரு தீவிர வாத முதலாளிக்கும், ஒரு தொழிலாளிக்கும்" இடையே உள்ள ஒரு ரகம் நபர்களாக மாறி வருகிறார்கள் என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் (ஹோல்யோக் சம்பந்தமாகக் குறிப்பிடு கிறார்கள்—தொகுப்பு 4 பக்கம்-209); பிரிட்டன் ஏகபோக உரிமை கொண்டாடும் நிலையில் இருப்பதாலும், அந்த ஏகபோக நிலை நீடிப்பது வரையிலும் "பிரிட்டிஷ் தொழிலாளி அசையவே மாட்டான்" என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் (தொகுப்பு 4 பக்கம்-433) [66] தொழிலாள வர்க்கத்தின் இயக்கத்தின் பொது வான வளர்ச்சிப் போக்கு (விளைவும் கூட) சம்பந்தமாக பொருளா தாரப் போராட்டத்தின் செயல் தந்திரங்களை, குறிப்பிடத் தக்க விரிவான, புரிந்து கொள்ளக் கூடிய, தர்க்க இயலான, அப்பழுக் கற்ற புரட்சிகரமான நிலையிலிருந்து இங்கு ஆராய்ச்சி செய்யப் படுகிறது.

அரசியல் போராட்டத்தின் செயல் தந்திரங்கள் சம்பந்த மாக "கம்யூனிஸ்ட் அறிக்கை" ஒரு அடிப்படையான மார்க்ஸிஸ்டு கோட்பாட்டை முன் வைத்தது: அதாவது "கம்யூனிஸ்டுகள் தொழிலாளி வர்க்கத்தின் உடனடியான லட்சியங்களுக்காக, தற்காலிக நலன்களைச் செயல்படுத்துவதற்காகப் போராடு கிறார்கள்; ஆனால், தற்சமயக் கோரிக்கைகளுக்காக நடத்தும் இயக்கத்தோடு, அவர்கள் அந்த இயக்கத்தின் எதிர்காலத்தையும் பிரதிநிதித்துவப் படுத்துவார்கள், கவனத்தில் எடுத்துக் கொள் வார்கள்."[67] அதனால்தான் போலந்தில் 1848-ல் 'விவசாயப் புரட்சி செய்த" கட்சியை மார்க்ஸ் ஆதரித்தார்; "1846-ல் இந்தக் கட்சி கிராகோ புரட்சிக் கலகத்தை நடத்திற்று." [68] ஜெர்மனியில் 1848-49ம் ஆண்டுகளில் அதி தீவிர புரட்சிகரமான ஜனநாயக வாதிகளை மார்க்ஸ் ஆதரித்தார்: செயல் தந்திரங்களைப் பற்றி அப்பொழுது அவர் கூறியதை அதற்குப் பின்னால் மாற்றவே இல்லை. "தொடக்கத்திலிருந்தே மக்களுக்கு துரோகம் செய் வதையே விரும்பிற்று" (விவசாயிகளோடு கூட்டணி சேர்த்திருந் தால், அது தான் அதற்கு லட்சியங்களைப் பூரணமாக அடைவதற்கு

உதவி புரிந்திருக்கும்) "பழைய சமுதாயத்தில் முடியாட்சியின் பிரதிநிதிகளோடு சமரசம் செய்து கொண்டது" என்று மார்க்ஸ் ஜெர்மானிய முதலாளித்துவத்தைப்பற்றிக் கூறினர். முதலாளித் துவ ஜனநாயகப் புரட்சியின் கால கட்டத்தில் ஜெர்மானிய முதலாளித்துவத்தின் வர்க்க நிலைபற்றி மார்க்ஸ் பின்வருமாறு தொகுப்புரை கொடுத்தார்; தற்செயலாக, இந்த ஆய்வுரை யானது, இயங்கிக் கொண்டிருக்கும் சமுதாயத்தைப் பரிசீலனை செய்யும் பொருள் முதல்வாதத்தின் ஒரு உதாரணமாகத் திகழ் கிறது; மேலும் பின் தங்கிய நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் அம்சத்தின் நோக்கு நிலையிலிருந்து மாத்திரமல்ல, "தனது சக்தி யிலேயே நம்பிக்கை இல்லாமல், மக்கள் இடத்தில் நம்பிக்கை இல்லாமல், மேலே இருப்பவர்களைக் கண்டு அதிருப்தியோடு முனகிக் கொண்டும், கீழே இருப்பவர்களைக் கண்டு நடுநடுங்கிக் கொண்டும்... உலகப் புயலால் அச்சுறுத்தப்பட்டும்... எந்த அம்சத் திலும் ஆற்றலே இல்லாமல், எல்லா அம்சங்களிலும் பிறர் கருத்தைத் திருடுவது ..முன் முயற்சியே இல்லாமல் . ஒரு வெறுக்கத் தக்க கிழவன்...வழிகாட்டும் பணி தன்னிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பதாகத் தன்னை நினைக்கிறன்...தனது சொந்த முதுமை யின் நலனை உத்தேசித்து, ஆரோக்கியமான மக்களின் முதல் உணர்ச்சியைக் கண்டு, நேர்வழியிலிருந்து திரும்பிச் செல்கிறன்..." என்று மார்க்ஸ் வர்ணிக்கிறர். ("நியூரினிஷ்ஜீடங்"—1848: "லிடெரேரீஷர் நாச்லாஸ்" பார்க்கவும் : தொகுப்பு-3-பக்கம் 212)

69 இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, எங்கல்ஸுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் மார்க்ஸ் பின்வருமாறு கூறுகிறர் ('பிரீப்விஷெல்"— தொகுப்பு -3-பக்கம் 224); "சுதந்திரத்திற்காகப் போராடும் எதிர்காலத்திற்குப் பதிலாக, அடிமைத்தனத்தோடு முதலாளித் துவம் சமாதானம் செய்து கொண்ட காரணத்தால், 1848-ம் வருடப் புரட்சி தோல்வியடைந்தது" என்று எழுதினர். 1848-49ம் வருடத்திய புரட்சிகரமான கால கட்டம் முடிவடைந்தபோது, புரட்சியை வைத்துக் கொண்டு விளையாட முயற்சி செய்வதை மார்க்ஸ் எதிர்த்தார். (ஷாப்பர், வில்லிச் ஆகியவர்களோடு அவர் போராடினர்). மேலும், புரட்சிகளுக்கு பகுதி "சமாதான" வழியில் தயாரிப்புகளைச் செய்து கொண்டிருக்கும் புதிய கட்டத்தில் வேலை செய்யும் திறமையை வலியுறுத்தினர். பிற்போக்குத் தனத் தின் காரிருள் சூழ்ந்த கட்டத்தில், அதாவது 1856-ல் ஜெர்மனியில் இருந்த நிலைமையைப்பற்றி அவர் மதிப்பீடு செய்ததில் எந்த உணர்வில் இந்த வேலையைச் செய்ய வேண்டும் என்று மார்க்ஸ் விரும்பியதைக் காணலாம்; "ஏதாவது ஒரு இரண்டாவது பதிப்பு விவசாயிகளின் நோக்கம் பாட்டாளி மக்களின் புரட்சியை ஆதரிப் பதைச் சார்ந்திருக்கிறது. எல்லா விஷயங்களும் ஜெர்மனி

யில்" என்று கூறினர் ("பிரீப்லிஷல்"—தொகுப்பு-2-பக்கம்-108) [70] ஜெர்மனியில் ஜனநாயக (முதலாளித்துவ) புரட்சி பூர்த்தியடையாமல் இருக்கும் போது, விவசாயிகளின் ஜனநாயக ஆற்றலை வளர்ப்பதில்—சோஷலிஸ்டு பாட்டாளி மக்களின் செயல் தந்திரத்தில்-மார்க்ஸ் எல்லாக் கவனத்தையும் திருப்பினர். பிரஷ்ய தேசியத்திற்கும், ஜார்களுக்கும் ஒத்துப் போனதால், லாஸேலின் கண்ணேட்டமானது..."எதார்த்தத்தில்...தொழிலாளர் இயக்கம் முழுவதையும் பிரஷ்யாவுக்கு காட்டிக் கொடுப்பதாகும்" என்று மார்க்ஸ் கருதினர் (தொகுப்பு-3-பக்கம் 210); மார்க்ஸும், எங்கல்ஸும் கூட்டாக பத்திரிகைக்கு அறிக்கை விடப்போவது சம்பந்தமாக நடைபெற்ற கடிதப் போக்குவரத்தில், எங்கல்ஸ் 1865-ல் பின்வருமாறு எழுதினர்; "...மாபெரும் நிலப்பிரபுத்துவ உயர் குடிமக்களின் ஆட்சியின் கசையடியின் கீழ், கிராமப்புற பாட்டாளி மக்கள் நிலப்பிரபுக்களால் சுரண்டப்படுவதைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் கூருமல், இயந்திரத் தொழிலாளர்களின் பெயரால் முதலாளித்துவத்தை மாத்திரம் தனித்துத் தாக்குவது கோழைத் தனமாகும்". (தொகுப்பு - 3 - பக்கம் 217).[71] ஜெர்மனியில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி முழு நிறைவுக்கு வந்து கொண்டிருக்கும் கால கட்டத்தில்—(1864—முதல் 1870 வரையிலும்—பிரஷ்ய, ஆஸ்திரிய சுரண்டும் வர்க்கங்கள் ஏதாவது ஒரு வகையில் மேலிருந்து புரட்சியை முடிப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கும்போது, லாஸேல்பிஸ்மார்க்கோடு நயமாக நடித்துக் கொண்டிருந்ததைக் கண்டித்தார், லிப்னெட். "ஆஸ்ட்ரோ பிலிஸத்தில்" நழுவிப் போவதைத் திருத்தி, பேரரசில் உள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் அரசியல் உரிமை வழங்குவதை ஆதரிக்கும்படி செய்தார். பிஸ்மார்க்கையும், ஆஸ்ட்ரோ பிலர்களையும் சம ஈவிரக்கமற்ற தன்மையில் போராடுகிற புரட்சிகரமான செயல் தந்திரங்களை, "வெற்றியாளர்களான" பிரஷ்ய ஜங்கருக்குப் பொருத்தமான முறையில் மாற்றப்படாத செயல் தந்திரங்களை, பிரஷ்ய ராணுவ வெற்றிகளால் சிருஷ்டிக்கப்பட்ட நிலைமைகளில் அவனையும் கூட மீண்டும் உடனே புதிதாகத் தாக்கக் கூடிய புரட்சிகரமான போராட்டத்தைத் தொடங்கக்கூடிய செயல் தந்திரங்களை மார்க்ஸ் கோரினர் ("பிரீப்வீஷல்" — தொகுப்பு-3 பக்கம்-134, 336, 147, 179, 204, 210, 215, 418, 437, 440 - 441,) [72] 1870 - ல் செப்டம்பர் 9-ல் அகிலத்தின் புகழ் பெற்ற பேருரையில், உரிய காலம் வருவதற்கு முன்பு புரட்சிக் கலகத்தைத் தொடங்கக் கூடாது என்று மார்க்ஸ் பிரெஞ்சு பாட்டாளி மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தார்; ஆயினும் புரட்சிக் கலகம் வெடித்தவுடன் (1871) "விண்ணுலகைத் தாக்கித் தகர்த்துக் கொண்டிருந்த" மக்கள் திரளின் புரட்சிகரமான முன்

முயற்சியை மார்க்ஸ் உற்சாகத்தோடு வர வேற்றார் (கூகல்மானுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதம்) [73] மார்க்ஸின் தர்க்கஇயல் பொருள் முதல்வாதத்தின் நோக்கு நிலையிலிருந்து பார்த்தால், மற்ற பலவற்றைப் போல், அந்தச் சூழ்நிலையில் புரட்சிகரமான நடவடிக்கையின் தோல்வியானது, ஏற்கெனவே எடுத்திருந்த நிலையைக் கை விடுவதைக் காட்டிலும், போராடாமல் சரணாகதியடைவதைக் காட்டிலும் பாட்டாளி மக்களின் போராட்டத்தின் பொதுவான போக்கிலும், அத்துடன் விளைவிலும் குறைந்த அளவு தீமையை ஏற்படுத்தக் கூடியதாகவே இருந்தது. இத்தகைய ஒரு சரணாகதி யானது பாட்டாளி மக்களை சோர்வடையும்படி செய்து அவர் களின் போர்க் குணத்தையும் பலஹீனப்படுத்தியிருக்கும். அரசியல் தேக்க நிலை நிலவும் கால கட்டங்களிலும், முதலாளித்துவ சட்ட மனோபாவம் மேலாதிக்கம் வகிக்கும் கால கட்டங்களிலும், சட்ட ரீதியான போராட்ட வழிவகைகளைப் பயன்படுத்துவதை முற்றிலும் ஆதரித்த மார்க்ஸ், அதே சமயத்தில் 1877-லும், 1878-லும் சோஷலிஸ்டு [74] எதிர்ப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு மோஸ்டின் "புரட்சிகரமான சொற்றொடர்களை" வன்மையாகக் கண்டித்தார்; சோஷலிஸ்டு எதிர்ப்பு சட்டத்திற்கு பதில் கொடுக்கும் முறையில் உறுதியையும், புரட்சிகரமான உணர்வையும் உடனடியாகக் காட்டாமல், சட்ட விரோதமான முறையில் போராட்டத்தை நடத்தத் தயாராக இருப்பதைக் காட்டாமல் இருந்த அதிகார பூர்வமான சமூக ஜனநாயகக் கட்சியை அதை விடக் குறைந்த அளவில் இல்லாமல், கூடுதலாகவே கூர்மையாகக் கண்டித்தார் ("பிரீப்விஷல்" தொகுப்பு-4-பக்கம் 397, 404, 418, 472, 474—[75] ஸோர்ஜுக்கு எழுதிய கடிதத்தையும் பார்க்கவும்).

1914-ல் ஜூலை-நவம்பரில் எழுதப்பட்டது.
கிரானுட் கலைக்களஞ்சியத்தில் ஏழாவது பதிப்பில்
28-வது தொகுப்பில் சுருக்கப்பட்ட வடிவத்தில்
1915-ல் பிரசுரிக்கப்பட்டது வ. இல்யின் என்று
கையெழுத்துப் போடப்பட்டிருந்தது.

திரட்டப்பட்ட நூல்—
தொகுப்பு-21
பக்கம் 71-79

## மார்க்ஸீயத்தின் ஒரு கேலிச்சித்திரமும், ஏகாதிபத்திய பொருளாதார வாதமும்—

என்பதிலிருந்து

எல்லா நாடுகளும் சோஷலிஸத்திற்கு வந்து சேரும்—இது தவிர்க்க முடியாததாகும்; ஆனால், எல்லா நாடுகளும் ஒரே விதமான வழியிலேயே அதைச் செய்வதாக இருக்காது. ஜனநாயகத்தின் ஏதாவது ஒரு வடிவத்திற்கும், பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தின்[76] ஏதாவது ஒரு ரகத்திற்கும், சமூக வாழ்வின் பல்வேறு அம்சங்களின் சோஷலிஸ்டு உரு மாற்றங்களை மாறுபட்ட விகிதாசாரத்திற்கும் ஒவ்வொன்றும், அதன் தன் சொந்த அம்சத்தை நல்கும். "சரித்திர இயல் பொருள் முதல்வாதத்தின் பெயரால்" எதிர்காலத்தின் இந்த அம்சத்தை சலிப்புத் தட்டுகிற அரை யிருளில் வர்ணம் திட்டுவதைக் காட்டிலும் தத்துவத்தின் கருத்திலிருந்து அதிக புராதனமானதும், நடைமுறையின் கருத்திலிருந்து அதிகக் கேலிக் கூத்தானதும் வேறு எதுவும் இருக்கவே முடியாது. இதன் விளைவு சூஸ்தால் விகாரமான வர்ணப்பூச்சாக இருக்க முடியுமே தவிர, வேறு எதுவாகவும் இருக்க முடியாது.[77] சோஷலிஸ்டு பாட்டாளி மக்களின் முதலாவது வெற்றிக்கு முன்பு, இப்பொழுது அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கும் நாடுகளில் 500-ல் ஒன்று தான் விடுதலையைப் பெறும், பிரிந்து போகும் என்றும், சோஷலிஸ்டு பாட்டாளி மக்களின் உலகம் முழுவதும் இறுதி வெற்றிக்கு முன்பு (அதாவது சோஷலிஸ்டு புரட்சியின் எல்லா விதமான நிலை மாற்றங்களும் நடைபெறும் கால கட்டத்தில்) அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளில் 500-ல் ஒன்று தான் ஒரு குறுகிய காலத்திற்கு பிரிந்து போகும் என்றும் எதார்த்தம் எடுத்துக் காட்டினாலும் கூட,—அத்தகைய தருணத்திலும் கூட அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகள் அனைத்திற்கும் பிரிந்து போகும் சுதந்திரத்தை ஆதரிக்காத அங்கீகரிக்காத அடக்கி ஒடுக்கும் நாடுகளில் உள்ள சோஷலிஸ்டுகளை தங்களுடைய சமூக ஜனநாயகக் கட்சிகளில் அனுமதிக்கக் கூடாது என்று தத்துவ ரீதியான, நடைமுறை சார்ந்த அரசியல் நிலையி

லிருந்து தொழிலாளர்களுக்கு நாம் ஆலோசனை கூறுவது சரியாகவே இருக்கும்.

ஏனெனில், ஜனநாயகத்தின் பல்வேறு வகைப்பட்ட வடிவங்களுக்கும், சோஷலிஸத்திற்கு மாறிச் செல்லும் பல்வேறு வடிவங்களுக்கும் சொந்தமாக அவை எந்த அம்சத்தை நல்குவதற்காக எத்தனை அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகள் பிரிந்து போக வேண்டியிருக்கும் என்ற உண்மை விவரம் நமக்குத் தெரியாது, நாம் தெரிந்திருக்கவும் முடியாது. ஆகவே, இப்பொழுது பிரிந்து போகும் உரிமையை மறுப்பதானது, ஆரம்பத்திலிருந்து கடைசி வரையிலும் தத்துவ ரீதியாகத் தவறானதாகும்; மேலும், நடைமுறையில், அடக்கி ஒடுக்கும் நாடுகளின் அதிதீவிர தன்னுட்டுப் பற்றுடையவர்களுக்கு அடிமையாக்குவதற்குச் சமமாகும் இது— இது நமக்குத் தெரியும், தினசரி பார்க்கிறோம், உணர்கிறோம்........

1916-ல் ஆகஸ்ட்-செப்டம்பரில் எழுதப்பட்டது. "ஸ்வெஸ்கா" சஞ்சிகையில் எண் 1-லும் 2-லும் 1924-ல் முதலில் பிரசுரிக்கப்பட்டது. கையொப்பம் 2 - லெனின்.

திரட்டப்பட்ட நூல்கள், தொகுப்பு - 25 பக்கம்-69-70

# பயமுறுத்திக் கொண்டிருக்கும் ஆபத்து அதை எப்படி சமாளிப்பது—என்பதிலிருந்து

## சோஷலிசத்தை நோக்கி முன்னேறுவதற்கு நாம் அஞ்சினுல் நாம் முன்னேறிச் செல்ல முடியுமா ?

சோஷலிஸ்டு புரட்சியாளர்கள், மென்ஷ்விக்குகள் ஆகியவர்களின் நடப்பில் உள்ள சந்தர்ப்பவாதக் கருத்துக்களின் அடிப்படையில் பயிற்றுவிக்கப்பட்டிருக்கும் வாசகர்களின் தரப்பிலிருந்து, இது வரையிலும் கூறப்பட்ட கருத்துக்கள் கீழ்க்கண்ட எதிர்ப்பை எளிதில் தூண்டி விடலாம், இங்கு விவரிக்கப்பட்டிருக்கும் பெரும் பாலான நடவடிக்கைகள், செயல்முறை அளவில் ஏற்கனவே சோஷலிஸ்டாக இருக்கின்றனவே தவிர, ஜனநாயக நடவடிக்கை களாக இல்லை என்று அவர்கள் கூறலாம்.

இந்த நடப்பில் உள்ள எதிர்ப்பானது, அதாவது முத லாளித்துவ, சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களின், மென்ஷ்விக்கு களின் பத்திரிகையில் (ஏதாவது ஒரு வடிவத்தில்) சாதாரணமாக எழுதப்படும் எதிர்ப்பானது பின்தங்கிய நிலையிலுள்ள முதலாளித் துவத்தை பிற்போக்குத்தனமான முறையில் ஆதரிப்பதாகும். ஸ்ட்ருவிய ஆடையில் அலங்கரிக்கப்பட்டுள்ள ஆதரவு நடவடிக்கை யாகும். நாம் சோஷலிஸத்திற்கு இன்னும் பக்குவமடையவில்லை என்றும், சோஷலிஸத்தைப் "புகுத்துவதற்கான" காலம் இன்னும் வரவில்லை என்றும், நமது புரட்சியானது முதலாளித்துவப் புரட்சி யாகவே இருக்கிறது என்றும், ஆகவே நாம் முதலாளித்துவத்தின் குற்றேவல்காரனுக நாம் இருக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறுவது போல் தெரிகிறது. (125 ஆண்டுகளுக்கு முன்பு பிரான்ஸில் மகத்தான முதலாளித்துவ புரட்சிக்காரர்கள் எல்லா அடக்கி ஒடுக்குகிறவர்களையும், நிலச்சுவான்தார்களையும் போலவே முத லாளிகளையும் எதிர்த்து பயங்கரமான நடவடிக்கைகளை எடுத்ததன் மூலமாக அவர்கள் புரட்சியை ஒரு மகத்தான புரட்சியாக மாற்றினுர்கள் !.)

இந்த முறையில் வாதாடுகிற போலி மார்க்ஸிஸ்டு முதலாளித் துவத்தின் பணியாட்களும், அவர்களோடு சேர்ந்திருக்கும் சோஷ லிஸ்டு புரட்சிக்காரர்களும் (அவர்களுடைய கருத்துக்களின் தத்துவ ரீதியான அடிப்படையைப் பரிசீலனை செய்து பார்த்தால், அது எடுத்துக் காட்டுவது என்னவென்றால்) ஏகாதிபத்தியம் என்றால் என்ன, முதலாளித்துவ ஏகபோக உரிமை என்றால் என்ன, அரசு என்றால் என்ன, புரட்சிகரமான ஜனநாயகம் என்றால் என்ன ஆகிய வற்றைப் புரிந்து கொள்ளவில்லை என்றே தெரிகிறது. ஏனெனில், இதை யாராவது புரிந்து கொண்டால், அவர் சோஷலிஸத்தை நோக்கி முன்னேறுவதைத் தவிர, வேறு திசையில் முன்னேற முடியாது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

ஒவ்வொருவரும் ஏகாதிபத்தியத்தைப் பற்றிப் பேசுகிறார். ஆனால், ஏகாதிபத்தியம் என்பது ஏகபோக முதலாளித்துவமே தவிர வேறு எதுவும் அல்ல

ரஷ்யாவிலும் கூட முதலாளித்துவம் ஏகபோக முதலாளித் துவமாக மாறியிருக்கிறது என்பதை நிரூபிக்க புரோடுகால், புரோடாமெட், சர்க்கரை ஸிண்டிகேட் போன்ற ஏகபோக நிறு வனங்கள் உதாரணங்களாக இருக்கின்றன. ஏகபோக முதலாளித் துவமானது எவ்வாறு அரசு ஏகபோக முதலாளித்துவமாக வளர் கிறது என்பதற்கு இந்தச் சர்க்கரை ஸிண்டிகேட் ஒரு படிப்பினை தரும் உதாரணமாகத் திகழ்கிறது.

அரசு என்றால் என்ன? ஆளும் வர்க்கத்தின் ஒரு ஸ்தாபன அமைப்பாக அது இருக்கிறது; உதாரணமாக ஜெர்மனியில் அது ஜங்கர்கள், முதலாளிகள் ஆகியவர்களின் ஒரு ஸ்தாபன அமைப் பாக இருக்கிறது. ஆகவே, ஜெர்மானிய பிளிக்கானேவ்கள் (ஷீட்மான், லென்ஷ் மற்றும் பலர்) ''யுத்தகால சோஷலிஸம்'' என்று அழைக்கிறார்களே, அது உண்மையில் யுத்த கால அரசு ஏகபோக முதலாளித்துவம் தான்; அல்லது அதை மேலும் எளிமை யாகவும், தெளிவாகவும் கூறுவது என்றால், தொழிலாளர்களுக்கு யுத்த கால கடும் சிறை தண்டனை தான்; முதலாளித்துவ லாபத் திற்கு யுத்த கால பாதுகாப்பு தான்.

இப்பொழுது, ஜங்கர்—முதலாளித்துவ அரசுக்கு, நிலச்சுவான் தார்—முதலாளித்துவ அரசுக்குப் பதிலாக ஒரு புரட்சிகரமான— ஜனநாயக அரசை, அதாவது எல்லா விதமான விசேஷ சலுகைகளை யும் புரட்சிகரமான முறையில் ஒழிக்கிற ஒரு அரசை, புரட்சிகர மான முறையில் முற்றிலும் முழுமையான ஜனநாயகத்தைப்

புகுத்துவதற்கு அஞ்சாத ஒரு அரசை அமைக்க முயற்சி செய்து பாருங்கள். உண்மையாகவே புரட்சிகரமான ஜனநாயக அரசை அமைக்கப்பட்டால், அரசு ஏகபோக முதலாளித்துவமானது இயல்பாகவும், தவிர்க்க முடியாத வகையிலும் சோஷலிஸத்தை நோக்கி ஒரு படி முன்னேற்றம், (ஒரு படியைக் காட்டிலும் அதிகமான முன்னேற்றம்) என்பது பொதிந்து கிடப்பதை நீங்கள் காணலாம்.

ஏனெனில், ஒரு பெரிய முதலாளித்துவ நிறுவனமானது ஒரு ஏகபோக நிறுவனமாக மாறுகிறது என்றால், அதன் அர்த்தம் அது தேசம் முழுவதற்கும் பயன்படுகிறது என்பதுதான். அது ஒரு அரசு ஏகபோகமாக மாறினல், அதன் அர்த்தம் அரசானது (ஒரு புரட்சிகரமான ஜனநாயகம் இருந்தால் பொது மக்களின், யாவற்றிற்கும் மேலாக தொழிலாளர்கள், விவசாயிகளின் ஆயுதம் தாங்கிய ஸ்தாபனமானது) அந்த நிறுவனம் முழுவதற்கும் வழி காட்டுகிறது. யாருடைய நலனுக்காக?

நிலச்சுவான்தார்கள், முதலாளிகள் ஆகியவர்களின் நலனைப் பாதுகாப்பதாக இருந்தால், ஒரு புரட்சிகரமான ஜனநாயகம் இல்லை, அதற்கு மாறாக ஒரு பிற்போக்கு அதிகார வர்க்க அரசு, ஒரு ஏகாதிபத்திய குடியரசு இருக்கிறது என்பது அதன் அர்த்தம். அல்லது, புரட்சிகரமான ஜனநாயகத்தின் நலனை ஆதரிப்பதாக இருந்தால், அப்பொழுது அது சோஷலிசத்தை நோக்கி ஒருபடி முன்னேறிச் செல்வதாக இருக்கும்.

எவ்வாறெனில், அரசு முதலாளித்துவ ஏகபோகத்திலிருந்து அடுத்த படியாக இருப்பது சோஷலிசம் தான். அல்லது, வேறு வகையில் கூறுவது என்றால், சோஷலிசமானது அரசு முதலாளித்துவ ஏகபோகம் தான்; மக்கள் முழுமையின் நலனுக்கும் பயன்படும் படி அது செயல்படுகிறது; ஆகவே அந்த அளவுக்கு அது முதலாளித்துவ ஏகபோகமாக இயங்குவதை நிறுத்திக் கொள்கிறது.

இங்கு, இந்த இரண்டு பாதைகளுக்கு மத்தியில் வேறு குறுக்குப் பாதையே கிடையாது. எதார்த்த வளர்ச்சியின் போக்கு எப்படி இருக்கிறது என்றால், ஏகபோகத்திலிருந்து (யுத்தமானது அவைகளின் எண்ணிக்கைகளையும், பாத்திரத்தையும், முக்கியத்துவத்தையும் பதின் மடங்கு பெருக்கியிருக்கிறது) சோஷலிஸத்தை நோக்கிச் செல்லாமல் வேறு பாதையில் முன்னேறுவது சாத்தியமல்ல.

மெய்யாகவே நாம் புரட்சிகரமான ஜனநாயக வாதிகளாக இருக்க வேண்டும்; அப்படியானல், சோஷலிசத்தை நோக்கி அடி எடுத்து வைக்க நாம் பயப்படக் கூடாது.

அல்லது, சோஷலிஸத்தை நோக்கி அடி எடுத்து வைக்க நாம் பயப்பட வேண்டும்; நமது புரட்சியானது ஒரு முதலாளித்துவ புரட்சி என்றும், சோஷலிசத்தை "புகுத்த" முடியாதென்றும் இன்னும் இதுபோல் வாதம் செய்வதன் மூலமாக பிளிக்கானேவ், டான் அல்லது செர்னேவ் ஆகியவர்கள் வழியில் அவைகளைக் கடிக்க வேண்டும்; அப்படியானல் கெரென்ஸ்கி, மில்யூகாவ், கார்னிலால் ஆகியவர்கள் மட்டத்திற்கு, தவிர்க்க முடியாத வகையில் கீழே மூழ்கிப் போவோம்—அதாவது தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியவர்களின் "புரட்சிகரமான-ஜனநாயக" அபிலாஷைகளை ஒரு பிற்போக்கு அதிகார வர்க்க வழியில் ஒடுக்குவோம்.

இரண்டுக்கும் நடுவே வேறு பாதையே கிடையாது

நமது புரட்சியின் அடிப்படையான முரண்பாடு இதில் தான் அடங்கியிருக்கிறது.

பொதுவாக சரித்திரத்திலும், குறிப்பாக யுத்த காலத்திலும் இயங்காத நிலையில் இருப்பது சாத்தியமல்ல; நாம் முன்னேறிச் செல்ல வேண்டும், அல்லது பின் வாங்க வேண்டும். ஒரு புரட்சிகர மான வழியில் ஒரு குடியரசையும், ஜனநாயகத்தையும் வென்றிருக்கும் இருபதாவது நூற்றண்டு ரஷ்யாவில் சோஷலிசத்தை நோக்கி முன்னேறிச் செல்லாமல், அதை நோக்கிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் (அதாவது தொழில் நுணுக்கம், கலாச் சாரம் ஆகியவற்றின் மட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட, நிபந்தனைக் குட்படுத்தப்பட்ட நடவடிக்கைகளாக இருக்கும்; விவசாயிகளின் பண்ணையில் பெரிய அளவில் இயந்திரங்களால் உற்பத்தி செய்யும் முறையை "புகுத்த முடியாது"; அல்லது சர்க்கரை தொழில் அதை ஒழிக்கவும் முடியாது) முன்னேறுவது சாத்தியமல்ல.

ஆனல், முன்னேறுவதற்கு பயப்படுவது என்றல் அதன் அர்த்தம் பின் வாங்குவதாகும்; மில்யூசோவ்கள், பிளிக்கனேவ்கள் ஆகியவர்களுக்கு பெரு மகிழ்ச்சி ஊட்டக் கூடிய வகையில், ஸெரெடெலிஸ்கள், செர்மனேவ்கள் ஆகியவர்களின் முட்டாள் தனமான உதவியோடு கெரென்ஸ்கிக்கள் உண்மையில் பின் வாங்கிக் கொண்டிருக்கிருர்கள்.

சரித்திரத்தின் தர்க்க இயல் எப்படி இருக்கிறது என்றல், ஏகபோக முதலாளித்துவத்தை அரசு ஏகபோக முதலாளித் துவமாக அசாதாரணமான வேகத்தில் மாற்றியமைத்து

வருவதால், யுத்தமானது அதன் மூலமாக மனித இனத்தை சோஷலிசத்தை நோக்கி அசாதாரணமாக முன்னேறச் செய்திருக்கிறது.

ஏகாதிபத்திய யுத்தமானது, சோஷலிஸ்டு புரட்சி நடைபெறப் போகும் தருவாயாக இருக்கிறது. யுத்தத்தின் அச்ச மூட்டும் செயல்கள் பாட்டாளி மக்களின் புரட்சிக் கலகத்தைத் தூண்டி விடுகின்றன என்ற காரணத்தால் மாத்திரமல்ல.—பொருளாதார நிலைமைகள் சோஷலிசத்திற்குத் தேவையான அளவு முதிர்ச்சி யடைய வில்லையென்றால், எந்தப் புரட்சிக் கலகமும் சோஷலிசத்தைக் கொண்டு வர முடியாது—அரசு ஏகபோக முதலாளித்துவ மானது, சோஷலிஸத்திற்குத் தேவையான பூரணமான பொருளியல் தயாரிப்பாக இருக்கிறது, சோஷலிஸத்தின் நுழை வாயிலாக இருக்கிறது, சோஷலிசத்தின் ஏணியில் ஒரு படியாக இருக்கிறது, அதற்கும் சோஷலிஸம் என்று அழைக்கப்படுவதற்கும் இடையே குறுக்குப் படிகள் வேறு எதுவும் கிடையாது.

*　　　*　　　*

நமது சோஷலிஸ்டு மென்ஷ்விக்குகளும் புரட்சிக்காரர்களும் சோஷலிஸத்தை ஒரு வரட்டுக் கோட்பாடு முறையில் அணுகு கிறார்கள்; தெளிவாகப் புரிந்து கொள்ளாமல் மனப்பாடமாகக் கற்றுக் கொண்ட வரட்டுக் கோட்பாட்டின் நிலையிலிருந்து சோஷலிஸத்தை அணுகுகிறார்கள். சோஷலிசம் என்பது தொலைவில் இருப்பது போலவும், (புலனாகாத, தெளிவற்ற எதிர்காலத்தில் இருப்பது போலவும்) சித்தரித்துக் காட்டுகிறார்கள்.

ஆனால், நவீன முதலாளித்துவத்தின் ஜன்னல்கள் அனைத்தி லிருந்தும் சோஷலிஸமானது இப்பொழுது நம்மை உற்றுப் பார்க்கிறது; இந்த நவீன முதலாளித்துவத்தின் அடிப்படையில் ஒரு முன்னேற்றப்படியாக அமையும் ஒவ்வொரு முக்கியமான நடவடிக்கை மூலமாகவும் சோஷலிஸம் நேரடியாகவும், நடைமுறை ரீதியிலும் விவரித்துக் காட்டப்படுகிறது.

உழைப்பு அனைத்தையும் கட்டாயமாகத் திரட்டுவது என்றால் என்ன ?

நவீன ஏகபோக முதலாளித்துவத்தின் அடிப்படையில் அது ஒருபடி முன்னேற்றமாகும்; ஒரு குறிப்பிட்ட பொதுவான திட்டப் படி ஒட்டு மொத்தமாக பொருளாதார வாழ்வை முறைப்படுத்து வதை நோக்கி ஒருபடி முன்னேற்றமாகும்; தேசிய உழைப்பைச் சிக்கனப்படுத்துவதை நோக்கி முதலாளித்துவம் அர்த்தமற்ற

முறையில் விரயம் செய்வதைத் தடுப்பதை நோக்கி ஒருபடி முன்னேற்றமாகும்.

ஜெர்மனியில் ஜங்கர்களும் (நிலச்சுவான்தார்களும்) முதலாளிகளும் உழைபபு அனைத்தையும் கட்டாயமாகப் புகுத்துகிறார்கள்; ஆகவே, அது தவிர்க்க முடியாத வகையில்யுத்தகால கடும் சிறை தண்டனையாக மாறுகிறது தொழிலாளர்களுக்கு.

ஆனல், ஒரு புரட்சிகரமான ஜனநாயக அரசில் அந்த நிறுவனம் இருப்பதாக வைத்துக் கொண்டு, அதன் முக்கியத்துவத்தைப் பற்றி சிந்தனை செய்து பாருங்கள். தொழிலாளர்கள், சிப்பாய்கள், விவசாயிகள் ஆகியவர்களின் பிரதிநிதிகளின் சோவியத்துகள் உழைப்புச் சேவை அனைத்தையும் கட்டாயமாகப் புகுத்தினல், முறைபபடுத்தி வழி காட்டினல் அது இன்னும் சோஷலிஸமாக இருக்காது; அதே சமயத்தில் அது முதலாளித்துவமாக ஒருகாலும் இருக்காது. அது சோஷலிஸத்தை நோக்கி வியக்கத்தக்க ஒருபடி முன்னேற்றமாக, இருக்கும், பூரணமான ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டால், மக்கள் திரள் மீது முன்பின் கண்டும் கேட்டுமிராத அளவில் பலாத்காரத்தைக் கட்டவிழ்த்து விடாமல், அது முன்னல் வைத்திருக்கும் படியிலிருந்து முதலாளித்துவத்திற்கு பின்னோக்கி வரவே முடியாது.

1917-ல் செப்டம்பர் 10-14ல் (28-27) எழுதப்பட்டது
1817ல் அக்டோபர் மாதஇறுதியில்
பெட்ரோகிராட்டில் பிரபோய் பிரசுரத்தாரால்
சிறு புத்தக வடிவில் பிரசுரிக்கப்பட்டது.

திரட்டப்பட்ட நூல்கள்
தொகுப்பு-25-
பக்கம்-856-60

# அரசும், புரட்சியும்—என்றதிலிருந்து

அரசு, புரட்சியில் பாட்டாளி மக்களின்
கடமைகள் ஆகியவை பற்றி
மார்க்ஸிஸ்டு தத்துவம்.

அத்தியாயம் V

## அரசு உலர்ந்து போவதின் பொருளாதார அடிப்படை

இந்தப் பிரச்சினையை "கோதா செயல் திட்டத்தின் ஆராய்ச்சிக் குறிப்பில்" மார்க்ஸ் முற்றிலும் முழுமையாக விவரிக்கிருர். (1875-ல் மே மாதம் 5-ல பிராகேக்கு எழுதிய கடிதம்; (1891-வது ஆண்டு வரையிலும் இது பிரசுரிக்கப்படவில்லை; அந்த ஆண்டில் "நியூஜீட்"டில் தொகுப்பு ஒன்பது,-1-ல் பிரசுரிககப் பட்டது; ஒரு விசேஷ பதிப்பில் இது ரஷ்ய மொழியில் பிரசுரிக்கப் பட்டது) [78] லாஸேலேனிஸத்தைப் பற்றிய ஒரு'விமர்சனம் அடங்கி யிருக்கும் இந்தச் சிறப்பான நூலின் தர்க்க வாதப்பகுதியானது—இப்படிச் சொல்லலாம் என்ருல்—அதன் எதிர்மறையல்லாத பகுதியை, அதாவது கம்யூனிஸத்தின் வளர்ச்சிக்கும், அரசு உலர்ந்து போவதற்கும் இடையே உள்ள தொடர்பு பற்றிய ஆராய்ச்சியை மழுங்கிப் போகவிடாமல் பாதுகாத்திருக்கிறது.

## 1. மார்க்ஸ் இந்த பிரச்சினையை அறிமுகப்படுத்துவது

1875-ல் மே மாதம் 5-தேதியன்று பிராகேக்கு மார்க்ஸ் எழுதிய கடிதத்தை, 1875-ல் [79] மார்ச் மாதம் 28-ம் தேதியன்று பெபலுக்கு எங்கல்ஸ் எழுதிய கடிதத்தோடு மேலோட்டமாக ஒப்பிட்டுப் பார்ப்பதிலிருந்து—மேலே நாம் பரிசீலனை செய்திருக் கிறோம்—எங்கல்ஸைக் காட்டிலும் மார்க்ஸ் அதிகமாக "அரசைப்

பற்றி வாதாடியிருக்கிறார்" என்று தோன்றலாம்; மேலும், அரசு சம்பந்தப்பட்ட பிரச்சினையில் இரண்டு எழுத்தாளர்களிடையிலும் கணிசமான அளவு கருத்து வேற்றுமை இருந்ததாகவும் தோன்றலாம்.

அரசைப்பற்றி பேசுவதையெல்லாம் பூரணமாக விட்டு விடும் படியும், செயல் திட்டத்திலிருந்து "அரசு" என்ற வார்த்தையை அறவே நீக்கி விடும்படியும், அதற்குப் பதிலாக "சமுதாயம்" என்ற வார்த்தையைச் சேர்த்துக் கொள்ளும்படியும் எங்கல்ஸ் பெபலுக்கு ஆலோசனைக் கூறினார். சமுதாயம் என்ற வார்த்தையின் உண்மை யான அர்த்தத்தை எடுத்துக் கொண்டால், அது அரசைக் குறிக் காது என்று கூட எங்கல்ஸ் கூறினார். 40 ஆயினும், "கம்யூனிஸ்ட் சமுதாயத்தில் எதிர் காலத்தில் அரசு இருக்கும்" என்பது பற்றியும் கூட மார்க்ஸ் பேசினார்; அதாவது, கம்யூனிஸத்தின் கீழிலும் கூட அரசின் தேவையை அவர் அங்கீகரிப்பது போலத் தோன்றலாம்

ஆனால், இத்தகைய ஒரு கருத்து, அடிப்படையிலேயே தவறான தாகும். இன்னும் கொஞ்சம் நுணுக்கமாகப் பரிசீலனை செய்து பார்த்தால், அரசு, அது உலர்ந்து போவது ஆகியவை பற்றி மார்க்ஸ், எங்கல்ஸ் ஆகியவர்களின் கருத்துக்கள் முற்றிலும் ஒரே மாதிரியாக இருப்பதைக் காணலாம்; மேலும் மேலே மேற்கோள் காட்டப்பட்டுள்ள மார்க்ஸின் கருத்து வெளியீடானது, அரசு உலர்ந்து போகும் போக்கில் இருப்பதையே குறிப்பிடுகிறது என்பதையும் காணலாம்.

எதிர் காலத்தில் "உலர்ந்துபோகும்" தருணம் எப்பொழுது என்பதை திட்டவட்டமாகக் குறிப்பிடும் பிரச்சினை எழ முடி யாது என்பது தெளிவாக இருக்கிறது; மேலும் குறிப்பாக, நீண்ட கால வளர்ச்சிப் போக்காகவும் அது இருக்கும். மார்க்ஸுக்கும், எங் கல்ஸுக்கும் இடையே வெளிப்படையாக வித்தியாசம் இருந்த தற்குக் காரணம், இருவரும் வெவ்வேறு விஷயங்களை ஆராய்வதில் ஈடுபட்டிருந்தார்கள்; குறிக்கோள்களும் வெவ்வேறு விதமாக இருந்தன. அரசு சம்பந்தமாக நடப்பில் உள்ள தப்பெண்ணங் களின் முழு முட்டாள் தனத்தை வரைபடம்போல், கூர்மை யாகவும், விரிவாகவும் பெபலுக்கு விளக்கிக் காட்டுவதில் (லாஸேலுக்கும் இதே அளவு இது பொருத்தமானது) எங்கல்ஸ் ஈடுபட்டிருந்தார். மார்க்ஸ் மற்றொரு விஷயத்தில், அதாவது கம்யூனிஸ்டு சமுதாயத்தின் வளர்ச்சியில் கவனம் செலுத்தியதால், இந்தப் பிரச்சினையை மேலோட்டமாகத் தொட்டிருந்தார்.

மார்க்ஸின் தத்துவம் முழுவதும் நவீன முதலாளித்துவத்திற்கு வளர்ச்சியின் தத்துவத்தை—முன் பின் முரணில்லாமல், முழுமை

யான, சிறப்பான, பொருட்செறிவுள்ள வடிவத்தில்—அனுஷ்டிப்பதாக இருந்தது. இயல்பாகவே, இந்தத் தத்துவத்தை எதிர்காலத்தில் வீழ்ச்சியடையவிருக்கும் முதலாளித்துவத்திற்கும், எதிர்கால கம்யூனிஸத்தின் எதிர்கால வளர்ச்சிக்கும் அனுஷ்டிக்கும் பிரச்சினையை மார்க்ஸ் நேரிட வேண்டியிருந்தது.

அப்படியானால், எதிர்கால கம்யூனிஸத்தின் எதிர்கால வளர்ச்சிப் பிரச்சினையை எந்த உண்மை விவரங்களின் அடிப்படையிலிருந்து ஆராய்ந்து முடிவு செய்வது ?

அது முதலாளித்துவத்திலிருந்து தோன்றிற்று, முதலாளித்துவத்திலிருந்து அது சரித்திர பூர்வமாக வளர்கிறது, முதலாளித்துவம் தோற்றுவித்த ஒரு சமூக சக்தியின் செயலின் விளைவுதான் அது என்ற விவரங்களின் அடிப்படையிலிருந்து அதை ஆராயவேண்டும். உட்டோப்பியாவை உருவாக்குவதிலோ, தெரியாத விஷயத்தைப் பற்றி வெறும் மனக்கோட்டை கட்டுவதிலோ மார்க்ஸ் தமது தரப்பிலிருந்து ஈடுபட்டிருந்தார் என்பதற்கு ஆதாரமே எதுவும் கிடையாது. ஒரு இயற்கை விஞ்ஞானி, ஒரு உயிரினம் இத்தகைய வழியில் தோன்றிற்று என்பதைத் தெரிந்து கொண்டபிறகு, இத்தகைய திட்டமான திசையில் மாறிக் கொண்டிருக்கிறது என்று அதன் வளர்ச்சியைப் பற்றி ஆராய்வதுபோல், மார்க்ஸும் அதே வழியில் கம்யூனிஸத்தின் பிரச்சினையை ஆராய்ந்தார்.

அரசுக்கும், சமுதாயத்திற்கும் இடையே உள்ள உறவு பற்றிய பிரச்சினையில் கோதா செயல் திட்டம் உண்டுபண்ணியிருந்த குழப்பத்தை மார்க்ஸ் முதலில் துடைத்தெறிந்தார். அவர் பின் வருமாறு எழுதினார்.

"'இன்றைய சமுதாயம்' முதலாளித்துவ சமுதாயமாக இருக்கிறது; எல்லா நாகரிகமடைந்த நாடுகளிலும் அது அமலில் இருக்கிறது. அநேகமாக மத்திய கால கூட்டுக் கலவையிலிருந்து சுயேச்சையாக இருக்கிறது; ஒவ்வொரு நாட்டின் குறிப்பிட்ட சரித்திர பூர்வமான வளர்ச்சியால் அநேகமாக திருத்தியமைக்கப்பட்டதாக இருக்கிறது; அநேகமாக வளர்ச்சியடைந்ததாக இருக்கிறது. மறுபுறத்தில், 'இன்றைய அரசு' ஒரு நாட்டு எல்லையோடு மாறுபடுகிறது. ஸ்விட்ஸர்லாந்திலிருப்பதிலிருந்து, அது பிரஷ்யா ஜெர்மானிய பேரரசில் மாறுபடுகிறது; அமெரிக்காவில் இருப்பதிலிருந்து, அது இங்கிலாந்தில் மாறுபடுகிறது. ஆகவே, இன்றைய அரசானது ஒரு கற்பனைப் பொருளாக இருக்கிறது.

"ஆயினும், வெவ்வேறு விதமான நாகரிகமடைந்த நாடுகளின் வெவ்வேறு விதமான அரசுகள் அனைத்திற்கும்—அவை

களின் வடிவத்தில் பலதரப்பட்ட மாறுபாடுகள் இருந்தாலும் கூட—இது பொதுவானதாக இருக்கிறது, அதாவது அவை நவீன முதலாளித்துவ சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டிருக் கின்றன. ஆகவே, அவைகளுக்கு குறிப்பிட்ட முக்கியமான குணும் சங்கள் பொதுவானதாகவும் இருக்கின்றன. இந்த அர்த்தத்தில் முதலாளித்துவ சமுதாயத்தின் வேர் மடிந்து போயிருக்கும். எதிர் காலத்தோடு ஒப்பிடும்போது இன்றைய அரசு மாறுபடுகிறது என்று பேசுவது சாத்தியமாகிறது.

"அப்பொழுது இந்தப் பிரச்சினை எழுகிறது. கம்யூனிஸ்டு சமுதாயத்தில் அரசு எத்தகைய உருமாற்றத்தை அடையும்? வேறு வகையில் கூறுவது என்றால், இன்றைய அரசின் செயல் முறைகளில் இதே மாதிரியாக இருக்கும் என்னென்ன சமூக செயல் முறைகள் அங்கு நிலவில் நிலைத்திருக்கும்? இந்தக் கேள்விக்கு விஞ்ஞான ரீதியில் மாத்திரமே பதில் கொடுக்க முடியும்; அரசு என்ற வார்த்தையோடு, மக்கள் என்ற வார்த் தையை ஆயிரம் மடங்கு இணைப்பதன் மூலமாக பிரச்சினைக்கு அருகே அணுக முடியாது. [81]

ஒரு "மக்கள் அரசு" என்பது பற்றி பேசுவதைக் கேலி செய்த பிறகு, மார்க்ஸ் இந்தப் பிரச்சினையை வரையறுத்து, அன்று உண்மையில் அவ்வாறு இருந்ததால், அதற்கு விஞ்ஞான ரீதியில் ஒரு விடையைக் கண்டு பிடிக்க முயல்கிறவர்கள், விஞ்ஞான ரீதியில் உறுதியாக நிரூபிக்கப்பட்டுள்ள ஆதாரங்களையே உபயோகிக்க வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்தார்.

வளர்ச்சியின் முழுத் தத்துவமும் ஒட்டு மொத்தமாக விஞ்ஞானமும் மிகத் துல்லியமாக நிலைநாட்டியுள்ள உண்மை என்ன வென்றால், உட்டோப்பியர்கள் உதாசீனம் செய்த உண்மை என்னவென்றால், சோஷலிஸ்டுப் புரட்சியைக் கண்டு அஞ்சுகிற இன்றைய சந்தர்ப்ப வாதிகள் உதாசீனம் செய்த உண்மை என்னவென்றால், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனி ஸத்திற்கு மாறிச் செல்லும் ஒரு விசேஷ கட்டம், அல்லது ஒரு விசேஷ வளர்ச்சிப்படி நிச்சயமாக சரித்திர பூர்வமாக இருக்க வேண்டும் என்பதுதான்.

## 2. முதலாளித்துவத்திலிருந்து, கம்யூனிஸத்திற்கு மாறிச் செல்வது.

மார்க்ஸ் மேலும் தொடர்ந்து பின் வருமாறு எழுதுகிறார்.

"முதலாளித்துவ சமுதாயத்திற்கும், கம்யூனிஸ்ட் சமுதாயத் திற்கும் இடையே, ஒன்றை மற்றொன்றாக புரட்சிகரமாக உரு

மாற்றம் செய்யும் கால கட்டம் அடங்கியிருக்கிறது. இதற்கு உகந்த முறையில், ஒரு அரசியல் மாறிச் செல்லும் கட்டமும்கூட இருக்கிறது; இந்த கட்டத்தில் அரசானது, பாட்டாளி மக்களின் புரட்சிகரமான சர்வாதிகாரமாகத் தான் இருக்க முடியும்''. [82]

நவீன முதலாளித்துவ சமுதாயத்தில் பாட்டாளி மக்களால் வகிக்கப்பட்ட பாத்திரத்தைப் பற்றிய ஒரு ஆராய்ச்சியையும், இந்த சமுதாயத்தின் வளர்ச்சி சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களையும், பாட்டாளி மக்கள், முதலாளிகள் ஆகியவர்களின் முரணான நலன்கள் தீர்க்க முடியாதவைகளாக இருப்பதையும் ஆதாரமாகக் கொண்டு மார்க்ஸ் இந்த முடிவுக்கு வந்தார்.

இதற்கு முன்பு இந்தப் பிரச்சினை பின் வருமாறு முன் வைக்கப்பட்டது: தங்கள் விடுதலையைப் பெறுவதற்காக, பாட்டாளி மக்கள் முதலாளித்துவத்தை வீழ்த்த வேண்டும், அரசியல் அதிகாரத்தை வெல்ல வேண்டும், அவர்களுடைய புரட்சிகரமான சர்வாதிகாரத்தை அமைக்க வேண்டும்.

இப்பொழுது இந்தப்பிரச்சினை சற்று மாறுபட்ட வகையில் முன் வைக்கப்படுகிறது; ''அரசியலில் மாறிச்செல்லும் கட்டம்'' இல்லாமல், முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து— கம்யூனிஸத்தை நோக்கி இது வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது —கம்யூனிஸ்டு சமுதாயத்திற்கு மாறிச் செல்வது சாத்தியமல்ல: இந்த கட்டத்தில் அரசானது பாட்டாளி மக்களின் புரட்சிகரமான சர்வாதிகாரமாகத்தான் இருக்க முடியும்.

அப்பொழுது, இந்த சர்வாதிகாரத்திற்கு ஜனநாயகத்தோடு எத்தகைய உறவு இருக்கும்?

''கம்யூனிஸ்ட் அறிக்கை'' யானது இரண்டு கருத்துக்களையும் ஒன்றுக்குப் பக்கத்தில் மற்றொன்றை வரிசையாக வைப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ''பாட்டாளி மக்களை ஆளும் வர்க்கத்தின் நிலைக்கு உயர்த்த வேண்டும்;'' ''ஜனநாயகப்போரை வெல்ல வேண்டும்'' [83] மேலே கூறப்பட்டுள்ளவை அனைத்தின் அடிப்படையில், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்திற்கு மாறிச் செல்லும் கட்டத்தில் எவ்வாறு ஜனநாயகம் மாறுதலை அடைகிறது என்பதை மேலும் திட்டவட்டமாக நிர்ணயம் செய்வது சாத்தியமாக இருக்கிறது.

மிகவும் அனுகூலமான நிலைமைகளின் கீழ் அது வளர்வதற்கு வாய்ப்பைக் கொடுப்பதால், முதலாளித்துவ சமுதாயத்தில்,

ஜனநாயகக் குடியரசில் கிட்டத்தட்ட பூரண ஜனநாயகத்தை நாம் பெறுகிறோம். ஆனால், இந்த, ஜனநாயகமானது எப்பொழுதும் முதலாளித்துவ சுரண்டலால் வரையறுக்கப்பட்டுள்ள குறுகிய எல்லைகளுக்குள்ளேயே கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது; இதன் விளைவாக, எதார்த்தத்தில் சிறுபான்மையோரின், சொத்துடைமை வர்க்கங்களின், பணக்காரர்களின் ஜனநாயகமாகவே எப்பொழுதும் நிலைத்திருக்கிறது. முதலாளித்துவ சமுதாயத்தில் சுதந்திரமானது எப்பொழுதும் பண்டைக்கால கிரேக்க குடியரசுகளில் எப்படி இருந்ததோ,— அதாவது, அடிமை எஜமானர்களுக்கு சுதந்திரம்—இருந்ததோ—அப்படித்தான் இருக்கிறது. முதலாளித்துவ சுரண்டலின் நிலைமைகள் காரணமாக, நவீன கூலி அடிமைகள் "ஜனநாயகத்தைப் பற்றிக் கவலை எடுத்துக் கொள்ள முடியாத" அளவுக்கு, "அரசியலில் கவலை எடுத்துக் கொள்ள முடியாத" அளவுக்கு இல்லாமையாலும், ஏழ்மையாலும் நசுக்கப்பட்டிருக்கிறார்கள்; சாதாரண, சமாதான ரீதியில் நிகழ்ச்சிகளின் வளர்ச்சிப் போக்கில் ஜனத்தொகையில் பெரும்பான்மையோர் பொது வாழ்விலும், அரசியல் வாழ்விலும் பங்கெடுக்க முடியாமல் தடுக்கப் பட்டுள்ளார்கள்.

இந்த அறிக்கையின் பிசகற்ற தன்மையை மிகத் தெளிவாக ஜெர்மனி உறுதிப்படுத்தியிருக்கிறது; காரணம், அங்கு சட்ட அமைப்புக்குட்பட்ட உரிமைகள் குறிப்பிடத்தக்க அளவு நீண்ட காலம் வரையிலும்— கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு வரையிலும் (1871-19.4) —தொடர்ச்சியாக நீடித்திருந்தது; இந்தக் கால கட்டத்தில், சமூக ஜனநாயகவாதிகள், மற்ற நாடுகளைக் காட்டிலும் மிக அதிகமாக "சட்ட பூர்வமான உரிமைகளைப் பயன் படுத்திக் கொள்ள" முடிந்தது; மேலும், உலகத்தில் வேறு எந்த நாட்டைக் காட்டிலும் விகிதாசாரத்தில் அதிகமான தொழிலாளர்களை ஒரு அரசியல் கட்சியில் ஸ்தாபன ரீதியாக அமைத்தார்கள்.

முதலாளித்துவ சமுதாயத்தில் அரசியல் உணர்வு படைத்த, தீவிரமாக செயல்படுகிற கூலி அடிமைகளில் மற்ற நாடுகளைக் காட்டிலும் விகிதாசாரத்தில் அதிகமானவர்கள் இதுவரையிலும் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றால் என்ன? ஒரு கோடியே ஐம்பது லட்சம் கூலிக்கு உழைக்கும் தொழிலாளர்களில் பத்து லட்சம் பேர் சமூக ஜனநாயகக் கட்சியில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்! ஒரு கோடியே ஐம்பது லட்சம் பேர்களில், முப்பது லட்சம் பேர்கள் தொழிற்சங்கங்களில் ஸ்தாபன ரீதியாக அமைக்கப் பட்டிருக்கிறார்கள்!

பொருட்படுத்த முடியாத அளவுக்கு உள்ள ஒரு சிறுபான்மை யோருக்கு, ஜனநாயகம், பணக்காரர்களுக்கு ஜனநாயகம்—இது

தான் முதலாளித்துவ சமுதாயத்தின் ஜனநாயகம். முதலாளித்துவ ஜனநாயகத்தின் அமைப்பை மேலும் கூர்மையாகக் கவனித்துப் பார்த்தால், எல்லா இடங்களிலும் வாக்குரிமை கொடுக்கும் "முக்கியத்துவமில்லாத"—முக்கியத்துவமற்றது ஊகமாகக் கொள்ளப்பட்ட—விவரங்களிலும், (பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்காதது, குடியிருப்பு நிபந்தனை போன்றவை) பிரதிநிதித்துவ நிறுவனங்களின் அமைப்பு முறைகளிலும், ஒன்றுகூடும் உரிமைக்கு எதார்த்தத்தில் விதிக்கப்பட்டிருக்கும் முட்டுக்கட்டைகளிலும் ("ஓட்டாண்டிகள்" பொது கட்டிடங்களை உபயோகிக்கக் கூடாது! தினசரிப்பத்திரிகைகள் முற்றிலும் முதலாளிகளின் நிறுவனங்களாக இருப்பதிலும் இன்னும் இவை போன்றவைகளிலும்—ஜனநாயகத்தின் மீது ஏராளமான தடைகள் விதிக்கப்பட்டிருப்பதை நாம் பார்க்கலாம். ஏழைகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் இந்தத் தடைகள், விதி விலக்குகள், தனியே ஒதுக்கித்தள்ளுதல், முட்டுக்கட்டைகள் ஆகியவை முக்கியமல்லாததாகத் தோன்றலாம்: குறிப்பாக, இல்லாமையால் ஒருக்காலும் கஷ்டப்படாதவன் பொது ஜன வாழ்வில் அடக்கி ஒடுக்கப்பட்ட வர்க்கங்களோடு ஒருக்காலும் நெருங்கிய தொடர்பில்லாதவன் (முதலாளித்துவ பிரதிநிதிகளிலும், அரசியல் வாதிகளிலும் பத்தில் ஒன்பது பேர், அல்லது நூறில் தொண்ணூறு பேர் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்) இதை முக்கியத்துவமல்லாததாகவே பார்க்கலாம்; ஆனல், ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால், இந்தத் தடைகள் ஏழைகளை அரசியலிலிருந்து, ஜனநாயகத்தில் தீவிரமாகப் பங்கெடுப்பதிலிருந்து தனியே ஒதுக்கி, வெளியே தள்ளி விடுகின்றன.

கம்யூனின் அனுபவத்தை ஆராய்ச்சி செய்யும் போது, முதலாளித்துவ ஜனநாயகத்தின் சாராம்சத்தை அற்புதமான முறையில் மார்க்ஸ் கிரகித்துக் கொண்டார்; அதாவது, அடக்கி ஒடுக்கும் வர்க்கத்தின் எந்த குறிப்பிட்ட பிரதிநிதிகள் சட்ட மன்றத்தில் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தி, அடக்கி ஒடுக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சில ஆண்டுகளுக்கு ஒரு தடவை உரிமை வழங்கப்படுகிறது என்று கூறினர்.

ஆனல், தவிர்க்க முடியாத வகையில் குறுகியதாகவும், யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாக ஏழைகளை வெளியே உந்தித்தள்ளுகிற, இதனல் முற்றிலும் போலியாகவும், வஞ்சனையானதாகவும் இருக்கிற இந்த முதலாளித்துவ ஜனநாயகத்திலிருந்து மிதவாத பேராசிரியர்களும், சிறு முதலாளித்துவ சந்தர்ப்பவாதிகளும் நம்மை நம்பும்படி கூறுவதுபோல் "மேன் மேலும்

அதிகமான ஜனநாயகத்தை" நோக்கிச் செல்லும் வளர்ச்சிப் போக்கானது எளிமையாகவும், நேரடியாகவும், அமைதியாகவும் இருக்காது. முன்னேறிச் செல்லும் வளர்ச்சியானது, அதாவது கம்யூனிஸத்தை நோக்கிச் செல்லும் வளர்ச்சிப் போக்கானது பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தின் மூலமாகத்தான் போக முடியுமே தவிர, வேறு வழியில் போக முடியாது; ஏனெனில், முதலாளித்துவ சுரண்டல்காரர்களின் எதிர்ப்பை வேறு யாரும் அல்லது வேறு எந்த வழியிலும் உடைத்தெறிய முடியாது.

பாட்டாளி மக்களின் சர்வாதிகாரமானது, அதாவது அடக்கி ஒடுக்குகிறவர்களை ஒடுக்கும் நோக்கத்தோடு ஆளும் வர்க்கம் என்ற நிலையில் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களின் முன்னணிப்படையின் ஸ்தாபன அமைப்பானது, ஜனநாயகத்தை விஸ்தரிப்பதோடு மாத்திரம் நின்றுவிட முடியாது: பணமூட்டைகளின் ஜனநாயக மாக இல்லாமல், ஏழைகளின் ஜனநாயகமாக, மக்களின் ஜனநாயக மாக முதல் தடவையாக மாறியிருக்கும் ஜனநாயகத்தை அமோக மாக விஸ்தரிப்பதோடு கூடவே, ஒரே சமயத்தில் பாட்டாளி மக்களின் சர்வாதிகாரமானது அடக்கி ஒடுக்குகிறவர்களின், சுரண்டுகிறவர்களின், முதலாளிகளின் சுதந்திரத்தில் ஒன்றன் பின் ஒன்றாகப் பல தடைகளை விதிக்கிறது. மனித இனத்தை கூலி அடிமைத் தனத்திலிருந்து விடுதலை செய்வதற்காக நாம் அவர்களை அடக்கி ஒடுக்க வேண்டும், அவர்களுடைய எதிர்ப்பைப் பலாத்காரத்தின் மூலமாக நசுக்க வேண்டும்; ஒடுக்குமுறையும், நிர்ப்பந்தமும் இருக்கிற இடத்தில் சுதந்திரமும், ஜனநாயகமும் இருக்கவே முடியாது என்பது தெளிவாகியிருக்கிறது.

பெபலுக்கு எழுதிய கடிதத்தில் எங்கல்ஸ் இதை அற்புதமான முறையில் விளக்கியிருக்கிறார். "பாட்டாளி மக்களுக்கு அரசு தேவைப்படுகிறது; சுதந்திரத்தின் நலனுக்காக அல்ல; மாறாக, அவர்களின் பகைவர்களை அடக்கி வைத்திருக்கும் நோக்கத்திற் காகவே; சுதந்திரத்தைப் பற்றிப்பேசுவது சாத்தியமானவுடன் இன்றைய அரசின் தன்மை நிலவில் இருப்பது நின்றுவிடும்"[85] என்று குறிப்பிட்டிருப்பதை வாசகர்கள் நினைவில் வைத்திருப் பார்கள்.

மக்களில் மிகப் பெரும்பாலோருக்கு ஜனநாயகம், மக்களைச் சுரண்டுகிறவர்களும், அடக்கி ஒடுக்குகிறவர்களும் வன்முறையால் ஒடுக்கப்படுவார்கள். அதாவது ஜனநாயகத்திலிருந்து விளக்கப் படுவார்கள்—இதுதான் முதலாளித்துவத்திலிருந்து, கம்யூனிஸத் திற்கு மாறிச் செல்லும் கால கட்டத்தில் ஜனநாயகத்தில் ஏற்படும் மாறுதல்.

கம்யூனிஸ்ட் சமுதாயத்தில் மாத்திரம் தான், அதாவது முதலாளிகளின் எதிர்ப்பைப் பூரணமாக நசுக்கிய பிறகு, முதலாளிகள் மறைந்து போன பிறகு, வர்க்கங்களே இல்லாமல் போன பிறகு (அதாவது, சமூக உற்பத்தி சாதனங்களின்பால் மக்களுடைய உறவு சம்பந்தமாக சமுதாயத்தின் உறுப்பினர்களிடையே வித்தியாசம் இல்லாமல் போன பிறகு) இத்தகைய சமயத்தில் மாத்திரமே "அரசு...நிலவில் இருப்பது நின்று விடுகிறது," "சுதந்திரத்தைப் பற்றி பேசுவது சாத்தியமாகிறது". அப்பொழுது மாத்திரம் தான், உண்மையான, பூரணமான ஒரு ஜனநாயகம் சாத்தியமாகிறது; எந்த விதமான விதி விலக்குகளும் இல்லாத ஒரு ஜனநாயகத்தை அடைய முடிகிறது. அப்பொழுது தான், முதலாளித்துவ அடிமைத் தனத்திலிருந்தும், முதலாளித்துவ சுரண்டலின் சொல்லொணாக் கஷ்ட நஷ்டங்கள் மிருகத்தனம், முட்டாள் தனம், அவமானங்கள் ஆகியவைகளிலிருந்தும் விடுபட்ட பிறகு, பல நூற்றாண்டுகளாகத் தெரிந்திருக்கிற, ஒழுக்க நெறிகளைப் போதிக்கிற புத்தகங்களில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக திரும்பத் திரும்ப கூறப்பட்ட சமூகத் தோழமைத் தொடர்பின் அடிப்படையான விதிகளை அனுஷ்டிப்பதில் மக்கள் படிப்படியாக பழக்கப்படுவார்கள் என்ற காரணத்தால், ஜனநாயகம் உலர்ந்து போகத் துவங்கும். அவர்கள், பலாத்காரமில்லாமல், நிர்ப்பந்தம் இல்லாமல், இழிவு தாழ்வு இல்லாமல், நிர்ப்பந்தம் செய்வதற்கு அரசு என்று அழைக்கப்படும் விசேஷக் கருவி இல்லாமல் அவைகளை அனுஷ்டிப்பதில் பழக்கப்படுவார்கள்.

"அரசு உலர்ந்து போகிறது" என்ற வார்த்தை அருமையாகப் பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கிறது; ஏனெனில், அதன் வளர்ச்சிப் போக்கின் படிப்படியான, தானாகவே இயங்குகிற தன்மையை அது சுட்டிக் காட்டுகிறது. பழக்கத்திற்குத்தான் இத்தகைய பலன் இருக்க முடியும், நிச்சயமாக இருக்கிறது; ஏனெனில், சுரண்டல் இல்லாத போது கோபத்தைத் தூண்டி விடுவதற்கு எதுவும் இல்லாத போது எதிர்ப்பையும், கலகத்தையும் தூண்டி விடுவது எதுவும் இல்லாத போது, அடக்கி ஒடுக்குவதற்கான தேவையைச் சிருஷ்டிப்பது எதுவும் இல்லாத போது, சமூக தோழமைத் தொடர்புகளின் தேவையான விதிகளை எவ்வாறு மக்கள் உடனே நடைமுறையில் அனுஷ்டிப்பதற்கு பழக்கப்படுகிறார்கள் என்பதை நாம் நம்மைச் சுற்றிலும் இலட்சம் சந்தர்ப்பங்களில் பார்க்கிறோம்.

ஆகவே, முதலாளித்துவ சமுதாயத்தில் வெட்டிச் சுருக்கப் பட்ட, இழிவான, போலியான ஒரு ஜனநாயகத்தை, பணக்காரர்களுக்கான, சிறுபான்மையோருக்கான ஒரு ஜனநாயகத்தை நாம்

பார்க்கிறோம். பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம், கம்யூனிஸத்திற்கு மாறிச் செல்லும் கால கட்டம் முதல் தடவையாக மக்களுக்கான ஜனநாயகத்தை, பெரும்பாலோருக்கான ஜனநாயகத்தைச் சிருஷ்டிக்கும்; இதோடு கூடவே, சுரண்டுகிறவர்களை, சிறுபான்மையோரை தேவையான அளவு ஒடுக்கவும் செய்யும். கம்யூனிஸம் மாத்திரம் தான் உண்மையான பூரணமான ஜனநாயகத்தை நல்கும் சக்தி பெற்றிருக்கிறது; அதிகமாக அது முழு நிறைவைப் பெறுவதற்குத் தக்கபடி, விரைவில் அது தேவையற்றதாக மாறும்; மேலும், தானாகவே உலர்ந்தும் போகும்.

வேறுவகையில் கூறுவது என்றால், முதலாளித்துவத்தின், கீழ் வார்த்தையின் சரியான அர்த்தத்தில் நாம் ஒரு அரசைப் பெற்றிருக்கிறோம்; அதாவது, ஒரு வர்க்கத்தை மற்றொரு வர்க்கம் அடக்கி ஒடுக்குவதற்கான, முக்கியமாக பெரும்பான்மையோரை சிறுபான்மையோர் அடக்கி ஒடுக்குவதற்கான ஒரு விசேஷ இயந்திரமாக இருக்கிறது. இயல்பாகவே, சுரண்டப்பட்ட பெரும்பான்மையினரை சுரண்டுகிற சிறுபான்மையினர் முறையாக அடக்கி ஒடுக்குவது என்ற கடும் பணியை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமானால், அடக்கி ஒடுக்கும் விஷயத்தில் அதிகபட்சம் இரக்கமற்ற கொடும் செயல்களையும், காட்டுமிராண்டித்தனமான கொடுமைகளையும் புரிய வேண்டும்; அடிமைத்தனத்திலும், பண்ணை அடிமை முறையிலும், கூலிக்கு உழைக்கும் முறையிலும் மனித இனமானது அதுகோரும் இரத்தக் கடல்களினூடே மெதுவாக முன்னேறிச் செல்கிறது.

மேலும், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்திற்கு மாறிச் செல்லும் காலகட்டத்தில் ஒடுக்குமுறை இன்னும் தேவைப்படுகிறது; ஆனால், இப்பொழுது அது சுரண்டப்பட்ட பெரும்பான்மையினர் சுரண்டுகிற சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்குகிறது. "அரசு" என்ற ஒரு விசேஷ கருவி, ஒரு விசேஷ இயந்திரம் அடக்கி ஒடுக்குவதற்கு இன்னும் தேவைப்படுகிறது; ஆனால், இப்பொழுது இது ஒரு மாறிச் செல்லும் அரசாக இருக்கிறது. வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் உள்ள அரசாக அது இப்பொழுது இருக்கவில்லை; சுரண்டுகிற சிறுபான்மையோரை, நேற்று கூலி அடிமைகளாக இருந்த பெரும்பான்மையோர் அடக்கி ஒடுக்குவது என்பது முந்திய நிலைமையோடு ஒப்பிடும் போது மிகவும் சுலபமான, எளிமையான இயல்பான பணியாக இருக்கும்; அடிமைகள், பண்ணை அடிமைகள், கூலிக்கு உழைக்கும் உழைப்பாளிகள் ஆகியவர்களின் கலக எழுச்சிகளை அடக்குவதில் சிந்தப்பட்ட இரத்தத்திற்குக் குறைவாகவே இதில் இரத்தம் சிந்தப்படும். இது மனித இனத்திற்கு மிகமிகக் குறைவாகவே நஷ்டத்தையும் ஏற்படுத்தும்.

அடக்கி ஒடுக்கும் ஒரு விசேஷ இயந்திரம் மறைந்து போகத் துவங்குவதற்கு ஜனத்தொகையில் மிகப் பெரும்பாலோருக்கு ஜனநாயகத்தை விஸ்தரிப்பது இணக்கமான நடவடிக்கையாகும். இயல்பாகவே, சுரண்டுகிறவர்கள் உயர்வான சிக்கலான இயந்திரம் இல்லாமல் மக்களை அடக்கி ஒடுக்கும் கடமையை நிறைவேற்ற முடியவில்லை; ஆனால், மக்களோ, மிக எளிமையான "இயந்திரம்" இல்லாமலே, ஒரு விசேஷ கருவி இல்லாமலே, ஆயுதம் தாங்கிய மக்களின் எளிய ஸ்தாபன அமைப்பு மூலமாக சுரண்டுகிறவர்களை அடக்கி ஒடுக்க முடியும் (தொழிலாளர்கள், சிப்பாய்கள் ஆகியவர்களின் பிரதிநிதிகளின் சோவியத்துகள் போன்றவை; இவை முன்னமேயே இந்தக் காரியத்தைச் செய்து விடும் என்று குறிப்பிட விரும்புகிறோம்)

கடைசியாக, கம்யூனிஸம் மாத்திரமே முற்றிலும் அரசைத் தேவையற்றதாகச் செய்கிறது; ஏனெனில், அடக்கி ஒடுக்கப்படுவதற்கு "ஒருவரும்" கிடையாது; "ஒருவரும்" என்று கூறும்போது ஒரு "வர்க்கம்" என்ற அர்த்தத்தில் கூறுகிறோம்; ஜனப்பகுதியில் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு எதிராக என்ற அர்த்தத்தில் கூறுகிறோம்; நாம் உட்டோப்பியர்கள் அல்ல; தனிப்பட்ட நபர்கள் தரப்பிலிருந்து அத்துமீறிய செயல்கள் தவிர்க்க முடியாத வகையில் நடைபெறலாம் என்பதையோ, அல்லது சாத்தியம்தான் என்பதையோ நாம் கொஞ்சம்கூட மறுக்க வில்லை; அல்லது இத்தகைய அத்துமீறிய செயல்களைத் தடுக்க வேண்டிய அவசியத்தையும் நாம் கொஞ்சம் கூட மறுக்கவில்லை. ஆயினும், முதலாவதாக, இதற்காக, அடக்கி ஒடுக்கும் விசேஷ இயந்திரமும், விசேஷ கருவியும் தேவையில்லை; ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொள்ளும் போது, அல்லது ஒரு பெண்ணைத் தாக்கும் போது நவீன சமுதாயத்திலும் கூட நாகரிக மக்கள் கூட்டம் தலையிட்டு, அதைத் தடுப்பது போல், ஆயுதம் தாங்கிய மக்கள் தாமாகவே சுலபமாகவும், மனமுவந்தும் இதைச் செய்வார்கள். இரண்டாவதாக, அத்துமீறிய செயல்கள் நடைபெறுவதற்கு அடிப்படையான சமூகக் காரணங்கள் என்ன என்பது நமக்குத் தெரியும்; அதாவது சமூக தோழமைத் தொடர்புகளின் விதிகளை மீறுவதற்குக் காரணம் மக்களைச் சுரண்டுவதும், மக்களின் இல்லாமையும், ஏழ்மையுமேயாகும். இந்த முக்கியமான காரணத்தை நீக்கி விடுவதோடு, அத்துமீறிய செயல்களும் தவிர்க்க முடியாத வகையில் "உலர்ந்து போக"த் துவங்கும். எவ்வளவு வேகமாகவும், எப்படி தொடர்ச்சியாகவும் இது நடைபெறும் என்பது நமக்குத் தெரியாது; ஆனால், அது உலர்ந்து போகும் என்பது நமக்குத் தெரியும். அவை உலர்ந்து போவதோடு கூடவே, அரசும் கூட உலர்ந்து போய்விடும்.

உட்டோப்பியாக்களைக் கட்டாமல், மார்க்ஸ் இதன் எதிர்காலம் பற்றி இப்பொழுது எதை வரையறுத்துக் கூறமுடியுமோ அதை மேலும் முழுமையாக வரையறுத்துக் கூறினர்: அதாவது, கம்யூனிஸ்ட் சமுதாயத்தின் கீழ் வளர்ச்சிப்படிக்கும், மேல் வளர்ச்சிப் படிக்கும் (மட்டங்களையும், கட்டங்களையும்) இடையே உள்ள மாறுபாட்டை வரையறுத்துக் கூறினர்.

## 3. கம்யூனிஸ்ட் சமுதாயத்தின் முதல் வளர்ச்சிப்படி.

சோஷலிஸத்தின் கீழ் ஒரு தொழிலாளி "குறையாத" அல்லது "அவனுடைய உற்பத்தியின் முழு விளைபயனையும்" பெறுவான் என்ற லாஸேலின் கருத்து தவறுனதென்று "கோதா செயல் திட்டத்தின் ஆராய்ச்சிக் குறிப்பில்" மார்க்ஸ் விரிவாக விளக்கிக் காட்டுகிருர். சமுதாயத்தின் மொத்த சமூக உழைப்பிலிருந்து ஒரு சேம ஒதுக்கீடு நிதியையும், உற்பத்தியை விஸ்தரிப்பதற்கான ஒரு நிதியையும், இயந்திரத்தின் "தேய்மானத்தை" ஈடு செய்வதற்காக ஒரு நிதியையும், இத்தகைய விஷயங்களுக்காக நிதியையும் கழிக்க வேண்டும் என்று மார்க்ஸ் எடுத்துக் காட்டுகிருர். அப்பொழுது, நிர்வாகச் செலவுக்காகவும், பள்ளிக் கூடங்களுக்காகவும், மருத்துவ மனைகளுக்காகவும், வயதானவர்களின் வீட்டு வசதிகளுக்காகவும் இன்னும் இது போன்றவைகளுக்காகவும் நுகர்ச்சிச் சாதனங்களிலிருந்து ஒருசேமிப்புத் தொகையைக் கழிக்க வேண்டும்.

லாஸேலின் தெளிவற்ற, மங்கலான, பொதுப்படையான சொற்றொடர்களுக்குப் பதிலாக (தொழிலாளியின் உழைப்பின் முழு விளை பயனையும் தொழிலாளிக்குக் கொடுப்பது") சோஷலிஸ்டு சமுதாயம் எவ்வாறு தனது விவகாரங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும் என்பது பற்றி திட்டவட்டமாக மார்க்ஸ் நிதானமாக ஒரு வரையறுப்பைக் கொடுக்கிருர். முதலாளித்துவம் இல்லாத ஒரு சமுதாயத்தின் வாழ்வின் நிலைமைகளைப் பற்றி மார்க்ஸ் தூலமாக ஆராய்ச்சி செய்கிருர்; மார்க்ஸ் பின் வருமாறு கூறுகிருர்.

"நாம் இங்கு எதைப்பற்றி பரிசிலனை செய்யவேண்டியிருக்கிறது என்ருல் (தொழிலாளர்களின் கட்சியின் செயல் திட்டத்தை பரிசிலனை செய்ய வேண்டியிருக்கிறது) ஒரு கம்யூனிஸ்டு சமுதாயத்தைப் பற்றியாகும்; அதன் சொந்த அஸ்திவாரங்களிலிருந்து வளர்ச்சியடைந்ததாக அல்ல, அதற்கு மாருக முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து தோன்றியதாக எடுத்துக் கொள்ள வேண்டும்; ஆகவே, அது பிறந்திருக்கும் கர்ப்பத்தின், அதாவது

'பழைய சமுதாயத்தின் அடையாள முத்திரைகளை அது பொருளாதார தார்மீக, அறிவு ஆற்றல் ஆகிய எல்லா அம்சங்களிலும் இன்னும் வைத்திருக்கிறது.' '[86]

முதலாளித்துவத்தின் கர்ப்பத்திலிருந்து இப்பொழுது தான் பிறந்திருக்கிற, ஒவ்வொரு அம்சத்திலும் பழைய சமுதாயத்தின் பிறவிக் குறிகளோடு இருக்கிற இந்த கம்யூனிஸ்ட் சமுதாயத்தை மார்க்ஸ் கம்யூனிஸ்ட் சமுதாயத்தின் "முதலாவது" அல்லது கீழ் வளர்ச்சிப்படி என்று கூறுகிறார்.

உற்பத்தி சாதனங்கள் தனி நபர்களின் தனிச் சொத்தாக இல்லை. உற்பத்தி சாதனங்கள் சமுதாயம் முழுமைக்கும் சொந்தமாக இருக்கின்றன. சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினரும், சமூக ரீதியில் அவசியமான வேலையில் குறிப்பிட்ட ஒரு பகுதியைச் செய்து, சமுதாயத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு வேலை செய்திருப்பதாக அத்தாட்சிப் பத்திரத்தைப் பெறுகிறார். இந்த அத்தாட்சிப் பத்திரத்தை வைத்துக் கொண்டு, மக்கள் உபயோகிக்கும் பொருள்களை விற்கும் பொதுக் கூட்டுறவு சங்கத்திலிருந்து, அதற்குப் பொருத்தமான அளவு பொருள்களைப் பெறுகிறார். பொது சேமிப்பு நிதிக்கு ஒதுக்கியிருக்கும் உழைப்பின் அளவைக் கழித்த பிறகு ஒவ்வொரு தொழிலாளியும் சமுதாயத்திற்கு எந்த அளவு உழைப்பைக் கொடுத்திருக்கிறாரோ அந்த அளவைப் பெறுகிறார்.

வெளிப்படையாகவே, "சரி சமத்துவமானது" உயர் நிலையில் இருக்கிறது.

ஆனால், இத்தகைய ஒரு சமூக அமைப்பை கருத்தில் வைத்துக் கொண்டு (பொதுவாக சோஷலிஸம் என்று அழைக்கப்படுகிறது; ஆனால், மார்க்ஸ் இதை கம்யூனிஸத்தின் முதல் வளர்ச்சிப்படி என்று அழைக்கிறார்) "சரிசமமாக வினியோகம் செய்தல்" என்றும் "உழைப்பின் விளைபயனில் அனைவருக்கும் சரிசமமான உரிமை உண்டு" என்றும் இதை லாஸேல் கூறும்போது, அவர் தவறு செய்கிறார்; மார்க்ஸ் இந்தத் தவறைப் பின் வருமாறு அம்பலப்படுத்துகிறார்:

"ஆகவே, இந்த விஷயத்தில் சரிசமமான உரிமையானது, இன்னும் "முதலாளித்துவ உரிமைக்கு" நிச்சயமாக பொருத்தமானதாகவே இருக்கிறது; மற்ற எல்லா சட்டங்களைப் போலவே, இதிலும் அசமத்துவம் பொதிந்து கிடக்கிறது. எல்லா விதமான சட்டமும், வெவ்வேறு விதமான மக்களுக்கு ஒரு சமத்துவ அளவில் அனுஷ்டிப்பதாகும்; இந்த மக்களோ, உண்மையில் ஒரே மாதிரி

யாக இல்லை, ஒருவருக்கொருவர் சரிசமமாகவும் இருக்கவில்லை. அதனால்தான், "சரிசமமான உரிமை"யானது, சரிசமத்துவத்தை மீறுவதாக இருக்கிறது; சரிசமத்துவத்திற்கு அநியாயம் வழங்கு வதாகவும் இருக்கிறது. உண்மையில், ஒவ்வொருவரும் மற்றவர் செய்த அளவு சமூக உழைப்பைச் செய்தால் சமூக உற்பத்தியின் விளைபயனில் சரிசமத்துவமான பங்கை (மேலே குறிப்பிட் டுள்ளவைகளைக் கழித்த பிறகு) பெறுகிறார்.

ஆனால், மக்கள் ஒரே மாதிரியாக இருக்கவில்லை; ஒருவர் பல முள்ளவராக இருக்கிறார்: மற்றொருவர் பலஹீனமானவராக இருக் கிறார்; ஒருவர் திருமணம் செய்தவராக இருக்கிறார்; மற்றொருவர் திருமணம் செய்யாதவராக இருக்கிறார்; ஒருவருக்கு அதிகமாகக் குழந்தைகள் இருக்கின்றன; மற்றொருவருக்கு குறைவாக குழந் தைகள் இருக்கின்றன; இவ்வாறு பல வித்தியாசங்கள் இருக் கின்றன. ஆகவே, மார்க்ஸ் கீழ்க்கண்ட முடிவுக்கு வருகிறார்:

"...வேலை செய்ததற்குச் சமமாக, சமூக நுகர்ச்சி நிதியில் சரிசமமாக பங்கைப் பெற்றால், உண்மையில் ஒருவர் மற்றொரு வரைக் காட்டிலும் அதிகமாகப் பெறுவார்; ஒருவர் மற்றொரு வரைக் காட்டிலும் பணக்காரராக இருப்பார்...இந்தக் குறை பாடுகளை எல்லாம் தவிர்ப்பதற்காக உரிமையானது சரிசமமாக இருப்பதற்குப் பதிலாக, அசமத்துவமாகவே இருக்கும்."[87]

ஆகவே கம்யூனிஸத்தின் முதலாவது வளர்ச்சிப் படியானது இன்னும் நியாயத்தையும், சரிசமத்துவத்தையும் நல்க முடியாது: செல்வத்தில் வித்தியாசங்களும், நேர்மையற்ற வித்தியாசங்களும், இன்னும் நீட்டித்திருக்கும்; ஆனால், மனிதனை மனிதன் சுரண்டுவது சாத்தியமற்றதாக மாறிவிடும்; ஏனெனில், உற்பத்தி சாதனங்களை — தொழிற்சாலைகள், இயந்திரங்கள், நிலம், இன்னும் இது போன்றவைகளை கைவசப்படுத்தி, அவைகளை தனிநபர் சொத்தாக மாற்றுவது சாத்தியமல்ல. லாஸேலின் சிறு முதலாளித்துவ, தெளிவற்ற சொற்றொடர்களைப் பொதுப் படையான முறையில் தாக்கித் தகர்த்தெறியும்போது, மார்க்ஸ் கம்யூனிஸ்ட் சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கை எடுத்துக் காட்டு கிறார்; அதாவது தனி நபர்களால் கைவசப்படுத்தப்பட்டிருக்கும் உற்பத்தி சாதனங்களின் "அநியாயத்தை" மாத்திரம் முதலில் ஒழிக்கும்படி நிர்ப்பந்தப் படுத்தப்பட்டிருக்கிறது என்றும், "செய்த வேலையின் அளவுக்குத் தக்கபடி" (தேவைக்குத் தக்கபடி அல்ல) உபயோகிக்கும் பொருள்களை வினியோகிப்பது உள்பட, மற்ற அநியாயங்களை உடனே அகற்ற முடியாது என்றும் எடுத்துக் காட்டுகிறார்.

முதலாளித்துவ பேராசிரியர்கள், "நமது" துகாஸ் ஆகியவர்கள் உள்பட கொச்சையான பொருளாதார வாதிகள் மக்களிடையே அசமத்துவம் இருப்பதை மறந்து, இந்த அசமத்துவத்தை அகற்றுவதுபற்றி "கனவில் பார்த்து சோஷலிஸ்டுகளை தொடர்ச்சியாக அவதூறு செய்கிறார்கள். நாம் பார்ப்பதுபோல், இத்தகைய அவதூறானது, முதலாளித்துவ சித்தாந்த வாதிகளின் முழு முட்டாள் தனத்தையே நிரூபித்துக் காட்டுகிறது.

மார்க்ஸ் மனிதர்களின் தவிர்க்க முடியாத அசமத்துவத்தை மிக நேர்மையான முறையில் கணக்கில் எடுத்துக் கொண்டார் என்பது மாத்திரமல்ல, அதோடு கூடவே வேறொரு உண்மையையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறார்; அதாவது, உற்பத்தி சாதனங்களை சமுதாயம் முழுமையின் பொதுச் சொத்தாக மாற்றப்படுவது மாத்திரம் ("சோஷலிஸம்" என்று பொதுவாக அழைக்கப்படுகிறது) வினியோகத்தில் உள்ள குறைபாடுகளையும், "முதலாளித்துவ சட்டத்தின்" அசமத்துவத்தையும் நீக்கிவிடாது; "செய்த வேலையின் அளவுக்குத் தக்கபடி" உற்பத்தி செய்த பொருள்கள் பகிர்ந்து கொடுக்கப்படும் என்பது இருக்கும் வரையிலும், இது நீடித்து நிலவில் இருக்கும். மேலும் தொடர்ந்து பின் வருமாறு மார்க்ஸ் கூறுகிறார்:

> "ஆனால், கம்யூனிஸ்டு சமுதாயத்தின் முதலாவது வளர்ச்சிப்படியில் இந்தக் குறைபாடுகள் தவிர்க்க முடியாதவைகளாகும்; ஏனெனில், முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து, நீண்டகாலப் பிரசவவேதனைகளை அனுபவித்து இப்பொழுது தான் அது பிறந்திருக்கிறது. சமுதாயத்தின் பொருளாதார அமைப்பைக் காட்டிலும் உயரத்தில் சட்டம் ஒருக்காலும் இருக்கவே முடியாது; அதனால், அதன் கலாச்சார வளர்ச்சியும் நிபந்தனைக் குட்படுத்தப்பட்டிருக்கிறது?" 88

ஆகவே, கம்யூனிஸ்ட் சமுதாயத்தின் முதலாவது வளர்ச்சிப் படியில் (சோஷலிஸம் என்று சாதாரணமாக அழைக்கப்படுகிறது) 'முதலாளித்துவ சட்டம்'' முழுமையாக ஒழிக்கப்படவில்லை; ஆனால், பொருளாதாரப் புரட்சியின் விகிதாசாரப்படி, அதாவது உற்பத்திசாதனங்கள் சம்பந்தப்பட்டவரையிலும் ஒரு பகுதிதான் ஒழிக்கப்பட்டிருக்கிறது. "முதலாளித்துவ சட்டம்" அவைகளை தனிநபர்களின் தனிச்சொத்தாக அங்கீகரிக்கிறது. சோஷலிஸம் அவைகளை பொதுச் சொத்தாக மாற்றுகிறது. அந்த அளவுக்கு— அந்த அளவுக்கு மாத்திரமே— "முதலாளித்துவ சட்டம்" மறைந்து போகிறது.

போராட்டத்தை நடத்துகிற வர்க்கத்தை — பாட்டாளி மக்களின் வர்க்கத்தை—ஒன்றாக இணைக்கிறது: முதலாளித்துவத்தையும், குடியரசு முதலாளித்துவமாக இருந்தாலும் கூட அதையும், அரசு இயந்திரத்தையும், நிரந்தர ராணுவத்தையும், போலீசையும், அதிகாரவர்க்கத்தையும் நசுக்கவும், அணு அணுவாகத் தகர்த்தெறியவும், உலகிலிருந்து துடைத்தெறியவும் உதவுகின்றது; அவைகளுக்குப் பதிலாக, மேலும் அதிகமாக ஜன நாயகத்தன்மை கொண்ட அரசு இயந்திரத்தை, அதே சமயத்தில் மக்கள் அனைவரையும் அணைத்துக் கொண்ட ஒரு ராணுவத்தை அமைப்பதை நோக்கிச் செல்லும் ஆயுதம் தாங்கிய தொழிலாளர்கள் வடிவத்திலுள்ள ஒரு அரசு இயந்திரத்தை அமைப்பதற்கு உதவுகிறது.

இங்கு "அளவு, குணமாக மாறுகிறது" இத்தகைய ஒரு வளர்ச்சி நிலையில் உள்ள ஜனநாயகம் முதலாளித்துவ சமுதாயத்தின் எல்லைகளைத் தாண்டி அதன் சோஷலிஸ்டு மறு சீரமைப்பைத் துவங்குகிறது என்று பொருள்படுகிறது. அரசை நிர்வாகம் செய்வதில் அனைவரும் உண்மையாகவே பங்கெடுத்துக் கொண்டால், முதலாளித்துவம் அதன் பிடிப்பை நீடித்து வைத்திருக்க முடியாது. திருப்பி அதன் முறையாக, முதலாளித்துவத்தின் வளர்ச்சியானது, அரசை நிர்வாகம் செய்வதில் அனைவரும் உண்மையாகவே பங்கெடுத்துக் கொள்வதற்கு உதவிபுரியும் முன் நிலைமைகளைச் சிருஷ்டிக்கிறது. இந்த முன் நிலைமைகளில் சில பின் வருமாறு: மக்கள் அனைவருக்கும் கல்வி அறிவு; வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் பலவற்றில் இதைப் பெற்றிருக்கிறோம்; தபால், ரெயில்வே போக்குவரத்துக்கள், பெரிய தொழிற்சாலைகள், பெரிய அளவில் உள்ள வியாபாரமுறை, பாங்கு முறை இன்னும் இது போன்றவைகளால் பெரிய, சிக்கலான, சோஷலிஸ மயமாக்கப்பட்ட கருவிகள் லட்சோப லட்சம் தொழிலாளர்களுக்குப் "பயிற்சி கொடுத்து, கட்டுப்பாட்டையும் கற்றுக் கொடுக்கின்றன."

இத்தகைய பொருளாதார முன் நிபந்தனைகள் இருந்தால், முதலாளிகளையும், அதிகாரவர்க்கத்தினரையும் வீழ்த்திய பிறகு, இவர்களுக்குப் பதிலாக, உற்பத்தி, வினியோகம் ஆகியவற்றின் மீதும், உழைப்பு, உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றின் கணக்குகளை வைத்துக்கொள்வதின் மீதும் ஆயுதம் தாங்கிய தொழிலாளர்களின், ஆயுதம்தாங்கிய ஜனத்தொகை முழுவதின் நிர்வாகப் பிடிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் உடனடியாக, இரவோடு இரவாகவே ஈடுபடுவது சாத்தியமாகும் (நிர்வாகப் பிடிப்பை ஏற்படுத்துவது, கணக்குகளை வைத்துக் கொள்வது ஆகிய பிரச்சினையை விஞ்ஞான ரீதியில் பயிற்சி பெற்ற இயந்திர வேலை நிபுணர்கள்,

கிராமப் பொருளாதார நிபுணர்கள் இன்னும் இது போன்ற பயிற்சி பெற்றவர்களின் பிரச்சினையோடு சேர்த்துக் குழப்பக் கூடாது. இந்தக் கனவான்கள் இன்று முதலாளிகளின் விருப்பத்திற்குப் பணிந்து வேலை செய்கிறார்கள்; ஆயுதம் தாங்கிய தொழிலாளர்களின் விருப்பப்படி நாளைக்கு மேலும் சிறந்த முறையில் வேலை செய்வார்கள்).

கம்யூனிஸ்ட் சமுதாயத்தின் முதலாவது வளர்ச்சிப்படியானது "தடைகள் இல்லாமல் அமைதியாகச் செயல்படுவதற்கும்". நல்ல முறையில் இயங்குவதற்கும் கணக்குகளை வைத்துக் கொள்வதும், நிர்வாகப் பிடிப்பும் முக்கியமாகத் தேவைப்படுகின்றன. ஆயுதம் தாங்கிய தொழிலாளர்கள் அடங்கியிருக்கும் அரசின் சம்பளத்திற்கு உழைக்கும் பணியாட்களாக எல்லா பிரஜைகளும் மாற்றப் படுகிறார்கள். நாடு முழுவதும் தழுவிய ஒரு தனித்த அரசு "கூட்டு நிறுவனத்தின்" தொழிலாளர்களாகவும், சிப்பந்திகளாகவும் எல்லா பிரஜைகளும் மாறுகிறார்கள். ஒட்டு மொத்தமாக என்ன எதிர் பார்க்கப்படுகிறது என்றால், அவர்கள் சம அளவில் வேலை செய்ய வேண்டும், வேலையில் அவர்களுக்குரிய பங்கைச் செய்து முடிக்க வேண்டும். சம அளவில் ஊதியத்தைப் பெற வேண்டும் ஆகியவை தான். இதற்குத் தேவையான கணக்குவைத்துக் கொள்ளும் முறையையும், கட்டுப்பாடு செய்யும் முறையையும் முதலாளித்துவம் அதிக அளவுக்கு எளிமையாக்கி இருக்கிறது; அவைகளைச் செயல் படுத்துவதையும அசாதாரணமாக எளிமையானதாகச் செய்திருக்கிறது; கண்காணிப்பது, பதிவு செய்வது, கணிதத்தின் நான்கு விதிகளைத் தெரிந்து கொள்வது, பொருத்தமான ரசீதுகளை வழங்குவது ஆகிய பணிகளை எந்தப் படித்தவனும் செய்ய முடியும்.*

மக்களில் பெரும் பாலோர் சுயேச்சையாகவும், எல்லா இடங்களிலும் இத்தகைய கணக்குகளை வைத்துக் கொள்ளத் துவங்கும் போது, முதலாளிகள் மீதும் (இப்பொழுது அவர்கள் சிப்பந்திகளாக மாற்றப் பட்டுள்ளார்கள்) முதலாளித்துவ பழக்க வழக்கங்களை நீடித்து வைத்திருக்கிற அறிவாளிகளான கனவான்கள் மீதும் இத்தகைய நிர்வாகப் பிடிப்பை ஏற்படுத்தத் துவங்கும் போது,

* தொழிலாளர்கள் தாங்களாகவே அரசின் அதிக முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை கணக்குகளை வைத்துக் கொள்வது, கட்டுப்பாட்டை ஏற்படுத்துவது என்ற அளவுக்கு சுருக்கப்பட்டிருக்கும் போது அது ஒரு "அரசியல் அரசாக" நிலையில் இருப்பது நின்று விடுகிறது, "பொதுநடவடிக்கைகள், அவைகளின் அரசியல் தன்மையை இழந்து விடும்; வெறும் நிர்வாக நடவடிக்கையாக மாறிவிடும்". (அராஜகவாதிகளோடு எங்களின் தர்க்கம்... மேலே குறிப் பிட்டுள்ள நூலில் — அத்தியாயம் iv—2

இந்தக் கட்டுப்பாடானது அனைவருக்கும் பொருத்தமானதாகவும் பொது மக்களால் நடத்தப்படுவதாகவும் பொதுவானதாகவும் உண்மையாகவே மாறுகிறது; அதிலிருந்து தப்பி நடக்கவும் முடியாது. அதிலிருந்து "வேறு போக்கிடமும் கிடையாது".

சமுதாயம் முழுவதும் சம உழைப்போடும், சம ஊதியத்தோடும் ஒரே ஒரு தனித்த காரியாலயமாக, ஒரே ஒரு தனித்த தொழிற்சாலையாக மாறிவிடும்.

முதலாளிகளை முறியடித்த பிறகு, சுரண்டுகிறவர்களை வீழ்த்திய பிறகு பாட்டாளி மக்கள் இந்த "தொழிற்சாலை" ஒழுங்கு முறையை சமுதாயம் முழுவதற்கும் விஸ்தரிக்கும்; ஆயினும் இது நாம் பின்பற்ற வேண்டிய இலக்கு நிலையில் உள்ளது அல்ல; அல்லது, நமது இறுதி குறிக்கோளும் அல்ல. முதலாளித்துவச் சுரண்டலின் அருவருப்புக்குரிய, மோசமான அம்சங்களை சமுதாயத்திலிருந்து அறவே துடைத்தெறிந்து தூய்மைப் படுத்துவதற்கும், மேலும் முன்னேறிச் செல்வதற்கும் தேவையான ஒரு நடவடிக்கையே தவிர வேறு ஒன்றுமில்லை.

சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களும், அல்லது குறைந்த பட்சம் மிகப் பெரும்பாலோர் அரசைத் தாமாகவே நிர்வாகம் செய்யக் கற்றுக் கொண்ட தருணத்திலிருந்து, இந்த வேலையைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்ட தருணத்திலிருந்து, பொருட்படுத்தக்கூடிய அளவில் இல்லாமல் சிறுபான்மையோராக இருக்கும் முதலாளிகள் மீதும், முதலாளித்துவ பழக்க வழக்கங்களை நீடித்து வைத்திருக்க விரும்பும் படித்த கனவான்கள் மீதும் கூட்டிணைவான கட்டுப்பாட்டை ஏற்படுத்திய தருணத்திலிருந்து, முதலாளித்துவத்தால் ஊழலுக்கு ஆளாக்கப் பட்டிருக்கும் தொழிலாளர்கள் மீதும் கூட்டிணைவான கட்டுப்பாட்டை ஏற்படுத்திய தருணத்திலிருந்து, இந்தத் தருணத்திலிருந்து எந்த வகையிலாவது உள்ள சர்க்காரின் தேவை முற்றிலும் மறைந்து போகத் துவங்குகிறது. ஜனநாயகமானது எந்த அளவுக்கு முழு நிறைவு பெறுகிறதோ அந்த அளவுக்கு அது தேவையில்லை என்ற நிலை விரைவில் மாறி விடும். ஆயுதம் தாங்கிய தொழிலாளர்கள் அடங்கியிருக்கும் "அரசானது" "அதன் வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் ஒரு அரசாக நிலையில் இல்லாததால்", எந்த அளவுக்கு அதிகமாக ஜனநாயகத் தன்மையைக் கொண்டதாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு வேகமாக அரசின் ஒவ்வொரு வடிவமும் உலர்ந்துபோகத் துவங்குகிறது.

எவ்வாறெனில், அனைவரும் நிர்வாகம் செய்யக் கற்றுக் கொண்டிருப்பதால், சமூக உற்பத்தியை உண்மையிலேயே சுயேச்சையாக

நிர்வாகம் செய்வதால், சுயேச்சையாகக் கணக்குகளை வைத்துக் கொள்வதால். புல்லுருவிகள், பணக்கார சோம்பேறிகள், கொள்ளை யடிப்பவர்கள், "முதலாளித்துவ பரம்பரைகளின் பாதுகாவலர்கள்" ஆகியவர்கள் மீது கட்டுப்பாட்டைச் செயல் படுத்துவதால் இந்தப் பொது மக்களால் நடத்தப்படுகிற கணக்கை வைத்துக் கொள்வது, கட்டுப்பாடு செய்வது ஆகியவற்றிலிருந்து தப்புவது என்பது தவிர்க்க முடியாத வகையில் நம்பவே முடியாத அளவுக்கு கஷ்ட மான காரியமாக மாறுகிறது; ஒரு அரிய நிகழ்ச்சியாக மாறுகிறது; அப்படி ஏதாவது நடைபெற்றால், அது வேகமாக கடுமையான தண்டனைக்கு ஆளாகும் (ஏனெனில் ஆயுதம் தாங்கிய தொழிலா ளர்கள் காரியவாதிகள்; உணர்ச்சி வசப்பட்ட அறிவாளிகள் அல்ல; ஆகவே அவர்களுக்குத் தொந்தரவு கொடுப்பதை அனுமதிப்பது அரிதாகவே இருக்கும்); எளிமையான, அடிப்படையான சமுதா யத்தின் விதிகளை அனுஷ்டிக்க வேண்டியதன் தேவை விரைவில் ஒரு பழக்க வழக்கமாக மாறிவிடும்.

அப்பொழுது, கம்யூனிஸ்டு சமுதாயத்தின் முதலாவது வளர்ச் சிப்படியிலிருந்து, அதன் உயர்ந்த வளர்ச்சிப் படிக்கு மாறிச் செல் வதற்காக, அதோடு கூடவே, அரசு பூரணமாக உலர்ந்து போவதற் கும் கதவு அகலமாக திறந்து விடப்படும்.

1917-ல் ஆகஸ்ட்
செப்டம்பரில்
எழுதப்பட்டது.
1918-ல் சிறு புத்தக
வடிவத்தில், பெட்ரோ
கிராட் "ழிசி-இன்-ழனி
யே" பிரசுராலயத்தால்
பிரசுரிக்கப்பட்டது.

திரட்டப்பட்ட
நூல்கள்,
தொகுப்பு- 25
பக்கம் 456-74

# அனைத்து ரஷ்ய மத்திய நிர்வாகக் குழுவின் கூட்டம்

## நவம்பர் 4 (17) 1917

2

### இடதுசாரி சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களின் ஒரு கேள்விக்கு பதில்

இடது சாரி புரட்சிக்காரர்களின் கேள்விக்கு தோழர் லெனின் பதில் கொடுத்தார். புரட்சியின் ஆரம்ப நாட்களில் புதிய சர்க்காரில் சேரும்படி போல்ஷ்விக்குகள் இடதுசாரி சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களை அழைத்ததையும், ஆனால் இடதுசாரி சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களின் குழு அவர்களுடைய அண்டை வீட்டு இடது சாரிகளோடு அந்தக் கஷ்டமான, நெருக்கடியான நாட்களில் பொறுப்பில் பங்குகொள்ள மறுத்ததையும், போல்ஷ்விக்குகளோடு ஒத்துழைக்க மறுத்ததையும் நினைவுக்குக் கொண்டு வந்தார்.

புதிய ஆட்சியானது, அதன் நடவடிக்கைகளில் எல்லா சம்பிரதாயங்களையும் கொஞ்சம் கூட பிறழாமல் கடைப்பிடித்தால் அதன் பாதையில் எழும் எல்லா முட்டுக்கட்டைகளையும் ஆய்ந்து முடிவு செய்வது என்பது முடியாது. நிலைமை மிகவும் அச்சம் தரக்கூடியதாக இருந்ததால், ஒத்திப்போடுவதையும் அனுமதிக்க வில்லை. கரடுமுரடான மூலை முடுக்குகளை சமநிரப்பாகும் பணியில் ஈடுபடுவதில் காலத்தை விரயம் செய்வதற்கும் போதிய கால அவகாசம் கிடையாது. ஏனெனில், புதிய நடவடிக்கைகளின் சாராம்சத்தை மாற்றுமல், வெளிப்புற தோற்றத்தை மாத்திரம் மாற்றிற்று. எப்படி இருந்தாலும், சோவியத்துகளின் இரண்டாவது அனைத்து ரஷ்ய காங்கிரஸ் சம்பிரதாயத் தன்மையில் உள்ள எல்லாக் கஷ்டங்களையும் ஒரு புறம் ஒதுக்கித் தள்ளி, நீண்ட நேரம் நடைபெற்ற கூட்டத்தில் உலக முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு சட்டங்களை தானுகவே நிறைவேற்றிற்று[91] முதலாளித்துவச் சமுதாயத்தின் நோக்கு நிலையிலிருந்து பார்த்தால், இந்தச் சட்டங்களில் சம்பிரதாயமான குறைபாடுகளைக் காணலாம்;

ஆனால், எப்படி இருந்தாலும், அதிகாரம் சோவியத்துகளின் கையில் இருப்பதால், அது எப்பொழுது வேண்டுமானாலும் தேவையான திருத்தங்களைச் செய்யமுடியும். கெரன்சியின் சர்க்கார் குற்ற இயல் சார்ந்த முறையில் செயல்படத் தவறியதும், நாட்டையும், புரட்சியையும் அழிவின் எல்லைக்குக் கொண்டு வந்திருக்கிறது; தாமதம் செய்தால் அது உண்மையில் ஆபத்தை விளைவிக்கலாம்; புதிய ஆட்சியானது, விரிவான மக்கள் திரளின் அபிலாஷை களையும், நம்பிக்கைகளையும் திருப்தி செய்யும் சட்டங்களை நிறை வேற்றுவதன் மூலமாக வாழ்க்கையின் புதிய வடிவங்களின் வளர்ச் சியில் திரும்பு கட்டநிகழ்ச்சிகளை நிறுவிவருகிறது. ஸ்தல சோவி யத்துகள் இடத்தையும், காலத்தையும் அனுசரித்து சர்க்கார் வகுத் திருக்கும் அடிப்படையான ஷரத்துக்களுக்கு திருத்தங்களைக் கொடுக் கலாம், விஸ்தரிக்கலாம், புதிதாகச் சேர்த்துக் கொள்ளலாம்: புதிய பொது வாழ்வின் அடிப்படையான அம்சம் படைப்புத் திறம் படைத்த நடவடிக்கையாகும். தொழிலாளர்கள், அவர்களுடைய தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் கட்டுப்பாடை அமைக் கட்டும், தானியங்களுக்கு மாற்றாக தொழிற்சாலையில் செய்த பொருள்களை கிராம மக்களுக்கு கொடுக்கட்டும். ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொரு பவுண்டு தானியத்தையும் கணக்கில் எழுதி வைத்துக் கொள்ளவேண்டும்; ஏனெனில், எல்லாவற்றிற்கும் மேலாக சோஷலிஸம் ஒவ்வொன்றைப்பற்றியும் கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. சோஷலிஸம் மேலே இருந்து உத்தரவைப் போடமுடியாது; இயந்திரம்போல் அதிகார வர்க்க தோரணையில் அணுகுவதை அதன் உணர்வு நிரா கரிக்கிறது; உயிருள்ள, படைப்புத் திறம் படைத்த சோஷலிஸம் மக்கள் திரள் தாமாகவே உற்பத்தி செய்த பொருளாகும்.

"பிராவ்தா"—
எண்...182,
"இஸ் லெஸ்டியா"
எண்—218.
நவம்பர். 7—1917.

திரட்டப்பட்ட
நூல்கள்—
தொகுப்பு—26
பக்கம்—287—88

# தொழிலாளர்களுக்கும், உழைக்கிற, சுரண்டப் பட்ட விவசாயிகளுக்கும் இடையே நேச அணி.

"பிராவ்தா''வுக்கு ஒரு கடிதம்

இன்று, சனிக்கிழமை, நவம்பர் 18-ம் தேதியன்று விவசாயிகளின் காங்கிரசில் நான் ஒரு சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருக்கும்போது, என்னிடம் பகிரங்கமாக ஒரு கேள்வி கேட்கப் பட்டது. அதற்கு நான் உடனே பதில் கொடுத்தேன். இந்தக் கேள்வியையும், என்னுடைய பதிலையும் வாசிக்கிற பொது மக்கள் அனைவருக்கும் உடனே தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்: ஏனெனில், சம்பிரதாயப்படி என்னுடைய சொந்தப் பொறுப்பில் நான் பேசினாலும் கூட, போல்ஷ்விக் கட்சி முழுமையின் பெயரால் தான் உண்மையில் நான் பேசினேன்.

அந்த விஷயம் பற்றிய விவரம் பின்வருமாறு:

இப்பொழுது ஏராளமான விவசாயிகள் நம்பிக்கை வைத்திருக்கும் இடதுசாரி சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களுக்கும், போல்ஷ்விக் தொழிலாளர்களுக்கும் இடையே ஒரு நேச அணி அமைக்கும் பிரச்சினையைத் தொட்டுப் பேசும்போது, இந்த நேச அணி ஒரு "நேர்மையான கூட்டணியாக", ஒரு நேர்மையான நேச அணியாக இருக்க முடியும் என்று என்னுடைய உரையில் வாதாடினேன். ஏனெனில் கூலிக்கு உழைக்கும் தொழிலாளர்களுக்கும், உழைக்கிற சுரண்டப் பட்ட விவசாயிகளுக்கும் இடையே நலன்களில் தீவிரமான வேறுபாடுகள் எதுவும் கிடையாது. சோஷலிஸம் இரண்டு தரப்பினரின் நலன்களையும் முழுமையாக திருப்தி செய்ய முடியும். அவர்களுடைய நலன்களை சோஷலிஸம் மாத்திரம்தான் நிறைவேற்றிக் கொடுக்க முடியும். ஆகவே, பாட்டாளி மக்களுக்கும், உழைக்கிற சுரண்டப்பட்ட விவசாயிகளுக்கும் இடையே ஒரு "நேர்மையான கூட்டணி" சாத்தியமானதாகும். அதே சமயத்தில் அவசியமானதுமாகும். அதற்கு மாறாக, ஒரு புறத்தில் உழைக்கிற சுரண்டப்

பட்ட வர்க்கங்களுக்கும். மறு புறத்தில் முதலாளிகளுக்கும் இடையே ஒரு "கூட்டணி" (நேச அணி) ஒரு "நேர்மையான கூட்டணி"யாக இருக்க முடியாது; ஏனெனில், இந்த வர்க்கங்களுக்கு இடையே நலன்களில் தீவிரமான மாறுபாடுகள் இருக்கின்றன.

சர்க்காரில் போல்ஷ்விக்குகள் பெரும்பாலோராகவும் இடது சாரி சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் சிறுபான்மையோராகவும் இருக்கிறார்கள் என்று கற்பனை செய்துகொள்வோம்; அல்லது, ஒரே ஒரு இடதுசாரி சோஷலிஸ்டு புரட்சிக்காரர் அமைச்சராக இருக்கிறார் என்று கூட நாம் நினைத்துக் கொள்வோம் என்று நான் கூறினேன். இத்தகைய சூழ்நிலையில், போல்ஷ்விக்குகள் ஒரு நேர்மையான கூட்டணியை நடைமுறையில் கடைப்பிடிக்க முடியுமா ?

அவர்களால் முடியும்: எவ்வாறெனில், எதிர்ப் புரட்சியாளர் களுக்கு (அதாவது வலதுசாரி சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களும், பாதுகாப்பாளர்களும் உள்பட) எதிராக நடைபெறும் போராட் டத்தில் கொஞ்சம் கூட சமரசம் செய்து கொள்ளாதவர்களாக இருப்பினும் கூட, அனைத்து ரஷ்ய சோவியத்துகளின் இரண்டாவது காங்கிரஸ் ஏற்றுக் கொண்ட நில உறவு பற்றிய செயல் திட்டத்தில், முற்றிலும் சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களின் கருத்துக்களாகவே இருக்கும் பிரச்சினைகளில் போல்ஷ்விக்குகள் வாக்களிக்காமல் தனியே ஒதுங்கியிருக்க கடமைப்பட்டுள்ளார்கள்; உதாரணமாக, நிலத்தைச் சரிசமமாகப் பங்கீடு செய்வது, சிறு நில உடமையாளர் களிடையே யோசிப்பது என்ற விஷயம் சம்பந்தப்பட்ட பிரச்சினை.

இத்தகைய ஒரு விஷயத்தில் வாக்களிக்காமல், தனியே ஒதுங்கி யிருப்பது, அவர்களுடைய செயல் திட்டத்தை மாற்றுவதாகக் கொஞ்சம் கூட நினைக்கக் கூடாது. ஏனெனில், சோஷலிஸம் வெற்றி பெற்றிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம் (தொழி லாளர்கள் தொழிற்சாலைகளைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார்கள், அதைத் தொடர்ந்து அவை பறிமுதல் செய்யப்பட்டன, பாங்குகள் தேசிய மயமாக்கப்பட்டன, நாட்டின் முழு பொருளாதார வாழ்வையும் முறைப்படுத்துவதற்கு ஒரு தலையாய பொருளாதாரக் குழு அமைக்கப் பட்டிருக்கிறது—என்று வைத்துக் கொள்வோம்); சிறு உழைக்கிற, சுரண்டப்பட்ட விவசாயிகள் முன் வைத்த இடைக்கால நடவடிக்கைகளை தொழி லாளர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்யப்பட்டார்கள் என்று வைத்துக் கொள்வோம். இத்தகைய நடவடிக்கை சோஷலிஸத்தின் லட்சியத் திற்கு பாதகம் விளைவிக்கக் கூடியதாக இருக்கக் கூடாது; என்பது

நிபந்தனையாகும். சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் இடைக் கால நடவடிக்கைகள் பெரிய அளவில் விவசாயம் செய்யும் நாடு களில் சிறிய அளவில் விவசாயம் செய்யும் நாடுகளோடு ஒரே மாதிரி யாக ஒத்திருக்காது என்று நான் கூறினேன்; காட்ஸ்கி கூட ஒரு மார்க்ஸிஸ்டாக இருக்கும் போது (1899-1909) இதை ஏற்றுக் கொண்டுள்ளார்.

இத்தகைய ஒரு விஷயம் பற்றி அமைச்சரவையிலோ, அல்லது மத்திய நிர்வாகக் குழுவிலோ முடிவு எடுக்கும் போது போல்ஷ்விக்கு களாகிய நாங்கள் வாக்களிப்பதில் கலந்து கொள்ள மாட்டோம்; காரணம், இடதுசாரி சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் (அவர்களை ஆதரிக்கிற விவசாயிகளும் கூட) தொழிலாளர்களின் கட்டுப்பாட் டையும், பாங்குகளை தேசிய மாக்குவதையும், இது போன்ற மற்ற நடவடிக்கைகளையும் ஏற்றுக் கொள்வார்களேயானல், சரிசமமாக பங்கிட்டுக் கொடுக்கும் நில உடமையானது பூரண சோஷலிசத்தை நோக்கிச் செல்லும் இடைக்கால நடவடிக்கைகளில் ஒன்றாகவே இருக்கும், பாட்டாளி மக்களைப் பொறுத்த வரையிலும், இத்தகைய இடைக்கால நடவடிக்கைகளைத் திணிப்பது முட்டாள் தனமாகும். சோஷலிஸத்தின் வெற்றியின் நலனை உத்தேசித்து, இத்தகைய இடைக்கால நடவடிக்கைகளில் உழைக்கிற சுரண்டப்பட்ட சிறிய விவசாயிகளின் தேர்ந்தெடுக்கும் விருப்பத்திற்கு விட்டுக் கொடுக்க அது கடமைப்பட்டிருக்கிறது; ஏனெனில் அது சோஷலிசத்தின் லட்சியத்திற்கு எந்த விதமான பாதகத்தையும் விளைவிக்காது:

அதன் பேரில், ஒரு இடது சாரி சோஷலிஸ்டு புரட்சிகாரர் (நான் தவருகச் சொல்லவில்லை என்று நினைக்கிறேன், அது தோழர் பியோஃபிலாக்டோவ்) கீழ்க் கண்ட கேள்வியைக் கேட்டார்:

"அரசியல் நிர்ணய சபையில்[92] சரிசமமாக நிலத்தைப் பங்கிடு செய்ய வேண்டும் என்று விவசாயிகள் ஒரு சட்டத்தை நிறை வேற்ற விரும்பினல், அதே சமயத்தில் விவசாயிகளின் கோரிக் கையை முதலாளிகள் எதிர்த்தால், இது பற்றிய முடிவு போல்ஷ் விக்குகளைச் சார்ந்திருந்தால், போல்ஷ்விக்குகள் எப்படி நடந்து கொள்வார்கள்?"

நான் பின்வருமாறு பதில் அளித்தேன்: இத்தகைய சூழ்நிலை மையில், தொழிலாளர்களின் கட்டுப்பாடு, பாங்குகளை தேசிய மயமாக்குவது போன்றவைகள் புகுத்தப்பட்டிருப்பதால் சோஷலி ஸத்தின் லட்சியத்திற்கு உத்தரவாதம் ஏற்படுத்தப் பட்டிருப் பதால், தொழிலாளர்களுக்கும், உழைக்கிற சுரண்டப்பட்ட விவசாயிகளுக்கும் இடையே உள்ள நேச அணியானது விவசாயி

களின் தீர்மானத்திற்கு வாக்களிக்கும்படியும், முதலாளிகளின் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கும்படியும் பாட்டாளி மக்களின் கட்சியை நிர்ப்பந்தம் செய்யும். என்னுடைய அபிப்பிராயத்தில், வாக்களிப்பு நடைபெறும் தருணத்தில் போல்ஷ்விக்குகள் தங்கள் கருத்து வேறுபாட்டைத் தெரிவிப்பதற்கும், அவர்களுடைய மறுப்பைப் பதிவு செய்து கொள்வதற்கும் உரிமையுடையவர் களாக இருக்கிறார்கள்; ஆனால், இத்தகைய சூழ் நிலைமையில் ஒரு பகுதிப் பிரச்சினையில் அவர்களோடு கருத்து மாறுபாடு இருக்கிறது என்ற காரணத்தால், வாக்களிக்காமல் தனியே ஒதுங்கி இருப்ப தானது, சோஷலிசத்திற்காக நடைபெறும் போராட்டத்தில், நேச சக்திகளுக்குத் துரோகம் செய்வதாகும். இத்தகைய ஒரு நிலைமை யில் போல்ஷ்விக்குகள் விவசாயிகளுக்கு ஒருக்காலும் துரோகம் செய்ய மாட்டார்கள். அதிகாரமானது தொழிலாளர் விவசாயிகள் சர்க்காரின் கையில் இருந்தால், தொழிலாளர்களின் காட்டுப்பாட் டைப் புகுத்தியிருந்தால், பாங்குகள் தேச உடமையாக்கப் பட்டிருந் தால், நாட்டின் பொருளாதார வாழ்வு முழுவதற்கும் வழிகாட்டு வதற்காக (முறைப்படுத்த) தொழிலாளர் விவசாயிகள், ஆகியவர் களின் தலையாய ஒரு பொருளாதார ஸ்தாபனம் அமைக்கப் பட்டிருந்தால் இன்னும் இது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருந்தால் சரிசமமாக நிலத்தைப் பங்கீடு செய்வது சோஷலிஸத் திற்கு கெடுதலைச் செய்ய முடியாது.

என்னுடைய பதில் இவ்வாறு தான் இருந்தது.

1917-நவம்பர் 18-ல் (டிசம்பர் 1) எழுதப்பட்டது.
1917-ல் டிசம்பர் 2-ல் (நவம்பர் 19-ல்)
"பிராவ்தாவில்" எண்-18-ல்
பிரசுரிக்கப்பட்டது.

என். லெனின்
திரட்டப்பட்ட நூல்கள்
தொகுப்பு-26
பக்கம்-333-35.

# போட்டியை எப்படி உருவாக்குவது?

முதலாளிகள், முதலாளித்துவ அமைப்பு முறை ஆகியவற்றின் போட்டி, தனி நபர்களின் தொழில் முயற்சிகள், இன்னும் இது போன்ற சிறப்பு வாய்ந்த பண்புகளையும், அருள் வளங்களையும் பாராட்டிப் புகழ்ந்து முதலாளித்துவ ஆசிரியர்கள் கட்டு கட்டாக காகிதங்களில் எழுதிக் கொடுக்கிறார்கள். சோஷலிஸ்டுகள் இந்தச் சிறப்புப் பண்புகளின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள் என்றும், "மனித இயல்பை" உதாசீனம் செய்கிறார்கள் என்றும் குற்றம் சாட்டுகிறார்கள். ஆயினும், நிகழ்ச்சியை ஆராயுமிடத்து, சிறிய அளவில், சுயேச்சையான பண்ட உற்பத்தியின் கீழ் போட்டியானது தொழில் முயற்சியையும், ஆற்றலையும், தைரியமான முன் முயற்சியையும் கணிசமாக எந்த அளவுக்கேனும் வளர்க்க முடியும்; முதலாளித்துவமானது நீண்ட காலத்திற்கு முன்பே இதற்குப் பதிலாக விரிவான, முறையில் தொழிற்சாலை மூலம் உற்பத்தியை, கூட்டு பங்கு கம்பனிகளை, சிண்டிகேட் என்ற கூட்டு நிறுவனங்களை, இன்னும் இது போன்ற ஏகபோகங்களை அமைத்து விட்டது. இத்தகைய முதலாளித்துவத்தின் கீழ் போட்டி என்றால் அதன் அர்த்தம் ஜனத்தொகையில் மக்கள் திரளின், அதன் மிகப் பெரும்பாலோரின் ஒவ்வொரு நூறு உழைப்பாளிகளிலும் தொண்ணூற்றி ஒன்பது பேரின் தொழில் முயற்சியையும், ஆற்றலையும், தைரியமான முன் முயற்சியையும் நம்ப முடியாத அளவில் மிருகத்தனமாக அடக்கி ஒடுக்குவது என்பது தான்; மேலும் அதன் அர்த்தம் என்னவென்றால், போட்டிக்குப் பதிலாக, பொருளாதார மோசடி, உறவினருக்குத் தனிச் சலுகைகாட்டுவது, சமூக ஏணியின் மேல் படிகளில் சொத்தடிமைத் தனம் ஆகியவை புகுத்தப் பட்டிருக்கிறது என்பது தான்.

அதற்கு மாறாக, சோஷலிஸமானது போட்டியை அணைப்பதற்குப் பதிலாக, உண்மையாகவே விரிவான அளவிலும், உண்மையாகவே மக்கள் திரள் அளவிலும் அதைச் செயல் படுத்துவதற்கு முதல் தடவையாக வாய்ப்பைச் சிருஷ்டிக்கிறது; எவ்வாறெனில், உழைக்கும் மக்களில் பெரும்பாலோரை உழைப்புத் துறையில்

எதார்த்தத்தில் ஈர்க்கிறது: இதில், அவர்கள் தங்களுடைய திறமைகளை, வெளிப்படுத்துகிறார்கள்; அவர்களுடைய அறிவு ஆற்றல்களை வளர்க்கிறார்கள். மக்களிடையே அமோகமாக இருக்கும் செயல் திறங்களை வெளிப்படுத்துகிறார்கள்; இவற்றை முதலாளித்துவம் நசுக்கிற்று, அடக்கி ஒடுக்கிற்று, குரல் வளையை நெருக்கிக் கொன்றது.

இப்பொழுது சோஷலிஸ்டு சர்க்கார் அதிகாரத்தில் இருக்கிறது; ஆகவே, போட்டியைத் திட்டமிட்டு உருவாக்குவது நமது கடமையாக இருக்கிறது.

முதலாளித்துவத்தை அண்டி வாழ்கிறவர்களும், அதைக் கெஞ்சிப் பிழைப்பவர்களும் சோஷலிசத்தை ஒரே மாதிரியான, மாறுமல் ஒரே நிலையில் இருக்கிற, சலிப்புத் தட்டுகிற, கவர்ச்சியற்ற ஒரு படை வீடு முறை என்று வர்ணிக்கிறார்கள். பண மூட்டைகளின் பணியாட்களும், சுரண்டுகிறவர்களை அண்டிப் பிழைப்பவர்களும், முதலாளித்துவ அறிவாளிகளான கனவான்களும் மக்களை அச்சுறுத்துவதற்கு சோஷலிஸத்தை ஒரு "பூச்சாண்டியாக" பயன்படுத்தினார்கள்; இந்த மக்கள் முதலாளித்துவத்தின் கீழ் கடும் சிறை தண்டனைக்கும், படை வீடு போன்ற கட்டுப்பாட்டிற்கும், கடினமான மந்தமான உழைப்பிற்கும், கொடிய ஏழ்மையும், அரைப் பட்டினியும் நிறைந்த வாழ்க்கைக்கும் ஆளாகியிருந்தார்கள். இந்தக் கடும் சிறை தண்டனையிலிருந்து உழைப்பாளி மக்களை விடுதலை செய்வதை நோக்கிச் செல்லும் முதல் நடவடிக்கை என்னவென்றால், நிலச்சுவான்தார்களின் நிலத்தைப் பறிமுதல் செய்வது, தொழிலாளர்களின் கட்டுப்பாடு முறையைப் புகுத்துவது, பாங்குகளை தேசியமயமாக்குவது ஆகியவை தான். அடுத்த நடவடிக்கை என்னவென்றால், தொழிற் சாலைகளை தேச உடைமையாக்குவது, ஜனத்தொகை முழுவதையும் உபயோகிப்பவர் கூட்டுறவு சங்கங்களில் வலுக்கட்டாயமாக அமைப்பது,—இவைகள் அதே சமயத்தில் பொருள்களை விற்பனை செய்யும் கூட்டுறவு சங்கங்களாகவும் இருக்கும்—தானியத்தையும், மற்ற அத்தியாவசியப் பொருள்களையும் வியாபாரம் செய்வதை அரசே ஏகபோகமாக வைத்துக் கொள்வது ஆகியவைதான்.

இப்பொழுது மாத்திரம் தான் மக்கள் திரள் அளவில் தொழில் முயற்சியையும், போட்டியையும், தைரியமான முன் முயற்சியையும் வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. முதலாளியை வெளியேற்றியிருக்கும் ஒவ்வொரு தொழிற்சாலையும், அல்லது உண்மையான தொழிலாளர்களின் கட்டுப்பாட்டால் குறைந்த பட்சம் முதலாளியின் உரிமைக்குத் தடை போடப்பட்டிருக்கும் ஒவ்வொரு தொழிற்சாலையும், நிலத்தைச் சொந்தமாக வைத்திருக்கும் சுரண்டல்காரனை வெளியேற்றி அவன் நிலத்தைப்

பறிமுதல் செய்திருக்கும் ஒவ்வொரு கிராமமும் இப்பொழுது உழைக்கும் மனிதன் தன்னுடைய அறிவு ஆற்றல்களையெல்லாம் வெளிப்படுத்த முடிந்த பிறகு, சிறிது வளைந்திருந்த முதுகின் நெளிவை எடுத்து முற்றிலும் நேராக நிமிர்ந்து நின்று, தானும் ஒரு மனித உயிர் என்பதை உணர்கிற ஒரு துறையாக மாறியிருக்கிறது. பல நூற்றுண்டுகளாகப் பிறருக்கு உழைத்த பிறகு, சுரண்டுகிறவனுக்கு நிர்ப்பந்தமாக உழைத்த பிறகு, முதல் தடவையாக தனக்காக உழைப்பது சாத்தியமாகி இருக்கிறது; மேலும் ஒருவனுடைய உழைப்பில் நவீன தொழில் நுணுக்கம், கலாச்சாரம் ஆகியவற்றின் சாதனைகளைப் பயன்படுத்துவது சாத்தியமாகி இருக்கிறது.

நிர்ப்பந்தத்தின் கீழ் வேலை செய்வதிலிருந்து, தனக்காகவே வேலை செய்வது என்ற மனித சரித்திரத்தில் இந்த மகத்தான மாற்றம் கருத்து வேற்றுமைகளில் மோதுதல் ஏற்படாமல், கஷ்டங்கள் இல்லாமல், முட்டி மோதல்கள் இல்லாமல், நாட் பட்ட புல்லுரிவிகளுக்கும் அவர்களை அண்டி வாழ்கிறவர்களுக்கும் எதிராக வன்முறைச் செயல்கள் இல்லாமல் நிகழவே முடியாது என்பது உண்மையே. இந்த விஷயத்தில், எந்தத் தொழிலாளிக்கும் மாயமயக்கங்கள் எதுவும் கிடையாது. கொடிய இல்லாமையாலும், சுரண்டுகிறவர்களுக்காக நீண்ட காலமாக அடிமை உழைப்புச் செய்ததாலும், எண்ணற்ற மானபங்கச் செயல்களுக்கும் வன்முறைச் செயல்களுக்கும் ஆளானதாலும் காம்ப்பேறிய தொழிலாளர்களும் ஏழை விவசாயிகளும் அந்தச் சுரண்டுகிறவர்களின் எதிர்ப்பை 'உடைப்பதற்கு கொஞ்சம் நேரம் பிடிக்கும் என்பதை உணர்கிருர்கள். "நொவாயாழிசின்" 93 கூட்டத்தினர் மற்ற மடத்தனமாக உணர்ச்சிக்கும் ஆளான சீரற்றவர்கள் ஆகியவர்களைச் சேர்ந்த அறிவாளிகளான கனவான்களின் உணர்ச்சி வசப்பட்ட மாயமயக்கங்களால் தொழிலாளர்களும், விவசாயிகளும் கொஞ்சம் கூட பாதிக்கப்படவில்லை; இவர்கள் முதலாளிகளை "நிராகரித்து" தொண்டை கிழிய தாங்களாகவே கத்தினுர்கள்; "பேச்சோடு, சைகையும் கலந்து" முதலாளிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள்; ஆனுல், அதைச் செயலில் செய்து காட்டுவது என்ற நிலைமை வந்த போது, அச்சுறுத்தல்களைச் செயலில் செய்து காட்டுவது என்ற நிலைமை வந்தபோது, முதலாளிகளை அகற்றும் வேலையை நடைமுறையில் நிறைவேற்ற வேண்டும் என்ற நிலைமை வந்தபோது, அடிபட்ட நாய்க்குட்டிகளைப் போல் செயலற்று, கண்ணீர் விட்டு அழுதார்கள்.

நிர்ப்பந்தத்தின் கீழ் வேலை செய்வது என்ற நிலையிலிருந்து, தனக்காகவே வேலை செய்வது, பிரம்மாண்டமான முறையில்,

தேசிய அளவில் (பெரும் அளவுக்கு சர்வதேசிய, உலக அளவில்) உழைப்பைத் திட்டம் போட்டு, முறையாக அமைப்பது என்ற நிலைக்கு மகத்தான மாற்றம் ஏற்பட்டிருப்பதால்—சுரண்டுகிறவர்களின் எதிர்ப்பை நசுக்குவதற்காக "ராணுவ" நடவடிக்கைகளை எடுப்பதோடு கூடுதலாக—பாட்டாளி மக்கள் ஏழை விவசாயிகள் ஆகியவர்கள் தரப்பிலிருந்து, அமோகமாக ஸ்தாபன வேலை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளையும், ஸ்தாபன அமைப்பு வேலை பற்றிய நடவடிக்கைகளையும் செய்ய வேண்டியிருக்கிறது. நேற்று அடிமைகளின் எஜமானர்களாக இருந்தவர்கள் (முதலாளிகள்) அவர்களுக்கு குற்றேவல் புரிந்து வந்த கும்பலான முதலாளித்துவ அறிவாளிகளான கனவான்கள் ஆகியவர்கள் ராணுவத்தின் மூலமாக ஈவிரக்கமின்றி நசுக்கும் நடவடிக்கையும், ஸ்தாபன அமைப்புக் கடமையும் பிரிக்க முடியாமல் ஒன்றாக இணைந்திருக்கின்றன. நேற்று அடிமைகளின் எஜமானர்களாக இருந்தவர்களும், அவர்களுடைய அறிவாளிகளான இழிவான "கையாட்களும்" நாங்கள் எப்பொழுதும் அமைப்பாளர்களாகவும், முதல்வர்களாகவும் இருந்திருக்கிறோம். நாங்கள் அதிகாரம் செலுத்தி வந்திருக்கிறோம்; இன்னும் அப்படியே தொடர்ந்து செய்ய விரும்புகிறோம். "சாதாரண மக்களான" தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியவர்கள் சொற்படி நடக்க மறுப்போம். அவர்களுக்கு நாங்கள் பணிந்து நடக்க மறுப்போம். பண மூட்டைகளின் சலுகைகளைப் பேணிக் காப்பதற்காகவும், மூலதனத்தின் ஆட்சியை மக்கள் மீது நீடித்து வைத்திருப்பதைப் பேணிப் பாதுகாக்கவும் அறிவை ஒரு ஆயுதமாக மாற்றுவோம்; என்று சிந்திக்கிறார்கள், பேசுகிறார்கள்.

முதலாளிகளும், முதலாளித்துவ அறிவாளிகளும், இப்படித்தான் சொல்கிறார்கள், சிந்தனை செய்கிறார்கள். சுயநலத்தின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் அவர்களுடைய நடத்தைப் போக்குப் புரியக் கூடியதாகவே இருக்கிறது. நிலப்பிரபுத்துவ நிலச்சுவான்தார்களைக் கெஞ்சிப் பிழைப்பவர்கள், அவர்களை அண்டி வாழ்கிறவர்கள்—கோகோல் சித்தரிப்பது போல்[94] சமய குருமார்கள், எழுத்தாளர்கள், அதிகார வர்க்கத்தினர்—பெலின்ஸ்கியை வெறுத்த "அறிவாளிகள்" உள்பட இவர்கள் அனைவருக்கும் பண்ணை அடிமை முறையை விட்டுப் பிரிவது "கடின"மாகவே இருந்தது. ஆனால், சுரண்டுகிறவர்கள், அவர்களுடைய "அறிவாளிகளான" குற்றேவல்காரர்கள் ஆகியவர்களின் நோக்கம் நம்பிக்கைக்கு இடம் தராததாக இருந்தது. தொழிலாளர்களும், விவசாயிகளும் அவர்களுடைய எதிர்ப்பைத் தகர்க்கத் துவங்கியிருக்கிறார்கள்; ஆனால், துரதிர்ஷ்டவசமாக, இன்னும் உறுதியாகவும், விடாப்பிடியாகவும்,

மூர்க்கத்தனமாகவும் அது இல்லை—ஆயினும் அவர்கள் தகர்த்தெறிவார்கள்.

உழைப்பாளி மக்கள் மீது சோஷலிஸ்டு புரட்சி சுமத்தியிருக்கும் மகத்தான உண்மையாகவே வீரம் செறிந்த—அந்த வார்த்தையின் உலக—சரித்திர பூர்வமான அர்த்தத்தில்— ஸ்தாபன அமைப்புக் கடமையை "சாதாரண மக்கள்", "சாதாரண" தொழிலாளர்களும், ஏழை விவசாயிகளும் சமாளிக்க முடியாது என்று "அவர்கள்" நினைக்கிறார்கள். முதலாளிகளுக்கும், முதலாளித்துவ அரசுக்கும் சேவை செய்வதில் பழக்கப்பட்டுள்ள அறிவாளிகள், "நாங்கள் இல்லாமல் நீங்கள் அந்தப் பணியைச் செய்ய முடியாது" என்று கூறி அவர்களுக்கு அவர்களாகவே ஆறுதல் கூறிக் கொள்கிறார்கள். ஆனால், அவர்களுடைய கர்வம் நிறைந்த அனுமானத்தில் உண்மை எதுவும் கிடையாது; படித்தவர்கள் ஏற்கெனவே மக்கள் பக்கத்தில், உழைக்கும் மக்கள் பக்கத்தில் அவர்களைச் சார்ந்து நிற்கத் துவங்கியிருக்கிறார்கள்; மூலதனத்தின் சேவகர்களின் எதிர்ப்பை தகர்த்தெறிவதற்கு ஏற்கெனவே உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள், தொழிலாளி வர்க்கம் ஆகியவற்றுக்கு இடையே ஸ்தாபன அமைப்புத் திறம் படைத்தவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்; அவர்கள் இப்பொழுது தான் அதை உணரத் துவங்கி இருக்கிறார்கள்; விழிப்படைய துவங்கியிருக்கிறார்கள். தங்கள் சொந்த சக்திகள் மூலமாக சோஷலிஸ்டுகள் சமுதாயத்தை நிர்மாணம் செய்யும் கடமையைச் சமாளிப்பதை நோக்கி தங்கள் மகத்தான, ஜீவாதாரமான படைப்பு வேலையில் இப்பொழுது தான் ஈடுப் படத் துவங்கியிருக்கிறார்கள்.

இன்று மிக முக்கியமான, கடமைகளில் ஒன்று, அல்லது மிக முக்கியமான கடமை என்னவென்றால், தொழிலாளர்களில், பொதுவாக உழைக்கிற மக்களின், சுரண்டப்பட்ட மக்களின் இந்த சுயேச்சையான முன் முயற்சியை வளர்ப்பதாகும்; மேலும் ஸ்தாபன அமைப்பு படைப்புத் திறம் வாய்ந்த பணியை எந்த அளவுக்கு முடியுமோ, அந்த அளவுக்கு சாத்தியமான வரையிலும் விரிவாக வளர்க்க வேண்டும் "உயர்ந்த வர்க்கங்கள்" என்று அழைக்கப்படுகிறவர்கள், மாத்திரம் தான், பணக்காரர்கள் மாத்திரம் தான் பணக்காரர்களின் பள்ளியில் அறிவும், பயிற்சியும் பெற்றவர்கள் மாத்திரம் தான் அரசை நிர்வாகம் செய்யும் சக்தி படைத்தவர்கள் என்றும், சோஷலிஸ்டு சமுதாயத்தின் ஸ்தாபன ரீதியான வளர்ச்சிக்கு வழிகாட்டும் சக்தி படைத்தவர்கள் என்றும் கூறுகிற பழைய, முட்டாள்தனமான, மனித தன்மையற்ற, இழிவான, வெறுக்கத்தக்க

தப்பெண்ணங்களை எந்த வகையிலாயினும் சரி நாம் உடைத்தெறிய வேண்டும்.

இந்தத் தப்பெண்ணமானது, நாட்பட்டு மக்கிப் போன வேலை முறையாலும், உணர்ச்சியை இழக்கச் செய்யும் கருத்துக்களாலும், அடிமைத் தனமான பழக்க வழக்கங்களாலும், இன்னும் முக்கியமாக முதலாளிகளின் இழிவான சுயநலத்தாலும் பேணிப் பாதுகாக்கப்பட்டதாக இருக்கிறது; கொள்ளையடிக்கும் போது, முதலாளிகளின் நலனுக்காக நிர்வாகம் செய்யப்படுகிறது; நிர்வாகம் செய்யும் போது கொள்ளையடிக்கப்படுகிறது. தங்களுக்கு அறிவு ஆற்றல் தேவை என்பதை தொழிலாளர்கள் ஒரு காலத்திலும் மறக்க முடியாது. அறிவுத் தாகத்தைத் தீர்ப்பதற்கு அசாதாரணமாகத் தொழிலாளர்கள் முயல்கிறார்கள் என்பது குறிப்பாக இப்பொழுது வெளிப்படுத்தப்படுகிறது; இது பற்றி பாட்டாளி மக்களிடையே தவறான கருத்துக்கள் நிலவியது கிடையாது என்பதையும், நிலவில் இருக்க முடியாது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. ஆனால், எழுதப் படிக்கத் தெரிந்த மக்களைப் பற்றி நிர்ணயம் செய்யக் கூடிய, நடை முறை அனுபவம் வாய்ந்த சாதாரண நிலையில் உள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும், விவசாயிக்கும், ஸ்தாபன அமைப்பு பற்றிய வேலைகளைச் செய்யும் சக்தி இருக்கிறது. முதலாளித்துவ அறிவாளிகள் இத்தகைய இறுமாப்போடும் வெறுப்போடும் பேசுகிற "சாதாரண மக்கள்" இடையே இத்தகைய திறமை படைத்த ஆண்களும், பெண்களும் ஏராளமாக இருக்கிறார்கள். தொழிலாள வர்க்கம், விவசாயிகள் ஆகியவர்கள் இடையே உள்ள இத்தகைய திறமைகள் வளமிக்கதாகவும் இன்னும் உபயோகத்திற்குத் தொடப்படாமலும் இருக்கின்றன.

தொழிலாளர்களும், விவசாயிகளும் இன்னும் "எளிதில் மருளுகிற"வர்களாக இருக்கிறார்கள்; அவர்கள் இப்பொழுது ஆளும் வர்க்கமாக இருக்கிறார்கள் என்ற கருத்துக்கு அவர்கள் இன்னும் பழக்கமாக வில்லை; அவர்களிடமிருந்து இன்னும் தயக்கம் போகவில்லை. வாழ்நாள் முழுவதும் தடிக்குப் பயந்து இல்லாமையாலும் பசியாலும் வேலை செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்த கோடானுகோடி மக்களின் உள்ளத்தில் இந்தக் குணும்சங்களை ஒரே மூச்சில் புரட்சியானது புகுத்த முடியாது. ஆனால், 1917-ல் நவம்பரில் நடைபெற்ற புரட்சியானது வலிமைமிக்கதாகவும், மாறுபட்ட, சூழ்நிலைமையிலும் தொடர்ந்து நீடித்திருக்கக் கூடியதாகவும், வெல்ல முடியாததாகவும் இருக்கிறது; ஏனெனில், அது இந்தக் குணும்சங்களைத் தட்டி எழுப்புகிறது; பழைய முட்டுக் கட்டைகளை உடைத்தெறிகிறது; தேய்ந்து இத்துப் போன தளைகளை அகற்றுகிறது; உழைக்கும் மக்களை ஒரு புதிய வாழ்க்கையைச் சுயேச்சையாகப் படைக்கும் பாதையில் அழைத்துச் செல்கிறது.

கணக்குகளை வைத்துக் கொள்வது, கட்டுப்படுத்துவது—இது தான், ஒவ்வொரு தொழிலாளர், சிப்பாய்கள், விவசாயிகள் ஆகியவர்களின் சோவியத்தின், ஒவ்வொரு உபயோகிப்பவர்களின் கூட்டுறவு சங்கத்தின், ஒவ்வொரு பொருள்களை வினியோகிக்கும் சங்கத்தின், அல்லது குழுவின், ஒவ்வொரு தொழிற்சாலைக் குழுவின் அல்லது பொதுவாக ஒவ்வொரு தொழிலாளர்களின் கட்டுப்பாடின் முக்கியமான பொருளாதாரக் கடமையாக இருக்கிறது. உழைப்பின் கடினத் தன்மையைக் குறைப்பது, அல்லது முதலாளியிடமிருந்து குறைந்த பட்சம் கொஞ்சமாவது பிடுங்குவது என்பது தான் அடிமையின் ஒரே ஒரு குறிக்கோள்; இந்த அடிமையின் கண்ணோட்டத்திலிருந்து உற்பத்தி சாதனங்களையும்,

உழைப்பின் அளவையும் கணிக்கும் பழைய பழக்கத்தை எதிர்த்து நாம் போராட வேண்டும். முன்னேற்றமடைந்த, வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்கள் ஏற்கெனவே இந்தப் போராட்டத்தைத் துவங்கியிருக்கிறார்கள். புதிதாகச் சேர்ந்திருப்பவர்களை எதிர்த்து அவர்கள் உறுதியாகப் போராடி வருகிறார்கள்; இவர்கள் யுத்த காலத்தில் குறிப்பிடத் தக்க முறையில் ஏராளமாக தொழிற்சாலை உலகத்திற்கு வந்தார்கள்; இவர்கள் மக்களின் தொழிற்சாலையை, மக்கள் கைவசத்திற்கு வந்திருக்கும் தொழிற்சாலையை பழைய முறையிலேயே பாவிக்க விரும்புகிறார்கள்; "அகப்பட்டதைச் சுருட்டுவது" என்ற ஒரே ஒரு குறிக்கோளுடன் இருக்கிறார்கள். எல்லா வர்க்க உணர்வு படைத்த, நேர்மையான, சிந்தனை செய்கிற விவசாயிகளும், உழைக்கும் மக்களும் இந்தப் போராட்டத்தில் முன்னேற்றமடைந்த தொழிலாளர்களின் பக்கத்தில் சேர்ந்து கொள்வார்கள்.

கணக்குகளை வைத்துக் கொள்வது, கட்டுப்படுத்தி வைத்துக் கொள்வது ஆகியவற்றை தலையாய அரசு அதிகாரம் என்ற நிலையில் தொழிலாளர்கள், சிப்பாய்கள், விவசாயிகள் ஆகியவர்களின் சோவியத்துகள் நிறைவேற்றினார்களேயானால், அல்லது இந்த அதிகாரத்தின் தாக்கீதுகளின்படி, அதிகாரத்தின்படி, நிறைவேற்றுவார்களேயானால்—அதாவது விரிவான அளவிலும், பொதுவாகவும், சர்வ வியாபகமாகவும் கணக்குகளை வைத்துக் கொண்டால், கட்டுப்பாட்டை செயல்படுத்தினால், குறிப்பாக செய்த வேலையின் அளவையும், உற்பத்திப் பொருள்களை வினியோகம் செய்ததையும் பற்றிய கணக்கு வைத்துக் கொண்டால், கட்டுப்பாட்டை செயல்படுத்தினால்—இது தான் பாட்டாளி மக்களின் அரசியல் ஆட்சியை அமைத்து, அதை உறுதிப்படுத்திய பிறகு, சோஷலிஸ்டு உருமாற்றம் செய்வதின் சாராம்சமாக இருக்கிறது.

சோஷலிஸத்திற்கு மாறிச் செல்வதற்கு அவசியமாக இருக்கும் கணக்கு வைத்துக் கொள்வதையும் கட்டுப்பாட்டை

ஏற்படுத்துவதையும் மக்கள் மாத்திரமே செயல்படுத்த முடியும். பணக்காரர்கள், அயோக்கியர்கள், சோம்பேறிகள், போக்கிரிகள் ஆகியவர்கள் சம்பந்தமாக கணக்கு வைத்துக் கொள்வதற்கும் அவர்களைக் கட்டுப்படுத்தி வைத்துக் கொள்வதற்கும் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியவர்களின் மக்கள் திரள் உணர்வு பூர்வமாகவும், தாமாகவே முன் வந்தும் ஒத்துழைப்புக் கொடுத்தால் தான், புரட்சிகரமான உற்சாகத் தன்மை கொண்ட ஒத்துழைப்புக் கொடுத்தால் தான். முதலாளித்துவ சமுதாயத்தின் இந்த சாபக்கேடான மீத மிச்சங்களையும் மனித சமுதாயத்தின் இந்த உபயோகமற்ற குப்பைக் கூளங்களையும், படுமோசமாக அழுகிப் போன, மெலிந்து போன உறுப்புக்களையும், முதலாளித்துவத்திலிருந்து வாரிசு சொத்தாக சோஷலிஸம் பெற்றிருக்கும் இந்த பிளேக் வியாதியையும், சீழ் புண்ணையும், தொற்று நோயையும் வெல்ல முடியும்.

தொழிலாளர்களே, விவசாயிகளே, உழைக்கிற, சுரண்டப்பட்ட மக்களே! நிலம், பாங்குகள், தொழிற்சாலைகள் ஆகியவை அனைத்தும் இப்பொழுது மக்கள் அனைவருடைய சொத்தாகமாறியிருக்கின்றன! பொருள்களை உற்பத்தி செய்வதையும், வினியோகம் செய்வதையும் நீங்கள் நீங்களாகவே கட்டுப்பாடு செய்து, கணக்கு வைத்துக் கொள்ளும் பணியில் ஈடுபட வேண்டும்; சோஷலிஸத்தின் வெற்றிக்கு அழைத்துச் செல்லும் பாதை இது தான், இது மாத்திரம் தான்; அதன் வெற்றிக்கு இது தான் உத்திரவாதத்தை நல்குகிறது: எல்லா விதமான சுரண்டலையும், எல்லா விதமான ஏழ்மையையும், இல்லாமையையும் முறியடித்து வாகை மாலை சூடுவதற்கு இது தான் உத்திரவாதம் அளிக்கிறது! எவ்வாறென்றால், உழைப்பையும், அது உற்பத்தி செய்யும் பொருள்களையும் சரியாக வினியோகம் செய்தால், மக்கள் முழுமையும் இந்த வினியோகத்தின் மீது வாணிக முறைமை வழுவாமல் நடை முறையில் கட்டுப்பாட்டை நிலை நாட்டினால், மக்கள் விரோதிகளை, அதாவது பணக்காரர்களையும், அவர்களை அண்டி வாழ்கிறவர்களையும், போக்கிரிகளையும், சோம்பேறிகளையும், ரௌடிகளையும் அரசியல் ரீதியாக மாத்திரமின்றி தினசரி பொருளாதார வாழ்விலும் முறியடித்தால் ஒவ்வொருவரதும் தேவைகளைத் திருப்தி செய்ய, ரஷ்யாவில் போதுமான அளவு ரொட்டியும், இரும்பும், மரமும், கம்பளியும், பருத்தியும், சணலும் இருக்கின்றன.

இந்த மக்கள் எதிரிகளுக்கு, சோஷலிசத்தின் எதிரிகளுக்கு உழைக்கும் மக்களின் எதிரிகளுக்கு தயவு தாட்சண்யம் கிடையாது. பணக்காரர்களையும், அவர்களை அண்டி வாழ்கிற முதலாளித்துவ

அறிவாளிகளையும் எதிர்த்து இறுதி வரை போர் தொடுக்க வேண்டும்! போக்கிரிகளையும், சோம்பேறிகளையும், ரௌடிகளையும் எதிர்த்து போர் தொடுக்க வேண்டும்! அவர்கள் அனைவரும் ஒரே வளர்ப்பினத்தைச் சேர்ந்தவர்கள்—முதலாளித்துவத்தின் சந்ததிகள் நிலப் பிரபுத்துவ முதலாளித்துவ சமுதாயத்தின் பிள்ளைகள்; இந்த விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர் மக்களைக் கொள்ளையடிக்கிற, மோசடி செய்கிற சமுதாயம் இது; ஏழ்மையும், இல்லாமையும் ஆயிரக்கணக்கானவர்களை ரௌடிசம், ஊழல், போக்கிரித்தனம் ஆகியவற்றின் பாதையில் உந்தித் தள்ளும் சமுதாயம் இது; மனிதத் தன்மையின் சாயலை எல்லாம் அறவே அவர்கள் இழக்கும்படி செய்யும் சமுதாயம் இது; இந்த சமுதாயமானது சுரண்டலிலிருந்து தப்பிப்பதற்காக, அதற்குப் பிடி கொடுக்காமல் தப்பிப்பதற்காக, ஒரு கணமாவது அருவருப்பூட்டுகிற உழைப்பிலிருந்து தப்பிப்பதற்காக சூதுவாது வஞ்சனை நிறைந்த முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். அவாவை உழைக்கிற மனிதனிடத்தில் தவிர்க்க முடியாத வகையில் வளர்த்தது; பட்டினியைப் போக்குவதற்காகவும், தானும் தன்னுடைய நெருங்கிய உறவினர்களும் அனுபவிக்கும் பட்டினி பசியின் கடும் வேதனையைத் தணிப்பதற்காகவும் எந்த வகையிலாவது, எந்த முறையிலாவது கொஞ்சம் அப்பப் பொருக்குகளையாவது, பெற வேண்டும் என்ற அவாவை வளர்க்கிறது.

பணக்காரர்களும், போக்கிரிகளும் ஒரே காசின் இரு பக்கங்களாக இருக்கிறார்கள் முதலாளித்துவம் வளர்த்திருக்கும் புல்லுருவிகளில் முக்கியமான இரண்டு ரகங்களாக அவர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் சோஷலிஸத்தின் முக்கியமான எதிரிகளாக இருக்கிறார்கள். இந்த எதிரிகளை மக்கள் அனைவரதும் கண்காணிப்பின் கீழ் வைத்திருக்க வேண்டும். சோஷலிஸ்டு சமுதாயத்தின் விதிகளையும், ஒழுங்கு முறைகளையும் இவர்கள் இம்மியளவேனும் மீறினால், அதற்காக அவர்களை ஈவிரக்கமின்றி தண்டிக்க வேண்டும். இந்த விஷயத்தில் பலஹீனத்தையோ, தயக்கத்தையோ, அல்லது உணர்ச்சி வசப்படுவதையோ வெளிப்படுத்தினால் அது சோஷலிஸத்திற்கு விரோதமாகச் செய்யும் அளவற்ற குற்றமாகும்.

சோஷலிஸ்டு சமுதாயத்திற்கு இந்தப் புல்லுருவிகள் தீங்கு செய்ய முடியாதவர்களாக மாற்றும் பொருட்டு, மக்கள் முழுமையும் காணமுடியும்; அவர்களிடையே லட்சோப லட்சம் தொழிலாளர்களும், விவசாயிகளும் செய்த வேலையின் அளவு, உற்பத்தி, வினியோகம் ஆகியவை சம்பந்தமாக கணக்கு வைத்துக் கொள்வதிலும், கட்டுப்பாடு செய்வதிலும் தாமாகவே மனமுவந்து, ஆக்கபூர்வமாக, புரட்சிகரமான உற்சாகத்தோடு பங்கெடுக்கும்படி

செய்ய வேண்டும். இந்தக் கட்டுப்பாட்டையும், கணக்கு வைத்துக் கொள்வதையும் முறையாக ஸ்தாபன ரீதியாக அமைக்கும் பொருட்டு—ஒவ்வொரு நேர்மையான, புத்திசாலியான, திறமை வாய்ந்த தொழிலாளியின், விவசாயியின் அறிவு ஆற்றலுக்கு முற்றிலும் இது உட்பட்டதாகவே இருக்கிறது—அவர்களுடைய ஸ்தாபன அமைப்புத் திறமையை நாம் தட்டி எழுப்ப வேண்டும்; இந்தத் திறமையை நாம் அவர்களிடையே தேசிய ரீதியில்—ஸ்தாபன ரீதியான சாதனைகளின் துறையில் போட்டியைத் தட்டி எழுப்ப வேண்டும்; ஒரு படித்தவனின் அவசியமான ஆலோசனைக்கும், "சாதாரண" விவசாயி, தொழிலாளியால் ஏற்படுத்தப் பட்ட அவசியமான கட்டுப்பாட்டிற்கும் இடையே வழக்கமாக "படித்தவர்கள்" இடையே இருக்கும் ஒழுங்கு முறையற்ற தன்மையின் வித்தியாசத்தை தொழிலாளர்களும், விவசாயிகளும் தெளிவாகப் பார்க்கும்படி செய்ய வேண்டும்.

இந்த ஒழுங்குமுறையற்ற தன்மை, இந்த அஜாக்கிரதைத் தன்மை, துப்புரவு கெட்ட தன்மை, குறித்த காலத்தில் குறிப்பிட்ட காரியத்தைச் செய்யக் தவறும் தன்மை, நரம்புத் தளர்ச்சியோடு அவசரப்படும் தன்மை, செயலுக்குப் பதிலாக விவாதத்தைப் புகுத்தும் மனப்போக்கு, வேலை செய்வதற்குப் பதிலாக பேசிக் கொண்டே இருப்பது, ஒரு வேலையைக் கூட பூர்த்தி செய்யாமல் எல்லா வேலைகளையும் மேற்கொள்வது ஆகியவை "படித்தவர்களின்" குணும்சங்களாக இருக்கின்றன; இயல்பாகவே, அவர்கள் கெட்டவர்களாக இருக்கிறுர்கள் என்பதல்ல இதற்குக் காரணம்; மேலும், அவர்கள் கெட்ட எண்ணம் படைத்தவர்கள் என்பதும் அதற்குக் காரணமல்ல; அவர்களுடைய வாழ்க்கையின் பழக்க வழக்கங்கள், களைப்பூட்டும் வேலை நிலைமைகள், உடல் உழைப்பிலிருந்து, மூளை உழைப்பு அசாதாரணமாகப் பிரிக்கப் பட்டிருப்பது என்னும் இவை போன்றவைகள் அதற்குக் காரணமாக இருக்கின்றன.

நமது புரட்சியின் தவறுகள், கடமையில் பிழைகள், குறைபாடுகள் ஆகியவைகள் இருப்பதற்குக் காரணம், நமது மத்தியில் இருக்கும் அறிவாளிகளின் குணும்சங்கள் வருந்தத்தக்க முறையிலும், அதே சமயத்தில் தவிர்க்க முடியாத வகையிலும் இருப்பதாகும்; மேலும், அறிவாளிகளின் ஸ்தாபன அமைப்பு வேலைகள் மீது தொழிலாளர்கள் போதிய அளவு கண்காணிப்பை நிலை நாட்டாமலிருப்பதும் காரணமாக இருக்கிறது.

தொழிலாளர்களும், விவசாயிகளும் இன்னும் "எளிதில் மருளுகிறவர்களாக" இருக்கிறுர்கள்; இந்த எளிதில் மருளுகிற

தன்மையை அவர்கள் அகற்ற வேண்டும்: அவர்கள் நிச்சயமாக அதை அகற்றி விடுவார்கள். படித்தவர்கள், அறிவாளிகள், நிபுணர்கள் ஆகியவர்களின் ஆலோசனையை நாம் தவிர்க்க முடியாது. புத்திசாலியான ஒவ்வொரு தொழிலாளியும், விவசாயியும் இதைத் துல்லியமாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்; தொழிலாளர்கள், விவசாயிகள் தரப்பிலிருந்து போதிய கவனம் செலுத்தவில்லை என்றோ, அல்லது தோழமை உணர்வோடு மதிப்புக் கொடுக்கவில்லை என்றோ நம்மிடையே உள்ள அறிவாளிகள் குறை கூற முடியாது. ஆயினும், ஆலோசனை கூறுவது, மேலாளர் என்ற நிலையில் செயல் முறை போதனை கொடுப்பதும் ஆகியவை ஒரு தனி விஷயம்; அதேசமயத்தில், நடைமுறையில் கணக்கு வைத்துக்கொள்வதையும், கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதையும் முறையாக அமைப்பது வேறு விஷயம். அடிக்கடி அறிவாளிகள் அற்புதமான ஆலோசனைகளையும், மேலாளர் என்ற நிலையில் செயல் முறை போதனைகளையும் கொடுக்கிறார்கள்; ஆனால், அவர்கள் நகைக்கத் தக்கமுறையில், முட்டாள் தனமான வகையில், வெட்கப்படக்கூடிய முறையில் "செயல்படும் திறமையற்றவர்கள்" என்பதை நிரூபிக்கிறார்கள்; மேலும், இதே ஆலோசனைகளையும், போதனைகளையும் நடைமுறையில் செயல் படுத்தும் சக்தியற்றவர்கள் என்பதையும், சொல்லைச் செயலில் செய்து காட்டுவதில் நடைமுறையில் பிடிப்பு எதுவும் இல்லாதவர்கள் என்பதையும் நிரூபிக்கிறார்கள்.

இந்த ஒரே ஒரு அம்சத்தில், "மக்கள்" மத்தியிலிருந்தும் தொழிற்சாலையில் வேலை செய்கிறவர்கள் மத்தியிலிருந்தும், உழைக்கும் விவசாயிகள் மத்தியிலிருந்தும் முன்னுக்கு வருகிற நடைமுறை ஸ்தாபன அமைப்பாளர்களின் உதவியையும் தலைமைப் பாத்திரத்தையும் தவிர்ப்பது முற்றிலும் முடியாத காரியமாகும். "பானைகளைச் செய்வது கடவுள்கள் அல்ல"—தொழிலாளர்களும், விவசாயிகளும் தங்கள் மனதில் பசுமரத்தாணி போல் பதியவைத்துக் கொள்ள வேண்டிய உண்மை இதுவாகும். இப்பொழுது நமது முன்னால் இருக்கும் முழுக்கடமையும் நடைமுறை வேலை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்; தத்துவத்தை நடைமுறைச் செயலாக மாற்றுகிற, நடைமுறை செயலால், வீரிய மூட்டுகிற, நடைமுறைச் செயலால் தவறுகளைத் திருத்துகிற, நடைமுறைச் செயலால் சோதிக்கிற சரித்திர பூர்வமான தருணம் வந்து விட்டது; "ஒரு டஜன் செயல் திட்டங்களைக்காட்டிலும், உண்மையாகவே இயக்கத்தின் முன் வைக்கும் ஒவ்வொரு அடியும் முக்கியமானதாகும்[95] என்று மார்க்ஸ் கூறிய வார்த்தைகளின் உண்மை நடைமுறையில் குறிப்பாகத் தெளிவாகத் தெரிகிற காலம் வந்து விட்டது; சோஷலிஸத்

தைப்பற்றி அற்புதமான ஒரு டஜன் வாதங்களைக்காட்டிலும், பணக்காரர்களையும் போக்கிரிகளையும் உண்மையாகவே நடைமுறையில் கட்டுப்படுத்துவதை நோக்கியும் அவர்களைக் கட்டுப்பாட்டின் கீழ்வைத்திருப்பதை நோக்கியும் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையையும், சிறப்புத் தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. ஏனெனில் "தத்துவம் நண்பரே, நரைத்திருக்கிறது: ஆனால், வாழ்வின் நிரந்தரமான மரம் பச்சையாக இருக்கிறது" ௯௬

தொழிலாளர்கள், விவசாயிகள் மத்தியிலிருந்து வரும் நடைமுறை ஸ்தாபன அமைப்பாளர்களிடையே போட்டிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அறிவாளிகள் செய்ய விரும்புவது போல், மாறுதலே இல்லாத ஒரே விதமான வடிவங்களை நிலை நாட்டுவதற்கும், மேலிருந்து ஒரே தன்மையைத் திணிப்பதற்கும் எடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சியையும் எதிர்த்துப் போராட வேண்டும். மேலிருந்து திணிக்கப்படும் மாறுதலே இல்லாத ஒரே விதமான வடிவங்களுக்கும், ஒரே தன்மை வாய்ந்த முறைக்கும் ஜனநாயக, சோஷலிஸ்டு மையப்படுத்துவதற்கும் இடையே பொதுவான அம்சங்கள் எதுவும் கிடையாது. தனித்தனி கூறுகளில், திட்டவட்டமான ஸ்தல அம்சங்களில், அணுகும் முறைகளில், கட்டுப்பாட்டைச் செயல் படுத்தும் முறைகளில், புல்லுருவிகளை (பணக்காரர்கள், போக்கிரிகள், ஒழுங்குமுறையற்றவர்கள், இசிவு நோய்க்கு ஆளான அறிவாளிகள் இன்னும் இவர்களைப் போன்றவர்களை) துடைத்தெறிந்து, தீங்கு இழைக்காதவர்களாக மாற்றும் வழிவகைகளிலும் பல்வேறு ரகங்கள் இருப்பது, இன்றியமையாதவைகளின் அடிப்படையானவற்றின், ஆதாரமான முக்கிய பகுதிகளின் ஒற்றுமையைப் பாதிப்பதற்குப் பதிலாக, அதற்கு உத்தரவாத மளிக்கின்றன.

மாறுமல் எப்பொழுதும் ஒரே நிலையில் உள்ள வடிவங்கள் உட்படாமல், தனியாக நிர்ப்பந்தம் இல்லாமல் சுயவிருப்பப்படி அமைந்துள்ள மத்தியத்துவத்தோடு கீழ்நிலையிலிருந்து செயலையும் விறுவிறுப்பையும் முன் முயற்சி சுயேச்சைத் தன்மை எதையும் சார்ந்திராத நிலை ஆகியவற்றோடு எவ்வாறு இணைப்பது என்பதற்கு பாரிஸ் கம்யூன் மகத்தான முன் உதாரணத்தை நல்கிற்று. நமது சோவியத்துகளும் அதே பாதையைப் பின் பற்றி வருகின்றன. ஆனல் அவைகள் இன்னும் "எளிதில் மருளும்" தன்மை வாய்ந்ததாக இருக்கின்றன. அவர்கள் இன்னும் தொடக்க நிலையைக் கடந்து, முறையாக வேலை செய்யும் நிலையை அடையவில்லை; சோஷலிஸ்டு சமுதாய அமைப்பை நிர்மாணம் செய்யும் புதிய, மகத்தான, படைப்புத்திறன் வாய்ந்த கடமையைச் செய்து

முடிக்கும் பெரிய பணியில் அவர்கள் இன்னும் முழுமூச்சுடன் ஈடுபடவில்லை. சோவியத்துகள் மேலும் தைரியமாக வேலை செய்யத் துவங்க வேண்டும்; மேலும் அதிகமாக முன் முயற்சி எடுக்க வேண்டும். எல்லா "கம்யூன்களும்" — தொழிற்சாலைகளும், கிராமங்களும், பொருள்களை உபயோகிப்பவர்களின் கூட்டுறவு சங்கங்கள், பொருள்களை வினியோகம் செய்யும் குழுக்கள் ஆகியவை அனைத்தும்—உழைப்பையும், பொருள்களை வினியோகம் செய்வதையும் கட்டுப்பாடு செய்வதிலும், கணக்குகளை வைத்துக் கொள்வதிலும், நடைமுறையில் உருவாக்குபவை என்ற நிலையில் ஒன்றோடொன்று போட்டி போடவேண்டும். கணக்குகளை வைத்துக் கொள்வது, கட்டுப்பாடு செய்வது ஆகியவற்றின் செயல் திட்டம் எளிமையானதாகவும், தெளிவானதாகவும், அனைவரும் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது — அதாவது ஒவ்வொருவருக்கும் உணவு வேண்டும்; ஒவ்வொருவருக்கும் வெதுவெதுப்பான தங்குமிடம் வேண்டும்; ஒவ்வொருவருக்கும் நல்ல காலணிகள் வேண்டும்; நல்ல உடைகள் வேண்டும்; ஒவ்வொருவரும் உணர்வு பூர்வமாக வேலை செய்ய வேண்டும்; ஒரு போக்கிரியைக்கூட (கொடுக்கப்பட்ட வேலையைச் செய்யாமல், அதைத் தட்டிக் கழிப்பவர்கள் உள்பட) சுதந்திரமாக நடமாடவிடக் கூடாது; அவர்களைச் சிறையில் வைத்திருக்க வேண்டும்; அல்லது தண்டனை காலத்தில் நிர்ப்பந்தமாக மிகக் கடுமையான வேலையைச் செய்யும்படி செய்ய வேண்டும்; சோஷலிஸத்தின் சட்டங்களையும், ஒழுங்கு முறைகளையும் மீறுகிற எந்த பணக்காரனையும் போக்கிரிகளுக்கு விதித்திருக்கும் தண்டனையிலிருந்து தப்பிக்க அனுமதிக்கக் கூடாது; பணக்காரனுக்கும் நியாயப்படி அதே தண்டனை கொடுக்க வேண்டும். "எவன் ஒருவன் வேலை செய்ய வில்லையோ, அவன் சாப்பிடவும் மாட்டான்"— இது தான் சோஷலிஸத்தின் நடைமுறைக் கட்டளை நடைமுறையில் இவ்வாறு தான் ஒழுங்கு முறைகளை அமைக்க வேண்டும். நமது "கம்யூன்களும்", நடைமுறையில் அமைப்பாளர்களாக இருக்கும் நமது தொழிலாளர்களும், விவசாயிகளும் பெருமைபடக் கூடிய வெற்றிகள் இவைதான். அறிவாளிகளிடையே அமைப்பாளர்களாக செயல்படுகிறவர்களுக்கு இது விசேஷமாகப் பொருத்தமானதாகும் (விசேஷமாக என்று ஏன் குறிப்பிடுகிறேன். என்றால், அவர்கள் தங்களுடைய பொதுவான ஆலோசனைகளைப் பற்றியும், தீர்மானங்களைப் பற்றியும் மிக அதிகமாக, மிகமிக அதிகமாகப் பெருமைப்படுவதில் பழக்கப் பட்டவர்களாக இருக்கிறார்கள்).

பணக்காரர்களையும், போக்கிரிகளையும், சோம்பேறிகளையும் கட்டுப்படுத்துவது, கணக்குகளை வைத்துக் கொள்வது ஆகியவை

பற்றி ஆயிரக்கணக்கான நடைமுறை வடிவங்களையும், வழி வகைகளையும் கண்டுபிடித்து, நகரங்களிலும், கிராமங்களிலும் உள்ள சிறு ஸ்தாபனங்களும், கம்யூன்களும் தாமாகவே அதை நடைமுறையில் பரிசோதனை செய்து பார்ப்பதற்கு விட்டு விடவேண்டும். பல்வேறு ரகங்கள் இங்கு பயனளிக்கக் கூடியதாக இருப்பதற்கு உத்தரவாதத்தை அளிக்கிறது; பணக்காரர்கள், போக்கிரிகள் ஆகிய மூட்டைப் பூச்சிகளையும், ஈக்களையும், புழுக்களையும் இன்னும் இவை போன்றவைகளையும் ரஷ்ய நாட்டிலிருந்து துடைத்தெறியும் ஒரே ஒரு பொதுவான லட்சியம் வெற்றி பெறுவதற்கு உத்திரவாதம் அளிக்கும். ஒரு இடத்தில் பத்து பணக்காரர்களையும், ஒரு டஜன் போக்கிரிகளையும், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையைத் தட்டிக் கழிக்கும் அரை டஜன் தொழிலாளர்களையும் (ரௌடிகள் செய்யும் முறையிலும், பெட்ரோகிராடில் அச்சுக் கோர்ப்பவர்களில் பலர், குறிப்பாக கட்சியின் அச்சகத்தில் பலர் கொடுத்த வேலையைத் தட்டிக் கழிப்பதுபோல் செய்தால்) சிறையில் அடைக்க வேண்டும். மற்றொரு இடத்தில் அவர்களைக் கக்கூசுகளைச் சுத்தம் செய்யும்படி செய்ய வேண்டும். மூன்றுவது இடத்தில், தண்டனை காலம் முடிந்த பிறகு அவர்களுக்கு "மஞ்சள் அடையாள சீட்டுகளை"க் கொடுக்க வேண்டும்; அப்பொழுது தான் இவர்கள் தீயவர்கள் என்பதைத் தனியாக எடுத்துக் காட்டி, அவர்கள் திருந்துகிற வரையிலும் ஒவ்வொரு வரும் அவர்களைக் கண்காணிக்க முடியும். நான்காவது இடத்தில் சோம்பேறிகளில் பத்தில் ஒருவனை ஸ்தலத்திலேயே சுட்டுக் கொல்ல வேண்டும். ஐந்தாவது இடத்தில் திருந்தக் கூடியவர்களாக இருக்கும் பணக்காரர்களையும், முதலாளித்துவ அறிவாளிகளையும், போக்கிரிகளையும் ரௌடிகளையும் தற்காலிகமாக விடுதலை செய்து, விரைவில் திருந்திக் கொள்வதற்கு வாய்ப்பளிப்பதுபோன்ற சில முறைகளையும் கடைப்பிடிக்கலாம். வழி வகைகள் அதிகமாக இருந்தால், நமது அனுபவமும் மேலும் சிறந்ததாகவும், செழுமையானதாகவும் இருக்கும்; சோஷலிஸத்தின் வெற்றி மேலும் விரைவாகக் கிடைப்பதோடு, நிச்சயமானதாகவும் இருக்கும்; போராட்டத்தின் சிறந்த முறைகளையும், வழி வகைகளையும் நடைமுறையில் வகுப்பது—நடைமுறை மாத்திரம் தான் வகுக்க முடியும்—சுலபமாகவும் இருக்கும்.

எந்த கம்யூனில், எந்த மாவட்டத்தில், எந்த பெரிய நகரத்தில், எந்த தொழிற்சாலையில், எந்த கிராமத்தில் பட்டினி கிடக்கும் மக்கள் கிடையாது, வேலையில்லாதவர்கள் கிடையாது, சோம்பேறி பணக்காரர்கள் கிடையாது, முதலாளித்துவத்தின் வெறுக்கத்தக்க சேவகர்கள் கிடையாது. அறிவாளிகள் என்று தங்களை அழைத்துக்

கொள்ளும் நாச வேலை செய்கிறவர்கள் கிடையாது? எங்கு உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது, எங்கு ஏழைகளுக்கு நல்ல புதிய வீடுகள் கட்டப்பட்டிருக்கிறது, எங்கு ஏழைகளை பணக்காரர்களின் வீடுகளில் குடியேறும்படி செய்யப்பட்டிருக்கிறது, ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திலும் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் எங்கு ஒரு போத்தல் பால் முறையாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது? இந்த விஷயங்களில் கம்யூன்கள், சமுதாயங்கள், உற்பத்தியாளர் — உபயோகிப்பவர், கூட்டுறவு சங்கங்கள், ஸ்தாபனங்கள், தொழிலாளர்கள், சிப்பாய்கள், விவசாயிகள் ஆகியவர்களின் பிரதிநிதிகளின் சோவியத்துகள் ஆகியவற்றிற்கு இடையே போட்டியை வளர்க்க வேண்டும். இந்தப் பணியில்தான் நடைமுறையில் திறம்படைத்த அமைப்பாளர்கள் முன்னுக்கு வரவேண்டும்; அவர்களை அரசாங்க நிர்வாகப் பணிக்கு பதவி உயர்வு கொடுக்க வேண்டும். பொது மக்கள் இடையே ஏராளமாக திறமை மல்கிக் கிடக்கிறது. அது அமுக்கப் பட்டிருக்கிறது. தானுகவே அதை வெளிப்படுத்த அதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். மக்களின் உதவியோடு, அது தான், அது மாத்திரம் தான் ரஷ்யாவைப் பாதுகாக்க முடியும்; சோஷலிஸத்தின் லட்சியத்தையும் பாதுகாக்க முடியும்.

| | |
|---|---|
| 1917-ல் டிசம்பரில் 24-27-ல் எழுதப்பட்டது. | திரட்டப்பட்ட |
| (1918ல்-ஜனவரி 6-9) | நூல்கள்- |
| 1929-ல் ஜனவரி 20-ல் "பிராவ்தா"வில்-எண் 17-ல் | தொகுப்பு-26. |
| முதலில் பிரசுரிக்கப்பட்டது. | பக்கம் 404-15. |
| கையொப்பம்-N.-லெனின். | |

# சோவியத் சர்க்காரின் உடனடியான கடமைகள்-என்பதிலிருந்து

உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவது.

ஒவ்வொரு சோஷலிஸ்டுப் புரட்சியிலும், பாட்டாளி மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றும் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பிறகு, அபகரிப்பவர்களை அபகரிக்கும் கடமையையும், அவர்களுடைய எதிர்ப்பை நசுக்கும் கடமையையும் பெரும்பாலும் நிறைவேற்றிய பிறகு முதலாளித்துவத்தைக் காட்டிலும் மேம்பட்ட ஒரு சமூக அமைப்பைச் சிருஷ்டிக்கும் அடிப்படையான கடமை, அதாவது உழைப்பின் உற்பத்தி ஆக்கத்தை உயர்த்தும் கடமை தவிர்க்க முடியாததாக முன்னுக்கு வருகிறது; இது சம்பந்தமாக (இந்த நோக்கத்திற்காக) உழைப்பைச் சிறந்த முறையில் அமைக்கும் கடமை முன்னுக்கு வருகிறது. நமது சோவியத் அரசானது, சுரண்டுகிறவர்கள் மீது வெற்றிகளைப் பெற்றதால்—கெரன்ஸ்கியிலிருந்து, கார்னிலோவ் வரையிலும்—இந்தக் கடமையை நேரடியாக அணுகும் நிலையிலும், மனமார சமாளிக்கும் நிலையிலும் இருக்கிறது, இங்கு ஒரு விஷயம் உடனே தெளிவாகத் தெரிகிறது; அதாவது, ஒரு சில நாடுகளில் மத்திய அரசைக் கைப்பற்ற முடிந்தது என்றாலும் கூட, ஒரு பெரிய நாட்டின் பல்வேறு பகுதிகளில் சுரண்டுகிறவர்களின் ராணுவ எதிர்ப்பை (நாச வேலையையும்) நசுக்க முடிந்தது என்றாலும் கூட உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தும் முக்கியமான பிரச்சினைக்குத் தீர்வு காண எப்படியானாலும் (குறிப்பாக பயங்கரமான, சர்வ நாசத்தை விளைவித்த யுத்தத்திற்குப் பிறகு) பல ஆண்டுகள் தேவைப்படுகின்றன. எதார்த்த சூழ்நிலைமைகள் இந்தப் பணியின் நீண்டகாலத் தன்மையை நிச்சயமாக நிர்ப்பந்திக்கின்றன.

உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதானது, முதலாவதாகத் தேவைப்படுவது என்னவென்றால், பெரிய அளவிலான தொழிலுக்கு பொருளியல் அஸ்திவாரத்திற்கு உத்திரவாதத் ஏற்படுத்த வேண்டும்; அதாவது எரிபொருள், இரும்பு, இயந்திரத்

தொழிற்சாலைகள், ரசாயன தொழிற்சாலைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதை வளர்க்க வேண்டும். பிரெஸ்ட் சமாதான உடன்படிக்கைக்குப் பிறகுகூட 97 ஏராளமாக உலோக தாதுக்களும், (யூரலில்) மேற்கு சைபீரியாவில் எரி பொருள்களும் (நிலக்கரி) காகஸிலும், தென்கிழக்கிலும் (எண்ணெ) மத்திய ரஷ்யாவில் (தூள் நிலக்கரியும்) ஏராளமாக மரங்களும், நீர் சக்திகளும், ரசாயனத் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள்களும் (காராபுகாஸ்) இன்னும் இதுபோல மூலப் பொருள்கள் ரஷ்ய சோவியத் குடியரசுக்குச் சாதகமாக இருக்கின்றன. நவீன தொழில் நுணுக்க முறைகளால் இந்த இயற்கைச் செல்வங்களை வளர்த்தால், உற்பத்தி சக்திகள் கண்டும் கேட்டுமிராத அளவுக்கு வளர்ச்சியடைவதற்கு அஸ்திவாரத்தை நல்கும்.

உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு மற்றொரு நிபந்தனை என்னவென்றால், முதலாவதாக பொது மக்களின் கல்வியின் தரத்தையும் கலாச் சாரத்தின் தரத்தையும் உயர்த்த வேண்டும் என்பதாகும். இது மிகவும் வேகமாக நடைப் பெற்றுக் கொண்டிருக்கிறது; முதலாளித்துவ மாமூல் வேலைகளால் குருடாக்கப்பட்டிருப்பவர்கள் இந்த உண்மையைப் பார்க்க முடியவில்லை; சோவியத் வடிவத்தில் ஸ்தாபனம் இருப்பதால், "கீழ்த் தட்டில் உள்ள சாதாரண மக்கள்'' இடையே அறிவு வளர்ச்சியை நோக்கியும் முன் முயற்சியை நோக்கியும் பேரார்வம் வளர்ந்து வருவதை அவர்களால் பார்க்க முடியவில்லை இரண்டாவதாக பொருளாதார புனரமைப்பிற்கு நிபந்தனையாக இருப்பது என்னவென்றால், உழைக்கும் மக்களின் கட்டுப்பாடு, அவர்களுடைய அறிவு ஆற்றல், பலன் அளிக்கும் வகையில் உள்ள திறமை, உழைப்பின் தீவிரம், அதைச் செம்மையாக அமைப்பது ஆகியவற்றை உயர்த்துவதாகும்.

இந்த விஷயத்தில், நிலைமை விசேஷமாக மோசமாக இருக்கிறது: முதலாளிகள், அல்லது சுயநலத்திற்காக முதலாளிக்குச் சேவை செய்கிறவர்கள் ஆகியவர்களின் அச்சுறுத்தலுக்குப் பலியானவர்களை நாம் நம்புவது என்றால் நிலைமை நம்பிக்கைக்கு இடம் தராத அளவில் கூட இருக்கிறது. பழைய சமூக அமைப்பை ஆதரிப்பவர்கள் குழப்பம் ஏற்படும், அராஜகம் ஏற்படும் என்று, கூச்சல் போடாத ஒரு புரட்சி இருந்ததே கிடையாது என்பதையும், இருக்க முடியாது என்பதையும் இவர்கள் புரிந்து கொள்ள முடியவில்லை. இயல்பாகவே, கண்டும் கேட்டுமிராத காட்டுமிராண்டித் தனமான நுகத்தடியை இப்பொழுது தான் வீசி எறிந்த மக்கள் இடையே விரிவான முறையிலும், ஆழமாகவும் குமுறலும், கொந்

தளிப்பும் இருக்கின்றன. உழைப்புக் கட்டுப்பாட்டின் புதிய கோட்பாடுகளை மக்களை வகுப்பதற்கு நீண்டகாலம் தேவைப் படும்; இந்த நீண்ட கால வளர்ச்சிப் போக்கானது, நிலச்சுவான் தார்கள் முதலாளிகள் ஆகியவர்கள் மீது பூரணமாக வெற்றியை நிலை நாட்டுவதற்கு முன்பு துவங்கவே முடியாது.

ஆயினும், நாம் கொஞ்சம் கூட நம்பிக்கையை இழக்காமல் (அடிக்கடி அது பொய்யான நம்பிக்கை இழப்பாகவே இருக் கிறது)—முதலாளிகளும், முதலாளித்துவ அறிவாளிகளும் இந்த நம்பிக்கை இழப்பைப் பரப்புகிறார்கள் (தங்களுடைய பழைய சலுகைகளை மீண்டும் நிலைநாட்டுவதில் நம்பிக்கையை இழந்து விட்டார்கள்)—அதே சமயத்தில் வெளிப்படையான ஒரு தீமையை எந்தச் சூழ் நிலைமையிலும் நாம் மூடி மறைக்கவே கூடாது, அதற்கு நேர்மாறாக அதை நாம் அம்பலப்படுத்துவோம்; சோவியத் முறைகளில் அதை எதிர்த்துப் போராடுவதையும் மேலும் தீவிரப் படுத்துவோம்; ஏனெனில் தானாகவே ஏற்படும் சிறு முதலாளித் துவ அராஜகத்தின் மீது—கார்னிலாவிஸமும், கெரன்சியிஸமும் மீண்டும் நிலைநாட்டப்படுவதைச் சாத்தியமாக்கும் இந்த உண்மை யான உத்தரவாதத்தின் மீது— பாட்டாளி மக்களின் உணர்வு பூர்வமான கட்டுப்பாடு வெற்றி பெற வில்லையென்றால், சோஷலி ஸத்தின் வெற்றியை மனதில் கூட நினைக்கவே முடியாது.

ரஷ்ய பாட்டாளி மக்களில் அதிகமாக வர்க்க உணர்வு படைத்த முன்னணிப்படை உழைப்பாளிகளின் கட்டுப்பாட்டை உயர்த்தும் பணியில் ஏற்கெனவே ஈடுபட்டிருக்கிறது, உதாரண மாக, உலோகத் தொழிலாளர் சங்கத்தின் மத்திய குழுவும் தொழி லாளர் சங்கங்களின் பொதுக் குழுவும், தேவையான விதி முறை களைப் பற்றிய நகலைத் தயார் செய்யத் துவங்கியிருக்கின்றன. இந்தப் பணியை ஆதரிக்க வேண்டும் என்பதோடு, முடிந்த வரை யிலும் வேகமாக செய்து முடிக்க வேண்டும். வேலையின் அளவுக்குத் தக்கபடி ஊதியம் கொடுக்கும் [98] பிரச்சினையை எழுப்பி, அதை அமுலுக்குக் கொண்டு வந்து, நடைமுறையில் பரிசோதனை செய்து பார்க்க வேண்டும்: டேலர் முறையில் விஞ்ஞான ரீதியிலும், முற் போக்கான ரீதியிலும் உள்ள அம்சங்களை அமுலுக்குக் கொண்டு வரும் பிரச்சினையை நாம் எழுப்ப வேண்டும்; உற்பத்தி செய்த மொத்த பொருள்களின் அளவுக்குத் தக்கபடி நாம் ஊதியம் கொடுக்க வேண்டும்; அல்லது, ரெயில் போக்குவரத்து, நீரில் போக்குவரத்து ஆகியவற்றின் இயக்கங்களின் பலனுக்குத் தக்கபடி ஊதியம் கொடுக்க வேண்டும்,

முன்னேற்றமடைந்த நாடுகளில் உள்ள மக்களோடு ஒப்பிடும் பொழுது,—ரஷ்யன் ஒரு மோசமான தொழிலாளியாக இருக்கிறன். ஜார் ஆட்சியின் கீழும், பண்ணை அடிமை முறையின் மித மிச்சங்கள் நீடித்திருந்தாலும் அவர்கள் வேறு விதமாக இருக்கவே முடியாது வேலே செய்ய கற்று கொள் என்ற கடமையை சோவியத் சர்க்கார் மக்கள் முன்பு வைக்க வேண்டும். முதலாளித்துவத்தின் கடைசி சித்தாந்தமான டேவர் முறையானது எல்லா முதலாளித் துவ முன்னேற்றங்களைப் போல், முதலாளித்துவ சுரண்டலின் நாகரீகமான மிருகத் தனத்தையும், வேலே செய்யும் போது இயந்தி ரங்களின் அசைவுகளே ஆராய்வது, தேவையற்ற மோசமான அசைவுகளை அகற்றுவது, சரியான வேலை முறைகளை நிர்ணயிப்பது, கணக்குகளை வைத்துக் கொள்வது, கட்டுப்பாடு செய்வது ஆகிய வற்றில் சிறந்த முறைகளைப் புகுத்துவது ஆகிய துறைகளில் மிகப் பெரிய விஞ்ஞான சாதனைகளை இணைக்கிறது. இந்தத் துறையில் விஞ்ஞானத்தின், தொழில் நுணுக்கத்தின் சாதனைகளில் சிறந்தவை களையெல்லாம் சோவியத் குடியரசு. எந்த வகையிலாவது கடைப் பிடிக்க வேண்டும். சோஷலிஸத்தை நிர்மாணம் செய்யும் சாத்தியப் பாடானது, சோவியத் அதிகாரத்தையும், நிர்வாகத்தின் சோவியத் ஸ்தாபனத்தையும் முதலாளித்துவத்தின் இன்று வரையிலும் உள்ள சாதனைகளோடு இதணைப்பதில் வெற்றி பெறுவதைச் சார்ந்திருக் கிறது. ரஷ்யாவில் டேலர் முறையைக் கற்றுக் கொள்வதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும்; முறையாக அதை நடைமுறை யில் அமுல் நடத்திப் பார்த்து, நமது நோக்கத்திற்குத் தக்கபடி அதைக் கடைப்பிடிக்க வேண்டும். அதே சமயத்தில், உழைப்பின் திறனை உயர்த்துவதற்காக திட்டம் வகுக்கும் போது, முதலாளித் துவத்திலிருந்து சோஷலிஸத்திற்கு மாறிச் செல்லும் கட்டத்தின் திட்ட வட்டமான அம்சங்களை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு புறத்தில்] இதற்கு, போட்டியின் சோஷலிஸ்டு ஸ்தாபன அமைப்பின் அஸ்திவாரத்தைப் போட வேண்டியிருக் கிறது; மறுபுறத்தில், நிர்ப்பந்தத்தையும் பயன்படுத்த வேண்டிருக் கிறது; அப்பொழுதுதான், பாட்டாளி மக்களின் ஒரு மன உறுதி இல்லாத சர்க்காரின் நடைமுறைச் செயல் பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் என்ற கோஷத்தின் தூய்மையைக் கெடுத்து விடாது. ...

## சோவியத் ஸ்தாபனத்தின் வளர்ச்சி

சோவியத்தின் சோஷலிஸ்டு குணம்சம், அதாவது இன்று ஸ்தூலமாக அனுஷ்டித்திருக்கும் நிலையில் பாட்டாளி மக்களின் ஜனநாயகம் இதில் அடங்கியிருக்கிறது என்றால் முதலாவதாக

வாக்காளர்கள் அனைவரும் உழைக்கிற, சுரண்டப்பட்ட மக்களாக இருக்கிறார்கள்; முதலாளிகள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டாவதாக, தேர்தல்கள் சம்பந்தமான அதிகாரவர்க்க சம்பிரதாயங்களும், தடைகளும் ஒழிக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் தாங்களாகவே தேர்தல்களின் விதிமுறைகளையும், காலத்தையும் நிர்ணயம் செய்கிறார்கள்; தேர்தெடுக்கப்பட்ட எந்த நபரையும் திருப்பி அழைக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். மூன்றாவதாக, உழைப்பாளி மக்களின் முன்னணிப்படையில் தலை சிறந்த பொதுஜன ஸ்தாபனத்தை அமைப்பதில் அது அடங்கியிருக்கிறது; அதாவது, பெரிய அளவில் உள்ள தொழிற்சாலையில் ஈடுபட்டிருக்கும் பாட்டாளி மக்களுக்கு சுரண்டப்பட்ட ஏராளமான மக்கள் திரளுக்கு தலைமை தாங்கும் வாய்ப்புக் கிடைத் திருப்பதோடு, அவர்களை அரசியல் வாழ்வில் சுயேச்சையாக ஈர்ப்பதற்கும், அவர்களுடைய சொந்த அனுபவத்தின் மூலமாக அவர்களுக்கு அரசியல் அறிவூட்டவும் வாய்ப்புக்கிடைக்கிறது; ஆகவே நிர்வாகம் செய்யும் கலையைக் கற்றுக் கொள்வதிலும் நிர்வாகம் செய்யத்துவங்குவதிலும் முதல் தடவையாக பொது மக்கள் முழுமையும் ஒரு தொடக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

ரஷ்யாவில் இப்பொழுது அனுஷ்டிக்கப்பட்டிருக்கும் ஜனநாயகத்தின் முக்கியமான வேறு படுத்திக்காட்டும் அம்சங்கள் இவைதான்; இது ஒரு உயர்ந்த ரகத்தில் உள்ள ஜனநாயகமாக இருக்கிறது; முதலாளித்துவம் திருத்திக் கூறுகிற ஜனநாயகத்திலிருந்து தனியே பிரிந்திருக்கிற, சோஷலிஸ்டு ஜனநாயகத்திற்கு மாறிச்செல்கிற, அரசு உலர்ந்து போகத்துவங்கும் நிலைமைகளுக்கு மாறிச்செல்கிற ஜனநாயகமாக இருக்கிறது.

சிறு முதலாளித்துவ ஒழுங்கு முறையற்ற தன்மையின் அம்சம் சோவியத்துகளிலும் கூட அதன் முத்திரையை விட்டுச் சென்றிருந்தது என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமே கிடையாது (ஒவ்வொரு, பாட்டாளி மக்களின் புரட்சியிலும் ஒரு குறிப்பிட்ட அளவு தவிர்க்க முடியாத வகையில் அது வெளிப்படையாக இருக்கிறது; நமது நாட்டின் தன்மை சிறு முதலாளித்துவத் தன்மை கொண்டதாக இருப்பதாலும், பின் தங்கியதாக இருப்பதாலும், ஒரு பிற்போக்கு யுத்தத்தின் விளைவாகவும் நமது புரட்சியில் அது விசேஷமாக வெளிப்படையாக இருக்கிறது).

சோவியத்துகள், சோவியத் சர்க்கார் ஆகிய ஸ்தாபனங்களை வளர்க்க நாம் விடா முயற்சியோடு வேலை செய்ய வேண்டும் சோவியத்துகளின் உறுப்பினர்களை “சட்டமன்ற வாதிகளாகவும்”,

அல்லது அதிகாரவர்க்கத்தினராகவும் மாற்றும் சிறு முதலாளித்துவ கருத்துப் போக்கு இருக்கிறது. சோவியத்துகளின் உறுப்பினர்கள் அனைவரையும் நடைமுறை நிர்வாகப் பணியில் ஈடுபடுத்துவதன் மூலமாக இதை எதிர்த்துப் போராட வேண்டும். பல இடங்களில் சோவியத்துகளின் இலாகாக்கள் படிப்படியாக அமைச்சரவையோடு இரண்டறக் கலந்து வருகின்றன, ஏழைகள் அனைவரையும் நடைமுறை நிர்வாகப்பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்பது தான் நமது நோக்கம்; இந்தத்திசையை நோக்கி எடுக்கப்படும் எல்லா நடவடிக்கைகளையும்—பலதரப் பட்டவைகளாக இருந்தால் அது மிகவும் சிறந்ததாக இருக்கும்— கவனமாகப் பதிவு செய்ய வேண்டும், பரிசீலனை செய்ய வேண்டும், முறைப் படுத்த வேண்டும், விரிவான அனுபவத்தால் பரிசோதனை செய்து பார்க்க வேண்டும், சட்டத்தில் அதைச்சேர்த்துக்கொள்ளவேண்டும். நமது நோக்கம் என்னவென்றால், ஒவ்வொரு உழைப்பாளியும் வினை பயன் உழைப்பில் தனது எட்டு மணி நேர "கடமையை"ச் செய்து முடித்த பிறகு, ஊதியம் இல்லாமல் அரசு சம்பந்தப்பட்ட பணிகளைச் செய்வதற்கு உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண்டும்; இந்த முறைக்கு மாறிச் செல்வது குறிப்பிடத் தக்க முறையில் கஷ்டமான வேலையாக இருக்கும்; ஆனால், இந்த மாறிச்செல்லும் முறை மாத்திரம் தான் சோஷலிஸத்தை இறுதியாக உறுதிப்படுத்துவதற்கு உத்தரவாதத்தை அளிக்கும். இயல்பாகவே' இந்த மாறுதலின் புதுமையும், கஷ்டமும் இப்பொழுது நடைபெறுவது போல், ஏராளமான புதிய வழி வகைகளைத் தேடிக் கண்டு பிடிக்கும்படி அழைத்துச் செல்லும்; ஆகவே, ஏராளமான தவறுகளுக்கும் ஊசலாட்டங்களுக்கும் அழைத்துச் செல்லும்; ஆனால். இவைகள் இல்லாமல் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் சாத்தியமல்ல. சோஷலிஸ்டுகள் என்று தங்களைக் கருத விரும்புகிறவர்களில் பலருக்கு இன்றைய நிலைமை விசித்திரமானதாகத் தோன்றுவதற்குக் காரணம் என்னவென்றால், கருத்தியலில் சோஷலிஸத்தோடு முதலாளித்துவத்தை வேறு படுத்திக் காட்டுவதில் பழக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள்; இந்த இரண்டிற்கும் இடையே ஆழமாக "திடீர் தாவுதல்" என்ற வார்த்தையைப் போடுகிறார்கள் (அவர்களில் சிலர் எங்கல்ஸ் எழுதிய நூல்களில் படித்திருப்பதிலிருந்து சில துண்டுத் துணுக்குகளை நினைவுக்குக் கொண்டு வருகிறார்கள்; "தேவை என்ற மண்டலத்திலிருந்து, சுதந்திரம் என்ற மண்டலத்திற்கு தாவுதல்" 99 என்ற வார்த்தைகளை மேலும் ஆழமாகச் சேர்த்துக் கொள்கிறார்கள்). சோஷலிஸ்டுகள் என்று அழைக்கப்படுகிறவர்களில் பெரும்பாலோர் சோஷலிஸத்தைப் பற்றி "புத்தகங்களில் படித்திருக்கிறார்கள்", ஆனால், இந்த விஷயத்தைப் பற்றி ஆழமாகச் சிந்தனை

செய்ததே கிடையாது; எனவே, சோஷலிஸத்தின் ஆசிரியர்கள் "திடீர் தாவுதல்" என்றால் அதன் அர்த்தம் உலக சரித்திர பூர்வ மான ரீதியில் திருப்பங்கள் என்று கூறியிருப்பதையும், இத்தகைய திடீர்தாவுதல்கள் பல பத்தாண்டுகள் கால கட்டங்களுக்கு இன்னும் அதிகமான கால கட்டங்களுக்கு நீடிக்கலாம் என்றும் கூறியிருப்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடியவில்லை. இயல்பாகவே, இத்தகைய தருணங்களில் கெட்ட பெயர் எடுத்த "அறிவாளிகள்" இறந்து போனவர் களுக்காக மாரடித்து அழுகிறவர்களை வரம்பில்லாமல் அள்ளி அள்ளிக் கொடுக்கிறார்கள். சிலர் அரசியல் நிர்ணய சபைக்காகப் புலம்புகிறார்கள்; வேறு சிலர் முதலாளித்துவ கட்டுப்பாட்டிற்காக புலம்புகிறார்கள்; வேறு சிலர் திரும்பவும் முதலாளித்துவ அமைப் பிற்காக மாரடித்து அழுகிறார்கள்; இன்னும் வேறுபலர் பண்புடைய நிலச்சுவான்தார்களுக்காக இரக்கம் தெரிவிக்கிறார்கள்; இன்னும் வேறு பலர் ஏகாதிபத்திய வல்லரசுக்காக அழுகிறார்கள்.

மகத்தான திடீர்தாவுதல்களின் சகாப்தத்தின் உண்மையான நலன் எதில் அடங்கி இருக்கிறது என்றால், புதிய மூலக்கருக் கூறுகளைக் காட்டிலும் அதிக வேகமாகச் சில சமயங்களில் குவிகிற பழையதிலிருந்து முறிந்து போன ஏராளமான துண்டுத் துணுக் குகள் (இவைகளை எப்பொழுதும் உடனடியாகப் பார்ப்பது சாத் தியமல்ல) வளர்ச்சியின் பாதையில், அல்லது சங்கிலியில் முக்கிய மான வற்றைப் பார்க்கும் சக்தி நமக்கு வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. சரித்திரத்திற்கு பல தருணங்கள் தெரியும்; அதாவது புரட்சியின் வெற்றிக்கு மிக முக்கியமான விஷயம் என்ன என்றால், எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு பழையதி லிருந்து பிரிந்து வந்த துண்டுகளை ஒன்றாகக்குவித்து, எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு பழைய நிறுவனங்களை உடைத்தெறிய வேண்டும்; இப்படியும் சில தருணங்கள் எழும்; அப்பொழுது பழையதைப் போதிய அளவு உடைத்தெறிந்த பிறகு, பழைய துண்டுத்துணுக்குகளைச் சுத்தம் செய்யும் "புதுமை உணர்ச்சியற்ற" கடமையை (சிறு முதலாளித்துவ புரட்சிக் காரருக்கு இது "சலுப்புத் தட்டுவதாக" இருக்கும்) நிறை வேற்றுவது அடுத்த கடமையாக இருக்கும்; மேலும் சில தருணங்கள் எழும்; அப்பொழுது, இடித்துத் தகர்க்கப் பட்டவைகளை இன்னும் அகற்றாமல் இருக்கும் நிலத்தின் மத்தியில் தலை தூக்கும் புதிய அமைப்பின் முளைகளைக் கவனமாகப் பேணி வளர்க்க வேண்டியது மிக முக்கியமான கடமையாக இருக்கும்.

ஒரு புரட்சிக்காரராக இருப்பது மாத்திரம் போதாது; பொது வாக சோஷலிஸத்தை, அல்லது கம்யூனிஸத்தைப் பின் பற்று

நிறவராக இருப்பது மாத்திரம் போதாது, சங்கிலி முழுவதையும் பிடித்து வைத்திருப்பதற்காகவும், அடுத்த கண்ணிக்கு மாறிச் செல்வதற்கு உறுதியாகத் தயாரிப்புகளைச் செய்வதற்காகவும் நீங்கள் ஒவ்வொரு குறிப்பிட்ட தருணத்திலும் உங்கள் சக்தி முழுவதையும் உபயோகித்து இறுகப் பிடித்துக் கொள்ள வேண்டிய சங்கிலியின் குறிப்பிட்ட கண்ணியைக் கண்டு பிடிக்கும் ஆற்றல் உங்களுக்கு இருக்க வேண்டும்; சரித்திர பூர்வமான நிகழ்ச்சிகளின் சங்கிலியில் கண்ணிகள் முறைப்படுத்தி வைத்திருப்பது, அவைகளின் வடிவம், அவைகளை ஒன்றோடொன்று இணைத்து வைத்திருக்கும் முறை, ஒன்றுக்கொன்று மாறுபட்டிருக்கும் தன்மை—ஆகியவை ஒரு கொல்லர் .செய்த சாதாரண சங்கிலியைப் போல் எளிமையானதும், பொருட்செறிவற்றதும் அல்ல.

சோவியத் வடிவத்திலுள்ள ஸ்தாபனத்தை அதிகாரவர்க்க தோரணையில் திருத்திக் கொண்டு போவதை எதிர்த்துப் போராடுவதற்கு "மக்களுக்கும்" — இதன் அர்த்தம் தொழிலாளர்களுக்கும், சுரண்டப்பட்ட மக்களுக்கும்— சோவியத்துகளுக்கும் இடையே தொடர்பு உறுதிப்படுத்தப் பட்டிருப்பதன் மூலமாகவும், இந்தத் தொடர்பை நெளிவு சுளிவானதாகச் செய்திருப்பதன் மூலமாகவும், வளைந்து கொடுக்கக் கூடியதாக செய்திருப்பதன் மூலமாகவும் சோவியத் ஸ்தாபன வடிவத்தை அதிகார வர்க்க தோரணையில் திருத்திக் கொண்டு போவதை எதிர்த்துப் போராடுவதற்கு உத்தரவாதம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. உலகத்தில் பெரும் அளவிற்கு ஜனநாயகத் தன்மை பெற்றிருக்கும் முதலாளித்துவ குடியரசுகளிலும் கூட முதலாளித்துவ சட்ட மன்றத்தை "தங்கள்" நிறுவனம் என்று ஏழைகள் எந்தக் காலத்திலும் கருதியதே கிடையாது. ஆனால், சோவியத்துகள் "அவர்களுடைய" ஸ்தாபனங்களாக இருக்கின்றன; தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் அவை அவர்களைச் சார்ந்திராத நிறுவனங்கள் அல்ல, ஷீட்மான், அல்லது அதே போன்ற மார்டோவரக நவீன "சமூக ஜனநாயக வாதிகள்" சோவியத்துகளால் துரத்தப் பட்டிருக்கிறார்கள்; அவர்கள் .கௌரமிக்க முதலாளித்துவ சட்ட மன்றத்தின்பால் ஈர்க்கப்படுகிறார்கள்! அல்லது அறுபது வருடங்களுக்கு முன்பு ஒரு நிதானமான முடியாட்சியின், பிரபுக்களின் அரசியல் நிர்ணயசபைக்கு துர்காஜேவ் ஈர்க்கப்பட்டு, தோபரோல்யூபால், செர்னிஷெவ் ஸ்கியின் விவசாயிகளின் ஜனநாயகத்தால் துரத்தப்பட்டது போல் அரசியல் நிர்ணய சபையின்பால் ஈர்க்கப்படுகிறார்கள்.

சோவியத்துகள் "மக்களோடு", உழைக்கும் மக்களோடு நெருக்கமாக இருப்பதுதான் கீழே இருந்து உறுப்பினர்களைத்

திருப்பி அழைப்பது போன்ற விசேஷ வடிவங்களையும், கட்டுப்படுத்தும் வேறு வழிவகைகளையும் சிருஷ்டிக்கிறது; இவைகளை மிக்க ஆர்வத்தோடு இப்பொழுது வளர்க்கவேண்டும்' உதாரணமாக, பொதுக் கல்விக்குழுவை எடுத்துக் கொள்வோம்; சோவியத்து வாக்காளர்களின் மகாநாடுகளை குறிப்பிட்ட காலத்தில் கூட்டுகிறது; இந்தத்துறையில் சோவியத் அதிகாரிகளின் நடவடிக்கைகளைப் பற்றி விவாதித்து அவர்களைக் கட்டுப்பாடு செய்யும்படி பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டது; முழுஆதரவையும், அனுதாபத்தையும் பெறுவதற்கு இது அருகதையுள்ளதாக இருக்கிறது. உறுதியாக்கப் பட்டதாகவும், சுயமாகவே எல்லாம் அடங்கியிருப்பதாகவும் சோவியத்துகளை மாற்றுவதைக் காட்டிலும் சிறுபிள்ளைத்தனமான செயல்வேறு எதுவும் இருக்க முடியாது. சவிரக்க மற்ற உறிதியான சர்க்காரையும், திட்டவட்டமான வேலைகளின் நடைமுறைப் போக்கிலும், முற்றிலும் பணிகளைச் செயல்படுத்துவதிலும் தனிநபர்களின் சர்வாதிகாரத்தையும் இப்பொழுது நாம் உறுதியாக எந்த அளவுக்கு ஆதரிக்கிறோமோ, அந்த அளவுக்கு சோவியத் சர்க்காரின் கோட்பாடுகளை திருத்திச் செல்லும் போக்கின் ஒவ்வொரு அம்சத்தையும் எதிர்த்துப் போராடுவதற்காகவும், அதிகாரவர்க்கத் தன்மையை திரும்பத்திரும்ப, சளைக்காமல் களைஎடுப்பதற்காகவும் கீழே இருந்து கட்டுப்படுத்தும் பல்வேறு வகை வடிவங்களையும், பல வழிவகைகளையும் நாம் கடைப் பிடிக்க வேண்டியிருக்கும்.

திரட்டப்பட்ட
நூல்கள்—
தொகுப்பு-27
பக்கம்-257-59,
272-75.

1918-ல் ஏப்ரல்
மாதத்தில் 13, 16
தேதிகளில் எழுதப்பட்டது.
"பிராவ்தா"வில்
எண்- 83—லும்;
"குஸ்லெஸ்டியா"வில் அனுபந்தத்தில்- U T S I K எண் 85 ல்18/18-ல் ஏப்ரல் 28-ல் பிரசுரிக்கப்பட்டது.
கையொப்பம்—என். லெனின்

## 1918- மே, 26

# பொருளாதாரக் கவுன்சில்களின் முதல் காங்கிரசில் சொற்பொழிவு

நமக்குத் தெரிந்தெல்லாம் என்ன வென்றால், முதலாளித்துவ சமுதாயத்தைப் பற்றிய சிறந்த நிபுணர்களும், அதன் வளர்ச்சியை முன் கூட்டியே பார்த்த மாபெரும் சிந்தனையாளர்களும் நமக்கு சுட்டிக்காட்டிய தெல்லாம் என்ன வென்றால் உருமாறுபாடு தவிர்க்க முடியாததாகும். ஒரு குறிப்பிட்ட நெடுஞ்சாலை வழியாக அதன் வளர்ச்சிப் போக்கு இருக்க வேண்டும், உற்பத்திசாதனங்களி தனி நபர்களின் சொத்தாக இருப்பதை மாற்றியமைக்க வேண்டும் என்பது சரித்திரத்தின் தீர்ப்பு, அது வெடித்துப் போய்விடும், சுரண்டுகிறவர்கள் தவிர்க்க முடியாத வகையில் அபகரிக்கப்படுவார் கள் என்பது தான், விஞ்ஞான ரீதியில் துல்லியமாக இது நிலை நாட்டப்பட்டிருக்கிறது: சோஷலிஸக் கொடியை நாம் கையில் பிடித்த போது, நம்மை நாம் சோஷலிஸ்டுகள் என்று பிரகடனம் செய்த போது, சோஷலிஸ்டு கட்சிகளை நாம் அமைத்தபோது, சமுதாயத்தை உருமாற்றிய போது இது நமக்குத் தெரியும். சோஷலிஸ்டு புனரமைப்பை நோக்கி செல்லும் நோக்கத்திற்காக அதிகாரத்தை நாம் கைவசப்படுத்திய போது இது நமக்குத் தெரியும்; ஆனால், உருமாறுபாடின் வடிவங்கள் நாம் தெரிந்து கொள்ள முடியவில்லை; அல்லது ஸ்தூலமான புனரமைப்பின் வளர்ச்சியின் விகிதாசாரத்தையும் நாம் தெரிந்து கொள்ள முடிய வில்லை கூட்டு அனுபவம் தான், லட்சோப லட்சம் பேர்களின் அனுபவம் தான் இந்த விஷயத்தில் இறுதியான வழிகாட்டுதலைக் கொடுக்க முடியும்; திட்டவட்டமாக அதற்குக் காரணமென்ன வென்றால், நமது கடமைக்கு, சோஷலிஸத்தை நிர்மாணிக்கும் கடமைக்கு நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலும், முதலாளித்துவ சமுதாயத்திலும் இதுவரையிலும் சரித்திரத்தை உருவாக்கிய மேல் தட்டில் உள்ள ஆயிரக்கணக்கானவர்களின், ஏன் லட்சக்கணக் கானவர்களின் அனுபவம் போதுமானதல்ல, இந்தப் பாதையில் நாம் போக முடியாது என்பதற்கு துல்லியமான காரணம் என்ன

வென்றால், நாம் கூட்டு அனுபவத்தின் மீது, லட்சோப லட்சம் உழைக்கும் மக்களின் அனுபவத்தின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

ஆகவே, சோவியத்துகளின் முக்கியமான, அடிப்படையான கடமையாக இருக்கும் ஸ்தாபனம் ஏராளமான பரிசோதனைகளையும், ஏராளமான நடவடிக்கைகளையும், ஏராளமான மாற்றங்களையும், ஏராளமான கஷ்டங்களையும், குறிப்பாக ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்குப் பொருத்தமான வேலையைக் கொடுப்பதில் கஷ்டங்களையும் இன்றியமையாததாக நம் மீது சுமத்தும் என்பது நமக்குத் தெரியும்; ஏனெனில், இதில் நமக்கு அனுபவம் கிடையாது; இங்கு நாம் ஒவ்வொரு முறையையும் நாமே கண்டு பிடிக்க வேண்டியிருக்கிறது; இந்தப் பாதையில் நாம் அதிகமாகப் பெரிய தவறுகளைச் செய்தால், தவறுத தன்மை மேலும் வளரும்; தொழிலாளர் சங்கங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, இதுவரையிலும் பரம்பரைப்படி, பழக்க வழக்கப்படி வாழ்ந்துவந்த உழைக்கும் மக்கள் சுரண்டப்பட்ட மக்கள் ஆகியவர்களின் முகாமிலிருந்து சோஷலிஸ்டு ஸ்தாபனங்களை நிர்மாணிக்கும் முகாமுக்கு மேன்மேலும் ஆயிரக்கணக்கில், லட்சக் கணக்கில் வந்து சேரும்போது தவறுத தன்மை வளரும்; தகுதி வாய்ந்தவர்கள் என்று நிரூபித்துக் காட்ட கூடியவர்களின் எண்ணிக்கையும், வேலையைச் சரியான முறையில் அமைக்கக் கூடியவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

இரண்டாம் தரக் கடமைகளில் ஒன்றை எடுத்துக் கொள்வோம்; அதாவது, முதலாளித்துவ நிபுணர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் கடமைப் பற்றிய பிரச்சினை பொருளாதாரக் குழுவுக்கு முன்னால், தலையாய பொருளாதாரக் குழுவுக்கு முன்னால் விசேஷ முக்கியத்துவத்தோடு அடிக்கடி வருகிறது. நமக்கெல்லாம் தெரிந்த விஷயம் என்னவென்றால், குறைந்த பட்சம் விஞ்ஞானத்தின், சோஷலிஸத்தின் அடிப்படையில் பார்க்கிறவர்களுக்கெல்லாம் தெரிந்த விஷயம் என்னவென்றால், சர்வதேச முதலாளித்துவம் உழைப்பின் பொருவியல், தொழில் நுணுக்க முன் தேவைகளை வளர்த்திருந்தால், விரிவான அளவிலும், விஞ்ஞான ரீதியிலும் அமைத்திருந்தால், விஞ்ஞான அறிவோடு ஏராளமான நிபுணர்களுக்கு பயிற்சி கொடுத்திருந்தால் இந்த கடமையை நிறைவேற்ற முடியும், அந்த அளவுக்குத்தான் இந்தக் கடமையை நிறைவேற்ற முடியும். இது இல்லாமல் சோஷலிஸம் சாத்தியமல்ல என்பது நமக்குத் தெரியும் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் முதலாளித்துவ வளர்ச்சியைக் கூர்ந்து கவனித்து, திரும்பத் திரும்ப சோஷலிஸம் தவிர்க்க

முடியாதது என்ற முடிவுக்கு வந்திருக்கும் சோஷலிஸ்டுகளின் நூல்களை மீண்டும் படித்தால் அவர்கள் அனைவரும் விதிவிலக்கே இல்லாமல் சோஷலிஸம் மாத்திரம் தான் விஞ்ஞானத்தை அதன் முதலாளித்துவத் தளைகளிலிருந்து விடுதலை செய்யும் என்பதையும், மூலதனத்திற்கு அடிப்பட்டிருப்பதிலிருந்து விடுதலை செய்யும் என்பதையும், மோசமான முதலாளித்துவ பேராசையின் நலனுக்கு அடிமைப்பட்டிருப்பதிலிருந்து விடுதலை செய்யும் என்பதையும் சுட்டிக்காட்டியிருப்பதை நாம்பார்க்க முடியும். சோஷலிஸம் மாத்திரம் தான் விஞ்ஞான முறையில் சமூக உற்பத்தியையும், விநியோகத்தையும் விரிவாக விஸ்தரிப்பதைச் சாத்தியமாக்கும்; அவைகளை உண்மையில் உழைக்கும் மக்களின் வாழ்க்கையைச் சுலபமாக்கும் நோக்கத்திற்கு உட்பட்டதாகச் செய்ய முடியும்; மேலும் முடிந்த வரையிலும் அவர்களுடைய வாழ்கை நலனை அபிவிருத்தி செய்ய முடியும். சோஷலிஸம் மாத்திரம் தான் இதைச் சாதிக்க முடியும். இதை அது சாதிக்க வேண்டும் என்பதும் நமக்குத் தெரியும்; மேலும், இந்த உண்மையைப் புரிந்து கொள்வதில் தான் மார்க்ஸீஸத்தின் முழுச்சிக்கல்களும், முழு பலமும் அடங்கியிருக்கிறது.

இதை நாம் அடைய வேண்டும்; அதே சமயத்தில் இதை எதிர்க்கிறவர்களைச் சார்ந்தும் இருக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் மூலதனம் அதிகரித்தால், முதலாளிகள் தொழிலாளர்களை நசுக்குவதும் அதிகரிக்கிறது. இப்பொழுது அதிகாரம் பாட்டாளி மக்கள் கையில் இருக்கிறது; மக்களின் உதவியோடு ஏழை விவசாயிகளும், சர்க்காரும் கடமையை நிறைவேற்றுவதில் ஈடுபட்டிருக்கின்றன; முதலாளித்துவ நிபுணர்களின் உதவியோடு இந்த சோஷலிஸ்டு மாறுதல்களை நாம் சாதிக்க வேண்டியிருக்கிறது; இவர்கள் முதலாளித்துவ சமுதாயத்தில் பயிற்சி பெற்றவர்கள்; இவர்களுக்கு வேறு நிலைமைகளே தெரியாது; வேறு எந்த விதமான சமூக அமைப்பையும் இவர்களால் மனதில் நினைக்கவே முடியாது. ஆகவே, இவர்கள் மேற்கொண்டிருக்கும் வேலைக்கு இவர்கள் முற்றிலும் விசுவாசமாகவும், அந்தரங்க சுத்தியாகவும் இருந்தாலும் கூட, அவர்களிடம் ஆயிரக்கணக்கான முதலாளித்துவ தப்பெண்ணங்கள் நிறைந்திருக்கின்றன; முதலாளித்துவ சமுதாயத்தோடு அவர்கள் கண்ணுக்கே புலப்படாத ஆயிரக்கணக்கான பிணைப்புகளால் அவர்கள் இணைக்கப் பட்டிருக்கிறார்கள்; இந்த முதலாளித்துவ சமுதாயம் செத்து மடிந்து, அழுகிப் போய்க் கொண்டிருக்கிறது; ஆகவே, அது மூர்க்கத்தனமான எதிர்ப்பைக் கொடுத்து வருகிறது.

இந்த முயற்சியிலும், சாதனையிலும் உள்ள கஷ்டங்களை நாமே நமக்குத் தெரியாமல் மறைக்க முடியாது. எதிர்கால சோஷலிஸ்டு

சமுதாயத்தில் தொழிலாள வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றிய போது, மிகச் செழுமையான, சரித்திர பூர்வமாக தவிர்க்க முடியாததும், நமக்குத் தேவையானதுமான முதலாளித்துவம் குவித்து வைத்திருக்கும் கலாச்சாரம், அறிவு, தொழில் நுணுக்கம் ஆகியவற்றை ஒட்டு மொத்தமாக முதலாளித்துவத்தின் சாதன மாக இருந்ததை சோஷலிஸத்தின் சாதனமாக மாற்றும் பணியில் ஈடுபடும் போது இந்த ஸ்தூலமான நடைமுறைக் கஷ்டம் நம்மை நேரிடும் என்பதை இதைப் பற்றி எழுதியிருக்கும் சோஷலிஸ்டு களில் எந்த ஒரு சோஷலிஸ்டு நூலும். அல்லது எந்த ஒரு பிரபல சோஷலிஸ்டின் கருத்தும் இதைச் சுட்டிக் காட்டியிருப்பதாக நான் நினைவுக்குக் கொண்டு வர முடியவில்லை. பொதுவான கோட்பாடு களை வகுப்பதன் மூலமாகவும், கருத்தில் சிந்தனை செய்வதன் மூலமாகவும் இதைச் செய்வது சுலபமான காரியமாகும். ஆனால், முதலாளித்துவத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில், அது உடனே செத்து மடிந்து போகாமல், சாவு நெருங்கும் போது மூர்க் கத்தனமாக மேன்மேலும் எதிர்ப்பைக் கொடுப்பதால் இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு அமோகமாகக் கடுமையான முயற்சி தேவைப்படுகிறது. இந்தத் துறையில் பரிசோதனை நடக் கிறது என்றால், அறைகுறையான தவறுகள் ஏற்பட்டு அவைகளை நாம் திரும்பத் திரும்ப திருத்துகிறோம். என்றால், இது தவிர்க்க முடியாததாகும்; காரணம், தேசிய பொருளாதாரத்தின் ஏதாவது ஒரு துறையில் முதலாளித்துவத்தின் சேவகர்களாக இருந்த நிலையி லிருந்து, உழைப்பாளி மக்களின் சேவகர்களாக, அவர்களுடைய ஆலோசகர்களாக உடனடியாக நிபுணர்களை மாற்ற முடியாது. இதை நாம் உடனே செய்து முடிக்கவில்லையென்றால், அது நமக்கு தோல்வி மனப்பான்மையைக் கொடுக்கக் கூடாது; ஏனெனில், நாம் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் கடமையானது, உலக சரித்திர பூர்வமான கஷ்டமாகவும், முக்கியத்துவம் வாய்ந்த தாகவும் இருக்கிறது. கண்ணை மூடிக் கொண்டு நாம் இந்த உண்மையைப் பார்க்க மறுக்கக் கூடாது; அதாவது, ஒரே ஒரு நாட்டில், ரஷ்யாவைக் காட்டிலும் மோசமாகப் பின் தங்கிய நாடாக இருந்தாலும்கூட, நான்கு ஆண்டுகாலம் நீடித்த முன் பின் கண்டும் கேட்டுமிராத அளவுக்கு வேதனை தரக்கூடிய, கடுமையான, நாசம் செய்த யுத்தத்திற்குப் பிறகு இங்கு நிலவி இருக்கும் நிலைமைகளைக் காட்டிலும் நல்ல நிலையில் நாம் வாழ்ந்தாலும்கூட, சோஷலிஸ்டுப் புரட்சியை நமது சொந்த முயற்சி மூலமாக மாத் திரம் பூரணமாக நிறைவேற்ற முடியாது. ரஷ்யாவில் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் புரட்சியிலிருந்து. எவனொருவன் விலகிச் சென்று, சக்திகளின் பலம் தெளிவாக ஒரே மாதிரியாக இல்லாதிருப்பதைச் சுட்டிக் காட்டுகிறானோ, அவன்,

"ஒரு மப்ளரில் உள்ள மாறுதலை விரும்பாத மனிதனை"ப் போன்ற வனாகவே இருக்கிறன்; அவனுடைய மூச்சிற்கு அப்பால் அவன் எதையும் பார்க்க முடியாது; முக்கியத்துவம் வாய்ந்த எந்த ஒரு சரித்திர பூர்வமான மாறுதலும் சக்திகளின் பலம் ஒரே மாதிரியாக இல்லாத நிலையில்தான் ஏற்பட்டிருக்கிறது என்பதை நிரூபிப்பதற்கு ஏராளமான நிகழ்ச்சிகள் இருக்கின்றன என்பதை மறந்து விடுகிறார்கள். புரட்சிவளரும் போது, போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் சக்திகளும் வளர்கின்றன. ஒரு நாடு ஆழமான மாறுதல் பாதையில் போகத் துவங்கியிருக்கும் போது, முன்பு கருத்தியலிலும், தத்துவ ரீதியிலும் எழுப்பப்பட்ட கடமைகளை நடைமுறையில் எடுத்துக்கொள்வது அந்த நாட்டிற்கும், அந்த நாட்டில் வெற்றியைச் சாதித்திருக்கும், தொழிலாளவர்க்கத்தின் கட்சிக்கும் கௌரவத்தைக்கொடுக்கும் ஒரு நிகழ்ச்சியாகத் திகழ்கிறது. இந்த அனுபவம்ஒருக் காலமும் மறக்கப்பட மாட்டாது. தொழிலாளர் சங்கங்களிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் ஒன்று பட்டிருக்கும் தொழிலாளர்கள் தேசிய ரீதியில் உற்பத்தி முழுவதையும் அமைத்து வருவதால் நடைமுறை வேலையில் இப்பொழுது பெற்று வரும் அனுபவத்தை—ரஷ்யப் புரட்சியின் நிலை மாற்றங்கள் எவ்வளவு கஷ்டமானதாக இருந்தாலும்கூட, சர்வதேச சோஷலிஸ்டு புரட்சி கஷ்ட நஷ்டங்களினூடே கடந்து சென்றாலும் கூட—பறித்துவிட முடியாது, அது சோஷலிஸத்தின் ஆதாயமாக சரித்திரத்தில் பொறிக்கப் பட்டிருக்கிறது: அதன் மீது எதிர்கால உலகப் புரட்சி அதன் சோஷலிஸ்டு சின்னத்தை நிர்மாணிக்கும்.

மற்றொரு பிரச்சினையை, ஒரு சமயம் மிகக் கஷ்டமான பிரச்சினையை குறிப்பிட அனுமதி கொடுங்கள்! இதற்கு தலையாய பொருளாதாரக் குழு நடைமுறைத் தீர்வைக்காண வேண்டும். இது உழைப்பைக் கட்டுப்படுத்தும் பிரச்சினையாகும். கண்டிப்பான முறையில் பேசுவது என்றால், இந்தப் பிரச்சினையைக் குறிப்பிடும் போது, நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய விஷயமும், மன நிறைவோடு வலியுறுத்த வேண்டிய விஷயமும் என்னவென்றால், தொழிலாளர் சங்கங்கள், அவைகளின் மிகப் பெரிய ஸ்தாபனங்களான உலோகத் தொழிலாளர் சங்கத்தின் மத்திய குழு, அகில ரஷ்ய தொழிற் சங்கக் குழு, லட்சோப லட்சம் உழைக்கும் மக்களை ஒன்று சேர்த்திருக்கும் தலையாய தொழிலாளர் ஸ்தாபனங்கள் ஆகியவை தான் இந்தப் பிரச்சினைக்கு சுயேச்சையாகத் தீர்வுக் காணும் பணியில் முதலில் ஈடுபட வேண்டும்; மேலும் இந்தப் பிரச்சினையானது உலகச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கிறது. அதைப் புரிந்து கொள்ளும் பொருட்டு, அரை குறையான, சிறிய தோல்விகளிலிருந்து, வியக்கத்தக்க வகையில் உள்ள

கஷ்டங்களிலிருந்து நம்மைத் தனியே ஒதுக்கிக் கொள்ள வேண்டும்; அவைகளை தனித்தனியே எடுத்துக் கொண்டால், சமாளிக்க முடியாததாகத் தோன்றும். நம்மை உயர்ந்த மட்டத்திற்கு நாம் உயர்த்திக் கொண்டு, சமுக பொருளாதாரத்தின் அமைப்புகளின் மாறுதலைப் பரிசிலனை செய்ய வேண்டும். இந்தக் கோணத்தி லிருந்து பார்த்தால் தான் நாம் மேற்கொண்டிருக்கும் கடமையின் எல்லையற்ற பேரளவை நாம் புரிந்து கொள்வது சாத்தியமாகும். அப்பொழுது தான், இதன் அமோகமான முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்வது சாத்தியமாகும்; அதாவது, 1861-ம் வருடம் வரையிலும் நிலப்பிரபுத்துவ ரஷ்யாவில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில நிலப்பிரபுக்கள் தங்களுடைய சொந்த விவகார மாகக் கருதி எந்தப் பிரச்சினைக்குத் தீர்வுக் கண்டார்களோ; அந்தப் பிரச்சினையை இந்த சந்தர்ப்பத்தில் சமுதாயத்தின் பெரிதும் முன்னேற்றமடைந்த பிரதிநிதிகள், அதாவது உழைக்கிற, சுரண்டப் பட்ட மக்கள் சொந்த முன் முயற்சியால், தாங்களாகவே தீர்வுக் காண்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள்—அதே சமயத்தில் அரசு ஒருமைப் பாட்டையும், கட்டுப்பாட்டையும் ஏற்படுத்த வேண்டி யது அவர்கள் விவகாரமாகும்.

நிலப்பிரபுத்துவ, நிலச்சுவான்தார்கள் இந்தக் கட்டுப்பாட்டை எப்படி சிருஷ்டித்தார்கள் என்பது நமக்குத் தெரியும். பெரும் பாலான மக்களுக்கு அது ஒடுக்கு முறையாகவும், அவமானமாக வும், கடும் காவல் தண்டனையில் வியக்கத்தக்க வேதனையாகவும் இருந்தது. பண்ணை அடிமை முறையிலிருந்து முதலாளித்துவ பொருளாதாரத்திற்கு மாறிச் சென்றதை பூழுமையாகத் திரும் பவும் நினைத்துப் பாருங்கள். நீங்கள் நேரில் பார்த்தவைகளி லிருந்து—உங்களில் பெரும்பாலோர் அதை நேரில் பார்த்திருக்க முடியாது என்றாலும்கூட—பழைய தலைமுறைகளிடமிருந்து நீங்கள் கற்றுக் கொண்டவைகளிலிருந்து 1861ம் ஆண்டுக்குப் பிறகு புதிய முதலாளித்துவ பொருளாதாரத்திற்கு மாறிச் சென்றது சரித்திர பூர்வமாகவே எவ்வளவு சுலபமானதாகத் தோன்றிற்று என்பது உங் களுக்குத் தெரியும்; அதாவது, பழைய நிலப்பிரபுத்துவ நிர்ப்பந்த மான கட்டுப்பாட்டிலிருந்து, அர்த்தமற்ற, தான் தோன்றித்தன மாக, மிருகத்தனமாக அவமானப்படுத்துகிற தனி நபர் மீது பலாத்காரத்தை ஏவிவிடுகிற, கட்டுப்பாட்டிலிருந்து முதலாளித் துவ கட்டுப்பாட்டிற்கு பட்டினியின் கட்டுப்பாட்டிற்கு, சுதந்திர மாக கூலிக் கமர்த்துவதாகக் கூறப்படும் கட்டுப்பாட்டிற்கு —உண்மையில் இது முதலாளித்துவ அடிமை முறையின் கட்டுப் பாட்டே தவிர வேறு எதுவும் கிடையாது—மாறிச் சென்றதை நீங்கள் கவனித்திருக்கிறீர்கள்—இதற்குக் காரணம் என்ன

வென்றால், மனித இனம் ஒரு சுரண்டுகிறவனிடமிருந்து மற்றொரு சுரண்டுகிறவனிடம் கைமாறிற்று; இதற்குக் காரணம் என்ன வென்றால், மக்களின் உழைப்பைக் கொள்ளையடிக்கிறவர்களின், சுரண்டுகிறவர்களின் ஒரு சிறுபான்மையோர் கூட்டம், மற்றொரு சிறுபான்மையோர் கூட்டத்திற்கு — இவர்களும் மக்களின் உழைப்பைக் கொள்ளையடித்தார்கள், சுரண்டினார்கள்—இடமளித் தது! இதற்குக் காரணம், நிலப்பிரபுத்துவ நிலச்சுவான்தார்கள் முதலாளிகளுக்கு இடம் கொடுத்தார்கள்—ஒரு சிறுபான்மையோர் கூட்டம், மற்றொரு சிறுபான்மையோர் கூட்டத்திற்கு இடம் கொடுத்தது—அதே சமயத்தில் உழைக்கிற சுரண்டப்பட்ட வர்க்கங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாகவே நீடித்து நிலைத் திருந்தன. மேலும் இந்த மாற்றம் ஏற்பட்டது கூட, அதாவது ஒரு சுரண்டுகிறவனின் கட்டுப்பாட்டிலிருந்து, மற்றொரு சுரண்டுகிறவனின் கட்டுப்பாட்டிற்கு மாற்றம் ஏற்பட்டதும் கூட பல ஆண்டுகளின், அல்லது பல பத்து ஆண்டுகளின் முயற்சியால் தான் ஏற்பட்டன; இந்த மாறிச் செல்லும் கால கட்டம் பல ஆண்டுகள் வரையிலும், அல்லது பல பத்து ஆண்டுகள் கால கட்டம் வரையிலும் நீடித்திருந்தது. இந்தக் காலக்கட்டத்தின் போது, பழைய நிலப்பிரபுத்துவ நிலச்சுவான்தார் அனைத்தும் கவனிப்பாரற்று பாழாய்ப் போய்க் கொண்டிருக்கின்றன என்றும், பண்ணை அடிமை முறை இல்லாமல் நாட்டை நிர்வாகம் செய்வது சாத்தியமல்ல என்றும், மனமார நம்பினார்கள்; அதே சமயத்தில், புதிய முதலாளித்துவ எஜமானோ, ஒவ்வொரு நடவடிக் கையிலும் நடைமுறைக் கஷ்டங்களை நேரிட வேண்டியிருந்தது; ஆகவே, அவனுடைய தொழில் முயற்சியை மோசமான பணியாக இருக்கிறது என்று கூறிக் கைவிட்டான், இந்தக் கஷ்டமான நிலைக்கு ஒரு பொருளியல் ஆதாரம், ஒரு உருப்படியான சான்று என்ன வென்றால், அச்சமயத்தில் ரஷ்யா சிறந்த இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்காக, வெளி நாடுகளிலிருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்தது; ஆனால், இந்த இயந்திரங்களை ஓட்டுவதற்கு துருவர் கூடக் கிடைக்கவில்லை; நிர்வாகிகள் கிடைக்கவில்லை. ரஷ்யா முழுவதும் அருமையான இயந்திரங்கள் பயன்படுத்த முடியாமல் குவிந்து கிடப்பதை ஒருவன் பார்க்க முடியும்; பழைய நிலப்பிரபுத்துவ கட்டுப்பாட்டிலிருந்து, புதிய முதலாளித்துவ கட்டுப்பாட்டிற்கு மாறிச் செல்வது இவ்வளவு கட்டமான காரிய மாக இருந்தது.

ஆகவே, தோழர்களே, இந்தக் கோணத்திலிருந்து, இந்தப் பிரச்சினையை நீங்கள் பார்த்தால் பீதியைப் பரப்புவது, சோர்வைப் பரப்புவது, நமது முழுக் கடமைகளைப் பற்றி பூரணமாக மனத்

தளர்ச்சி ஏற்படும்படி செய்வது, நம்பிக்கைக்கு இடம் தராததாகத் தோன்றும்படி செய்வது ஆகியவை தங்களின் முழு நோக்கமாகக் கொண்டிருக்கும் அந்த மக்களால், அந்த வர்க்கங்களால், அந்த முதலாளிகளால், அவர்களை அண்டிப் பிழைக்கும் அந்தக் கூலிப் படைகளால் திசை திருப்பி அழைத்துச் செல்லப்படுவதை நீங்கள் அனுமதிக்க மாட்டீர்கள்; மேலும் இவர்கள் கட்டுப்பாடின்மை. ஊழல் ஆகியவை பற்றிய ஒவ்வொரு நிகழ்ச்சியையும் சுட்டிக் காட்டி, அதன் காரணமாக புரட்சி ஒரு மோசமான வேலை என்று கூறி, அதைக் கைவிடும்படி கூறுகிறார்கள்; பொது மக்கள் ஒரு புதிய கட்டுப்பாட்டைச் சிருஷ்டித்துக் கொண்டிருக்கும் போது, உலகத்தில், சரித்திரத்தில் உண்மையான, மகத்தான எந்த ஒரு புரட்சியிலும் ஊழலே இல்லாதது போலவும், கட்டுப்பாடு தளர்ச்சி யடையாததே இல்லாதது போலவும், வேதனை மிக்க பரிசோதனை நடவடிக்கைகளே இல்லாதது போலவும் பேசுகிறார்கள். லட்சோப லட்சம் உழைக்கிற, சுரண்டப்பட்ட மக்களால் ஒரு புதிய கட்டுப் பாடு, உழைப்புக் கட்டுப்பாடு, தோழமைத் தொடர்பின் கட்டுப் பாடு, சோவியத் கட்டுப்பாடு, முதல் தடவையாகச் சிருஷ்டிக்கப் பட்டிருக்கும் சரித்திரத்தின் தொடக்க நிலையை நாம் அடைந்திருக் கிறோம் என்பதை நாம் மறக்கக் கூடாது. இந்தத் துறையில் வேக மாக வெற்றிகளைப் பெற்று விட்டோம் என்று நாம் கூறவும் இல்லை, அல்லது எதிர்பார்க்கவும் இல்லை. சரித்திரப் பூர்வமான ஒரு சகாப்தம் முழுவதும் இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் என்பது நமக்குத் தெரியும். இந்தச் சரித்திர பூர்வ மான சகாப்தத்தை நாம் துவங்கியிருக்கிறோம்: இன்று முதலாளித் துவ நாடாக இருக்கிற ஒரு நாட்டில் முதலாளித்துவ சமுதாயத் தின் கட்டுப்பாட்டை நாம் உடைத்துக் கொண்டிருக்கிற ஒரு சகாப்தம் இது; இந்த அழிவு வேலைக்கு அரசியல் உணர்வு படைத்த எல்லாத் தொழிலாளர்களும், எல்லா உழைக்கும் உழவர்களும் எல்லா இடங்களிலும் ஆதரவு தருகிறார்கள் என்பதை நினைத்து நாம் பெருமைப் படுகிறோம்; மேலிருந்து பிறப்பிக்கப்படும் கட்டளை களிக்குக் கீழ்படிந்து நடப்பதற்குப் பதிலாக, தங்களுடைய சொந்த உயிருள்ள அனுபவத்தின் கட்டளைப்படி, உழைப்பாளி மக்களைச் சுரண்டுவதையும், அடிமைப்படுத்துவதையும் அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாட்டை, கோடானு கோடி மக்களை உட் கொண்ட ரஷ்யா முழுவதிலும் உள்ள ஒன்று பட்ட, ஸ்தாபன ரீதியாக அமைந்துள்ள தொழிலாளர்கள், உழைக்கும் விவசாயிகள் ஆகியவர்களின் கட்டுப்பாடாக, ஒன்று பட்ட உழைப்பின் புதிய கட்டுப்பாடாக மாற்ற வேண்டும் என்பதை பொது மக்கள் தாமாகவே, அவர்களுடைய சொந்த முன் முயற்சியால் உணர்ந்து வரும் சகாப்தம் இது. இந்தக் கடமைக்கு முன்னால் ஏராளமான

கஷ்டங்கள் இருக்கின்றன; ஆனால், அதுவும் கூட, நன்றி தெரிவிக்க வேண்டிய ஒன்றாகும்; காரணம், புதைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் முதலாளித்துவ சமுதாயத்தின் சவப் பெட்டியில் நடைமுறையில் இதற்குத் தீர்வு காணும் போது தான் கடைசி ஆணியை அடித்து விட்டோம் என்று கூறலாம்.

"பெட்ரோ கிராட்ஸ்கயா"
எண். 108-ல் (மாலைப் பிரதி)
1918 ல் மே,விலும் "பிராவ்தா"வில்
எண் 104-லும், "இஸ்வெஸ்டியா" VTSIK-
எண்-106-1918-மே 28-லும்
பிரசுரிக்கப்பட்டது.

திரட்டப்பட்ட
நூல்கள்—
தொகுப்பு-27
பக்கம்-410—15

"முதல் அகில ரஷ்யப் பொருளாதாரக் குழுவின் காங்கிரஸின் நடவடிக்கைகள்" என்ற தலைப்பில், சொற் பிழையுமல் அப்படியே புத்தக வடிவில் 1918-ல் மாஸ்கோவில் பிரசுரிக்கப்பட்டது.

## ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்ஷ்விக்) நகல் கொள்கைத் திட்டத்திலிருந்து

### ரஷ்யாவில் பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தின் அடிப்படையான கடமைகள்

இன்று ரஷ்யாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அடிப்படையான கடமைகள் என்னவென்றால், ஏற்கெனவே துவங்கப்பட்டிருக்கிற நிலச்சுவான்தார்கள், முதலாளிகள் ஆகியவர்களின் உரிமைகளை அபகரிப்பது, தொழிற்சாலைகள், ரயில்வேக்கள், பாங்குகள், வியாபாரக் கப்பல்கள், மற்ற உற்பத்தி சாதனங்கள், கொடுக்கல், வாங்கல் முறை ஆகியவற்றை எல்லாம் சோவியத் குடியரசின் சொத்தாக மாற்றுவது ஆகிய பணிகளைக் கடைசிவரையிலும் செய்து முடிக்க வேண்டும்.

நகர தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள் ஆகியவர்களின் கூட்டணியைப் பயன்படுத்த வேண்டும்; இது ஏற்கெனவே நிலத்தில் தனி உடமையை ஒழிப்பதற்கும் சிறிய முறையில் விவசாயம் செய்வதற்கும், சோஷலிஸத்திற்கும் இடையே உள்ள மாறிச் செல்லும் வடிவம் பற்றிய விதிகளை வகுப்பதற்கும் அழைத்துச் சென்றிருக்கிறது. விவசாயிகளின் நவீன சித்தாந்த வாதிகள் பாட்டாளி மக்களின் பக்கத்தில் சேர்ந்து கொண்டு, நிலத்தை சோஷலிஸ மயமாக்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்திருக்கிறார்கள்; படிப்படியாக அதே சமயத்தில் உறுதியாக கூட்டு முறையில் விவசாயம் செய்வதற்கும், பெரிய அளவில் சோஷலிஸ்டு விவசாய முறைக்கும் மாறிச் செல்ல வேண்டும் என்று அறைகூவல் விடுத்திருக்கிறார்கள்.

சோவியத்துகளின் கூட்டாட்சிக் குடியரசைப் பலப்படுத்தி, மேலும் வளர்க்க வேண்டும். 1871-ம் வருடத்திய பாரீஸ் கம்யூனின் அனுபவத்தின் அடிப்படையிலும், அதே போல் 1905-ம் வருடத்

திய, 1917-18-ம் வருடத்திய ரஷ்யப் புரட்சிகளின் அனுபவத்தின் அடிப்படையிலும் முதலாளித்துவ சட்டமன்ற முறையைக் காட்டிலும் அளவற்ற வகையில் உயர்ந்த, மேலும் முற்போக்கான ஜனநாயகத்தின் வடிவமாகவும், முதலாளித்துவத்திற்கும், சோஷலிஸத்திற்கும் இடையே மாறிச் செல்லும் கால கட்டத்திற்கும் அதாவது பாட்டாளி மக்களின் சர்வாதிகார கால கட்டத்திற்கும் உகந்த முறையில் அரசின் ஒரு வகையாகவும் அதை வளர்க்க வேண்டும்.

ரஷ்யாவில் பொருத்தியிருக்கும் உலக சோஷலிஸ்டு புரட்சி என்ற விளக்கை எல்லா வழியிலும் பயன்படுத்துவதன் மூலமாக, ரஷ்யாவின் உள்நாட்டு விவகாரத்தில் ஏகாதிபத்திய முதலாளித்துவ அரசுகள் தலையிட முயலுவதையோ, அல்லது சோஷலிஸ்டு சோவியத் குடியரசுக்கு எதிராக நேரடியாக போராடுவதற்காகவும், யுத்தம் தொடுப்பதற்காகவும் ஒன்றுபட்டு வருவதையும் சிதறடிக்க வேண்டும்; மேலும் பெரிதும் முன்னேற்றமடைந்த நாடுகளுக்கும், பொதுவாக எல்லா நாடுகளுக்கும் புரட்சியைக் கொண்டு போக வேண்டும்; படிப்படியான, அதே சமயத்தில் வழி தவறாத பல நடவடிக்கைகள் மூலமாக தனியார் வியாபாரத்தை அறவே ஒழித்து, உற்பத்தியாளர்கள், உபயோகிப்பவர்கள் ஆகியவர்களின் கம்யூன்களுக்கு இடையே உற்பத்திப் பொருள்களை முறையாகவும், திட்டப்படியும் பரிமாற்றம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்; ஒரே ஒரு பொருளாதார ஸ்தூலப் பொருளை உருவாக்க வேண்டும். சோவியத் குடியரசு இதுவாக மாறவேண்டும்.

சோவியத் சர்க்காரின் பொதுவான கடமைகளை மேலும் விரிவாக வளர்த்துக் கொண்டு போகும் போது, ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி தற்சமயத்திற்கு அவைகளைப் பின்வருமாறு வரையறுக்கிறது:

### அரசியல் துறையில்

பாட்டாளி மக்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பு, உழைக்கும் மக்களை ஸ்தாபன ரீதியாக அமைப்பதற்காகவும், அவர்களுக்கு அரசியல் அறிவூட்டுவதற்காகவும் முதலாளித்துவ ஜனநாயகத்தையும், குறிப்பாக சட்டமன்ற முறையையும் பயன்படுத்த வேண்டியது அவசியமாக (செய்து தீர வேண்டியதாக) இருந்தது; இப்பொழுது பாட்டாளி மக்கள் அரசியல் அதிகாரத்தை வென்றிருப்பதாலும், உயர்ந்தரக ஜனநாயகத்தை சோவியத் குடியரசில் நடைமுறையில் செயல் படுத்தியிருப்பதாலும், முதலாளித்துவ சட்ட மன்ற வாதத்திற்கும், முதலாளித்துவ ஜனநாயகத்திற்கும் திரும்பிச் செல்லும் எந்த நடவடிக்கையும்

சுரண்டுகிறவர்கள், நிலச்சுவான்தார்கள், முதலாளிகள் ஆகியவர் களின் நலன்களுக்கு பிற்போக்குத் தனமாக சேவை செய்வதாகவே இருக்கும் என்பதில் சந்தேகத்திற்கே இடமில்லை. இத்தகைய கோஷங்கள் பிரபலமானதாகவும், தேசியத் தன்மை வாய்ந்ததாக வும், பொதுப்படையானதாகவும், வர்க்கத்திற்கு அப்பாற்பட்ட தாகவும் அனுமானிக்கப்பட்டாலும் கூட, உண்மையில் முதலாளித் துவ ஜனநாயகமானது சுரண்டுகிறவர்களின் நலன்களுக்கு மாத் திரம் சேவை செய்கிறது; நிலமும், மற்ற உற்பத்தி சாதனங்களும் தனி நபர்களின் சொத்தாக இருப்பது வரையிலும், பெரிதும் ஜனநாயகத் தன்மை வாய்ந்த குடியரசும் கூட தவிர்க்க முடியாத வகையில் முதலாளித்துவ சர்வாதிகாரமாகவே நீடித்து நிலைத் திருக்க வேண்டும்; உழைக்கும் மக்களில் மிகப் பெரும் பாலோரை விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில முதலாளிகள் அடக்கி ஒடுக்கி வைத்திப்பதற்கான ஒரு கருவியாகவே இருக்கும்.

சோவியத் குடியரசின் மீது சரித்திர பூர்வமான கடமை சுமத்தப்பட்டிருக்கிறது; அரசு பரிபூரணமாக உலர்ந்து போவது வரையிலும் ஒரு புதிய இடைக்கால வடிவத்திலுள்ள ஒரு அரசின் கடமைகள் பின்வருமாறு :

(1) முதலாளித்துவத்தின் கீழ் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த வர்க்கங்களின்—பாட்டாளி மக்களின், அரைப் பாட்டாளி மக்களின்—அனைவரையும் உட்கொண்ட பொதுஜன ஸ்தாபனங் களைச் சிருஷ்டித்து, வளர்க்க வேண்டும். ஒரு முதலாளித்துவ ஜனநாயகக் குடியரசானது, அதிகப்பட்சம் சுரண்டப்பட்ட மக்களுக்கு ஸ்தாபனத்தை அமைத்துக்கொள்ள அனுமதி அளிக் கிறது; ஸ்தாபனம் அமைத்துக் கொள்ள அவர்களுக்குச் சுதந்திரம் உண்டு என்று பிரகடனம் செய்கிறது; ஆனால், உண்மையில் அவர் களுடைய ஸ்தாபனத்திற்கு எண்ணற்ற தடைகளை எப்பொழுதும் போடுகிறது; இந்தத் தடைகள் உற்பத்தி சாதனங்கள் தனி நபர் களின் சொத்துடமையோடு சம்பந்தப்பட்டவைகளாக இருக் கின்றன; அதாவது, ஒரு விதத்தில் அவைகளை அகற்ற விடாமல் தடுக்கும் தடைகளாக இருக்கின்றன. சரித்திரத்தில் முதல் தடவையாக, சோவியத் அதிகாரமானது முதலாளித்துவத்தின் கீழ் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த மக்களின் ஸ்தாபனத்திற்கு மிகவும் அனுகூலமாக இருக்கிறது என்பது மாத்திரமல்ல, அதோடு கூடவே அந்த ஸ்தாபனத்தை அடிமுதல் நுனிவரையிலும் அரசு, ஸ்தல, மத்திய கருவிகள் அனைத்தின் முக்கியமான நிரந்தரமான அடிப் படையாகச் செய்திருக்கிறது. இந்த வழியில் மாத்திரம் தான் பொது மக்களில் (உழைப்பாளி மக்களில்) மிகப் பெரும்பாலோரின்

ஜனநாயகத்திற்கு, அதாவது, உண்மையாகவே அரசு நிர்வாகத்தில் பங்கெடுப்பதற்கு உத்திரவாதத்தை அளிப்பது சாத்தியமாகும்; இதற்கு நேர் விரோதமாக, பெரும்பாலான ஜனநாயகத் தன்மை வாய்ந்த முதலாளித்துவக் குடியரசுகளில் முதலாளித்துவ வர்க்கத்தின் உறுப்பினர்கள் தான் முக்கியமாக உண்மையில் அரசு நிர்வாகத்தில் பங்கெடுக்கிறார்கள்.

(2) சோஷலிஸத்திற்கு முந்திய முதலாளித்துவ வளர்ச்சி யானது ஒரு பகுதி தொழிலாளர்களை அதாவது நகரத்திலுள்ள இயந்திரத்தில் வேலை செய்கிற பாட்டாளி மக்களை அதிகமாக ஒன்றாகக் குவித்தது, ஒன்றுபடுத்திற்று, அறிவூட்டிற்று. போராட்டத்தில் உறுதிப் படுத்திற்று— இந்தப் பகுதி உழைக்கும் மக்களுக்கு சோவியத் அமைப்பு அரசு நிர்வாகமானது ஒரு குறிப்பிட்ட அளவு எதார்த்தத்தில் அனுகூலமாக இருக்கிறது. தொழிலாளர் களிடையே தொழில் வாரியான குறுகிய மனப்போக்கை தொழி லாளர்களிடையே முதலாளித்துவம் வளர்த்தது; மேலும் ஒன்றோடொன்று போட்டிபோடும் குழுக்களாகவும் அவர்களைப் பிளவு படுத்திற்று; இதை எதிர்த்துப் போராடுவதற்கு இந்த அனுகூல மான நிலையைப் பயன் படுத்த வேண்டும்; பின் தங்கிய நிலையிலும், சிந்திச் சிதறிக்கிடக்கும் நிலையிலும் உள்ள கிராமப்புற பாட்டாளி மக்களையும், அரை பாட்டாளி மக்களையும், பெரிதும் முன்னேற்ற மடைந்துள்ள தொழிலாளர்களோடு நெருக்கமாக இணைக்க வேண்டும்; கிராமப்புற குலாக்குகள், கிராமப்புற முதலாளிகள் ஆகியவர்களின் செல்வாக்கிலிருந்து அவர்களைப் பிரிக்க வேண்டும்; கம்யூனிஸ்டு வளர்ச்சிக்காக அவர்களை ஸ்தாபன ரீதியாக அமைத்து, அவர்களுக்கு அறிவூட்ட வேண்டும்.

(3) எல்லா குடிகளுக்கும் சமத்துவம் வழங்குவதாக முதலாளித்துவ ஜனநாயகம் பயபக்தியோடு பிரகடனம் செய்தது: ஆனால் எதார்த்தத்தில், ஏமாற்றுகிற நோக்கத்தோடு முதலாளித் துவ சுரண்டல்காரர்களின் ஆதிக்கத்தை மறைத்தது; சுரண்டுகிற வர்களுக்கும், சுரண்டப்பட்டவர்களுககும் சமத்துவம் சாத்திய மானது என்ற கருத்தைப் பரப்பி, பொது மக்களை ஏமாற்றிற்று. அரசின் சோவியத் ஸ்தாபனம் உண்மையான ஜனநாயகத்தை நடைமுறையில் செயல் படுத்துவதன் மூலமாக, அதாவது உழைக் கும் மக்கள் அனைவருக்கும் உண்மையான ஜனநாயகத்தை வழங்கு வதன் மூலமாக, முழு உரிமைகளைப் பெற்றிருக்கிற சமுதாயத்தின் உறுப்பினர்கள் பட்டியலிலிருந்து சுரண்டுகிறவர்களை நீக்குவதன் மூலமாக இந்த மோசடியை, இந்தப் போலி வேஷத்தை அழிக் கிறது. உலக சரித்திரத்தின் அனுபவமும் சுரண்டுகிறவர்களை

எதிர்த்து சுரண்டப்பட்ட வர்க்கங்கள் நடத்திய கலகங்கள் அனைத்தின் அனுபவமும் எடுத்துக் காட்டுவது என்னவென்றால், சுரண்டுகிறவர்கள் தங்களுடைய விசேஷ சலுகைகளை நீடித்து நிலைத்து வைத்திருப்பதற்காக நடத்தும் போராட்டத்தில் நீண்டகால, விடாப்பிடியான எதிர்ப்பைக் கொடுப்பது தவிர்க்க முடியாதது என்பதுதான். சோவியத் அரசு ஸ்தாபனமானது அந்த எதிர்ப்பை நசுக்குவதற்கு உகந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது; ஏனெனில், அதை நசுக்கவில்லையென்றால், ஒரு கம்யூனிஸ்டு புரட்சியின் வெற்றி பற்றிய பிரச்சினைக்கே இடமிருக்க முடியாது.

(4) சோவியத் ரகத்தின் கீழ் உள்ள அரசு அமைப்பின் மீதும், நிர்வாகத்தின் மீதும் — அதாவது. ஜனநாயகத்தின் ஒரு உயர்ந்த வடிவத்தின் மீது — உழைக்கும் மக்களின் செல்வாக்கு மேலும் நேரடியாகச் செலுத்தப்படுகிறது; முதலாவதாக, தேர்தல் முறைகள் மூலமாகவும், அடிக்கடி தேர்தல்களை நடத்துவதைச் சாத்தியமாக்குவதன் மூலமாகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைத் திருப்பி அழைக்கலாம், மறு தேர்தல் நடத்தலாம் என்ற நிபந்தனைகளைப் போடுவதன் மூலமாகவும், முதலாளித்துவ ஜனநாயகத்தின் சிறந்த வடிவங்களைக் காட்டிலும் அதிக எளிமையானதாகச் செய்வதன் மூலமாகவும், நகரத்திலும், நாட்டுப் புறத்திலும் உள்ள தொழிலாளர்கள் புரிந்து கொள்ளக்கூடியதாகச் செய்வதன் மூலமாகவும் செயல் படுத்துகிறது.

(5) இரண்டாவதாக, சோவியத் அதிகாரத்தின் கீழ் பிராந்தியப் பிரிவை அடிப்படையான தேர்தல் அடிப்படைக்கூறாகச் செய்யாமல், பொருளாதார, தொழிலியல் அடிப்படைக்கூறாகச் (தொழிற்சாலை) செய்வது, அரசு அமைப்பின் கருவாகச் செய்வது. அரசு ஸ்தாபனக் கருவிகளுக்கும், முதலாளித்துவம் ஒன்று படுத்திய முன்னேற்றமடைந்த பாட்டாளி மக்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதும் — உயர்ந்தபட்ட ஜனநாயகத்தைச் செயல் படுத்துவதோடு கூடுதலாக— ஆழமான சோஷலிஸ்டு சீர்திருத்தங்களை செயல்படுத்துவதைச் சாத்தியமாக்குகிறது.

(6) சோவியத் ஸ்தாபனம் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியவர்களின் ஆயுதம் தாங்கிய படைகளைச் சிருஷ்டிப்பதைச் சாத்தியமாக்கியிருக்கிறது; முன்னைக்காட்டிலும் இப்பொழுது அவை அதிகமாக உழைக்கிற, சுரண்டப்பட்ட மக்களோடு நெருக்கமாகத் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கின்றன.

5-DEC 1973

இதைச் செய்யவில்லையென்றால், புரட்சியின் வெற்றிக்கு நிபந்தனைகளில் ஒன்றாக இருப்பதை அதாவது தொழிலாளர்களை ஆயுதபாணிகளாக மாற்றி, முதலாளிகளை நிராயுதபாணிகளாக மாற்றுவதை ஒருக்காலும் செய்து முடித்திருக்க முடியாது.

(7) மத்திய காலத்தோடு ஒப்பிடும் போது, முதலாளித்துவ ஜனநாயகம் சரித்திரபூர்வமாக மாபெரும் முற்போக்குத்தன்மை கொண்டதாக இருந்தது; அதாவது ஆட்சிப் பொறுப்பிடத்திற்கு தனிநபர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் பொதுமக்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள்; இந்த அம்சத்தை ஒப்பிட முடியாத அளவில் சோவியத் ஸ்தாபனம் மேலும் அதிகமாகவும், ஆழமாகவும் அபிவிருத்தி செய்தது. சோவியத் அதிகாரத்தின் கீழ் விரிவாகவும், அடிக்கடியும், அனைவரும், சுலபமாகவும், எளிமையாகவும் தேர்தல் உரிமைகளை உழைப்பாளி மக்கள் அனுபவித்து வருவது போல், பெரிதும் ஜனநாயகத் தன்மை கொண்ட முதலாளித்துவ அரசுகளில் ஒன்றில் கூட உழைப்பாளி மக்கள் முதலாளித்துவத்தால் சம்பிரதாய முறையில் அளிக்கப்பட்ட தேர்தல் உரிமைகளை அனுபவிக்க முடியவில்லை (உண்மையில் முதலாளிகள் அவர்கள் அனுபவிப்பதைத் தடை செய்கிறார்கள்.) அதே சமயத்தில், சோவியத் அதிகாரம் முதலாளித்துவ ஜனநாயகத்தின் எதிர்மறையான அம்சங்களை துடைத்தெறிந்தது; பாரிஸ் கம்யூன் ஒழிக்கத் துவங்கியதை, அதாவது சட்ட மன்ற முறையை, அல்லது சட்டம் இயற்றும் அதிகாரத்தையும், நிர்வாக அதிகாரத்தையும் தனியே பிரித்ததை, மார்க்ஸிஸம் அதற்குப் பிறகு நீண்டகாலமாக சுட்டிக் காட்டி வந்த குறுகிய, ஒரு எல்லைக்குட்பட்ட தன்மையைத் துடைத் தெறிந்தது. சர்க்காரின் இரண்டு அம்சங்களையும் இரண்டறக் கலந்ததின் மூலமாக சோவியத்துகள் அரசு கருவிகளை உழைக்கும் மக்களோடு மேலும் நெருக்கமாகக் கொண்டு வருகின்றன; சட்ட மன்ற வியாபாரிகளின் பொருளாதார, பங்கு மாற்ற சந்தை நிலையத்தின் அலுவல்களை மறைத்து, மோசடி செய்கிற விளம்பரப் பலகை மூலமாகப் பொது மக்களை ஏமாற்றியதும், அரசு நிர்வாகத்தின் முதலாளித்துவக் கருவிகள் மீறத் தகாதவை என்பதற்கு உத்தரவாதம் அளித்ததுமான முதலாளித்துவ சட்ட மன்றத்தின் வேலியை அகற்றுகிறது.

(8) சோவியத் அரசு ஸ்தாபனம் மாத்திரம் தான் பாட்டாளி மக்களின் புரட்சியானது பழைய முதலாளித்துவ அரசு கருவிகளை ஒரே வீச்சில் நொறுக்கித் தள்ளுவதற்கும், அதன் அஸ்திவாரத்தையே கில்லி எறிவதற்கும், உதவிற்று; இதைச் செய்யவில்லையென்றால், சோஷலிஸ்டு வளர்ச்சிப் பாதையில் எந்தத் தொடக்கத்

த்தையும் செய்திருக்க முடியாது. முடியாட்சிகளிலும், பெரும் அளவுக்கு ஜனநாயகத் தன்மை கொண்ட முதலாளித்துவக் குடியரசுகளிலும் எல்லா இடங்களிலும் நிலச்சுவான்தார்கள், முதலாளிகள் ஆகியவர்களின் நலன்களோடு அரசை எப்பொழுதும் பிணைத்து வைத்திருந்த அதிகாரவர்க்கத்தின் கோட்டைகள் இன்றைய ரஷ்யாவில் சுக்குநூறாக உடைத்தெறியப் பட்டிருக்கின்றன. ஆயினும், நமது நாட்டில் அதிகார வர்க்கத்திற்கு எதிரான போராட்டம் நிச்சயமாக இன்னும் முடிந்து போகவில்லை. அதிகாரவர்க்கம் அதன் பதவிகளில் சிலவற்றை மறுபடியும் பெறுவதற்கு முயல்கிறது; ஒரு புறத்தில் பொது மக்களின் திருப்திகரமாக இல்லாத கலாச்சார மட்டத்தையும், மறுபுறத்தில் நகரத் தொழிலாளர்களில் பெரிதும் வளர்ச்சியடைந்த பகுதிகளின் அற்புதமான, அநேகமாக மனித சக்திக்கு அப்பாற்பட்ட யுத்த முயற்சிகளையும் தனக்கு அனுகூலமாகப் பயன்படுத்திக் கொள்கிறது. ஆகவே, எதிர்காலத்தில் சோஷலிஸத்தின் வளர்ச்சியின் வெற்றிக்கு உத்தரவாதத்தை ஏற்படுத்தும் பொருட்டு அதிகார வர்க்கத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டு போகவேண்டியது, அவசியமும், தவிர்க்க முடியாததுமாகும்.

(9) இந்தத் துறையில் வேலை செய்வதானது, சோவியத் அதிகாரத்தின் தலையாய சரித்திரப்பூர்வமான நோக்கத்தை, அதாவது அரசை இறுதியில் ஒழிப்பதை நோக்கி முன்னேறுவதை நடைமுறையில் செயல் படுத்துவதோடு நெருக்கமாக இணைந்திருக்கிறது. மேலும் கீழ்க்கண்டவை அடங்கியிருக்க வேண்டும். முதலாவதாக, ஒரு சோவியத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தவறாமல் அரசு நிர்வாகத்தின் குறிப்பிட்ட ஒரு பணியைச் செய்ய வேண்டும்; இரண்டாவதாக, இந்தப் பணிகளைத் தொடர்ச்சியாக மாற்ற வேண்டும்; அப்பொழுதுதான் சர்க்காரின் எல்லா அம்சங்களையும் அதன் எல்லாக்கிளைகளையும் அவர்கள் மேற்கொள்வார்கள்; மூன்றாவதாக, சொல்லின் நேர்பொருள்படி கவனமாகப் பொறுக்கி எடுக்கப்பட்ட, தவறாமல் நடைமுறையில் செயல்படுத்தப்பட்ட வரிசைப்படி உள்ள, படிப்படியான நடவடிக்கைகளின் மூலமாக உழைக்கும் மக்கள் அனைவரையும் அரசு நிர்வாகத்தில் சுயேச்சையாகப் பங்கெடுக்கும்படி செய்ய வேண்டும்.

(10) மொத்தமாகப் பார்த்தால், ஒரு புறத்தில் முதலாளித்துவ ஜனநாயகம், சட்டமன்ற முறை ஆகியவற்றிற்கும், மற்றொரு புறத்தில் சோவியத் அல்லது பாட்டாளி மக்களின் ஜனநாயகத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தின் சாராம்சம்

இது தான். முன்னுல் கூறப்பட்டதின் ஆகர்ஷணமையம் என்ன வென்றால், பயபக்தியோடும், ஆடம்பரத்தோடும் பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் ஏராளமான சுதந்திரங்கள், உரிமைகள் ஆகியவை தான்; இவைகளை ஜனத் தொகையில் பெரும்பாலோ ரான தொழிலாளர்களும், விவசாயிகளும் முழுமையாக அனுபவிக்க முடியாது. இதற்கு நேர்மாறாக, பாட்டாளி மக்களின், அல்லது சோவியத்தின் ஜனநாயகம் பொது மக்கள் அனைவருக்கும் சுதந்திரங்களையும், உரிமைகளையும் பிரகடனம் செய்யும் நிலைக்கு வெளியே ஆகர்ஷணமையத்தை மாற்றியிருக்கிறது; அதாவது, இதுவரையிலும் மூலதனத்தால் அடக்கி ஒடுக்கப்பட்ட, சுரண்டப் பட்ட உழைப்பாளி மக்கள் மாத்திரம் அரசின் நிர்வாகத்தில் எதார்த்தமாகப் பங்கு கொள்வதில் ஈர்ப்புமையத்தை மாற்றியிருக்கிறது; சிறந்த கட்டிடங்களையும் மற்ற கட்டிடங் களையும் கூட்டங்கள் நடத்துவதற்காகவும், மாநாடுகள் நடத்துவதற்காகவும் எதார்த்தத்தில் பயன் படுத்திக் கொள் வதில் ஆகர்ஷணமையத்தை மாற்றியிருக்கிறது; முதலா ளித்துவத்தின் கீழ் முட்டாள்களாக்கப் பட்டிருந்த, நசுக்கப் பட்டிருந்த மக்களுக்கு கல்வி அறிவு போதிப்பதற்காக பெரிய அச்சகங்களையும், பெரிய காகிதக் கிடங்குகளையும் எதார்த்தத்தில் பயன்படுத்திக் கொள்வதில் ஆகர்ஷணமையத்தை மாற்றியிருக் கிறது; மதம் சம்பந்தமான தப்பெண்ணங்கள் போன்ற சுமையி லிருந்து படிப்படியாக தங்களை விடுவித்துக் கொள்வதற்கு மக்களுக்கு உண்மையான (எதார்த்த) வாய்ப்பை நல்குவதில் ஆகர்ஷணமையத்தை மாற்றியிருக்கிறது. கலாச்சாரம், நாகரிகம், ஜனநாயகம் ஆகியவற்றின் பயன்கள் உழைக்கிற, சுரண்டப்பட்ட மக்களுக்கு உண்மையாகவே கிடைக்கும்படி செய்வதுதான் சோவியத் அதிகாரம் தனது மிக முக்கியமான பணியாகக் கருது கிறது; இந்தப் பணியை எதிர்காலத்தில் வழி தவறுமல் தொடர்ச்சி யாகச் செய்ய வேண்டும்.

தேசியப் பிரச்சினையின்பால் ரஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கை என்ன வென்றால், ஏகாதிபத்தியத்தின் கீழ் நடை முறையில் செயல்படுத்த முடியாத முதலாளித்துவ ஜனநாயகத் தின் எல்லா நாடுகளுக்கும் சமத்துவம் கொடுக்கப்படும் என்ற பிரகடனத்தைப் போல் அல்லாமல், முதலாளித்துவத்தை வீழ்த்துவதற்காக நடைபெறும் புரட்சிகரமான போராட்டத்தில் எல்லா நாடுகளிலும் உள்ள உழைக்கும் மக்களை உறுதியாக ஈர்த்து, அவர்களைப் பாட்டாளி மக்களோடு இரண்டறக் கலப்பதாகும். ரஷ்யப் பேரரசில் சேர்ந்திருந்த நாடுகளில் உள்ள உழைக்கும் மக்களிடையே, மேம்பட்ட ரஷ்யர்கள் மீது நம்பிக்கையின்மை

இருந்தது: ஜாரின், முதலாளித்துவத்தின் மேம்பட்ட ரஷ்யப் பேரரசின் சகாப்தத்திலிருந்து இந்த அவநம்பிக்கை வாரிசாகப் பெறப்பட்டிருந்தது; சோவியத் ரஷ்யாவோடு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பரிச்சயத்தின் செல்வாக்கால் இது மறைந்து போய்க் கொண்டிருக்கிறது; ஆனால், எல்லா நாடுகளிடையிலும், உழைக்கும் மக்களில் எல்லாப்பகுதிகளிடையிலும் இந்த அவநம்பிக்கை இன்னும் பூரணமாக மறைந்து போய் விடவில்லை. ஆகவே, தேசிய உணர்வுகள் சம்பந்தமாக விசேஷமாக உஷார் தன்மையைக் காட்ட வேண்டியது அவசியமாகும்; எதார்த்தத்தில் சமத்துவத்தைக் கொடுக்கிற, பிரிந்து போவதற்கும் சுதந்திரம் கொடுக்கிற ஒரு கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண்டும்; அப்பொழுது தான், இந்த அவநம்பிக்கைக்கு ஆதாரமாக இருப்பவைகளை அகற்ற முடியும்; மேலும் எல்லா நாடுகளின் சோவியத் குடியரசுகளும் தாமாகவே மனமுவந்து நெருக்கமாக ஒன்று சேர்ந்த ஒன்றியத்தை அடைய முடியும், மத்திய கால, முதலாளித்துவ ஒடுக்கு முறையை எதிர்த்து நடைபெறும் போராட்டத்தில் எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் கல்வி போதிப்பதற்கும், சுயேச்சையான ஸ்தாபனங்களை அமைப்பதற்கும், உதவி செய்வதன் மூலமாகவும், அத்துடன் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த, அல்லது முழு உரிமையையும் பெறாமல் இந்த நாடுகளின் மொழி, இலக்கியம் ஆகியவற்றை வளர்ப்பதற்கு உதவி செய்வதன் மூலமாகவும் பின் தங்கிய, பலஹீனமான நாடுகளுக்கு உதவி செய்ய வேண்டும்.

மதத்தின்பால் உள்ள கொள்கை சம்பந்தப்பட்ட வரையிலும், பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தின் (ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின்) கடமையானது மாதாகோவிலை அரசிலிருந்தும், பள்ளிக் கூடத்தை மாதாகோவிலிலிருந்தும் தனியே பிரிப்பது என்று சட்டங்களைப் பிறப்பிப்பதோடு நின்று விடக்கூடாது; அதாவது முதலாளித்துவ ஜனநாயக வாதிகள் வாக்குறுதி கொடுத்த நடவடிக்கைகளோடு நின்று விடக்கூடாது; ஏனெனில் அவர்கள் உலகத்தில் எந்த இடத்திலும் ஒருக்காலத்திலும் முழுமையாக நிறைவேற்றியதே கிடையாது; இதற்குக் காரணம், மூலதனத்திற்கும், மதம் சம்பந்தமான பிரச்சாரத்திற்கும் இடையே ஏராளமான, பலவகைப்பட்ட பிணைப்புகள் உண்மையில் நிலவில் இருக்கின்றன. பாட்டாளி மக்களின் சர்வாதிகாரமானது சுரண்டும் வர்க்கங்களுக்கும்— நிலச்சுவான்தார்களுக்கும், முதலாளிகளுக்கும்— பொதுமக்களை அறியாமையில் அமுக்கி வைத்திருக்கிற மதப்பிரச்சாரத்தின் ஸ்தாபனத்திற்கும் இடையே உள்ள பிணைப்பைப் பரிபூரணமாக அழிக்க வேண்டும். பாட்டாளி

மக்களின் சர்வாதிகாரமானது சமயத் தப்பெண்ணங்களிலிருந்து உழைப்பாளி மக்களின் உண்மையான விடுதலையை முரணில்லாமல் செயல் படுத்த வேண்டும். பிரச்சாரத்தின் மூலமாகவும், பொது மக்களின் அரசியல் உணர்வை உயர்த்துவதன் மூலமாகவும் இவ்வாறு செய்யும் போது, அதே சமயத்தில் பொதுமக்களில் மதத்தில் பற்றுதலை வைத்திருக்கும் பகுதிகளின் மனதைப் புண் படுத்துவதையும், மதவெறி அதிகரிப்பதற்கு ஏதுவாக இருப்பதையும் கவனமாகத் தவிர்க்க வேண்டும்.

பொதுஜன கல்வித்துறையில் ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் நோக்கம் என்ன வென்றால், 1917-ல் அக்டோபர் புரட்சியோடு துவங் ப்பட்ட பணியைப் பூர்த்தி செய்வதாகும்; மேலும், முதலாளித்துவத்தின் வர்க்க ஆட்சியின் ஒரு கருவியாக இருந்ததிலிருந்து, அந்த ஆட்சியை வீழ்த்துவதற்கு ஒரு கருவியாக, சமுதாயத்தை வர்க்கங்களாகப் பிரிவினை செய்திருப்பதைப் பூரணமாக ஒழிக்கும் ஒரு கருவியாக பள்ளிக்கூடத்தை மாற்ற வேண்டும்.

பாட்டாளி மக்களின் சர்வாதிகார கால கட்டத்தில், அதாவது கம்யூனிஸத்தை முழுமையாக அடைவதற்கான நிலைமைகளைத் தயார் செய்யும் கால கட்டத்தில் பள்ளிக்கூடமானது கம்யூனிஸத்தின் பொதுவான கோட்பாடுகளைப் பரப்ப உதவும் வாகனமாக மாத்திரம் இருக்கக் கூடாது; அத்துடன் கம்யூனிஸத்தை நிர்மாணிப்பதில் முழுச்சக்தியையும் பெற்றிருக்கும் ஒரு தலைமுறைக்குப் பயிற்சி கொடுக்கும் பொருட்டு, உழைக்கும் மக்களில் அரைப்பாட்டாளி மக்கள் மீதும், பாட்டாளி மக்கள் அல்லாத பகுதிகள் மீதும் பாட்டாளி மக்களின் சித்தாந்த இயல், ஸ்தாபன இயல், கல்வியியல் செல்வாக்கைச் செலுத்தும் ஒரு வாகனமாகவும் இருக்க வேண்டும்.

தற்சமயத்திற்கு இந்தத் துறையில் உடனடியான கடமைகள் பின்வருமாறு:

(1) பதினாறு வயது வரையிலும் ஆண், பெண் குழந்தைகள் அனைவருக்கும் பொதுவான கல்வியையும், பல தொழில் நுணுக்கப் பயிற்சிக் கல்வியையும் (உற்பத்தித் துறையின் எல்லாக்கிளைகளோடும் தத்துவ ரீதியாகவும், நடைமுறையிலும் பரிச்சயம் ஏற்படுத்திக் கொடுப்பது) இலவசமாகவும், கட்டாயமாகவும் கொடுப்பது.

(2) பள்ளிப்படிப்பிற்கும், சமூக உற்பத்தி சார்ந்த உழைப்பிற்தும் இடையே மிக நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவது.

(3) அரசின் செலவில் பள்ளிக்கூடத்தில் கல்விகற்கும் குழந்தைகள் அனைவருக்கும் உணவு, உடை, புத்தகங்கள், மற்ற கல்விக்குத் தேவையான பொருள்களை வழங்க ஏற்பாடு செய்வது.

(4) பள்ளிக்கூட ஆசிரியர்களிடையே மேலும் அதிகமாக கிளர்ச்சி, பிரச்சாரம் செய்வது.

(5) கம்யூனிஸ்டுக் கருத்துக்களைப் பெற்றிருக்கும் புதிய ஆசிரியர்களைப் பயிற்சி கொடுத்து தயார் செய்வது.

(6) கல்வித்துறைப் பணியில் உழைக்கும் மக்களைத் தீவிர மாகப் பங்கு கொள்ளும்படி ஈர்ப்பது (பொதுஜன கல்விக்குழுக்களை வளர்ப்பது, கல்வி அறிவு பெற்றிருப்பவர்களைத் திரட்டுவது போன்றவை)

(7) தொழிலாளர்களும், உழைக்கும் உழவர்களும் சுயமாகவே கல்வி கற்பது, சுயமாகவே வளர்த்துக் கொள்வது ஆகிய விஷயத் தில் சோவியத் அதிகாரம் எல்லா விதமான உதவிகளையும் அளிப்பது (நூலகங்கள், வயதானவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுக்க பள்ளிக்கூடங்களை அமைப்பது, மக்கள் சர்வகலாசாலைகள், சொற்பொழிவுகள் மூலமாக கல்விகற்றுக் கொடுப்பது, சினிமா, ஸ்டுடியோ ஆகியவைகளை அமைப்பது.)

(8) கம்யூனிஸ்ட் கருத்துக்களை மிக விரிவாகப் பிரச்சாரம் செய்வதை வளர்ப்பது.

ரஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சியானது சோவியத் சர்க்காரின் பொது வான கடமைகளை மிக விரிவாக வளர்க்கும் போது, தற்சமயம் அவைகளைப் பின் வருமாறு நிர்ணயிக்கிறது.

பொருளாதாரத் துறையில்

சோவியத் அதிகாரத்தின் இன்றைய கடமை பின் வருமாறு:

(1) முதலாளிகளின் உரிமைகளை அபகரிக்கும் பணியை உறுதியாகத் தொடர்ந்து செய்து முடித்து, உற்பத்தி சாதனங் களையும், விநியோகத்தையும் சோவியத் குடியரசின் சொத்தாக மாற்றுவது; அதாவது உழைக்கும் மக்களின் பொதுச் சொத்தாக மாற்றுவது; இந்தப் பணி பெரும்பாலும் பூர்த்தி செய்யப் பட்டிருக்கிறது.

(2) உழைக்கும் மக்களிடையே தோழமையான கட்டுப் பாட்டை வளர்ப்பதிலும், பலப்படுத்துவதிலும் விசேஷமாக அதிகக் கவனத்தைச் செலுத்துவது; மேலும், ஒவ்வொரு துறை யிலும் அவர்களுடைய முன் முயற்சியையும், பொறுப்புணர்ச்சியை யும் தட்டி எழுப்புவது, முதலாளித்துவத்தைப் பூரணமாக வெல்வதற்கும், உற்பத்தி சாதனங்களின் தனி உடமை ஆட்சியால் உருவாக்கப்பட்டிருந்த பழக்க வழக்கங்களைப் பூரணமாக வெல் வதற்கும் இது மிக முக்கியமானதாகும், அல்லது ஒரே ஒரு வழி வகையாகவும் இருக்கிறது. மெதுவாகவும், விடாப்பிடியாகத் தொடர்ச்சியாகவும் பொது மக்களுக்கு புதிய முறையில் மறு கல்வி போதிப்பதன் மூலமாகத்தான் இந்த நோக்கத்தைச் சாதிக்க முடியும்; நிலச்சுவான்தார்கள், முதலாளிகள், வியாபாரிகள் ஆகிய வர்கள் எதார்த்தத்தில் அகற்றப் பட்டிருப்பதைப் பொது மக்கள் நேரில் பார்த்திருப்பதால் புதிய முறையில் மறு கல்வி போதிப்பது இப்பொழுது சாத்தியமாகி இருக்கிறது என்பது மட்டுமல்ல, தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியவர்களின் நடை முறை அனுபவத்தின் மூலமாக ஆயிரக்கணக்கான வழிகளில் அவர்க ளாகவே எதார்த்தத்தில் இதைச் செய்து வருகிறார்கள், உழைக்கும் மக்களை தொழிலாளர் சங்கங்களில் ஸ்தாபன ரீதியாக மேலும் அமைப்பதற்காக வேலைசெய்ய வேண்டியது இந்த விஷயத்தில் மிக முக்கியமான கடமையாகும்; இந்த ஸ்தாபனம் சோவியத் அதிகாரத்தின் கீழ் வேகமாக வளர்ந்திருப்பது போல், உலகத்தின் எந்த இடத்திலும் இதற்கு முன்பு வளர்ச்சியடைந்ததே கிடை யாது; வார்த்தையின் நேர் பொருள்படி, எல்லா உழைக்கும் மக்களும் சரியாக அமைக்கப்பட்ட, மையப்படுத்தப்பட்ட, கட்டுப்பாட்டை நிலை நாட்டியிருக்கிற தொழிலாளர் சங்கங்களில் சேர்ப்பது வரையிலும் இதை வளர்த்துக் கொண்டு போக வேண்டும். பழைய, மாறுதலே இல்லாத தொழிலாளர் சங்க இயக்கத்தின் வடிவங்களில் நம்மை நாமே அடைத்து வைத்துக் கொள்ளக்கூடாது;. அதற்குமாறாக, ஒரு புறத்தில் தொழிலாளர் சங்கங்களை பொருளாதாரத்தை நிர்வாகம் செய்கிற, நடைமுறை களின் பலன்களைப் பரிசீலனை செய்வதற்காக நாம் எடுக்கும் ஒவ் வொரு நடவடிக்கையையும் கவனமாகச் சரி பார்க்கிற ஸ்தாபனங் களாக முறையாக மாற்ற வேண்டும், தொழிலாளர் சங்கங்களுக் கும், தலையாய பொருளாதாரக் குழுவுக்கும், தொழிலாளர் அமைச்சரகத்திற்கும், பின்னர் அரசு நிர்வாகத்தின் மற்ற எல்லாக் கிளைகளுக்கும் இடையே இன்னும் அதிகமான, பலமான பிணைப் புகள் இருக்க வேண்டும்; மறு புறத்தில், பெரும் அளவிற்கு தொழி லாளர் சங்கங்கள் ஒட்டு மொத்தமாக உழைப்பாளி மக்களுக்கு உழைப்புபற்றிய, சோஷலிஸ்டுக்கல்வியைப் போதிக்கும் ஸ்தாபனங்

களாக மாற வேண்டும்; அப்பொழுதுதான், நிர்வாகத்தில் பங்கெடுத்துக்கொள்வதிலிருந்து கிடைத்த நடைமுறை அனுபவம் தொழிலாளர்களின் முன்னணிப் படையின் கட்டுப்பாட்டின் கீழ் பெரிதும் பின் தங்கியிருக்கும் தொழிலாளர் பகுதிகளுக்கும் பரவ முடியும்.

(3) அடிப்படையான கடமைகளில் ஒன்று என்னவென்றால், உழைப்பின் உற்பத்தித் திறனின் மட்டத்தை உயர்த்துவதாகும்; ஏனெனில், இதைச் செய்யாமல், கம்யூனிஸத்திற்கு பூரணமாக மாறிச் செல்வது சாத்தியமல்ல, பொது மக்களுக்கு கல்வி போதிப்பது, அவர்களுடைய கலாச்சார மட்டத்தை உயர்த்துவது ஆகியவை பற்றிய நீண்ட காலப்பணியோடு கூடவே, இந்த லட்சியத்தை அடைவதற்கு உடனடியாகவும், விரிவாகவும், பல வகையிலும் முதலாளித்துவத்திலிருந்து வாரிசாக நாம் பெற்றிருக்கும் நிபுணர்களை விஞ்ஞானத் துறையிலும், தொழில் நுணுக்கத் துறையிலும் வேலைக்கு அமர்த்த வேண்டும்; இவர்கள் விதிமுறையாக, முதலாளித்துவ உலகக் கண்ணோட்டத்தையும், பழக்க வழக்கங்களையும் உடையவர்களாக இருக்கிறார்கள். தொழிலாளர் சங்க ஸ்தாபனங்களோடு, நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டு கட்சியானது அதன் பழைய கொள்கையைத் தொடர்ந்து கடைப் பிடிக்க வேண்டும்; அதாவது ஒரு புறத்தில், பொது மக்களில் இந்த முதலாளித்துவப் பகுதிக்கு அரசியல் சலுகைகளைக் கொஞ்சம் கூட விட்டுக் கொடுக்கக் கூடாது; இந்தப் பகுதியின் தரப்பிலிருந்து எடுக்கப்படும் எந்த எதிர்ப்புரட்சி நடவடிக்கையையும் ஈவிரக்கமின்றி நசுக்க வேண்டும்; மறுபுறத்தில், முதலாளித்துவ நிபுணர்களிடமிருந்து கற்றுக் கொள்ளாமலேயே, அவர்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளாமலேயே, அவர்கள் பக்கத்திலேயே வேலை செய்து நீண்ட காலம் வரையிலும் பயிற்சி பெறாமலேயே உழைப்பாளி மக்கள் முதலாளித்துவத்தையும், முதலாளித்துவ சமூக அமைப்பையும் வெற்றி கொள்ளக் கூடிய சக்தி படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்ற போலி தீவிர வாதத்தை—உண்மையில் அறியாமை நிறைந்த, இறுமாப்புடைய கருத்தை—எதிர்த்து கொஞ்சம் கூடத் தளரவிடாமல் தொடர்ச்சியாகப் போராட்டத்தை நடத்த வேண்டும்.

முழுமையாக கம்யூனிஸத்தை அடைவதும், எல்லா விதமான வேலைக்கும் சம ஊதியத்தைக் கொடுப்பதும் நமது இறுதி இலட்சியமாக இருந்த போதிலும் கூட, இன்றைய கால கட்டத்தில் உடனே இந்தச் சமத்துவத்தை நாம் புகுத்த முடியாது: ஏனெனில், இப்பொழுது முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்திற்கு மாறிச்

செல்வதில் முதல்படி நடவடிக்கைகளைத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, ஒரு குறிப்பிட்ட காலகட்டம் வரையிலும் முன்பு வேலை செய்ததைக் காட்டிலும் மோசமாக வேலை செய்யாமல் இருக்கும்படி தூண்டுவதற்காக, ஏன் முன்னைக் காட்டிலும் நல்ல முறையில் வேலை செய்யும்படி தூண்டுவதற்காகவும் நிபுணர்களுக்கு அதிகமாக ஊதியம் கொடுக்கும் முறையை நாம் நீடித்துக் கொண்டு போக வேண்டும்; இதே நோக்கத்தைக் கருத்தில் வைத்துக் கொண்டு மிகவும் வெற்றிகரமாகச் செய்து முடித்த வேலைக்கு குறிப்பாக வெற்றிகரமாகச் செய்து முடித்த ஸ்தாபன அமைப்பு வேலைக்கு போனஸ் கொடுக்கும் முறையையும் நாம் நிராகரிக்கக் கூடாது; முழுமையான கம்யூனிஸ அமைப்பு முறையின் கீழ் போனஸ் கொடுப்பதை அனுமதிக்க முடியாது; ஆனால், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்திற்கு மாறிச் செல்லும் கால கட்டத்தில் தத்துவமும், சோவியத் அதிகாரத்தின் ஓராண்டு அனுபவமும் ஆதாரமாக நிரூபித்துக் காட்டுவதுபோல் போனஸ் கொடுப்பதைத் தவிர்க்க முடியாது.

மேலும், அரசியல் ரீதியில் உணர்வு படைத்த கம்யூனிஸ்டுகளின் தலைமையில் உள்ள சாதாரண தொழிலாளர்களோடு கைகோர்த்து வேலை செய்வதால் சிருஷ்டிக்கப்பட்ட தோழமையான சூழ்நிலைமை முதலாளித்துவ நிபுணர்களைச் சுற்றிலும் இருக்கும்படி செய்வதற்கு நாம் முரணில்லாமல் தொடர்ச்சியாகப் பாடு பட வேண்டும்; தவிர்க்க முடியாமல் தனிநபர்கள் செய்யும் தவறுதல்களைக் கண்டு நாம் அஞ்சி நடு நடுங்கக் கூடாது; அதே சமயத்தில் அதற்கு மாறாக, தன்னை வளப்படுத்திக் கொள்வதற்காக விஞ்ஞானத்தைப் பயன்படுத்திக் கொள்வதும், மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு விஞ்ஞானத்தைப் பயன் படுத்திக் கொள்வதும் வெறுப்பூட்டக் கூடிய நிகழ்ச்சி என்ற உணர்வையும், உழைக்கும் மக்கள் அனைவருக்கும் தெரியும்படி செய்யும் நோக்கத்திற்காக விஞ்ஞானத்தைப் பயன் படுத்துவது ஒரு உன்னதமான லட்சியமாகும் என்ற உணர்வையும் விஞ்ஞான அறிவைப் பெற்றிருக்கும் மக்களிடையே தட்டி எழுப்புவதற்கு நாம் பொறுமையாக முயல வேண்டும்.

(4) கம்யூனிஸத்தை நிர்மாணம் செய்வது என்றால், அதிக அளவிற்கு சாத்தியமான முறையிலும், கண்டிப்பான முறையிலும் உழைப்பை தேசிய ரீதியில் மையப்படுத்த வேண்டியது நிச்சயமாகத் தேவைப்படுகிறது; இதைச் செய்ய ஸ்தலத்தோடு பிணைக்கப்பட்டுள்ள சிறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் சிதறிக்கிடப்பதையும், பிளவுபட்டிருப்பதையும் போக்க

வேண்டும் என்பது ஆராயமலே தெரிகிறது; மூலதனத்தின் பலத்திற்கும், தொழிலாளர்களின் பலஹீனத்திற்கும் மூல ஊற்ருக இருந்த காரணங்களில் இதுவும் ஒன்ருகும். சிறு தொழில் களில் ஈடுபட்டிருப்பவர்களின் கூட்டுறவுக் குழுவின் குறுகிய தன்மையையும், ஒரு எல்லைக்குட் பட்டிருக்கும் குறைபாடையும் எதிர்த்து நடத்தும் போராட்டமானது, அதன் தன் அகங்காரத் தையும் எதிர்த்து நடத்தும் போராட்டமானது நகரத்திற்கும், நாட்டுப்புறத்திற்கும் இடையே உள்ள எதிரிடையை நீக்குவதற் கான போராட்டத்தோடு நெருங்கிய தொடர்புள்ளதாக இருக் கிறது; அது பல கஷ்டங்களை முன் வைக்கிறது; மக்களின் உழைப் பின் உற்பத்தித் திறமையை கணிசமான அளவு முதலில் உயர்த் தாமல் விரிவான அளவில் அதைத் துவங்க முடியாது. ஆயினும், உடனே இந்தப் பணியைத் துவங்க வேண்டும்; பல்வேறு தொழில் களில், பல்வேறு இடங்களில் மேற் கொண்ட பல வகைப்பட்ட நடவடிக்கைகளின் பலன்களை ஒப்பிட்டுப்பார்க்கும் பொருட்டு பரிசோதனை செய்து பார்ப்பதற்காகச் சிறிய அளவிலும், ஸ்தல ரீதியாகவும் ஒரு துவக்கத்தை செய்ய வேண்டும். சில குறிப்பிட்ட பொதுப் பணிகளுக்காக உடல் உறுதிபடைத்த மக்கள் அனைவரை யும் சோவியத் சர்க்கார் திரட்ட வேண்டும்; இதில் தொழிலாளர் சங்கங்கள் பங்கு கொள்ள வேண்டும்; இது வரையிலும் செய்து வந்ததைக் காட்டிலும் அதிக விரிவான முறையிலும் முறை யாகவும் இதை நடை முறையில் செயல் படுத்த வேண்டும்.

(5) வினியோகம் செய்யும் துறையில், சோவியத் அதிகாரத் தின் இன்றைய கடமை என்ன வென்ருல், உறுதியாக வியாபாரத் தைத்தொடர்ந்து அகற்றி, அதற்குப் பதிலாக திட்டம் போட்டு, ஸ்தாபன ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் பொருள்களை வினியோகம் செய்ய வேண்டும். குறிக்கோள் என்ன வென்ருல், மக்கள் அனைவரையும் உற்பத்தியாளர்கள், உபயோகிப்பவர்கள் ஆகியவர்களின் கம்யூன்களில் ஸ்தாபன ரீதியாக அமைப்பதாகும்; இவை எல்லா அத்தியாவசியப் பொருள்களையும் வேகமாகவும், முறையாகவும், சிக்கனமாகவும் குறைந்த பட்சம் உழைப்பில் வினியோகம் செய்யும் கருவியைக் கண்டிப்பான முறையில் மையப் படுத்துவதன் மூலமாக வினியோகம் செய்ய முடியும். இந்த லட்சியத்தை அடைவதற்கு கூட்டுறவுக் கழகங்கள் மாறிச் செல்லும் கட்டத்திற்கு ஒரு கருவியாகப் பயன்படும். இவைகளைப் பயன் படுத்துவது, முதலாளித்துவ நிபுணர்களைப் பயன் படுத்துவதற்குச் சமமாக இருக்கும்; ஏனெனில் முதலாளித்துவத்திடமிருந்து நாம் வாரிசாகப் பெற்றிருக்கும் கூட்டுறவு சங்கங்கள் முதலாளித்துவ ரீதியில் சிந்திக்கிறவர்களும், வியாபாரப் பழக்க வழக்கங்கள் உள்ள

வர்களுமான நபர்கள் கையில் இருக்கின்றன. ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியானது கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுறவு சங்கங்களில் கட்டாயம் வேலை செய்ய வேண்டும்; என்ற கொள்கையை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும். மேலும், தொழிலாளர் சங்கங்களின் உதவியோடு அவர்களை கம்யூனிஸ்டு உணர்வில் வளர்க்க வேண்டும்; அவைகளைச் சேர்ந்த உழைக்கும் மக்களின் முன் முயற்சியையும், கட்டுப்பாட்டையும் வளர்க்க வேண்டும்; மக்கள் அனைவரையும் அதில் சேரும்படி செய்ய முயல வேண்டும்; இந்தக் கூட்டுறவு சங்கங்களும் சோவியத் குடியரசு முழுவதையும் அணைத்துக் கொள்கிற ஒரே ஒரு கூட்டுறவு சங்கமாக இரண்டறக் கலக்க வேண்டும். கடைசியாக, மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், பாட்டாளி மக்களின் மேலாதிக்கம் வகிக்கும் செல்வாக்கை, மற்ற உழைப்பாளி மக்கள் மீது நிரந்தரமாக வைத்திருக்க வேண்டும்; பழைய முதலாளித்துவ ரகத்தைச் சேர்ந்த சிறு முதலாளித்துவ கூட்டுறவு சங்க முறையிலிருந்து, பாட்டாளி மக்களும், அரை பாட்டாளி மக்களும் தலைமை தாங்குகிற உற்பத்தியாளர்கள், உபயோகிப்பவர்கள் ஆகியவர்களின் கம்யூன்களுக்கு மாறிச் செல்வதற்கு உதவியாக இருக்கும் என்ற நோக்கத்தோடு எல்லா இடங்களிலும் பல வகைப்பட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்.

(6) முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்திற்கு மாறிச் செல்லும் முதல் கால கட்டத்தில் ஒரே வீச்சில் பணத்தை ஒழிப்பது சாத்தியமல்ல. அதன் விளைவாக, பொதுமக்களிடையே உள்ள முதலாளித்துவ நபர்கள் சொந்தமாக வைத்திருக்கும் தாள் நாணயத்தை உலக வாணிகம், லாபம் சம்பாதிப்பது, உழைக்கும் மக்களைக் கொள்ளையடிப்பது ஆகிய நோக்கங்களுக்காகத் தொடர்ந்து உபயோகிக்கிறார்கள்— இந்த நாணயமாக மாற்றக் கூடிய அடையாளப் பணத்தின் மூலமாக சுரண்டுகிறவர்கள் பொதுச் செல்வத்தைப் பெறும் உரிமையைப் பெறுகிறார்கள். முதலாளித்துவக் கொள்ளையின் இந்த மீதமிச்சங்களை எதிர்த்துப் போராடுவதற்கு பாங்குகளை தேச உடமையாக்குவது மாத்திரம் போதுமான நடவடிக்கை அல்ல. பணத்தை ஒழிப்பதற்குத் தயாரிப்புகளைச் செய்ய மிகவும் தீவிரமான நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்கு ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி முடிந்த வரையிலும் வேகமாக முயற்சி எடுத்துக் கொள்ளும்; முதலாவதாகவும், முக்கியமானதாகவும் அதற்குப் பதிலாக சேமிப்பு பாங்கு புத்தகம், செக்குகள், குறுகிய கால நாணயத் தாள்களை வைத்திருப்பவர்கள் பொதுக் கிடங்குகளிலிருந்து சாமான்களை வாங்கும் உரிமை வழங்குவது, ஆகியவற்றைப் புகுத்துவதோடு பாங்குகளில்

பணத்தைப் போடும்படி கட்டாயப்படுத்துவது போன்ற நடவடிக்கைகளும் எடுக்கப்படும், தயாரிப்புகளைச் செய்யும் போதும், இந்த நடவடிக்கைகளைச் செயல் படுத்தும் போதும் கிடைக்கும் நடைமுறை அனுபவத்திலிருந்து இந்த நடவடிக்கைகளும், இது போன்ற மற்ற நடவடிக்கைகளும் இது மிகவும் உகந்தது என்பதை எடுத்துக் காட்டும்.

(7) பொது நிதித்துறையில், ரஷ்ய சம்யூனிஸ்ட் கட்சி சாத்தியமானவற்றில் குறிப்பிட்டப்படி நில வீதப்படி விதிப்பையும், சொத்து வரி விதிப்பையும், செயல்படுத்தும். ஆனால், நிலம், பெரும்பாலான தொழிற்சாலைகள், மற்ற தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றில் தனி உடமையை ஒழித்திருப்பதால் இந்த வரி விதிப்பின் எண்ணிக்கை ஏராளமாக இருக்க முடியாது. பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம், முக்கியமான உற்பத்தி சாதனங்களை அரசு உடமையாக வைத்திருப்பது என்ற சகாப்தத்தில் அரசின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, அரசின் பொது நிதிகள் பல்வேறு அரசின் ஏகபோகங்களிலிருந்து ஒரு குறிப்பிட்ட வருவாயை ஒதுக்குவது என்பதன் அடிப்படையில் இருக்க வேண்டும். பண்ட மாற்றுதலைச் சரியாக முறைப்படுத்தினால் தான் வருவாயையும், செலவையும் சமனப்படுத்த முடியும்; உற்பத்தியாளர்கள், உபயோகிப்பவர்கள் ஆகியவர்களின் கம்யூன்களை அமைப்பதன் மூலமாகவும், சோவியத் சர்க்காரின் உடனடியான முக்கியமான நோக்கமாக இருக்கும் போக்குவரத்து அமைப்பை முந்திய நிலைக்குக் கொண்டு வருவதன் மூலமாகவும் இதைச் சாதிக்க முடியும்.

### விவசாயத் துறையில்

நிலத்தில் தனி உடமையை ஒழித்த பிறகு, நிலச்சுவான்தாரிகளின் உரிமையை (அநேகமாக) பூரணமாக அபகரித்த பிறகு, நிலத்தை சோஷலிஸ மயமாக்குவது பற்றிய சட்டத்தைப் பிரகடனம் செய்த பிறகு, பொதுச் சொத்தாகப் பாவிக்கப்படும் நிலத்தில் பெரிய அளவில் விவசாயம் செய்வதே நல்லது என்று இந்தப் பிரகடனம் கருதுவதாலும், சோவியத் அதிகாரத்தின் தலையாய கடமை என்னவென்றால், இதைச் செயல்படுத்துவதற்கு பலனளிக்கக் கூடிய, நடைமுறையில் சாத்தியமான மாறிச் செல்லும் நடவடிக்கையைக் கண்டு பிடித்து, நடைமுறையில் சோதித்துப்பார்க்க வேண்டும்.

இந்த நிலைமையில் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் விவசாயக் கொள்கையில் முக்கியமான பாதையும், வழிகாட்டும் கொள்கையும்

என்னவென்றால், நாட்டுப்புறத்திலுள்ள பாட்டாளி மக்களையும், அரைப் பாட்டாளி மக்களையும் சார்ந்திருக்க முயல்வது என்பது இன்னும் மாறாமல் அப்படியே நீடிக்கிறது. அவர்களை முதலாவதாகவும் முக்கியமாகவும் ஒரு சுயேச்சையான சக்தியாக அமைக்க வேண்டும்; அவர்களை நகர பாட்டாளிகளோடு நெருக்கமாகக் கொண்டுவர வேண்டும்; கிராமப்புற முதலாளித்துவ சிறு சொத்துடைமை நலன்களின் செல்வாக்கிலிருந்து அவர்களைப் பிரிக்க வேண்டும். ஏழை விவசாயிகளின் குழுக்களை அமைப்பது இந்தத் திசையை நோக்கி எடுக்கும் முதல் நடவடிக்கையாகும்; கிராமங்களில் கட்சிக் குழுக்களை அமைப்பது, குலாக்குகளை நீக்குவதற்காக சோவியத் பிரதிநிதிகளின் மறு தேர்தலை நடத்துவது, கிராமப்புறத்திலுள்ள பாட்டாளி மக்களுக்காகவும், அரைப் பாட்டாளி மக்களுக்காகவும் விசேஷ ரக தொழிலாளர் சங்கங்களை அமைப்பது—ஆகிய இவைகளையும் இது போன்ற மற்ற நடவடிக்கைகளையும் தவறாமல் நடைமுறையில் செயல்படுத்த வேண்டும்.

கிராமப்புற முதலாளிகளான குலாக்குகளைப் பொறுத்த வரையிலும், ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை என்னவென்றால் சுரண்டுவதற்கு அவர்கள் எடுக்கும் முயற்சியை எதிர்த்து இறுதியான போராட்டத்தை நடத்துவது, சோவியத்தின் சோஷலிஸ்டுக் கொள்கைக்கு அவர்கள் கொடுக்கும் எதிர்ப்பை நசுக்குவது என்பதாகும்.

நடுத்தர விவசாயிகளைப் பொறுத்த வரையிலும், ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை என்னவென்றால், அவர்கள் பால் எச்சரிக்கையாக இருக்கிற ஒரு கொள்கையைக் கடைப்பிடிப்பது என்பதேயாகும்; குலாக்குகளோடு சேர்த்து அவர்களைக் குழப்பக் கூடாது; அவர்களுக்கு எதிராக கட்டாயப்படுத்தும் நடவடிக்கைகளும் எடுக்கக் கூடாது; அவர்கள் வகிக்கும் வர்க்க நிலையின் காரணமாக, நடுத்தர விவசாயிகள் சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் கால கட்டத்தில் பாட்டாளி மக்களின் சர்க்காருக்கு நேச சக்தியாக இருக்க முடியும், அல்லது குறைந்த பட்சம் அவர்கள் நடு நிலைமை வகிப்பவர்களாக இருக்க முடியும். ஆகவே, நடுத்தர விவசாயிகளிடம் அரை குறையான முறிவுகளும், ஊசலாட்டங்களும் தவிர்க்க முடியாத வகையில் இருக்கின்றன என்றாலும் கூட, அவர்களோடு உடன்பாடு செய்து கொள்வதற்கு நாம் தொடர்ச்சியாக முயல வேண்டும்; அவர்களுடைய எல்லா விருப்பங்கள் பால் அக்கறை காட்டுகிற கண்ணோட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்; சோஷலிஸ்டு சீர்த்திருத்தங்களை நிறைவேற்றும் பொழுது தேர்ந்தெடுக்கும் வழி வகையில், அவர்களுக்கு சலுகைகளையும்

கொடுக்க வேண்டும். இந்த விஷயத்தில், சோவியத் அதிகாரத்தின் பிரதிநிதிகளில் தவறு செய்கிறவர்களை எதிர்த்து நடத்தும் போராட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்; இவர்கள் கம்யூனிஸ்ட் என்ற சிறப்புப் பட்டத்தைச் சாதகமாக மோசமான முறையில் பயன்படுத்திக் கொண்டு, கம்யூனிஸ்டுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு கொள்கையை, அதாவது அதிகார வர்க்க மட்டு மீறிய பணத்துறை சார்பு கொள்கையைக் கடைப் பிடித்து வருகிறார்கள். இத்தகைய நபர்களை ஈவிரக்கமின்றி துரத்த வேண்டும்; தொழிலாளர் சங்கங்கள், மற்றும் இதர வழி வகைகள் மூலமாகக் கண்டிப்பான கட்டுப்பாட்டை நிலை நாட்ட வேண்டும்.

கம்யூனிஸ்டு விவசாயி முறைக்கு மாறிச் செல்லும் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட வரையிலும், ரஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சியானது ஏற்கெனவே உருவாகியிருக்கும் மூன்று முக்கியமான நடவடிக்கைகளை—அதாவது, நிலத்தைக் கூட்டு முறையில் உழுவதற்காக அரசாங்கப் பண்ணைகள், விவசாய கம்யூன்கள், சங்கங்கள் (இத்துடன் கூட்டுறவுச் சங்கங்கள்) ஆகியவைகளை நடைமுறையில் பரிசோதனை செய்து பார்க்கும்; அவைகளை விரிவாகவும், பிசகற்ற முறையிலும் செயல்படுத்துவதற்கு உத்தரவாதத்தை ஏற்படுத்துவதில் கவனமாக இருக்க வேண்டும். குறிப்பாக, இத்தகைய, புதிய வடிவத்தில் உள்ள கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதில் விவசாயிகள் தாங்களாகவே பங்கெடுத்துக் கொள்ளும்படி செய்வதை வளர்க்கும் வழி வகைகள் சம்பந்தமாகவும், உழைக்கும் விவசாயிகளின் ஸ்தாபனம் கீழிருந்து கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கும், தோழமையான கட்டுப்பாட்டை நிலை நாட்டுவதற்கும் உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண்டும்.

பெட்ரோ கிராட்ஸ்கயா பிராவ்தா''வில்
எண்-48-ல்
1919-ல் பிப்ரவரி 23ல்
பிரசுரிக்கப்பட்டது.

திரட்டப்பட்ட
நூல்கள்.
தொகுப்பு 29,
பக்கம்-105-117.

# ஒரு மகத்தான துவக்கம் என்பதிலிருந்து
## பின்னணியில் உள்ள தொழிலாளர்களின்
## பெரும் செயல் வீரம்
## "கம்யூனிஸ்ட் ஸுபோட்டினிக்குகள்"

கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக்குகளைப் பற்றி முழுமையான, விவரமான தகவலை நான் கொடுத்திருக்கிறேன்; ஏனெனில் இதில் கம்யூனிஸ்ட் நிர்மானத்தின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்றை நாம் சந்தேகத்திற்கு இடமின்றி பார்க்கிறோம்; நமது பத்திரிகைகள் இதுபற்றிய போதிய அளவு கவனத்தைச் செலுத்தவில்லை; நாம் அனைவரும் இதைச் சரியான முறையில் கணிப்பதற்கும் இது வரை தவறியிருக்கிறோம்.

அரசியல் வான வெடிகளைக் குறைத்துக் கொண்டு, எதார்த்த வாழ்க்கையிலிருந்து எடுத்துக் கொண்டு, எதார்த்த வாழ்க்கையால் பரிசோதனை செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் நிர்மானத்தின் மிகவும் எளிமையான, அதே சமயத்தில் உயிருள்ள மெய்யான விவரங்களின் பால் அதிகமாகக் கவனத்தைச் செலுத்த வேண்டும்—இந்த கோஷத்தைத் தான் நாம் அனைவரும், நமது எழுத்தாளர்கள், கிளர்ச்சிக்காரர்கள், பிரச்சாரகர்கள், ஸ்தாபன அமைப்பாளர்கள் இன்னும் மற்றவர்களும் இடைவிடாது திரும்பத் திரும்பக் கூற வேண்டும்.

பாட்டாளி மக்களின் புரட்சிக்குப் பிறகு முதலாவது கால கட்டத்தில் முதலாளிகளின் எதிர்ப்பை வெல்வதிலும், சுரண்டுகிறவர்களை முற்றிலும் முறியடிப்பதிலும், அவர்களின் சதித் திட்டங்களை நசுக்குவதிலும் (பெட்ரோகிராடைச் சரணடையும்படி "அடிமைகளின் எஜமானர்கள் சதித்திட்டம் போட்டிருந்தது போன்றவை" இதில் "கறுப்பு நூற்றுவர்,"[101] காடெட்டுகள்[102] ஆகியவர்களிலிருந்து மென்ஷ்விக்குகள்[103] சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள்[104] ஆகியவர்கள் வரையிலும்) அனைவரும் ஈடுபட்டி

ருந்தார்கள். பெரும்பாலும் முக்கியமான, அடிப்படையான கடமையில் நாம் ஈடுபட்டிருந்தது இயல்பானதும், தவிர்க்க முடியாததுமாகும். ஆனால், இந்தக் கடமையோடு கூடவே ஒரே சமயத்தில் இதே போல் தவிர்க்க முடியாத, மேன்மேலும் கட்டாயமாக இருக்கிற மற்றொரு கடமை முன்னுக்கு வருகிறது; அதாவது காலப் போக்கில் ஆக்க பூர்வமான கம்யூனிஸ நிர்மாணம், புதிய பொருளாதார உறவுகளைச் சிருஷ்டித்தல், ஒரு புதிய சமுதாயத்தைச் சிருஷ்டித்தல் என்ற அதிக முக்கியத்துவம் வாய்ந்த கடமை முன்னுக்கு வருகிறது.

கருத்தைத் தெரிவிப்பதற்கு ஒரு தடவைக்கு மேல் வாய்ப்பு இருந்தது என்றாலும், மற்ற சந்தர்ப்பங்களில் பெட்ரோகிராட் சோவியத்தின் கூட்டத்தில் மார்ச் 17-ம் தேதி ஆற்றிய சொற்பொழிவில் சுட்டிக் காட்டியிருப்பது போல், பாட்டாளி மக்களின் சர்வாதிகாரமானது சுரண்டுகிறவர்களுக்கு எதிராக பலாத்காரத்தை உபயோகிப்பது என்பது மாத்திரமல்ல; முக்கியமாக பலாத்காரத்தை மாத்திரமே உபயோகிப்பது என்பது கூட அல்ல— புரட்சிகரமான பலாத்கார சக்தியை இப்படி உபயோகிப்பதின் பொருளாதார அடிப்படையும், அதன் விளைபயனும், அதன் வெற்றியும் என்னவென்றால், முதலாளித்துவத்தோடு ஒப்பிடும் போது உழைப்பின் ஒரு உயர்ந்த ரக சமூக ஸ்தாபனத்தை பாட்டாளி மக்கள் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள், சிருஷ்டிக்கிறார்கள். இது தான் முக்கியத்துவம் வாய்ந்தது; இது தான் பலத்தின் மூல ஊற்றாகவும், கம்யூனிஸத்தின் வெற்றி தவிர்க்க முடியாதது என்பதற்கு உத்திரவாதமாகவும் இருக்கிறது.

சமூக உழைப்பின் நிலப்பிரபுத்துவ ஸ்தாபனம் குண்டாந்தடியின் கட்டுப்பாட்டின் மேல் சார்ந்து அமர்ந்திருந்தது; அதே சமயத்தில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில நிலப்பிரபுக்களால் கொள்ளையடிக்கப்பட்ட கொடுங்கோன்மைக்கு ஆளாக்கப்பட்டிருந்த உழைக்கும் மக்கள் அறவே அறியாமையில் மூழ்கிக் கிடந்ததார்கள், நசுக்கப்பட்டிருந்தார்கள். சமூக உழைப்பின் முதலாளித்துவ ஸ்தாபனம் பட்டினி பசியைச் சார்ந்து அமைந்திருந்தது; முதலாளித்துவ கலாச்சாரமும், முதலாளித்துவ ஜனநாயகமும் முன்னேற்றமடைந்தாலும்கூட பெரிதும் முன்னேற்றமடைந்த நாகரிகமடைந்த ஜனநாயகத் தன்மை கொண்ட குடியரசுகளில் பெரும் பாலான உழைக்கும் மக்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில முதலாளிகளால் கொள்ளையடிக்கப்பட்டு, கொடுங் கோன்மைக்கு ஆளாக்கப்பட்ட ஏராளமான கூலி அடிமைகளும், அல்லது நசுக்கப்பட்ட விவசாயிகளும் அறியாமையில் மூழ்கிக்

கிடந்தார்கள், அடக்கி ஒடுக்கப்பட்டிருந்தார்கள். சமூக உழைப்பின் கம்யூனிஸ்ட் ஸ்தாபனம்—அதை நோக்கிச் செல்வதில் முதல் படி சோஷலிஸம்—நிலச்சுவான்தார்கள், முதலாளிகள் ஆகியவர்களின் நுகத்தடியை வீசி எறிந்திருக்கும் உழைப்பாளி மக்களின் சுயமான, உணர்வு பூர்வமான, சுயேச்சையான கட்டுப்பாட்டைச் சார்ந்து அமைந்திருக்கிறது—காலப் போக்கில் மேன்மேலும் இவ்வாறு தான் இருக்கும்.

இந்தப் புதிய கட்டுப்பாடு ஆகாயத்திலிருந்து திடீரென்று விழவில்லை, அல்லது பக்தி வேண்டுகோளின் விருப்பத்திலிருந்தும் பிறக்கவில்லை; பெரிய அளவில் உள்ள முதலாளித்துவ உற்பத்தியின் பொருளியல் நிலைமைகளிலிருந்து அது வளர்கிறது. அவைகளிலிருந்து மாத்திரம் வளர்கிறது. அவை இல்லாமல், அவை சாத்தியமல்ல, இந்த பொருளியல் நிலைமைகளுக்கு கருவூலம், அல்லது வாகனம் என்ன வென்றால், ஒரு திட்டவட்டமான சரித்திர பூர்வமான வர்க்கமே; இதை, பெரிய அளவில் உள்ள முதலாளித்துவம் சிருஷ்டித்து ஸ்தாபன ரீதியாக அமைத்து, ஒன்றுபடுத்தி, பயிற்சி கொடுத்து, கல்வி அறிவூட்டி, உரம் பெறச் செய்கிறது. இந்த வர்க்கம் தான் பாட்டாளி மக்கள்.

லத்தின் மொழியைச் சேர்ந்த, விஞ்ஞான ரீதியான, சரித்திர பூர்வமான—தத்துவ ரீதியான "பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம்" என்ற வார்த்தையை எளிய மொழியில் விளக்கினால், அது பின்வருமாறு ;

ஒரு திட்டவட்டமான வர்க்கம் மாத்திரம் தான், அதாவது நகரத்திலுள்ள தொழிலாளர்களும், பொதுவாகத் தொழிற்சாலைகளிலும், இயந்திரத் தொழிலிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் மாத்திரம் தான் மூலதனத்தின் நுகத்தடியை வீழ்த்துவதற்காக நடைபெறும் போராட்டத்திலும், அதை எதார்த்தத்தில் நிறைவேற்றுவதிலும், வெற்றியை உறுதிப்படுத்துகிற, நிலைத்து வைத்திருக்கிற போராட்டத்திலும் புதிய சோஷலிஸ்டு சமூக அமைப்பைச் சிருஷ்டிக்கும் பணியிலும், வர்க்கங்களைப் பரிபூரணமாக ஒழிப்பதற்காக நடைபெறும் போராட்டம் அனைத்திலும் உழைக்கிற, சுரண்டப்பட்ட மக்கள் அனைவருக்கும் தலைமை தாங்க முடியும். (சோஷலிஸத்திற்கும் கம்யூனிஸத்திற்கும் இடையே விஞ்ஞான ரீதியான வித்தியாசம் என்னவென்றால், முதல் வாக்கியமானது, முதலாளித்துவத்திலிருந்து தோன்றிய புதிய சமுதாயத்தின் முதல் சட்டத்தைக் குறிக்கிறது; அதே சமயத்தில், இரண்டாவது அடுத்த, உயர்ந்த சட்டத்தைக் குறிக்கிறது.)

"பேரன்" மஞ்சள் அகிலத்தின் 105 தவறு என்னவென்றால் அதன் தலைவர்கள் வர்க்கப் போராட்டத்தையும், பாட்டாளி மக்களின் தலைமைப் பாத்திரத்தையும் வார்த்தை அளவில் ஏற்றுக் கொள்கிறார்களே தவிர, அதன் தர்க்க ரீதியான முடிவைப்பற்றி சிந்தனை செய்ய அஞ்சுகிறார்கள். தவிர்க்க முடியாத அந்த முடிவைக் கண்டு அவர்கள் பயப்படுகிறார்கள்; இந்த முடிவு குறிப்பாக முதலாளிகளை அச்சுறுத்துகிறது: அவர்களுக்கு இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகவே இருக்கிறது பாட்டாளிமக்களின் சர்வாதிகாரமும் கூட வர்க்கப் போராட்டத்தில் ஒரு கால கட்டம் என்பதை ஏற்றுக் கொள்ள அவர்கள் பயப்படுகிறார்கள்; வர்க்கங்களை ஒழிக்கப்படாமல் இருப்பது வரையிலும் வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாததாகும்; அதே சமயத்தில் வடிவத்தில் மாறுபடுகிறது; முதலாளித்துவத்தை வீழ்த்தியதை தொடர்ந்துள்ள உடனடியான கட்டத்தில் விசேஷமாகப் பயங்கரமானதாகவும், விசேஷமாகச் சிறப்பு இயல்புடையதாகவும் இருக்கிறது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு, பாட்டாளி மக்கள் வர்க்கப் போராட்டத்தை நிறுத்தி விடுவதில்லை; அதற்கு மாறாக, வர்க்கங்கள் அனைத்தும் ஒழிக்கப்படுவது வரையிலும் அதைத் தொடர்ந்து நடத்துகிறது; மாறுபட்ட சூழ்நிலைமைகளின் கீழ், மாறுபட்ட வடிவத்தில், மாறுபட்ட வழி வகைகளில் வர்க்கப் போராட்டத்தை நடத்துகிறது.

"வர்க்கங்களை ஒழிப்பது" என்றால் அதன் அர்த்தம் என்ன? சோஷலிஸ்டுகள் என்று தங்களை அழைத்துக் கொள்கிறவர்கள் அனைவரும் சோஷலிஸத்தின் இறுதியான குறிக்கோள் இதுதான் என்பதை ஏற்றுக் கொள்கிறார்கள்; ஆனால், அனைவரும் அதன் முக்கியத்துவம் பற்றி எவ்விதத்திலும் சிந்தனை செய்வது கிடையாது. வர்க்கங்கள் என்பது மக்களின் பெரிய பிரிவுகள்; சமூக உற்பத்தியில் சரித்திர பூர்வமாக நிர்ணயிக்கப்பட்ட ஒரு அமைப்பில் அவர்கள் வகிக்கும் உரிமை இடத்தின் மூலமாகவும், உற்பத்தி சாதனங்களின் பால் அவர்களுக்குள்ள உறவு மூலமாகவும் (பெரும்பாலும் சட்டப்படி நிச்சயிக்கப்பட்டு வகுக்கப்பட்டிருக்கிறது.) உழைப்பின் சமூக ஸ்தாபனத்தில் அவர்கள் வகிக்கும் பாத்திரத்தின் மூலமாகவும், இவைகளின் பலனுக சமூக செல்வத்தின் பங்கின் பருமன், அதை அவர்கள் கொடுப்பது, அதைப் பெறும் முறை ஆகியவை மூலமாகவும் ஒருவரிலிருந்து மற்றொருவர் மாறுபடுகிறார்கள். வர்க்கங்கள் என்பது மக்களின் பிரிவுகள்; சமூக பொருளாதாரத்தில் ஒரு திட்டவட்டமான அமைப்பில் மாறுபட்ட உரிமை இடத்தை அவர்கள்வகிப்பதால் அவைகளில் ஒன்று மற்றொன்றின் உழைப்பை அபகரிக் முடியும்.

வர்க்கங்களை முற்றிலும் ஒழிக்கும் பொருட்டு சுரண்டுகிறவர் களையும், நிலச்சுவான்தார்களையும், முதலாளிகளையும் வீழ்த்தினால் மாத்திரம் போதாது; அவர்களுடைய சொத்துரிமைகளை ஒழித்தால் மாத்திரம் போதாது; உற்பத்தி சாதனங்களின் எல்லா தனி உடமையையும் கூட ஒழிக்க வேண்டியது அவசியமாகும்; நகரத் திற்கும், கிராமத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தையும், அதே போல் மூளை உழைப்பாளிகளுக்கும், உடல் உழைப்பாளி களுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தையும் ஒழிக்க வேண்டியது அவசியமாகும். இதற்கு நீண்டகாலம் தேவைப் படுகிறது. இதை அடையும் பொருட்டு, உற்பத்தி சக்திகளை வளர்ப்பதில் ஏராளமான முன்னேற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக் கிறது. சிறிய அளவில் உற்பத்தி செய்யும் முறையின் ஏராளமான மீத மிச்சங்களின் எதிர்ப்பை (அடிக்கடி சாதுவாக இருக்கும்; இது விசேஷமாக பிடிவாதமானதாகவும், வெல்வது விசேஷமாகக் கஷ்டமானதாகவும் இருக்கும்) முறியடித்து வெல்ல வேண்டியது அவசியமாகும்; இந்த மீத மிச்சங்களோடு தொடர்புடைய பழக்க வழக்கங்கள், பழமையை மாற்ற மறுக்கும் நிலை ஆகியவற்றின் அமோகமான சக்தியை முறியடித்து வெல்ல வேண்டியது அவசியமாகும்.

''உழைக்கும் மக்கள்'' அனைவரும் இந்த வேலையைச் செய்யும் சம சக்தி பெற்றிருக்கிறார்கள் என்று அனுமானிப்பது வெறும் வெற்றுரையாகும்; அல்லது, உலகத் தொடக்க காலத்தில் உள்ள, மார்க்ஸீயத்திற்கு முந்திய சோஷலிஸ்டின் மாயமயக்கமாகும். ஏனெனில் இந்தத் திறமை தானாகவே வராது; அதற்கு மாறாக, அது சரித்திர பூர்வமாக வளர்கிறது; பெரிய அளவில் உள்ள முதலாளித்துவ உற்பத்தி முறையின் பொருளியல் நிலைமைகளி லிருந்து மாத்திரம் அது வளர்கிறது. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்தை நோக்கிச் செல்லும் பாதையில் தொடக்கத்தில் இந்தத் திறமை பாட்டாளி மக்களிடம் மாத்திரம் இருக்கிறது. அதன் முன்னால் இருக்கிற பிரம்மாண்டமான கடமையைச் செய்து முடிக்கும் சக்தி அதற்கு இருக்கிறது; முதலாவது, காரணம் நாகரிக மடைந்துள்ள சமுதாயங்களில் அது வலிமை மிக்க, மிகவும் முன் னேற்ற மடைந்த வர்க்கமாக இருக்கிறது; இரண்டாவது காரணம், பெரும்பாலான வளர்ச்சியடைந்த நாடுகளில் அது ஜனத்தொகை யில் பெரும்பான்மையோராக அமைந்து இருக்கிறது; மூன்றாவது காரணம், ரஷ்யா போன்ற பின் தங்கிய முதலாளித்துவ நாடுகளில் ஜனத்தொகையில் பெரும்பான்மையோர் அரைப் பாட்டாளி மக்களாக இருக்கிறார்கள்: அதாவது ஒரு ஆண்டில் ஒரு பகுதியில் பாட்டாளி மக்கள் வழியில் முறையாக வாழும் மக்கள்; முதலாளி

களின் தொழில் நிறுவனங்களில் கூலிக்கு உழைக்கும் தொழிலாளர்கள் என்ற நிலையில் வாழ்வதற்கு அத்தியாவசியமானவைகளில் ஒரு பகுதியை முறையாகச் சம்பாதிக்கிறார்கள்.

சுதந்திரம், சமத்துவம், பொதுப்படையாக ஜனநாயகம், தொழிலாளர் ஜனநாயகத்தின் சமத்துவம் இன்னும் இவை போன்றவை பற்றி பொதுப்படையாகப் பேசுவதின் அடிப்படையில் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்திற்கு மாறிச் செல்வதில் அடங்கியிருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முயல்கிறவர்கள் (பெர்ன் மஞ்சள் அகிலத்தைச் சேர்ந்த காட்ஸ்கி, மார்டோவ், போன்ற சூரப்புலிகள் செய்வது போல்) இதன் மூலமாக அவர்களுடைய சிறு முதலாளித்துவ, உயர் நாட்டமற்ற, தன்மையையும், சித்தாந்த ரீதியில் முதலாளித்துவப் பாதையை அடிமைத் தனமாக பின் பற்றும் தன்மையையும் வெளிப்படுத்துகிறார்கள். இந்தப் பிரச்சினைக்கு பிசகற்ற முறையில் தீர்வுகாண வேண்டுமானால், அரசியல் அதிகாரத்தை வென்றிருக்கும் துல்லியமான வர்க்கத்திற்கும், அதாவது பாட்டாளி மக்களுக்கும், உழைப்பாளி மக்களில் பாட்டாளி மக்கள் அல்லாத, அத்துடன் அரை பாட்டாளி மக்களாக இருக்கிற மக்கள் அனைவருக்கும் இடையே உள்ள துல்லியமான உறவுகளை ஸ்தூலமாக ஆராய்ந்து கற்றுக் கொள்வதன் மூலமாகத்தான் முடியும்; இந்த உறவுகள் கற்பனையின் முரண்பாடில்லாத இணக்கமான, "உன்னதமான" நிலைமைகளில் உருவெடுப்பது கிடையாது; அதற்குமாறாக ஏராளமான பல்வேறு வகைப்பட்ட வடிவங்களின் மூலமாக முதலாளித்துவம் கொடுக்கும் மூர்க்கத்தனமான எதிர்ப்புகள் நிறைந்த எதார்த்த நிலைமைகளில் உருவெடுக்கின்றன.

ருஷ்யா உள்பட, எந்த முதலாளித்துவ நாட்டிலும் உள்ள ஜனத்தொகையில் மிகப் பெரும்பாலானவர்கள்—குறிப்பாக உழைக்கும் மக்கள்— மூலதனத்தின் ஒடுக்கு முறையையும், அது கொள்ளை அடிப்பதையும், அதன் எல்லாவிதமான கொடுங்கோன்மைகளையும் அவர்களே சுயமாகவும், அவர்களுடைய உறவினர்கள் மூலமாகவும் ஆயிரக் கணக்கான தடவை அனுபவித்திருக்கிறார்கள். ஏகாதிபத்திய யுத்தம், அதாவது உலகம் முழுவதையும் கொள்ளையிடுவதில் தலைமை அதிகாரம் பிரிட்டிஷ் மூலதனத்திற்காகவா, அல்லது ஜெர்மானிய மூலதனத்திற்காகவா என்பதற்கு முடிவு கட்டும்பொருட்டு, ஒரு கோடி மக்களை கொலை செய்வது இந்த கடும் சோதனைகளை பெரும் அளவிற்கு தீவிரப்படுத்தியிருக்கிறது: அவைகளை அதிகரித்திருக்கிறது, ஆழமாக்கியிருக்கிறது. அவைகளின் அர்த்தத்தை பொது மக்கள் உணரும்படி செய்திருக்கிறது

ஆகவே, ஜனத்தொகையில் மிகப் பெரும்பாலோர், குறிப்பாக உழைப்பாளி மக்கள் தவிர்க்க முடியாத வகையில் பாட்டாளி மக்களின் பால் அனுதாபத்தைத் தெரிவிக்கிறார்கள்; காரணம் பாட்டாளி மக்கள்தான் வீரம் செறிந்த அஞ்சா நெஞ்சோடு, புரட்சிகரமான ஈவிரக்க மற்ற தன்மையோடு மூலதனத்தின் நுகத் தடியை வீசி எறிந்து சுரண்டுகிறவர்களை வீழ்த்தி, அவர்களுடைய எதிர்ப்பை நசுக்கி, சுரண்டுகிறவர்களுக்கு இடமில்லாத புதிய சமுதாயத்தைச் சிருஷ்டிப்பதற்காகப் பாதையைப் போடுவதில் இரத்தத்தைச் சிந்தினார்கள்.

உழைக்கும் மக்களில் பாட்டாளி மக்கள் அல்லாதவர்கள் அரைப் பாட்டாளி மக்கள் ஆகியவர்களின் சிறு முதலாளித்துவ ஊசலாட்டங்களும், முதலாளித்துவத்தின் "ஆதரவின்" கீழ் முத லாளித்துவ "அமைப்பிற்கு"த் திரும்பிப் போகும் கருத்துப் போக்கும் மிகப் பெரியதாகவும், தவிர்க்க முடியாததாகவும் இருக்க லாம், என்றாலும் கூட பாட்டாளி மக்களின் அரசியல், தார்மீக ஆணையுரிமையை அங்கீகரிக்காமல் இருக்க முடியாது; ஏனெனில் பாட்டாளி மக்கள் சுரண்டுகிறவர்களை வீழ்த்திக் கொண்டும், அவர் களுடைய எதிர்ப்பை நசுக்கிக் கொண்டும் இருக்கிறார்கள் என்பது மாத்திரமல்ல, அத்துடன் ஒரு புதிய, உயர்ந்த சமூக உறவையும், ஒரு சமூக கட்டுப்பாட்டையும், வர்க்க உணர்வு படைத்த, ஒன்று பட்ட உழைக்கும் மக்களின் கட்டுப்பாட்டையும் நிர்மாணம் செய்து கொண்டிருக்கிறார்கள்! அவர்களுக்கு அவர்களுடைய சொந்த ஒற்றுமையின் ஆணையுரிமையைத்தவிர, அவர்களுடைய சொந்த, அதிக வர்க்க உணர்வு படைத்த, தைரியமான, ஒரே முழுமையான, புரட்சிகரமான, உறுதியான முன்னணிப் படையைத் தவிர வேறு எந்த நுகத்தடியும் எந்த ஆணையுரிமையும் தெரியாது.

வெற்றியைச் சாதிக்கும் பொருட்டு, சோஷலிஸத்தைக் கட்டி, உறுதிப்படுத்தும் பொருட்டு பாட்டாளி மக்கள் ஒரு இருமடங் கான, அல்லது இரட்டையான கடமையைச் செய்து முடிக்க வேண்டும்; முதலாவதாக, பாட்டாளி மக்கள் மூலதனத்தை எதிர்த்து நடத்தும் புரட்சிகரமான போராட்டத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அவர்களுடைய வீரத்தின் மூலமாக உழைக்கிற, சுரண்டப்பட்ட, மக்கள் அனைவரையும் தங்கள் பக்கம் வெல்ல வேண்டும்; அவர்களை தங்கள் பக்கம் வென்று, அவர்களை ஸ்தாபன ரீதியாக அமைத்து, முதலாளித்துவத்தை வீழ்த்தும் போராட்டத்திலும், முதலாளிகளின் எதிர்ப்பை அறவே நசுக்கும் போராட்டத்திலும் அவர்களுக்குத் தலைமை தாங்க வேண்டும். இரண்டாவதாக, புதிய பொருளாதார வளர்ச்சிப்

பாதையில், ஒரு புதிய சமூக உறவைச் சிருஷ்டிப்பதை நோக்கி, ஒரு புதிய உழைப்புக் கட்டுப்பாட்டையும், ஒரு புதிய உழைப்பின் ஸ்தாபனத்தையும் சிருஷ்டிப்பதை நோக்கி உழைக்கிற, சுரண்டப் பட்ட மக்கள் அனைவருக்கும், அதே போல் சிறு முதலாளித்துவப் பிரிவுகள் அனைத்திற்கும் தலைமைதாங்க வேண்டும்; இது, விஞ்ஞானத்திலும், முதலாளித்துவ தொழில் நுணுக்கத்திலும் தீர்மானமான முடிவை வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர் களின் பொதுஜன ஸ்தாபனத்தோடு இணைத்து பெரிய அளவில் சோஷலிஸ்டு தொழிற்சாலையைச் சிருஷ்டிக்கும்.

முதலாவது கடமையைக் காட்டிலும் இரண்டாவது கடமை அதிகக் கஷ்டமானதாக இருக்கும்; ஏனெனில், வீரமிக்க ஆர்வத் தின் தனித்த செயல்களால் மாத்திரம் அதைச் செய்து முடிப்பது சாத்தியமல்ல; தெளிவான, தினசரி வேலையில் மிகவும் நீண்டு இருக்கிற, மிகவும் விடாப்பிடியாக இருக்கிற, மிகவும் கஷ்டமான பொது ஜன வீரம் அதற்குத் தேவைப்படுகிறது. ஆனல், முதல் கடமையைக் காட்டிலும் இந்தக் கடமை அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்; ஏனெனில், முதலாளித்துவத்தின் மீது வெற்றி களைப் பெறுவதற்கு வலிமையின் மிக ஆழமான மூல ஊற்றுகவும், இந்த வெற்றிகள் உறுதியாக நீடித்து நிலைத்திருப்பதற்கு ஒரே உத்திரவாதமாகவும் எது அமைய முடியும் என்றல், சமூக உற்பத்தி யின் ஒரு புதிய, உயர்ந்த முறையும், முதலாளித்துவ, சிறு முதலாளித்துவ உற்பத்தி முறைக்குப் பதிலாக பெரிய அளவில் சோஷலிஸ்ட் உற்பத்தி முறையைப் புகுத்துவதும் மாத்திரம் தான்.

"கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக்குகள்" இவ்வாறு அமோகமாக சரித்திர பூர்வமான முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருக் கிறர்கள்; துல்லியமாக எவ்வாறென்றல், உழைப்பின் விளைபயனை வளர்ப்பதிலும், ஒரு புதிய உழைப்புக் கட்டுப்பாட்டை தனதாக மேற் கொள்வதிலும் பொருளாதாரம், வாழ்வு ஆகியவற்றில் சோஷலிஸ்டு நிலைமைகளைச் சிருஷ்டிப்பதிலும் அவர்கள் தொழி லாளர்களின் உணர்வு பூர்வமான, தாமாகவே எடுக்கிற முன் முயற்சியைத் தெளிவாகத் தெரிவிக்கிறர்கள்.

ஜெர்மானிய முதலாளித்துவ ஜனநாயகவாதிகளில் ஒருவரான, விதி விலக்காக இருப்பவர்களில் அரிதானவர் என்று கூறுவது சரியாக இருக்கும்—ஜெ. ஜாகோபி என்பவர் 1870-71-ம் ஆண்டு படிப்பினைகளுக்குப் பிறகு, வெறிபிடித்த சொந்த நாட்டுப் பற்றுதல் பக்கமோ, அல்லது தேசிய மிதவாதத்தின் பக்கமோ போகாமல் சோஷலிஸத்தின் பால் போனர்; அவர், "ஸடோவா" 106 போர் முனையைக் காட்டிலும், ஒரே ஒரு தனித்த தொழிலாளர் சங்கத்தை

அமைப்பது அதிக சரித்திர பூர்வமான முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது என்று ஒரு தடவை கூறினர். இது உண்மைதான். ஒரு ஜெர்மானிய தேசிய முதலாளித்துவ அரசைச் சிருஷ்டிப்பதில் ஆஸ்திரிய முதலாளித்துவ முடியாட்சியா, அல்லது பிரஷ்ய முதலாளித்துவ முடியாட்சியா தனி முதல் ஆதிக்கம் வகிப்பது என்பதை ஸடோவா போர் முனை முடிவு செய்தது. முதலாளித்துவத்தின் மீது பாட்டாளி மக்களின் உலக வெற்றியை நோக்கிச் செல்லும் ஒரு சிறு நடவடிக்கையாக இருக்கிறது ஒரே ஒரு தனித்த தொழிலாளர் சங்கத்தை அமைப்பது, அதே போல், 1919-ல் மே மாதம் 10-ம் தேதியன்று மாஸ்கோவில் மாஸ்கோ—காஜான் ரெயில்வேயின் தொழிலாளர்களாய் அமைக்கப்பட்ட முதல் கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக், 1914-18-ல் நடந்த ஏகாதிபத்திய யுத்தத்தில் ஹிண்டன்பர்க்கும், பாக்கும், பிரிட்டிஷும் அடைந்த எந்த வெற்றிகளைக் காட்டிலும் அதிகமாக சரித்திர பூர்வமான முக்கியத்துவம் வாய்ந்தது என்று நாம் கூற முடியும். ஏகாதிபத்திய வாதிகளின் வெற்றிகள் என்ருல் அதன் அர்த்தம், ஆங்கிலேய, அமெரிக்க, பிரெஞ்சு கோடீசுவரர்களின் லாபத்திற்காக லட்சோப லட்சம் தொழிலாளர்களைக் கொன்று குவிப்பது என்பதுதான்; மிதமிஞ்சி சாப்பிட்டதால் வயிறு வீங்கிப் போயிருக்கிற, உயிரோடு அழுகிப் போய்கொண்டிருக்கிற, அழிந்து போய்கொண்டிருக்கிற,முதலாளித்துவத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடுமைகள் தான் அவை. மாஸ்கோ—காஜான் ரெயில்வே தொழிலாளர்களால் அமைக்கப்பட்டிருக்கும் கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக் புதிய, சோஷலிஸ்டு சமுதாயத்தின் கரு மையங்களில் ஒன்ருகும்; இது, பூமியில் உள்ள மக்கள் அனைவருக்கும் மூலதனத்தின் நுகதடியிலிருந்தும், யுத்தங்களிலிருந்தும் விடுதலையைக் கொடுக்கிறது.

மென்ஷ்விக்குகள், சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் உள்பட முதலாளித்துவ கனவான்களும், அவர்களை அண்டிப் பிழைப்பவர்களும் தங்களை "பொது ஜன அபிப்பிராயத்தின்" பிரதிநிதிகள் என்று கருதிக் கொள்வதற்கு பழக்கப்பட்ட இவர்கள்—இயல்பாகவே கம்யூனிஸ்டுகளின் ஆர்வ நம்பிக்கைகளைப் பரிகசிக்கிருர்கள்; அந்த ஆர்வ நம்பிக்கைகளை "நறுமலர்ச் செடிகளின் சிறு பானையில் உள்ள பருத்த அடியுடைய மரம்" என்று அழைக்கிருர்கள்; திருடுதல், வேலை செய்யாமல் சோம்பேரியாக இருப்பது, குறைந்த அளவு உற்பத்தி, மூலப் பொருள்களும், செய்த பொருள்களும் வீண் விரயமாவது போன்ற நிகழ்ச்சிகள், ஏராளமாக இருப்பதோடு பொருட்படுத்த முடியாத சிறிய எண்ணிக்கையில் ஸுபோட்னிக்குகள் இருப்பதை ஒப்பிட்டு ஏளனமாகப் பேசுகிருர்கள். இந்தக் கனவான்களுக்கு நாம் கொடுக்கும் பதில் என்னவென்ருல், இந்த

முதலாளித்துவ அறிவாளிகள் ரஷ்ய, வெளிநாட்டு முதலாளிகளுக்கு அவர்களுடைய ஆட்சியை மீண்டும் கொண்டு வருவதற்கு உதவி செய்வதற்குப் பதிலாக, உழைக்கும் மக்களுக்கு அவர்களுடைய அறிவை அர்ப்பணம் செய்திருந்தால், புரட்சியானது மேலும் வேகமாகவும், மேலும் அமைதியான முறையிலும் முன்னேறிச் சென்றிருக்க முடியும் என்பதுதான், ஆனால் இது உடோபியனாகும். ஏனெனில், வர்க்கப் போராட்டத்தால் தான் இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டப்படும்; அறிவாளிகளில் பெரும்பாலோர் முதலாளித்துவத்தை நோக்கி ஆக்ரஷிக்கப்படுகிறார்கள். பாட்டாளி மக்கள் வெற்றியைப் பெறுவது அறிவாளிகளின் உதவியோடு அல்ல; அதற்கு மாறாக அவர்கள் எதிர்த்தாலும் கூட (குறைந்த பட்சம் பெரும் பாலோர்) திருத்தவே முடியாத அளவுக்கு முதலாளித்துவ மயமாக இருப்பவர்களை நீக்க வேண்டும்; ஊசலாடுகிறவர்களை சீர்திருத்தம் செய்ய வேண்டும்; அவர்களுக்கு மறு கல்வி கொடுக்க வேண்டும்; கீழ்ப்படிந்து நடக்கும்படி செய்ய வேண்டும்; இவ்வாறு, பாட்டாளி மக்கள் பக்கத்திற்கு அவர்களில் ஏராளமான பகுதிகளை படிப்படியாக வெல்ல வேண்டும். புரட்சியின் கஷ்ட நஷ்டங்களையும், சிறிய தோல்விகளையும் காழ்ப்புடன் நோக்கி மகிழ்வது, பீதியைப் பரப்புவது, பழைய நிலைமையைக் கொண்டுவர வேண்டும் என்று பிரச்சாரம் செய்வது ஆகிய இவை அனைத்தும் முதலாளித்துவ அறிவாளிகளின் வர்க்கப் போராட்டத்தின் ஆயுதங்களாகவும் வழி முறைகளாகவும் இருக்கின்றன.

ஆயினும், தீவிரமாக வேலையைத் தொடங்கினால், பின்னடைவுகளும், தவறுகளும், பழைய நிலைக்கு மீண்டும் சறுக்குவதும் நீண்ட காலம் வரையிலும் வரிசையாக நிகழாமல் ஒரு புதிய உற்பத்தி முறை உடனே ஆழமாக வேரூன்றியிருக்கும் நிகழ்ச்சி சரித்திரத்தில் எப்பொழுதாவது நிகழ்ந்திருக்கிறதா ? பண்ணை அடிமை முறையை ஒழித்து அரை நூற்றாண்டு காலம் ஆன பிறகும் கூட, ரஷ்யாவின் கிராமப் புறங்களில் பண்ணை அடிமை முறையின் மீத மிச்சங்கள் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. அமெரிக்காவில் அடிமை முறையை ஒழித்து அரை நூற்றாண்டு காலம் ஆன பிறகும்கூட, நீக்ரோக்களின் நிலைமை இன்னும் அடிக்கடி அரை அடிமை நிலையில் தான் இருக்கிறது. மென்ஷ்விக்குகளும், சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களும் உள்பட முதலாளித்துவ அறிவாளிகள் மூலதனத்திற்கு சேவை செய்வதிலும், பொய்யான வாதங்களைத் தொடர்ந்து உபயோகிப்பதிலும் அவர்கள் கொள்கைக்கு ஏற்றவாறே நடந்து கொள்கிறார்கள்; பாட்டாளி மக்களின் புரட்சிக்கு முன்பு நாம் உட்டோபியன்களாக இருக்கிறோம் என்று நம்மை அவர்கள் குறை கூறினார்கள்; புரட்சிக்குப் பிறகு, வாயு வேக, மனோ வேகத்தில்

கடந்த காலத்தின் தடங்களையெல்லாம் நாம் துடைத்தெறிய வேண்டும் என்றும் கோருகிறார்கள்.

ஆயினும் நாம் உட்டோபியன்கள் அல்ல; முதலாளித்துவ "வாதங்களின் உண்மையான பயன் மதிப்பு என்ன என்பது நமக்குத் தெரியும். புரட்சிக்குப் பிறகு கொஞ்ச காலம் வரையிலும் பழைய ஒழுங்கு முறைகளின் சுவடுகள் புதியதின் இளம் முளைகளின் மேல் தவிர்க்க முடியாத வகையில் மேலாதிக்கம் வகிக்கும் என்பதும் நமக்குத் தெரியும், புதியது இப்பொழுதுதான் பிறந்திருப்பதால், சிறிது காலம் வரையிலும் இதைக் காட்டிலும் பழையது எப்பொழுதும் பலமாகவே இருக்கிறது; இயற்கையிலும், சமூக வாழ்விலும் எப்பொழுதும் இவ்வாறு நிகழ்கிறது. புதிய சமூக அமைப்பு முறையின் இளம் முளைகளின் வலுக் குறைவைக் கண்டு ஏளனம் செய்வது அறிவாளிகளதும் அவர்களைப் போன்றவர்களதும் கீழ்த்தரமான அறிவில் உறுதிபாடின்மையாகும்; இவை, பாட்டாளி மக்களுக்கு எதிரான முதலாளித்துவ வர்க்கப் போராட்டத்தின் முறைகளின் சாராம்சமாகும்; சோஷலிஸத்திற்கு எதிராக முதலாளித்துவத்தைப் பாதுகாக்கும் வழி முறைகளாகும். புதிய வலுக் குறைவான முளைகளை நாம் கவனமாகக் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும். அவைகள் பால் நாம் அதிகப் பட்சம் கவனத்தைச் செலுத்தி, அவைகளின் வளர்ச்சிக்கு முடிந்ததையெல்லாம் செய்து, அவைகளை " பேணி வளர்க்க வேண்டும்"; அவைகளில் சில தவிர்க்க முடியாத வகையில் அழிந்து போய்விடும். நாம் அதற்கு வாக்குறுதி கொடுக்க முடியாது. ஆனால், "கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக்குகள்" ஒரு குறிப்பிட்ட முக்கியமான பாத்திரத்தை வகிப்பார்கள். ஆனால், முக்கியமான விஷயம் அது அல்ல. முக்கியமான விஷயம் என்னவென்றால், புதியதின் ஒவ்வொரு முளையையும் ஊட்டி வளர்க்க வேண்டும் என்பதுதான். வாழ்வு உயிரோடியிருக்கக் கூடியதைப் பொறுக்கி எடுக்கும் மேகநோயை வென்றடக்குவதில் மனித இனத்திற்கு உதவி செய்வதற்காக ஒரு ஜப்பானிய விஞ்ஞானி அறுநூற்றி ஐந்து மருத்துவக் கலவைகளை பொறுமையாகச் சோதித்த பிறகு, அறுநூற்றி ஆறாவது மருத்துவக் கலவையில்தான் வெற்றி பெற்றார்; ஆகவே, இதைக் காட்டிலும் கஷ்டமான பிரச்சினைக்குத் தீர்வுக்கான விரும்புகிறவர்கள், அதாவது முதலாளித்துவத்தை முறியடிக்க விரும்புகிறவர்கள் நூற்றுக் கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும் போராட்டப் புதிய ஆயுதங்களையும், முறைகளையும் வழி வகைகளையும் பொறுமையாக முயற்சி செய்தால் தான் அவைகளில் பொருத்தமானவைகளை உண்டாக்க முடியும்.

'கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக்குகள்" தவிர்க்க முடியாத அளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருக்கிறார்கள்; காரணம், எந்த

வகையிலும் விசேஷமான நல்ல நிலைமைகளில் வைக்கப்படாத தொழிலாளர்களாலும், பல்வேறு வகைகளில் நிபுணர்களாக இருக்கும் தொழிலாளர்களாலும், எந்த விதமான விசேஷ பயிற்சியும் இல்லாத தொழிலாளர்களாலும், சாதாரண, அதாவது பெரிதும் கஷ்டமான நிலைமைகளில் வாழும் பயிற்சியற்ற தொழிலாளர்களாலும் அவை துவங்கப்பட்டிருக்கின்றன. உழைப்பின் உற்பத்தித் திறம் குறைந்து கொண்டே போவதற்கு முக்கியமான காரணம் என்னவென்பதை நாம் அனைவரும் அறிவோம்; ரஷ்யாவில் மாத்திரமின்றி, உலகம் முழுவதும் இதே நிலைமை நிலவுகிறது. ஏகாதிபத்திய யுத்தமும், வியாதியும், சத்து இல்லாத உணவும் உண்டாக்கி இருக்கும் அழிவு, வறுமை, களைப்பு, மனத்தாங்கல் ஆகியவைதான் மூலகாரணங்கள், முக்கியத்துவத்தில் பின்னால் கூறியதுதான் முதலிடம் பெறுகிறது, பட்டினி பசிதான் அதற்குக் காரணம். பட்டினி பசியைப் போக்கும் பொருட்டு, விவசாயத்திலும், போக்குவரத்திலும், தொழிலிலும் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்த வேண்டும். எனவே, சுற்றிச் சுற்றி ஒரே இடத்தில் கொண்டு வந்துவிடும் ஒருவிதமான வழியை நாம் பெறுகிறோம்; உழைப்பின் உற்பத்தித்திறனை உயர்த்தும் பொருட்டு நம்மை பட்டினி பசியிலிருந்து நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது; பட்டினி பசியிலிருந்து நம்மை நாமே பாது காத்துக் கொள்ளும் பொருட்டு, நாம் உழைப்பின் உற்பத்தித்திறனை உயர்த்த வேண்டியிருக்கிறது. சுற்றிச் சுற்றி ஒரே இடத்தில் கொண்டு வந்துவிடும் வழியை உடைப்பதன் மூலமாகவும், பொது மக்களின் மனநிலையில் தீவிரமான மாறுதலைக் கொண்டு வருவதன் மூலமாகவும், இத்தகைய தீவிரமான மாறுதலின் பின்னணிக்கு எதிராக முடிவான பாத்திரத்தை அடிக்கடி வகிக்கும் தனிப்பட்ட பிரிவுகளின் வீரம் செறிந்த முன் முயற்சியாலும் இத்தகைய முரண் பாடுகளுக்கு நடைமுறையில் தீர்வுகாண முடியும் என்பது நமக்குத் தெரியும். பயிற்சியற்ற தொழிலாளர்களும், மாஸ்கோ ரெயில்வே தொழிலாளர்களும் (நமது மனதில் இருப்பது இவர்களில் பெரும்பாலோரே தவிர, விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சில லாப வேட்டையாடுகிறவர்களும், அதிகாரிகளும், மற்ற எதிர்ப் புரட்சிக்காரர்களும் அல்ல) நம்பிக்கையை இழந்த கடினமான நிலைமைகளில் வாழ்கிற உழைப்பாளி மக்களாக இருக்கிறார்கள். நிரந்தரமாக அவர்களுக்கு போதிய அளவு உணவு கிடைப்பதில்லை; அறுவடை செய்வதற்கு முன்பு, தற்சமயம் உணவு நிலைமை பொதுவாக மோசமாக இருப்பதால், அவர்கள் உண்மையில் பட்டினி கிடக்கிறார்கள். இருப்பினும், முதலாளிகள், மென்ஷ் விக்குகள் சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் ஆகியவர்களின் தொல்லை தரும் நோக்கம் கொண்ட எதிர்ப்புரட்சிக் கிளர்ச்சியால்

சூழப்பட்ட இந்த பட்டினி கிடக்கும் தொழிலாளர்கள் ஊதியம் எதுவும் இல்லாமல், குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் வேலை செய்கிறார்கள்; போதிய அளவு சத்துள்ள உணவு கிடைக்காததால் களைத்தும், சோர்ந்தும், வேதனைக்கு ஆளாகியும் இருந்த போதிலும் கூட, உழைப்பின் உற்பத்தித் திறனை அமோகமாக உயர்த்தியிருக்கிறார்கள். இது ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வீரம் அல்லவா? இது, பெரும் விளைவுகளை உண்டாக்கவல்ல முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாறுதலின் தொடக்கமல்லவா?

இறுதியாக, புதிய சமூக அமைப்பின் வெற்றிக்கு மிக முக்கியமானது, அடிப்படையான விஷயம் உழைப்பின் உற்பத்தித் திறனாக இருக்கிறது. பண்ணை அடிமை முறையின் கீழ் கண்டும் கேட்டுமிராத உழைப்பின் உற்பத்தித் திறனை முதலாளித்துவம் சிருஷ்டித்தது. சோஷலிஸமானது ஒரு புதிய, அதைவிட உயர்ந்த உழைப்பின் உற்பத்தித் திறனைச் சிருஷ்டிப்பதன் மூலமாக, முதலாளித்துவத்தை முறியடிக்க முடியும், முற்றிலும் முறியடிக்கப் படும். இது மிகவும் கஷ்டமான காரியம்: இதைச் செய்ய நீண்ட காலம் தேவைப்படுகிறது, ஆனால், அது துவங்கப்பட்டிருக்கிறது— அதுதான் முக்கியமான விஷயம். ஏகாதிபத்திய யுத்தத்தின் தாங்க முடியாத தொல்லைகளைக் கொடுத்த நான்கு வருட காலத்தில் வாழ்ந்த பிறகும், உள்நாட்டு யுத்தத்தின் தாங்க முடியாத தொல்லைகளைக் கொடுத்த ஒன்றரை வருடகாலத்தில் வாழ்ந்த பிறகும், பட்டினிக்கு ஆளாகியிருக்கும் மாஸ்கோவில், 1919-ல் ஆண்டில் கோடை காலத்தில் பட்டினி பசிக்கு ஆளாகியிருக்கும் தொழிலாளர்கள் இந்த மகத்தான பணியைத் துவங்க முடியுமானால், உள்நாட்டு யுத்தத்தில் நாம் வெற்றி பெற்று, சமாதானத்தை வெல்வோமானால் பின்னர் நிலைமை எப்படி அபிவிருத்தியடையும்?

முதலாளித்துவத்தின் கீழ் நிலவில் இருக்கும் உழைப்பின் உற்பத்தித் திறனோடு ஒப்பிடும் பொழுது, கம்யூனிஸமானது, தாமாகவே மனமுவந்து, வர்கக உணர்வுப் படைத்த ஒன்றுபட்ட தொழிலாளர்கள் முன்னேற்றமடைந்துள்ள தொழில் நுணுக்கங்களைப் புகுத்தியிருக்கும் உழைப்பின் உயர்ந்த உற்பத்தித் திறன் என்பதுதான். கம்யூனிஸத்தின் எதார்த்தமான தொடக்கம் என்ற நிலையில். கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக்குகள் அசாதாரணமாக பெருமதிப்பு வாய்ந்தவர்களாகத் திகழ்கிறார்கள்; இது மிகவும் அறிதான விஷயமாகும், ஏனெனில் "முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்திற்கு மாறிச் செல்வதில் முதல்படியின் கட்ட"த்தில் நாம் இருக்கிறோம்—(நமது' கட்சியின் செயல் திட்டம் முற்றிலும் சரியாகச் சொல்வதுபோல்)[167]

உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குச் சுறுசுறுப்பாக உழைப்பதன் மூலமாகவும், தானியம், நிலக்கரி, இரும்பு, மற்ற பொருள்கள் ஆகியவற்றின் ஒவ்வொரு பூடையும் (36 பவுண்டு எடையுள்ள ஒரு ரஷ்ய அளவு ஒரு பூடை என்பது) சிக்கனம் செய்வதன் மூலமாகவும் சாதாரண தொழிலாளர்கள் உறுதி தளராமல் ஆர்வத்தோடு அக்கறையைக் காட்டுவதில்தான் கம்யூனிஸம் தொடங்குகிறது; இந்தப் பொருள்கள் தொழிலாளர்களுக்குச் சொந்தமாகவோ, அல்லது அவர்களுடைய "நெருங்கிய" உறவினர்களுக்கோ சிறுகச் சிறுக சேர்வது கிடையாது; மாறாக, "தொலைவில்" உள்ள உறவினர்களுக்கு, ஒட்டு மொத்தமாக சமுதாயத்திற்கு, முதலில் ஒரே ஒரு சோஷலிஸ்டு அரசிலும், பிறகு சோவியத் குடியரசுகளின் ஒன்றியத்திலும் ஒன்றுபட்டிருக்கும் கோடானு கோடி மக்களுக்கு சிறுகச் சிறுக சேர்க்கிறது.

"மூலதனம்" என்ற நூலில் கார்ல் மார்க்ஸ் மனிதனின் சுதந்திரம், உரிமைகள் ஆகியவை பற்றிய பகட்டான, வாய்ச் சவடால் அடிக்கிற முதலாளித்துவ ஜனநாயக மகத்தான சாஸனத்தைக் கிண்டல் செய்கிறார்; பொதுவாக சுதந்திரம், சமத்துவம், தோழமை ஆகியவை பற்றிய இந்த வெற்றுரைகளை எல்லாம் கேலி செய்கிறார்; இவை, வெறுக்கத்தக்க பெர்ன் அகிலத்தின் வெறுக்கத்தக்க இன்றைய சூரப்புலிகள் உள்பட எல்லா நாடுகளிலும் உள்ள சிறு முதலாளித்துவ உயர்நாட்ட மற்றவர்கள் அனைவரையும் திகைக்கவைக்கின்றன. உரிமைகள் பற்றிய இந்தப் பகட்டான பிரகடனங்கள், பாட்டாளி மக்களால் தெளிவாக, நிதானமாக, நடைமுறைக்கு உகந்த வகையில், எளிய முறையில் இந்தப் பிரச்சினை முன்வைக்கப் பட்டிருப்பது மாறுபட்டு அமைந்திருப்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டுகிறார். வேலை நேரத்தைக் குறைத்துச் சட்டம் இயற்றியிருப்பது இதற்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது[108] பாட்டாளி மக்களின் புரட்சியின் உள் அடக்கம் மேனமேலும் மலர்ச்சியடையும் போது, மார்க்ஸின் கருத்தின் தகுதியும், ஆழமும் மேன்மேலும் தெளிவாகவும், வெளிப்படையாகவும் தெரியவரும். காட்ஸ்கிகள், மென்ஷ்விக்குகள், சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் அவர்களுடைய பெர்ன் அன்புச் "சகோதரர்கள்" ஆகியவர்களின் பகட்டான, சிக்கலான, பயபக்தியுடன் கூடிய சொற்றொடர்களிலிருந்து, தூய கம்யூனிஸத்தின் "வழிமுறைகள்" மாறுபடுகின்றன; அதாவது, எல்லாவற்றையும் உழைப்பின் நிலைமைகளுக்கு உருமாற்றுகின்றன "தொழிலாளர் ஜனநாயகம்" பற்றியும், "சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம்" பற்றியும், "மக்களின் சர்க்கார்," பற்றியும் இன்னும் இதுபோன்ற பயனற்ற பேச்சுக்களைக்

குறைவாகப் பேசட்டும்? நமது காலத்து வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்களும், விவசாயிகளும் முதலாளித்துவ அறிவாளிகளின் இத்தகைய பகட்டான சொற்றொடர்களின் உள்ளார்ந்த இயல்பை அறிந்து கொள்கிறார்கள்; மேலும், சாதாரண பொது அறிவையும், அனுபவத்தையும் பெற்றிருப்பவனைப் போல் சுலபமாக வஞ்சனையான தந்திரத்தைக் கண்டு கொள்கிறார்கள்; தவறு குற்றங்களைக் காண முடியாத வகையில் "மெருகு போடப் பட்டிருக்கும்" அம்சங்களையும், "வேறுமாற்று வழி இல்லாத நிலையில், பார்வையில் அடையாளம் தெரியாத நபரின்" தூய தோற்றத்தையும் ஒரு கணம் பார்த்து, உடனே பிழையில்லாமல் "அவனை அநேகமாக மெய்ப்பிக்கக்கூடிய முறையில் ஒரு போக்கிரி" என்று மதிப்பிடுகிறார்கள்.

பகட்டான சொற்றொடர்கள் குறைவாக இருக்கட்டும் அதிகமாகப் பகட்டற்ற தினசரி வேலை வேண்டும்; தானியத்தின் அளவையும், நிலக்கரியின் அளவையும் அதிகரிப்பதில் அதிக அக்கறை வேண்டும்! பட்டினி கிடக்கிற தொழிலாளர்களுக்கும், கந்தையைக் கட்டிக் கொண்டிருக்கிற, வெறும் காலுடன் இருக்கிற விவசாயிகளுக்கும் தேவைப்படுகிற இந்த தானியத்தையும் நிலக்கரியையும் கொடுப்பதில் அதிக அக்கறை காட்டவேண்டும்; அற்ப விஷயத்தில் பேரம் பேசுவதன் மூலமாக அல்ல, ஒரு முதலாளித்துவ முறையில் அல்ல, அதற்கு மாறாக பயிற்சியற்ற தொழிலாளர்கள், மாஸ்கோ-காஜான் ரெயில்வே தொழிலாளர்கள் ஆகியவர்களைப் போல் பகட்டற்ற உழைக்கும் மக்களின் உணர்வு பூர்வமான, தாமாகவே மனமுவந்து செய்கிற எல்லையற்ற வீரம் செறிந்த உழைப்பின் மூலமாக.

புரட்சி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை முதலாளித்துவ அறிவாளிகளின் வெற்றுரைகள் மூலமாக அணுகும் பழக்கத்தின் மீத மிச்சங்கள் எல்லா படிகளிலும், எல்லா இடத்திலும், ஏன் நமது சொந்த அணிகளிலும் கூட இருக்கின்றன என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். உதாரணமாக, நமது பத்திரிகைகள் அழுகிப் போன கடந்தகால முதலாளித்துவ ஜனநாயகத்தின், இந்த அழுகிப் போன மீதமிச்சங்களை எதிர்த்து சிறிதளவுதான் போராடுகின்றன; எளிமையான, அடக்கமான சாதாரண அதே சமயத்தில் வளம்பெறக் கூடிய தூய கம்யூனிஸத்தின் முளைகளைப் பேணி வளர்ப்பதற்கு ஓரளவுதான் செயல்படுகின்றன.

மாதர்களின் நிலையை எடுத்துக் கொள்வோம். இந்தத் துறையில், நாம் அதிகாரத்திற்கு வந்த பிறகு முதல் ஒரு

வருடத்திலேயே நாம் செய்ததில் நூறில் ஒருபங்கைக் கூட பல பத்தாண்டுகள் காலத்தில் உலகத்தில் ஏதாவது ஒரு ஜனநாயகக் கட்சியாவது, ஏதாவது ஒரு பெரிதும் முன்னேற்றமடைந்த முதலாளித்துவக் குடியரசாவது செய்யவில்லை. மாதர்களை அசமத்துவ அந்தஸ்தில் வைக்கிற, விவாகரத்து செய்யும் உரிமையைக் கட்டுப்படுத்துகிற, அதைச் சுற்றி வளைத்துக் கொண்டிருக்கிற வெறுக்கத்தக்க சம்பிரதாயங்களை, திருமணம் ஆகாமல் பிறந்த குழந்தைகளுக்கு அங்கீகாரம் கொடுக்க மறுக்கிற, அவைகளின் தந்தைகளைத் தேடிப்பிடிக்கிற பெரும் பழிக்கு ஆளான சட்டங்களை உண்மையாகவே தரைமட்டமாக்கி யிருக்கிறோம்; முதலாளித்துவத்திற்கும், முதலாளிகளுக்கும் அவமானத்தைக் கொடுக்கிற இந்தச் சட்டங்களின் மீதமிச்சங்கள் எல்லா நாகரிகமடைந்த நாடுகளிலும் இன்று காணலாம். இந்தத் துறையில் நாம் செய்திருக்கும் பணிகளை நினைத்துப் பெருமைப் படுவதற்கு ஆயிரம் மடங்கு நமக்கு உரிமை உண்டு, ஆனால், பழைய முதலாளித்துவ சட்டங்கள், நிறுவனங்கள் என்ற மரம் மட்டைகளைத் தரையிலிருந்து எந்த அளவுக்கு அதிகமாகச் செவ்வையாக சுத்தம் செய்கிறோமோ, அந்த அளவுக்கு அதிகமாக கட்டடத்தைக் கட்டுவதற்கு தரையைச் சுத்தம் செய்திருக்கிறோமே தவிர, கட்டடத்தை இன்னும் கட்ட வேண்டியிருக்கிறது என்ற உண்மை நமக்குத் தெளிவாகத் தெரியும்.

பெண்களுக்கு விமோசனமளிக்கும் சட்டங்கள், இருந்த போதிலும் கூட, குடும்ப அடிமைகளாகவே அவர்கள் இருக்கிறார்கள்; ஏனெனில், அற்ப வீட்டுவேலைகள் அவர்களை நசுக்குகின்றன; குரல் வளையை நெருக்கி கொல்கின்றன, முட்டாள்களாக ஆக்கி, மதிப்பற்றவர்களாக்குகின்றன; தரத்தைக் குறைக்கின்றன; சமையலறையிலும், குழந்தை வளர்ப்பிலும் அவர்களை விலங்கிட்டுக் கட்டுப்படுத்துகின்றன; மிருகத்தனமான, படைப்புத்திறனில்லாத அற்ப, நரம்பைத் தளர வைக்கிற, முட்டாளாக்குகிற, கசக்கிப் பிழிகின்ற அடிமை வேலைகளில் அவர்கள் உழைப்பை வீண் விரயம் செய்கிறார்கள். இந்த அற்ப வீட்டு வேலைகளைப் பராமரிக்கும் முறையை எதிர்த்து (அரசு அதிகாரத்தை வைத்திருக்கும் பாட்டாளி மக்களின் தலைமையில்) ஒரு தீவிரமான போராட்டத்தைத் தொடங்கும் போது மாத்திரம், அல்லது பெரிய அளவில் உள்ள சோஷலிஸ்டு பொருளாதாரமாக அதை மொத்தமாக உருமாற்றம் செய்யத் தொடங்கும் போது மாத்திரம் மாதர்களின் உண்மையான விமோசனமும் உண்மையான கம்யூனிஸமும் தொடங்கும்.

ஒவ்வொரு கம்யூனிஸ்டும் தத்துவ ரீதியில் தர்க்கத்திற்கு இடமற்றது என்று கருதுகிற இந்தப் பிரச்சினைக்கு போதிய அளவு கவனத்தை நடைமுறையில் செலுத்துகிறோமா? உண்மையில் இல்லை. இந்தத் துறையில் ஏற்கெனவே நிலவில் இருக்கும் கம்யூனிஸத்தின் முளைகளின் பால் நாம் சரியான கவனத்தைச் செலுத்துகிறோமா? மீண்டும் இல்லை என்பதுதான் பதில் பொது ஜனங்களுக்கு உணவுப் பொருள்களை வழங்கும் நிறுவனங்கள், குழந்தைகளை வளர்க்கும் நிறுவனங்கள், சிறு குழந்தைகளின் பள்ளிக்கூடங்கள் ஆகிய இவை இந்த முளைகளின் உதாரணங் களாகத் திகழ்கின்றன; பகட்டான, சொற்பகட்டான, அல்லது சடங்குகள் சார்ந்த எதுவும் இல்லாத எளிமையான தினசரிச் சாதனங்களாக இவை திகழ்கின்றன; இவை உண்மையாகவே மாதர்களை விடுதலை செய்ய முடியும்; சமூக உற்பத்தி, பொது வாழ்க்கை ஆகியவைகளில் அவர்கள் பாத்திரம் சம்பந்தப்பட்ட வரையிலும் ஆண்களோடு சரி சமத்துவ உரிமை இல்லாமலிருக்கும் நிலையை உண்மையாகவே குறைக்கும், அறவே ஒழித்துவிடும். இந்தச் சாதனங்கள் புதியவை அல்ல; அவைகள் (சோஷலிஸத் திற்கான எல்லா பொருளியல் முன் தேவைகளையும் போல்) பெரிய அளவில் உள்ள முதலாளித்துவம் சிருஷ்டித்திருக்கின்றன. ஆனால் முதலாளித்துவத்தின் கீழ் அவை, முதலாவதாக, கிடைக்காத அரிய பொருளாக இருந்தன; இரண்டாவதாக,—இது விசேஷ முக்கியத்துவம் வாய்ந்தது—உலக வாணிகம், லாப வேட்டை, ஏமாற்றுவது, வஞ்சிப்பது ஆகிய மோசமான எல்லா அம்சங் களோடு கூடிய லாப வேட்டையாடும் தொழில் நிறுவனமாக இருந்தன; அல்லது "முதலாளித்துவ ஈகையின் அரசியல் செப்பிடு வித்தையாக" இருந்தது; தலைசிறந்த தொழிலாளர்கள், பிசகற்ற முறையில் இதை வெறுத்தார்கள், இகழ்ந்தார்கள்.

நமது நாட்டில் இந்த நிறுவனங்களின் எண்ணிக்கை அமோகமாக அதிகரித்திருக்கிறது என்பதிலும், குணாம்சத்தில் அவைகள் மாறுபடத் தொடங்கியிருக்கின்றன என்பதிலும் சந்தேகமே இல்லை; நமக்குத் தெரிந்திருப்பதைக் காட்டிலும் அதிகமாக உழைக்கிற பெண்களுக்கு இடையிலும், விவசாயப் பெண்களுக்கு இடையிலும் ஸ்தாபன அமைக்கும் திறம் இருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை; பெரிய மண்டைக்காரர்களான "அறிவாளிகளையும்" அரைகுறையான "கம்யூனிஸ்டுகளையும்," "பாதித்திருக்கும்" திட்டங்கள், முறைகள் போன்றவைகளைப் பற்றி ஏராளமாகப் பேசாமல், பரபரப்பை உண்டாக்காமல், அற்ப விஷயங்களில் சண்டை போடாமல், அரட்டை அடிக்காமல் ஏராளமான தொழிலாளர்களின் ஒத்துழைப்போடும், இன்னும்

அதிகமாக ஏராளமான உபயோகிப்பவர்களின் ஒத்துழைப்போடும் நடைமுறை ஸ்தாபன அமைப்புப் பணிகளைச் செய்கிறவர்கள் நமக்குத் தெரிந்திருப்பதைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறார்கள் என்பதிலும் சந்தேகமே இல்லை. ஆனால், நாம் செய்யக் கடமைப் பட்டிருப்பது போல், இந்தப் புதிய முளைகளை நாம் பேணி வளர்ப்பது கிடையாது.

முதலாளிகளைப் பாருங்கள். அவர்களுக்கு என்ன தேவைப் படுகிறதோ, அதை எப்படி விளம்பரம் செய்வது என்பதை எவ்வளவு அருமையாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்! முதலாளிகள் "முன் மாதிரி" தொழில் நிறுவனம் என்று கருதுவதை அவர் களுடைய பத்திரிகையில் லட்சோப லட்சம் பிரதிகளில் எப்படி பாராட்டுகிறார்கள்! "முன் மாதிரியான" முதலாளித்துவ நிறுவனங்களை எப்படி தேசிய பெருமையின் பருப்பொருளாக மாற்றுகிறார்கள்! சிறந்த உணவுப் பொருள்களை வழங்கும் நிறுவனங்களையோ, அல்லது சிறந்த சிறு குழந்தைகளின் பள்ளிக் கூடங்களையோ அவை போன்ற நிறுவனங்களில் பலவற்றை, தினசரி தனி முக்கியத்துவம் கொடுப்பதன் மூலமாக, முன் மாதிரி யாக மாற்றும் பொருட்டு நமது பத்திரிகைகள் விவரமாக எழுதுவது கிடையாது, அல்லது எழுதியதே கிடையாது. அவை களுக்குப் போதுமான அளவு பொது விளம்பரம் கொடுப்பது கிடையாது; மனித உழைப்பை மிச்சப்படுத்தியிருப்பது, உபயோகிப் பவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்திருப்பது, உற்பத்திப் பொருள்களில் சிக்கனம், குடும்ப வேலைக்கு அடிமையாக இருக்கும் நிலையிலிருந்து மாதர்களுக்கு விமோசனம், சுகாதார நிலைமைகளில் அபிவிருத்தி ஆகியனவற்றை பிறருக்கு முன் மாதிரியாக இருக்கிற கம்யூனிஸ்ட் வேலை மூலமாக சாதிக்க முடியும் என்பது பற்றியும், சமுதாயம் முழுவதற்கும், எல்லா உழைப்பாளி மக்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்பது பற்றியும் விரிவாக விளக்கி எழுதுவது கிடையாது.

முன் மாதிரியாக உற்பத்தி செய்யப்படுவது, முன் மாதிரியான கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக்குகள், தானியத்தைப் பெறுவதிலும், விநியோகிப்பதிலும் முன் மாதிரியாக கவனமாக இருப்பது, உணர்வு பூர்வமாக இருப்பது, முன்மாதிரியான உணவுப் பொருள்களை வழங்கும் நிலையங்கள், இன்ன தொழி லாளர் வீடு, அல்லது இன்ன குடியிருப்பு முன் மாதிரியாகச் சுத்தமாக இருந்தது,—ஆகியவைகளின் பால் இப்பொழுது செலுத் தப்படும் கவனத்தைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமாக நமது பத்திரிகைகளும், அதே போல் தொழிலாளர்கள், விவசாயிகள்

ஆகியவர்களின் ஒவ்வொரு ஸ்தாபனமும் கவனம் செலுத்த வேண்டும். இவை அனைத்தும் கம்யூனிஸத்தின் முளைகள், ஆகவே, அவைகளைப் பேணிப்பாதுகாக்க வேண்டியது நமது பொதுவான, முக்கியமான கடமையாகும். போல்ஷ்விக் ஆட்சியின் ஒன்றரை வருட காலத்தில் நமது உணவு நிலைமையிலும், உற்பத்தி நிலைமையிலும் கஷ்டங்கள் இருந்தன என்றாலும் கூட, எல்லா வழிகளிலும் சந்தேகத்திற்கு இடமின்றி முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது; தானியக் கொள்முதல் மூன்று கோடி பூடுகளிலிருந்து (1917-ல் ஆகஸ்ட் 1-ம் தேதியிலிருந்து, 1918-ல் ஆகஸ்ட் 1-ம் தேதிவரையிலும்) 1 பத்து கோடி பூடுகளாக (1918-ல் ஆகஸ்ட் 1-ம் தேதியிலிருந்து, 1919-ல் மேமாதம் 1—ம் தேதிவரையிலும்) அதிகரித்திருக்கிறது; காய்கறித் தோட்டங்கள் விஸ்தரித்திருக்கின்றன; பயிர் செய்யாத நிலங்களின் அளவு சுருங்கிக் கொண்டிருக்கிறது; சொல்ல முடியாத அளவுக்கு எரிபொருள்கள் கிடைப்பது கஷ்டமான காரியமாக இருந்தாலும் கூட, ரெயில்வே போக்குவரத்து அபிவிருத்தியடையத் துவங்கியிருக்கிறது. இந்தப் பொதுவான பின்னணியில், பாட்டாளி மக்களின் அரசு அதிகாரத்தின் ஆதரவோடு கம்யூனிஸத்தின் முளைகள் உலர்ந்து போகாது அவை பூரண கம்யூனிஸமாக வளர்ந்து மலர்ச்சியடையும்.

*　　　*　　　*

"கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக்குகளின்" முக்கியத்துவம் பற்றி நாம் மிகத் தீவிரமாகச் சிந்தனை செய்ய வேண்டும்; அப்போது தான், இந்த மகத்தான தொடக்கத்திலிருந்து ஏற்படும் மிக முக்கியமான நடைமுறை படிப்பினைகளைத் தெரிந்து கொள்ள முடியும்.

முதலாவதும், முக்கியமானதுமான படிப்பினை என்னவென்றால், இந்தத் தொடக்கத்திற்கு எல்லா உதவிகளையும் கொடுக்க வேண்டும். "கம்யூன்" என்ற வார்த்தையை சர்வ சாதாரணமாக உபயோகிக்கிறார்கள். கம்யூனிஸ்டுகள் ஆரம்பிக்கிற எந்த வகையான தொழில் நிறுவனத்திற்கும், அல்லது அவர்களும் பங்கு கொள்கிற எந்த வகையான தொழில் நிறுவனத்திற்கும் 'கம்யூன்'' என்ற பெயரை உடனே அடிக்கடி கொடுக்கிறார்கள்; நீண்ட கால, விடாப்பிடியான தொடர்ச்சியான முயற்சியாலும், தூய கம்யூனிஸ்ட் வளர்ச்சியில் நடைமுறையில் சாதனைகளைப் பெறுவதன் மூலமாகவும் இந்த கௌரவமான பட்டத்தை வெல்ல வேண்டும் என்பதை எப்பொழுதும் மறந்து விடுகிறார்கள்.

அதனால்தான், 'உபயோகிப்பவர்களின் கம்யூன்கள்' என்ற சிறப்புப்பட்டம் சம்பந்தமாக மக்கள் கமிஸார்களின் குழுவின் 109

கட்டளையை ரத்து செய்ய வேண்டும் என்று மத்திய நிர்வாகக் குழுவில் பெரும்பாலான உறுப்பினர்களின் மனதில் உருவாகியிருக்கும் கருத்து சரியானது என்று நான் அபிப்பிராயப் படுகிறேன். இந்தச் சிறப்புப் பட்டம் எளிமையானதாக இருக்கட்டும்; நிற்க புதிய ஸ்தாபன அமைப்பு வேலையில் தொடக்ககால கட்டங்களில் ஏற்பட்ட தவறுகளுக்கும், குறை பாடுகளுக்கும் "கம்யூன்கள்" மீது பொறுப்பைச் சுமத்தக் கூடாது; ஆனால் (நியாயப்படி எப்படி இருக்க வேண்டும் என்றால்) மோசமான கம்யூனிஸ்டுகள்தான் அவைகளுக்கு பொறுப்பான வர்கள் "கம்யூன்" என்ற வார்த்தையைப் பொதுப்படையாக உபயோகிப்பதிலிருந்து நீக்கி விடுவதும், சிறப்புத் தன்மை சிறிதும் இல்லாதவர்களும் கூட அதைப் பற்றிக்கொள்வதைத் தடை செய்வதும், அல்லது ஒரு கம்யூனிஸ்ட் முறையில் தங்கள் வேலையை அமைக்கும் சக்தி படைத்தவர்கள் என்பதை நடைமுறையில் உண்மையாகவே வெளிப்படுத்தினவர்கள் (சுற்றிலும் உள்ள மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது என்று நிரூபிக்க பட்டால்) இத்தகைய கம்யூன்களுக்கு அந்தச் சிறப்புப் பட்டத் தைக் கொடுக்கலாம். சமுதாயத்தின் நலனுக்காகவும், எல்லா உழைப்பாளி மக்களின் நலனுக்காகவும், கைம்மாறு இல்லாமல் வேலை செய்யும் சக்தி இருக்கிறது என்பதை முதலில் எடுத்துக் காட்ட வேண்டும்; "ஒரு புரட்சிகரமான வழியில் வேலை செய்யும்" சக்தி இருக்கிறது என்பதையும், உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தும் சக்தி இருக்கிறது என்பதையும், முன் மாதிரியான முறையில் வேலையை அமைக்கும் சக்தி இருக்கிறது என்பதையும் முதலில் எடுத்துக் காட்ட வேண்டும்; அதற்குப் பிறகு, "கம்யூன்" என்ற கௌரவமான சிறப்புப் பட்டம் வேண்டும் என்று கையை நீட்ட வேண்டும்!

இந்த விஷயத்தில், "கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக்குகள்" மிகவும் மதிப்பு மிக்க விதிவிலக்காக இருக்கிறார்கள்; எவ்வாறென்றால், பயிற்சியற்ற தொழிலாளர்களும், மாஸ்கோ - காஜான் ரெயில்வே தொழிலாளர்களும் முதலில் செயல் மூலமாக கம்யூனிஸ்டுகளைப் போல் வேலை செய்யும் சக்தி படைத்தவர்கள் என்பதை வெளிப்படுத்திக் காட்டிய பிறகு, அவர்களுடைய நிறுவனத்திற்கு "கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக்" என்ற சிறப்புப் பட்டத்தைக் கொடுத்தார்கள். கடுமையான வேலை மூலமாகவும், நீண்டகால முயற்சியில் நடைமுறை வெற்றி மூலமாகவும், முன் மாதிரியான, உண்மையான கம்யூனிஸ்ட் ஸ்தாபனத்தின் மூலமாகவும் நிரூபித்துக் காட்டாமல் யாராவது தனது தொழிலை, நிறுவனத்தை, நிலையத்தை "கம்யூன்" என்று அழைத்தால், அவனை ஈவிரக்கமின்றி

கேலிக்கு ஆளாக்க வேண்டும்; வெறும் வாயாடி என்றும் திறமை யற்றவன் என்றும் பழிக்கு ஆளாக்க வேண்டும்; எதிர் காலத்தில் இவைக் கவனித்து, இதற்கு உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண்டும்.

மகத்தான தொடக்கத்தை, "கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக்கை" மற்றொரு நோக்கத்திற்கு, அதாவது கட்சியில் வேண்டாதவரை நீக்கிக் கழித்தலுக்கும் பயன் படுத்த வேண்டும். புரட்சியைத் தொடர்ந்து, ஆரம்பகால கட்டத்தில் "நேர்மையான" உயர் நாட்ட மற்ற மனப்போக்குடைய மக்கள் திரள் விசேஷமாக பயந்து நடுநடுங்கிக் கொண்டிருந்த போது, மென்ஷ்விக்குகளும், சோஷலிஸ்டுப் புரட்சிக்காரர்களும் உள்பட ஒருவர் பாக்கி இல்லாமல் முதலாளித்துவ அறிவாளிகள் அனைவரும் முதலாளித் துவத்தின் கூலிப்படைகள் என்ற பாத்திரத்தை வகித்து, நாச வேலை செய்து கொண்டிருந்த போது, துணிகரமான செயல் களைப் புரிகிறவர்களும் கேடு விளைவிக்கிறவர்களும் ஆளும் கட் சிக்குள் திடீரென நுழைவது முற்றிலும் தவிர்க்க முடியாத நிகழ்ச்சி யாகும். இந்த நிகழ்ச்சி இல்லாமல் ஒரு புரட்சி நடந்ததே கிடை யாது, இருக்கவும் முடியாது. முக்கியமான விஷயம் என்னவென்றால், ஆரோக்கியமான பலமான முன்னேற்ற மடைந்த வர்க்கத்தைச் சார்ந்து நின்று, ஆளும் கட்சியானது கட்சியிலிருந்து வேண்டாத வர்களை நீக்கிக் கழிக்க வேண்டும்.

நீண்ட காலத்திற்கு முன்பே நாம் இந்த வேலையைத் துவங்கி விட்டோம். இந்த வேலையை உறுதியாகவும், சளைக்காமலும் தொடர்ந்து நடத்த வேண்டும். யுத்தத்திற்காக கம்யூனிஸ்டுகளைத் திரட்டியது, இந்த விஷயத்தில் உதவி செய்தது; கோழைகளும், போக்கிரிகளும் கட்சியின் வரிசைகளிலிருந்து ஓடிவிட்டார்கள். நல்ல நீக்குதல்! கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கையில் இவ்வாறு குறைவதின் அர்த்தம் என்ன வென்றால், அதன் வலிமையிலும் தனிச்சிறப்பும் அமோகமாக அதிகரித்தன என்பது தான். கட்சி யிலிருந்து வேண்டாதவர்களை நீக்கிக் கழித்தலை நாம் தொடர்ந்து நடத்த வேண்டும்; இந்த நோக்கத்திற்காக; புதிய தொடக்கத்தை, "கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக்கை" பயன் படுத்திக் கொள்ள வேண்டும். ஆறுமாத கால "பரிசோதனை"க்குப் பிறகுதான் அல்லது "புரட்சிகரமான வழியில் வேலை செய்து," ஆறுமாதகால "தெரிந்தாயும் நிலை" முடிந்த பிறகுதான் கட்சிக்குள் உறுப்பினர் களைச் சேர்க்க வேண்டும். 1917-ம் ஆண்டு, அக்டோபர் 25-ம் தேதிக்குப் பிறகு கட்சியில் சேர்ந்துள்ளவர்களும், சில விசேஷ, வேலை மூலமாகவும், அல்லது சேவை மூலமாகவும், நம்பகமான வர்கள், விசுவாசமானவர்கள், கம்யூனிஸ்டுகளாக இருக்கும் சக்தி

படைத்தவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டாதவர்களுமான வர்கள் இதேபோல் பரிசோதனைக்கு ஆளாக்க வேண்டும்.

கட்சியிலிருந்து வேண்டாதவர்களை நீக்கிக் கழிக்க வேண்டும் என்று கம்யூனிஸ்டு முறையில் வேலை செய்வது உறுதியாகவும், மேன்மேலும் கோருகிறது; இவ்வாறு செய்தால், அரசின் இயந்திரம் அபிவிருத்தியடையும்; மேலும், விவசாயிகள், புரட்சிகரமான பாட்டாளி மக்களின் பக்கத்திற்கு இறுதியாக மாறிவருவதை மிக் அருகாமைக்குக் கொண்டுவரும்.

நிற்க, பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தின் கீழ் அரசின் இயந்திரத்தின் வர்க்கத் தன்மை பற்றி "கம்யூனிஸ்ட் ஸ~ போட் னிக்குகள்" குறிப்பிடத் தக்க பலமான வெளிச்சத்தைக் கொடுத்தி ருக்கிறார்கள். கட்சியின் மத்திய குழு "புரட்சிகரமான" வழியில் வேலை செய்வது பற்றி ஒரு கடிதத்தைத் தயார் செய்திருக்கிறது ஒரு லட்சத்திலிருந்து, இரண்டு லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கட்சியாக இருக்கவேண்டும் என்று மத்திய குழு ஆலோசனை கூறியிருக்கிறது (ஒரு முழுமையான கட்சியிலிருந்து வேண்டாதவர் களை நீக்கலும், கழித்தலும் செய்த பிறகு உறுப்பினர்கள் எண்ணிக்கை இப்படித்தான் இருக்கும் என்று அனுமானிக்கிறேன் இப்பொழுது எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கிறது.)

தொழிலாளர் சங்கங்களில் ஸ்தாபனரீதியாக ஒன்றுபட்டி ருக்கும் .தொழிலாளர்கள் இந்தக் கருத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ரஷ்யாவிலும், உக்ரேனிலும் அவர்கள் எண்ணிக்கை நாற்பது லட்சம், அவர்களில் மிகப் பெரும்பாலோர் பாட்டாளி மக்களின் அரசு அதிகாரத்திற்கு, பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்திற்கு ஆதரவாக இருக் கிறார்கள். இரண்டு லட்சம், நான்கு லட்சம்—சக்கரத்தின் நெம்புகோல் இணைப்பின் விகிதாச்சாரம் இப்படித்தான் இருக்கிறது—இவ்வாறு கூறலாம் என்றால், இதைத் தொடர்ந்து லட்சோப லட்சம் விவசாயிகள் இருக்கிறார்கள்; இவர்கள் மூன்று முக்கியமான பிரிவுகளாகப் பிரிந்திருக்கிறார்கள். எண்ணிக்கையில் ஏராளமாக இருப்பவர்களும், பாட்டாளி மக்களுக்கு மிக நெருக்க மாக இருப்பவர்களுமான அரைப் பாட்டாளி மக்கள் அல்லது ஏழை விவசாயிகள்; அவர்களுக்குப் பிறகு, நடுத்தர விவசாயிகள் கடைசியாக எண்ணிக்கையில் மிகச் சிறிய பிரிவாக இருப்பவர்கள் குலாக்குகள், அல்லது கிராமப்புற முதலாளிகள்.

தானிய வியாபாரம் செய்வதும், பஞ்சத்தைப் பயன்படுத்திக் கொண்டு லாபம் சம்பாதிக்க முடியும் என்பது சாத்தியமாக

இருப்பது வரையிலும் விவசாயி ஒருவரை உழைக்கும் மனிதனுகவும், ஒரு அரை லாபம் சம்பாதிப்பவனுகவும் நீடித்து இருப்பான் (பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தின் கீழ் கொஞ்ச காலம் வரையிலும் இது தவிர்க்க முடியாததாகும்.) லாபம் சம்பாதிக்கிறவன் என்ற நிலையில், அவன் நமக்கு விரோதமாக இருக்கிருன்; பாட்டாளி மக்களின் அரசுக்கு அவன் விரோதமாக இருக்கிருன்; முதலாளிகளோடும், மென்ஷ்விக் ஷெர், அல்லது தானிய வியாபாரம் செய்ய சுதந்திரம் வேண்டும் என்று கூறுகிற சோஷலிஸ்டு புரட்சிக்காரரான பி. செர்னெனகோவ் வரையிலும் உள்ளவர்கள் உள்பட முதலாளிகளின் சேவகர்களோடும் ஒத்துப் போக விரும்புகிருன். ஆனுல், ஒரு உழைக்கும் மனிதன் என்ற நிலையில், பாட்டாளி மக்களின் அரசின் ஒரு நண்பனுகவும், முதலாளிகளையும், நிலச்சுவான்தார்களையும் எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் தொழிலாளியின் மிக விசுவாசமுள்ள நேச சக்தியாகவும் விவசாயி இருக்கிருன். உழைக்கும் மனிதர்கள் என்ற நிலையில் விவசாயிகள்—லட்சோப லட்சம் விவசாயிகளில், ஏராளமானவர்கள்—அரசு "இயந்திரத்திற்கு" ஆதரவு கொடுக்கிருர்கள்; இந்த அரசு "இயந்திரத்திற்கு" ஸ்தாபன ரீதியாக அமைந்துள்ள லட்சோப லட்சம் பாட்டாளி மக்கள் அடங்கியுள்ள பாட்டாளி மக்களின் முன்னணிப் படையின் ஒரு லட்சம், அல்லது இரண்டு லட்சம் கம்யூனிஸ்டுகள் தலைமை தாங்குகிருர்கள்.

இந்த அரசு, வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் பெரிதும் ஜனநாயகத் தன்மை கொண்டதாக இருக்கிறது; உழைக்கிற, சுரண்டப்பட்ட மக்களோடு பெரிதும் நெருங்கிய தொடர்புள்ள ஒரு அரசாக இருக்கிறது; இத்தகைய ஒரு அரசு, இது வரையிலும், இருந்ததே கிடையாது.

"கம்யூனிஸ்ட் ஸு போட்னிக்" போன்ற பாட்டாளி மக்களின் துல்லியமான வேலை மாத்திரம்தான் பாட்டாளி மக்களின் அரசுக்கு விவசாயிகள் பூரணமாக அன்பையும், மரியாதையையும் செலுத்தும்படி செய்யும். இத்தகைய வேலைதான், இத்தகைய வேலை மாத்திரம்தான் நாம் செய்வது சரிதான் என்றும், கம்யூனிஸம் நல்லதுதான் என்றும் விவசாயிகள் நம்பும்படி செய்யும்; மேலும் மனமார்ந்த நமது நேச சக்தியாக அவர்களை மாற்றியமைக்கும்; இவ்வாறு, இது உணவுத் துறையில் நமக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களைப் பூரணமாக அகற்றுவதற்கும், தானியங்களை உற்பத்தி செய்வது, வினியோகம் செய்வது

ஆகிய பிரச்சினையில் முதலாளித்துவத்தை கம்யூனிஸம் பூரணமாக வெல்வதிலும், கம்யூனிஸத்தை நிபந்தனையின்றி உறுதிப் படுத்துவதிலும் நம்மை அழைத்துச் செல்லும்.

1919-ஜுன்28,
மாஸ்கோ அரசாங்கப்
பிரசுரத்தாரால்
ஒரு தனிப்புத்தகமாக
1919-ல் ஜுலை மாதத்
தில் பிரசுரிக்கப்பட்டது.
கையொப்பம்-என் லெனின்.

திரட்டப்பட்ட
நூல்கள்—
தொகுப்பு-29
—பக்கம் 418-34

# பாட்டாளி மக்களின் சர்வாதிகார சகாப்தத்தில் அரசியலும், பொருளியலும்.

சோவியத் ஆட்சியின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா நடைபெறும் தருணத்தில், தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் பிரச்சினை பற்றி ஒரு சிறு பிரசுரமொன்றை எழுதலாம் என்று நான் உத்தேசித்திருக்கிறேன். ஆனால், அன்றாட வேலைகள் ஏராளமாக இருப்பதன் காரணமாக, அந்த பிரசுரத்தின் சில பகுதிகளுக்கு பூர்வாங்கமான தயாரிப்புகளைச் செய்வதைத் தவிர வேறு எதுவும் இதுவரை என்னால் செய்ய முடியவில்லை. ஆகவே, இந்தப் பிரச்சினைப் பற்றி மிக முக்கியமானது என்று நான் கருதுகிற விஷயங்களைப் பற்றி மாத்திரம் சுருக்கமாக, பொதுமைப் படுத்தப் பட்ட ஒரு விரிவுரையைக் கட்டுரை வடிவத்தில் எழுதுவது என்று நான் முடிவு செய்திருக்கிறேன். ஒரு பொதுமைப் படுத்தப்பட்ட விரிவுரையில் பல அனுகூலக் குறைவுகளும், குறைபாடுகளும் இருக்கும் என்பது உண்மையே. இருப்பினும், ஒரு சஞ்சிகைக் கட்டுரை வடிவில் எழுதினால் அது கருத்தில் உள்ள லட்சியத்தை ஓரளவு அடையலாம் என்று நினைக்கிறேன்; இது பல்வேறு நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுகள் விவாதிப்பதற்கு அடிப்படையாக அமையலாம்.

முதலாளித்துவத்திற்கும், கம்யூனிஸத்திற்கும் இடையே ஒரு திட்டவட்டமான மாறுதல் காலகட்டம் அடங்கியிருக்கிறது என்பதிலும், இந்த இரண்டு சமூக பொருளாதாரத்தின் அம்சங்களையும், இயல்புகளையும் இது இணைக்க வேண்டும் என்பதிலும் தத்துவ ரீதியாக சந்தேகமே இருக்க முடியாது. இந்த மாறுதல் கால கட்டமானது, செத்துப் போய்க் கொண்டிருக்கும் முதலாளித்துவத்திற்கும், இப்பொழுது பிறந்து, இன்னும் முதிராத நிலையில் உள்ள கம்யூனிஸத்திற்கும் இடையே நடைபெறும் ஒரு போராட்டத்தின் கால கட்டமாகவே, அல்லது வேறு

வகையில் கூறுவது என்றால், முறியடிக்கப்பட்ட அதே சமயத்தில் இன்னும் அழிக்கப்படாத முதலாளித்துவத்திற்கும், இப்பொழுது பிறந்திருக்கிற அதே சமயத்தில் பலஹீனமான கம்யூனிஸத்திற்கும் இடையே நடைபெறும் போராட்டத்தின் கால கட்டமாகவே இருக்க முடியும்.

இந்த மாறுதல் அம்சங்களால் வேறுபடுத்திக் காட்டுகிற சரித்திர பூர்வமான ஒரு முழு சகாப்தத்தின் தேவை மார்க்ஸிஸ்டுகளுக்கு மாத்திரமின்றி, வளர்ச்சியின் தத்துவத்தோடு எந்த அளவிலாவது பரிச்சயமுள்ள எந்தப் படித்தவனுக்கும் தெளிவாகத் தெரியும். இருப்பினும், சோஷலிஸத்திற்கு மாறிச் செல்லும் பிரச்சினைபற்றி இன்றைய சிறு முதலாளித்துவ ஜனநாயக வாதிகளிடமிருந்து நாம் கேள்விப்படும் பேச்சுக்கள் எல்லாம், இந்தத் தெளிவான உண்மையைப் புறக்கணிக்கின்றன. (போலி சோஷலிஸ்டு முத்திரை அவைகளுக்கு இருக்கின்றன; அவர்கள் அனைவரும், இரண்டாவது, அகிலத்தின் தலைவர்களாக இருக்கிறார்கள்; மாக்டனல்ட், ஜீன்வோங்கே, காட்ஸ்கி, பிரெடரிக் ஆட்லர் போன்ற தனிப்பட்டவர்களும் அதில் அடங்கி இருக்கிறார்கள்) வர்க்கப் போராட்டத்தை வெறுப்பது, அதைத் தவிர்க்கலாம் என்று கனவு காண்பது, அதை இணக்கமாக்குவதற்கு முயற்சி செய்வது, அதைச் சமரசம் செய்யவும் கூர்மையான இக்கட்டான நிலைகளை நீக்கவும் முயல்வது ஆகியவை சிறு முதலாளித்துவ ஜனநாயக வாதிகளை வேறுபடுத்திக் காட்டுகின்றன. ஆகவே, இத்தகைய ஜனநாயக வாதிகள் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்திற்கு மாறிச் செல்லும் சரித்திர பூர்வமான ஒரு கட்டத்தின் தேவையை அங்கீகரிப்பதைத் தவிர்க்கிறார்கள்; அல்லது இந்த இரண்டு சக்திகளில் ஒன்றின் போராட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்குப் பதிலாக, போராடுகிற இரண்டு சக்திகளையும் இணக்கப் படுத்திக் கொண்டு போவதற்காக திட்டங்களை கற்பனையில் உருவாக்குவது தங்கள் கடமை என்று கருதுகிறார்கள்.

## 2

மிகப் பெரிய அளவிற்கு பின் தங்கிய நிலைமையிலும், சிறு முதலாளித்துவத் தன்மையிலும் நமது நாடு இருப்பதால், பாட்டாளி மக்களின் சர்வாதிகாரமானது முன்னேற்றமடைந்த நாடுகளில் இருக்கும் நிலைமையிலிருந்து சில குறிப்பிட்ட நுணுக்கமான விஷயங்களில் ரஷ்யாவில் தவிர்க்க முடியாத வகையில் மாறுபட்

டிருக்கும். ஆனால், அடிப்படையான சக்திகள்—சமூக பொருளாதாரத்தின் அடிப்படையான வடிவங்கள்—எந்த முதலாளித்துவ நாட்டிலும் இருப்பது போலவே ரஷ்யாவிலும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கின்றன; ஆகவே, தனிப்பட்ட சில நுணுக்கமான விஷயங்கள் முக்கியத்துவம் இல்லாத விஷயங்களுக்கே பொருத்த மானதாக இருக்கும்.

சமூக பொருளாதாரத்தின் அடிப்படையான வடிவங்கள் என்னவென்றால் முதலாளித்துவம், சிறிய அளவில் பண்ட உற்பத்தி, கம்யூனிஸம் ஆகியவைதான். அடிப்படையான சக்திகள் என்ன வென்றால், முதலாளிகள், சிறு முதலாளிகள் (குறிப்பாக விவசாயிகள்) பாட்டாளி மக்கள் ஆகியவர்கள்தான்.

பாட்டாளி மக்களின் சர்வாதிகார சகாப்தத்தினால் ரஷ்யாவின் பொருளாதார அமைப்பு, ஒரு மிகப் பெரிய அரசு அளவில் கம்யூனிஸ்ட் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒன்று பட்டுள்ள உழைப்பின் போராட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. மேலும், சிறிய அளவில் நடைபெறும் பண்ட உற்பத்தி முறைக்கு விரோதமான போராட்டத்தை நோக்கியும், இன்னும் நீடித்திருக்கும் முதலாளித்துவ முறைக்கு விரோதமான போராட்டத்தை நோக்கியும், சிறிய அளவில் பண்ட உற்பத்தி முறை என்ற அடிப்படையில் புதிதாகத் தலைதூக்கும் முதலாளித்துவத்திற்கு விரோதமான போராட்டத்தை நோக்கியும் முதல் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

ரஷ்யாவில், உழைப்பானது கம்யூனிஸ்ட் முறையில் ஒன்று படுத்தப் பட்டிருக்கிறது; அதாவது முதலாவதாக, உற்பத்தி சாதனங்களில் தனி உடமை ஒழிக்கப்பட்டிருக்கிறது; இரண்டாவதாக, பாட்டாளி மக்களின் அரசு அதிகாரமானது அரசுக்குச் சொந்தமான நிலத்தில் பெரிய அளவில் உற்பத்தி செய்யும் முறையையும், தேசிய ரீதியில் அரசுக்குச் சொந்தமான தொழில்களில் பெரிய அளவில் உற்பத்தி செய்யும் முறையையும் அமைத்துக் கொண்டிருக்கிறது; உற்பத்தியின் பல்வேறு கிளைகளுக்கும், பல்வேறு தொழில்களுக்கும் உழைப்புச் சக்தியை வினியோகம் செய்து கொண்டிருக்கிறது; மேலும் அரசுக்கு சொந்தமான மக்கள் உபயோகிக்கும் ஏராளமான பொருள்களை உழைக்கும் மக்களுக்கு வினியோகம் செய்து வருகிறது.

ரஷ்யாவில் கம்யூனிஸத்தின் "முதல் நடவடிக்கைகள்" என்று நாம் கூறுகிறோம். (1919-ல் மார்ச் மாதத்தில் நிறைவேற்றப்

பட்ட நமது கட்சியின் கொள்கைத் திட்டத்திலும் அவ்வாறே குறிப்பிடப்பட்டிருக்கிறது); ஏனெனில், நமது நாட்டில் இவைகளையெல்லாம் அரைகுறையாகத் தான் செயல்படுத்தி இருக்கிறோம்; அல்லது வேறு வகையில் கூறுவது என்றால், அவைகளின் சாதனைகள் தொடக்க கட்டத்திலேயே இருக்கின்றன. பொதுவாக உடனடியாக எவைகளைச் செய்துமுடிக்க முடியுமோ அவைகளை உடனடியாக, ஒரே ஒரு புரட்சிகரமான வீச்சில் செய்து முடித்திருக்கிறோம்; உதாரணமாக, பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் அமைக்கப்பட்டவுடன், முதல் தினத்தன்றே, அதாவது 1917-ல் அக்டோபர் 26-ம் தேதியன்றே (நவம்பர் 8-ம் தேதி) பெரிய நிலச்சுவான்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்காமலே நிலத்தில் தனி உடமை ஒழிக்கப்பட்டது—பெரிய நிலச்சுவான்தார்களின் உரிமை அதிகரிக்கப்பட்டது.

ஒரு சில மாதங்களில் பெரிய முதலாளிகளுக்குச் சொந்தமான பஞ்சாலைகள், தொழிற்சாலைகள், கூட்டுப் பங்கு கம்பெனிகள், பாங்குகள், ரெயில்வேக்கள், இன்னும் இவை போன்றவை நஷ்ட ஈடு கொடுக்காமல் எதார்த்தத்தில் பறிமுதல் செய்யப்பட்டன. தொழில் துறையில் பெரிய அளவில் உற்பத்தி செய்யும் முறையை அரசு அமைப்பது, "தொழிலாளர்கள் கட்டுப்பாடு செய்வது" என்ற நிலையிலிருந்து, "தொழிலாளர்கள் நிர்வாகம் செய்வது" என்ற நிலைக்கு மாறிச் செல்வது ஆகியவை மொத்தத்தில் ஏற்கெனவே செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன; ஆனால், விவசாயத் துறை சம்பந்தப்பட்டவரையிலும், அந்தப் பணி ("அரசு பண்ணைகள்," அதாவது, அரசுக்குச் சொந்தமான நிலத்தில், தொழிலாளர்களின் அரசு பெரிய பண்ணைகளை அமைக்கும் பணி) இப்பொழுதுதான் துவங்கப்பட்டிருக்கிறது அதே மாதிரியாக, விவசாயத்தில் சிறிய அளவில் பண்டங்களை உற்பத்தி செய்யும் முறையிலிருந்து, விவசாயத்தில் கம்யூனிஸ்ட் முறையில் உற்பத்தி செய்வதை நோக்கி மாறிச் செல்வது என்ற நிலையில், சிறிய விவசாயிகளின் பல்வேறு வடிவங்களில் உள்ள கூட்டுறவு சங்கங்களை அமைக்கும் பணியை இபபொழுது தான் நாம் மேற்கொண்டிருக்கிறோம் * தனிநபர்களின் வியாபாரத்திற்குப் பதிலாக, பொருள்களை வினியோகம் செய்வதில் அரசு

---

* நமக்குத் தெரிந்த வரையிலும், சோவியத் ரஷ்யாவில் 3536 "அரசாங்கப் பண்ணைகளும்", 1961 'விவசாய கம்யூன்களும்" இருக்கின்றன. விவசாய கூட்டு நிறுவனங்கள் 3696 இருக்கின்றன. நமது மத்திய புள்ளி விவரக் குழு அரசாங்கப் பண்ணைகள், கம்யூன்கள் ஆகியவைகளின் உண்மையான எண்ணிக்கையைப் பற்றிய விவரங்களைத் திரட்டிக் கொண்டிருக்கின்றன. 1919-ல் நவம்பரில் அதன் முடிவுகள் கிடைக்கும்.

அமைத்து வரும் நிறுவனங்களைப் பற்றியும் இதேபோல் கூறலாம்; அதாவது அரசு தானியங்களைக் கொள்முதல் செய்து நகரங்களுக்கு வினியோகம் செய்வது, தொழிற்சாலைகளில் உற்பத்தியான பொருள்களை கிராமங்களுக்கு வினியோகம் செய்வது ஆகியவை சம்பந்தமாகவும் இதே போல் கூறலாம்.

விவசாய உற்பத்தி முறை சிறிய அளவில் பண்ட உற்பத்தி முறையிலேயே நீடித்து இருக்கிறது. இங்கு முதலாளித்துவத்திற்கு பெரிதும் விரிவான, ஆரோக்கியமான ஆழமாக வேரூன்றிய அடிப் படை இருக்கிறது; முதலாளித்துவம் நீடித்து நிலைத்திருக்கிற, ஒரு அடிப்படையாக இது இருக்கிறது; அல்லது, கம்யூனிஸத்திற்கு எதிராக ஒரு கடுமையான போராட்டத்தில் புதிதாகத் தலை தூக்கு வதற்கு ஒரு அடிப்படையாக இருக்கிறது. இந்த போராட்டத்தின் வடிவங்கள் என்னவென்றால், தானியங்களை (மற்ற பொருள்களை யும்) அரசு கொள்முதல் செய்வதற்கும், பொதுவாக அரசே பொருள்களை வினியோகம் செய்வதற்கும் எதிராக தனி நபர்கள் லாப வேட்டை ஆடுவது, தனி நபர்கள் உலக வாணிகம் செய்வது என்பன ஆக இருக்கின்றன.

## 3

கோட்பாட்டளவான இந்த தத்துவ ரீதியான அறுதியுரைகளை விளக்கிக் காட்டுவதற்கு, எதார்த்தமான புள்ளி விவரங்களை மேற் கோள் காட்டுகிறோம்.

உணவு இலாகா மக்கள் அமைச்சரகத்தின் புள்ளி விவரப்படி, 1917-ல் ஆகஸ்ட் 1-ம் தேதிக்கும் 1918-ல் ஆகஸ்ட் 1-ம் தேதிக்கும் இடையே ரஷ்யாவில் அரசு கொள்முதல் செய்த தானியம் 3,00,000,00 பூடுகள்; அதற்கு அடுத்த ஆண்டில் கிடைத்தன, சுமார் 110,000,000 பூடுகள் கிடைத்தன. 1918-ல் (ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர்) 37,000,000 பூடுகள் கிடைத்தன; அதே காலகட்டத்திற்கு முதல் மூன்றுமாத காலகட்டத்தில் (1919-20) அநேகமாக 45,000,000 பூடுகள் எதிர்ப்பார்க்கப்படுகின்றன.

முதலாளித்துவத்தின் மீது கம்யூனிஸத்தின் வெற்றி என்ற கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், இந்த விஷயத்தில் மெதுவாக, அதே சமயத்தில் உறுதியாக அபிவிருத்தி ஏற்பட்டுக் கொண்டு வருவதை இந்த புள்ளி விவரங்கள் தெளிவாக எடுத்துக் கூறு கின்றன. உலகில் வேறு எந்த இடத்திலும் ஒப்பிட முடியாத

அளவு ஏற்பட்டிருக்கும் கஷ்ட நஷ்டங்களுக்கு இடையே இந்த அபிவிருத்திகளை அடைந்திருக்கிறோம்; ரஷ்யாவிலும், வெளி நாட்டிலும் உள்ள முதலாளிகள் உலகத்திலுள்ள வலிமை மிக்க வல்லரசுகளின் சக்திகளையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு உள்நாட்டு யுத்தத்தைத் துவங்கியிருப்பதால் கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஆகவே, எல்லா நாடுகளிலும் உள்ள முதலாளிகளும், அவர்களுடைய மறைமுகமாகவும், பகிரங்கமாகவும் இருக்கிற கையாட்களும் (இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த "சோஷலிஸ்டுகள்") பொய்ப் பிரச்சாரத்தையும், அவதூறு பிரச்சாரத்தையும் நடத்தினாலும் கூட, பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தின் அடிப்படையான பொருளாதாரப் பிரச்சினை சம்பந்தப்பட்ட வரையிலும் நமது நாட்டில் முதலாளித்துவத்தின் மீது கம்யூனிஸம் வெற்றி கொள்வதற்கு உத்தரவாதம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது என்ற ஒரு விஷயம் சந்தேகத்திற்கே இடமின்றி உறுதியாக நிலைத்திருக்கிறது. உலக முழுவதும் முதலாளிகள் போல்ஷ்விசத்திற்கு எதிராகக் கோபக் கனலைக் கக்குகிறார்கள்; போல்ஷ்விசத்திற்கு எதிராக ராணுவ நடவடிக்கைகளையும், சூழ்ச்சி நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார்கள்; ஏனெனில், ராணுவ பலத்தின் மூலமாக நாம் நசுக்கப்படவில்லையென்றால், சமூக பொருளாதாரத்தைப் புனரமைப்பதில் வெற்றியடைவதைத் தவிர்க்க முடியாது என்பதை அவர்கள் பூரணமாக உணர்கிறார்கள். இவ்வாறு நம்மை நசுக்குவதற்கு அவர்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் வெற்றியைக் கொடுக்கவில்லை.

நமக்குக் கிடைத்த குறுகிய கால அவகாசத்தில் ஏற்கெனவே எந்த அளவுக்கு நாம் முதலாளித்துவத்தை முறியடித்திருக்கிறோம் என்பதையும், நம்ப முடியாத அளவுக்கு எத்தகைய கஷ்ட நஷ்டங்களுக்கு இடையே நாம் செயல்பட வேண்டியிருந்தது என்பதையும் பொதுமைப்படுத்திக் கொடுத்திருக்கிறோம். பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து அவற்றை தெரிந்துகொள்ளலாம். மத்திய புள்ளி விவரக் குழுவானது தானியத்தின் உற்பத்தி நிலை, உபயோகப் படுத்தும் நிலை பற்றி பத்திரிகைக்கு விவரங்களை தயார் செய்திருக்கிறது; சோவியத் ரஷ்யா முழுமையின் புள்ளி விவரமல்ல; இருபத்தி ஆறு மாநிலங்களின் புள்ளி விவரம் மாத்திரம் இதில் அடங்கி இருக்கின்றன.

அதன் முடிவுகள் பின்வருமாறு:

| சோவியத் ரஷ்யாவில் 26 மாநிலங்கள் | பத்து லட்சக் கணக்கில் ஜனத் தொகை | தானிய உற்பத்தி (விதை தானியம் நீங்கலாக) பத்து லட்சக் கணக்கில் பூடுகள். | கொடுக்கப் பட்ட தானியம்—பத்து லட்சக் கணக்கில் பூடுகள். | | மக்களுக்குக் கொடுக்கக் கிடைக்கும் தானியம்—பத்து லட்சக் கணக்கில் பூடுகள். | தானிய உபயோகம்—ஒரு நபருக்கு பூடுகள். |
|---|---|---|---|---|---|---|
| | | | உணவு இலாகா அமைச்சரவை. | லாபக் கொள்ளையடிப்பவர்கள். | | |
| உற்பத்தி செய்யும் மாநிலங்கள் | நகரம் - 4.4<br>கிராமம் - 28.6 | —<br>625.4 | 20.9<br>— | 20.6<br>— | 41.5<br>481.8 | 9.5<br>16.9 |
| உபயோகிக்கும் மாநிலங்கள் | நகரம் - 5.9<br>கிராமம் - 13.8 | —<br>114.0 | 20.0<br>12.1 | 20.0<br>27.8 | 40.0<br>151.4 | 6.8<br>11.0 |
| மொத்தம் (26 மாநிலங்கள்) | 52.7 | 739.4 | 53.0 | 68.4 | 714.7 | 13.6 |

இவ்வாறு, நகரங்களுக்கு உத்தேசமாக அரைப்பகுதி உணவு இலாக்க அமைச்சரவையாலும், அரைப்பகுதி லாபக் கொள்ளை யடிப்பவர்களாலும் தானியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நகர தொழிலாளர்கள் உபயோகித்த உணவு தானியம் பற்றி 1918-ல் கவனமாகப் பரிசிலனை செய்தபோது, இதே விகிதாச்சாரம் வெளிப் படுத்தப்பட்டது. அரசு வழங்கும் போட்டிக்கு தொழிலாளர்கள் லாபக் கொள்ளை அடிப்பவர்களுக்குக் கொடுக்கும் பணத்தில் ஒன் பதில் ஒரு பங்குதான் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண் டும். அரசின் விலையைக் காட்டிலும், லாப வேட்டை ஆடுகிறவர் களின் ரொட்டியின் விலை பத்து மடங்கு அதிகமாக இருக்கிறது! தொழிலாளர்களின் வரவு செலவு கணக்கைக் கவனமாகப் பரிசிலனை செய்ததில் இந்த உண்மை வெளிப்பட்டது.

## 4

மேலே குறிப்பிட்டுள்ள புள்ளி விவரங்களைக் கவனமாகப் பரிசிலனை செய்தால், ரஷ்யாவின் இன்றைய பொருளாதாரத்தின் அடிப்படையான அம்சங்களின் உண்மையான படத்தை எடுத்துக் காட்டும்.

தலைமுறை தலைமுறையாக அடக்கி ஒடுக்கி, சுரண்டி வந்த நிலச்சுவான்தார்கள், முதலாளிகள் ஆகியவர்களின் பிடியிலிருந்து உழைக்கும் மக்கள் விடுதலையடைந்திருக்கிறார்கள். உண்மையான சுதந்திரம், உண்மையான சமத்துவம் ஆகிய திசையை நோக்கி எடுத்திருக்கும் இந்த நடவடிக்கையைப் பரப்பிலும், பரிமாணத் திலும், வேகத்திலும் உலகில் வேறு எங்குமே ஒப்பிட முடியாத அளவுக்கு உன்னதமான இந்த நடவடிக்கையை முதலாளித் துவத்தை ஆதரிப்பவர்கள் (சிறு முதலாளித்துவ ஜனநாயக வாதிகள் உள்பட) புறக்கணிக்கிறார்கள்; இவர்கள் சுதந்திரத்தைப் பற்றியும், சமத்துவத்தைப் பற்றியும் பேசும்போது, அவர்கள் சட்டமன்ற முதலாளித்துவ ஜனநாயகத்தையே, பொருள் படுகிறார்கள்; இது, பொதுவாக "ஜனநாயகம்" என்றும், அல்லது "தூய ஜனநாயகம்" என்றும் (காட்ஸ்கி) பொய்யாகப் பிரகடனம் செய்கிறார்கள்.

ஆனால், உழைக்கும் மக்கள் உண்மையான சமத்துவத்திலும், உண்மையான சுதந்திரத்திலும் மாத்திரம் அக்கறை கொண்டிருக் கிறார்கள் (நிலச் சுவான்தார்கள், முதலாளிகள் ஆகியவர் களிடமிருந்து சுதந்திரம்); அதனால்தான், அவர்கள் சோவியத் சர்க்காருக்கு இத்தகைய உறுதியான ஆதரவை அளிக்கிறார்கள்.

இந்த விவசாய நாட்டில் ஒட்டு மொத்தமாக விவசாயிகள் தான் பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்திலிருந்து முதலில் ஆதாயமடைகிறவர்களாகவும், அதிகமாக ஆதாயமடைந்திருப்பவர்களாகவும், உடனடியாக ஆதாயம் பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். ரஷ்யாவில் விவசாயிகள் நிலச்சுவான்தார்கள், முதலாளிகள் ஆகியவர்களின் கீழ் பட்டினி பசிக்கு ஆளாகி இருந்தார்கள். நமது சரித்திரத்தின் நீண்ட பல நூற்றாண்டுகள் முழுவதிலும் விவசாயிகள் தனக்காக வேலை செய்வதற்கு ஒரு வாய்ப்பைப் பெற்றதே கிடையாது; முதலாளிகளுக்கும், நகரங்களுக்கும், ஏற்றுமதி செய்வதற்கும் லட்சோப லட்சம் பூடு தானியங்களைக் கொடுத்துவிட்டு, அதே சமயத்தில் விவசாயிகள் பட்டினி கிடந்தார்கள். பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தின் கீழ் விவசாயிகள் முதல் தடவையாக தங்களுக்காக வேலை செய்கிறார்கள், நகரவாசிகளைக் காட்டிலும் நல்ல முறையில் உணவருந்துகிறார்கள். முதல் தடவையாக விவசாயிகள் உண்மையான சுதந்திரத்தைப் பார்த்திருக்கிறார்கள்; அதாவது, தங்களுடைய ரொட்டியைச் சாப்பிடுவதற்கு சுதந்திரத்தையும், பட்டினியிலிருந்து சுதந்திரத்தையும், பார்த்திருக்கிறார்கள். நிலத்தை விநியோகம் செய்வதில், அதிகப்பட்சம் சமத்துவம் நிலைநாட்டப் பட்டது என்பது நமக்குத் தெரியும்; பெரும்பாலான தருவாய்களில், "உணவு அளிக்க வேண்டிய நபர்களின்" எண்ணிக்கையின் அடிப்படையில் விவசாயிகள் நிலத்தைப் பகிர்ந்து கொடுக்கிறார்கள்.

சோஷலிஸம் என்றால் அதன் அர்த்தம் வர்க்கங்களை ஒழிப்பது தான்.

வர்க்கங்களை ஒழிக்கும் பொருட்டு, முதலாவதாக நிலச்சுவான்தார்களையும், முதலாளிகளையும் வீழ்த்த வேண்டியது அவசியமாகும். நமது கடமையின் இந்தப்பகுதி நிறைவேற்றப் பட்டிருக்கிறது; ஆனால், அது, ஒரு பகுதியாகத்தான் இருக்கிறது; மேலும் அது மிகக் கஷ்டமான பகுதியும் அல்ல. வர்க்கங்களை ஒழிக்கும் பொருட்டு, இரண்டாவதாக தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளிக்கும், விவசாயிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை ஒழித்து அவர்கள் அனைவரையும் தொழிலாளர்களாக மாற்ற வேண்டியது அவசியமாகும். உடனே ஒரே சமயத்தில் இதைச் செய்யமுடியாது, மற்ற வேலைகளோடு ஒப்பிடும்போது இது மிகவும் கஷ்டமான பணியாகும்; நீண்ட காலம் இதற்குத் தேவைப்படும். ஒருவர்க்கத்தை வீழ்த்துவதன் மூலமாகத் தீர்க்கக் கூடிய ஒரு பிரச்சினை அல்ல இது. சமூக பொருளாதாரம் முழுமையையும் ஸ்தாபன ரீதியாக

புனரமைப்பதன் மூலமாகவும், தனிப்பட்ட முறையில், ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல், சிறிய அளவில் பண்ட உற்பத்தி செய்யும் முறையிலிருந்தும், பெரிய அளவில் சமூக உற்பத்தியை அமைப்பதை நோக்கி மாறிச் செல்வதன் மூலமாகவும் மாத்திரம் தான் அதற்குத் தீர்வுகாண முடியும். இந்த மாறிச் செல்லும் நிலைக்கு நீண்டகாலம் தேவைப்படுகிறது; அவசரமான, கவனக் குறைவான நிர்வாக நடவடிக்கைகள் மூலமாகவும், சட்ட நடவடிக்கைகள் மூலமாகவும் அது தாமதப்படுத்தப் படலாம், சிக்கலை உண்டாக்கலாம். விவசாயிகளுக்கு விவசாயம் செய்யும் முறையை அபிவிருத்தி செய்வதற்கும், தீவிரமாக அதைச் சீர்திருத்தி அமைப்பதற்கும் அனுகூலமாக உதவி செய்வதன் மூலமாக அதைத் துரிதப்படுத்த முடியும்.

இரண்டாவதாகவும், மிகக் கஷ்டமான பகுதியாகவும் இருக்கிற பிரச்சினைக்குத் தீர்வுக்காணும் பொருட்டு, முதலாளித்துவத்தை முறியடித்த பிறகு பாட்டாளி மக்கள் பின்வரும் அடிப்படையான பாதையை நோக்கி தங்களது கொள்கையைச் செயல்படுத்த வேண்டும்; அதாவது, நிலத்தைச் சொந்தமாக வைத்திருக்கும் விவசாயிகளிலிருந்து, உழைக்கும் விவசாயிகளை, கூலிக்கு அமர்த்துகிற விவசாயிகளிலிருந்து வேலை செய்கிற விவசாயிகளை, லாபக் கொள்ளையடிக்கும் விவசாயிகளிலிருந்து உழைக்கும் உழவர்களை வேறுபடுத்திக் காட்டி, தனியே பிரிக்க வேண்டும்.

சோஷலிசத்தின் முழுச்சாராம்சமும் இவ்வாறு வேறுபடுத்திக் காட்டுவதில் அடங்கி இருக்கிறது.

நாம் இங்கு குறிப்பிடுகிற வேறுபடுத்திக் காட்டுவதானது மிகமிகக் கஷ்டமான காரியமாகும்; ஏனெனில் உண்மையான வாழ்வில், "விவசாயியின்" அம்சங்கள் அனைத்தும்—அவை மாறுபட்டிருப்பினும் கூட, முரண்பாடுடையதாக இருப்பினும் கூட, மொத்தமாக ஒன்றில் கலந்து ஒன்றாக இருக்கின்றன. இருப்பினும் வேறுபடுத்திக் காட்டுவது சாத்தியமானதே; அது சாத்தியமானது என்பது மாத்திரமல்ல, விவசாய உற்பத்தி முறை, விவசாயியின் வாழ்வு ஆகியவற்றின் நிலைமைகளிலிருந்து தவிர்க்க முடியாத வகையில் அது தோன்றுகிறது. நிலச்சுவான்தார்கள், முதலாளிகள், விவசாயிகளை கூலிக்கு அமர்த்துகிறவர்கள், லாபக் கொள்ளை அடிப்பவர்கள், மிகவும் ஜனநாயகத் தன்மை கொண்ட முதலாளித்துவ குடியரசுகள் உட்பட அவர்களுடைய அரசு ஆகியவர்களால் உழைக்கும் உழவர்கள் தலைமுறை தலைமுறையாக அடக்கி ஒடுக்கப்பட்டனர். இந்த அடக்கி ஒடுக்குகிறவர்களையும், சுரண்டுகிறவர்களையும் வெறுக்கும்படியும், அருவருப்புக் கொள்ளும்

படியும் பண்டைக்காலம் தொட்டு உழைக்கும் உழவர்கள் தங்களை பயிற்றுவித்துக் கொண்டிருக்கிறார்கள், வாழ்வின் நிலைமைகளால் தூண்டப்பட்ட இந்தப் "பயிற்சி" முதலாளிகளுக்கு விரோதமாகவும், கூலிக்கு விவசாயிகளை அமர்த்துகிறவர்களுக்கும், லாப வேட்டையாடுகிறவர்களுக்கும் விரோதமாகவும் தொழிலாளர்களோடு நேசக் கூட்டணி அமைக்கும்படி விவசாயிகளை நிர்ப்பந்தம் செய்கிறது இருப்பினும், அதே சமயத்தில் பொருளாதார நிலைமைகள், அதாவது பண்ட உற்பத்தியின் நிலைமைகள் தவிர்க்க முடியாத வகையில் (எப்பொழுதும் அல்ல, மிகப் பெரும்பாலான தருவாய்களில்) விவசாயிகளை கூலிக்கு விவசாயிகளை அமர்த்துகிறவர்களாகவும், லாபக் கொள்ளை அடிப்பவர்களாகவும் மாற்றுகின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள புள்ளி விவரங்கள் உழைக்கும் உழவனுக்கும், லாபக் கொள்ளை அடிக்கும் உழவனுக்கும் இடையே குறிப்பிடத் தக்க வித்தியாசம் இருப்பதை வெளிப்படுத்துகின்றன. 1918-19 ம் வருட கால சட்டத்தின் போது அரசு நிர்ணயம் செய்திருந்த விலைப்படி 40,000,000 பூடு தானியத்தை நகரங்களில் பட்டினிக்கு ஆளாகி இருக்கும் தொழிலாளர்களுக்குக் கொடுத்த விவசாயி, அரசின் நிறுவனங்களுக்கு தானியத்தைக் கொடுத்த விவசாயி—இந்த நிறுவனங்களில் பல குறைபாடுகள் இருந்தன என்றாலும் கூட, தொழிலாளர்களின் சர்க்காருக்கு இந்தக் குறைபாடுகள் முற்றிலும் தெரியும் என்றாலும் கூட, சோஷலிஸத்திற்கு மாறிச் செல்லும் முதல் கால கட்டத்தில் இவைகளை தவிர்க்கவே முடியாது—இந்த விவசாயி ஒரு உழைக்கும் விவசாயி, சோஷலிஸ்டு தொழிலாளியின் தோழனாகவும், நிகரானவனாகவும் இருக்கிறான்; மேலும், மூலதனத்தின் நுகத்தடியை எதிர்த்து நடைபெறும் போராட்டத்தில் மிக்க விசுவாசமுள்ள நேச சக்தியாகவும், ரத்த உறவுள்ள சகோதரனாகவும் இருக்கிறான் அதே சமயத்தில், அரசு நிர்ணயம் செய்திருந்த விலையைக் காட்டிலும் பத்து மடங்கு அதிக விலைக்கு 40,000,000 பூடு தானியத்தை மறைமுகமாக விற்ற விவசாயி,—நகரத்திலுள்ள தொழிலாளியின் பட்டினி பசியையும், தேவையையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அரசை ஏமாற்றிய, எல்லா இடங்களிலும் மோசடிகளையும், திருட்டுத்தனத்தையும், ஏமாற்றுதலையும் சிருஷ்டித்த, அதை அதிகரித்த விவசாயி—லாபக் கொள்ளை அடிக்கிற விவசாயி ஆகவும், முதலாளியின் நேச சக்தியாகவும், தொழிலாளியின் ஒரு வர்க்க எதிரியாகவும், ஒரு சுரண்டுகிறவனாகவும் இருக்கிறான். எவ்வாறென்றால், ஏதாவது ஒரு வகையில் விவசாயியின் உழைப்போடு தொழிலாளியின்

உழைப்பும் உள் அடங்கியிருக்கிற கருவிகளின் உதவியோடு அரசு முழுமைக்கும் சொந்தமான நிலத்திலிருந்து சேகரிக்கப்பட்ட உபரி தானியத்தை கைவசப்படுத்தியிருப்பவர்களும், உபரி தானியத்தைக் கைவசப்படுத்திக் கொண்டு, அந்த தானியத்தின் மூலமாகக் கொள்ளை லாபம் சம்பாதிக்கிறவர்களும் பட்டினிக்கு ஆளாகியிருக்கும் தொழிலாளியைச் சுரண்டுகிறவர்களாகவே இருக்கிறார்கள்.

சுதந்திரம், சமத்துவம், ஜனநாயகம் ஆகியவற்றை மீறுகிறவர்கள் நீங்கள்—என்று எல்லாப் பக்கங்களிலிருந்தும் நம்மை நோக்கிக் கத்துகிறார்கள்; நமது அரசியல் சட்டத்தின் கீழ் தொழிலாளிக்கும், விவசாயிக்கும் அசமத்துவம் இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார்கள்; அரசியல் நிர்ணய சபையைக் கலைக்கும்படி 110
உபரிதானியத்தைப் பலாத்காரமாகப் பறிமுதல் செய்யும்படி கத்துகிறார்கள். நாம் அவர்களுக்குப் பின் வருமாறு பதில் கொடுக்கிறோம்: உண்மையான அசமத்துவத்தை நீக்குவதற்காக, பல நூற்றாண்டுகளாக உழைக்கும் உழவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த உண்மையாகவே போதிய அளவு சுதந்திர மின்மையை நீக்குவதற்காக இந்த அளவுக்கு செயல்பட்டிருக்கும் ஒரு அரசு உலகில் இதுவரையிலும் இருந்ததே கிடையாது. ஆனால் அதே சமயத்தில், சுரண்டுகிறவர்களுக்கும், சுரண்டப் பட்டவர்களுக்கும் இடையிலும், தேவைக்கு அதிகமாக வைத்திருப்பவர்களுக்கும் பட்டினி கிடப்பவர்களுக்கும் இடையிலும் "சமத்துவத்தை", அல்லது தேவைக்கு அதிகமாக வைத்திருப்பவர்கள் பட்டினி கிடப்பவர்களைக் கொள்ளையடிப்பதற்கான "சுதந்திரத்தை" நாம் எவ்வாறு அங்கீகரிக்க மாட்டோமோ, அதேபோல் கொள்ளை லாபம் சம்பாதிக்கும் விவசாயியின் சமத்துவத்தை ஒருக்காலும் நாம் அங்கீகரிக்க மாட்டோம். இந்த வித்தியாசத்தை அங்கீகரிக்க மறுக்கும் படித்த அறிவாளிகளை—அவர்கள் தங்களை ஜனநாயக வாதிகள் என்றும், சோஷலிஸ்டுகள் என்றும், சர்வதேச வாதிகள் என்றும், காட்ஸ்கிகள், செர்னோவ்கள், மார்டோவ்கள் என்றும் அழைத்துக் கொண்டாலும் கூட அவர்களை—எதிர்ப் புரட்சிக்காரர்களாகவே நாங்கள் கருதுவோம்.

## 5

சோஷலிஸம் என்றால் அதன் அர்த்தம் வர்க்கங்களை ஒழிப்பதாகும். பாட்டாளி மக்களின் சர்வாதிகாரமானது வர்க்கங்களை ஒழிப்பதற்காக தன்னால் முடிந்ததையெல்லாம் செய்திருக்

கிறது. ஆனால், வர்க்கங்களை ஒரே சமயத்தில் உடனே ஒழித்து விட முடியாது.

பாட்டாளி மக்களின் சர்வாதிகார சகாப்தத்தில் இன்னும் இருக்கிறது, மேலும் நீடித்திருக்கும். வர்க்கங்கள் மறைந்து போன பிறகு, சர்வாதிகாரம் தேவையற்றதாக மாறிவிடும். பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் இல்லாமல், அவைகள் மறைந்து போகாது.

வர்க்கங்கள் நிலைத்திருக்கின்றன; ஆனால், பாட்டாளி மக்களின் சர்வாதிகார சகாப்தத்தில் ஒவ்வொரு வர்க்கமும் ஒரு மாறுதலை அடைந்திருக்கிறது; மேலும், வர்க்கங்களுக்கு இடையே உள்ள உறவுகளும் மாறுதலை அடைந்திருக்கின்றன. பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டம் மறைந்து போய் விடாது; அது மாறுபட்ட வடிவங்களை எடுக்கிறது.

முதலாளித்துவத்தின் கீழ், பாட்டாளி மக்கள் அடக்கி ஒடுக்கப் பட்ட ஒரு வர்க்கமாக இருந்தார்கள்; உற்பத்தி சாதனங்களில் உரிமை இல்லாத ஒரு வர்க்கமாக இருந்தார்கள்; முதலாளித் துவத்திற்கு நேரடியாகவும், பூரணமாகவும் எதிர்ப்பான ஒரே ஒரு வர்க்கமாக இருந்தார்கள்; ஆகவே கடைசி வரையிலும் புரட்சிகர மான தன்மையைப் பெற்றிருக்கக் கூடிய ஒரே ஒரு வர்க்கமாக இருக்கிறார்கள். முதலாளித்துவத்தை வீழ்த்தி விட்டதாலும், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி விட்டதாலும், பாட்டாளி மக்கள் ஆளும் வர்க்கமாக மாறி விட்டார்கள்; அது, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், ஏற்கெனவே சோஷலிஸ மயமாக்கப்பட்ட உற்பத்தி சாதனங்கள் மீது ஆட்சி அதிகாரத்தைச் செலுத்தி வருகிறார்கள். ஊசலாடு கிற, நடுத்தர பிரிவுகளுக்கும், வர்க்கங்களுக்கும் அவர்கள் வழி காட்டி வருகிறார்கள்; சுரண்டுகிறவர்களின் அதிகரித்துக் கொண்டே இருக்கும் விடாப் பிடியான எதிர்ப்பை அவர்கள் நசுக்கி வரு கிறார்கள் இவை அனைத்தும் வர்க்கப் போராட்டத்தின் திட்ட வட்டமான கடமைகளாக இருக்கின்றன; பாட்டாளி மக்கள் முன்பு இத்தகைய கடமைகளில் ஈடுபடவில்லை; ஈடுபடவும் முடியாது.

நிலச்சுவான்தார்கள், முதலாளிகள் ஆகிய சுரண்டுகிறவர் களின் வர்க்கம் பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தின் கீழ் உட னடியாக ஒரே சமயத்தில் மறைந்து போகவில்லை, மறைந்து போகவும் முடியாது. சுரண்டுகிறவர்கள் அடித்து வீழ்த்தப்பட்

டிருக்கிறார்கள்; ஆனால், அழிக்கப்படவில்லை, சர்வதேச மூலதனம் என்ற வடிவத்தில், அவர்களுக்கு இன்னும் ஒரு சர்வதேச தளம் இருக்கிறது; அவர்கள் இதன் ஒரு கிளையாக இருக்கிறார்கள். குறிப்பிட்ட சில உற்பத்தி சாதனங்களின் ஒரு பகுதியை அவர்கள் இன்னும் வைத்திருக்கிறார்கள்; அவர்களிடம் இன்னும் பணம் இருக்கிறது; அவர்களிடம் இன்னும் ஏராளமான சமூகத் தொடர்புகள் இருக்கின்றன. அவர்கள் முறியடிக்கப் பட்டிருப்பதால் அவர்களுடைய எதிர்ப்பு ஆற்றல் நூறு மடங்கு, ஏன் ஆயிரம் பங்கு அதிகரித்திருக்கிறது. அரசு, ராணுவம், பொருளாதார நிர்வாகம் ஆகியவைகளின் "கலை" அவர்களுக்கு மேம்பட்ட தன்மையைக் கொடுக்கிறது; இதனால், மொத்த ஜனத்தொகையில் அவர்கள் எண்ணிக்கை விகிதாச்சாரப்படி குறைவாக இருந்தாலும் கூட, ஒப்பிட முடியாத அளவுக்கு அவர்களுடைய முக்கியத்துவம் மேம்பட்டதாகவே இருக்கிறது. வீழ்த்தப்பட்ட சுரண்டுகிறவர்கள், வெற்றி பெற்ற சுரண்டப்பட்டவர்களின் முன்னணிப் படைக்கு—அதாவது பாட்டாளி மக்களுக்கு—எதிராக நடத்தும் வர்க்கப் போராட்டம் ஒப்பிட முடியாத அளவுக்கு மேலும் கடுமையானதாக மாறி இருக்கிறது. ஒரு புரட்சி சம்பந்தப்பட்ட விஷயத்தில், அது வேறு விதமாக இருக்க முடியாது; இந்தக் கருத்தமைப்பிற்குப் பதிலாக, சீர்திருத்தவாத மாய மயக்கங்கள் இருந்தால் (இரண்டாவது அகிலத்தின் வீரர்கள் கூறுவதைப் போல் இருந்தால்) வேறு விதமாக இருக்கலாம்.

கடைசியாக, பொதுவாக சிறு முதலாளிகளைப் போல், விவசாயிகள் பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தின் கீழிலும் கூட பகுதி, நடுத்தர நிலையில் இருக்கிறார்கள்; ஒரு புறத்தில், ஏராளமான எண்ணிக்கையையுடைய (பின் தங்கிய ரஷ்யாவில் ஏராளமாக இருக்கிறார்கள்) உழைக்கும் மக்களாக இருக்கிறார்கள்; நிலச்சுவான்தார்கள், முதலாளிகள் ஆகியோரிடமிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளும் பொருட்டு எல்லா உழைக்கும் மக்களின் பொதுவான நலன்களால் ஒன்றுபட்டிருக்கிறார்கள் மறு புறத்தில், சிறு உரிமையாளர்களாகவும், சொத்து உரிமையாளர்களாகவும், வியாபாரிகளாகவும் சிதறுண்டு கிடக்கிறார்கள். இத்தகைய ஒரு பொருளாதார நிலை, பாட்டாளி மக்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே ஊசலாடும் படி, தவிர்க்க முடியாமல் தூண்டுகிறது இந்த இரண்டு வர்க்கங்களுக்கும் இடையே நடைபெறு போராட்டம் தீவிர வடிவத்தை அடைந்திருப்பதாலும் எல்லா சமூக உறவுகளும் நம்பமுடியாத அளவுக்கு கடுமையாக உடைத்திருப்பதாலும், விவசாயிகளும், பொதுவாக சிறு முதலாளிகளும் பழைய மாமூலான, மாறுதலே இல்லாத விஷயங்களில்

பெரிதும் பற்றுதல் உள்ளவர்களாக இருப்பதாலும் தவிர்க்க முடியாத வகையில் அவர்கள் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு ஊசலாடுவதும், அங்கு மிங்கும் ஊசலாடுவதும், மாறுவதும்' நிச்சயமற்ற தன்மையில் இருப்பதும் இயல்புதான்.

இந்த வர்க்கம் சம்பந்தமாக, அல்லது இந்த சமூகப் பிரிவுகள் சம்பந்தமாக பாட்டாளி மக்கள் என்ன செய்யவேண்டும் என்றால், அதன்மீது செல்வாக்கை நிலைநாட்டவும், அதற்கு வழிகாட்டவும், முயல வேண்டும். ஊசலாடுகிறவர்களுக்கும், ஒரு நிலையான தன்மையில் இல்லாதவர்களுக்கும் தலைமைப் பாத்திரத்தைக் கொடுக்க வேண்டும். பாட்டாளி மக்களின் கடமை இல்லாதுதான் இருக்கிறது.

பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் மாற்றியமைத்திருக்கும் நிலையில் எல்லா அடிப்படையான சக்திகளையும் அல்லது வர்க்கங்களையும், அவைகளின் இடை உறவுகளையும் நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், பொதுவாக "ஜனநாயகத்தின் மூலமாக" சோஷலிஸத்திற்கு மாறிச் செல்லலாம் என்று இரண்டாவது அகிலத்தின் பிரதிநிதிகளும், ஏற்றுக் கொள்கிற பொதுவான சிறு முதலாளித்துவக் கருத்தானது வருணிக்க முடியாத அளவுக்கு முட்டாள் தனமானது, தத்துவரீதியில் அபத்தமானது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். "ஜனநாயகமானது" வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டது என்றும், ஏதோ முழுமையான ஒன்று என்றும் என்ற முதலாளித்துவக் கருத்திலிருந்து வாரிசாகப் பெற்ற தப்பெண்ணத்தில் இந்தத் தவறின் அடிப்படையான மூல ஊற்று அடங்கியிருக்கிறது. உண்மையில், பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தின் கீழ் ஜனநாயகமே முற்றிலும் ஒரு புதிய வளர்ச்சிக் கட்டத்திற்கு மாறிச் செல்கிறது; வர்க்கப் போராட்டமும் ஒரு உயர்ந்த மட்டத்திற்கு உயர்கிறது; எல்லா வகையான வடிவத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்துகிறது.

சுதந்திரம், சமத்துவம், ஜனநாயகம் ஆகியவை பற்றி பொதுவாகப் பேசுவது மெய்யாகவே இருக்கிறது; ஆனால், பண்ட உற்பத்தி முறையின் உறவுகளால் உருவாக்கப்பட்ட கருத்தமைப்புக்களை குருட்டுத்தனமாகத் திரும்பத்திரும்பச் சொல்வதாகவே இருக்கிறது. இத்தகைய பொதுப்படையான வாதங்களால் பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தின் ஸ்தூலமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயல்வது, முதலாளித்துவத்தின் சித்தாந்தங்களையும், கோட்பாடுகளையும் முழுமையாக அப்படியே ஏற்றுக் கொள்வதற்குச் சமமாகும். பாட்டாளி மக்களின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், இந்தப் பிரச்சினையைப் பின் வருமாறு

முன் வைக்க வேண்டும்: எந்த வர்க்கத்தின் ஒடுக்குமுறையி லிருந்து சுதந்திரம் வேண்டும்? எந்த வர்க்கத்திற்கு, எந்த வர்க்கத்தோடு சமத்துவம் வேண்டும்? தனிச்சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயகமா? அல்லது, தனிச் சொத்துரிமையை ஒழிப்பதற்கான போராட்டத்தின் அடிப்படை யிலா?— இத்தகைய கேள்விகளைக் கேட்க வேண்டும்.

நீண்ட காலத்திற்கு முன்பே, "அண்டி டுஹ்றிங்" என்ற நூலில் பண்ட உற்பத்தி முறையின் உறவுகளிலிருந்து "சமத்துவம்" என்ற கருத்தமைப்பு உருவாகப் பட்டது என்று எங்கல்ஸ் விளக்கம் கொடுத்திருக்கிறுர்; சமத்துவம் என்பதன் அர்த்தம் வர்க்கங்களை ஒழிப்பதுதான் என்று புரிந்து கொள்ள வில்லை யென்றால், அது ஒரு தப்பெண்ணமாக மாறுகிறது. [111] சமத்துவம் சம்பந்தமாக முதலாளித்துவ, ஜனநாயகக் கருத்தமைப்பிற்கும், சோஷலிஸ்டு கருத்தமைப்பிற்கும் இடையே வித்தியாசம் இருப்பது பற்றிய இந்த அடிப்படையான உண்மை நிரந்தரமாக மறக்கப் படுகிறது. ஆனல், அது மறக்கப்பட வில்லையென்ருல், ஒரு விஷயம் தெளிவாகிறது; அதாவது, முதலாளித்துவத்தை வீழ்த்து வதன் மூலமாக, பாட்டாளி மக்கள் வர்க்கங்களை ஒழிப்பதை நோக்கி மிகவும் இறுதியான நடவடிக்கைகளை எடுக்கிறுர்கள் இந்த நடவடிக்கைகளின் போக்கைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பாட்டாளி மக்கள் வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும்; அரசு அதிகாரத்தின் கருவிகளைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்; வீழ்த்தப்பட்ட முதலாளிகள், ஊசலாடும் சிறு முதலாளிகள் ஆகியவர்களை எதிர்த்துப் போராடு உதற்கும், செல்வாக்கை அவர்கள் மீது செலுத்துவதற்கும், அவர் களுக்கு நிர்ப்பந்தம் கொடுப்பதற்கும் பல்வேறு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்,

(கட்டுரை முற்றுப்பெற வில்லை [112])

1919-அக்டோபர் 30
''பிராவ்தா'' எண்250
—'' இஸ்வெஸ்தியா''
VTSIK - எண்250 —
1919— நவம்பர் 7
கையொப்பம்: என். லெனின்

திரட்டப்பட்ட நூல்
கள்— தொகுப்பு 30
பக்கம் 107—17

# ரஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷ்விக்)[113] மாஸ்கோ நகர மாநாட்டில் ஸுபோட்னிக்குகளைப் பற்றிய அறிக்கை

## டிசம்பர் 20, 1919

தோழர்களே, ஸுபோட்னிக்குகளைப் பற்றி ஒரு அறிக்கைக்கு நீங்கள் ஏற்பாடு செய்திருப்பதாக இந்த மாநாட்டு அமைப்பாளர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்; இந்தத் துறையில் முக்கியமான விஷயத்தை விரிவாக விவாதிப்பதைச் சாத்தியமாக்கும் பொருட்டு அந்த அறிக்கை .இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது: முதலாவது மாஸ்கோவில் ஸுபோட்னிக்குகள் அமைக்கப்பட்டது கிடைத்த சாதனைகள்; இரண்டாவது, அவைகளை மேலும் அமைத்துக் கொண்டு போவதற்கான நடைமுறை முடிவுகள், பொதுவான அறுதியுரைகளைப் பற்றி மாத்திரம், நமது கட்சியிலும், நமது அரசாங்கத்தின் வளர்ச்சியிலும் ஒரு புதிய குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி என்ற நிலையில் ஸுபோட்னிக்குகளை அமைப்பது தோன்றியிருக்கும் கருத்துக்களைப்பற்றி மாத்திரம் நான் கருத்துத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆகவே, நடைமுறை அம்சம் பற்றிய விஷயத்தை மாத்திரம் சுருக்கமாக எடுத்துக் கொள்கிறேன்.

கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக்குகள் முதன் முதல் அமைக்கப் பட்ட உடனேயே, எந்த அளவுக்கு இத்தகைய குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சி கவனத்தைச் செலுத்துவதற்கு அருகதையுள்ளது, இதிலிருந்து பெரிய அளவில் ஏதாவது சாதனைகளை எதிர்பார்க்க முடியுமா போன்றவைகளை நிர்ணயம் செய்வது கடினமான காரியமாகும். கட்சிப் பத்திரிகைகளில் அவைகளைப் பற்றிய செய்திகளை முதல் தடவையாகப் பிரசுரிக்கத் துவங்கிய போது, தொழிலாளர் சங்க ஸ்தாபன விவகாரங்களோடும், தொழிலாளர் அமைச்சரவையோடும் நெருங்கிய தொடர்புள்ள தோழர்களின் முதல் மதிப்

பீடுகள் பெரிதும் தன்னடக்கம் காட்டுவதாகவும், அவ்வாறு கூறுவதைக் காட்டிலும் தோல்வி மனப்பான்மை கொண்டவை யாகவும் இருந்தன என்பதை நான் நினைவில் வைத்திருக்கிறேன் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று அவைகளைக் கருதுவதற்கு எந்த விதமான ஆதாரங்களும் கிடையாது என்று அவர்கள் நினைத்தார்கள். அதற்குப் பிறகு, ஸோவியட்டுகள் விரிவாகப் பரவியிருப்பதால், அவர்களுடைய முக்கியத்துவத்தைப் பற்றி எதிர்வாதம் செய்வதற்கு ஒருவரும் கிடையாது.

"கம்யூனிஸ்ட்" என்ற பெயரடையை உண்மையில் நாங்கள் மிக மிக அடிக்கடி உபயோகித்துக் கொண்டிருக்கிறோம்; நமது கட்சியின் பெயரில் கூட அதைச் சேர்த்திருக்கும் அளவுக்கு அடிக்கடி அந்த வார்த்தையை உபயோகித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த விஷயத்தைப் பற்றி நீங்கள் சிறிது சிந்தனை செய்தால் இதிலிருந்து ஏற்பட்ட நன்மைகளோடு, நமக்குச் சில குறிப்பிட்ட அபாயத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது என்ற கருத்திற்கு வருவீர்கள். கட்சியின் பெயரை மாற்றுவதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், நமக்கும், இரண்டாவது அகிலத்தின் ஆதிக்கம் வகிக்கிற சோஷலிஸத்திற்கும் இடையே ஒரு தெளிவான மாறுபாட்டை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் தான். ஏகாதிபத்திய யுத்தம் நடைபெற்ற கால கட்டத்தில், அதிகார பூர்வமான சோஷலிஸ்டுக் கட்சிகளில் மிகப் பெரும் பாலானவை. அவைகளின் தலைவர்கள் மூலமாக அவர்களுடைய சொந்த நாடுகளின் முதலாளிகளின் பக்கம் போய் விட்டன; அல்லது அவைகளின் சொந்த சர்க்கார்களின் பக்கம் போய் விட்டன. பழைய சோஷலிஸத்திற்கு மிகப் பெரிய நெருக்கடி ஏற் பட்டிருப்பதும், அது வீழ்ச்சியடைந்ததும் நமக்குத் தெளிவாகப் புலப்பட்டன. ஏகாதிபத்திய யுத்தம் நடக்கும் போது தங்கள் சர்க் கார்களோடு சேர்ந்து கொண்டவர்களை சோஷலிஸ்டுகள் என்று நாம் கருதமுடியாது என்பதை முடிந்த அளவு கூர்மையாக வலியுறுத்து வதற்காகவும், பழைய சோஷலிஸம் செத்து மடிந்து, அழுகிப் போய் விட்டது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவும்— முக்கியமாக இந்தக் காரணத்திற்காகக் கட்சியின் பெயரை மாற்றும் கருத்து முன்வைக்கப் பட்டது. "சமூக ஜனநாயக" என்ற பெயர், தத்துவ ரீதியான கருத்தின் கண்ணோட்டத்தி லிருந்தும் சரியானது என்ற நிலை நீண்ட காலத்திற்கு முன்பே மாறிவிட்டது என்பதும் மிக முக்கியமான விஷயமாகும். நீண்ட காலத்திற்கு முன்பு, கடந்த நூற்றாண்டில் நாற்பதாம் ஆண்டுகளில் பிரான்ஸில் அரசியலில் இந்த வார்த்தை முதலாவதாக விரிவான முறையில் உபயோகிக்கப் பட்டபோது, புரட்சிகரமான பாட்

டாளி மக்களின் ஒரு கட்சிக்கு அல்ல, சிறு முதலாளித்துவ சோஷ லிஸ்டு சீர்திருத்தவாதத்தை உட்கொண்டிருந்த ஒரு கட்சிக்கு இந்தப் பெயர் சூட்டப் பட்டிருந்தது. நமது கட்சியின் பெயரை மாற்றுவதற்கு முக்கியமான காரணம், என்ன வென்றால்—தனது புதிய பெயரை புதிய அகிலத்திற்கும் கொடுத்திருக்கிறது—பழைய சோஷலிஸத்திலிருந்து தொடர்புகளை நாம் முடிவாக அறுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசைதான்.

சோஷலிஸத்திலிருந்து கம்யூனிஸம் எந்தவகையில் மாறு படுகிறது என்று நம்மை நாமே கேள்வி கேட்டுக் கொண்டால், முதலாளித்துவத்திலிருந்து நேரடியாக வளர்கிற சமுதாயமே சோஷலிஸம் என்றும், புதிய சமுதாயத்தின் முதல் வடிவம் சோஷலிஸம் என்றும் நாம் பதில் கூற வேண்டியிருக்கிறது. கம்யூனிஸம் என்பது உயர்ந்த வடிவத்திலுள்ள ஒரு சமுதாயம்; சோஷலிஸத்தை உறுதியாகக் கட்டிய பிறகு மாத்திரமே கம்யூ னிஸம் வளர முடியும். சோஷலிஸம் என்றால், முதலாளிகளின் உதவி இல்லாமல் வேலை செய்வது, உழைப்பாளி மக்களில் முன்னேற்ற மடைந்த பிரிவான ஸ்தாபன ரீதியாக அமைந்துள்ள முன்னணிப் படையின் கண்காணிப்பு, கணக்கு வைத்துக் கொள்வது, கட்டுப்பாடு ஆகியவற்றின் கீழுள்ள சோஷலிஸ மயமாக்கப்பட்ட உழைப்பு என்ற பொருள் பொதிந்து கிடக்கிறது; மேலும், உழைப்பின் அளவும், அதற்குத் தக்கபடி ஊதியமும் நிச்சயிக்கப்பட வேண்டும் என்ற பொருள் பொதிந்துகிடக்கிறது. அவைகளை நிச்சயிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது; ஏனென்றால், உழைப்பைப் பல துண்டுகளாகப் பிரிப்பது, சமூக பொருளாதாரத் தில் நம்பிக்கையின்மை, எல்லா விவசாய நாடுகளிலும் சிறு உரிமை யாளர்கள் ஆதிக்கம் வகிப்பது போன்றவைகளின் மீத மிச்சங் களையும், பழக்க வழக்கங்களையும முதலாளித்துவ சமுதாயம் பின்னால் விட்டுச் சென்றிருக்கிறது. இவை அனைத்தும் உண்மை யான கம்யூனிஸ்டு பொருளாதாரத்திற்கு நேர்முரணனவைகளாக இருக்கின்றன. எந்த அமைப்பின் கீழ் நிர்ப்பந்தம் செய்வதற்கு, எந்தவிதமான விசேஷ கருவியும் இல்லாமல், பொதுமக்கள் அவர் களுடைய சமூகக் கடமைகளைச் செய்வது சாதாரண பழக்கமாக அமைந்து, பொது நலனுக்காக ஊதியம் இல்லாமல் வேலை செய்வது ஒரு பொதுவான நிகழ்ச்சியாக மாறியிருக்கிறதோ அந்த அமைப் பிற்கு கம்யூனிஸம் என்ற பெயரைக் கொடுக்கிறோம். முதலாளித் துவத்தின் மீது பூரணமாக வெற்றி கொள்வதை நோக்கி முதல் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறவர்கள் "கம்யூனிஸம்" என்ற கருத்தமைப்பானது, தொலை தூரத்திலுள்ள ஒரு விஷயம் என்பதைப் பொதுவாக ஏற்றுக் கொள்வார்கள்; நமது கட்சியின்

பெயரை மாற்ற வேண்டியது எவ்வளவு சரியானதாக இருப்பினும் கூட, அந்த மாற்றம் நமக்கு எவ்வளவு மகத்தான நலன்களைக் கொடுத்திருப்பினும் கூட, நமது நோக்கம் நிறைவேற்றப் பட்டிருப்பது எவ்வளவு மகத்தானதாக இருப்பினும் கூட, அது வளர்ச்சியடைந்திருக்கும் அளவு எவ்வளவு மகத்தானதாக இருப்பினும் கூட — உலகம் முழுவதும் இப்பொழுது கம்யூனிஸ்ட் கட்சிகள் நிலவில் இருப்பினும் கூட, கம்யூனிஸ்ட் அகிலம் 114 அமைக்கப் பட்டு ஒரு ஆண்டு கூட முடிவடைய வில்லையென்றாலும், தொழிலாளர் இயக்கத்தின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது, அதுபழைய, செத்து மடிந்து கொண்டிருக்கிற இரண்டாவது அகிலத்தைக் காட்டிலும் ஈடு இணையற்ற முறையில் பலமாக இருப்பினும் கூட, "கம்யூனிஸ்ட் கட்சி" என்ற பெயரின் அர்த்தம் கம்யூனிஸ்ட் அமைப்பு முறை உடனடியாகப் புகுத்தப்பட்டிருக்கிறது என்பது தான் என்று வியாக்கியானம் செய்தால், அது உண்மையை மிகப் பெரிய அளவுக்கு திரித்துக் கூறுவதாகும்; மேலும் அது வெறும் தற்புகழ்ச்சியாகவே இருப்பதால், நடைமுறையில் தீங்கிழைக்கக் கூடியதாகவும் இருக்கும்.

அதனால்தான், "கம்யூனிஸ்ட்" என்ற வார்த்தையை மிகக் கவனமாக உபயோகிக்க வேண்டும்; அதனால்தான், நமது வாழ்வில் நுழையத் துவங்கியிருக்கும் கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக்குகள் விசேஷ மதிப்புப் பெற்றவர்களாக இருக்கிறார்கள்; எவ்வாறென்றால், மிகவும் சிறிய இந்த நிகழ்ச்சியின் மூலமாகத்தான் கம்யூனிஸத்தின் ஏதோ ஒன்று தலைதூக்க துவங்கியிருக்கிறது. நிலச்சுவான்தார்கள், முதலாளிகள் ஆகியவர்களின் உரிமைகளைப் பறிமுதல் செய்தது. சோஷலிஸத்தின் மிகப் பழமையான வடிவங்களை மாத்திரம் அமைப்பதற்கு நமக்கு உதவிற்று; அதில், கம்யூனிஸத்தின் எதுவும் இதுவரையிலும் கிடையாது. நமது இன்றைய பொருளாதாரத்தை எடுத்துக் கொண்டால், அதில் சோஷலிஸத்தின் இளம் கருமுனைகள் இன்னும் மிகவும் பலஹீனமாக இருப்பதையும், பழைய பொருளாதார வடிவங்கள் மிகப் பெரிய அளவுக்கு ஆதிக்கம் வகிப்பதையும் நாம் பார்க்க முடியும்; இவை மேலாதிக்கம் வகிக்கிற சிறு உரிமையாளர்கள் என்ற வடிவத்திலோ, அல்லது பண்படாத, கட்டுப்படுத்தாத லாப வேட்டையாடுவது என்ற வடிவத்திலோ வெளிப்படுகிறது. நமது எதிரிகளான சிறு முதலாளித்துவ ஜனநாயகவாதிகளும், மென்ஷ்விக்குகளும், சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களும் நாம் பெரிய அளவில் உள்ள முதலாளித்துவத்தை தகர்த்து விட்டாலும் கூட, அதன் இடத்தில் படுமோசமான லாப வேட்டையும், முதலாளித்துவ கந்து வட்டி முறையும்

நீடிக்கின்றன என்று நம்மை எதிர்க்கும்போது கூறுகிறார்கள்; அவர்களுக்கு நாம் பின்வருமாறு பதில் கூறுகிறோம்; அதாவது, பெரிய அளவில் உள்ள முதலாளித்துவத்திலிருந்து, கம்யூனிஸத்திற்கும் நாம் உடனே நேரடியாகப் போக முடியும் என்று அவர்கள் கற்பனை செய்தால், அவர்கள் புரட்சிக்காரர்கள அல்ல, சீர்திருத்தவாதிகளாகவும், உட்டோப்பியர்களாகவும் இருக்கிறார்கள் என்று நாம் கூறுவோம்.

பெரிய அளவில் உள்ள முதலாளித்துவம் எல்லா இடங்களிலும், —இதுவரையிலும் சோஷலிஸத்தை நோக்கி நடவடிக்கை எடுக்கப் படாத நாடுகளிலும் கூட—கடுமையாக அடிநிலம் அரித்து வீழ்த்தப்பட்டிருக்கிறது. இந்தக் கண்ணோட்டத்திலிருந்து, நமது எதிர்ப்பாளர்கள் நம்மீது சுமத்தும் எந்த விமர்சனமோ, அல்லது ஆட்சேபனையோ பொருட்படுத்தக் கூடியதாக இல்லை, பெரிய அளவில் உள்ள முதலாளித்துவம் தகர்த்தெறியப்பட்ட பிறகு, ஒரு புதிய சிறிய அளவில் உள்ள, லாப வேட்டையாடும் முதலாளித்துவம் தலைதூக்கத் துவங்கிற்று என்பது தெளிவாகத் தெரிகிறது. பெரிய அளவில் உள்ள முதலாளித்துவத்தின் மீத மிச்சங்களை எதிர்த்து, கொடூரமான போராட்டம் நடத்திக் கொண்டிருப்பதற்கு மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; நாம் எதிர்த்துப் போராட முடியாத இடத்தில், எல்லா வகையான சிறிய உலக வாணிகத்தையும் அது இறுகப் பிடித்துக் கொள்கிறது; வியாபாரத்தில் படுமோசமான, கட்டுப்பாடற்ற வடிவத்தை அது எடுக்கிறது.

இந்தப் போராட்டமானது யுத்த நிலைமைகளின் கீழ் மிகக் கடுமையானதாகியிருக்கிறது; லாபக் கொள்ளையடிக்கும் முறை விசேஷமாக பெரிய அளவில் முதலாளித்துவம் அமைக்கப்பட்டிருந்த இடத்தில் மிருகத்தனமான வடிவங்களை எடுத்திருக்கிறது; புரட்சிகரமான மாறிச் செல்லும் முறைக்கு வேறு விதமான வடிவம் இருக்கிறது என்று கற்பனை செய்வது முற்றிலும் சரியல்ல. நமது இன்றைய பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விஷயம் இவ்வாறுதான் இருக்கின்றன. சோவியத் ரஷ்யாவின் இன்றைய பொருளாதார அமைப்பு என்ன என்று நம்மை நாமே கேட்டுக் கொண்டால், பெரிய அளவில் உள்ள தொழில்களில் சோஷலிஸத்தின் அஸ்திவாரங்களைப் போடுவதிலும், லட்சோப லட்சம் பல்வேறு வழிகளில் முதலாளிகள் கொடுத்துக் கொண்டிருக்கும் எதிர்ப்புகளுக்கிடையே பழைய முதலாளித்துவ பொருளாதாரத்தைப் புனரமைப்பதிலும் அது அடங்கி இருக்கிறது என்று நாம் கூறவேண்டியிருக்கிறது. நம்மைப் போல் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு, படுமோசமான நிலையில் இருக்கும் மேற்கு ஐரோப்பிய

நாடுகள்—உதாரணமாக, ஆஸ்டிரியா—நம்மிலிருந்து ஒரு விஷயத்தில் மாறுபடுகின்றன; அதாவது, நமது நாட்டைக் காட்டிலும் அங்கு முதலாளித்துவமும் உலக வாணிகமும் சிதைந்திருப்பது தெளிவாக வெளிப்பட்டிருக்கிறது; முதலாளித்துவத்திற்கு எதிர்ப்புக கொடுக்கக் கூடிய சோஷலிஸ ஸ்தாபனத்தின் இளம் கருமுனைகள் அங்கு கிடையாது. ஆயினும், நமது பொருளாதார அமைப்பில் கம்யூனிஸத்தின் எதுவும் இதுவரை கிடையாது. ஸுபோட்னிக்குகள் (எந்த அதிகாரியோ, அல்லது அரசோ ஊதியமில்லாமல் வேலை செய்வதை நிச்சயிக்காமல் அவர்களாகவே) வேலை செய்யத் துவங்கும்போது "கம்யூனிஸம்" துவங்குகிறது; பொது நலனுக்காக விரிவான அளவில் தனி நபர்கள் வேலை செய்வதையே அவர்கள் பிரதிபலிக்கிறார்கள். கிராமப் புறங்களில் அக்கம் பக்கத்திலிருப்பவர்களுக்கு உதவி செய்யும் பழக்க வழக்கம் இருக்கிறதே, அந்த முறையில் இது அமையவில்லை; ஒட்டு மொத்தமாக தேசத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகச் செய்யும் வேலை இது; மேலும், இது, விரிவான அளவில் அமைக்கப் பட்டிருக்கிறது. இதற்கு ஊதியமும் கிடையாது. ஆகவே, கட்சிக்கு மாத்திரமின்றி, குணும்சத்தில் கம்யூனிஸத்தை வெளிப்படுத்துகிற எதார்த்த பொருளாதார அம்சங்களுக்கும் கூட "கம்யூனிஸ்ட்" என்ற வார்த்தையை உபயோகிப்பது மிகவும் சரியானதாக இருக்கும். ரஷ்யாவில் இன்று நிலவில் இருக்கும் அமைப்பில் கம்யூனிஸத் தன்மை ஏதாவது இருந்தால், அது ஸுபோட்னிக்குகள் மாத்திரமே; மற்றவை அனைத்தும் சோஷலிஸத்தை உறுதிப்படுத்துவதற்காக முதலாளித்துவத்தை எதிர்த்து நடத்தும் போராட்டமே தவிர வேறு எதுவும் அல்ல; இந்தப் போராட்டத்திலிருந்து, சோஷலிஸம் பூரணமாக வெற்றி பெற்ற பிறகு, ஸுபோட்னிக்குகளில் நாம் பார்க்கிற கம்யூனிஸம், புத்தகத்தின் உதவியால் அல்லாமல், எதார்த்த வாழ்வில் வளர்ச்சியடைய வேண்டும்.

ஸுபோட்னிக்குகளின் தத்துவரீதியான முக்கியத்துவம் இவ்வாறு இருக்கிறது; அரசு முழுமையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக விரிவான முறையில் அமைக்கப்பட்டுள்ள ஊதியமில்லாத உழைப்பு என்ற வடிவத்தில் இங்கு ஏதோ புதிதாக ஒன்று தலைதூக்கத் துவங்கியிருப்பதை ஸுபோட்னிக்குகள் வெளிப்படுத்துகிறார்கள்; பழைய முதலாளித்துவ விதிகள் அனைத்திற்கும் முரணான ஏதோ ஒன்றை, முதலாளித்துவத்தை முறியடித்து வெற்றி பெற்றுக் கொண்டிருக்கும் சோஷலிஸ்டு சமுதாயத்தைக் காட்டிலும் மிகவும் உன்னதமான ஏதோ ஒன்றை ஸுபோட்னிக்குகள் வெளிப்படுத்துகிறார்கள். பஞ்ச நிலைமைகளிலும், ஏராளமான தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாத நிலைமைகளிலும்

வாழ்ந்து வந்த மாஸ்கோ காஜான் ரெயில்வே தொழிலாளர்கள், தேசத்திற்கு உதவிசெய்ய முன்வருமாறு கட்சியின் மத்திய குழு அறைகூவல் விடுத்தபோது அதை ஏற்றுக் கொள்ள முன்வந்த தருணத்தில்,[115] கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக்குகள் தனியாக ஒரு இடத்தில் நடைபெறும் நிகழ்ச்சி அல்ல, அதற்கு மாறாக பரவிக் கொண்டிருக்கிறது, பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுக் கொண்டிருக்கிறது என்ற நிலைமை ஏற்பட்டபோது, அமோகமான தத்துவரீதியான முக்கியத்துவம் பெற்றுள்ள நிகழ்ச்சி அவை என்று நாம் கூற முடிந்தது; நாம் கம்யூனிஸ்டுகளாக இருக்க விரும்பினால், அவர்களுக்குத் தத்துவ ரீதியாக மாத்திரமின்றி, முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராட்டத்தை நடத்துவதோடு மாத்திரமின்றி எல்லாவிதமான உதவிகளையும் நாம் கொடுக்க வேண்டும் என்று கூறமுடிந்தது. சோஷலிஸ்டு சமுதாயத்தை நிர்மாணம் செய்யும் நடைமுறை கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், அது போதுமானதல்ல; இந்த இயக்கத்தை ஒரு பொதுஜன ரீதியில் உண்மையாகவே வளர்க்க முடியும் என்று கூறவேண்டும். கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக்குகள் என்று நாம் அழைக்கிற இயக்கத்தின் வீச்சைப் பற்றி பொதுவான தொகுப்புரையை நாம் இன்னும் தயார் செய்யாமல் இருப்பதால் இதை நாம் நிரூபித்துக் காட்டியிருக்கிறோமா என்பதைப் பற்றிச் சொல்லும் பொறுப்பை நாம் மேற்கொள்ளவில்லை. துண்டு துணுக்காக எனக்கு விவரங்கள் கிடைத்திருக்கின்றன; ஏராளமான நகரங்களில் ஸுபோட்னிக்குகள் மேன்மேலும் விரிவான முறையில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறார்கள் என்று நமது கட்சிப் பத்திரிகைகளில் செய்திகளை நான் படித்திருக்கிறேன். மாஸ்கோ நகரத்தைக் காட்டிலும் அதிகமாக தங்கள் நகரத்தில் ஸுபோட்னிக்குகள் பரவலாக வளர்ச்சியடைந்திருப்பதாக பெட்ரோகிராட் தோழர்கள் கூறுகிறார்கள். மாநிலங்கள் சம்பந்தப்பட்டவரையிலும், இந்த இயக்கம் பற்றி நடைமுறை அனுபவம் உள்ள தோழர்கள் சமூக உழைப்பின் இந்தப் புதிய வடிவத்தின் ஏராளமான விவரங்களைத் திரட்டிக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். ஆயினும், பத்திரிகைகளில் இந்தப் பிரச்சினை பற்றி பல தடவை விவாதித்த பிறகு, பல்வேறு நகரங்களில் கட்சி மாநாடுகளில் விவாதித்த பிறகு மாத்திரம் பொதுமைப் படுத்தப் பட்ட புள்ளி விவரங்களை நாம் பெற முடியும்; பின்னர் அந்தப் புள்ளி விவரங்களின் அடிப்படையில், ஸுபோட்னிக்குகள் ஒரு பொதுஜன நிகழ்ச்சியாக மாறியிருக்கிறதா, இல்லையா என்றும், இந்தத் துறையில் நாம் முக்கியமான சாதனைகளைப் பெற்றிருக்கிறோமா இல்லையா என்றும் நாம் கூறமுடியும்.

எது எப்படி இருந்தாலும் சரி, இந்த விஷயம் பற்றி பரிசீலனை செய்யப்பட்ட, பூரணமான புள்ளி விவரங்களை நாம் விரைவில் பெறுவோம்; தத்துவ ரீதியான கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், நம்மை கம்யூனிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்வது மாத்திரமல்ல, நாம் கம்யூனிஸ்டுகளாக இருக்க விரும்புவது மாத்திரமல்ல, வெறும் சோஷலிஸ்டுகளாக இருப்பது மாத்திர மல்ல, கம்யூனிஸ்ட் என்ற நிலையில் எதார்த்தத்தில் ஏதாவது செய்து கொண்டிருக்கிறோம் என்பதற்கு ஆதாரமாக ஸுபோட்னிக்குகள் இயக்கத்தையே நாம் சுட்டிக் காட்ட முடியும். ஆகவே, ஒவ்வொரு கம்யூனிஸ்டும், கம்யூனிஸ்ட் கோட்பாடுகளுக்கு விசுவாச மாக இருக்க விரும்பும் ஒவ்வொருவரும் இந்த நிகழ்ச்சியின்பால் தமது கவனத்தைச் செலுத்த வேண்டும்; இந்த நிகழ்ச்சியைப் பற்றி விளக்கம் கொடுப்பதிலும், நடைமுறையில் இதை அமுல் நடத்துவதிலும் முழுமுயற்சியையும் செலுத்த வேண்டும். ஸுபோட்னிக்குகளின் தத்துவ ரீதியான முக்கியத்துவம் இது தான். ஆகவே, ஒவ்வொரு கட்சி மாநாட்டிலும் இந்தப் பிரச்சினையைத் தொடர்ச்சியாக எழுப்பி, அதன் தத்துவ ரீதியான அம்சங்களையும், நடைமுலற அம்சங்களையும் விவாதிக்க வேண்டும். இந்த நிகழ்ச்சியின் தத்துவ ரீதியான முக்கியத்துவத்தை மாத்திரம் விவாதிப்பதோடு நின்று விடக் கூடாது. கம்யூனிஸ்ட் ஸுபோட்னிக்குகள் நமக்கு அமோகமாக முக்கியத்துவம் பெற்றவர்களாக இருக்கிறார்கள்; கம்யூனிஸத்தை நடைமுறையில் அவர்கள் அமுல் நடத்துகிறார்கள் என்ற காரணத்திற்காக மாத்திரமல்ல இது ஒரு புறமிருக்க, ஸுபோட்னிக்குகள் இரண்டு அம்சங்களில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறார்கள்; அரசின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், அவர்கள் கலப்பற்ற முறையில் நடைமுறையில் அரசுக்கு உதவி செய்கிறார்கள்; கட்சியின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால்—கட்சி உறுப்பினர்களாகிய நமக்கு இது ஒதுக்கி வைக்கக் கூடிய ஒரு விஷயமல்ல—விரும்பத் தகாதவர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றி, கட்சியைத் தூய்மைப் படுத்துவது என்ற முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது; இத்துடன், முதலாளித்துவம் அழுகி அழிந்து போய்க் கொண்டிருக்கும் தருணத்தில், கட்சி அனுபவித்துக் கொண்டிருக்கும் அதன் செல்வாக்கை எதிர்த்துப் போராடுவதிலும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. பொருளாதாரத்தின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், பொருளாதார சீர்குலைவிலிருந்து சோவியத் குடியரசைப் பாதுகாப்பதற்கும், சோஷலிஸத்தை நோக்கி முன்னேறிச் செல்வதற்கும் ஸுபோட்னிக்குகள் தேவைப்

படுகிறார்கள். இந்தப் பிரச்சினையின் இரண்டாவது அம்சம் பற்றி, மேலும் விரிவாகப் பரிசீலனை செய்ய விரும்புகிறேன்...*

1919-ல், டிசம்பர் 21-ல்
"இஸ்வெஸ்டியா"வில் V T, I K-எண் 287-ல்
சுருக்கமாகப் பிரசுரிக்கப்பட்டது.
"பிராவ்தா"வில், எண்-245-ல்
1927-ல் அக்டோபர் 26-ல் முழுமையாக முதல்
தடவை பிரசுரிக்கப்பட்டது.

திரட்டப்பட்ட
நூல்கள்'
தொகுப்பு-30
பக்கம் 283-88

* சொற்பொழிவாற்றாத அறிக்கை இங்கு முடிவடைகிறது— (ஆர்.)

## "இடது சாரி கம்யூனிஸம்"— ஒரு இளம் பிள்ளைக் கோளாறு —

என்பதிலிருந்து

## VI

### பிற்போக்குத் தொழிற் சங்கங்களில், புரட்சிக்காரர்கள் வேலை செய்யலாமா?

முதலாளித்துவமானது, ஒரு புறத்தில், தொழிலாளர்களிடையே தனிமனிதர் வாழ்க்கைத் தொழில், கைத்திறனுள்ள தொழில் ஆகியவற்றின் தனி வேறுபாடுகளை—பல நூற்றுண்டுகளின் காலப்போக்கில் படிப்படியாகத் தோற்றுவிக்கப்பட்ட தனிவேறு பாடுகளை— தவிர்க்க முடியாத வகையில் பரம்பரைச் சொத்தாக சோஷலிஸத்திற்கு விட்டுச் சென்றிருக்கிறது. மறு புறத்தில், தொழிலாளர் சங்கங்கள் மிக மெதுவாக மாத்திரமே பல ஆண்டுகளின் காலப் போக்கில் அவற்றிற்கு இடையே தனிப்பட்ட கைத்திறன் தொழிலாளர் சங்கத்தின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டு விரிவான இயந்திரத் தொழிற் சங்கங்களாக (தனி மனிதர் வாழ்க்கைத் தொழில், கைத்திறனுள்ள தொழில் பணியாட்கள் ஆகியவர்கள் மாத்திரமின்றி தொழில்கள் அனைத்தையும் இணைத்துக் கொண்டு) வளர முடியும், வளர்ச்சியடையும். பின்னர், இந்த தொழிலியல் சங்கங்களின் மூலமாக, மக்களிடையே உழைப்புப் பிரிவினையை நீக்குவதை நோக்கியும், மக்களுக்கு அறிவைப்புகட்டுவதை நோக்கியும் பயிற்சி கொடுப்பதை நோக்கியும், மக்கள் எல்லாவற்றையும் செய்யும் திறமையைப் பெறுவதற்காக அவர்களுக்கு எல்லாவகையிலும் வளர்ச்சியும், எல்லாவகையிலும் பயிற்சியும் கொடுப்பதை நோக்கியும் முன்னேறிச் செல்கின்றன. கம்யூனிஸம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது; அந்த இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லத்தான் வேண்டும்; நிச்சயமாக அந்த இலக்கை அடையும்,— ஆனால், இது பல்லாண்டுகளுக்குப் பிறகுதான், இன்று நடை முறையில்

முயல்வது, முழுமையாக வளர்ச்சியடைந்த, முழுமையாக அமைக்கப் பட்ட, உறுதிப்படுத்தப்பட்ட, தெளிவாகத் தெரிகிற, முதிர்ந்த கம்யூனிஸத்தின் இந்த எதிர்கால விளைவை இன்று எதிர்பார்ப்பது நான்கு வயதுக் குழந்தைக்கு உயர்ந்த கணிதத்தைக் கற்றுக் கொடுப்பதற்கு ஒப்பாகும்.

சோஷலிஸத்தை நாம் நிர்மாணிக்கத் துவங்க முடியும் (துவங்கத்தான் வேண்டும்.) கருத்தியலான மனித பொருளியலேயோ, அல்லது விசேஷமாக நாம் தயாரித்த மனித பொருளியலேயோ வைத்துக் கொண்டல்ல, அதற்கு மாறாக முதலாளித்துவம் வாரிசு சொத்தாக நமக்கு விட்டு சென்றிருக்கும் மனித பொருளியலை வைத்துக் கொண்டு நிர்மாணிக்க வேண்டும். அது சுலபமான காரியமல்ல என்பது உண்மையே; ஆனால், இந்தப் பிரச்சினையை வேறு வகையில் அணுகுவது பற்றி விவாதிப்பதற்கே இடமில்லை.

## X

## பல்வேறு முடிவுகள்

மக்கள் இடையிலும், தேசங்கள் இடையிலும் தேசிய, அரசு தனிவேறுபாடுகள் இருப்பது வரையிலும்— நீண்ட காலம் வரையிலும் இவை நீடித்திருக்கும், உலகரீதியில் பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் நிலைநாட்டப்பட்ட பிறகும்கூட நீடித்திருக்கும்— எல்லா நாடுகளிலும் கம்யூனிஸ்ட் தொழிலாளவர்க்க இயக்கத்தின் சர்வதேச செயல் தந்திரத்தின் ஒற்றுமை கோருவது என்னவென்றால், தேசிய தனி வேறுபாடுகளின் வகைகளை அகற்றாமல், அல்லது அடக்காமல் (இன்று பயனில்லாத கற்பனையாக அது இருக்கிறது) அதற்குமாறாக கம்யூனிஸத்தின் அடிப்படையான கோட்பாடுகளை நடைமுறையில் செயல் படுத்த வேண்டும் (சோவியத் அதிகாரத்தையும், பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தையும்); இது சில குறிப்பிட்ட நுணுக்க விவரங்களில் இந்தக் கோட்பாடுகளை பிசகற்ற முறையில் திருத்தி அமைக்கும்; தேசிய அரசு தனி வேறுபாடுகளுக்கு உகந்த முறையில் சரியாக மாற்றி அமைத்து, நடைமுறையில் செயல் படுத்தும். தேசிய ரீதியில் எது துல்லியமாக இருக்கிறது, தேசிய ரீதியில் எது தனிச்சிறப்புடையதாக இருக்கிறது என்பதை தேடிப்பிடிக்க வேண்டும், அலசி ஆராய வேண்டும், முன் கூட்டியே கூற வேண்டும், இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும்; தனித்த சர்வதேசக் கடமையை ஒவ்வொரு நாடும் ஸ்தூல மானமுறையில் இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டும்; தொழிலாள வர்க்க இயக்கத்திற்குள்ளே இருக்கும் சந்தர்ப்பவாதத்தையும், இடதுசாரி வரட்டு கோட்

பாடு வாதத்தையும் முறியடித்து, வெற்றி கொள்ள வேண்டும்; முதலாளித்துவத்தை வீழ்த்த வேண்டும்; சோவியத் குடியரசையும், பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தையும் நிலைநாட்ட வேண்டும்— முன்னேற்ற மடைந்த எல்லா நாடுகளும் (அவை மாத்திரமல்ல) கடந்து சென்று கொண்டிருக்கும் சரித்திர பூர்வ மான காலகட்டத்தின் அடிப்படையான கடமை இவை தான். முக்கியமான விஷயம் —எல்லா விஷயங்களையும் இன்னும் முடிக்க வில்லை என்பது உண்மையே— ஏற்கெனவே முக்கியமான விஷயத்லை அடைந்திருக்கிறோம்; தொழிலாளர் வர்க்கத்தின் முன்னணிப்படையை வென்றிருக்கிறோம்; சட்ட மன்ற வாதத் திற்கு எதிராக சோவியத் அரசாங்கத்தின் பக்கம் அது அணிவகுத்து நிற்கிறது; முதலாளித்துவ ஜனநாயகத்திற்கு எதிராக பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தின் பக்கம் அணி வகுத்து நிற்கிறது. எல்லாக் கவனத்தையும், எல்லா முயற்சிகளையும் அடுத்த நட வடிக்கை மீது திருப்ப வேண்டும்; அது அவ்வளவு அடிப்படையான தாக இல்லை என்று தோன்றலாம்; சில குறிப்பிட்ட கண்ணோட் டத்திலிருந்து பார்த்தால், அது உண்மையாகவே அவ்வாறே இருக் கிறது; ஆனால், மறுபுறத்தில், நடைமுறையில் கடமையைச் செய்து முடிப்பதற்கு அது மிக நெருக்கமாகவே இருக்கிறது. அந்த நடவடிக்கை இதுதான். அதாவது, பாட்டாளி மக்களின் புரட் சிக்கு மாறிச்செல்லும் வடிவங்களை, அல்லது அணுகும் வடிவங்களைத் தேடிக் கண்டு பிடிப்பது தான் அது.

பாட்டாளி மக்களின் முன்னணிப் படையைச் சித்தாந்த ரீதியில் வென்றிருக்கிறோம். அது முக்கியமான விஷயமாகும். இதைப் பெறுமல், வெற்றியை நோக்கி முதல் அடிகூட வைக்க முடியாது. ஆனால், அதுவும் வெற்றியிலிருந்து தொலை தூரத்தில் இருக்கிறது. முன்னணிப் படையை மாத்திரம் வைத்துக் கொண்டு வெற்றியைப் பெற்றுவிட முடியாது. வர்க்கம் முழுவதும், பரந்த மக்கள் திரள் முன்னணிப் படைக்கு நேரடியாக ஆதரவு கொடுப்பது என்ற நிலையை எடுப்பதற்கு முன்பு, அல்லது குறைந்த பட்சம் அதன்பால் அனுதாபத்தோடு கூடிய நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு முன்பு, எதிரிக்கு ஆதரவு கொடுக்கும் நிலை தவிர்க்கப்படுவதற்கு முன்பு இறுதியான போராட்டத்தில் முன்னணிப் படையை மாத்திர அனுப்புவது முட்டாள்தனம், என்பது மாத்திரமில்ல, குற்ற இயல் செயலுமாகும். மூலதனத்தால் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள், பரந்த உழைக்கும் மக்கள் திரள், வர்க்கம் முழுவதும் இத்தகைய ஒரு நிலையை எடுப்பதற்கு பிரச்சாரமும், கிளர்ச்சியும் மாத்திரம் போதாது. அத்தகைய ஒரு நிலையை எடுப்பதற்கு

அவர்களுக்கு சொந்த அரசியல் அனுபவம் வேண்டும். எல்லா மகத்தான புரட்சிகளின் அடிப்படையான விதியும் இவ்வாறு இருக்கிறது. இது, ரஷ்யாவில் மாத்திரமின்றி, ஜெர்மனியிலும் கூட வசீகரிக்கும் சக்தியோடும், உயிர்க்களையோடும் ஊர்ஜிதம் செய்யப் பட்டிருக்கிறது. தயக்கமின்றி உறுதியாக கம்யூனிஸத்தை நோக்கிச் செல்ல வேண்டுமானால், ரஷ்யாவில் உள்ள அறியாமையில் மூழ்கிக்கிடக்கிறவர்களும், கல்வி அறிவில்லாதவர்களும் மாத்திர மின்றி, ஜெர்மனியில் உள்ள கல்வி அறிவு பெற்றவர்களும், அறிவாளிகளும் கூட அவர்களுடைய கடுமையான சொந்த அனுபவத்திலிருந்து, இரண்டாவது அகிலத்தின் அருஞ்செயல் வீரர்களின் சர்க்காரின் மோசமான இழிவான நடவடிக்கைகளையும், வீரியமின்மையையும், முதுகெலும்பற்ற தன்மையையும், பயனற்ற நிலையையும், முதலாளித்துவத்திற்கு அடிமையாக இருப்பதையும் உணர வேண்டியது அவசியமாகும்; பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்திற்கு ஒரே ஒரு மாற்று வழியாக இருப்பது மோசமான பிற்போக்காளர்களின் (ரஷ்யாவில் கோர்னிலாவ்,[116] ஜெர்மனியில் காப் கூட்டத்தினர்[117] சர்வாதிகாரமாகத் தான் தவிர்க்க முடியாத வகையில் இருக்க முடியும் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

சர்வதேச தொழிலாள வர்க்க இயக்கத்தின் வர்க்க உணர்வு படைத்த முன்னணிப் படையின்,—அதாவது கம்யூனிஸ்ட் கட்சிகள், குழுக்கள், கருத்துப் போக்குகள் ஆகியவற்றின்— உடனடியான குறிக்கோள் என்னவென்றால், விரிவான மக்கள் திரளுக்கு (பெரும்பாலும் இவர்கள் இன்னும் ஆர்வமில்லாதவர் களாகவும், மந்தமானவர்களாகவும், செயல் அடங்கி இருக்கிறவர் களாகவும், பழக்க வழக்கங்களுக்கு ஆளானவர்களாகவும் இருக் கிறார்கள்) அவர்களின் புதிய நிலைக்கு அவர்களுக்குத் தலைமை தாங்கும் சக்தி படைத்ததாக இருக்க வேண்டும்; அல்லது அவர் களுடைய சொந்த கட்சி மாத்திரமின்றி, இந்த மக்கள் திரளும் கூட இந்தப் புதிய நிலைக்கு முன்னேறிச் செல்வதற்கும், மாறிச் செல் வதற்கும் தலைமை தாங்கும் சக்தி படைத்ததாக இருக்க வேண்டும். சந்தர்ப்பவாதத்தையும், சமூக அதிதீவிர சுயநாட்டுப் பற்றுதலை யும் சித்தாந்த ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பரிபூரணமாக முறியடித்து, வெற்றியடையாமல் சரித்திர பூர்வமான முதலாவது குறிக்கோளை (அதாவது பாட்டாளி மக்களில் வர்க்க உணர்வு பெற்ற முன்னணிப் படையை சோவியத் அதிகாரத்தின் பக்கமும், தொழிலாள வர்க்கத்தின் சர்வாதிகாரத்தின் பக்கமும் ஆதரவாகத் திரட்டுவதை) அடைய முடியாது; அதே சமயத்தில், உடனடி யானதும், இரண்டாவதுமான குறிக்கோளை—அதாவது ஒரு புதிய

நிலைக்கு மக்கள் திரளுக்குத் தலைமை தாங்கும் சக்தி பெற்றிருக்க வேண்டும், புரட்சியில் முன்னணிப் படையின் வெற்றிக்கு உத்தர வாதத்தை ஏற்படுத்துவது அதில் அடங்கி இருக்கிறது—இடதுசாரி வரட்டுக் கோட்பாடுகளைத் துடைத்தெறியாமலும், அதன் தவறுகளை முற்றிலும் நீக்காமலும் அடைய முடியாது.

பாட்டாளி மக்களின் முன்னணிப் படையைக் கம்யூனிஸத்தின் பக்கத்திற்கு ஆதரவாக கொண்டுவருவது என்ற பிரச்சினை நமக்கு முன்னுல் இருந்தால் (அது இன்னும் இருப்பதால்) பிரச்சார வேலைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது, இன்னும் கொடுக்கப் படுகிறது, குறுகிய நோக்கம் கொண்டதாக இருப் பினும் கூட, பிரச்சாரக் குழுக்கள் இத்தகைய நிலைமை களில் பயனுள்ளதாக இருப்பதோடு, நல்ல பலன்களையும் கொடுக்கும். ஆனால், மக்கள் திரள் நடைமுறையில் செயல்படுவது என்ற பிரச்சினையாக இருந்தால், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் இறுதியான, முடிவான போராட்டத்திற்கு ஏராளமான படைகளைத் திரட்டுவது, வர்க்க சக்திகள் அனைத்தையும் கூட்டணியில் ஒன்று சேர்ப்பது என்ற பிரச்சினையாக இருந்தால், அப்பொழுது பிரச்சார முறைகள் மாத்திரம், "தூய" கம்யூனிஸத்தின் உண்மைகளைத் திரும்பத் திரும்பக் கூறுவது மாத்திரம் பயனளிக்காது. இத்தகைய சூழ் நிலைமைகளில், மக்கள் திரளுக்கு இன்னும் தலைமைப் பாத்திரத்தைக் கொடுக்காத ஒரு சிறிய குழுவைச் சேர்ந்த பிரச்சார கரைப்போல் ஒருவன் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறுர்கள் என்று கூறி மனநிறைவு அடையக் கூடாது; இத்தகைய சூழ்நிலைமைகளில் லட்சக்கணக்கானவர்கள், பத்து லட்சக்கணக்கான வர்கள் நமக்குத் தேவைப்படுகிறுர்கள். இந்தச் சூழ்நிலைமைகளில் நம்மை நாமே பின்வருமாறு கேட்க வேண்டும். புரட்சிக்கரமான வர்க்கத்தின் முன்னணிப் படையை நாம் நம்பும்படி செய்திருக்கி ரேமா என்பது மாத்திரமின்றி, எல்லா வர்க்கங்களின் சரித்திர பூர்வமான போருக்கு ஆயத்த நிலையில் உள்ள சக்திகளை, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் விதிவிலக்கில்லாமல் எல்லா வர்க்கங்களும் நிச்சயமாக முடிவான போராட்டம் நமக்கு முன்னுல் நிற்கிறது என்ற முறையில் அணிவகுத்து நிற்கின்றனவா என்றும் கேட்க வேண்டும்; மேலும், (1) நமக்கு விரோதமான வர்க்க சக்திகள் அனைத்தும் போதுமான அளவு நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருக்கின்றனவா, ஒன்றேடொன்று போதிய அளவு முட்டி மோதிக் கொண்டிருக்கின்றனவா, அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு போராட்டத்தில் தங்களைத் தாங்களே போதிய அளவு பலஹீனப்படுத்திக் கொண்டிருக்கிறுர்களா என்று கேட்க வேண்டும். (2) சிறு முதலாளிகள், முதலாளிகளிடமிருந்து

முற்றிலும் மாறுபட்ட சிறு முதலாளித்துவ ஜனநாயக வாதிகள் ஆகிய ஊசலாடுகிறவர்களும், உறுதியற்ற நடுத்தர நபர்களும் பொதுமக்கள் முன்பு தங்களைப் போதிய அளவு அம்பலப் படுத்திக் கொண்டிருக்கிறார்களா, அவர்களுடைய நடைமுறை சூன்யக் கொள்கையால் தங்களைத் தாங்களே போதிய அளவு அவமானத் திற்கு ஆளாக்கிக் கொண்டிருக்கிறார்களா என்று கேட்க வேண்டும். (3) பாட்டாளி மக்களிடையே, முதலாளித்துவத்திற்கு எதிராக உறுதியான, தைரியமான, அனைத்தையும் அர்ப்பணம் செய்து புரட்சிகரமான செயலில் ஈடுபடவேண்டும் என்பதற்குச் சாதகமான உணர்வு தோன்றியிருக்கிறதா, தீவிரமாக அது வளர்ந்து கொண்டிருக்கிறதா என்று கேட்க வேண்டும், அப்பொழுது, புரட்சி நிச்சயமாக பக்குவமடைந்திருக்கிறது என்று கூறலாம்; அப்பொழுது நாம் மேலே சுட்டிக் காட்டியுள்ள எல்லா நிலைமைகளையும் பொதுமைப் படுத்தியிருப்பவைகளையும் நாம் சரியாக மதிப்பீடு செய்திருந்தால், சரியான தருணத்தை நாம் தேர்ந்தெடுத்திருந்தால், நிச்சயமாக நமது வெற்றிக்கு உத்தரவாதமிருக்கிறது.

1920-ல் ஏப்ரில்
மே மாதங்களில்
எழுதப்பட்டது.
1920-ல் ஜூன் மாதத்தில்,
பெட்ரோகிராடில் அரசாங்க
பதிப்பகத்தில் சிறு புத்தக
வடிவத்தில் பிரசுரிக்கப்பட்டது

திரட்டப்பட்ட
நூல்கள்-தொகுப்பு
31-பக்கம்—49-50
92-94

# வாலிபர் கழகங்களின் கடமைகள்

ரஷ்ய இளம் கம்யூனிஸ்ட் கழகத்தின் மூன்ருவது
அகில ரஷ்ய காங்கிரசில் சொற்பொழிவு.

## அக்டோபர் 2, 1920[118]

*(பிரம்மாண்டமான மகிழ்ச்சி ஆரவாரத்தோடு லெனினை வர வேற்கிறது காங்கிரஸ்)*

தோழர்களே, இளம் கம்யூனிஸ்ட் கழகத்தின் அடிப்படையான கடமைகள் பற்றியும், இது சம்பந்தமாக ஒரு சோஷலிஸ்டு குடியரசில் பொதுவாக வாலிபர்களின் ஸ்தாபனங்கள் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியும் இன்று நான் பேச விரும்பு கிறேன்.

இந்தப் பிரச்சினை பற்றி கருத்தூன்றி நீடித்துப் பேச வேண்டியது மிக அவசியமாகும்; ஏனெனில், ஒரு கம்யூனிஸ்ட் சமுதாயத்தை நிர்மாணம் செய்யும் உண்மையான கடமையை மேற் கொள்கிறவர்கள் வாலிபர்களே என்று ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தில் கூறலாம். எவ்வாறென்ருல், முதலாளித்துவ சமுதாயத்தில் வளர்க்கப்பட்ட இன்றைய உழைக்கும் மக்களின் தலைமுறையானது சுரண்டலின் மேல் நிர்மாணிக்கப் பட்டிருக்கும் முதலாளித்துவ வாழ்க்கை முறையின் பழைய அஸ்திவாரத்தை அழிக்கும் கடமையை அதிகபட்சம் செய்து முடிக்கலாம் என்பது தெளிவாகத் தெரிகிறது. பாட்டாளி மக்களும், உழைப்பாளி வர்க்கங்களும் அதிகாரத்தை நீடித்து நிலைத்து வைத்திருப்பதற்கும் ஒரு உறுதியான அஸ்திவாரத்தைப்போடுவதற்கும் உதவி செய்கிற ஒரு சமூக அமைப்பைச் சிருஷ்டிக்கும் கடமைகளை அதிகப்பட்சம் அது செய்து முடிக்க முடியும்; மனிதனை மனிதன் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்ட உறவுகள் இல்லாத ஒரு சூழ்நிலையில், ஒரு புதிய சுற்றுச் சார்புகளின் கீழ் வேலை செய்யத் தொடங்கியிருக் கும் ஒரு தலைமுறையால் மாத்திரமே இந்த அஸ்திவாரத்தின் மீது நிர்மாணப் பணியை மேற்கொள்ள முடியும்.

ஆகவே, வாலிபர்கள் சமாளிக்க வேண்டியிருக்கும் கடமைகளை இந்த கோணத்திலிருந்து ஆராய்ந்து பார்க்கும் போதும், பொதுவாக வாலிபர்கள், குறிப்பாக இளம் கம்யூனிஸ்டுக் கழகங்கள், மற்ற எல்லா ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் கடமைகள் என்ன வென்றால், அதை ஒரே ஒருவார்த்தையில் சுருக்கமாகக் கூறிவிடலாம். கற்றுக்கொள்.

ஆம், இது "ஒரே வார்த்தையே" என்பது உண்மைதான். முக்கியமான, தலையாய கேள்விகளுக்கு அது பதில் கொடுக்கவில்லை: அதாவது, எதைக் கற்றுக் கொள்வது? எப்படி கற்றுக் கொள்வது? இங்கு கவனிக்க வேண்டிய விஷயம் என்ன வென்றால், பழைய முதலாளித்துவ சமுதாயத்தை உருமாற்றி அமைக்கும் போது, கம்யூனிஸ்ட் சமுதாயத்தைச் சிருஷ்டிக்கும் புதிய தலைமுறைகளுக்குப் பழைய முறையில் பயிற்சி கொடுத்து, கல்வி போதித்து, வளர்க்க முடியாது. வாலிபர்களுக்கு கல்வி கற்பித்தல், பயிற்சி அளித்தல், படிப்பினைகளைக் கொடுத்தல் ஆகியவற்றை பழைய சமுதாயம் நமக்கு விட்டுவைத்துச் சென்றிருக்கும் பொருளியலிலிருந்து துவங்க வேண்டும். பழைய சமுதாயம் நமக்கு விட்டுவைத்துச் சென்றிருக்கும் அறிவு, ஸ்தாபனங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் கூட்டுமொத்தத்தின் அடிப்படையில மாத்திரம் சேகரித்து வைத்திருக்கும் மனித சக்திகள், சாதனங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் மூலமாக மாததிரம் நாம் கம்யூனிஸத்தை நிர்மாணம் செய்ய முடியும். வாலிபர்களுக்கு அறிவூட்டுவது, அமைப்பது, பயிற்சி கொடுப்பது ஆகியவற்றைத் தீவிரமாகத் திருத்தி அமைப்பதன் மூலமாக மாத்திரமே இளம் தலைமுறையின் முயற்சிகள் பழைய சமுதாயத்தைப் போல் இலலாத ஒரு சமுதாயத்தைச் சிருஷ்டிப்பதில், அதாவது ஒரு கம்யூனிஸ்ட சமுதாயத்தைச் சிருஷ்டிப்பதில் வெற்றியடைவதற்கு உத்தரவாதத்தை ஏற்படுத்தும். அதனால்தான், கம்யூனிஸ்ட் வாலிபர்கள் என்ற பெயர் சரியானது என்பதை நிரூபித்துக்காட்ட உண்மையாகவே அவர்கள் விரும்பினால் வாலிபர்களுக்கு நாம் எதைக் கற்றுக் கொடுக்க வேண்டும், எப்படி வாலிபர்கள் கறறுக் கொள்ள வேண்டும் என்ற புரச்சினையையும், நாம் துவங்கியிருக்கும் பணியைப் பூர்தி செய்யும் பொருட்டு நிறைவுடையதாக ஆக்கும் பொருட்டு எப்படி வாலிபர்களுக்குப் பயிற்சி கொடுப்பது என்ற பிரச்சினையையும் நாம் விரிவாக அலசி ஆராயவேண்டும்.

கம்யூனிஸத்தை நோக்கி முன்னேறிச் செல்ல விரும்புகிற வாலிபர் கழகம், பொதுவாக வாலிபர்கள் கம்யூனிஸத்தைக கறறுக் கொள்ளவேண்டும் என்பது முதலாவதும், பெரிதும் இயல்பானதுமான பதிலாக இருக்கலாம் என்று நான் கூற வேண்டியிருக்கிறது.

ஆனால், இந்தப் பதில் —"கம்யூனிஸத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்" என்ற பதில்—மிகவும் பொதுப்படையானதாக இருக்கிறது. கம்யூனிஸத்தைக் கற்றுக் கொள்ளும் பொருட்டு நமக்கு என்ன தேவைப்படுகிறது? கம்யூனிஸத்தைப் பற்றிய ஞானத்தைப் பெறுவதற்காக, பொதுப்படையான ஞானத்தின் மொத்தக் கருத்துக்களிலிருந்து எதைத் தனியே பிரித்தெடுக்க வேண்டும்? இங்கு ஏராளமான அபாயங்கள் எழுகின்றன; கம்யூனிஸத்தைக் கற்றுக் கொள்ளும் கடமையைத் தவறான முறையில் முன் வைக்கும் போதும் அல்லது மிகவும் ஒரு தலைப் பட்சமான முறையில் அதை வியாக்கியானம் செய்யும் போதும் அபாயங்கள் தாமாகவே அடிக்கடி வெளிப்படுகின்றன.

இயல்பாகவே, கம்யூனிஸத்தைக் கற்றுக்கொள்வது என்றால் அதன் அர்த்தம் கம்யூனிஸ்ட் கையேடுகள், சிறு வெளியீடுகள், புத்தகங்கள் ஆகியவற்றில் அடங்கியுள்ள ஞானத்தின் மொத்தக் கருத்துக்களைக் கரைத்துக் குடிப்பது என்பதுதான் என்ற முதல் எண்ணம் ஒருவன் மனதில் ஏற்படுகிறது. ஆனால், கம்யூனிஸத்தைக் கற்றுக்கொள்வது பற்றிய இத்தகைய வரையறுப்பானது மிகவும் பக்குவமடையாததாகவும், பற்றாக்குறையானதாகவும் இருக்கும். கம்யூனிஸத்தைக் கற்றுக்கொள்வதானது, கம்யூனிஸ்ட் புத்தகங்களிலும், சிறு வெளியீடுகளிலும் இருப்பவைகளை மாத்திரம் கரைத்துக் குடிப்பதில் அடங்கியிருக்கிறது என்றால், கம்யூனிஸ்ட் பாட புத்தகத்தை எழுதும் எத்தர்களையும், அல்லது தற்புகழ்ச்சிக் காரர்களையும் நாம் மிகச் சுலபமாகப் பெறுவோம்: இது அடிக்கடி நமக்குத் தீமையைக் கொடுக்கும்; ஏனெனில், கம்யூனிஸ்ட் புத்தகங்களிலும், சிறு வெளியீடுகளிலும் அடங்கியிருப்பதை இவர்கள் மனப்பாடம் செய்துவிட்டு, ஞானத்தின் பல்வேறு கிளைத் துறைகளை இணைக்கும் சக்தியற்றவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டுவார்கள்; மேலும், கம்யூனிஸம் உண்மையாகவே கோருகிற முறையில் செயல்படுவதற்கும் சக்தியற்றவர்களாக இருப்பார்கள்.

பழைய, முதலாளித்துவ சமுதாயம் நமக்கு விட்டு வைத்திருக்கும் மிகப் பெரிய தீமைகளில், வாய்ப்புக் கேடுகளில் ஒன்று என்னவென்றால், புத்தகங்களுக்கும், எதார்த்த வாழ்வுக்கும் இடையே முழு நிறைவான இடைவெளி இருக்கிறது என்பதுதான் சாத்தியமான வகையில் எல்லாவற்றையும் பற்றி சிறந்த முறையில் விளக்கம் கொடுக்கும் புத்தகங்கள் ஏராளமாக இருக்கின்றன; இருப்பினும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெரும் கேடு விளைவிக்கக் கூடிய, வஞ்சனை செய்கிற பொய் புரட்டுக்கள்,

முதலாளித்துவ சமுதாயத்தைப் பற்றிய தவறான விவரங்கள் இந்தப் புத்தகங்களில் அடங்கியிருந்தன.

அதனால்தான், கம்யூனிஸத்தைப் பற்றிய புத்தக ஞானத்தை மாத்திரம் கரைத்துக் குடிப்பது மிகவும் தவறான செயலாகும். நாம் முன்பு பேசியது போல் கம்யூனிஸக் கொள்கையை மாத்திரம் திரும்பத் திரும்பக் கூறுவதோடு நமது சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் நின்று விடுவதில்லை. ஏனெனில் நமது சொற்பொழிவுகளும், கட்டுரைகளும் எல்லாத் துறைகளிலும் நமது தினசரி வேலைகளோடு தொடர்புடையதாக இருக்கின்றன. வேலை செய்யாமல், போராட்டத்தை நடத்தாமல் கம்யூனிஸ்ட் புத்தகங்கள் மூலமாகவும், சிறு வெளியீடுகள் மூலமாகவும் கிடைத்த கம்யூனிஸத்தைப் பற்றிய ஞானம் முற்றிலும் பயனற்றது; ஏனெனில் அது பழைய முறையில் தத்துவத்தையும், நடைமுறையையும் தனியே தொடர்ந்து பிரிக்கும்; பழைய முதலாளித்து சமுதாயத்தின் இந்தப் பிளவு மிகவும் தீமை இழைக்கக் கூடிய அம்சமாகும்.

கம்யூனிஸ்ட் கோஷங்களை மாத்திரம் கரைத்துக் குடிப்பதில் ஈடுபடுவது மேலும் அபாயகரமானதாகும். இந்த அபாயத்தைத் தவிர்ப்பதில் நமது முயற்சிகளை நாம் திருப்பி விடவில்லையென்றால், இந்த முறையில் கம்யூனிஸத்தைக் கற்றுக் கொண்ட பிறகு கம்யூனிஸ்டுகள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் ஐந்து லட்சம், அல்லது பத்து லட்சம் வாலிபர்களும், வாலிபப் பெண்களும் கம்யூனிஸத்தின் இலட்சியத்திற்கு பெரிதும் கேடுகளைத் தான் உண்டுபண்ணுவார்கள்.

அப்போது இந்தப் பிரச்சினை எழுகிறது; கம்யூனிஸத்தைப் கற்றுக் கொள்ளும் பொருட்டு இவை அனைத்தையும் எவ்வாறு இணைப்பது? பழைய பள்ளிக்கூடங்களிலிருந்து, பழைய விஞ்ஞான வகையிலிருந்து நாம் எதை எடுத்துக் கொள்ள வேண்டும்? எல்லாத் துறைகளிலும் கல்வி ஞானத்தைப் பெற்றிருக்கிறவர்களை உற்பத்தி செய்வதும், பொதுவாக விஞ்ஞானத்தைக் கற்றுக் கொடுப்பதும் பழைய வகை பள்ளிக்கூடத்தில் பிரகடனம் செய்யப்பட்ட இலட்சியமாக இருந்தது. இது முற்றிலும் பொய் என்பது நமக்குத் தெரியும்; ஏனெனில், சமுதாயம் முழுவதும் மக்களை வர்க்கங்களாக, சுரண்டுகிறவர்கள், அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாகப் பிரிவினை செய்து, அதை அடிப்படையாகக் கொண்டிருப்பதோடு, அதைப் பேணிப் பாதுகாத்து வருகிறது. அவர்களுக்கு முழுமையாக வர்க்க உணர்வு ஊட்டப்பட்டிருந்ததால், பழைய பள்ளிக் கூடங்கள் இயல்பாகவே முதலாளிகளின் குழந்தைகளுக்கு

மாத்திரம் அறிவைப் புகட்டின. முதலாளிகளின் நலஉரிமைகளுக்கு அனுகூலமாக ஒவ்வொரு வார்த்தையும் திருத்திப் புரட்டிக் கூறப்பட்டது. இந்தப் பள்ளிக்கூடங்களில் முதலாளித்துவத்தின் நலனைப் பேணிப் பாதுகாப்பதற்காக எந்த அளவுக்கு அறிவூட்டப் படுகிறதோ, அந்த அளவுக்குத் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியவர்களின் இளம் தலைமுறைகளுக்கு அறிவூட்டப்படவில்லை முதாளித்துவத்திற்கு பயனுள்ள பணியாட்களாக இருக்கும் முறையிலும், முதலாளித்துவத்தின் அமைதியையும், அலுவல்களில் ஈடுபாடற்ற நேரத்தையும் தொந்தரவு செய்யாமல் அதற்கு லாபத்தைச் சிருஷ்டித்துக் கொடுக்கும் திறனுள்ள முறையிலும் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது. அதனால்தான், பழைய வகை பள்ளிக்கூடங்களை நிராகரிக்கும் போது, அதே சமயத்தில் தூய கம்யூனிஸ்ட் கல்விக்கு நாம் தேவைப்படுவதை அதிலிருந்து எடுத்துக் கொள்வது என்பதை நமது கடமையாகக் கொண்டிருக்கிறோம்.

பழைய பள்ளிக்கூடங்களைக் கண்டிப்பதையும் நிந்தனை செய்வதையும் நாம் தொடர்ச்சியாகக் கேள்விப்படுகிறோம்; இது அடிக்கடி முற்றிலும் தவறான முடிவுகளுக்கு வருவதில் இழுத்துச் செல்கிறது. பழைய பள்ளிக்கூடங்கள் முற்றிலும் புத்தக ஞானத்தை ஊட்டக் கூடியது என்றும், முடிவில்லாமல் துளைபோடுவதும், அரைப்பதுமாகவே இருக்கின்றன என்றும் கூறப்படுகிறது. அது உண்மையே; ஆனால், பழைய பள்ளிக்கூடங்களில் எது கெட்டது, எது நமக்குப் பயனுள்ளது? என்பதை நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்; கம்யூனிஸத்திற்கு எது அவசியமானது என்பதை அதிலிருந்து நாம் பொறுக்கி எடுக்கவேண்டும்.

பழைய பள்ளிக்கூடங்கள் 'சுத்தமாக 'புத்தக' ஞானத்தையே கொடுத்தன; அவை, மாணவர்களுக்கு ஏராளமான பயனற்ற, மேலெழுந்த வாரியான, வறட்டு ஞானத்தைக் கொடுத்தன. இவை மூளையில் குப்பைக் கூளங்களைக் குவித்தன; இளம் தலைமுறைகளை அதிகார வர்க்கத்தினராக மாற்றின; ஒரே ஒரு பாணியில் அவர்களை அமைத்தன. ஆனால், மனித இனம் சேமித்து வைத்திருக்கும் அறிவுச் செல்வத்தைக் கிரகித்துக் கொள்ளாமல் ஒருவன் கம்யூனிஸ்ட் ஆகமுடியும் என்ற முடிவுக்கு வரமுடியும் என்றால், அதன் அர்த்தம் ஆபத்தான தவறில் விழுவதாகும். கம்யூனிஸம் தோன்றுவதற்கே காரணமாக இருந்த மொத்த ஞானத்தைப் பெறாமல் கம்யூனிஸ்ட் கோஷங்களைக் கற்றுக் கொள்வதும், கம்யூனிஸ்ட் விஞ்ஞானத்தின் முடிவுகளைக் கற்றுக் கொள்வதும் போதுமானது என்று நினைப்பது

தவறும். மனித இனத்தின் மொத்த ஞானத்திலிருந்து எவ்வாறு கம்யூனிஸம் உதயமாயிற்று என்பதை எடுத்துக் காட்டுவதற்கு மார்க்ஸீயம் ஒரு உதாரணமாகத் திகழ்கிறது.

கம்யூனிஸ்ட் தத்துவமானது — மார்க்ஸீயத்தின் இந்தக் கோட்பாடானது, விஞ்ஞான கம்யூனிஸமானது பெரும்பாலும் மார்க்ஸால் சிருஷ்டிக்கப்பட்டது—அவர் மாமேதையாக இருந்த போதிலும்கூட பத்தொன்பதாவது நூற்றாண்டில் இருந்த ஒரே ஒரு சோஷலிஸ்டின் படைப்பாக இருந்தது என்ற கருத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் படித்திருக்கிறீர்கள்; கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; உலகம் முழுவதும் உள்ள கோடானுக்கோடி பாட்டாளி மக்களின் கோட்பாடாக அது மாறியிருக்கிறது; அவர்கள் அதை முதலாளித்துவத்தை எதிர்த்து நடத்தும்போராட்டத்தில் செயல்படுத்தி வருகிறார்கள். பெரிதும் புரட்சிகரமான வர்க்கத்தில் கோடானுக்கோடி மக்களின் உள்ளத்தையும், மனத்தையும் மார்க்ஸின் போதனைகள் ஏன் கலந்திருக்கிறது என்று நீங்கள் கேட்பீர்களேயானால், நீங்கள் ஒரே ஒரு பதிலையே பெறுவீர்கள். காரணம் என்னவென்றால் முதலாளித்துவத்தின் கீழ் கிடைத்த மனித இனத்தின் ஞானத்தின் உறுதியான அஸ்திவாரத்தை மார்க்ஸ் அடிப்படையாகக் கொண்டிருந்தார். மனித சமுதாயத்தின் வளர்ச்சியைப் பற்றிய விதிகளைக் கற்றுக்கொண்ட பிறகு, மார்க்ஸ் முதலாளித்துவம் கம்யூனிஸத்தை நோக்கி தவிர்க்க முடியாத வகையில் வளர்ச்சியடைந்து போவதைப் புரிந்து கொண்டார். இதில் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால் இந்த முதலாளித்துவ சமுதாயத்தை மிகவும் துல்லியமாகவும், விரிவாகவும், ஆழமாகவும், கற்றுத் தெரிந்துகொண்டதையும், முந்தியகாலத்திய விஞ்ஞானம் படைத்தவைகளையெல்லாம் முழுமையாக கிரகித்துக்கொண்டதையும் மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு அவர் இதை நிரூபித்துக் காட்டினார். எந்த ஒரு விவரத்தையும் உதாசீனம் செய்யாமல், மனித சமுதாயம் சிருஷ்டித்த ஒவ்வொன்றையும் அவர் விமர்சனக் கண்ணோட்டத்தோடு உருமாற்றியமைத்தார். மனிதனின் சிந்தனை சிருஷ்டித்திருக்கும் ஒவ்வொன்றையும் அவர் மறுபரிசீலனை செய்து, விமர்சனத்திற்கு உட்படுத்தி, தொழிலாள வர்க்கத்தின் இயக்கத்தில் ஒப்பிட்டு சரிபார்த்தார், அதிலிருந்து, முடிவுகளை வரையறுத்துக் கூறினார். முதலாளித்துவ வரையறைகளாலும், அல்லது முதலாளித்துவ தப்பெண்ணங்களாலும் வளைத்துக் கொள்ளப்பட்டிருந்த மக்கள் இத்தகைய முடிவுகளுக்கு வரமுடியவில்லை.

உதாரணமாக நாம் பாட்டாளி மக்களின் கலாச்சாரத்தைப் பற்றிப் பேசும்பொழுது இதை நாம் மனதில் வைத்திருக்கவேண்டும்.

மனித இனத்தின் முழுமையான வளர்ச்சியால் சிருஷ்டிக்கப்பட்ட கலாச்சாரத்தைப் பற்றிய துல்லியமான ஞானமும், அதை உருமாற்றம் செய்வதும் மாத்திரம்தான் பாட்டாளி மக்களின் கலாச்சாரத்தை சிருஷ்டிப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெளிவாக நாம் உணர்ந்தால் மாத்திரமே இந்தப் பிரச்சினைக்கு நாம் தீர்வு காணமுடியும். பின்னால் கூறப்பட்டது, மெல்லிய காற்றிலிருந்து பறிக்கப்பட்டதல்ல; அது பாட்டாளி மக்களின் கலாச்சாரத்தில் நிபுணர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்கிறவர்களின் கண்டுபிடித்தலும் அல்ல. அது முட்டாள்தனமாகும். பாட்டாளி மக்களின் கலாச்சாரமானது, முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ, அதிகாரவர்க்க சமுதாயத்தின் நுகத்தடியின் கீழ் மனித இனம் குவித்துவைத்திருக்கும் ஞானக் களஞ்சியத்தின் தர்க்க ரீதியான வளர்ச்சியாக இருக்க வேண்டும். மார்க்ஸால் உருமாற்றம் செய்யப்பட்ட அரசியல் பொருளாதாரம் மனித சமுதாயம் எதை நோக்கி செல்ல வேண்டும் என்பதைக் காட்டியிருப்பது போல், வர்க்கப் போராட்டத்திற்கு, பாட்டாளி மக்களின் புரட்சியின் தொடக்கத்திற்கு பாதையைக் காட்டியிருப்பதுபோல், அதே மாதிரியாக, பாட்டாளி மக்களின் கலாச்சாரத்தை நோக்கி இந்தப் பாதைகள் அனைத்தும் அழைத்துச் செல்கின்றன, எதிர்காலத்திலும் அழைத்துக் செல்லும்.

வாலிபர்களின் பிரதிநிதிகளும், அதேபோல் புதிய கல்வி அமைப்பை ஆதரித்து வாதாடுகிறவர்களில் குறிப்பிட்ட சிலரும் பழைய பள்ளிக்கூடங்களைத் தாக்குவதையும், மனப்பாடம் செய்யும் முறையை அவர்கள் பயன்படுத்தியதாகக் கூறுவதையும் நாம் அடிக்கடி கேட்கும்போது, அவர்களுக்கு நாம் கூறுவது என்னவென்றால் பழைய பள்ளிக்கூடங்களில் நல்லவைகளையெல்லாம் நாம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான். ஏராளமான ஞானத்தை வாலிபர்களின் மனதில் திணிக்கும் முறையை நாம் கடன் வாங்கக்கூடாது. அவைகளில் பத்தில் ஒன்பது பங்கு பயனற்றவை; பத்தில் ஒரு பங்கு திருத்திக் கூறப்பட்டது. ஆயினும் இதன் அர்த்தம் கம்யூனிஸ்ட் முடிவுகளுக்கு நம்மை நாம் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதல்ல; மேலும், கம்யூனிஸ்ட் கோஷங்களை மாத்திரம் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதும் இதன் அர்த்தமல்ல. இந்த வழியில் நீங்கள் கம்யூனிஸத்தைச் சிருஷ்டிக்கப்போவதில்லை. மனித இனத்தால் சிருஷ்டிக்கப்பட்ட ஞானச்செல்லப் புதையல்கள் அனைத்தையும் கொண்டு உங்கள் மனதைச் செழுமைப்படுத்தும்போது தான் நீங்கள் கம்யூனிஸ்டாக மாறமுடியும்.

மனப்பாடம் செய்யவேண்டிய தேவை நமக்குக் கிடையாது! ஆனால், அடிப்படையான உண்மை விவரங்களின் ஞானத்தைக் கொண்டு ஒவ்வொரு மாணவனின் மனதையும் வளர்க்கவேண்டிய முழு நிறைவாக்கவேண்டிய அவசியம் நமக்கு இருக்கிறது. ஒருவன் தனக்குக் கிடைத்திருக்கும் அறிவை மனதில் கரைத்துக் குடிக்க வில்லையென்றால், கம்யூனிஸம் ஒரு வெற்று வார்த்தையாகவும், வெறும் அறிவிப்புப் பலகையாகவும் இருக்கும். இத்துடன் தற் புகழ்ச்சி செய்து கொள்ளும் கம்யூனிஸ்டாகவும் இருப்பார். இந்த ஞானத்தை நீங்கள் அப்படியே கரைத்துக் குடித்தால் மாத்திரம் போதாது. அத்துடன், உபயோகமற்றவைகளை உங்கள் மனதில் திணிப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, விமர்சனத்தோடு ஞானத் தைக் கரைத்துக் குடிக்கவேண்டும்; இத்துடன் இன்றைய காலத்தின் நன்கு கல்விகற்ற மனிதனுக்குத் தவிர்க்க முடியாததாக இருக்கும் எல்லா உண்மை விவரங்களையும் புரிந்து கொண்டு, மனதைச் செழுமைப்படுத்தவேண்டும். கவனமாகவும், கடினமாகவும் உழை க்காமல், விமர்சனக் கண்ணோட்டத்தோடு பரிசீலனைசெய்து உண்மை விவரங்களைப் புரிந்துகொள்ளாமல் முன்னமேயே வரையறுக்கப் பட்டுள்ள முடிவுகளைப் புரிந்துகொண்டிருக்கிற காரணத்தால் ஒரு கம்யூனிஸ்ட் தமக்குத் தெரிந்திருக்கும் கம்யூனிஸத்தைப் பற்றி தற்புகழ்ச்சி செய்துகொள்ள நினைத்தால் அவர் ஒரு இரங்கத்தக்க, கம்யூனிஸ்ட் என்பது உண்மையே. இத்தகைய ஆழமற்ற தன்மை, நிச்சயமாக ஆபத்தானதாகும். எனக்கு அது தெரியும் என்றால், எனக்குக் கொஞ்சமாகத்தான் தெரியும், நான் மேலும் தெரிந்து கொள்ள முயல்வேன். ஆனால் ஒருவன்தான் ஒரு கம்யூனிஸ்ட் என்றும், முழுமையாகத் தெரிந்து கொள்ளவேண்டியது எதுவும் கிடையாது என்றும் கூறுவானேயானால், அவன் எந்தக் காலத் திலும் ஒரு கம்யூனிஸ்டைப் போல் இருக்க முடியாது.

பழைய பள்ளிக்கூடங்கள் முதலாளிகளுக்குத் தேவைப்பட்ட பணியாட்களை உற்பத்தி செய்தன. பழைய பள்ளிக்கூடங்கள் விஞ்ஞானிகளை முதலாளிகள் விரும்புவதற்கு உகந்த முறையில் எழுதும்படியும், பேசும்படியும் செய்தன. ஆகவே, அவைகளை நாம் நீக்கிவிடவேண்டும். ஆனால், நாம் அவைகளை நீக்கிவிடவேண்டும், ஒழிக்கவேண்டும் என்று கூறுவதன் அர்த்தம் மனித இனம் சேர்த்துக் குவித்துவைத்திருப்பதிலிருந்து, மனிதனுக்கு அத்தியாவசியமான வற்றை எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதா? முதலாளித்துவத் திற்கு எது தேவையாக இருந்தது, கம்யூனிஸத்திற்கு எது தேவை யாக இருக்கிறது ஆகியவற்றிற்கு இடையே வித்தியாசத்தை நாம் பார்க்கக்கூடாது என்பது அதன் அர்த்தமா?

பெரும்பாலோரின் விருப்பத்திற்கு விரோதமான பழைய முதலாளித்துவ சமுதாயம் நடைமுறையில் கடைப்பிடித்து வந்த

பழையப் படைப் பயிற்சித் தன்மை கொண்ட முறைகளுக்குப் பதிலாக, தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியவர்களின் வர்க்க உணர்வு பூர்வமான கட்டுப்பாட்டை அமைத்து வருகிறோம்; இவர்கள் பழைய சமுதாயத்தின்மீது உள்ள வெறுப்போடு, இந்தப் போராட்டத்திற்காக தங்கள் சக்திகளை ஒன்றுபடுத்துவதற்கும், ஸ்தாபன ரீதியாக அமைப்பதற்கும் உறுதி பூண்டிருப்பதையும் சக்தி பெற்றிருப்பதையும், தயாராக இருப்பதையும் இணைக்கிறார்கள்; அப்பொழுதுதான், ஒரு பெரிய நாட்டின் பிரதேசத்தில் பிளவுபட்டு சிந்திச் சிதறிக் கிடக்கும் கோடானு கோடி மக்களின் விருப்பங்களை ஒரே ஒருவிருப்பமாக உருவாக்க முடியும்; இது இல்லையென்றால், தோல்வியடைவதைத் தவிர்க்கவே முடியாது. தொழிலாளர்கள் விவசாயிகள் ஆகியவர்களின் இந்த ஒற்றுமை இல்லையென்றால், உணர்வு பூர்வமான இந்தக் கட்டுப்பாடு இல்லையென்றால், நமது இலட்சியம் நம்பிக்கைக்கு இடம் தராததாகவே இருக்கும். இது இல்லையென்றால், உலகம் முழுவதும் உள்ள முதலாளிகளையும், நிலச்சுவான்தார்களையும் நாம் முறியடிக்க முடியாது. அஸ்தி வாரத்தை நாம் உறுதிப்படுத்தவே முடியாது; அந்த அஸ்திவாரத் தின்மீது ஒரு புதிய கம்யூனிஸ்ட் சமுதாயத்தை நிர்மாணம் செய்வது பற்றி நினைக்கவே முடியாது. இதே போல், பழைய பள்ளிக்கூடங்களைக் கண்டனம் செய்யும் போது, பழைய பள்ளிக் கூடங்கள் மீதுள்ள முற்றிலும் நியாயமான, அவசியமான வெறுப் பிற்கு இடங் கொடுக்கும் போது, அவைகளை அழிக்கத் தயாராக இருப்பதைப் பாராட்டும் போது, அதே சமயத்தில் கற்றுக் கொடுக்கும் பழைய முறைக்குப் பதிலாக, பழைய மனப்பாடம் செய்கிற, பழைய துளை போடுகிற முறைக்குப் பதிலாக, மனித இனத்தின் ஞானத்தின் ஒட்டுமொத்தமான அறிவுக் களஞ்சியத்தைப் பெறும் சக்தியைப் பெற்றிருக்க வேண்டும் என்பதை நாம் உணர வேண்டும்; மேலும், கம்யூனிஸம் என்பது மனப்பாடத்தால் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு விஷயமல்ல, அதற்கு மாறாக, நீங்களாகவே சிந்தனை செய்த, ஒரு விஷயம், இன்றைய கல்வியின் நோக்கு நிலையிலிருந்து தவிர்க்க முடியாத வகையில் கிடைத்த முடிவுகளை உட்கொண்ட ஒரு விஷயம் என்ற முறையில் அதைப் பெறவேண்டும்.

இலட்சியத்தைப் பற்றி — கம்யூனிஸத்தைக் கற்றுக்கொள் ளுங்கள் என்பதைப் பற்றி—பேசும் போது, இந்த முறையில்தான் முக்கியமான கடமைகளை முன் வைக்கவேண்டும்.

இதை உங்களுக்குத் தெளிவுபடுத்தும் பொருட்டும், நீங்கள் எப்படி கற்றுக் கொள்ளவேண்டும் என்ற பிரச்சினையை அணுகு

வதை வெளிப்படையாக எடுத்துக்காட்டும் பொருட்டும் நான் ஒரு நடைமுறை உதாரணத்தை எடுத்துக் கொள்கிறேன். குடியரசைப் பாதுகாக்கிறவர்களுக்கு ராணுவப் பிரச்சினையைப் பின் தொடர்ந்து பொருளாதாரக் கடமைகளை நாம் நேரிட வேண்டியிருக்கிறது என்ற விஷயம் உங்கள் அனைவருக்கும் தெரியும். தொழிலையும், விவசாயத்தையும் நாம் திரும்பவும் நிர்மாணம் செய்யாமல்—பழைய முறையில் அல்ல—கம்யூனிஸ்டு சமுதாயத்தை நாம் நிர்மாணம் செய்ய முடியாது என்ற விஷயம் நமக்கே தெரியும் விஞ்ஞானத்தின் சித்தாந்தத்திற்கு உகந்த முறையில், நவீன அடிப் படையில் அவைகளை புனர் நிர்மாணம் செய்ய வேண்டும், அந் அடிப்படை மின்சாரம் தான் என்பது உங்களுக்குத் தெரியும்; நாடு முழுவதும் மின்சார மயமாக்கிய பிறகு, தொழிலின் எல்லாக் கிளைகளையும், விவசாயத்தையும் மின்சார மயமாக்கிய பிறகு, அந்த இலட்சியத்தை அடைந்த பிறகு தான் நீங்களாகவே கம்யூனிஸ்ட் சமுதாயத்தை நிர்மாணம் செய்ய முடியும்; இதைப் பழைய தலைமுறை நிர்மாணம் செய்ய முடியாது, நாடு முழுவதை யும், பொருளாதார ரீதியில் புதுப்பிக்கும் கடமை, நவீன விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் அடிப்படையில் மின்சாரத்தின் அடிப்படையில், நவீன இயந்திர முறையில் விவசாயத்தையும், தொழிலையும் புனரமைத்து, புதுப்பிக்கும் கடமை உங்கள் முன் இருக்கின்றன. கல்வி அறிவில்லாதவர்கள் மின்சார மயமாக்கும் கடமையைச் சமாளிக்க முடியாது என்பதை யும், சாதாரண கல்வி அறிவு அதற்குப் போதுமானதல்ல என்பதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். மின்சாரம் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்கு அந்த அறிவு போது மானதல்ல; தொழிலிலும், விவசாயத்திலும், தொழில், விவசாயம்; ஆகியவற்றில் தனிப்பட்ட கிளைகளிலும் தொழில் நுணுக்க முறைப் படி அதை எப்படி பயன்படுத்துவது என்ற அறிவுதான் தேவைப்படு கிறது. ஒருவர் தாமாகவே அதைக் கற்றுக் கொள்ள வேண்டும் உழைப்பாளி மக்களின் புதிய தலைமுறை முழுமைக்கும் அதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு வர்க்க உணர்வு படைத்த கம்யூனிஸ்டின் முன் உள்ள கடமையும், ஒரு கம்யூனிஸ்ட் என்று தன்னைக் கருதுகிற, வாலிப கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருவதின் மூலமாக கட்சியானது கம்யூனிஸத்தை நிர்மாணம் செய்வதில் உதவி செய்ய வாக்குறுதி கொடுத்துள்ள, கம்யூனிஸ்ட் சமுதாயத்தை வாலிப தலைமுறை முழுவதும் சிருஷ்டிப்பதில் உதவி செய்ய வாக்குறுதி கொடுத்திருக்கிற ஒவ்வொரு வாலிபனின் முன் உள்ள கடமையும் இது தான். நவீன கல்வியின் அடிப்படையில் மாத்திரமே அவன் அதைச் சிருஷ்டிக்க முடியும் என்பதையும், இந்தக் கல்வியை அவன் பெற வில்லையென்றால், கம்யூனிஸம்

என்பது ஒரு பயபக்தியோடு கூடிய ஒரு வெறும் விருப்பமாகவே இருக்கும் என்பதையும் அவன் உணர வேண்டும்.

முதலாளித்துவத்தை வீழ்த்துவது பழைய தலைமுறையின் கடமையாக இருந்தது. அந்த சமயத்தில் முதலாளித்துவத்தை கண்டிப்பது, பொது மக்களிடையே முதலாளித்துவத்தின் மீது வெறுப்பைத் தட்டி எழுப்புவது, வர்க்க உணர்வை வளர்ப்பது, அவர்களுடைய சக்திகளை ஒன்றுபடுத்தும் திறனை வளர்ப்பது ஆகியவை முக்கியமான கடமையாக இருந்தது. புதிய தலைமுறை அதைவிட அதிகச் சிக்கலான கடமையைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. உங்கள் கடமை முதலாளிகளால் தூண்டிவிடப் பட்டிருக்கும் ஆக்கிரமிப்பிற்கு எதிராகத் தொழிலாளர், விவசாயிகளின் சர்க்காரைப் பேணி பாதுகாக்கும் பொருட்டு உங்கள் சக்தி அனைத்தையும் ஒன்று திரட்டுவதோடு நின்று விடவில்லை. நீங்கள் அதை செய்ய வேண்டும் என்பது உண்மையே: இதை நீங்கள் தெளிவாக உணர்கிறீர்கள்; கம்யூனிஸ்டுகளால் அது தெளிவாகப் பார்க்கப்படுகிறது. ஆயினும், அது போதுமானதல்ல, நீங்கள் ஒரு கம்யூனிஸ்ட் சமுதாயத்தை நிர்மாணிக்க வேண்டும். பல அம்சங்களில் பகுதி வேலை செய்து முடிக்கப் பட்டிருக்கிறது. பழைய சமுதாய அமைப்பு—அதன் தகுதிக்கு ஏற்றவாறு—அழிக்கப் பட்டிருக்கிறது; அதன் தகுதிக்கு ஏற்றவாறு, அது தகர்க்கப்பட்டு தரைமட்ட மாக்கப் பட்டிருக்கிறது. தரை சுத்தம் செய்யப் பட்டிருக்கிறது; இந்தத் தரையின் மேல், இளம் கம்யூனிஸ்ட் தலைமுறை ஒரு கம்யூனிஸ்ட் சமுதாயத்தை நிர்மாணம் செய்ய வேண்டும். நிர்மாணம் செய்யும் கடமையை நீங்கள் சமாளிக்க வேண்டியிருக்கிறது; நவீன ஞானம் அனைத்தையும் கிரகித்துக் கொள்வதன் மூலமாக மாத்திரம், முன்னமேயே தயாரிக்கப் பட்டுள்ள, மனப்பாடமாக உள்ள கோட்பாடுகள், ஆலோசனைகள், பரிகாரங்கள், மாற்று சிகிச்சை முறைகள், செயல் திட்டங்கள் ஆகியவற்றிலிருந்து, கம்யூனிஸத்தை உயிருள்ள எதார்த்தமாக மாற்றினால் மாத்திரம் நீங்கள் அந்தக் கடமையைச் செய்து முடிக்க முடியும்; இது உங்களுடைய உடனடிக் கடமைக்குக் கூட்டொருமையைக் கொடுக்கிறது; மேலும் எல்லா விதமான நடை முறை வேலைகளுக்கும் கம்யூனிஸத்தை ஒரு வழிகாட்டியாகப் பயன் படுத்தினால் மாத்திரமே நீங்கள் அந்தக் கடமையை நிறை வேற்ற முடியும்.

இளம் தலைமுறை முழுவதற்கும் கல்வி போதிப்பது, பயிற்சி கொடுப்பது, தட்டி எழுப்புவது ஆகிய பணிகளைச் செய்யும் போது நீங்கள் கடைப் பிடிக்க வேண்டிய கடமை அதுதான். கம்யூனிஸ்ட் சமுதாயத்தை நிர்மாணம் செய்யும் லட்சோப லட்சம் மக்க

ளிடையே நீங்கள் முன்னணியில் நிற்க வேண்டும்; அவர்கள் அணியில் ஒவ்வொரு வாலிப ஆணும், பெண்ணும் இருக்க வேண்டும். கம்யூனிஸத்தை நிர்மாணம் செய்யும் பணியில் வாலிப தொழிலாளர்களையும், விவசாயிகளையும் நீங்கள் சேர்க்க வில்லையென்றால், நிங்கள் ஒரு கம்யூனிஸ்ட் சமுதாயத்தை நிர்மாணம் செய்ய முடியாது.

இது, நாம் எவ்வாறு கம்யூனிஸத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும், நமது வழி முறைகளில் என்னென்ன திட்டவட்டமான அம்சங்கள் இருக்கவேண்டும் என்ற பிரச்சினைக்கு இயல்பாகவே என்னை அழைத்துச் செல்கிறது.

முதலாவதாக நான் இங்கு கம்யூனிஸ்ட் ஒழுக்கவியல் பற்றிய பிரச்சினையை ஆராய்கிறேன்.

கம்யூனிஸ்டுகளாக இருக்க தாங்களாகவே நீங்கள் பயிற்சி பெற்றுக் கொள்ளவேண்டும். கற்றுக் கொள்வது, ஸ்தாபன ரீதியாக அமைத்துக் கொள்வது, ஒன்றுபடுவது, போராடுவது ஆகியவற்றின் மூலமாக அதன் உறுப்பினர்கள் தாங்களாகவே பயிற்சி பெறுவதோடு, அதன் தலைமையை எதிர்ப் பார்க்கிறவர்கள் அனைவருக்கும் பயிற்சி கொடுக்கும் வகையில் வாலிபக் கழகம் அதன் நடைமுறை வேலைகளை அமைத்துக் கொள்ள வேண்டியது அதன் கடமையாகும்; அது கம்யூனிஸ்டுகளைப் பயிற்றுவிக்க வேண்டும். இன்றைய வாலிபர்களுக்குப் பயிற்சி கொடுப்பது, கல்வி போதிப்பது, கற்றுக் கொடுப்பது ஆகியவற்றின் முழு நோக்கமும் கம்யூனிஸ்ட் ஒழுக்கவியலை அவர்களுக்குப் புகட்டுவதாக இருக்க வேண்டும்.

ஆனால், கம்யூனிஸ்ட் ஒழுக்கவியல் என்று ஒன்று இருக்கிறதா ? கம்யூனிஸ்ட் நன்னடத்தை என்று ஒன்று இருக்கிறதா? உண்மை தான், இருக்கிறது. நமக்கு என்று சொந்தமாக ஒழுக்கவியல் கிடையாது என்று அடிக்கடி கூறப்படுகிறது; நன்னடத்தை அனைத்தையும் கம்யூனிஸ்டுகள் நிராகரிக்கிறார்கள் என்று நம் மீது முதலாளிகள் அடிக்கடி குற்றம் சாட்டுகிறார்கள். பிரச்சினையைக் குழப்புகிற ஒரு முறை இது; தொழிலாளர்கள், விவசாயிகள் கண்ணில் மண்ணைப்போடும் முறை இது.

எந்த அர்த்தத்தில் ஒழுக்கவியலையும், நன்னடத்தையையும் நாம் நிராகரிக்கிறோம் ?

முதலாளிகள் அதற்குக் கொடுத்திருக்கும் அர்த்தத்தில்; முதலாளிகள் ஒழுக்கவியலை கடவுளின் கட்டளைகள் என்ற அடிப்படையில் கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தில், நாங்கள்

கடவுளை நம்பவில்லை என்று கூறுகிறோம், என்பது உண்மையே; சுரண்டுகிறவர்கள் என்ற நிலையில், தங்களுடைய சொந்த நலன் களைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு, பாதிரிகளும், நிலச்சுவான் தார்களும், முதலாளிகளும் கடவுளின் பெயரை தங்களுக்கு அனுகூலமாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பது நமக்கு நன்கு தெரியம். அல்லது, நன்னடத்தையின் கட்டளைகளையும், கடவுளின் கட்டளைகளையும் ஒழுக்கவியலின் அடிப்படையாகக் கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் எண்ண முதல்வாத அல்லது பகுதி எண்ண முதல்வாத வார்த்தைகளை அதன் அடிப்படையாகக் கொண்டிருக்கிறார்கள்: இது, எப்பொழுதும் அநேகமாக கடவுளின் கட்டளைகளுக்குச் சமமாகவே இருந்தது.

மனிதனுக்கு அப்பாற்பட்ட வர்க்கத்திற்கு அப்பாற்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட எந்த நன்னடத்தை யையும் நாம் நிராகரிக்கிறோம். இது, மோசடி, ஏமாற்று, நிலச் சுவான்தார்கள், முதலாளிகள் ஆகியவர்களின் நலன்களுக்காக தொழிலாளர்களையும், விவசாயிகளையும் முட்டாள்களாக்குவது என்று நாம் கூறுகிறோம்,

நமது நன்னடத்தையானது, பாட்டாளி மக்களின் வர்க்கப் போராட்டத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிந்தது என்று நாம் கூறு கிறோம். நமது நன்னடத்தையானது, பாட்டாளி மக்களின் வர்க்கப் போராட்டத்தின் நலன்களிலிருந்து உதயமாகிறது.

பழைய சமுதாயமானது, நிலச்சுவான்தார்களாலும் முதலாளிகளாலும் எல்லா விவசாயிகளும், தொழிலாளர்களும் அடக்கி ஒடுக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவை அனைத்தையும் நாம் அழிக்க வேண்டியிருந்தது! அவர்களை வீழ்த்த வேண்டியிருந்தது; ஆனால், அதைச் செய்வதற்கு ஒற்றுமையை உருவாக்க வேண்டியிருந்தது; கடவுள் படைக்க முடியாத ஒன்றாக அது இருந்தது.

இந்த ஒற்றுமையை தொழிற்சாலைகள் மாத்திரமே நல்க முடியும்; நீண்ட உறக்கத்திலிருந்து தட்டி எழுப்பப்பட்ட, பயிற்சி பெற்ற பாட்டாளி மக்களால் மாத்திரமே இந்த ஒற்றுமையை நல்க முடியும். அந்த வர்க்கம் உருவான போது மாத்திரமே ஒரு பொதுஜன இயக்கம் எழுந்தது; இது, நாம் இப்பொழுது பெற் றிருக்கிற, அதாவது பலஹீனமான நாடுகளில் ஒன்றில் பாட்டாளி மக்களின் புரட்சி வெற்றி பெறுவதற்கு அழைத்துச் சென்று, இது, உலகம் முழுவதும் உள்ள முதலாளிகளின் தாக்குதலைக் கடந்த மூன்று ஆண்டுகளாக எதிர்த்து, முறியடித்து வருகிறது. உலகம் முழுவதும் பாட்டாளி மக்களின் புரட்சி எவ்வாறு வளர்ச்சி

யடைந்து வருகிறது என்பதை நாம் பார்க்க முடியும். அனுபவத்தின் அடிப்படையில், பாட்டாளி மக்கள் மாத்திரமே உறுதியான சக்தியைச் சிருஷ்டிக்க முடியும் என்று இப்பொழுது நாம் கூறுகிறோம்; இதைப் பிளவுபட்ட, சிந்திச் சிதறிக் கிடக்கிற விவசாயிகள் பின்பற்றி வருகிறார்கள்; இது, சுரண்டுகிறவர்களால் தொடுக்கப்பட்ட எல்லாத் தாக்குதல்களையும் சமாளித்து, வருகிறது. இந்த வர்க்கம் மாத்திரமே உழைக்கும் மக்கள் திரள் ஒன்று படுவதற்கும், அவர்களின் வரிசைகளைத் திரட்டுவதற்கும் உதவி செய்ய முடியும்; மேலும் இந்த வர்க்கம் மாத்திரமே கம்யூனிஸ்ட் சமுதாயத்தை தீர்மானமாள முறையில் உறுதிப் படுத்த முடியும், தீர்மானமான முறையில் பாதுகாக்க முடியும்.

அதனால் தான் மனித சமுதாயத்திற்கு அப்பால் இருக்கிற நன்னடத்தை என்ற ஒன்று நமக்குக் கிடையாது என்று கூறுகிறோம்; அவ்வாறு கூறுவது ஒரு மோசடியாகும். நமக்கு, நன்னடத்தையானது, பாட்டாளி மக்களின் வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்குக் கீழ்ப்படிந்ததாகும்.

அந்த வர்க்கப் போராட்டத்தில் அடங்கியிருப்பது என்ன? ஜாரை வீழ்த்துவது, முதலாளிகளை வீழ்த்துவது, முதலாளித்துவ வர்க்கத்தை ஒழிப்பது அதில் அடங்கியிருக்கிறது.

பொதுவாக, வர்க்கங்கள் என்றால், என்ன? வர்க்கங்கள் என்றால், சமுதாயத்தில் ஒரு பிரிவு, மற்றொரு பிரிவின் உழைப்பை அபகரிக்க எது அனுமதிக்கிறதோ, அதுதான். சமுதாயத்தில் ஒரு பிரிவு நிலம் அனைத்தையும் அபகரித்தால், நிலச்சுவான்தார் வர்க்கமும், விவசாயிகள் வர்க்கமும் இருக்கின்றன. சமுதாயத்தில் ஒரு பிரிவு தொழிற்சாலைகளையும், பங்குகளையும், மூலதனத்தையும் சொந்தமாக வைத்திருந்து, அதே சமயத்தில் மற்றொரு பிரிவு இந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்தால், முதலாளிகள் வர்க்கமும், பாட்டாளிகள் வர்க்கமும் இருக்கின்றன.

ஜாரைத் துரத்தியது கஷ்டமான காரியமல்ல; ஒரு சில நாட்கள் மாத்திரமே அதற்குத் தேவைப்பட்டது. நிலச்சுவான்தார்களைத் துரத்துவதும் கஷ்டமான காரியமல்ல; ஒரு சில மாதங்களில் அந்த வேலை செய்து முடிக்கப்பட்டது. அதே போல், முதலாளிகளையும் துரத்துவதும் மிகக் கஷ்டமான காரியமல்ல. ஆனால், வர்க்கங்களை ஒழிப்பது ஒப்பிட முடியாத அளவு மிகவும் கஷ்டமான காரியமாகும்; நம்மிடையே தொழிலாளர்கள், விவசாயிகள் என்ற பாகுபாடு இன்னும் இருக்கிறது. விவசாயியை அவனுடைய நிலத்தில் அமர்த்தினால், அவனுடைய உபரி தானியத்தை அவன் அபகரித்தால், அதாவது அவனுக்கும், அவனுடைய கால் நடைகளுக்கும் தேவையில்லாத தானியத்தை அபகரித்தால்,

அதே சமயத்தில் மற்ற மக்கள் உணவில்லாமல் கஷ்டப்பட்டால், அப்பொழுது அந்த விவசாயி ஒரு சுரண்டுகிறவனாக மாறுகிறான். அதிகமான அளவு தானியத்தை அவன் கைவசப்படுத்தி வைத்திருந்தால், அதிகமாக அவன் லாபம் பெறுகிறான்; மற்றவர்கள் சம்பந்தப்பட்டவரையிலும், அவர்கள் பட்டினி கிடக்கட்டும் என்று கூறுகிறான். "அவர்கள் அதிக அளவுக்குப் பட்டினிக்கு ஆளானால், நான் அதிக விலைக்கு தானியங்களை விற்க முடியும்" என்று கூறுகிறான். ஒரே ஒரு பொதுவான திட்டத்திற்கு உகந்த முறையில், பொது நிலத்தில், பொதுவான தொழிற் சாலைகளில், ஒரு பொதுவான அமைப்பிற்கு உகந்த முறையில் அனைவரும் வேலை செய்யவேண்டும். அதைப் பெறுவது சுலபமான காரியமா? ஜார், நிலச் சுவான்தார்கள், முதலாளிகள் ஆகியவர்களைத் துரத்துவது போல், அது சுலபமான காரியமல்ல என்பதை நீங்கள் என்ன தேவைபடுகிறது என்றால், பாட்டாளி மக்கள் விவசாயிகளில் ஒரு பிரிவுக்கு மறு கல்வி கொடுக்க வேண்டும். மற்றவர்களின் வறுமை, தேவை ஆகியவற்றிருந்து லாபம் சம்பாதித்து, பணக்காரர்களாக மாறி வரும் விவசாயிகளின் எதிர்ப்பை நசுக்கும் பொருட்டு உழைக்கும் விவசாயிகளை தனது பக்கம் அது வெல்ல வேண்டும். அதிலே நாம் ஜாரை வீழ்த்திய பிறகு நிலச்சுவான்தார்களையும், முதலாளிகளையும் துரத்திய பிறகு பாட்டாளி மக்களின் போராட்டத்தின் கடமை இன்னும் முழுமையாக பூர்த்தியாகவில்லை; பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் என்று நாம் அழைக்கிற அமைப்பின் கடமை அதைப் பூர்த்தி செய்வதுதான்.

வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது; அது, தன்னுடைய வடிவங்களை மாத்திரம் மாற்றியிருக்கிறது. பாட்டாளி மக்களின் வர்க்கப் போராட்டம் பழைய சுரண்டுகிறவர்கள் மீண்டும் வராமல் தடுக்க வேண்டும்; கல்வி அறிவு இல்லாத, சிந்திச் சிதறிக் கிடக்கிற விவசாய மக்கள் திரளை ஒரே ஒரு சங்கத்தில் ஒன்று திரட்ட வேண்டும். வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது; எல்லா நலன்களையும் அதற்குக் கீழ்ப்படிந்ததாகச் செய்வது நமக் கடமையாகும் நமது கம்யூனிஸ்ட் நன்நடத்தையும் கூட அந்தது கடமைக்குக் கீழ்ப்படிந்ததாகும். நாம் பின்வருமாறு சொல்கிறோம். பழைய சுரண்டுகிற சமுதாயத்தை அழிப்பதற்கு எது சேவை செய்கிறதோ அதுதான் நன்நடத்தை; ஒரு புதிய, ஒரு கம்யூனிஸ்ட் சமுதாயத்தை நிர்மாணம் செய்து கொண்டிருக்கிற பாட்டாளி மக்களின் கீழ் எல்லா உழைக்கும் மக்களையும் எது ஒன்று படுத்துகிறதோ; அதுதான் நன்நடத்தை.

எது கம்யூனிஸ்ட் நன்னடத்தை என்றால், எது இந்தப் போராட்டத்திற்குச் சேவை செய்கிறதோ, சுரண்டலுக்கு எதிராக, எல்லா வகையான சிறு தனிச்சொத்து உடைமைக்கு எதிராக எது உழைக்கும் மக்களை ஒன்றுபடுத்துகிறதோ, அதுதான்; ஏனெனில், சமுதாயம் முழுவதின் உழைப்பால் சிருஷ்டிக்கப்பட்ட சிறு சொத்து, ஒருவன் கையில் போய்ச் சேருகிறது. நமது நாட்டில் நிலமானது பொதுச் சொத்தாக இருக்கிறது.

ஆனால், இந்தப் பொதுச் சொத்திலிருந்து ஒரு துண்டு, நிலத்தை நான் எடுத்துக் கொண்டு, எனக்குத் தேவையான தானியத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக தானியத்தைப் பயிர் செய்து, உபரியாக இருப்பதை விற்று லாபம் பெறலாமா? உதாரணமாக, பட்டினி கிடக்கும் மக்கள் அதிகமாக இருந்தால், அதிபர்கள் அதிக விலை கொடுப்பார்கள் என்று நான் வாதாடலாமா? அப்போது நான் ஒரு கம்யூனிஸ்டைப் போல் நடந்து கொள்கிறேனா? இல்லை. ஒரு சுரண்டுகிறவனைப் போல், ஒரு உரிமையாளரைப் போல் நான் நடந்து கொள்கிறவனாவேன். அதை எதிர்க்க வேண்டும். அவ்வாறு நடந்து கொள்வதற்கு அனுமதித்தால், இதற்கு முந்திய புரட்சிகளில் ஒரு தடவைக்கு மேல் நிகழ்ந்திருப்பது போல் முதலாளிகளின் ஆட்சிக்கு, முதலாளித்துவத்தின் ஆட்சிக்கு மீண்டும் திரும்பி வருகிற நிலைமை ஏற்படும். முதலாளிகளின் ஆட்சி முதலாளித் துவத்தின் ஆட்சி மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்கு நாம் லாபம் சம்பாதிப்பதை அனுமதிக்கக் கூடாது. மற்றவர்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தி விட்டு, தனி நபர்கள் தாங்கள் மாத்திரம் பணக்காரர்களாக மாறுவதை நாம் அனுமதிக்க முடியாது. உழைப்பாளி மக்கள் பாட்டாளி மக்களோடு ஒன்று சேர்ந்து, ஒரு கம்யூனிஸ்ட் சமுதாயத்தை உருவாக்க வேண்டும். கழகம், கம்யூனிஸ்ட் வாலிபர்களின் ஸ்தாபனம் ஆகியவற்றின் அடிப் படையான கடமையின் முக்கியமான அம்சம் இதுதான்.

பழைய சமுதாயம் பின்வரும் கோட்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தது. கொள்ளையிடு, அல்லது கொள்ளையிடு வதற்கு ஆளாகு; மற்றவர்களுக்காக வேலை செய், அல்லது உனக்காக மற்றவர்களை வேலை செய்யும்படி செய்; அடிமைகளின் எஜமானாக இரு, அல்லது ஒரு அடிமையாக இரு. இயல்பாகவே, இத்தகைய ஒரு சமுதாயத்தில் வளர்க்கப் பட்டவர்கள், அவர் களுடைய தாய்ப்பாலைக் குடித்தவர்களாக இருக்கிறார்கள்; அதாவது, உளநூல் பழக்க வழக்கங்கள், கருத்துக்கள் ஆகிய வற்றைக் கரைத்துக் குடித்தவர்களாக இருக்கிறார்கள் என்று கூறலாம்; இவை பின்வருமாறு கூறுகின்றன. நீங்கள் ஒரு

அடிமைகளின் எஜமானுகவோ, அல்லது ஒரு அடிமையாகவோ அல்லது ஒரு சிறு உரிமையாளராகவோ, ஒரு சாதாரண சிப்பந்தியாகவோ ஒரு சாதாரண அதிகாரியாகவோ, அல்லது ஒரு அறிவாளியாகவோ இருக்கவேண்டும்; சுருங்கச் சொன்னுல், ஒருவன் தன்னைப் பற்றி மாத்திரம் அக்கறை எடுத்துக் கொள்கிறுனே தவிர, மற்றவர்களைப் பற்றி இம்மியளவேனும் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை.

இந்தத் துண்டு நிலத்தில் நான் வேலை செய்தால், மற்றவர்களைப் பற்றி நான் இம்மியளவேனும் கவலைப்பட மாட்டேன்; மற்றவர்கள் பட்டினி கிடந்தால், அது எனக்கு நல்லதுதான்; என்னுடைய தானியத்திற்கு அதிக லாபம் கிடைக்கும். ஒரு டாக்டராகவோ, என்ஜினீயராகவோ ஆசிரியராகவோ, அல்லது குமாஸ்தாவாகவோ எனக்கு வேலை கிடைத்திருந்தால், நான் மற்றவர்களைப் பற்றி இம்மியளவேனும் கவலைப்பட மாட்டேன். அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு அடிவருடியாக இருந்தால், அவர்களை மகிழ்ச்சியடையச் செய்தால் நான் என்னுடைய உத்தியோகத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்; வாழ்க்கையில் முன்னேற்றமடைந்து, ஒரு முதலாளியாகவும் மாறலாம். ஒரு கம்யூனிஸ்ட் இத்தகைய எண்ணத்திற்கும், இத்தகைய உணர்ச்சிக்கும் இடம் கொடுக்கக் கூடாது. தொழிலாளர்களும், விவசாயிகளும், அவர்களுடைய சொந்த முயற்சி மூலமாகத் தங்களைத் தாங்களாகவே பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதையும், ஒரு புதிய சமுதாயத்தைச் சிருஷ்டிக்க முடியும் என்பதையும் நிரூபித்துக் காட்டும்போது, அதுதான் புதிய கம்யூனிஸ்ட் கல்வியின் தொடக்கமாக இருக்கும்; அதாவது, சுரண்டுகிறவர்களுக்கு எதிரான போராட்டத்தில் கல்வி; சுயநலமிகள், சிறு உரிமையாளர்கள் ஆகியவர்களுக்கு எதிராகப் பாட்டாளி மக்களோடு சேர்ந்துகொண்டு நடத்தும் போராட்டத்தில் கல்வி; "நான் என்னுடைய சொந்த லாபத்தைத் தேடுகிறேன், வேறு எது பற்றியும் இம்மியளவு கூட நான் கவலைப்பட மாட்டேன்" என்று கூறுகிற எண்ணத்திற்கும், பழக்க வழக்கங்களுக்கும் எதிராக நடத்தும் போராட்டத்தில் கல்வி.

மூளைத்துக் கொண்டிருக்கும் புதிய தலைமுறைகளும், வாலிபர்களும் கம்யூனிஸத்தை எவ்வாறு கற்றுக் கொள்வது என்ற கேள்விக்கு பதில் இதுதான்.

படிப்பிலும், பயிற்சியிலும், கல்வியிலும் அது எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையையும், சுரண்டுகிறவர்களின் பழைய சமுதாயத்திற்கு எதிராக பாட்டாளி மக்களும், உழைப்பாளி மக்களும் தொடர்ச்சியாக நடத்தும் போராட்டத்தோடு இணைப்

பதன் மூலமாக மாத்திரம் அது கம்யூனிஸத்தைக் கற்றுக் கொள்ள முடியும். நன்னடத்தையைப் பற்றி நம்மிடம் சிலர் சொல்லும்போது, நாம் பின் வருமாறு கூறுகிறோம். ஒரு கம்யூனிஸ்டுக்கு எல்லா வகையான நன்நடத்தையும் இந்த ஒன்று பட்ட கட்டுப்பாட்டிலும், சுரண்டுகிறவர்களுக்கு எதிராக நடத்தும் உணர்வு பூர்வமான வெகுஜனப் போராட்டத்திலும் அடங்கி யிருக்கிறது. நிலைபேறுடைய நன்னடத்தையில் நமக்கு நம்பிக்கை இல்லை; நன்நடத்தைப் பற்றிய எல்லா விதமான கட்டுக் கதை களின் ஆதாரமற்ற தன்மையை நாம் அம்பலப்படுத்துவோம். மனித சமுதாயம் மேலும் உயர்ந்த மட்டத்திற்கு மேலே எழுவதற்கு உதவும் நோக்கத்திற்கும், உழைப்பைச் சுரண்டும் முறையை அகற்றும் நோக்கத்திற்கும் நன்நடத்தை சேவை செய்கிறது.

இதை அடைவதற்கு, முதலாளித்துவத்தை எதிர்த்து கட்டுப் பாடாக, துணிந்து இறுதிகட்டத்தில் நடைபெறுகிற போராட்டத் திற்கு மத்தியில் அரசியல் முதிர்ச்சியை அடையத் துவங்கி யிருக்கும் வாலிப மக்களின் தலைமுறை நமக்குத் தேவைப் படுகிறது. இந்தப் போராட்டத்தில், இந்தத் தலைமுறை தூய கம்யூனிஸ்டுகளைப் பயிற்றுவிக்கிறார்கள்; இந்தப் போராட்டத்திற்கு அது கீழ்ப்படிந்திருக்க வேண்டும்; படிப்பு, பயிற்சி, கல்வி ஆகிய வற்றில் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையையும் அத்துடன் இணைக்க வேண்டும். கம்யூனிஸ்ட் வாலிபர்களுக்கு கல்வி கற்றுக் கொடுப்பதில், இனிமையான பேச்சுக்களும், நன்நடத்தை அறிவுரைகளும் அடங்கியிருக்கக் கூடாது. கல்வியில் அடங்கியிருக்க வேண்டியது இது அல்ல, நிலச்சுவான்தார்கள், முதலாளிகள் ஆகிய வர்களின் நுகத்தடியின் கீழ் தங்களுடைய தந்தைமார்களும் தாய்மார்களும் எப்படி வாழ்ந்தார்கள் என்பதைப் பார்த்திருக் கிறார்கள்; சுரண்டுகிறவர்களை எதிர்த்து போராட்டத்தைத் துவங்கியவர்களின் கஷ்ட நஷ்டங்களை தாங்களாகவே அனுபவித் திருக்கிறார்கள்; கிடைத்த வெற்றியைப் பேணிப் பாதுகாப்பதற்காக தியாகம் செய்ததை அவர்களே பார்த்திருக்கிறார்கள்; நிலச் சுவான்தார்களும், முதலாளிகளும் எத்தகைய பயங்கரமான எதிரிகள் என்பதைப் பார்த்திருக்கிறார்கள்; இந்த நிலைமைகள் கம்யூனிஸ்டுகளாக மாறவேண்டும் என்று அவர்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கின்றன. கம்யூனிஸ்ட் நன்னடத்தையானது, கம்யூனிஸத்தைப் பூர்த்தி செய்வதற்காகவும் உறுதிப்படுத்துவதற் காகவும் நடைபெறும் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. கம்யூனிஸ்டு பயிற்சிக்கும், கல்விக்கும், போத னைக்கும் கூட அது அடிப்படையாக இருக்கிறது. கம்யூனிஸத்தை எவ்வாறு கற்றுக் கொள்வது என்ற கேள்விக்கு இதுவே பதிலாகும்.

கல்வி கற்றுக் கொடுப்பது, பயிற்சி கொடுப்பது, கல்வி ஆகியவை பள்ளிக்கூட அறைக்குள் கட்டுப்படுத்தப் பட்டிருப்பதால், வாழ்க்கையின் கிளர்ச்சியிலிருந்து தனியே ஒதுக்கப்பட்டிருந்தால் அதில் நமக்கு நம்பிக்கை கிடையாது. நிலச்சுவான்தார்களும், முதலாளிகளும் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் அடக்கி ஒடுக்குவது நீடித்திருக்கும் வரையிலும், பள்ளிக்கூடங்களை நிலச்சுவான்தார்களும், முதலாளிகளும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது வரையிலும் இளம் தலைமுறைகள் குருடர்களாகவும், கல்வி அறிவில்லாதவர்களாகவும் நீடித்து இருப்பார்கள். நமது பள்ளிக்கூடங்கள் வாலிபர்களுக்கு ஞானத்தின் அடிப்படைகளை நல்க வேண்டும். கம்யூனிஸ்டுக் கருத்துக்களைச் சுயேச்சையாக வளர்க்கும் திறனை நல்க வேண்டும்; அவை, வாலிபர்களைப் படித்த மனிதர்களாக மாற்ற வேண்டும். பள்ளிக்கூடத்தில் அவர்கள் படித்துக் கொண்டிருக்கும் போது, சுரண்டுகிறவர்களிடமிருந்து விடுதலை பெறுவதற்காக நடைபெறும் போராட்டத்தில் அவர்கள் பங்கெடுக்க வேண்டும். வாலிப கம்யூனிஸ்ட் கழகமானது கற்றுக் கொடுப்பது, பயிற்சி கொடுப்பது, கல்வி போதிப்பது ஆகியவை சம்பந்தமாக எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையையும் சுரண்டுகிறவர்களுக்கு எதிராக உழைப்பாளி மக்கள் அனைவரும் நடத்தும் பொதுவான போராட்டத்தில் பங்கெடுப்பதோடு இணைக்கும் போதுதான் வாலிப கம்யூனிஸ்டு தலைமுறையின் கழகம் என்ற பெயருக்கு அருகதை யுள்ளதாக இருக்கும். ரஷ்யாவானது ஒரே ஒரு தொழிலாளர்களின் குடியரசாக நீடித்திருப்பது வரை, உலகத்தின் மற்ற பகுதிகளில் பழைய, முதலாளித்துவ அமைப்பு நிலவுவது வரை அவர்களைக் காட்டிலும் நாம் பலஹீனமாகவே இருப்போம் என்பதும், ஒரு புதிய தாக்குதல் நடக்கலாம் என்ற அபாயம் நிரந்தரமாக இருக்கிறது என்பதும் உங்கள் அனைவருக்கும் தெரியும்; மேலும் உறுதியாக ஒன்றுபட்டிருக்க கற்றுக் கொண்டால் மாத்திரம் இனிமேல் நடக்கவிருக்கும் போராட்டத்தில் நாம் வெற்றி பெற முடியும் என்பதும், பலத்தைப் பெற்ற பிறகு உண்மையாகவே வெல்ல முடியாத சக்தியாக மாறுவோம் என்பதும் உங்கள் அனைவருக்கும் தெரியும். இவ்வாறு, ஒரு கம்யூனிஸ்டாக இருப்பது என்றால் அதன் அர்த்தம் நீங்கள் வாலிப தலைமுறை அனைத்தையும் ஸ்தாபன ரீதியாக அமைக்க வேண்டும், ஒன்று படுத்த வேண்டும், இந்தப் போராட்டத்தில் பயிற்சியிலும், கட்டுப்பாட்டிலும் முன் உதாரணத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். அப்பொழுது, நீங்கள் கம்யூனிஸ்டு சமுதாயத்தின் கட்டிடத்தை நிர்மாணம் செய்யத் துவங்கி, அதைப் பூர்த்தி செய்ய முடியும். இதை மேலும் உங்களுக்குத் தெளிவு படுத்தும் பொருட்டு நான் ஒரு உதாரணத்தை மேற்கோள் கொடுக்கிறேன். நாம்

நம்மை கம்யூனிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்கிறோம். ஒரு கம்யூனிஸ்ட் என்றால் என்ன? கம்யூனிஸ்ட் என்பது லத்தீன் வர்க்கத்தை-லத்தீன் மொழியில் "கம்யூனிஸ்" என்றால் அதன் அர்த்தம் "பொதுவான" என்பதாகும். கம்யூனிஸ்ட் சமுதாயம் என்றால், ஒரு சமுதாயத்தில் நிலம், தொழிற்சாலைகள் ஆகிய அனைத்தும் பொதுவாக உரிமை கொண்டாடப்படுகிறது. மக்கள் பொதுவாக வேலை செய்கிறார்கள் என்பதுதான். இதுதான் கம்யூனிஸம்.

ஒவ்வொருவரும் தத்தம் சொந்தத் துண்டு நிலத்தில் தனியே வேலை செய்தால், பொதுவாக வேலை செய்வது சாத்தியமா? பொதுவாக வேலை செய்வதைத் திடுதிப்பென்று கொண்டு வர முடியாது. அது சாத்தியமல்ல, அது ஆகாயத்திலிருந்தும் விழாது. அது உழைப்பின் மூலமாக, கஷ்டத்தை அனுபவிப்பதன் மூலமாக வருகிறது; போராட்டம் நடக்கும்போது சிருஷ்டிக்கப்படுகிறது. இங்கு பழைய புத்தகங்களால் பயன் எதுவும் கிடையாது; ஒருவரும் அதை நம்பமாட்டார்கள். ஒருவனுடைய சொந்த வாழ்க்கையின் அனுபவம் தேவைப்படுகிறது. கோல்சாக்கும், தெனிக்கினும் ஸைபீரியாவிலிருந்தும், தென் பகுதிகளிலிருந்தும் முன்னேறி வரும் போது, விவசாயிகள் அவர்கள் பக்கத்தில் சேர்ந்திருந்தார்கள். அவர்கள் போல்ஷ்விஸத்தை விரும்பவில்லை. காரணம், போல்ஷ்விக்குகள் அவர்களிடமிருந்து நிர்ணயம் செய்த விலைக்கு தானியங்களை எடுத்துக் கொண்டார்கள். ஆனால் ஸைபீரியா விலும், உக்ரேனிலும் உள்ள விவசாயிகள் கோல்சாக், தெனிகின் ஆகியவர்களின் ஆட்சியை அனுபவித்தபோது, அவர்கள் தங்கள் முன்பு ஒரே ஒரு மாற்று வழி இருப்பதை உணர்ந்தார்கள். அதாவது அவர்கள் முதலாளிகளிடம் போகவேண்டும்; அவ்வாறு போனால், அவர்கள் நிலச்சுவான்தார்களின் அடிமைகளாக அவர்களை மாற்றுவார்கள்; அல்லது, தொழிலாளர்களைப் பின்பற்ற வேண்டும்; அவர்கள் தேனும், பாலும் பெருக்கெடுத்தோடும் ஒரு நாட்டைக் கொடுப்பதாக வாக்குறுதி கொடுக்கவில்லை என்பது உண்மையே; கஷ்டமான போராட்டத்தில் இரும்புக் கட்டுப் பாட்டையும், உறுதியையும் கோரினார்கள்; அதே சமயத்தில் முதலாளிகள், நிலச்சுவான்தார்கள் ஆகியவர்களின் அடிமைத் தனத்திலிருந்து விடுதலையை நோக்கி அழைத்துச் செல்வார்கள். கல்வி அறிவில்லாத விவசாயிகள் கூட அவர்களுடைய சொந்த அனுபவத்திலிருந்து இதைப் பார்த்தபோது, உணர்ந்தபோது, கடுஞ்சோதனைகளுக்கு ஆளான பிறகு அவர்கள் கம்யூனிஸத்தை உணர்வு பூர்வமாகப் பின்பற்றத் துவங்கினார்கள், வாலிப கம்யூனிஸ்டுக் கழகத்தின் எல்லாவகையான நடவடிக்கைகளுக்கும் இத்தகைய அனுபவம் அடிப்படையாக அமைய வேண்டும்.

நாம் எதைப் படிக்க வேண்டும், பழைய பள்ளிக்கூடங்களிலிருந்து எதை நாம் எடுத்துக் கொள்ளவேண்டும், பழைய விஞ்ஞானத்திலிருந்து எதை எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற கேள்விகளுக்கு நான் பதில் கூறியிருக்கிறேன். இப்பொழுது நான் எதைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற கேள்விக்குப் பதில் கூறுகிறேன். அதற்கு பதில் இதுதான். பள்ளிக்கூடங்களின் ஒவ்வொரு நடவடிக்கையையும், கல்வி, பயிற்சி, கற்றுக்கொடுப்பது ஆகியவற்றின் ஒவ்வொரு நடவடிக்கையும், சுரண்டுகிறவர்களுக்கு எதிராக உழைப்பாளி மக்கள் அனைவரும் நடத்தும் போராட்டத்தோடு பிரிக்க முடியாத வகையில் இணைக்க வேண்டும்.

கம்யூனிஸத்தில் இந்தப் பயிற்சியை எவ்வாறு கொடுக்க வேண்டும் என்பதை விளக்கிக் காட்டும் பொருட்டு, சில வாலிப ஸ்தாபனங்கள் செய்த வேலையிலிருந்து கிடைத்த அனுபவத்திலிருந்து சில உதாரணங்களை மேற்கோள் காட்டுகிறேன். எழுதப் படிக்கத் தெரியாத நிலைமையை ஒழிப்பது பற்றி ஒவ்வொருவரும் பேசுகிறார்கள். எழுதப்படிக்கத் தெரியாத ஒரு நாட்டில் ஒரு கம்யூனிஸ்டு சமுதாயத்தை நிர்மாணிக்க முடியாது என்பது உங்களுக்குத் தெரியும். சோவியத் சர்க்கார் ஒரு உத்தரவைப் போடுவது, அல்லது கட்சி ஒரு குறிப்பிட்ட கோஷத்தைக் கொடுப்பது, அல்லது இந்தக் கடமையைச் செய்யும் பொறுப்பைச் சிலர் சிறந்த தொழிலாளரிடம் ஒப்படைப்பது போன்றவை போதுமானதல்ல. வாலிப தலைமுறையே இந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும். கம்யூனிஸம் என்றால் அதன் அர்த்தம், வாலிபர்களின் கழகத்தைச் சேர்ந்த வாலிபர்களும், இளம் ஆண்களும், பெண்களும் பின்வருமாறு கூற வேண்டும்: இது எங்கள் பணி; நாங்கள் ஒன்றுபட்டு, கல்வி அறிவு இல்லாமையைப் போக்குவதற்காகக் கிராமபுறங்களுக்குப் போவோம். அப்போது தான் நமது வாலிபர்களிடையே எழுதப் படிக்கத் தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள். வளர்ந்து வரும் தலைமுறை இந்தப் பணியில் ஈடுபடும்படி செய்ய நாங்கள் முயற்சி எடுத்து வருகிறோம். எழுதப்படிக்கத் தெரியாத, அறியாமையில் மூழ்கிக் கிடக்கிற ரஷ்யாவை, கல்வி அறிவு பெற்ற ஒரு நாடாக வேகமாக மாற்றி பமைக்க முடியாது என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், வாலிபர் கழகம் இந்தப் பணியைச் செய்வதில் ஈடுபட்டால், எல்லா வாலிபர்களும் அனைவரின் நலனுக்காக வேலை செய்தால், 4,00,000 இளம் ஆண் பெண் உறுப்பினர்களைக் கொண்ட கழகம் தன்னை வாலிப கம்யூனிஸ்ட் கழகம் என்று அழைத்துக் கொள்வதற்கு அருகதையுள்ளதாக இருக்கும். தனக்கு ஞானத்தைத் தேடிப் பெற்றுக் கொள்வது மாத்திரமல்ல, அத்து

டன் தங்கள் சொந்த முயற்சியால் கல்வி அறிவில்லாத நிலைமையைப் போக்கிக் கொள்ள முடியாமல் கஷ்டப்படும் வாலிபர்களுக்கு உதவி செய்வதும் சழகத்தின் கடமையாகவும் வாலிபர் கழகத்தில் உறுப்பினராக இருப்பது என்ருல் அதன் அர்த்தம் ஒருவன் தனது உழைப்பையும், முயற்சிகளையும் பொது லட்சியத்திற்காக அர்ப்பணிபபது என்பதுதான். அதுதான் கம்யூனிஸ்ட் கல்வியின் அர்த்தம் இத்தகைய வேலைகளைச் செய்யும் நடைமுறைப் போக்கில் மாத்திரமே இளம் ஆண்களும், பெண்களும் உண்மையான கம்யூனிஸ்டுகளாக மாறுகிருர்கள். இந்தப் பணியில் அவர்கள் நடைமுறையில் பலன்களை அடைந்தால் மாத்திரமே, அவர்கள் கம்யூனிஸ்டுகளாவார்கள்.

உதாரணமாக, கிராமப்புறத்திலுள்ள காய்கறித் தோட்டங்களில் வேலை செய்வதை மேற்கொள்ளுங்கள். அது வேலை செய்ய வேண்டிய ஒரு உண்மையான பணி அல்லவா? வாலிப கம்யூனிஸ்டு கழகத்தின் கடமைகளில் அது ஒன்ருகும். மக்கள் பட்டினி கிடக்கிருர்கள்; தொழிற்சாலைகளில் பட்டினி பசி இருக்கின்றன. பட்டினி பசியிலிருந்து நம்மை நாமே பாதுகாக்க, காய்கறித் தோட்டங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். ஆனால் பயிர்த் தொழில் பழைய முறையிலேயே நடைபெறுகிறது. ஆகவே, இந்த வேலையில் வர்க்க உணர்வு படைத்தவர்கள் மேலும் அதிகமாக ஈடுபட வேண்டும்; அப்பொழுது காய்கறித் தோட்டங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதையும், நிலப்பரப்பு விஸ்தரிப்பதையும், பலன் அபிவிருத்தியடைவதையும் காணலாம். இந்த வேலையில் வாலிப கம்யூனிஸ்டுக் கழகம் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கழகமும், கழகத்தின் ஒவ்வொரு கிளையும் இதைத் தனது கடமையாகக் கருத வேண்டும்.

வாலிப கம்யூனிஸ்டுக் கழகமானது மனமுவந்து கடும் உழைப்பை மேற்கொள்ள முன்வரும் படையாகத் திகழ வேண்டும்; ஒவ்வொரு பணியிலும் உதவி செய்கிறவர்களாகவும், முன் முயற்சியையும், துணிந்து கடுமையாக உழைப்பதையும் வெளிப்படுத்துகிறவர்களாகவும் திகழ வேண்டும். கழக ஸ்தாபனம் எவ்வாறு இருக்க வேண்டும் என்ருல், தொழிலாளர்கள் அதில் உறுப்பினர்களாக இருப்பவர்களின் போதனைகளை ஒரு சமயம் புரிந்து கொள்ளாமல் இருந்தாலும்கூட, அவர்களின் போதனைகளில் உடனடியாக நம்பிக்கை வைக்க வில்லை என்ருலும் கூட, அதே சமயத்தில் அவர்களுடைய நடைமுறை வேலையிலிருந்தும், நடவடிக்கைகளிலிருந்தும் சரியான பாதையைக் காட்டும் உண்மையான மக்கள் இவர்கள் என்பதைப் பார்க்கக் கூடிய முறையில் இருக்கவேண்டும்.

எல்லாத் துறைகளிலும், இந்த முறையில் வாலிப கம்யூனிஸ்டு கழகம் தனது வேலையை அமைத்துக் கொள்ளத் தவறினால், அதன் அர்த்தம் அது பழைய முதலாளித்துவப் பாதைக்குத் திரும்பிச் செல்கிறது என்பதேயாகும். நமது கல்வியை, சுரண்டுகிறவர்களுக்கு எதிராக உழைப்பாளி மக்கள் நடத்தும் போராட்டத்தோடு இணைக்கவேண்டும்; அப்போதுதான், கம்யூனிஸத்தின் போதனைகள் வகுத்துக் காட்டும் கடமைகளை முன்னால் கூறப்பட்டது பூர்த்தி செய்வதற்கு உதவி செய்ய முடியும்.

கழகத்தின் உறுப்பினர்கள் தங்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு ஓய்வு நேரத்திலும் காய்கறித் தோட்டங்களை அபிவிருத்தி செய்வதில், அல்லது ஏதாவது தொழிற்சாலையில் வாலிபர்களுக்கு கல்வி கற்றுக் கொடுப்பதில், அல்லது இதுபோன்ற பணிகளில் ஈடுபட வேண்டும். வறுமை மிகுந்த, துன்ப துயரங்கள் மிகுந்த நாடாக இருக்கும் ரஷ்யாவைச் செல்வம் மிகுந்த நாடாக மாற்றியமைக்க நாம் விரும்புகிறோம். வாலிப கம்யூனிஸ்டுக் கழகமானது அதன் கல்வி, பயிற்சி, படிப்பு ஆகியவற்றை, தொழிலாளர்கள் விவசாயிகள் ஆகியவர்களின் உழைப்போடு இணைக்க வேண்டும், அப்போதுதான் அது பள்ளிக்கூட அறைகளிலும், அல்லது கம்யூனிஸ்டு புத்தகங்களையும், சிறு நூல்களையும் படிப்பதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதோடு நின்றுவிடாது.

தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியவர்களோடு தோளோடு தோள் நின்று வேலை செய்வதன் மூலமாக மாத்திரமே, ஒருவன் தூய கம்யூனிஸ்டாக மாற முடியும். வாலிபர் கழகத்தின் உறுப்பினர்கள் அனைவரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்றும், அதே சமயத்தில் அவர்கள் மேற்கொண்டிருக்கும் பணிகளில் அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்றும் பொதுவாகக் கருதப்படுகிறது. பழைய பள்ளிக்கூடங்களிலிருந்து படைப்பயிற்சி கல்வி முறையை நாம் நீக்கி விட்டோம் என்பதையும், அதற்குப் பதிலாக உணர்வு பூர்வமான கட்டுப்பாட்டைப் புகுத்தியிருக்கிறோம் என்பதையும், எல்லா இளம் ஆண்களும், பெண்களும் ஸுபோட்னிக்குகளில் பங்கெடுத்து வருகிறார்கள் என்பதையும், பொது மக்களுக்கு உதவி செய்யும் பொருட்டு கிராமப் புறங்களிலுள்ள ஒவ்வொரு பண்ணையையும் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதையும் ஒவ்வொருவரும் பார்க்கும் போது மக்கள் உழைப்பை பழைய முறையில் பார்ப்பதை நிறுத்தி விடுவார்கள். கிராமங்களிலும், அல்லது நகரங்களிலும் எல்லா இடங்களிலும் சில குறிப்பிட்ட பிரச்சினைகளில்—நான் ஒரு சிறு உதாரணத்தை எடுத்துக் கொள்கிறேன்—அதாவது பொது சுகாதாரம், அல்லது, உணவுப் பொருள்களை விநியோகம்

செய்வது ஆகியவற்றில் உதவி செய்ய முன்வரவேண்டியது இளம் கம்யூனிஸ்டுக் கழகத்தின் கடமையாகும். பழைய, முதலாளித்துவ சமுதாயத்தில் இந்தப் பணி எவ்வாறு நடைபெற்றது ? ஒவ்வொருவரும் தனக்காகவே வேலை செய்தார்கள்; வயதானவர்களைப் பற்றியும், நோயாளிகளைப் பற்றியும் ஒருவரும் இம்மியளவு கூட கவலைப்படவில்லை; அல்லது, வீட்டுவேலைகளைப் பெண்கள் மாத்திரம் கவனித்து வந்தார்கள்; இதன் விளைவாகப் பெண்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு, அடிமைகள் என்ற நிலையில் இருந்தார்கள். இதை எதிர்த்துப் போராட வேண்டியது யாருடைய கடமை? வாலிபர் கழகத்தின் வேலையாகும்; இது பின்வருமாறு கூறவேண்டும்: இவை அனைத்தையும் நாங்கள் மாற்றுவோம்; வாலிபர்களின் பிரிவுகளை நாங்கள் அமைப்போம்; இவை பொது சுகாதாரத்திற்கு உத்தரவாதமளிக்க உதவி செய்யும்; அல்லது உணவுப் பொருள்களை வினியோகம் செய்ய இவை உதவி செய்யும்; இவை வீடு வீடாகச் சென்று கண்காணிக்கும்; சமுதாயம் முழுவதின் நலனுக்காக ஸ்தாபன ரீதியாக, முறையாக வேலை செய்யும்; தங்கள் சக்தியைச் சரியான முறையில் பயன்படுத்தும்; உழைப்பை நல்ல முறையில் ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதை வெளிப்படையாக எடுத்துக் காட்டுவோம்.

இப்பொழுது ஐம்பது வயதாகி இருக்கும் தலைமுறை கம்யூனிஸ்ட் சமுதாயத்தைப் பார்ப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அது உதயமாவதற்குள் இவர்கள் போய் விடுவார்கள். ஆனால் இப்பொழுது பதினைந்து வயதாகி இருக்கும் தலைமுறையினர் கம்யூனிஸ்டு சமுதாயத்தைப் பார்க்க முடியும்; அது தானாகவே இந்த சமுதாயத்தை நிர்மாணம் செய்யும் இந்தத் தலைமுறையானது. ஒரு கம்யூனிஸ்டு சமுதாயத்தை நிமாணம் செய்வதுதான் தங்கள் வாழ்க்கையின் முழு நோக்கம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பழைய சமுதாயத்தில், ஒவ்வொரு குடும்பமும் தனித் தனியே வேலைசெய்தது; மக்கள் திரளை அடக்கி ஒடுக்கிய நிலச் சுவான்தார்களையும், முதலாளிகளையும் தவிர, வேறுயாரும் உழைப்பை ஒழுங்கு முறைப்படுத்தவில்லை. எவ்வளவு கஷ்டமானதாகவும், அல்லது எவ்வளவு அருவருப்பானதாகவும் இருப்பினும் கூட, எல்லா வகையான உழைப்பையும் நாம் ஒழுங்கு முறைப் படுத்த வேண்டும்; அதாவது ஒவ்வொரு தொழிலாளியும், ஒவ்வொரு விவசாயியும் பின் வருமாறு கூறும் முறையில் அதை ஒழுங்கு முறைப்படுத்த வேண்டும். சுதந்திரமான உழைப்பாளிகளின் மகத்தான படையில் நான் ஒரு பகுதியாக இருக்கிறேன்; நிலச் சுவான்தார்களும், முதலாளிகளும் இல்லாமல் என்னுடைய வாழ்க்கையை நானே அமைத்துக் கொள்ள முடியும்; ஒரு கம்யூ

னிஸ்டு அமைப்பை ஏற்படுத்த நான் உதவி செய்ய முடியும் இளம் பிராயத்திலிருந்தே உணர்வு பூர்வமான, கட்டுப்பாடான உழைப்பில் ஈடுபட வாலிபர்களுக்கு, வாலிப கம்யூனிஸ்டு கழகம் கற்றுக் கொடுக்க வேண்டும். இந்த முறையில், இப்பொழுது நாம் நேரிடும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்று நாம் நம்பிக்கையோடு இருக்கலாம். நாட்டை மின்சார மயமாக்குவதற்கு பத்து வருடங்களுக்குக் குறையாமல் தேவைப்படும் என்று நாம் அனுமானிககலாம; அப்பொழுதுதான் ஏழ்மையில் மூழ்கிக்கிடக்கும் நமது நாடு, அண்மையில் பெற்றிருக்கும் தொழில் நுணுக்கச் சாதனை களிலிருந்து பயனடைய முடியும். ஆகவே, இப்பொது பதினைந்து வயதாகி இருக்கும் தலைமுறையானது பத்து அல்லது இருபது வருடங்களில் ஒரு கம்யூனிஸ்ட் சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்; ஆகவே அவர்கள் ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு கிராமத்திலும் வாலிபர்கள் சிறியதாகவோ, அல்லது எளிமையானதாகவோ இருப்பினும் கூட, பொதுவாக உழைப்பு சம்பந்தப்பட்ட ஏதாவது பிரச்சினையை நடைமுறையில் தீர்ப்பதில் ஈடுபடும் முறையில் கல்வி பற்றிய கடமைகள் அனைத்தையும் சமாளிக்க வேண்டும். கம்யூனிஸ்டு போட்டி வளரும் போது, தங்கள் உழைப்பை ஒன்று திரட்ட முடியும் என்பதை வாலிபர்கள் நிரூபித்துக் காட்டும் போது, ஒவ்வொரு கிராமத்திலும் இதைச் செய்து முடிக்கும் போது கம்யூனிஸ்டு நிர்மாணத்தின் வெற்றிக்கு உத்திரவாதம் ஏற்படுத்த முடியும். அந்த நிர்மானத்தின் வெற்றியின் நோக்கு நிலையிலிருந்து உங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் கவனிப்பதன் மூலமாகவும், நாம் ஒன்றுபட்ட, அரசியல் உணர்வு பெறற உழைக்கும் மக்களாக மாறுவதற்கு நம்மால் முடிந்ததை எல்லாம் செய்திருக்கிறோமா என்று தன்னைத் தானே கேட்பதன் மூலமாகவும் மாத்திரமே தனது ஐந்து லட்சம் உறுப்பினர்களை ஒரே ஒரு உழைப்பாளிகளின் படையில் ஒன்று திரட்டுவதில் வெற்றி பெறறு, இளம் கம்யூனிஸ்டுக் கழகமானது அனைவரதும் நன்மதிபபையும பெற முடியும். (புயல் போல் கைதட்டி ஆரவாரம)

"பிராவ்தா"—
எண் 221, 222, 223—
அக்டோபர் 5, 6, 7-1920.

திரட்டப்பட்ட
நூல்கள், 4 தொகுப்பு-31—
பக்கம்-283-99—

# எட்டாவது அகில ரஷ்யா சோவியத்துகளின் காங்கிரஸ் டிசம்பர் 22-29, 1920

## மக்கள் கமிஸார்கள் (அமைச்சரவை) குழுவின் வேலை அறிக்கையில் இருந்து

**டிசம்பர், 22**

*அரசாங்க மின்சாரக் குழுவின் அறிக்கையை நீங்கள் கேட்பீர்கள்; 1920-ல் பிப்ரவரி 7-ல் அகில ரஷ்ய மத்திய நிர்வாகக் குழுவின் முடிவுப்படி இது அமைக்கப்பட்டது. பிப்ரவரி 21-ல் தேசிய பொருளாதார நிறுவனத்தின் உச்ச கட்டக் குழுவின் தலைமைக்குழு இந்தக் குழுவின் எண்ணிக்கையையும், நபர்களையும் நிர்ணயம் செய்து, இறுதியான உத்தரவில் கையெழுத்திட்டது; ஏராளமான தலைசிறந்த நிபுணர்களும், தொழிலாளர்களும், தேசிய பொருளாதாரத் தலைமைக் குழுவிலிருந்து முக்கியமாகச் சேர்க்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்டவர்களும், இரயில்வே மக்கள் அமைச்சகத்திலிருந்தும், விவசாய மக்கள் அமைச்சகத்திலிருந்தும் ஏராளமானவர்களும இந்தப பணியில் தங்கள் சக்தி முழுவதையும் செலுத்தி வருகிறுர்கள். ரஷ்யாவை மின்சார மயமாக்குவதற்காக அமைக்கப்பட்ட அரசாங்கக் குழுவின் வேலையின் சாதனைகள் இந்தச் சிறு தொகுப்பு வடிவத்தில் நமக்கு முன்னுல் வைக்கப் பட்டிருக்கிறது; இன்றையக்கோ, அல்லது நாளைக்கோ அது உங்களுக்கு வினியோகிக்கப்படும். இந்தச் சிறு தொகுப்பைக் கண்டு நீங்கள் அஞ்சமாட்டீர்கள் என்று நம்புகிறேன். இந்தப் புத்தகத்திற்கு விசேஷ முக்கியத்துவம் இருக்கிறது என்பதை நீங்கள் நம்பும்படி செய்வதில் எனக்குக் கஷ்டம் எதுவும் இருக்காது என்று நான் நினைக்கிறேன். எனது அபிப்பிராயத்தில், இது நமது கட்சியின் இரண்டாவது செயல் திட்டமாகும். நமக்கு கட்சியின் ஒரு செயல் திட்டம் இருக்கிறது; ஒரு புத்தக வடிவத்தில் அதைப் பற்றி தோழர்கள் பிரெபிராஷென்ஸ்கியும், புக்காரினும் அருமையாக விளக்கியிருக்கிறுர்கள்; அது பெரிதாக இல்லையென்ருலும் கூட, பெரிதும் பயனுள்ளதாகவே இருக்கிறது. அது அரசியல்*

செயல் திட்டமாக இருக்கிறது; அது நமது குறிக்கோள்களின் விவரக் குறிப்பாகவும், வர்க்கங்களுக்கும், பொது மக்களுக்கும் இடையே உள்ள உறவுகளைப்பற்றி விளக்கம் கொடுக்கக் கூடிய தாகவும் இருக்கிறது. ஆயினும், எதார்த்தத்தில் இந்தப் பாதையில் போக வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதை யும், நடைமுறையில் கிடைத்த சாதனைகளைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டிய காலம் வந்து விட்டது என்பதையும் உணரவேண்டும். நமது கட்சியின் செயல் திட்டமானது கட்சிக்கு மாத்திரம் உரிய ஒரு செயல் திட்டமாக இருக்கக் கூடாது. அது, நமது பொருளாதார வளர்ச்சியின் ஒரு செயல் திட்டமாக மாற வேண்டும்; அல்லது அப்படி இல்லை யென்றால் கட்சியின் ஒரு செயல் திட்டம் என்ற நிலையில் கூட அதற்கு மதிப்பில்லாமல் போய்விடும். அதற்குப் பிற்சேர்ப்பாக, கட்சியின் இரண்டாவது செயல் திட்டத்தை வகுக்கவேண்டும்; அதாவது, நமது பொருளாதாரம் முழுவதையும் நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவதையும், இன்றுவரை உள்ள தொழில் நுணுக்க வளர்ச்சியின் மட்டத்திற்கு அதை உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு வேலைத் திட்டத்தை அதற்கு அனுபந்தமாகச் சேர்க்க வேண்டும். மின்சார மயமாக்குவதற்கு ஒரு திட்டம் இல்லாமல், நாம் உண்மையான எந்த நிர்மாண வேலையையும் மேற்கொள்ள முடியாது, விவசாயம், தொழில், போக்குவரத்து ஆகியவற்றை நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவது பற்றியும், அவைகளை முரண்பாடில்லாமல் இணக்கி ஒரு நிலைப்படுத்து பற்றியும் நாம் விவாதிக்கும் போது, நாம் ஒரு விரிவான பொருளாதார திட்டத்தைப் பற்றி விவாதிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். நாம் ஒரு திட்டவட்டமான திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். முதன் முதலான ஒரு நெருங்கிய அளவீடு என்ற நிலையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப் படும் என்பது உண்மையே. நமது உண்மையான கட்சியின் செயல் திட்டம் இருப்பது போல், கட்சியின் இந்தச் செயல் திட்டம் அவ்வளவு மாற்ற இயலாததாக இருக்க முடியாது; நமது கட்சியின் செயல் திட்டத்தைக் கட்சியின் காங்கிரசுக்கு மாத்திரமே மாற்றுவதற்கு உரிமை உண்டு. இல்லை, இந்தச் செயல் திட்டம் ஒவ்வொரு தொழிற்சாலையிலும், ஒவ்வொரு சிறு திணை ஆட்சி வட்டத்திலும், தினசரி அபிவிருத்தி செய்யப் படும், விரிவு படுத்தப்படும், முழு நிறைவாக்கப்படும், திருத்தி யமைக்கப்படும். முதலாவது நகலாக அது நமக்குத் தேவைப்படு கிறது; பத்து வருடங்களுக்குக் குறையாத ஒருகால கட்டத்திற்கான ஒரு மகத்தான பொருளாதாரத் திட்டம் என்ற நிலையிலும், கம்யூனி ஸத்திற்குத் தேவையான உண்மையான பொருளாதார அடிப்

படையில் எவ்வாறு ரஷ்யாவை வைக்கவேண்டும் என்பதைக் சுட்டி காட்டும் நிலையிலும் ரஷ்யா முழுவதற்கும் அது சமர்ப்பிக்கப் படும். யுத்தமுனையில் நாம் போராடி, வெற்றியைப் பெற்றபோது அளவிட முடியாத அளவுக்கு நமது பலத்தையும், ஆற்றல்களையும் பெருக்கிய சக்திமிக்க செயல் தூண்டுதல்களில் எது ஒன்ருக இருந்தது? அது, அபாயத்தை உணர்வு பூர்வமாக உணர்ந்ததுதான் நிலச்சுவான்தார்களும், முதலாளிகளும் ரஷ்யாவுக்குத் திரும்பி வருவது சாத்தியமா என்று ஒவ்வொருவரும் கேட்டார்கள். அதற்கு பதில் என்னவென்ருல், அது சாத்தியமானதென்பதாகும், ஆகவே, நாம் நமது நடவடிக்கைகளை நூறு மடங்கு பெருக் கினேம்; நாம் வெற்றியும் பெற்ருேம்.

பொருளாதார முனையை எடுத்துக் கொண்டு, ரஷ்யாவில் பொருளாதார ரீதியில் முதலாளித்துவத்தை மீண்டும் கொண்டு வரமுடியுமா என்று கேளுங்கள் ஸுக்கரெவ்கா [119] கள்ள மார்க் கெட்டை எதிர்த்து நாம் போராடியிருக்கிருேம். கொஞ்ச காலத்திற்கு முன்பு, சோவியத்துகளின் அகில ரஷ்ய காங்கிரஸ் துவங்குவதற்கு சற்று முன்பு தொழிலாளர்கள், செம்படையினர் ஆகியவர்களின் பிரதிநிதிகளின் மாஸ்கோ சோவியத் மகிழ்ச்சி தராத இந்த நிறுவனத்தை மூடிற்று. (கைதட்டி ஆரவாரம்) ஸுக்கரெவ்கா கள்ள மார்க்கெட் மூடப்பட்டிருக்கிறது; ஆனுல். அவ்வளவு தீங்கு விளைவிக்கக் கூடியது அந்த மார்க்கெட் அல்ல. ஸுக்கரெவ்ஸ்கயா சதுக்கத்தில் இருந்த பழைய ஸுக்கரெவ்கா மார்க்கெட் மூடப்பட்டிருக்கிறது; இந்த நடவடிக்கைக்கு எந்த விதமான சஷ்டமும் நேரிடவில்லை. ஒவ்வொரு சிறு உரிமையாளர் மனதிலும், நடத்தையிலும் குடியிருக்கிற "ஸுக்கரெவ்கா" தான் தீங்குவிளைவிககக் கூடியதாக இருக்கிறது. மூடப்படவேண்டிய "ஸுக்கரெவ்கா" இதுதான். "ஸுககரெவ்கா தான்," முதலாளித்து வத்தின் அடிப்படை. அது நிழலில் இருக்கும்போது, முதலாளித் துவம் ரஷ்யாவுக்கு மீண்டும் வரலாம்; நம்மைக் காட்டிலும் அது பலமாகவும் வளரலாம். அதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அது நமது வேலைக்கு மூல விசையாகச் சேவை செய்ய வேண்டும்; நமது உண்மையான வெறறிக்கு ஒரு நிபந்தனையாகவும் அளவுகோலாகவும், இருக்கவேண்டும். சிறு விவசாயிகள் நாட்டில் நாம் வாழ்வதால், கம்யூனிஸத்தைக் காட்டிலும் முதலாளித்துவத்திற்கு உறுதியான ஒரு பொருளாதார அடிப் படை இருக்கிறது. அதை நினைவில் வைத்திருக்க வேண்டும். கிராமப்புறத்தில் உள்ள வாழ்கையைக் கவனமாக ஆராய்ந்து பார்க்க எந்த நபருக்கும், நகரங்களில் உள்ள வாழ்க்கையோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது, முதலாளித்துவத்தின் வேர்களை நாம்

இன்னும் கெல்லி எறியவில்லை என்பதும், உள்நாட்டு எதிரியின் அஸ்திவாரத்தை, அதாவது அடிப்படையை இன்னும் குழிபறிக்க வில்லை என்பதும் நன்கு தெரியும். பின்னல் கூறப்பட்டது சிறிய அளவில் உற்பத்தி செய்யும் முறையைச் சார்ந்திருக்கிறது; அதைக் குழிபறிப்பதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது: அதாவது, நாட்டின் பொருளாதாரத்தை, விவசாயம் உள்பட, ஒரு புதிய தொழில் நுணுக்க அடிப்படையில், அதாவது நவீன பெரிய அளவில் உற்பத்தி செய்யும் முறையில் அமைக்கவேண்டும், மின்சாரம் மாத்திரம்தான் அந்த அடிப்படையை அளிக்கிறது.

சோவியத் அதிகாரத்தோடு, ரஷ்யா முழுவதையும் மின்சார மயமாக்குவதும் சேர்ந்ததுதான் கம்யூனிஸம். இல்லையென்றல். நாடானது, ஒரு சிறிய முறையில் விவசாயம் செய்யும் நாடாகவே நீடித்து, நிலைத்து இருக்கும். அதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். நாம், முதலாளித்துவத்தைக் காட்டிலும் பலஹீனமாக இருக்கிறேம்—உலக ரீதியில் மாத்திரமின்றி, நாட்டிற்குள்ளேயும் கூட. இது பொது அறிவாகும். இதை நாம் புரிந்து கொண்டிருக்கிறேம; பொருளாதாரத்தின் அடிப் படையை, அதாவது சிறிய முறையில் விவசாயம் செய்து கொண்டிருப்பதை, பெரிய அளவில் நடைபெறும் தொழிலை அடிபடையாகக் கொண்டதாக மாற்றுவதற்கு நாம் நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்துவோம். நாட்டை மின்சார மயமாக்கும் போது, மாததிரம் தொழிற்சாலை, விவசாயம், போக்குவரத்து ஆகியவற்றை நவீன பெரிய அளவில் உள்ள நவீன தொழிலின் தொழில் நுணுக்க அடிப்படையில் வைக்க முடியும்; அப்போது மாத்திரம்தான நாம் பூரணமாக வெற்றி பெற்றவர் களாக இருப்போம்.

நாட்டை தொழில் மயமாக்குவதற்காக நாம் ஏற்கனவே ஒரு பூர்வாங்கத் திட்டத்தை வகுத்திருக்கிறேம்; தலைசிறந்த இருநூறு விஞ்ஞானிகளும், எஞ்சினியர்களும், தொழில் நுணுக்க நிபுணர்களும் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறர்கள். பத்து வருடத்திற்குக் குறை யாமல், பல ஆண்டுகள் வரை நீடித்திருக்கிற, கால கட்டத்திற்குத் தேவையான பொருள்களைப் பற்றியும், பொருளாதாரத்தைப் பற்றியும் மதிப்பீடுகளைக் கொடுக்கிற ஒரு திட்டம் நம்மிடம் இருக்கிறது. மின்சார மயமாக்கும் பொருட்டு நமக்கு எத்தனை லட்சம் சிமிண்டு பீப்பாய்கள் தேவைப்படும், எத்தனை லட்சம் செங்கல்கள் தேவைப்படும், என்பது பற்றி இந்தத் திட்டம் சுட்டிக் காட்டுகிறது. பொருளாதாரக் கண்ணேட்டத்திலிருந்து பார்த்தால், மின்சார மயமாக்கும் கடமையை நிறைவேற்று வதற்கு, நூறு கோடியிலிருந்து, நூற்று இருபது கோடி தங்க

ரூபிள்கள் வரையிலும் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. நம்மிடம் உள்ள தங்கச் சேமிப்பை எடுத்துக் கொண்டால், இந்தத் தொகைக்குத் தேவையான அளவு அது இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். நமது உணப் பொருள்களின் சேமிப்பு நிலையும் போதிய அளவுக்கு இல்லை. ஆகவே, நான் குறிப்பிட்டிருக்கும் திட்டத்திற்கு உகந்த முறையில் இந்த மதிப்பீடுகளில் சுட்டிச் காட்டியிருக்கும் செலவுத் தொகையைப் பெறுவதற்கு, சலுகைகளை விட்டுக் கொடுக்க வேண்டும். இந்த அடிப்படையில் நமது தொழிலையும், போக்கு வரத்தையும் எப்படி நல்ல நிலைமைக்கு மீண்டும் கொண்டுவருவது என்பதை மதிப்பீடு சுட்டிக் காட்டுவதை நீங்கள் பார்க்கலாம்.

மாஸ்கோ மாநிலத்தின் ஒரு மூலையில் உள்ள வோலோகோலாம்ஸ்க் உயெங்கில் நடைபெற்ற ஒரு விவசாயிகளின் திருவிழாவில் பங்கெடுக்கும் வாய்ப்பு அண்மையில் எனக்குக் கிடைத்தது. இங்கு விவசாயிகள் மின்சார விளக்குகளைப் பெற்றிருக்கிறார்கள். தெருவில்[120] ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; விவசாயிகளில் ஒருவர் முன்வந்து. விவசாயிகளின் வாழ்வில் நடைபெறும் இந்தப் புதிய நிகழ்ச்சியை வரவேற்று அவர் உரையாற்றினார். "விவசாயிகளாகிய நாங்கள் அறிவொளி ஊட்டப்படாதவர்களாக இருக்கிறோம்; இப்பொழுது நம்மிடையே ஒளி தோன்றியிருக்கிறது; இது ஒரு செயற்கையான ஒளி; நமது விவசாயிகளின் இருளுக்கு இது ஒளியைக் கொடுக்கும்" என்று அவர் பேசினார். என்னைப் பொறுத்தவரையிலும், இந்த வார்த்தைகள் எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. கட்சியைச் சேராத விவசாய மக்களுக்கு, மின்சார விளக்கு ஒரு "செயற்கையான ஒளி" யாகத்தான் இருக்கிறது என்பது உண்மையே. ஆனால், நிலச்சுவான்தார்கள், முதலாளிகள் ஆகியவர்களின் நுகத்தடியின் கீழ் இத்தகைய பின் தங்கிய நிலையிலும், ஏழ்மையிலும், ஒடுக்கு முறையிலும் நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக விவசாயிகளும், தொழிலாளர்களும் வாழ்ந்து வந்திருக்கிறார்களே அதைத்தான் செயற்கையானது என்று நாம் கருதுகிறோம். இந்த இருளிலிருந்து நீங்கள் மிக வேகமாக வெளியே வர முடியாது. இவ்வாறு சொல்லலாமானால், இப்பொது நாம் எடுக்கவேண்டிய முயற்சி என்னவென்றால், நாம் நிர்மாணம் செய்யும் ஒவ்வொரு மின்சார சக்தி நிலையத்தையும், அறிவொளி கொடுக்கும் கோட்டையாக மாற்றி, பொதுமககள் மின்சார சக்தி உணர்வு படைத்தவர்களாகச் செய்வதற்கு, அதைப் பயன்படுத்தவேண்டும். டஜன் கணக்கிலுள்ள இந்தச் சிறு மின்சார சகதி நிலையங்கள், தொழிலை நல்ல நிலைமைக்குக்

கொண்டு வருவதோடு ஏன் இணைக்கப்பட்டிருக்கிறது, என்பதன் காரணத்தை அனைவரும் புரிந்து கொள்ளும்படி செய்யவேண்டும். நமக்கு நிலைநாட்டப்பட்ட மின்சார சக்தித்திட்டம் இருக்கிறது; ஆனால், இந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு பல ஆண்டுகள் தேவைப்படும். என்ன விலையானாலும் சரி நாம் இந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்; அதைப் பூர்த்தி செய்யும் கால கட்டத்தையும் சுருக்க வேண்டும். நமது முதலாவது பொருளாதாரத் திட்டங்களைப் போல், அதாவது போக்குவரத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டு வரும் திட்டத்தை — உத்தரவு எண் 1042 — நிறைவேற்றியதைப் போல், அதாவது ஐந்துவருட காலகட்டத்தில் பூர்த்தி செய்வது என்று போட்டிருந்த திட்டத்தை, நாம் கால அட்டவணைக்கு முந்தி இருப்பதால், மூன்றரை ஆண்டுகளாகச் சுருக்கப்பட்டிருப்பதைப் போல் இந்தத் திட்டத்தையும் முன் கூட்டியே செய்து முடிக்க வேண்டும். முதலாளித்துவம் திரும்பவும் வரமுடியாத அளவுக்கு தடுக்கும் மாறுதல்களைச் செய்வதற்காக மின்சார மயமாக்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பத்து, அல்லது இருபது வருட கட்டம் நமக்குத் தேவைப்படும். உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் இதுவரை நிகழ்ந்திராத முறையில் வேகமாக சமூகம் வளர்ச்சியடைவதற்கு இது ஒரு முன் உதாரணமாகத் திகழும், என்ன விலையானாலும் சரி, திட்டத்தை நாம் நிறைவேற்ற வேண்டும்; அதன் கால கட்டத்தையும் சுருக்க வேண்டும்.

தொழிலின் தனித்தனிப் பிரிவுகளுக்குத் தனித்தனியே திட்டங்களை இது வரையிலும் வகுத்து வந்தோம்; இப்பொழுது முதல் தடவையாக, நிறைவேற்றுவதற்குப் பல வருடங்கள் தேவைப்படுகிற முழுமையான திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரப் பணியில் நாம் ஈடுபடத் துவங்கியிருக்கிறோம். இது கடினமான வேலையாக இருக்கிறது கம்யூனிஸத்தின் வெற்றியை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

ஆயினும், நம்மிடம் இருக்கும் கல்வி அறிவில்லாதவர்களை வைத்துக்கொண்டு நாம் மின்சார மயமாக்குவதை நிறைவேற்ற முடியாது என்பதை உணர வேண்டும், நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். கல்வி அறிவு இல்லாமையைத் துடைத்தெறிவதற்காக நமது பொறுப்பாண்மைக் குழு நடவடிக்கைகளை எடுக்கும்; ஆனால், அது போதுமானதல்ல. கடந்த காலத்தோடு ஒப்பிடும்போது, அது பல காரியங்களைச் செய்திருக்கிறது; ஆனால், இனிமேல் செய்ய வேண்டியிருப்பதோடு ஒப்பிடும்போது, அது கொஞ்சமாகத்தான்

5-DEC 1973

காரியங்களைச் செய்திருக்கிறது. எழுதப் படிக்கத் தெரிந்திருப்பதோடு, கலாச்சாரப் பண்புடைய, அறிவொளி படைத்த, கல்வி கற்ற உழைக்கும் மக்கள் நமக்குத் தேவைப்படுகிறார்கள்; நம்மை எதிர்நோக்கியிருக்கும் கடமைகளை, பெரும்பாலான விவசாயிகள் பூரணமாகப் புரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும். கட்சியின் இந்தச் செயல் திட்டத்தை ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஒரு அடிப்படையான பாட புத்தகமாகப் பயன் படுத்த வேண்டும். மின்சார மயமாக்குவதற்காகப் பொதுப்படையான திட்டம் அதில் இருப்பதோடு கூடவே ரஷ்யாவின் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் தனித்தனியே திட்டங்கள் அதில் இருப்பதை நீங்கள் பார்க்கலாம். இவ்வாறு, மாநிலங்களுக்குப் போகும் ஒவ்வொரு தோழரும், அவருடைய மாவட்டத்திற்காக மின்சாரமயமாக்கும் ஒரு திட்ட வட்டமான திட்டம் இருப்பதை, அதாவது இருளிலிருந்து, அறியாமையிலிருந்து சாதாரண வாழ்விற்கு மாறிச்செல்லும் ஒரு திட்டம் இருப்பதைப் பார்க்க முடியும். மேலும், தோழர்களே, உங்களுக்குச் சமர்ப்பித்திருக்கும் ஆய்வுக் கட்டுரையை நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்க முடியும், அவ்வாறு பார்க்கவும் வேண்டும்; இத்துடன், அதை ஸ்தலத்தில் விரிவு படுத்தி, சரிபார்க்கவும் வேண்டும்; எந்தப் பள்ளிக் கூடத்திலாவது, எந்தக் கல்வி வட்டாரத்திலாவது "கம்யூனிஸம் என்றால் என்ன?" என்ற கேள்வியைக் கேட்டால், அப்பொழுது நாம் கொடுக்கும் பதிலில் கட்சியின் செயல் திட்டத்தில் என்ன எழுதியிருக்கிறதோ அதைச் சொல்வதோடு, அறியாமை நிலையிலிருந்து நாம் எப்படி வெளியேற முடியும் என்ற விஷயமும் அதில் அடங்கியிருக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ரஷ்யாவை மின்சாரமயமாக்குவதற்காகவும், அவருடைய பொருளாதாரத்தை மீண்டும் நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவதற்காகவும் ஒரு திட்டத்தைத் தீட்டிக் கொடுக்கும் கடமையை நமது தலைசிறந்த மனிதர்களிடமும், நமது பொருளாதார நிபுணர்களிடமும் ஒப்படைத்திருந்தோம்; அவர்கள், அதை நிறைவேற்றியிருக்கிறார்கள். இப்பொழுது இந்தக் கடமை எவ்வளவு மகத்தானது, கஷ்டமானது என்பதையும், அதை எவ்வாறு அணுகுவது, எவ்வாறு சமாளிப்பது என்பதையும் தொழிலாளர்களும், விவசாயிகளும் உணரும்படி நாம் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு தொழிற்சாலையும், ஒவ்வொரு மின்சாரசக்தி நிலையமும் அறிவொளியின் மையமாகத் திகழும்படி நாம் செய்ய வேண்டும்; ரஷ்யா முழுவதும் அடர்த்தியாக வலையோல் மின்சார சக்தி நிலையங்களும், வன்மையான தொழில் நுணுக்கக் கருவிகளும்

அமைக்கப்பட்டால், நமது கம்யூனிஸ்ட் பொருளாதார வளர்ச்சியானது எதிர்கால சோஷலிஸ்டு ஐரோப்பாவுக்கும், ஆசியாவிற்கும் ஒரு முன் மாதிரியாக திகழும். (புயல்போல் நீண்ட கரகோஷ ஆரவாரம்.)

"சோவியத்துகளின் எட்டாவது அகில ரஷ்ய காங்கிரஸ்." என்ற புத்தகத்தில் சொற்பொழிவு 1921—ல் பிரசுரிக்கப்பட்டது.

திரட்டப்பட்ட நூல்கள் – தொகுப்பு – 31
பக்கம்—514—18

# கூட்டுறவு பற்றி[121]

## I

நமது நாட்டில் கூட்டுறவு இயக்கத்தின்பால் போதிய அளவு கவனம் செலுத்தப்படவில்லை, என்று எனக்குத் தோன்றுகிறது. அக்டோபர் புரட்சியின் காலத்திலிருந்து, புதிய பொருளாதாரக் கொள்கையைச் [122] சார்ந்திராமல் (இந்த விஷயத்தில் புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக என்று இதற்கு மாறாக நாம் கூறவேண்டியிருக்கிறது) நமது கூட்டுறவு சங்க இயக்கமானது மகத்தான முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக இப்பொழுது மாறி யிருக்கிறது என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளவில்லை. பழைய கூட்டுறவாளர்கள் கனவில் ஏராளமாகக் கற்பனைகள் இருக்கின்றன. அடிக்கடி அவை பரிகசிக்கக் கூடிய முறையில் உள்ள கற்பனைகளாக இருக்கின்றன. ஆனால், அவை ஏன் கற்பனையாக இருக்கின்றன? ஏனெனில், சுரண்டுகிறவர்களின் ஆட்சியை வீழ்த்து வதற்கான தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் போராட்டத்தின் அடிப்படையை, அடிக் கீழ்மட்ட முக்கியத்துவத்தை மக்கள் புரிந்து கொள்ளவில்லை. நாம் சுரண்டுகிறவர்களின் ஆட்சியை வீழ்த்தி விட்டோம்; பழைய கூட்டுறவாளர்களின் கனவுகளில் கற்பனையாகவும், நடைமுறை உலகுடன் தொடர்பற்றதாகவும் பொதுபடையானதாகவும் கூட இருந்தவற்றில் பெரும்பா லானவை இப்பொழுது பூசி மழுப்பாத எதார்த்தமாகி வருகின்றன.

உண்மையாகவே அரசியல் அதிகாரம் தொழிலாள வர்க் கத்தின் கையில் இருப்பதாலும், இந்த அரசியல் அதிகாரம் உற்பத்தி சாதனங்களைச் சொந்தமாக வைத்திருப்பதாலும், உண்மையாகவே எஞ்சியிருக்கும் ஒரே ஒரு கடமை என்னவென்றால், பொது மக்களைக் கூட்டுறவு சங்கங்களில் ஸ்தாபன ரீதியாக அமைப்பதே யாகும். பொது மக்களில் பெரும்பாலோர் கூட்டுறவு சங்கங்களில் அமைந்துள்ளதால், சோஷலிஸம் தனது லட்சியங்களைத் தானாகவே அடையும் என்று வாதாடப்பட்டது; வர்க்கப் போராட் டத்தை நடத்த வேண்டியதும், அரசியல் அதிகாரத்தைக் கைப் பற்றுவதற்காகப் போராட வேண்டியதும் அவசியம் என்று

பிசகற்ற முறையில் நம்பியவர்கள், கடந்த காலத்தில் இத்தகைய சோஷலிஸத்தை நியாயமாகவே பரிகசிக்கக் கூடியது, வெறுக்கத் தக்கது, இகழ்ச்சிக்குரியது என்று கருதினர்கள். ஆனால், இப்பொழுது, ரஷ்யாவின் பொது மக்களைக் கூட்டுறவு சங்கங்களில் அமைக்க வேண்டியது எவ்வளவு பெரிய அளவில், எவ்வளவு எல்லையற்ற அளவில் முக்கியமானது என்பதை எல்லாத் தோழர் களும் உணரவில்லை. புதிய பொருளாதாரக் கொள்கையை மேற் கொண்டதனில், விவசாயியை ஒரு வியாபாரியாக ஏற்றுக்கொண்டு விட்டுக் கொடுத்தோம்; தனிப்பட்டவர்கள் வியாபாரம் செய்பலாம் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு விட்டுக் கொடுத்தோம்; திட்டவட்டமாக இந்தக் காரணத்திற்காகவே (சிலர் நினைப்பதற்கு நேர் விரோதமாக) கூட்டுறவு இயக்கம் இந்த அளவுக்கு அபரிமிதமாக முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறுகிறோம். புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் உண்மை யாகவே நாம் தேவைப்படுவதெல்லாம் என்னவென்றால், ரஷ்யாவில் உள்ள பொதுமக்களைப் போதிய அளவு பெரிய அளவில் கூட்டுறவு சங்கங்களில் அமைக்க வேணடும் என்பதுவே; ஏனெனில், இப்பொழுது நாம அந்த அளவுககுத் தனி நபர் நலன், தனிப்பட்டவரின் வியாபார நலன் ஆகியவற்றை, இந்த நலனகளை அரசு கண்காணிப்பது, கட்டுப்படுத்துவது என்பதோடு இணைப்பை ஏற்படுத்தியிருக்கிறோம்; அந்த அளவுக்கு அதை பொது நலன் களுக்குக் கீழ்ப்படிந்ததாகச் செய்திருக்கிறோம்; இது பல சோஷலிஸ்டுகளுக்கு முன்பு முட்டுக்கட்டையாக, இருந்தது. நிச்சயமாக, அரசின் அதிகாரத்தை எல்லா பெரிய அளவில் உள்ள உற்பத்தி சாதனங்களிலும் ஏற்படுத்தியிருக்கிறோம்; அரசியல் அதிகாரம் பாட்டாளி மக்களின் கையில் இருக்கிறது; லட்சோப லட்சம் சிறு விவசாயிகள், மிகச்சிறிய விவசாயிகள் ஆகியவர்களோடு பாட்டாளி மக்கள் கூட்டணி வைத்திருக்கிறார்கள்; விவசாயிகளுக்குப் பாட்டாளி மக்களின் தலைமை உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது; இன்னும் பல இவ்வாறு நிகழ்ந்திருக்கின்றன; கூட்டுறவு சங்கங்களிலிருந்து, மாத்திரம் ஒரு முழு நிறைவான சோஷலிஸ்டு சமுதாயத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையானது இவை அனைத்தும் தானே? முன்பு இதை நாம் சிறிய அளவில் நடைபெறும் வாணிகம் என்று கூறி பரிகசித்தோம்; இப்பொழுது நாம் புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் சில அம்சங்களில் அவ்வாறே கருதுவதற்கு உரிமை இருக்கிறது அல்லவா? ஒரு முழுநிறைவான சோஷலிஸ்டு சமுதாயத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான இவை அனைத்தும் தானே? இது, இன்னும் ஒரு சோஷலிஸ்டு சமுதாயததை நிர்மாணிப்பதாக இல்லை; ஆனால், அதற்குத் தேவையானதும், போதுமானதாகவும் இருக்கின்றன.

நடைமுறையில் செயல்படும் ஊழியர்களில் பலரால், இதே சூழ்நிலைதான் குறைத்து மதிப்பிடப்பட்டது. அவர்கள் நமது கூட்டுறவுச் சங்கங்களை வெறுப்போடு பார்க்கிறார்கள்; அவைகளின் தனிச் சிறப்பு வாய்ந்த முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளத் தவறுகிறார்கள்; முதலாவதாக கோட்பாட்டின் நோக்கு நிலையிலிருந்து (உற்பத்தி சாதனங்களை அரசு சொந்தமாக வைத்திருக்கிறது); இரண்டாவதாக, விவசாயிகள் எளிமையாகவும், சுலபமாகவும், பெரிதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமானவற்றின் மூலமாக புதிய அமைப்பிற்கு மாறிச் செல்லும் நோக்கு நிலையிலிருந்தது.

ஆனால், இது மீண்டும் அடிப்படையிலே முக்கியத்துவம். வாய்ந்ததாக இருக்கிறது. பல்வேறு வகைப்பட்ட தொழிலாளர்களின் சங்கங்களின் மூலமாக சோஷலிஸத்தை நிர்மாணிப்பதற்காகக் கற்பனையில் திட்டங்களைத் தீட்டுவது ஒரு விஷயம்; ஒவ்வொரு சிறு விவசாயியும் அதில் பங்கெடுத்துக் கொள்ளக் கூடியவகையில் நடைமுறையில் சோஷலிஸத்தை நிர்மாணிக்கக் கற்றுக் கொள்வது வேறு விஷயம். அந்தக் கட்டத்தையே நாம் இப்பொழுது அடைந்திருக்கிறோம். அதை அடைந்த பிறகு, அதை மிகக் கொஞ்சமாகவே நாம் அனுகூலமாகப் பயன்படுத்தி வருகிறோம் என்பதில் சந்தேகமே இல்லை.

புதிய பொருளாதாரக் கொள்கையை நாம் புகுத்திய போது நாம் அளவு மீறி முன்னேறிச் சென்று விட்டோம். ஆனால், சுயேச்சையாகத் தொழில் செய்வதற்கும், வியாபாரம் செய்வதற்கும் நாம் மிதமிஞ்சிய முக்கியத்துவம் கொடுத்தோம் என்ற காரணத்தால் அல்ல; நாம் அளவு மீறி முன்னேறிச் சென்றதற்குக் காரணம் கூட்டுறவுச் சங்கங்களை நாம் பார்க்கத் தவறி விட்டோம்; காரணம் இப்பொழுது நாம் கூட்டுறவுச் சங்கங்களைக் குறைத்து மதிப்பிடுகிறோம்; காரணம், மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு கருத்துக்களிலிருந்து, கூட்டுறவுச் சங்கங்களின் விரிவான முக்கியத்துவத்தை நாம் ஏற்கெனவே மறக்கத் துவங்கியிருக்கிறோம்.

இந்தக் "கூட்டுறவுச் சங்க" கோட்பாட்டின் அடிப்படையில் நடைமுறையில் உடனடியாக என்ன செய்ய முடியும், என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி வாசகரோடு நான் விவாதிக்க உத்தேசித்திருக்கிறேன். கூட்டுறவு இயக்கத்தின் சோஷலிஸ்டு அர்த்தம் அனைவருக்கும் தெளிவாகத் தெரியும் பொருட்டு, இந்தக் "கூட்டுறவு இயக்கத்தை" எத்தகைய வழி முறைகளால் உடனடியாக வளர்க்க முடியும், வளர்க்க வேண்டும்?

கூட்டுறவு சங்கங்கள் பொதுவாகவும், எப்பொழுதும் சில குறிப்பிட்ட சலுகைகளைப் பெறுவதோடு நிற்காமல், இந்தச்

சலுகைகள் சுத்தமாகவே பொருளியல் தன்மை வாய்ந்ததாகவும் (சாதகமான பாங்கு விகிதம் போன்றவை) இருக்கக் கூடிய வகையில் அரசியல் ரீதியாக அமைக்கப் படவேண்டும், தனியார் தொழிலுக்கும், கன இயந்திரத் தொழிலுக்கும் கொடுக்கப்படும். அரசாங்கக் கடனைக் காட்டிலும் அதிகமாக—இந்தத் தொகை கொஞ்சமாக இருப்பினும் கூட—கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க வேண்டும்.

ஒரு திட்டவட்டமான வர்க்கத்தின் பண ஆதரவு இருந்தால் தான் ஒரு சமூக அமைப்பு உதயமாகிறது. "சுயேச்சையான" முதலாளித்துவம் உதயமாவதற்கு லட்சோப லட்சம் ரூபிள்கள் தேவைப்பட்டன என்பதைக் குறிப்பிட வேண்டிய அவசியமே கிடையாது. தற்சமயம், சமூக அமைப்பாக இருக்கும் கூட்டுறவுச் சங்க அமைப்பிற்கு நாம் இப்பொழுது வழக்கமாக உதவி அளிப்பதைக் காட்டிலும் அதிகமாக உதவி அளிக்க வேண்டும்; அந்த உதவியை நாம் எதார்த்தத்தில் கொடுக்க வேண்டும். ஆனல், அந்த வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் அந்த உதவியை அளிக்க வேண்டும், அதாவது, கூட்டுறவுச் சங்கத்தின் ஏதாவது ஒரு வியாபாரத்திற்கு உதவி செய்வது என்று வியாக்கியானம் செய்வதோடு நின்றுவிடக் கூடாது; உதவி செய்வது என்றுல் அதன் அர்த்தம் பொது மக்களில் மிகப் பெரும் பாலோர் உண்மையாகவே அதில் பங்கெடுக்கும் கூட்டுறவுச் சங்கத்தின் வியாபாரத்திற்கு உதவி செய்வது என்பதாக இருக்கவேண்டும். கூட்டுறவுச் சங்க வியாபாரத்தில் பங்கெடுக்கும் விவசாயிகளுக்குப் போனஸ் வழங்குவது, நிச்சயமாக சரியான வடிவத்திலுள்ள உதவியாகும். ஆனல், கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றுல், இவ்வாறு பங்கு பெறுவதின் தன்மையைச் சரி பார்க்க வேண்டும். அதற்குப் பின்னல் இருக்கும் உஷார் தன்மையைச் சரி பார்க்க வேண்டும், அதன் குணும்சத்தைச் சரி பார்க்க வேண்டும். கண்டிப்பான முறையில் பேசுவது என்றுல், ஒரு கூட்டுறவாளர் ஒரு கிராமத்திற்குச் சென்று, அங்கு ஒரு கூட்டுறவுச் சரக்கு விற்பனைக் கடையைத் திறக்கும்போது, பொதுமக்கள் இதில் எந்த வகையிலும் பங்கெடுப்பது கிடையாது; ஆனல், அதே சமயத்தில், அவர்களுடைய சொந்த நலன்களால் உந்தித் தள்ளப்பட்டு, அவர்கள் அதில் பங்கெடுக்க வேகமாக முன்வர முயல்வார்கள். இந்தப் பிரச்சினையில் மற்ருெரு அம்சமும் இருக்கிறது.

"அறிவொளி" பெற்ற (முக்கியமாக கல்வி அறிவு) ஐரோப்பியனின் கருத்திலிருந்து பார்த்தால், கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகளில் சுறுசுறுப்பில்லாமல் இருக்கும் நிலையிலிருந்து,

தீவிரமாகப் பங்கெடுக்கும்படி ஒவ்வொருவரையும் தூண்ட வேண்டிய வேலை நமக்குக் கிடையாது. கண்டிப்பாகப் பேசுவது என்றால், நாம் செய்ய வேண்டியிருப்பது "ஒரே ஒரு" விஷயம் தான்; அதாவது, கூட்டுறவு சங்கங்களின் நடவடிக்கைகளில் ஒவ்வொருவரும் பங்கெடுப்பதால் கிடைக்கும் அனுகூலங்கள் அனைத்தையும் புரிந்து கொள்ளும்படி செய்யக் கூடிய அளவுக்கு, நமது மக்களுக்கு "அறிவு ஒளி" கொடுக்கவேண்டும்; இவ்வாறு பங்கெடுப்பதை அமைக்க வேண்டும். அது "ஒன்றே ஒன்றுதான்" நாம் செய்யவேண்டியது. சோஷலிஸத்தை நோக்கி முன்னேறிச் செல்வதற்கு வேறு வழிவகைகள் இப்பொழுது கிடையாது. ஆனால் இந்த "ஒன்றை"ப் பெறுவதற்கு ஒரு மெய்யான புரட்சி இருக்க வேண்டும்; அதாவது பொதுமக்கள் அனைவரும் கலாச்சார வளர்ச்சியின் ஒரு கட்டத்தினூடே செல்ல வேண்டும். ஆகவே, நமது விதி இவ்வாறு இருக்கவேண்டும்; அதாவது, அரசியல் செப்படி வித்தைகள் செய்வதையும், தத்துவம் பேசுவதையும் முடிந்த அளவு குறைத்துக் கொள்ளவேண்டும். இந்த விஷயத்தில் புதிய பொருளாதாரக் கொள்கையானது ஒரு முன்னேற்றமாகவே இருக்கிறது; எவ்வாறெனில், மிகவும் சாதாரண விவசாயியின் மட்டத்திற்குத் தக்கபடி அது சரிப்படுத்திக் கொள்கிறது; அவனுடைய மட்டத்திற்கு மேல் அதிகமாக அது எதையும் கோரவில்லை. ஆனால், புதிய பொருளாதாரக் கொள்கையின் மூலமாக கூட்டுறவு இயக்கத்தின் நடவடிக்கைகளில் பொது மக்கள் அனைவரையும் ஈடுபடுத்துவதற்கு ஒரு சரித்திர பூர்வமான சகாப்தம் முழுமையும் தேவைப்படும். அதிகபட்சம் ஒன்று, அல்லது இரண்டு பத்தாண்டுகளில் நாம் இதை அடைய முடியும். ஆயினும், இது ஒரு மாறுபட்ட பண்புகளுடைய ஒரு சகாப்தமாக இருக்கும்; இந்தச் சரித்திர பூர்வமான சகாப்தம் இல்லாமல், அனைவரும் கல்வி அறிவு பெறுமல், போதிய அளவு திறமை இல்லாமல், புத்தகத்தைப் படிக்கும் பழக்கத்தைப் பொதுமக்கள் போதிய அளவு பெறுவதற்குப் பயிற்சி கொடுக்காமல், விளைச்சல் குறைவு, பஞ்சம் போன்றவைகளிலிருந்து போதிய அளவு பாதுகாப்பு இல்லாமல்—இது போன்றவை இல்லாமல், நாம் நமது லட்சியத்தை அடைய முடியாது. இப்பொழுது நாம் செய்ய வேண்டியது என்னவென்றால், விரிவான புரட்சிகரமான நடவடிக்கைகளை, அபரிமிதமாக நாம் வெளிப்படுத்திக் காட்டிய புரட்சி கரமான ஆர்வத்தை, பூரணமாக வாகைமாலை சூடிய ஆர்வத்தை இணைப்பதற்கு, அதாவது, (நான் அநேகமாக இவ்வாறு கூற விரும்புகிறேன்) ஒரு சிறந்த, திறமை வாய்ந்த வியாபாரியாக இருப்பதோடு இணைப்பதற்கு—ஒரு சிறந்த கூட்டுறவாளராக இருந்தால் போதுமானது—கற்றுக் கொள்ளவேண்டும். திறமை

வாய்ந்த ஒரு வியாபாரியாக இருக்கவேண்டும் என்று நான் எந்த அர்த்தத்தில் கூறுகிறேன் என்றால், ஒரு பண்பாடுடைய வியாபாரி யாக இருக்கும் திறமை பெற்றிருக்க வேண்டும் என்பதுதான். வியாபாரம் செய்வதால், தாங்கள் சிறந்த வியாபாரிகள் என்று நினைத்துக் கொண்டிருக்கும் ரஷ்யர்கள், அல்லது விவசாயிகள் இதை மனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் ஒருக் காலும் அவ்வாறு இல்லை. அவர்கள் வியாபாரம் செய்கிறார்கள் என்பது உண்மையே; ஆனால், அவர்கள் பண்பாடுடைய வியாபாரி களாக இன்னும் மாறவில்லை. அவர்கள் இப்பொழுது ஆசிய முறையில் வியாபாரம் செய்கிறார்கள்; ஆனால், ஒருவன் ஒரு சிறந்த வியாபாரியாகத் திகழ வேண்டுமானால், அவன் ஐரோப்பிய முறையில் வியாபாரம் செய்யவேண்டும். இந்த விஷயத்தில் அவர்கள், ஒரு முழு சகாப்தத்திற்குப் பின்னால் பின்தங்கி இருக்கிறார்கள்.

முடிவாகக் கூறுகிறேன்: பொருளாதாரம், நிதி, பாங்கு ஆகியவை சம்பந்தப்பட்ட விஷயங்களில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏராளமான சலுகைகளை அளிக்கவேண்டும்; நமது சோஷலிஸ்டு அரசு புதிய கோட்பாட்டை இவ்வாறுதான் வளர்க்கவேண்டும்; பொதுமக்களும் இதன் மீது அமைக்கப்பட வேண்டும். ஆனால், இது கடமையைப் பற்றிய பொதுப்படையான வரையறுப் பாகவே இருக்கிறது; இது, நடைமுறைக் கடமையின் முழு உள் அடக்கத்தை விரிவாக வரையறுத்துக் கூறவோ, விவரிக்கவோ இல்லை: கூட்டுறவுச் சங்கத்தில் சேருகிறவர்களுக்கு எந்த வடிவத்தில் "போனஸ்" கொடுப்பது (எந்த அடிப்படையில் போனஸ் கொடுப்பது) எந்த வடிவ போனஸால் நாம் கூட்டுறவு சங்கங் களுக்குப் போதுமான அளவு உதவி செய்வது, பண்பாடுடைய கூட்டுறவாளரை உண்டுபண்ணக் கூடிய போனஸ் வடிவம் ஆகியவற்றை நாம் கண்டு பிடிக்க வேண்டும். உற்பத்திச் சாதனங்கள் சமூக உடமையாக இருப்பதாலும், முதலாளித் துவத்தை முறியடித்து, பாட்டாளி மக்களின் வர்க்க வெற்றி கிடைத்திருப்பதாலும், நாகரிகமடைந்துள்ள கூட்டுறவாளர்களின் அமைப்பானது, சோஷலிஸத்தின் அமைப்பாக இருக்கிறது.

ஜனவரி, 4, 1923.

## II

புதிய பொருளாதாரக் கொள்கையைப் பற்றி நான் எப்பொழுதாவது எழுதினல், 1918-ல் நான் எழுதிய அரசு முதலாளித்துவம் என்ற கட்டுரையை எப்போதும் மேறகோள் கொடுப்பேன். இது, சில குறிப்பிட்ட இளம் தோழர்களிடையே ஒரு தடவைக்கு மேல் சந்தேகங்களை உண்டு பண்ணியிருக்கிறது. ஆனால், அவர்களுடைய சந்தேகங்கள் முக்கியமாக நடைமுறைச் சார்பற்ற அரசியல் விஷயங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அரசியல் அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் ஒரு தொழிலாள வர்க்கத்தின் கீழ், உற்பத்திச் சாதனங்களைச் சொந்தமாக வைத்திருக்கும் ஒரு தொழிலாள வர்க்கத்தின் கீழ், உள்ள ஒரு அமைப்பிற்கு "அரசு முதலாளித்துவம்" என்ற வார்த்தையை அனுஷ்டிக்கக் கூடாது என்று அவர்களுக்குத் தென்பட்டது. ஆயினும், நான் "அரசு முதலாளித்துவம்" என்ற வார்த்தையை எவ்வாறு உபயோகித்தேன் என்பதை அவர்கள் கவனிக்கவில்லை; அதாவது, முதலாவதாக, இடதுசாரி கம்யூனிஸ்டுகள்[128] என்று அழைக்கப்படுகிறவர்களோடு எனக்கு ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடு சம்பந்தமாக நான் எடுத்திருந்த நிலையோடு, நமது இன்றைய நிலையை சரித்திர பூர்வமாக இணைக்கும் பொருட்டு அதைப் பயன்படுத்தியிருந்தேன்; மேலும், அந்த சமயத்தில் நிலவில் உள்ள நமது பொருளாதாரத்தைக் காட்டிலும், அரசு முதலாளித்துவமானது மேம்பட்டதாக இருக்கும் என்று நான் வாதாடினேன். சாதாரணமான அரசு முதலாளித்துவத்திற்கும், அசாதாரணமான, மிகவும் அசாதாரணமானதாகவும் கூட உள்ள அரசு முதலாளித்துவத்திற்கும் இடையே இடைவிடாத தொடர்ச்சி இருப்பதை எடுத்துக் காட்ட வேண்டியது எனக்கு அவசியமாக இருந்தது; புதிய பொருளாதாரக் கொள்கையை வாசகருக்கு அறிமுகம் செய்யும்போது இதை நான் குறிப்பிட்டேன். இரண்டாவதாக, எப்பொழுதும் எனக்கு நடைமுறை நோக்கம்தான் முக்கியமானதாக இருந்தது. நமது புதிய பொருளாதாரக் கொள்கையின் நடைமுறை நோக்கமானது சலுகைகளைக் குத்தகைக்கு விடுவதாக இருந்தது. நிலவில் உள்ள இன்றைய சூழ்நிலைமைகளில் நமது நாட்டில் சலுகைகளை வழங்குவது என்பது, கேள்விக்கிடமின்றி அரசு முதலாளித்துவத்தின் சுத்தமான ஒரு ரகமாகவே இருக்க முடியும். இவ்வாறுதான் நான் அரசு முதலாளித்துவத்தைப் பற்றி வாதாடினேன்.

ஆனால், இந்த விஷயத்தில் மற்றொரு அம்சம் இருக்கிறது; இதற்காக நாம் அரசு முதலாளித்துவத்தைத் தேவைப்படலாம். அல்லது, குறைந்த பட்சம் அத்துடன் ஒப்பிட வேண்டிய அவசியம் இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய பிரச்சினைதான் இது.

முதலாளித்துவ அரசியல், கூட்டுறவு சங்கங்கள் கூட்டு முதலாளித்துவ நிறுவனங்களாக இருக்கின்றன என்பதில் சந்தேகமே இல்லை. அல்லது, நமது இன்றைய பொருளாதார நிலைமைகளின் கீழ், தனிப்பட்ட முதலாளித்துவ தொழில் நிறுவனங்களை (தேசிய மயமாக்கப்பட்ட நிலத்தின் அடிப்படையில் மாத்திரமே, தொழிலாளி வர்க்க அரசின் கட்டுப்பாட்டின் கீழ் மாத்திரமே) முரணற்ற சோஷலிஸ்டு ரக தொழில் நிறுவனங்களோடு (உற்பத்திச் சாதனங்களும், தொழில் நிறுவனங்கள் கட்டப்பட்டிருக்கும் நிலமும், தொழில் நிறுவனங்கள் முழுமையும் அரசுக்குச் சொந்தமாக இருக்கின்றன) நாம் இணைக்கும்போது, மூன்றாவது ரக தொழில் நிறுவனம், அதாவது, கூட்டுறவுச் சங்கங்கள் என்ற பிரச்சினை எழுகிறது என்பதில் சந்தேகமே இல்லை; இவை மற்றவைகளிலிருந்து அடிப்படையில் மாறுபட்டு சுயேச்சையான ஒரு ரகத்தைச் சேர்ந்தது என்று முன்பு கருதப்படவில்லை. தனிஉடமை முதலாளித்துவத்தின் கீழ், கூட்டுத் தொழில் நிறுவனங்கள் தனிப்பட்ட தொழில் நிறுவனங்களிலிருந்து மாறுபடுவதுபோல், கூட்டுறவுத் தொழில் நிறுவனங்கள் முதலாளித்துவ தொழில் நிறுவனங்களிலிருந்து மாறுபடுகின்றன. அரசு முதலாளித்துவத்தின் கீழ், கூட்டுறவுத் தொழில் நிறுவனங்கள் அரசு முதலாளித்துவ தொழில் நிறுவனங்களிலிருந்து மாறுபடுகின்றன. ஏனெனில், முதலாவதாக, அவை தனிப்பட்ட தொழில் நிறுவனங்களாக இருக்கின்றன; இரண்டாவதாக, அவை கூட்டுத் தொழில் நிறுவனங்களாகவும் இருக்கின்றன. நமது இன்றைய அமைப்பின் கீழ், கூட்டுறவு தொழில் நிறுவனங்கள் தனிப்பட்ட முதலாளித்துவ தொழில் நிறுவனங்களிலிருந்து மாறுபடுகின்றன; ஏனெனில், அவை கூட்டுத் தொழில் நிறுவனங்களாக இருக்கின்றன; ஆனால், அவைகள் கட்டப்பட்டிருக்கும் நிலமும், உற்பத்திச் சாதனங்களும் அரசுக்கு; அதாவது தொழிலாள வர்க்கத்திற்குச் சொந்தமாக இருந்தால், சோஷலிஸ்டு தொழில் நிறுவனங்களிலிருந்து அவை மாறுபடவில்லை.

கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றி விவாதிக்கும் போது, இந்தச் சூழ்நிலைமைப் போதமான அளவு கணக்கில் எடுத்துக் கொள்ளப் படவில்லை. நமது அரசியல் அமைப்பின் விசேஷ அம்சங்கள் காரணமாக, நமது கூட்டுறவு சங்கங்கள் முற்றிலும் தனிச் சிறப்புத் தன்மையைப் பெறுகின்றன என்ற உண்மை மறுக்கப்படுகிறது

குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ச்சியடையாமல் இருக்கும் சலுகைகளை நாம் நீக்கிவிட்டால், நமது நிலைமைகளின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் அநேகமாக எப்போதும் முழுமையாக சோஷலிஸத்தோடு ஒட்டி இருக்கின்றன.

நான் என்ன அர்த்தம் கொள்கிறேன் என்பதை நான் விளக்கிக் கூறுகிறேன். ராபர்ட் ஓவென் முதற்கொண்டு, பழைய கூட்டுறவாளர்களின் திட்டங்கள் ஏன் கற்பனைத் தன்மை வாய்ந்ததாக இருந்தன? ஏனெனில், வர்க்கப் போராட்டம், தொழிலாள வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது, சுரண்டும் வர்க்கத்தின் ஆட்சியை வீழ்த்துவது போன்ற அடிப்படையான பிரச்சினைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், நடைமுறையில் உள்ள சமுதாயத்தை சோஷலிஸ்டு சமுதாயமாக சமாதான ரீதியில் மாற்றி அமைக்கலாம் என்று அவர்கள் கனவு கண்டார்கள். அதனால்தான், இந்தக் "கூட்டுறவு சங்க" சோஷலிஸமானது, முற்றிலும் கற்பனைத் தன்மை வாய்ந்தது, என்று நாம் கருதியது சரியானதேயாகும்; பொதுமக்களை கூட்டுறவுச் சங்கங்களில் அமைப்பதன் மூலமாக மாத்திரம், வர்க்க எதிரிகளை வர்க்க ஒத்துழைப்பாளர்களாக மாற்றுவதும், வர்க்கப்போராட்டத்தை வர்க்க சமாதானமாக (வர்க்க அமைதி என்று அழைக்கப்படுவதை) மாற்றுவதும் கனவுலகில் உலாவுகிற, பொதுப்படையான கனவு என்று கருதினோம்.

சந்தேகத்திற்கு இடமின்றி, இன்றைய காலகட்டத்தின் அடிப்படையான கடமையின் கண்ணோட்டத்திலிருந்து, நமது கருத்து சரியானதேயாகும்; ஏனெனில, அரசியல் அதிகாரத்திற்காக ஒரு வர்க்கப் போராட்டம் இல்லாமல் சோஷலிஸத்தை அமைக்கவே முடியாது.

ஆனால், நிலைமைகள் மாறியிருப்பதைப் பார்க்கவேண்டும்; இப்பொழுது, அரசியல் அதிகாரம் தொழிலாள வர்க்கத்தின் கையில் இருக்கிறது. இப்பொழுது, சுரண்டுகிறவர்களின் அரசியல் அதிகாரம் வீழ்த்தப்பட்டிருக்கிறது; உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் தொழிலாள வர்க்கத்திற்குச் சொந்தமாக இருக்கின்றன. (சலுகைகள் என்ற வடிவத்தில் நிபந்தனையின் மேலும், சில குறிப்பிட்ட காலத்திற்கும் சுரண்டுகிறவர்களுக்குத் தொழிலாளர்களின் அரசு தானாகவே விட்டுக் கொடுத்திருப்பதைத் தவிர மற்றவை அனைத்தும்).

நமக்குக், கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியானது (மேலே குறிப்பிடபபட்டுள்ளது போல் "சிறிய அளவில்" விதி விலககோடு)

சோஷலிஸத்தின் வளர்ச்சியோடு முழுதும் இணக்கமான நிலையைக் காட்டுகிறது என்று நாம் இப்பொழுது கூறுவதற்கு நமக்கு உரிமை உண்டு; அதே சமயத்தில், சோஷலிஸம் சம்பந்தமாக நமது முழுக் கண்ணோட்டத்திலும் தீவிரமான மாறுபாடு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். தீவிரமான மாறுபாடு இதுதான்: அதாவது, முன்பெல்லாம், அரசியல் போராட்டத்திலும், புரட்சியிலும், அரசியல் அதிகாரத்தை வெல்வதிலும், இன்னும் இவை போன்றவைகளிலும் முக்கியமான அழுத்தத்தைக் கொடுத்தோம்; அவ்வாறு அழுத்தம் கொடுக்கவேண்டியிருந்தது. இப்பொழுது அழுத்தம் மாறிக் கொண்டிருக்கிறது; அதாவது சமாதான பூர்வமான, ஸ்தாபன அமைப்பு பற்றி "கலாச்சார" பணிகளின்பால் மாறிக் கொண்டிருக்கிறது. நமது சர்வதேச உறவுகள் இல்லையென்றால், உலக ரீதியில் நமது நிலையைப் பாதுகாப்பதற்காக நாம் போராட வேண்டிய அவசியம் இல்லையென்றால், அழுத்தம் கல்வியின்பால் மாறிக்கொண்டிருக்கிறது என்று நான் சொல்ல வேண்டிருக்கும். ஆயினும், அதை நாம் ஒருபுறம் வைத்துவிட்டு, உள்நாட்டு பொருளாதார உறவுகளில் மாத்திரம் நாம் நிற்போமேயானால், நமது வேலையில் அழுத்தம் நிச்சயமாக கல்வியின்பால் மாற்றப் படும்.

இரண்டு முக்கியமான கடமைகள் நமக்கு முன்னால் இருக்கின்றன; இவை ஒரு சகாப்தமாக அமைகின்றன; நமது அரசு இயந்திரத்தைத் திருத்தி அமைக்கவேண்டும்; இது முற்றிலும் பயனற்றதாக இருக்கிறது; இதற்கு முந்திய சகாப்தத்திலிருந்து அதை அப்படியே முழுசாக நாம் எடுத்துக் கொண்டோம்; போராட்டத்தின் கடந்த ஐந்தாண்டு கால கட்டத்தில் அதை நாம் தீவிரமாகத் திருத்தி அமைக்கவில்லை, அவ்வாறு செய்யவும் முடியவில்லை. நமது இரண்டாவது கடமை என்னவென்றால், விவசாயிகளிடையே கல்வி போதிப்பதாகும், விவசாயிகளிடையே கல்விபோதிப்பதன் பொருளாதார நோக்கம் என்னவென்றால், பின்னால் கூறப்பட்டவர்களை கூட்டுறவுச் சங்கங்களில் அமைப்பதே யாகும். விவசாயிகள் அனைவரும் கூட்டுறவுச் சங்கங்களில் அமைக்கப்பட்டிருந்தால், நாம் இப்பொழுது இரண்டு கால்களையும் சோஷலிஸத்தின் மண்ணின் மேல் வைத்து, நின்று கொண்டிருப்போம். ஆனால், விவசாயிகள் அனைவரையும் கூட்டுறவுச் சங்கங்களில் அமைக்க வேண்டுமானால், முதலில் விவசாயிகளிடையே காலாச்சார மட்டம் இருக்கவேண்டும் (பெரும்பாலான மக்களாக இருப்பதால், திட்டவட்டமாக விவசாயிகளிடையே) உண்மையில், ஒரு கலாச்சார புரட்சி இல்லாமல் இதை அடையவே முடியாது.

போதிய அளவு கலாச்சாரத் துறையில் வளர்ச்சியடையாத ஒரு நாட்டில், சோஷலிஸத்தைக் கட்டும் பணியை மேற் கொண்டிருப்பது கண் மூடித்தனமான முரட்டுத்தனமாகும் என்று நமது எதிர்ப்பாளர்கள் திரும்பத் திரும்ப நம்மிடம் கூறுகிறார்கள். ஆனால், தத்துவத்தால் எடுத்துரைக்கப்பட்டதன் எதிர் முனையிலிருந்து (எல்லா வகையான பண்டிதர்களும் கூறிய தத்துவம்) நாம் துவங்கியிருப்பதால், அவர்கள் தவறாக அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள்; எவ்வாறெனில், நமது நாட்டில், கலாச்சாரப் புரட்சிக்கு முன்பு அரசியல், சமூகப் புரட்சி நடைபெற்றது; ஆயினும், அந்தக் கலாச்சாரப் புரட்சி இப்பொழுது முன்னால் இருக்கிறது.

இந்தக் கலாச்சாரப் புரட்சியானது, நமது நாட்டைப் பூரணமாக ஒரு சோஷலிஸ்டு நாடாக மாற்றுவதற்கு இப்பொழுது போதுமானதாகும்; ஆனால், அது சுத்தமான ஒரு கலாச்சார (ஏனெனில் நாம் கல்வி அறிவு இல்லாதவர்களாக இருக்கிறோம்) பொருளியல் (ஏனெனில், கலாச்சாரத் துறையில் வளர்ச்சியடைந்தவர்களாக இருக்கவேண்டுமானால், உற்பத்திச் சாதனங்களிலும் குறிப்பிட்ட அளவு வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும்; ஒரு குறிப்பிட்ட அளவு பொருளியல் அடிப்படையும் வேண்டும்) தன்மை கொண்ட ஏராளமான கஷ்டங்களை நமக்கு முன்னால் வைக்கிறது.

ஜனவரி, 6, 1923
"பிராவ்தாவில்"
முதல் தடவையாக
எண் 115, 116-ல்
மே மாதம் 26, 27-ல்
1923-ல் பிரசுரிக்கப்பட்டது.
கையொப்பம் என். லெனின்

திரட்டப்பட்ட நூல்கள்.
தொகுப்பு-33
பக்கம்.467-75.

# நமது புரட்சி

## (என். ஸுக்கனோவின் குறிப்புக்களுக்குச் சேர்க்கை)[124]

## I

புரட்சி சம்பந்தமாக ஸுக்கானோவ் எழுதியிருக்கும் “குறிப்புக்களை” அண்மையில் வேகமாகப் படித்துப் பார்த்தேன். நமது சிறு முதலாளித்துவ ஜனநாயக வாதிகள் அனைவரதும், இரண்டாவது அகிலத்தின் வீரர்கள் அனைவரதும் கல்விச் செருக்கைத்தான் அது அதிகமாக மனதில் பதிய வைக்கிறது. அவர்கள் அனைவரும் மிகவும் மன வலுவற்றவர்கள் என்ற உண்மை ஒருபுறமிருக்க, ஜெர்மானிய முன் மாதிரியிலிருந்து இம்மியளவாவது மாறுபடுதல் என்ற நிலை ஏற்பட்டால், அவர்களில் தலை சிறந்தவர்கள் கூட ஒதுங்குதல் மூலமாகத் தங்களுக்கு வலுவூட்டிக் கொள்கிறார்கள் என்பது ஒரு புறமிருக்க, எல்லா சிறு முதலாளித்துவ ஜனநாயக வாதிகளுக்கும் பொதுவாக இருக்கிற இந்தக் குணாம்சங்கள் ஒரு புறமிருக்க, புரட்சி நடைபெற்ற காலகட்டம் முழுவதும் அவர்கள் இதை அபரிமிதமாக வெளிப்படுத்தினார்கள் என்பது ஒரு புறமிருக்க, ஒருவன் மனதில் ஆழமாகப் பதிவது என்னவென்றால், அடிமைத் தனமாக கடந்த காலத்தைப் போலியாக நடிப்பதுதான்.

அவர்கள் அனைவரும் தங்களை மார்க்ஸிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்கிறார்கள்; ஆனால், அவர்களுடைய மார்க்ஸிஸம் சம்பந்தப்பட்ட கருத்தானது பொருத்தமற்ற முறையில் கல்விச் செருக்குடையதாக இருக்கிறது. மார்க்ஸிஸத்தில் தீர்மானிக்கும் ஆற்றலுள்ளதை, அதாவது அதன் புரட்சிகரமான தர்க்க இயலைப் புரிந்து கொள்ள முற்றிலும் தவறி விட்டார்கள். புரட்சி நடைபெறும் கால கட்டத்தில் அதிகப்பட்சம் நெளிவு சுளிவுத் தன்மையை[125]க் கடைப்பிடிக்க வேண்டும் என்று தெளிவான மார்க்ஸின் அறிக்கையைக் கூடப் புரிந்து கொள்ள அவர்கள் அறவே தவறி விட்டார்கள்; மார்க்ஸ் தமது கடிதங்களில் ஒன்றில் 1856-ல் என்று நினைக்கிறேன். மார்க்ஸ் குறிப்பிட்டிருந்த அறிக்

கையை கூட, அதாவது ஒரு புரட்சிகரமான நிலைமையைச் சிருஷ்டிக்கக் கூடிய ஒரு விவசாயிகளின் யுக்தத்தோடு, ஜெர்மனியில், தொழிலாள வர்க்க இயக்கத்தை இணைக்க வேண்டும்[126] என்ற அறிக்கையைக் கூட அவர்கள் கவனிக்கத் தவறிவிட்டார்கள். அவர்கள் இந்தத் தெளிவான அறிக்கையைக்கூடத் தவிர்த்து விட்டு, சூடான பால் உள்ள ஒரு பாத்திரத்தைப் பூனை சுற்றிச் சுற்றி வருவதுபோல், அவர்கள் அதைச் சுற்றிச்சுற்றி நடக்கிறார்கள்.

அவர்கள் கோழைத்தனமான சீர்திருத்த வாதிகள் என்பதை அவர்கள் நடந்து கொள்ளும் முறை காட்டிக் கொடுக்கிறது; அவர்கள் முதலாளித்துவத்தோடு உறவை முறித்துக் கொள்வது ஒரு புறமிருக்கட்டும், அதிலிருந்து இம்மியளவு மாறுபடுவதற்குக் கூடப் பயப்படுகிறார்கள்; அதே சமயத்தில், அவர்களுடைய கோழைத்தனத்தை பைத்தியம் பிடித்த கருத்தில்லாத ஆனால் அழகான பேச்சாலும், தற்பெருமை பேசுவதாலும் மூடிமறைக்கிறார்கள். ஆனால் முற்றிலும் தத்துவரீதியான கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்பொழுது அவர்கள் அனைவரும் ஆழமாக எதை மனத்தில் பதிய வைக்கிறார்கள் என்றால், கீழ்க்கண்ட மார்க்ஸீயக் கருத்தை அவர்கள் புரிந்து கொள்ளும் சக்தியுள்ளவர்களாக இருப்பதுதான். மேற்கு ஐரோப்பாவில் முதலாளித்துவமும், முதலாளித்துவ ஜனநாயகமும் ஒரு திட்டவட்டமான வளர்ச்சிப் பாதையைக் கடைப்பிடித்து வருவதை இதுவரையிலும் அவர்கள் பார்த்திருக்கிறார்கள்; வேண்டிய மாறுதல்களுடன் மாத்திரம், குறிப்பிட்ட சில திருத்தங்களுடன் மாத்திரம் (உலக சரித்திரத்தின் பொதுவான வளர்ச்சியின் கண்ணோட்டத்திலிருந்து பொருட்படுத்தக்கூடிய அளவில் இல்லை) ஒரு முன்மாதிரி என்ற நிலையில் இந்தப் பாதையை எடுத்துக் கொள்ளலாம் என்பதை அவர்களால் சித்தரிக்கவே முடியாது.

முதலாவதாக—முதல் ஏகாதிபத்திய உலக யுத்தத்தோடு சம்பந்தப்பட்ட புரட்சி யுத்தத்திலிருந்தே, அதன் விளைவாக இத்தகைய ஒரு புரட்சி புதிய அம்சங்களை அல்லது புதிய உரு மாறுபாடுகளையும் வெளிப்படுத்தக் கடமைப்பட்டுள்ளது; ஏனெனில், இத்தகைய ஒரு நிலைமையில் இத்தகைய ஒரு யுத்தத்தை உலகம் இதுவரையிலும் கண்டதே இல்லை. யுத்தத்திற்குப் பிறகு, அதிகமாக செல்வத்தைப் பெற்றிருக்கும் நாடுகளில் உள்ள முதலாளிகள் இன்று வரையிலும் "இயல்பான" முதலாளித்துவ உறவுகளை மீண்டும் நிலைநாட்ட முடியாமல் இருப்பதை நாம் காண்கிறோம். இருப்பினும், நமது சீர்திருத்தவாதிகள்—புரட்சிக் காரர்களாக நடிக்கும் சிறு முதலாளிகள்—இயல்பான முதலாளித்துவ உறவுகள்

தான் எல்லை என்று (அந்த அளவுதான் போக முடியும், அதற்கு மேல் போக முடியாது என்று) நம்மவர்கள், இன்னும் நம்புகிறார்கள். அவர்களுடைய "இயல்பான" கருத்து கூட மிகவும் குறுகியதாகவும், மாறாமல் எப்போதும் ஒரே மாதிரியாக வும் இருக்கிறது.

இரண்டாவதாக, உலக சரித்திரத்தின் வளர்ச்சியானது ஒட்டு மொத்தமாக பொதுவான விதிகளைப் பின்பற்றினாலும் கூட, வளர்ச்சியின் சில குறிப்பிட்ட கட்டங்கள் இந்த வளர்ச்சியின் வடிவம், அல்லது தொடர் வரிசையில் சிறப்பியல்புகளை வெளிப் படுத்தலாம் என்பது எந்த வகையிலும் தவிர்க்கப்படவில்லை, அதற்கு மாறாக அனுமானிக்கப்படுகிறது என்ற கருத்திற்கு அவர்கள், முற்றிலும் அன்னியர்களாக இருக்கிறார்கள். உதாரணமாக, நாகரிகமடைந்த நாடுகளுக்கும், நாகரிக கோளப் பாதைக்கு முதல் தடவையாக இந்த யுத்தம் திட்டவட்டமாகக் கொண்டு வந்திருக்கும் நாடுகளுக்கும் இடையே உள்ள எல்லைக் கோட்டில் — ஐரோப்பாவைச் சேராத நாடுகள், எல்லா கிழக்கத்திய நாடுகள்—ரஷ்யா நிற்பதால், அது சில சிறப்பியல்புள்ள அம்சங்களை வெளிப்படுத்த முடியும், நிச்சயமாக வெளிப்படுத்தியிருக்கிறது என்பதுகூட அவர்களுக்குப் புலப்படவில்லை; உலக வளர்ச்சியின் பொதுப் பாதையை ஒட்டியே இவை இருக்கின்றன என்பது உண்மையே என்றாலும்கூட, அவை மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற புரட்சிகளிலிருந்து, ரஷ்யாவில் நடைபெற்ற புரட்சியை மாறுபடுத்திக் காட்டு கின்றனர். கிழக்கத்திய நாடுகளை நோக்கி புரட்சி செல்லும் பொழுது, சில குறிப்பிட்ட அரைகுறையான புது மாறுதல்களை அவை புகுத்துகின்றன.

மேற்கு ஐரோப்பிய சமூக ஜனநாயகம் வளர்ச்சியடைந்த காலத்தில் மனப்பாடமாக அவர்கள் கற்றுக் கொண்டிருக்கும் வாதமானது, உதாரணமாக, எல்லையற்ற முறையில் மாறாமல் ஒரே மாதிரியாகவே இருக்கிறது; அதாவது, சோஷலிஸத்திற்கு நாம் இன்னும் பக்குவமடையவில்லை என்றும், அவர்களில் சில குறிப்பிட்ட "படித்த" கனவான்கள் கூறியதுபோல், நமது நாட்டில் சோஷலிஸத்திற்கான பொருளாதார எதார்த்த நிலைமைகள் இன்னும் ஏற்படவில்லை என்றும் வாதாடுகிறார்கள். பின்வருமாறு கேட்டதற்கு அவர்கள் சிந்திக்கவே இல்லை; முதல் ஏகாதிபத்திய யுத்தம் நடைபெறும்போது சிருஷ்டிக்கப்பட்டது போன்ற புரட்சி கரமான ஒரு நிலைமையைத் தாங்களாகவே கண்டார்களே அந்த மக்களைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்? நிலைமை நம்பிக்கையைத்

தரக்கூடியதாக இல்லாததால் தூண்டப்பட்டு, நாகரிகத்தின் வளர்ச்சியை மேலும் வளர்த்துக் கொண்டு போவதற்கான நிலைமைகளை ஏற்படுத்தும் சில வாய்ப்புக்களைக் குறைந்த பட்சம் கொடுக்கலாம் என்று நினைத்து ஒரு போராட்டத்தில் ஈடுபட்டது, ஏதோ அசாதாரணமான நிகழ்ச்சியா?

"ரஷ்யாவின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியானது சோஷலிஸத்தைச் சாத்தியமாக்கக் கூடிய மட்டத்தை இன்னும் அடையவில்லை." ஸுக்கானேவ் உள்பட, இரண்டாவது அகிலத்தின் வீரர்கள் அனைவரும் இந்த அறுதியுரையையே தம்பட்டமடிக்கிறார்கள். தர்க்கத்திற்கிடமில்லாத இந்த அறுதியுரையை ஆயிரம் தொனியில் பாடுகிறார்கள்; நமது புரட்சியின் இறுதியான கோட்பாடு இது என்று நினைக்கிறார்கள்.

ஆனால், ஏகாதிபத்திய உலகயுத்தத்தில் ரஷ்யாவை ஈடுபடுத்திய, செல்வாக்குள்ள மேற்கு ஐரோப்பாவில் அநேகமாக ஒவ்வொரு நாட்டையும் ஈடுபடுத்திய, கிழக்கில் பக்குவமடைந்து கொண்டிருந்த, அல்லது ஏற்கெனவே ஓரளவு துவங்கப்பட்டிருந்த புரட்சிக்கு ஒரு சாட்சியாக ரஷ்யாவை மாற்றிய நிலைமையானது சூழ்நிலைமைகள் தோன்றுவதற்கு இடமளித்தது; அது, ரஷ்யாவையும், அதன் வளர்ச்சியையும் ஒரு நிலையில் வைத்தது; 1856-ல் வேறு மார்க்ஸீய வாதிகள் எவரும் அல்ல, மார்க்ஸே பிரஷ்யாவுக்கு எதிர் காலத்தில் சாத்தியமானது என்று ஆலோசனை கூறியதை, அதாவது தொழிலாளர் இயக்கத்தோடு, "விவசாயிகளின் யுத்தத்தை" இணைக்கவேண்டும் என்று ஆலோசனை கூறியதை நாம் திட்டவட்டமாக அடைவதற்கு உதவி செய்யவில்லையா?

பூரணமாக நம்பிக்கை தராத நிலைமையானது, தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியவர்களின் முயற்சியைப் பத்துமடங்கு அதிகரிக்கும்படி தூண்டி, மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து, மாறுபட்ட வழியில் நாகரிகத்தின் அடிப்படையான முன் தேவைகளைச் சிருஷ்டிப்பதற்கு நமக்கு வாய்ப்பைக் கொடுக்க வில்லையா? உலக சரித்திரத்தின் வளர்ச்சியின் பொதுவான பாதையை அது மாற்றி விட்டதா? உலக சரித்திரத்தின் பொதுவான வளர்ச்சிப் பாதையில் இழுக்கப்பட்டிருக்கிற, அல்லது இழுக்கப்பட்டிருந்த எல்லா நாடுகளின் அடிப்படையான வர்க்கங்களுக்கிடையே உள்ள அடிப்படையான உறவுகளை அது மாற்றிவிட்டதா?

சோஷலிஸத்தை நிர்மாணிப்பதற்கு ஒரு திட்டவட்டமான கலாச்சார மட்டம் தேவைப்பட்டால் (அந்தத் திட்டவட்டமான 'கலாச்சார மட்டம்" என்ன என்பதை ஒருவரும் துல்லியமாகக்

கூறமுடியாது; ஏனெனில் ஒவ்வொரு மேற்கு ஐரோப்பிய நாட்டிலும் அது வெவ்வேறு விதமாக இருக்கிறது) ஒரு புரட்சிகரமான வழியில் அந்தத் திட்டவட்டமான கலாச்சார மட்டத்திற்கான முன் தேவைகளை முதலில் பெறுவதன் மூலமாக நாம் துவங்கிப், பின்னர் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோர் தம் சர்க்காரின் உதவியோடும், சோவியத் அமைப்பின் உதவியோடும் மற்ற நாடுகளை முந்திக் கொள்வதை நோக்கி ஏன் போகக் கூடாது?

ஜனவரி, 16, 1923.

# II

சோஷலிஸத்தை நிர்மாணிப்பதற்கு நாகரிகம் தேவை என்று நீங்கள் கூறுகிறீர்கள். ரொம்ப நல்லது. ஆனால், நமது நாட்டில் நிலச்சுவான்தார்களையும், ரஷ்ய முதலாளிகளையும் வெளியேற்றுவது போன்ற நடவடிக்கைகள் மூலமாக நாகரிகத்தின் முன் தேவைகளை முதலில் சிருஷ்டித்து, அதற்குப் பிறகு சோஷலிஸத்தை நோக்கிப் போக ஏன் துவக்கக் கூடாது? எங்கு, எந்தப் புத்தகத்தில், பழக்கமான சரித்திர பூர்வமான நிகழ்ச்சிகளின் வரிசைத் தொடர்களின் மாறுபாடுகள் அனுமதிக்க முடியாதது; சாத்தியமற்றது என்று படித்திருக்கிறீர்கள்?

நெப்போலியன் கூறியதை நான் பொதுவாக அர்த்தப்படுத்திச் சொல்லுகிறேன்: அதாவது "முதலில் கடுமையான போராட்டத்தில் ஈடுபடு; பிறகு என்ன நேரிடுகிறது என்பதைப் பார்" ஆம், நாங்கள் 1917-ல் அக்டோபரில் கடுமையான போராட்டத்தில் முதலில் ஈடுபட்டோம்; அதற்குப் பிறகு வளர்ச்சியின் இத்தகைய விரிவான விவரங்களைப் பார்த்தோம் (உலக சரித்திரத்தின் நோக்கு நிலையிலிருந்து பார்த்தால், அவை நிச்சயமாக விரிவான விவரங்களே): அதாவது, பிரெஸ்ட் சமாதானம்,[127] புதிய பொருளாதாரக் கொள்கை[128] இன்னும் இவை போன்றவைகளைப் பார்த்தோம். இப்பொழுது, பெரும்பாலும் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதில் சந்தேகத்திற்கே இடமில்லை.

நமது ஜுக்கானோவ்கள்—மேலும் வலது சாரி நிலையில் இன்னும் இருக்கும் சமூக ஜனநாயக வாதிகளைக் குறிப்பிட வேண்டிய அவசியமே இல்லை—புரட்சிகளை வேறு எந்த வழியிலும் உண்டாக்க முடியாது என்பதைக் கனவு கூடக் காண முடியாது. நமது ஐரோப்பிய உயர் நாட்டமற்றவர்கள் கிழக்கத்திய நாடுகளில் இனிமேல் நடக்க விருக்கும் புரட்சிகள்—அவைகளில் மேலும் ஏராளமாக ஜனத்தொகையும், சமூக நிலைமைகளில் ஏராளமான மாறுபாடுகளும் இருக்கின்றன—ரஷ்யப் புரட்சியைக் காட்டிலும் அதிகமான தனி மாறுபாடுகளைக்கூட வெளிப்படுத்தும் என்பதில் சந்தேகமே இல்லை.

காட்ஸ்கியப் பாதை பற்றி எழுதப்பட்ட ஒரு பாட புத்தகம் அதன் காலத்தில் மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்பதைக்

கூறவேண்டிய அவசியமே கிடையாது. ஆனால், அது அவ்வாறு இருந்த போதிலும் கூட, அதற்குப் பிந்திய உலக சரித்திரத்தின் வளர்ச்சியின் எல்லா வடிவங்களையும் அது முன் கூட்டியே பார்த்தது என்ற கருத்தை மாற்றவேண்டிய காலம் வந்துவிட்டது. அவ்வாறு யாராவது நினைப்பார்களேயானால், அவர்கள் முட்டாள்களே என்று கூறுவது காலத்திற்குப் பொருத்தமானதாக இருக்கும்.

ஜனவரி 17, 1923.
"பிராவ்தா" வில் —
எண்— 117-ல்
1923-ல் மே மாதம்
3 -ல் பிரசுரிக்கப்பட்டது.
கையொப்பம்—லெனின்.

திரட்டப்பட்ட நூல்கள் —
தொகுப்பு — 33 —
பக்கம் 476-80

# குறிப்புக்கள்

1. சமூக ஒப்பந்தம்:- ழேன் ழீக்ஸ் ரூஸோவின் முக்கியமான நூல்களில் ஒன்று சமூக ஒப்பந்தம், அல்லது அரசியல் கோட்பாடுகள் என்பது அதன் முழுமையான தலைப்பு. அதன் முக்கியமான கருத்து என்னவென்றால், ஒவ்வொரு சமூக அமைப்பும், மனிதர்களுக்கு இடையே ஏற்படுத்திக் கொள்ளும் சுயேச்சையான உடன்படிக்கை, அல்லது ஒப்பந்தம் ஆகியவற்றின் விளைவாக இருக்க வேண்டும் என்பதுதான். அடிப்படையிலேயே கருத்து முதல் வாதத்தை ஆதாரமாகக் கொண்டிருந்தாலும் கூட, "சமூக ஒப்பந்தம்" என்ற தத்துவமானது பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சி நடைபெறப்போகும் தருவாயில் பதினெட்டாவது நூற்றுண்டில் ஒரு புரட்சிகரமான பாத்திரத்தை வகிக்க வேண்டியிருந்தது; ஏனெனில், சமத்துவம் வேண்டும், நிலப் பிரபுத்துவ சலுகைகளை ஒழிக்க வேண்டும், ஒரு முதலாளித்துவ குடியரசை அமைக்க வேண்டும் என்ற முதலாளித்துவத்தின் கோரிக்கையை அது தெரிவித்தது. பக்கம் 12

2. "பிரென்ஸ்டீனும் பொருள் முதல் வாதமும்" என்ற பிளக்கானேவின் கட்டுரையைக் குறிப்பிடுகிறுர்; "டீ நியூ ஜீட்"ல், எண் 44-ல் (1897-98) இது பிரசுரிக்கப்பட்டது.

"டீ நியூ ஜீட்" என்ற பத்திரிகையானது ஜெர்மானிய சமூக ஜனநாயகக் கட்சியின் தத்துவ ரீதியான பத்திரிக்கை. 1883-லிருந்து 1923-வரையிலும் ஸ்டட்கார்ட்டில் பிரசுரிக்கப்பட்டது. 1917 ஆம் ஆண்டு வரையிலும் கார்ல் காட்ஸ்கி அதன் ஆசிரியராக இருந்தார். அதற்குப் பிறகு ஹெயின்ரிச்குனேவ் ஆசிரியராக இருந்தார். ப. 20

3. ஜெர்மானிய சமூக ஜனநாயகக் கட்சியின் ஹானேவர் காங்கிரஸ் 1899இல் அக்டோபர் 9-14 வரையிலும் நடைபெற்றது. நிகழ்ச்சி நிரலில் அடங்கியிருந்த முக்கியமான

விஷயம் பற்றி அதாவது "கட்சியின் அடிப்படையான கருத்துக்கள் மீதும், செயல் தந்திரங்கள் மீதும் தாக்குதல்" என்பது பற்றி பேசினுர். அவருடைய உரையானது "மார்க்சியக் கருத்துக்களைப் பேணிப் பாதுகாத்து நிற்பதற்கு ஒரு முன்மாதிரியாகவும், தொழிலாளர்களின் கட்சியின் உண்மையான சோஷலிஸ்டு தன்மைக்காகப் போராடுவதற்கும் ஒரு முன்மாதிரியாகவும்" நீண்ட காலம் நீடித்து நிலைத்திருக்கும் என்று லெனின் எழுதினுர் (வி. இ. லெனினின் தொகுக்கப்பட்ட நூல்கள், தொகுப்பு 19இல், பக்கம்-300இல் பார்க்கவும்). இந்தக் காங்கிரஸ் பிரென்ஸ்டீனின் திரிபுவாதக் கருத்துக்களுக்கு விரோதமாக வாக்களித்து, அதை முறியடித்தது! ஆனுல், விரிவான விமர்சனத்திற்கு அவைகளை ஆளாக்கத் தவறியது. ப. 20

4 "ரபோச்சயா கஜட்டா" (தொழிலாளர் கெஜெட்) என்பதையே இங்குக் குறிப்பிடுகிருர். 1898இல் மே மாதம் 1 முதல் 8 வரையிலும் (13-15) மின்ஸ்கில் சட்ட விரோதமாக நடைபெற்ற ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் முதலாவது காங்கிரசில் கட்சியின் அதிகார பூர்வமான பத்திரிகையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. காங்கிரசுக்குப் பிறகு, அச்சடிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த அதன் முதல் பிரதி பிரசுரிக்கப்படவில்லை; காரணம், மத்தியக் குழுவின் உறுப்பினர்களும், ஆசிரியர்களும் கைது செய்யப்பட்டார்கள்; போலீசார் அச்சகத்தையும் அழித்து விட்டார்கள். 1899இல் மீண்டும் அந்தப் பத்திரிகையைப் பிரசுரிப்பதற்கு ஒரு முயற்சி நடைபெற்றது; லெனினை அதற்கு ஆசிரியராக இருக்கும்படியும் பின்னர் அதற்குக் கட்டுரைகளை எழுதும்படியும் ஆசிரியர்கள் குழாம் லெனினை அழைத்தது. லெனினும் "நமது செயல் திட்டம்" என்ற கட்டுரையையும், அத்துடன் வேறு சில கட்டுரைகளையும், ஒரு கடிதத்தையும் ஆசிரியர் குழுவிற்கு அனுப்பினுர்; ஆனுல் மீண்டும் பத்திரிகையைத் தொடங்கும் முயற்சி தோல்வியடைந்தது: அந்தக் கட்டுரைகளைப் பின்னர் பிரசுரிக்கவே இல்லை. ப. 21

5. "ரபோச்சயாமிஸில்" (தொழிலாளர்களின் எண்ணம்): பொருளாதார வாதிகளின் பத்திரிகை; 1897இல் அக்டோபர் மாதத்திலிருந்து, 1902இல் டிசம்பர் மாதம் வரையிலும் பிரசுரிக்கப்பட்டது. அதன் 16 பிரதிகளில்

1 முதல் 2 வரை ஸெண்ட்பீட்டர் ஸ்பர்க்கிலும், 3 முதல் 11 வரை பெர்லினிலும், 12 முதல் 15 வரை வார்சா விலும், 16 வது பிரதியும் கூட் வெளிநாட்டில் பிரசுரிக்கப் பட்டன. ப. 21

6. 1895-முதல் 1896-வரையிலும் ஸெண்ட்பீட்டர்ஸ்பர்க் கில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களைப் பெரும்பாலும் பஞ்சாலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களையே லெனின் குறிப்பிடுகிருர். இந்த வேலை நிறுத்தங்கள் மாஸ்கோவிலும், மற்ற ரஷ்ய நகரங்களிலும் தொழிலாள வர்க்கத்தின் இயக்கத்தை ஊக்குவித்தன; இவை பாக்டரி சட்டங்களை முன்னதாகவே திருத்தும்படி சர்க்காரை நிர்ப்பந்தித்தன; மேலும், தொழில் நிறுவனங்களில் ஒரு நாள் வேலை நேரத்தை $11\frac{1}{2}$ மணி நேர வேலையாகக் குறைக்கும் சட்டத்தை 1897இல் ஜுன் 2இல் (14) நிறை வேற்றும்படி சர்க்காரை நிர்ப்பந்தித்தன. ப. 23

7. "நரோடிஸம்" — 1860ஆம் ஆண்டுகளின் கடைசி காலத்தில் ரஷ்ய புரட்சிகரமான இயக்கத்தில் தலை தூக்கிய ஒரு சிறு முதலாளித்துவ கருத்துப் போக்கு ரஷ்யாவில் முதலாளித்துவம் பலகீனமாக இருக்கிறது என்றும், அதனால்தான் ரஷ்ய பாட்டாளி மக்கள் வளர்வதை எதிர்பார்க்க கூடாது என்றும் நரோட் னிக்குகள் அடித்துக் கூறினார்கள். விவசாயிகளைத்தான் புரட்சியின் முக்கியமான சக்தியாக அவர்கள் கருதினார்கள்; கிராமக் கம்யூன்களைச் சோஷலிஸத்தின் கருவாகக் கருதினார்கள். அவர்களுடைய சோஷலிஸம் விஞ்ஞான ரீதியாக இல்லை. எவ்வாறெனில், சமூக வளர்ச்சியின் எதார்த்த விதிகளின் அடிப்படையில் அது அமையவில்லை. நரோட்னிக்குகள் சரித்திரத்தில் வர்க்கப் போராட்டத்தின் பாத்திரத்தைத் தவறான கருத்தி லிருந்து பார்க்கத் துவங்கினார்கள்; வீரர்கள் பிரபல தனி மனிதர்கள் சரித்திரத்தைச் சிருஷ்டிக்கிருர்கள் என்றும், இவர்கள் "மக்கள் கூட்டத்திற்கு" சாதுவான மக்களுக்கு தலைமை தாங்குகிருர்கள் என்றும், உறுதியாக நம்பினார்கள். ஜாரின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நரோட்னிக்குகள் பயங்கரமாகச் செயல் தந்திரங்களை உபயோகித்தார்கள். 1880ஆம், 1890ஆம் ஆண்டுகளில் அவர்கள் ஜார் ஆட்சியோடு சமாதானமாகப் போனார்கள். குலாக்குகளின் (ஏழை விவசாயிகளைச் சுரண்டிய பணக்கார விவசாயிகள்) நலனைப் பாதுகாக்கப் பாடு

பட்டார்கள்; கடுமையாக மார்க்சியத்தை எதிர்த்துப் போராடினார்கள். ப. 25

8. "ஒஸ்வோ போஸ் தெனியே" (விமோசனம்)—1902இல் ஜூன் 18-லிருந்து (ஜூலை 1) 1905இல் அக்டோபர் 5-வரை (18) வெளி நாட்டில் இரண்டு வாரத்திற்கு ஒரு தடவை பிரசுரமான பத்திரிகை. ஆசிரியர் பி. பி. ஸ்ட்ருவ் ரஷ்ய மிதவாத முதலாளித்துவத்தின் ஒரு வாகனம்; நிதானமான முடியாட்சிக்குட்பட்ட மிதவாத கருத்துக்களை அது தெரிவித்தது. 1903-ல் ஒஸ்வோபோஸ்டெனியே கழகத்திற்கு மக்களைத் திரட்டும் சாதனமாக அது பயன் பட்டது. இந்தக் கழகம் 1904 ில் ஜனவரியில் உருவாகி, 1905இல் அக்டோபர் வரையிலும் இயங்கிக் கொண் டிருந்தது. ப. 25

9. "ரெவலூஷனநயாரோஷியா" (புரட்சிமய ரஷ்யா) சட்ட விரோதமான சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களின் ஒரு பத்திரிகை. 1900ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து சோஷ லிஸ்டு புரட்சிக்காரர்களின் கழகத்தால் ரஷ்யாவில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை. 1902இல் ஜனவரி மாதத்தி லிருந்து, 1905இல் டிசம்பர் மாதம் வரையிலும், சோஷ லிஸ்டு புரட்சிக்காரமான கட்சியின் அதிகார பூர்வமான பத்திரிகையாக, வெளிநாட்டில் (ஜெனிவாவில்) பிரசுரிக்கப்பட்டது. ப. 25

10. சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள்: பல்வேறு வகை நரோட்னிக் பிரிவுகளையும், குழுக்களையும் ஒன்றாக இணைத்ததன் விளை வாக 1901ஆம் ஆண்டு இறுதியிலும், 1902ஆம் ஆண்டு தொடக்கத்திலும் உருவாக்கப்பட்ட ஒரு சிறு முதாளித் துவக்கட்சி. சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் தங்களை சோஷலிஸ்டுகள் என்று அழைத்துக் கொண்டார்கள்; ஆனால், அவர்களுடைய சோஷலிஸம் விஞ்ஞான ரீதியான சோஷலிஸ மல்ல; சிறு முதலாளித்துவ சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சோஷலிஸமாக இருந்தது. உழைப்புத்தரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு தனி நபருக்கும் சமத்துவமாக நிலத்தை வினியோகித்துக் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கை அவர்களுடைய செயல் திட்டத்தில் முக்கியமானதாக இருந்தது; உண்மையில் இது முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு மிகவும் சாதகமான நிலைமைகளை உண்டுபண்ணியிருக்கும்.

பாட்டாளி மக்களும், விவசாயிகளும் மாறுபட்ட வெவ்வேறு தனித்தனி வர்க்கங்கள் என்பதை சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் பார்க்கவில்லை; விவசாயிகளுக்குள்ளேயே உள்ள வர்க்க வேறுபாடுகளையும், தீர்க்க முடியாத முரண்பாடுகளையும் மூடி மறைத்தார்கள் (உதாரணமாக குலாக்குகளுக்குக்கும், உழைக்கும் பண்ணையாள்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை) புரட்சியில் பாட்டாளி மக்களின் தலைமைப் பாத்திரத்தை அவர்கள் மறுத்தார்கள்; ஏதேச்சாதிகாரத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில், அவர்களுடைய அடிப்படையான செயல் தந்திரம் பயங்கரவாதச் செயல்களாக இருந்தன.

1917இல் பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு, மென்ஷ்விக்குகளோடு சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களும் சேர்ந்து எதிர்ப் புரட்சி இடைக்கால சர்க்காரின் அடித்தளமாக அமைத்தார்கள்; அதே சமயத்தில் அவர்களின் தலைவர்கள் இந்த சர்க்காரில் இருந்தார்கள். நிலச்சுவான்தார்களின் நில உரிமையை ஒழிக்கும்படி விவசாயிகள் கோரியதை சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் ஆதரிக்க மறுத்தார்கள். இடைக்கால சர்க்காரில் இருந்த அவர்களுடைய அமைச்சர்கள் நிலச்சுவான்தார்களின் பெரிய பண்ணைகளைக் கைப்பற்றிய பொழுது, விவசாயிகளை நசுக்குவதற்காக ராணுவத்தை அனுப்பினார்கள்.

அக்டோபர் சோஷலிஸ்டு புரட்சிக்குப் பிறகு, சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் சோவியத் அதிகாரத்திற்கு எதிராக முதலாளிகள், நிலச்சுவான்தார்கள், உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டினர் ஆகியவர்கள் பக்கம் சேர்ந்து போராடினார்கள்.

1917ஆம் ஆண்டு நவம்பர்மாத இறுதியில் சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களில் இடதுசாரிகள் ஒரு சுயேச்சையான கட்சியை அமைத்தார்கள். விவசாய மக்களிடையே தங்கள் செல்வாக்கை நீடித்து நிலைத்து வைத்திருப்பதற்காக, சம்பிரதாய முறையில் அவர்கள் சோவியத் அதிகாரத்தை அங்கீகரித்து, போல்ஷ்விக்குகளோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்கள்; ஆனால் விரைவில், சோவியத் அதிகாரத்திற்கு விரோதமாக மாறினார்கள்.

ப. 25

11. ரஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் 1903ஆம் ஆண்டில் ஜூலை 17ஆம்தேதியிலிருந்து (30) ஆகஸ்ட் 10ஆம் தேதி வரையிலும் (23) நடைபெற்றது. அதன் முதல் பதின்மூன்று கூட்டங்கள் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்றன; போலீசார் தொந்தரவு கொடுத்ததால், பிறகு லண்டனுக்குப் போக வேண்டியிருந்தது.

1900ஆம் ஆண்டில் லெனின் ஸ்தாபித்த "இஸ்க்ரா" என்ற அகில ரஷ்ய முதல் சட்ட விரோதமான மார்க்சிஸ்டு பத்திரிகை, காங்கிரசுக்குத் தயாரிப்புக்களைச் செய்தது. லெனினுடைய வழிகாட்டுதலின் கீழ், புரட்சிகரமான மார்க்சியத்தின் பதாகையின் கீழ் ரஷ்ய சமூக ஜனநாயக வாதிகளை ஒன்றுபடுத்தும் வியக்கத்தக்கப் பணியை அது செய்தது.

நிகழ்ச்சி நிரலில் முக்கியமான விஷயங்களாக இருந்தவை என்னவென்றால், கட்சியின் செயல் திட்டம், கட்சியின் விதிகள் கட்சியின் உயர்ந்த ஸ்தாபனங்களுக்கு தேர்தல் ஆகியவைதாம். லெனினும், அவரைப் பின்பற்றியவர்களும் சந்தர்ப்ப வாதிகளை எதிர்த்து உறுதியான போராட்டத்தை நடத்தினார்கள்.

இந்த காங்கிரசில் போல்ஷ்விக்குகள் என்றும், மென்ஷ்விக்குகள் என்றும் பிளவு ஏற்பட்டது. "இஸ்க்ரா" பத்திரிகையையும் லெனினையும் உறுதியாக ஆதரித்தவர்கள் பெரும் பாலோராக இருந்தனர்; கட்சியின் உயர்ந்த ஸ்தாபனங்களுக்கு அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்; இதிலிருந்து போல்ஷ்விக்குகள் என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

(ரஷ்ய மொழியில் "போல்ஷெ" என்றால் அதிகமானவர் என்று அர்த்தம்). மார்டோவை ஆதரித்த சந்தர்ப்ப வாதிகள் சிறுபான்மையோராக இருந்தார்கள்; ஆகவே மென்ஷ்விக்குகள் என்று அழைக்கப்பட்டார்கள்; (ரஷ்ய மொழியில் "மென்ஷெ" என்றால் குறைவானவர் என்று அர்த்தம்).

ரஷ்யாவில் தொழிலாள வர்க்க இயக்கத்தின் வளர்ச்சிக்கு இந்த காங்கிரஸ் மிக முக்கியமான பாத்திரத்தை வகித்தது. பயிற்சியும், அனுபவமும் பெருமலிருந்த கட்டத்திலிருந்து, சமூக ஜனநாயக இயக்கத்தை

ரஷ்யாவில் ஒரு புரட்சிகரமான மார்க்ஸிஸ்டு கட்சியாக அமைவதற்கு அடிக்கல்லைப் போட்டது, அதாவது போல்ஷ்விக் கட்சியை அமைத்தது. "அரசியல் கருத்தின் நீரோட்டமாகவும், ஓர் அரசியல் கட்சியாகவும் 1903ஆம் ஆண்டிலிருந்து அது நீடித்து நிலைத்திருந்து" என்று லெனின் எழுதினார். (லெனின் எழுதிய தொகுக்கப்பட்ட நூல்கள், தொகுதி-31, பக்கம் 24-பார்க்கவும்).

சர்வதேச தொழிலாள வர்க்க இயக்கத்தில் இந்த காங்கிரஸ் ஒரு திருப்பத்தைக் குறித்துக் காட்டிற்று; எவ்வாறெனில், அது ஒரு புதிய முறை பாட்டாளி மக்களின் கட்சியைச் சிருஷ்டித்தது; உலகம் முழுவதும் உள்ள புரட்சிகரமான மார்க்சிஸ்டுகளுக்கு அது ஒரு முன் மாதிரியாகத் திகழ்ந்தது. ப. 25

12. மார்க்ஸ், எங்கல்ஸின் பொறுக்கி எடுக்கப்பட்ட நூல்கள்-தொகுப்பு 1-பக்கம்-54-64-மாஸ்கோ பதிப்பு-1962-பார்க்கவும். ப. 27

13. ரஷ்யாவில் பண்ணை அடிமை முறையை ஒழித்த 1861ஆம் ஆண்டு விவசாய சீர்திருத்தத்தைக் குறிப்பிடுகிறார். ப. 32

14. 1905-07-ல் நடைபெற்ற முதலாவது ரஷ்யமுதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியைக் குறிக்கிறார். ப. 35

15. பென்ஜமின்டிஸ்ரேலி எழுதிய "ஸிபில்" என்ற நாவலின் "இரண்டு நாடுகள்" என்பது உப தலைப்பு. ப. 35

16. —போலந்து சோஷலிஸ்டு கட்சி (போல்ஸ்கா பார்டியா சோஷலிஸ்ட் யெஸ்னு)—1892இல் அமைக்கப்பட்ட ஒரு சீர்திருத்த தேசியவாதக் கட்சி. போலந்தின் தேச விடுதலைப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அந்தக் கட்சியின் செயல் திட்டம், போலந்து தொழிலாளர்களிடையே பிரிவினையை அடிப்படையாகக் கொண்ட தேசியவாதப் பிரச்சாரத்தை அது நடத்தி வந்தது; எதேச்சாதிகாரத்திற்கும், முதலாளித்துவத்திற்கும் எதிரான போராட்டத்தில் ரஷ்ய தொழிலாளர்களோடும் சேர்ந்து பொதுவாக ஒன்றுபட்டுப் போராடுவதிலிருந்து போலந்து தொழிலாளர்களைத் தனியே பிரிக்க முயற்சி செய்தது.

அதன் சரித்திரத்தில் நெடுகலும் கட்சிக்குள்ளேயே இடது சாரிகளின் குழுக்களுள் சாதாரண உறுப்பினர்

களின் மூன் முயற்சியால் அமைக்கப்பட்டிருந்தன; அதற்குப் பிறகு, போலந்து தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் புரட்சிமயமான அணியோடு சேர்ந்தார்கள்.

1906இல் இந்தக் கட்சியானது "லெவிகா" (இடதுசாரி) என்றும், வலதுசாரி அதி தீவிர நாட்டுப் பற்றுடையவர்களாகவும் பிளவுபட்டது; "புரட்சிகரமான பிளவுக் குழு" என்று வலதுசாரிகள் அழைக்கப்பட்டார்கள்.

போல்ஷிவிக் கட்சியின் செல்வாக்கிலும், போலந்து, லித்துவேனியாவின் பேரரசின் சமூக ஜனநாயகத்தின் செல்வாக்காலும் "லெவிகா" படிப்படியாக ஒரு முரணில்லாத புரட்சிகரமான நிலையை எடுத்தது. ப. 39

17. "பிரெஸ்விட்" (உதயம்) போலந்து சோஷலிஸ்டுகளின் ஒரு குழுவால் 1881இல் அமைக்கப்பட்ட ஓர் அரசியல் பத்திரிகை; 1884இல் முதல் போலந்து தொழிலாளர் கட்சியின்—பாட்டாளி மக்களின் கட்சியின்—பத்திரிகையாக மாறிற்று. 1892இல் வலதுசாரி சோஷலிஸ்டுகள், தேசிய மனப்பான்மையுடையவர்கள் ஆகியர்களின் தலைமையில் இருந்தது. 1893-ம் ஆண்டுக்கும் 1899ஆம் ஆண்டுக்கும் இடையே வெளிநாட்டிலுள்ள போலந்து சோஷலிஸ்டுகளின் சங்கத்தின் (வெளி நாட்டிலுள்ள போலந்து சோஷலிஸ்டுக் கட்சியின் ஸ்தாபனம்) பத்திரிகையாக இருந்தது. 1900ஆம் ஆண்டிலிருந்து, 1905ஆம் ஆண்டுவரையிலும் போலந்து சோஷலிஸ்டு கட்சியின் தத்துவப் பத்திரிகையாகவும், பிரச்சாரப்பத்திரிகையாகவும் இருந்தது. போலந்து சோஷலிஸ்டு கட்சியின் விவசாய செயல் திட்டத்தின் நகல் 1905இல் அதன் எண் 6-8-ல் பிரசுரிக்கப்பட்டது. ப. 39

18. "ஸார்வார்க்"— சாலைகள், பாலங்கள் இன்னும் இது போன்ற ராணுவ, பொதுவான அமைப்புக்களை நிர்மாணிப்பதற்கும் கட்டாயமாக வேலை செய்ய வேண்டும் என்று போலந்து விவசாயிகளை நிர்ப்பந்தம் செய்யும் சட்டம். ப. 41

19. "மாஸ்கோவ்ஸ்கியே உடோமோஸ்தி" (மாஸ்கோ பதிவாளர்) மாஸ்கோ பல்கலைக் கழகம் 1756ஆம் ஆண்டிலிருந்து தொடக்கத்தில் ஒரு சிறிய காகிதத்தில் வெளியிட்ட செய்திப் பத்திரிகை 1863இல் அது முடியாட்சி தேசிய வாதிகளின் பத்திரிகையாக மாறிற்று. நிலச்

சுவான்தார்கள், மத குருமார்கள் ஆகியவர்களில் மிகவும் பிற்போக்கான பகுதியினரின் கருத்துக்களை இது பிரதி பலித்தது. 1917இல் அக்டோபர் புரட்சி வரையிலும் இந்தப் பத்திரிகை தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப் பட்டது. ப. 41

20. 1905இல் செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற ' ஜெம்ஸ்ட்லோ'' பணியாளர்களின் மாநாட்டை இங்குக் குறிப்பிடுகிறார்.

''ஜெம்ஸ்ட்லோ''— 1864இல் ரஷ்யாவின் மத்திய மாநிலங்களில் அமைக்கப்பட்ட ஸ்தல சர்க்கார் ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப்பட்ட பெயர். நிலப்பிரபுக்கள் இதில் ஆதிக்கம் வகித்தார்கள்; ஸ்தல பொருளாதார பிரச்சினைகளில் மாத்திரம் தலையிடும் அளவுக்கு அவைகளின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது (அதாவது, மருத்துவ மனைகள் சாலைகளைக் கட்டுவது, புள்ளி விவரம், இன்ஷுரன்ஸ் ஆகியவைகளில் மாத்திரம் தலையிட அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது). மாநிலஆளுனர்கள் அவைகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திவந்தார்கள். சர்க்கார் ஏற்றுக்கொள்ளாத எந்த முடிவையும் உள்நாட்டு அமைச்சர் ரத்து செய்வார்.

''ஜெம்ஸ்ட்லோ'' இயக்கம் என்பது, ஒரு மிதவாத முதலாளித்துவ எதிர்ப்பு இயக்கமாகும்; 1860-ஆம்ஆண்டுகளின் தொடக்க காலத்தில் ரஷ்யாவில் துவங்கப்பட்டது. துவக்கப்பட்ட காலத்திலிருந்தே அது, எதேச்சாதிகாரத்தை எதிர்த்துத் தீவிரமாகப் போராடும் சக்தியற்றது என்பது நிரூபணமாயிற்று. மக்களுக்குத் தெரியாமல் ஜாரின் எதேச்சாதிகாரத்திலிருந்து சில சட்ட பூர்வமான சலுகைகளைப் பெறுவதற்கு அது முயற்சி செய்தது. ப. 45

21. பிரிக்கப்பட்ட நிலம்;— 1861-ல் ரஷ்யாவில் பண்ணை அடிமை முறை ஒழிக்கப்பட்ட தருணத்தில் நிலச்சுவான்தார்கள் விவசாயிகளின் நிலத்திலிருந்து பிரித்து எடுத்துக் கொண்ட நிலத்தின் பெயர். ப. 46

22. பிரௌதானிஸம்— பிரேஜேஸப் பிரௌதானின் கொள்கையின் பெயர். பிரான்ஸ் தேசத்து சிறு முதலாளித்துவ சோஷலிஸ்டாகவும், அராஜகவாதியாகவும் இருந்தார்.

முதலாளிகள் பெரிய அளவில் சொத்து வைத்திருப்பதை பிரௌதான் கண்டித்தார்; சிறிய அளவில் சொத்து

வைத்திருப்பதை நிரந்தரமாக்க விரும்பினார். உற்பத்திச் சாதனங்களை வாங்குவதற்காகவும், கைவினைஞர்களாக மாறுவதற்காகவும், உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு "நியாயமான" சந்தை கிடைப்பதற்காகவும் தொழிலாளர்களுக்கென மக்களின் "பண்டமாற்றும்" பாங்குகளை அமைக்க வேண்டும் என்று பிரரேபித்தார். முதலாளித்துவத்தின் வியாதிகளைக் குணப்படுத்த முடியும் என்றும், சீர்திருத்தங்கள் மூலமாக அபிவிருத்தி செய்ய முடியும் என்றும் பிரௌதான் நம்பினார்.

"தத்துவத்தின் வறுமை" என்ற புத்தகத்தில் மார்க்ஸ் பிரௌதானியத்தை சுக்கு நூறாக உடைத்தெறிந்தார். முதலாளித்துவத்தை "அபிவிருத்தி செய்யமுடியும்" என்ற கருத்தின் பிற்போக்குத் தன்மையை மார்க்ஸ் இந்தப் புத்தகத்தில் அம்பலப்படுத்தினார். முதலாளித்துவ உற்பத்தி முறையிலிருந்து வறுமை, சமத்துவமின்மை சுரண்டல், நெருக்கடிகள், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவை அனைத்தும் தோன்றுகின்றன என்பதைப் புரிந்து கொள்ளத் தவறியதுதான் பிரௌதானின் முக்கியமான தவறு என்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். உற்பத்தி சாதனங்களைச் சோஷலிஸமயமாக்குவதன் மூலமாகவும், சோஷலிஸத்தை அமைப்பதன் மூலமாகவும் முதலாளித்துவ உறவுகளை ஒழிப்பதன் மூலமாகவே இவைகளைப் போக்க முடியும் என்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டினார்.

ப. 48

23. பிளாங்கூயிஸம்— பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தில் ஒரு கருத்துப் போக்கு; பிரபல பிரெஞ்சு புரட்சிக்காரரும், தலைசிறந்த உட்டோம்பிய கம்யூனிஸ்டுமான லூயி அகஸ்டி பிளாங்கூயி என்பவரின் பெயரால் ஏற்பட்டது. (1805-1881)

பிளாங்கூயி வாதிகள் மனித இனத்தை "கூலி அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்ய விரும்பினார்கள்; பாட்டாளி மக்களின் வர்க்கப் போராட்டத்தின் மூலமாக அல்ல; அதற்கு மாறாக ஒரு சிறு அறிவாளிகளின் கூட்டத்தின் இரகசியமாகச் சதியாலோசனைத் திட்டத்தின் மூலமாக" (வி. இ. லெனின்-தொகுக்கப்பட்ட நூல்கள்-தொகுதி-10-பக்கம்:392 பார்க்கவும்) ஒரு கலகப் புரட்சியின் வெற்றிக்குத் தேவையான ஸ்தூலமான நிலைமையை அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

பொது மக்களோடு தொடர்பு வைத்துக் கொள்வதை அவர்கள் நிராகரித்தார்கள்; ஒரு புரட்சிமயமான கட்சியின் நடவடிக்கைக்குப் பதிலாக, சதியாலோசனைக் காரர்களின் ஓர் இரகசியக் குழுவின் நடவடிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். ப. 48

24. 1902ஆம் ஆண்டில் மார்ச் மாதக் கடைசியிலும், ஏப்பிரல் மாதத் தொடக்கத்திலும் போல்டாவா கார்க்கோவ் ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற விவசாயி களின் இயக்கத்தைக் குறிப்பிடுகிறார். இருபதாவது நூற்றாண்டின் தொடக்க காலத்தில் ரஷ்யாவில் நடைபெற்ற விவசாயிகளின் முதல் புரட்சிகரமான இயக்கமாக அது இருந்தது. 1901ஆம் ஆண்டில் பயிர்கள் விளையாததால், 1902ஆம் வருடத்தில் நிலைமை மேலும் படுமோசமானதால், விவசாயிகளின் பொருளாதார நிலை தாங்கமுடியாததாயிற்று. இதன் விளைவாக இந்த இயக்கம் வெடித்தது. விவசாயிகள் நிலத்தை மறுபங்கு போடவேண்டும் என்று கோரினார்கள்; நிலச்சுவான்தார் களின் உணவுப் பொருள்களையும், மற்ற பொருள்களையும் கைப்பற்றினார்கள். மிருகத்தனமாக விவசாயிகளின் இயக்கம் நசுக்கப்பட்டது; நாசமாக்கப்பட்ட சொத்துக்கு, நஷ்ட ஈடு கொடுக்கும்படி விவசாயிகள் நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். ப. 49

25. பெர்ன்ஸ்டீனிஸம்: பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியில் ஜெர்மனியில் சர்வதேச சமூக ஜனநாயக இயக்கத்தில் தலை தூக்கிய ஒரு மார்க்ஸிஸ்டு எதிர்ப்பு சந்தர்ப்ப வாத கருத்துப் போக்கு. அப்பட்டமான திரிபு வாத சித்தாந்தியான எட்வர்ட் பெர்ன்ஸ்டீன் என்ற ஜெர்மானிய சமூக வாதியின் பெயர் இந்தக் கருத்துப் போக்கிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரும், அவரைப் பின்பற்றியவர்களும் "விஞ்ஞான அடிப் படையில் சோஷலிஸத்தை உருவாக்கும் சாத்தியத்தை இல்லை என்றும், சரித்திர இயல், பொருள் முதல் வாத கண்ணோட்டத்திலிருந்து, அது தவிர்க்க முடியாதது அவசியமானது என்பதை பகிரங்கமாகத் தெரிவிக்க முடியாது என்றும் கூறினார்கள். ஏழ்மை அதிகரித்து வருவதையும், பாட்டாளி மயமாகி வருவது அதிகரித்து வருவதையும் முதலாளித்துவ முரண்பாடுகள் தீவிர மடைந்து வருவதையும் நிராகரித்தார்கள்; இறுதி லட்சியம் என்ற கருத்து சரியானதல்ல என்று பிரகடனம்

செய்தார்கள்: பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் என்ற கருத்தை அறவே நிராகரித்தார்கள். மிதவாதத்திற்கும், சோஷலிஸத்திற்கும் இடையேயுள்ள நேர்மாறான கருத் தோட்டத்தைக் கோட்பாட்டால் மறுத்தார்; வர்க்கப் போராட்டத்தின் தத்துவத்தை மறுத்தார்" (வி. இ. லெனின்—தொகுக்கப்பட்ட நூல்கள்-தொகுதி-5—பக்கம் —353)

மார்க்சியத்தைத் திரித்துக் கூறும் பெர்ன்ஸ்டீனின் திரிபு வாதத்தின் குறிக்கோள் என்னவென்றால், சமூகப் புரட்சியை அடிப்படையாகக் கொண்டுள்ள சமூக ஜனநாயகக் கட்சிகளைச் சமூக சீர்திருத்த வாதத்தை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளாக மாற்றுவது தான் ரஷ்யாவில், "சட்ட பூர்வமான மார்க்ஸிஸ்டுகளும்" பொருளாதார வாதிகளும் அதை ஆதரித்தார்கள்.

லெனின் தலைமையிலுள்ள ரஷ்ய புரட்சிகரமான மார்க்ஸிஸ்டுகளான போல்ஷ்விக்குகள், பெர்ன்ஸ்டீனி. ஸத்தை ஒவ்வொரு அம்சத்திலும் எதிர்த்துப் போராடினார்கள். "ரஷ்ய சமூக ஜனநாயக வாதிகளின் ஒரு எதிர்ப்பு" என்ற ஒரு சிறு புத்தகத்தில், பெர்ன்ஸ்டீனிஸத்திற்கு லெனின் சாட்டை அடி கொடுத்தார். "என்ன செய்வது?" என்ற புத்தகத்தில், பெர்ன்ஸ்டீனிஸத்தை லெனின் விரிவாக விமர்சனம் செய்தார். மேலும் மார்க்ஸிஸமும். திரிபு வாதமும்" என்ற கட்டுரையிலும்- "ஐரோப்பிய தொழிலாளர் இயக்கத்தில் கருத்து வேற்றுமைகள்" என்ற கட்டுரையிலும் பெர்ன்ஸ்டீனிஸத்தை லெனின் கடுமையாக விமர்சனம் செய்தார். (வி. இ. லெனின்—தொகுக்கப்பட்ட நூல்கள்-தொகுதி-4-பக்கம்—167-82; தொகுதி - 5 - பக்கம்-347-529 - தொகுதி - 15 பக்கம்-29-39- தொகுதி-16-பக்கம்-347-52-பார்க்கவும்).

ப. 49

26. உழைப்பு வாடகை அல்லது உழைப்புச் சேவை—நிலப் பிரபுத்துவ காலத்திலிருந்து நீடித்து வரும் ஓர் அமைப்பு; இந்த அமைப்பின் கீழ், விவசாயிகள் வைத்திருக்கும் உழவு மாடுகளையும், கருவிகளையும், விவசாயிகளையும் நிலச்சுவான்தார்கள் குறைந்த வாடகைக்குப் பயன் படுத்திக் கொண்டார்கள். ப. 57

27. கார்வீ முறை—பண்ணை அடிமைகள் அவர்களுடைய எஜமானர்களுக்கு ஊதியமில்லாமல், கட்டாயமாக வேலை செய்த ஒரு வடிவத்தின் பெயர். ப. 57

28. காரல் மார்க்ஸின் — "மூலதனம்" — தொகுதி-3-1959-மாஸ்கோ-பதிப்பு-பக்கம்-763-93-பார்க்கவும். ப. 57

29. வி. கலினின் என்ற கையெழுத்தில் வி. எ.கார்பின்ஸ்கி எழுதிய "விவசாய மாநாடு" என்ற கட்டுரை பிராலிடேரி" என்ற பத்திரிகையில், எண்-25-ல் 1905இல் நவம்பர் 3-ல் (16) பிரசுரிக்கப்பட்டது. அதில் லெனின் இதைச் சேர்த்தார்.

"பிராலிடேரி"—ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சி மத்தியக் குழுவின் சட்ட விரோதமான வாரப் பத்திரிகை மூன்ருவது கட்சி காங்கிரசின் முடிவுப்படி கொண்டுவரப்பட்டது, ஜெனீவாவில் 1905இல் மே மாதம் 14-ம் தேதி முதல் (27) நவம்பர் மாதம் 12 வரையிலும் (25) பிரசுரிக்கப்பட்டது. ப. 61

30. பொது மறு வினியோகம் (சார்னி பெரெடெல்) ஜாரின் ரஷ்யாவில் விவசாயிகளிடையே ஒரு பிரபலமான கோஷமாக இருந்தது; நிலச்சுவான்தாரி முறையை ஒழிக்க வேண்டும், நிலத்தைப் பொது மறு வினியோகம் செய்யவேண்டும் என்ற விவசாயிகளின் அவாவை இந்தக் கோஷம் பிரதிபலித்தது.

"ரஷ்ய சமூக ஜனநாயகத்தின் விவசாய செயல் திட்டம்" என்ற கட்டுரையில் "பொது மறு வினியோகம்" என்ற கோரிக்கையானது, சிறிய முறையில் விவசாய உற்பத்தி முறையை நிரந்தரமாக்கும் பிற்போக்கு உட்டோப்பியக் கருத்து என்று லெனின் சுட்டிக் காட்டினுர்; இத்துடன் அதற்கு ஒரு புரட்சிமயமான அம்சமும் இருந்தது என்பதையும் சுட்டிக் காட்டினுர்; அதாவது "பண்ணை அடிமை முறையின் மீத மிச்சங்கள் அனைத்தையும் விவசாயிகளின் கலகத்தின் மூலமாக துடைத்தெறிய அது விரும்பிற்று". (வி. இ. லெனின் — தொகுக்கப்பட்ட நூல்கள்—தொகுதி-6-பக்கம்-139). ப. 61

31. அனைத்து ரஷ்ய விவசாயிகள் சங்கம்—ஒரு புரட்சிகரமான ஜனநாயக ஸ்தாபனம்; 1905இல் அமைக்கப்பட்டது. இந்தச் சங்கம், அரசியல் சுதந்திரம், உடனடியாக அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவது, நிலச்சுவான் தார்கள், மடங்கள், அரசு ஆகியவைகளுக்குச் சொந்த மான நிலத்தைப் பறிமுதல் செய்து விவசாயிகளுக்குக்

கொடுப்பது ஆகிய கோரிக்கைகளை முன் வைத்தது: அதே சமயத்தில் ஊசலாடுகிற, இரண்டிற்கும் இடையே ஒரு கொள்கையைக் கடைப் பிடித்தது. போலீசின் கொடிய அடக்கு முறை காரணமாக அது 1907ஆம் ஆண்டின் தொடக்க காலத்தில் உடைந்து போயிற்று. ப. 62

32. தொழிலாளர் விடுதலைக் குழு—1883இல் ஸ்விட்ஸர்லாந்தில் ஜி. வி. பிளக்கானேவால் அமைக்கப்பட்ட முதல் ரஷ்ய மார்க்ஸிஸ்டு குழு. பி. பி. அக்செல்ராட், எல். ஜி, டூஷ். வி. இ. ஸாஸுலிச், வி. என். இக்னுடோவ் ஆகியவர்களும் இந்தக் குழுவில் இருந்தார்கள்.

ரஷ்யாவில் மார்க்சியத்தை இந்தக் குழு பரப்பிற்று. ரஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் இந்தக் குழுவைக் கலைத்ததாக இந்தக் குழு அறிவித்தது. ப. 62

33. ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மூன்றுவது காங்கிரஸ் லண்டனில் 1905இல் ஏப்ரல் மாதம் 12 27ஆம் தேதிகளில் (ஏப்ரல் 25,—மே மாதம் 10) நடைபெற்றது. லெனின் நேரடியான வழி காட்டலின் கீழ் போல்ஷ்விக்குகளால் நடத்தப்பட்டது.

ரஷ்யாவில் துவங்கியிருக்கும் புரட்சியின் அடிப்படையான பிரச்சினைகளை இது விவாதித்தது. பாட்டாளி மக்களின் கட்சி ஆகியவற்றின் கடமைகளை இது வரையறுத்தது.

காங்கிரசுக்கு முன்னுல் வைக்கப்பட்டிருந்த அடிப்படையான விஷயங்கள் பற்றிய நகல் தீர்மானங்கள் அனைத்தையும் லெனினே எழுதினுர்.

மென்ஷ்விக்குகளின் நடவடிக்கைகளையும், ஸ்தாபனம், செயல் தந்திரம் ஆகியவை பற்றிய பிரச்சினைகளில் அவர்களது சந்தர்ப்ப வாதத்தையும் காங்கிரஸ் கண்டித்தது. "பிராலிடேரி" என்ற மத்தியக் குழுவின் புதிய பத்திரிகையைத் துவங்கும்படி மத்திய குழுவுக்கு காங்கிரஸ் ஆணையிட்டது. 1905இல் ஏப்ரல் 27இல் (மே மாதம் 10) நடைபெற்ற மத்தியக குழுவின் கூட்டம் வி. இ. லெனினை அந்தப் பத்திரிகையின் ஆசிரியராக நியமித்தது.

மூன்றுவது காங்கிரஸ் மகத்தான சரித்திர முக்கியத் துவம் வாய்ந்த காங்கிரசாக இருந்தது. அது போல்ஷ் விக்குகளின் முதலாவது காங்கிரசாக இருந்தது. விரிவான விவரங்களுக்கு லெனின் எழுதிய நூல்களைப் பார்க்கவும்; "மூன்றுவது காங்கிரஸ்" (வி. இ. லெனின்—தொகுக்கப் பட்ட நூல்கள்-தொகுதி-8-பக்கம் 442-49). "ஜன நாயகப் புரட்சியில், சமூக ஜன நாயகத்தின் இரண்டு செயல் தந்திரங்கள்" (தொகுதி-9-பக்கம்-15-140). ப. 63

34. பேபியன் கழகம்: ஒரு பிரிட்டிஷ் சீர்திருத்தவாத ஸ்தாபனம்; 1884இல் முதலாளித்துவ அறிவாளிகளின் ஒரு பிரிவினரால் அமைக்கப்பட்டது. ரோமானிய தளபதி யான பேபியன் மாக்சிமஸ் கான்டாடர் (தாமதம் செய் கிறவர்) என்றவரின் பெயர் இதற்குக் கொடுக்கப்பட்டது: தாமதம் செய்யும் செயல் தந்திரத்திற்கும், ஹன்னி பாலுக்கு எதிராக இறுதியான போராட்டத்தைத் தவிர்த்ததிலும் பெயர் பெற்றவர்.

பேபியன்கள் பாட்டாளி மக்களின் வர்க்கப் போராட்டத்தின் அவசியத்தை நிராகரித்தார்கள்; சோஷலிஸ்டு புரட்சியின் அவசியத்தையும் நிராகரித் தார்கள்; அற்ப சீர்திருத்தங்கள் மூலமாகவும், படிப்படி யாக சமுதாயத்தை உருமாற்றம் செய்வதன் மூலமாகவும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாற்றத் தைக் கொண்டுவரலாம் என்று கூறினார்கள். 1900இல் பேபியன் கழகம் தொழிலாளர் கட்சியில் சேர்ந்தது. ப. 69

35. 1893-ல் ஜனவரி 18இல் எப். எ. ஸோர்ஜ் என்பவருக்கு எங்கல்ஸ் எழுதிய கடிதத்தைப் பார்க்கவும் (மார்க்ஸ், எங்கல்ஸ், தேர்ந்தெடுக்கப்பட்ட கடிதப் போக்கு வரத்து, மாஸ்கோ பதிப்பு, 1955. பக்கம்-537) ப. 69

36. மானலோவ் நீகோவாய் கொகோலின் "செத்த ஆன்மா" என்ற நாவலில் ஒரு நடிப்பு உறுப்பினர். திருப்தியடைந்த உணர்ச்சி வசப்பட்ட நிலச்சுவான்தார். சோம்பேறித் தனமாக கனவு காண்பவர்; அரட்டைக் கல்வி. ப. 76

37. டிசம்பர் 14ன் நபர்கள் (டிசம்பரிஸ்டுகள்):- ரஷ்ய பிரப்புக்கள் குலத்திலிருந்து வந்த புரட்சிக்காரர்கள்; அவர்கள் பண்ணை அடிமை முறையையும், எதேச்சாதி காரத்தையும் எதிர்த்தார்கள்; 1825-ல், டிசம்பர் 14இல் புரட்சிக் கலகத்தை நடத்தினார்கள். ப. 76

38. அலெக்சாண்டர் ஹெர்சனின் "முடிவுகளும், துவக்கங்களும்" என்பதிலிருந்து மேற்கோள். ப. 77

39. "ஒரு பழைய தோழருக்கு எழுதிய கடிதங்கள்" என்பதிலிருந்து (நான்காவது, இரண்டாவது கடிதங்கள்) லெனின் மேற்கோள் கொடுக்கிறார். ப. 79

40. ட்ருடோவிக்குகள் (ட்ருடோவிக் குழு) சிறு முதலாளித்துவ ஜனநாயக வாதிகளின் ஒரு குழு. முதலாவது டூமாவில் இருந்த விவசாயப் பிரதிநிதிகள் இதில் இருந்தனர். 1906இல் ஏப்பிரலில் இந்தக் குழு அமைக்கப்பட்டது.

அவர்களுடைய செயல் திட்டம், விவசாயிகளின் ஜனநாயக நாட்டங்களைப் பிரதிபலித்தது. மடங்கள், அரசன், அரசு, நிலச்சுவான்தார்கள் ஆகியவர்களுக்குச் சொந்தமான நிலத்தை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும், எல்லா வகையான சமூக, தேசிய பாகுபாடுகளையும் ஒழிக்கவேண்டும். டூமாவுக்கு நடைபெறும் தேர்தலில் அனைவருக்கும் வாக்குரிமை கொடுக்கவேண்டும் ஆகியவை அவர்கள் கோரிக்கைகள்.

சரிசமமாக நிலத்தைப் பங்கீடு செய்யவேண்டும் என்ற நோரோட்னி கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது அவர்களுடைய விவசாயச் செயல் திட்டம்; யார் எந்த நிலத்தை உழுதார்களோ, அவர்கள் தான் அந்த நிலத்தை உபயோகிக்க வேண்டும்.

ஒரு வர்க்கம் என்ற நிலையில் விவசாயிகள் சிறு உடைமையாளர்களாக இருப்பதால், டூமாவில் காடெட்டுகளுக்கும், சமூக ஜனநாயக வாதிகளுக்கும் இடையே ட்ருடோவிக்குகள் ஊசலாடினார்கள்.

1917இல் பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு, ட்ரோடோவிக்குகள் முதலாளித்துவ இடைக்கால சர்க்காரை ஆதரித்தார்கள்; விவசாயிகளைச் சுரண்டிய குலாக்குகளின் நலனைப்பேணிப் பாதுகாத்தார்கள். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு, எதிர்ப் புரட்சி முதலாளிகளோடு அவர்கள் சேர்ந்து கொண்டார்கள். ப. 80

41. குறிப்பு-31-பார்க்கவும்.

42. கோலோகோல் (மணி): "உயிரோடிருப்பவர்களை நான் அழைக்கிறேன்" என்ற பொன் மொழியின் கீழ் எ. ஐ. ஹெர்ஸன், என். பி. ஓகாரியோவ் ஆகியவர்களால், 1857, ஜூலை 1-ம் தேதியிலிருந்து, 1865-ஏப்பிரல் மாதம் வரை லண்டனிலும், 1865, மே மாதம் முதல் 1867, ஜூலை மாதம் வரை ஜெனீவாவிலும் பிரசுரிக்கப்பட்ட ஓர் அரசியல் பத்திரிகை. ஹெர்ஸனால் அமைக்கப்பட்ட சுதந்திர ரஷ்ய அச்சகம் இந்தப் பத்திரிகையைப் பிரசுரித்தது. மாதம் ஒரு முறை வெளி வந்தது. சில சமயங்களில் மாத மிருமுறை வெளி வந்தது. மொத்தம் 245 பிரதிகள் வெளி வந்தன. 1868இல் 15 பிரதிகள் பிரெஞ்சு மொழியில் பிரசுரிக்கப்பட்டன; அவற்றில் சில ரஷ்ய பிற்சேர்க்கையோடு வெளி வந்தன. மொத்தம் 2,500 பிரதிகள் அச்சடிக்கப்பட்டன; ரஷ்யா முழுவதும் இவை வினியோகிக்கப்பட்டன. எதேச்சாதிகாரத்தின் கொடுங் கோன்மையையும், உத்தியோகஸ்தர்களிடையே ஊழல் மலிந்திருந்ததையும், விவசாயிகளை ஈவிரக்கமின்றி நிலச்சுவான்தார்கள் சுரண்டி வந்ததையும் அது அம்பலப் படுத்திற்று. அது விடுத்த புரட்சிகரமான வேண்டு கோள்கள், ஆளும் வர்க்கங்களையும், எதேச்சாதிகாரத் தையும் எதிர்த்துப் போராடுவதில் பொது மக்களைத் தட்டியெழுப்புவதில் மிக முக்கியமான பாத்திரத்தை வகித்தது. ப.81

43. போல்யார்நயா ஸ்வெஸ்நா(துருவ நக்ஷத்திரம்): லண்டனில் சுதந்திர ரஷ்ய அச்சகம் 1855-க்கும் 1872-க்கும் இடையே இலக்கிய, அரசியல் கட்டுரைகளின் தொகுப்பைப் பிரசுரித்தது. அதன் முதல் மூன்று பிரதிகளை ஹெர்ஸன் பிரசுரித்தார்; மற்றவைகளை ஹெர்ஸனும், ஒகார்யோவும் சேர்ந்து பிரசுரித்தனர். கடைசி பிரதி, ஆதாவது எட்டாவது பிரதி 1868இல் ஜெனீவாவில் பிரசுரிக்கப் பட்டது.

இந்தப் பத்திரிகையின் தலைப்பும், தூக்கு தண்டனைக்கு ஆளான ஐந்து டிசம்பரிஸ்டுகளின் படம் முகப்பில் பிரசுரிக்கப் பட்டிருந்ததும், டிசம்பரிஸ்டுகளின் லட்சியத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் கருத்தைப் பிரதிபலித்தன. "போல்யார் நயா ஸ்வெஸ்தா"வை ஹெர்ஸன் பின்வருமாறு விவரித்தார் "ரஷ்யப்பத்திரிகை; தணிக்கை செய்வதிலிருந்து சுதந்

திரமாக வெளிவருவது; ரஷ்யாவின் விமோசனம், ரஷ்யாவில் சுதந்திரமான கருத்துக்களைப் பரப்புவது ஆகிய பிரச்சினைகளைக் குறிக்கோளாகக் கொண்டிருப்பது". ப.81

44. நரோட்நயா வால்யா (மக்கள் விருப்பம்) ரஷ்ய புரட்சிகரமான அறிவாளிகளின் ஓர் இரகசிய அரசியல் ஸ்தாபனம், "ஜெமில்யா ஐ வோல்யா" (நிலமும் சுதந்திரமும்) என்ற நரோட்னிக் ஸ்தாபனத்தில் பிளவு ஏற்பட்ட பிறகு, 1879-ல் ஆகஸ்ட் மாதத்தில் அமைக்கப்பட்டது. "நரோடோவால்ஸி" என்ற அதன் உறுப்பினர்கள் நரோட்னிக்குகளின் உட்டோப்பிய சோஷலிஸத்தை ஏற்றுக் கொண்டாலும் கூட, அரசியல் போராட்டங்களை நடத்துவது என்ற கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். அவர்களுடைய முக்கியமான நோக்கம் என்னவென்றால், ஜாரின் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தி, அரசியல் சுதந்திரத்தை வெல்வது என்பதேயாகும். மக்கள் அனைவருக்கும் வாக்குரிமை கொடுப்பது என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட "நிரந்தரமான மக்கள் பிரதிநிதிகளின் சபை"யை அமைப்பது, ஜனநாயக உரிமைகளைப் பிரகடனம் செய்வது, மக்களுக்கு நிலத்தை மாற்றிக் கொடுப்பது, தொழிற்சாலைகளைத் தொழிலாளர்களிடம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது ஆகியவை அவர்களுடைய செயல் திட்டத்தில் அடங்கியிருந்தன.

எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நரோட்னயா வால்யா வீரம் செறிந்த போராட்டத்தை நடத்திற்று; ஆனால், "தீவிரமாக" செயல்படும் வீரர்கள், "சாதுவாக" இருக்கும் மக்கள் கூட்டம் என்ற தவறான சித்தாந்தத்தின் அடிப்படையில் அது செயல்பட்டது. மக்கள் பங்கெடுக்காமலேயே சமுதாயத்தை மாற்றி அமைக்கலாம் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்; தங்கள் சொந்த சக்தியை மாத்திரம் பயன்படுத்த விரும்பினார்கள்: பயங்கரவாதச் செயல்கள் மூலமாகவும், அச்சுறுத்துவதன் மூலமாகவும், சர்க்காரைச் சிதறடிப்பதன் மூலமாகவும் லட்சியத்தை அடைய விரும்பினார்கள்.

1881-ல் மார்ச் 1-ம் தேதிக்குப் பிறகு, (இரண்டாவது அலெக்சாண்டரைக் கொலை செய்த பிறகு) மிருகத்தனமான அடக்கு முறைகள், ஆத்திரமூட்டும் செயல்கள், மரண தண்டனை ஆகியவை மூலம் சர்க்கார் இந்த ஸ்தாபனத்தை நசுக்கிற்று.

நரோட்னயா வால்யாவின் தவறான உட்டோபிய செயல் திட்டத்தையும், பயங்கர வாதச்செயல் தந்திரங்களையும் லெனின் கண்டித்தார்; ஆனால், ஜாரிசத்திற்கு எதிராக அவர்கள் அந்தரங்கச் சுத்தியோடு போராடியதற்கு மதிப்புக் கொடுத்தார். அவர்களுடைய தலைமறைவாக இருந்த ஸ்தாபனத்தையும், கண்டிப்பான முறையில் இருந்த மையப்படுத்தப்பட்ட ஸ்தாபன முறையையும் அவர் பாராட்டினார். ப.85

45. 1911இல் வசந்த காலத்தில் சீனாவில் ஒரு புரட்சி வெடித்தது. அது மஞ்சு அரச மரபை வீழ்த்தி, சீனாவை ஒரு குடியரசு என்று பிரகடனம் செய்தது. புரட்சிகரமான இயக்கத்திற்குத் தலைமை தாங்கிய டாக்டர் ஸன்யாட்ஸென் தற்காலிக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இருப்பினும், எதிர்ப் புரட்சியாளர்களின் நிர்ப்பந்தத்தின் கீழ் முரட்டுத் துணிச்சலான செயல்களைப் புரியும் யுவான்ஷி கேய் என்பவருக்காக, அவர் வாபஸ் வாங்கினார்; யுவான்ஷி கேய் ஒரு ராணுவ சர்வாதிகார ஆட்சியை நிலை நாட்டினார். ப.88

46. டூமா: ஒரு பிரதிநிதி சபை; 1905-07ஆம் ஆண்டு புரட்சியின் விளைவாக இந்தச் சபையைக் கூட்டும்படி ஜாரின் சர்க்கார் நிர்ப்பந்திக்கப்பட்டது. பெயரளவில் டூமா ஒரு சட்ட சபையாக இருந்தது. ஆனால், உண்மையில் அதற்கு அதிகாரம் எதுவும் கிடையாது. நேரடியாக இல்லாமல் சமத்துவ அடிப்படையில் இல்லாமல், அனைவருக்கும் வாக்குரிமை கொடுக்காமல் டூமாவுக்கு தேர்தல் நடைபெற்றது. தொழிலாள வர்க்கங்கள், ரஷ்யாவில் வசிக்கிற ரஷ்யர்கள் அல்லாத தேசிய இனங்கள் ஆகியவர்கள் சம்பந்தப்பட்ட வரையிலும் வாக்குரிமை பெரிய அளவில் குறைக்கப்பட்டிருந்தது. தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியவர்களின் குறிப்பிட்ட பகுதியினருக்கு எந்த வகையான வாக்குரிமையும் கிடையாது.

ஜார் அரசாங்கம் முதல் டூமாவையும் (1906இல் ஏப்பிரல்-ஜூலை) இரண்டாவது டூமாவையும் (1907-பிப்ரவரி-ஜூன்) கலைத்தது; மூன்றாவது டூமாவிலும் (1907-12) நான்காவது டூமாவிலும் (1912-18) நிலச் சுவான்தார்கள் பெரிய முதலாளிகள் ஆகியவர்களின் பிற்போக்கு முடியாட்சியை ஆதரிக்கிற அணி ஆதிக்கம் வகித்தது. (டுருடோவிக்குகள் பற்றி 40-வது குறிப்பைப் பார்க்கவும்) ப.88

47. 1789-94இல் நடைபெற்ற மகத்தான பிரெஞ்சுப் புரட்சியின் தலைவர்களைக் குறிப்பிடுகிறார். ப.90

48. எம். பிரௌதான் எழுதிய "வறுமையின் தத்துவம்" என்ற புத்தகத்திற்கு, மார்க்ஸ் எழுதிய "தத்துவத்தின் வறுமை" என்ற பதிலைப் பார்க்கவும்—மாஸ்கோ பதிப்பு) 1962-கார்ல் மார்க்ஸ் மூலதனம்-தொகுப்பு-III. மாஸ்கோ பதிப்பு-1959-பக்கம்-634-57-கார்ல் மார்க்ஸ் எழுதிய "உபரி மதிப்பின் சித்தாந்தங்கள்"—இரண்டாவது பாகம்-மாஸ்கோ பதிப்பு-1968-பக்கம்-149-60. ப.94

49. பாரிஸ் கம்யூன் சம்பந்தமாக 1871இல் ஏப்ரல் 12இல் எல். குகெல்மானுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதத்திலிருந்து இந்தக் கருத்து எடுக்கப்பட்டிருக்கிறது. (மார்க்ஸ், எங்கல்ஸ்-தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள்-தொகுப்பு-II-மாஸ்கோ-1962-பக்கம்-463) ப.98

50. "தத்துவதத்தின் வறுமை" என்ற மார்க்ஸின் நூலின் முதலாவது ஜெர்மானிய பதிப்பிற்கு எங்கல்ஸ் எழுதிய முன்னுரையைப் பார்க்கவும்-மாஸ்கோ-1962-பக்கம் 12-13. ப.100

51. ரூஸ்கோயே பொ காட்ஸ்ட்வோ (ரஷ்யச் செல்வம்): ஒரு ரஷ்யப் பத்திரிகை; 1876-லிருந்து 1918 வரை ஸெண்ட் பீட்டர்ஸ் பர்க்கில் பிரசுரிக்கப்பட்டது. 1890ஆம் ஆண்டு ஆரம்ப காலத்தில், என். கெ. மிக்கைலாவ்ஸ்கியின் தலைமையில் அது மிதவாத நரோட்னிக்குகளின் பத்திரிகையாக மாறிற்று. ஜாரின் சர்க்காரோடு ஒத்துழைக்கும்படி அது கேட்டுக் கொண்டது; மார்க்ஸிஸத்தையும், ரஷ்ய மார்க்ஸிஸ்டுகளையும் எதிர்த்துக்கடுமையாகப் போராடிற்று. 1906இல் அரை-குறை காடெட் பிரபல சோஷலிஸ்டு கட்சியின் பத்திரிகையாக மாறிற்று. ப.106

52. ஸ்டோய்கயா மிஸில் (உறுதியான எண்ணம்) இடதுசாரி நரோட்னிக்குகளின் (சோஷலிஸ்ட் புரட்சிக்காரர்களின் சட்ட பூர்வமான "ஷிவாயே மிஸில்" என்ற பத்திரிகையின் பல பெயர்களில் ஒன்று இந்தப் பத்திரிகை. ஸெண்ட் பீட்டர்ஸ் பர்க்கிலிருந்து 1913-ஆகஸ்ட் மாதத்திலிருந்து 1914-ஜுலை வரை பிரசுரிக்கப்பட்டது. ப.106

53. "புத்பிராவ்தா" (உண்மையின் பாதை): 1912இல் மே மாதத்தில் லெனின் அமைத்த "பிராவ்தா" என்ற

போல்ஷ்விக் கட்சியின் சட்ட பூர்வமான தினசரி பத்திரிகைகளில் ஒன்றின் பெயர்.

தொடர்ச்சியாகப் போலீசாரின் அடக்கு முறைக்கு "பிராவ்தா" ஆளாகி வந்தது. எட்டுத் தடவைகள் அது தடை செய்யப்பட்டது; ஆனால், 1914இல், ஜூலை மாதம் 8 இல் (21) அது மூடப்படும் வரையிலும் எப்போதும் ஏதாவது ஒரு பெயரில் அது திரும்பத் திரும்ப பிரசுரிக்கப் பட்டு வந்தது.

1917இல் பிப்ரவரி மாதம் நடைபெற்ற முதலாளித் துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு மீண்டும் அது பிரசுரிக்கப்பட்டது. மார்ச் மாதம் 5ஆம் (18) தேதியி லிருந்து, ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மத்தியக் குழு, பெட்ரோகிராட் குழு ஆகியவற்றின் பத்திரிகையாக இருந்தது.

தொழிலாளர் வர்க்கத்தின் முதலாவது சட்ட பூர்வ மான பத்திரிகையாகத் திகழ்ந்தது, "பிராவ்தா" ரஷ்யாவிலும், உலகத்திலும் தொழிலாளர் வர்க்கப் பத்திரிகையின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டத்தை அது குறித்துக்காட்டிற்று.

ரஷ்யாவின் உழைப்பாளி மக்களுக்கு அறிவொளி ஊட்டுவதிலும், மகத்தான அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்கும், சோஷலிஸத்தை நிர்மாணம் செய்வதற்கும் உழைப்பாளி மக்களைத் தயார் செய்வதிலும் அது மகத் தான பாத்திரத்தை வகித்தது.

முதல் தடவையாக அது மே மாதம் 5ஆம் தேதி பிரசுரிக்கப்பட்டது. ஆகவே, 1914ஆம் ஆண்டிலிருந்து, இந்தத் தேதியைத் தொழிலாளர் வர்க்கத்தின் பத்திரிகை நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ப.107

54. மார்க்ஸின் "மூலதனம்" தொகுப்பு I-மாஸ்கோ பதிப்பு-1959-பக்கம் 484, 489, 490 பார்க்கவும். ப 112

55. மார்க்ஸ், எங்கல்ஸ் தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள்-தொகுப் பு-1-மாஸ்கோ பதிப்பு - 1962- பக்கம்-51 பார்க்கவும். ப.113

56. மார்க்ஸ், எங்கல்ஸ் தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள்-தொகுப்பு -II- மாஸ்கோ பதிப்பு, 1926-பக்கம் - 320 பார்க்கவும், ப.131

57. எங்கல்ஸ் எழுதிய "அண்டி டூரிங்" என்ற நூலில் பக்கம்-389 பார்க்கவும்-மாஸ்கோ பதிப்பு-1962. ப.114

58. மார்க்ஸ், எங்கல்ஸ் தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள் தொகுப்பு II - பக்கம் - 322 - மாஸ்கோ பதிப்பு - 1962- பார்க்கவும். ப.114

59. மார்க்ஸ், எங்கல்ஸ் தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள்- தொகுப்பு-II மாஸ்கோ பதிப்பு, 1962-பக்கம்-433 பார்க்கவும். ப 115

60. 1863-ல் ஏப்பிரல் 9ஆம் தேதி எங்கல்ஸுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதத்தைப் பார்க்கவும். (மார்க்ஸ், எங்கல்ஸ் தேர்ந்து எடுக்கப்பட்ட கடிதப் போக்குவரத்து, மாஸ்கோ பதிப்பு-1955–பக்கம்–172). ப.116

61. "தத்துவத்தின் வறுமை" என்ற மார்க்ஸின் நூலில், பக்கம் 194–195-பார்க்கவும்-மாஸ்கோ பதிப்பு. ப.117

62. 1851-ல் பிப்ரவரி 5-இல் மார்க்ஸுக்கு எங்கல்ஸ் எழுதிய கடிதத்தைப் பார்க்கவும். ப.117

63. 1857-ல் டிசம்பர் 18-ம் தேதி, 1858-ல் அக்டோபர் 7-ம் தேதி மார்க்ஸுக்கு எங்கல்ஸ் எழுதிய கடிதங்களைப் பார்க்கவும், (மார்க்ஸ், எங்கல்ஸ், தேர்ந்து எடுக்கப் பட்ட கடிதப்போக்கு வரத்து, பக்கம், 132-33 பார்க்கவும் மாஸ்கோ பதிப்பு·1955). ப.117

64. சார்ட்டிஸம் 1830—1840 ஆகிய கால கட்டத்தில் பிரிட்டனில் வளர்ந்த தொழிலாளர் வர்க்கத்தின் பொது ஜன முதல் இயக்கம். அதன் உறுப்பினர்கள் மக்கள் சாசனத்தைப் பிரசுரித்தார்கள். அதாவது அனைவருக்கும் வாக்குரிமை, சட்ட மன்றத் தேர்தல்களில் நிலம், சொத்து ஆகியவைகளை உடமையாக வைத்திருக்கவேண்டும் என்ற நிபந்தனை ரத்து செய்வது போன்ற கோரிக்கைகள் அதில் அடங்கியிருந்தன. பல ஆண்டுகள் வரையிலும் நடை பெற்ற இந்த இயக்கத்தில் நாடு முழுவதும் லட்சோப லட்சம் தொழிலாளர்களும் கைவினைஞர்களும் பொதுக் கூட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றில் பங்கெடுத் தார்கள்.

1848-ல், ஏப்பிரல் மாதத்தில், அவர்கள் ஐம்பது லட்சம் மக்கள் கையொப்பமிட்ட ஒரு மனுவைச் சட்ட மன்றத்திற்குச் சமர்ப்பித்தார்கள்,

ஆனால், பிரிட்டிஷ் சட்ட மன்றத்தில் நிலப்பிரபுக் களும், பெரிய முதலாளிகளும் அதிகமாக இருந்ததால், பொது மக்களின் சாஸனத்திலுள்ள சலுகைகளை விட்டுக் கொடுக்க மறுத்து, மனுக்களை நிராகரித்தார்கள். சார்ட்டிஸ்டுகளுக்கு எதிராகச் சர்க்கார் மிருகத்தனமான அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டது. அவர்கள் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள்; இயக்கமும் நசுக்கப்பட்டது. ஆயினும், சர்வதேசத் தொழிலாள வர்க்க இயக்கத்தின் வளர்ச்சியின் மீது சார்ட்டிஸ்டு இயக்கம் மகத்தான செல்வாக்கைச் செலுத்திற்று. ப.118

65. 1863-இல் ஏப்ரல் 8-இல் மார்க்ஸுக்கு எங்கல்ஸ் எழுதிய கடிதத்தையும், 1863-இல் ஏப்ரல் 9-இல் எங்கல்ஸுக்கும் மார்க்ஸ் எழுதிய கடிதத்தையும், 1866-இல் ஏப்ரல் 2-இல் எங்கல்ஸுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதத்தையும் பார்க்கவும் (மார்க்ஸ், எங்கல்ஸ், தேர்ந்து எடுக்கப்பட்ட கடிதப் போக்குவரத்துக்கள்-பக்கம் 172-மாஸ்கோ பதிப்பு-1955) ப.118

66. 1869ல் நவம்பர் 19லும் 1881-இல் ஆகஸ்ட் 11-லும் மார்க்ஸுக்கு எங்கல்ஸ் எழுதிய கடிதங்களைப் பார்க்கவும். ப.118

67. மார்க்ஸ், எங்கல்ஸ் தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள்-தொகுப்பு-1- மாஸ்கோ பதிப்பு-1962—பக்கம் 64-பார்க்கவும். ப.811

68. 1815ஆம் ஆண்டிலிருந்து பிரஷ்யா, ஆஸ்டிரியா, ரஷ்யா ஆகிய நாடுகளின் கூட்டு ஆதிக்கத்தில் இருந்த கிராக்கோ குடியரசில் தேச விடுதலைக்காகவும், ஜனநாயக மாற்றங் களுக்காகவும் நடைபெற்ற புரட்சிக் கலகத்தை இங்குக் குறிப்பிடுகிறார். புரட்சிக் கலகக்காரர்கள் ஒரு தேசிய சர்க்காரை அமைத்தார்கள்; அவர்கள் ஓர் அறிக்கையை விடுத்தார்கள்; அதில் நிலப்பிரபுத்துவ வரிகளை ரத்து செய்வதாகவும், நஷ்ட ஈடு கொடுக்காமல் நிலத்தை விவசாயிகளுக்கு வினியோகம் செய்வதாக வாக்குறுதி யும் கொடுத்திருந்தார்கள். அது விடுத்த மற்ற வேண்டுகோள்களில், ஒரு தேசிய தொழிற்சாலையை அமைப்பது, அதில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அதிகச் சம்பளம், எல்லாப் பிரஜைகளுக்கும் சரி சமமாக உரிமைகள் ஆகியவை பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், விரைவில் இந்தப் புரட்சிக் கலகம் அடக்கப் பட்டது.

"கிராசோவ் புரட்சியானது, தேசிய லட்சியத்தோடு ஜனநாயகத்தின் லட்சியம், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் லட்சியம் ஆகியவற்ருேடு இணைப்பதில் ஐரோப்பா முழுவதற்கும் ஓர் அற்புதமான உதாரணமாகத் திகழ்ந்தது" என்று மார்க்ஸ் எழுதினுர். ப.118

69. மார்க்ஸ், எங்கல்ஸ் தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள், தொகுப்பு 1-பக்கம்-69-மாஸ்கோ பதிப்பு-1962-பார்க்கவும். ப.119

70. 1856இல், ஏப்பிரல்-16இல் மார்க்ஸுக்கு எங்கல்ஸ் எழுதிய கடிதத்தைப் பார்க்கவும் (மார்க்ஸ், எங்கல்ஸ் தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள், தொகுப்பு-II-மாஸ்கோ, 1962-பக்கம் 454) ப.120

71. 1865ல் ஜனவரி, 7 லும் 1865ல் பிப்ரவரி 5 லும் மார்க்ஸுக்கு எங்கல்ஸ் எழுதிய கடிதங்களைப் பார்க்கவும். ப.120

72. 1863இல் ஜூன் 11 லும், 1863இல், நவம்பர் 24 லும் 1864இல் செப்டம்பர்-4 லும், 1865இல், ஜனவரி.27 லும், 1867இல், அக்டோபர் 22 லும், 1867இல் டிசம்பர் 6 லும் மார்க்ஸுக்கு எங்கல்ஸ் எழுதிய கடிதங்களையும், 1863இல் ஜூன் 12 லும், 1864ல் டிசம்பர் 10 லும், 1865இல் பிப்ரவரி 3 லும், 1864 இல் டிசம்பர் 14லிலும், (எங்கல்ஸுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதங்களையும் பார்க்கவும் தேர்ந்து எடுக்கப்பட்ட கடிதப் போக்குவரத்து,) மாஸ்கோ, 1955-பக்கம்—173, 193-96) ப.120

73. மார்க்ஸ், எங்கல்ஸ் தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள், தொகுப்பு-II-மாஸ்கோ, 1962, பக்கம் 463. ப.121

74. தொழிலாளர் வர்க்கத்தையும், சோஷலிஸ்டு இயக்கத்தையும் எதிர்த்துப் போராடுவதற்காக பிஸ்மார்க் 1878இல் ஜெர்மனியில் சோஷலிஸ்டு விரோதச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தினுர். அதன் கீழ் சமூக ஜனநாயகக் கட்சியின் எல்லா ஸ்தாபனங்களையும், தொழிலாளர் வர்க்கத்தின் எல்லா பொதுஜன ஸ்தாபனங்களையும் தொழிலாள வர்க்கத்தின் அச்சகங்களையும் தடை செய்தார்; சோஷலிஸ்டு இலக்கியங்கள் பறிமுதல் செய்யப்பட்டன; சமூக ஜனநாயக வாதிகள் அடக்குமுறைக்கு ஆளானுர்கள்; சிலர் நாடு கடத்தப்பட்டனர். தொழிலாள வர்க்கத்தின் பொதுஜனத் தன்மை

கொண்ட இயக்கத்தின் நிர்ப்பந்தத்தால் 1890இல் அந்தச் சட்டம் ரத்து செய்யப்பட்டது. ப.121

75. 1877 இல் ஜூலை 23 லும், 1877 ல் ஆகஸ்ட் 1 லும், 1879 இல் செப்டம்பர், 10 லும் எங்கல்ஸுக்கும் மார்க்ஸ் எழுதிய கடிதங்களையும், 1879 ல் ஆகஸ்ட், 20 லும், 1879 இல் செப்டம்பர் 9 லும் மார்க்ஸுக்கு எங்கல்ஸ் எழுதிய கடிதங்களையும் பார்க்கவும். ப.121

76. இந்தக் கட்டுரையில்தான் பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தின் பல்வேறு வடிவங்களைப் பற்றி முதலில் லெனின் பேசினர்.

பாட்டாளி மக்கள் அதிகாரத்தைக் கைவசப் படுத்தும் பல்வேறு வழி வகைகளின் விளைவாகவும், பல்வேறு நாடுகளின் துல்லியமான சமூக—பொருளாதார அரசியல் நிலைமைகளின் விளைவாகவும் இந்தப் பல்வகை வேறுபாட்டு நிலை ஏற்படுகிறது என்பதை, பின்னர் அவர் திரும்பத் திரும்ப வலியுறுத்தினர். ப.122

77. ''ஸீஸ்டால் டாபிங்''— கரடு முரடான, ஆதிகால வேலை. புரட்சிக்கு முன்பு ஸீஸ்டால் உயெஸ்டில் மலிவான, நயநலமின்றி பகட்டாயுள்ள புனிதமாகக் கருதப்படும் தெய்வ வடிவங்களையே முதலில் குறிப்பிடு கிறார். ப.122

78. மார்க்ஸ், எங்கல்ஸ் தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள் தொகுப்பு II, மாஸ்கோ, 1962 பக்கம்-15-17-பார்க்கவும் ப.130

79. மார்க்ஸ், எங்கல்ஸ், தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள் தொகுப்பு II, மாஸ்கோ, 1962 பக்கம் 38-44 பார்க்கவும். ப.130

80. 1871 இல் மார்ச் 18 இல் பாரிஸ் நகரில் தொழிலாளர் களின் புரட்சிக் கலகத்தின் விளைவாக 72-நாள்கள் வரை அமைக்கப்பட்டிருந்த புரட்சிகரமான சர்க்காரை—பாரிஸ் கம்யூனைக் குறிப்பிடுகிறார். மார்ச் 18 ஆம் தேதியிலிருந்து, 1871-மே மாதம் 28 ஆம் தேதி வரை அது நீடித்திருந்தது. சரித்திரத்தில், ஒரு பாட்டாளி மக்களின் சர்வாதி காரத்தை அமைக்க முதல் தடவையாகச் செய்த முயற்சியாக அது இருந்தது. ப.131

81. மார்க்ஸ், எங்கல்ஸ் தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள் தொகுப்பு II, மாஸ்கோ, 1962—பக்கம்-32-பார்க்கவும். ப.133

82. மார்க்ஸ். எங்கல்ஸ், தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள், தொகுப்பு — II, மாஸ்கோ, 1962— பக்கம் 32—33-பார்க்கவும். ப.134

83. மார்க்ஸ், எங்கல்ஸ்—தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள்-தொகுப்பு- I, மாஸ்கோ, 1962—பக்கம்- பக்கம்-53-பார்க்கவும். ப.134

84. மார்க்ஸ், எங்கல்ஸ், தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள், தொகுப்பு I, மாஸ்கோ, 1962—பக்கம்—520—பார்க்கவும். ப.136

85. 1875 இல் மார்ச் 18-28 இல் ஆகஸ்ட் பெபலுக்கு எங்கல்ஸ் எழுதிய கடிதத்தைப் பார்க்கவும் (மார்க்ஸ், எங்கல்ஸ்தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள், தொகுப்பு—II, மாஸ்கோ, 1962—பக்கம்-42) ப. 137

86. மார்க்ஸ், எங்கல்ஸ், தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள் தொகுப்பு II, மாஸ்கோ, 1962-பக்கம்—23-பார்க்கவும். ப.142

87. மார்க்ஸ், எங்கல்ஸ், தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள் தொகுப்பு-II மாஸ்கோ, 1962-பக்கம் 24-பார்க்கவும். ப.143

88. மார்க்ஸ், எங்கல்ஸ், தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள் தொகுப்பு II, மாஸ்கோ, 1962-பக்கம்-24-பார்க்கவும். ப.144

89. மார்க்ஸ், எங்கல்ஸ், . தேர்ந்து எடுக்கப்பட்ட நூல்கள் தொகுப்பு II, மாஸ்கோ, 1962-பக்கம் 24-பார்க்கவும். ப.146

90. என். ஜி. போம்யாலோவ்ஸ்கியின் "வேதபாடசாலை வாழ்க்கை பற்றிய குறிப்புகள்" என்ற புத்தகத்தைக் குறிப்பிடுகிறார். வேத பாடசாலையில் உள்ளவர்கள் அறியாமைக்கும், காட்டுமிராண்டித்தனமான பழக்க வழக்கங்களுக்கும் கெட்ட பெயர் வாங்கினவர்கள். ப.148

91. தொழிலாளர்கள், சிப்பாய்கள் ஆகியவர்களின் சோவியத்துக்களின் இரண்டாவது அகில ரஷ்ய காங்கிரஸ் பெட்ரோகிராடில் 1917-ல் அக்டோபர் 25-26 தேதிகளில் (நவம்பர் 7-8) நடைபெற்றது. அந்தக் காங்கிரசில் பல மாநிலங்கள் உயெஸ்ட் ஆகியவைகளில் உள்ள விவசாயிகளின் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள். அந்தக் காங்கிரஸ் துவங்கிய தருணத்

தில், மொத்தம் 649 பிரதிநிதிகள் இருந்தார்கள்; அவர்களில் 390 பேர் போல்ஷ்விக்குகள்; 160 பேர் சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள்; 72 பேர் மென்ஷ்விக்குகள்; 14 பேர் சர்வதேச மென்ஷ்விக்குகள். காங்கிரசில் துவங்கிய பிறகு, மேலும் பிரதிநிதிகள் வந்து கொண்டே இருந்தார்கள்.

ஸ்மால்னி நிறுவனத்தில் 10·40 மணிக்கு காலையில் அது துவங்கிற்று; அச்சமயத்தில் குளிர்கால அரண்மனையைப் பெட்ரோகிராடிலுள்ள செங்காவல் பிரிவுகளும், கடற்படைப் பிரிவுகளும், புரட்சிக்கரமான படைப்பிரிவுகளும் இன்னும் தாக்கிக் கொண்டிருந்தன; ஏனெனில் பிற்போக்காளர்களின் உத்தியோகஸ்தர்களும், படைப் பிரிவுகளும், அதைப் பாதுகாத்து வந்தனர். இடைக்கால சர்க்கார் அரண்மனைக்குள்ளே இருந்தது. அதைத்தாக்கி வந்த படைக்கு லெனின் தலைமை தாங்கி வந்ததால், காங்கிரசின் முதல் கூட்டத்தில் அவர் கலந்து கொள்ளவில்லை.

காங்கிரசின் இரண்டாவது கூட்டத்தில், அக்டோபர் 26-ம் தேதியன்று (நவம்பர் 8) சமாதானம், நிலம் பற்றிய அறிக்கையை லெனின் சமர்ப்பித்தார். சமாதானம், நிலம் பற்றிய கட்டளைகளைக் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது; லெனின் இந்தக் கட்டளைகளைத் தயார் செய்தார்; தொழிலாளர், விவசாயிகள் சோவியத்தின் சர்க்கார் அமைக்கப்பட்டது; லெனினைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவையும் அமைக்கப்பட்டது. அதில் போல்ஷ்விக்குகள் மாத்திரம் இருந்தார்கள்; ஏனெனில், இடதுசாரி சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள் அதில் கலந்து கொள்ள மறுத்துவிட்டார்கள். இந்தக் காங்கிரஸ் 101 பேர்களைக் கொண்ட அகில ரஷ்ய மத்திய நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுத்தது; அவர்களில் 62 பேர் போல்ஷ்விக்குகள், 29 பேர் இடது சாரி சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள், 6 பேர் சர்வதேச சமூக ஜனநாயக வாதிகள், 3 பேர் உக்ரேன் சோஷலிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகள், ஒருவர் சோஷலிஸ்டு புரட்சிகரமான மார்க்ஸிஸ்டு கழகத்தின் பிரதிநிதி மேலும் விவசாயிகளின் சோவியத்துகள், ராணுவ ஸ்தாபனங்கள், காங்கிரசை விட்டு விலகிச்சென்ற குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்வதன் மூலமாக இந்த மத்திய நிர்வாகக் குழுவை மேலும் விரிவுபடுத்துவது என்று காங்கிரஸ் முடிவு செய்தது. பு,157

92. 110-வது குறிப்பைப் பார்க்கவும். ப.161

93. ''நொவாயா ழிஸின்'' குழு: சர்வதேசியவாதிகள் என்று அழைக்கப்பட்ட சமூக ஜனநாயக வாதிகளின் ஒரு குழு! மென்ஷ்விக்குகள் இதன் உறுப்பினர்களாக இருந்தார்கள். இவர்கள் மார்போவைப் பின்பற்றுகிறவர்களாகவும், பகுதி மென்ஷ்விக் கருத்துப் போக்குடைய அறிவாளி களாகவும் இருந்தார்கள். இந்தக் குழுவின் பத்திரிகை யின் பெயர் "நொவாயா ழிஸின்" (புதுவாழ்வு) அந்தக் குழுவுக்கும் இந்தப் பெயர் கொடுக்கப்பட்டது; ஸெண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் 1917- ஏப்பிரல் மாதத்திலிருந்து இந்தப் பத்திரிகை பிரசுரிக்கப்பட்டது.

1917இல் அக்டோபரில் மென்ஷ்விக்குகளோடு சேர்ந்து கொண்டு இந்த "நொவாயாழிஸின்" குழு ஆயுதம் தாங்கிய புரட்சிக் கவசத்தைப் பகிரங்கமாக எதிர்க்கத் துவங்கிற்று- அக்டோபர் புரட்சிக்குப் பிறகு, இந்தக் குழுவில் சிலர் போல்ஷ்விக் கட்சியில் சேர்ந்து கொண்டதால் மற்றவர்கள் அனைவரும் சோவியத் சர்க்காருக்கு விரோதமான கொள்கையைக் கடைப்பிடித் தார்கள். (மற்ற எதிர்ப்புரட்சிப் பத்திரிகைகளைப் போல் இந்தப் பத்திரிகையும் 1918இல் ஜூலை மாதத்தில் மூடப்பட்டது; ப.165

94. ரஷ்ய நாவல் ஆசிரியரும், நாடக ஆசிரியருமான நிக்கோலாயவாஸில் யேவிச்கோகோல் (1809-1852) ரஷ்யாவில் நிலப்பிரபுத்துவ உறவுகள் பற்றியும், அதிகார வர்க்கத்தினர் பற்றியும் அற்புதமான முறை யில் கேலிச் சித்திரத்தைத் தீட்டினார். ப.166

95. மார்க்ஸ், எங்கல்ஸ் தேர்ந்து எடுக்கப்பட்ட' நூல்கள், தொகுப்பு II, மாஸ்கோ, 1962-பக்கல்-16 பார்க்கவும். ப. 173

96. கோதேயின் "பாஸ்ட்" என்ற நாடகத்திலிருந்து பாகம் I, அரங்கம் 4- ஒரு மேற்கோள். ப.174

97. 1918இல், மார்ச் மாதத்தில் பிரெஸ்ட்-லிடாவ்ங்க் என்ற இடத்தில் சோவியத் ரஷ்யாவும், ஜெர்மனியும் கையொப்பமிட்ட சமாதான உடன்படிக்கையைக் குறிப் பிடுகிறார். அதன் நிபந்தனைகள் பெரிதும் கடினமானவை களாக இருந்தன: போலந்து, லாட்வியா, எஸ்தோனியா ஆகியவை ஜெர்மனிக்குக் கொடுக்கப்பட்டன, உக்ரேன் ஒரு தனி அரசாயிற்று; ஜெர்மனியைச் சார்ந்திருந்தது

ஜெர்மனிக்கு பெரும் தொகையை நஷ்ட ஈடாக ரஷ்யா கொடுக்கவேண்டியிருந்தது.

இந்த உடன்படிக்கையின் ஷரத்துக்கள் தாங்க முடியாத சுமையாக இருந்தன. என்றாலும் கூட, அதில் கையொப்பமிட வேண்டியிருந்தது; ஏனெனில், பழைய ஜாரின் ராணுவம் சிதறுண்டுபோய் விட்டது; செம் படையும் இப்பொழுதுதான் உருவாகிக் கொண்டிருக்கிறது. பிரெஸ்ட்-லிடாவ்ஸ்க் உடன்படிக்கையானது சோவியத் குடியரசுக்கு மூச்சுவிட அவகாசம் கொடுத்தது; யுத்தத்திலிருந்து பின்வாங்க உதவிற்று; உள்நாட்டு எதிர்ப் புரட்சிக்கும், வெளிநாட்டு ஆயுதம் தாங்கிய தலையீட்டிற்கும் எதிராக தனது சக்திகளை ஒன்று திரட்டுவதற்கு உதவிற்று. ஜெர்மனியில் 1918-இல் நவம்பரில் நடைபெற்ற புரட்சிக்குப் பிறகு, பிரெஸ்ட்-லிடாவ்ஸ்க் உடன்படிக்கை ரத்து செய்யப்பட்டது. ப.179

98 அக்டோபர் புரட்சிக்குப் பிறகு, எல்லாவகையான வேலைக்குத் தக்கபடி ஊதியம் என்ற முறைக்குப் பதிலாக குறிப்பிட்ட நேரத்திற்கு ஊதியம் என்ற முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இதன் விளைவாக தொழிலாளர்களின் கட்டுப்பாடும், உற்பத்தித் திறனும் பெரிதும் பாதிக்கப்பட்டன. எனவே, 1918-இல், டிசம்பரில் சோவியத் தொழிலாளர் விதிகள் அமுலுக்கு வந்தன; அதன்படி வேலைக்குத் தக்கபடி ஊதியம் என்ற முறை ஏற்படுத்தப்பட்டது. ப.180

99. எங்கல்ஸின் "ஆண்டி-டூரிங்" என்ற நூலிலிருந்து மேற்கோள்—மாஸ்கோ, 1954 பக்கம்-393. ப.183

100. "கம்பளிக் கழுத்துக்குட்டையில் ஒரு மனிதன்" என்ற செக்காவின் ஒரு கதையில், ஒவ்வொரு புதுமையையும் கண்டு அஞ்சுகிற, உயர் நாட்டமில்லாத, குறுகிய மனோபாவமுடைய ஒருவனின் கேலிச் சித்திரம். ப.191

101. கறுப்பு நூற்றுவர்:- முடியாட்சி வாதிகளின் ஒரு ரௌடிகள் கூட்டம். ஜாரின் போலீசார், புரட்சிகரமான இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்காக இதை அமைத்தார்கள். அவர்கள் புரட்சிக்காரர்களைக் கொன்றார்கள்; முற்போக்கு அறிவாளிகளைத் தாக்கினார்கள். யூத மக்களைக் கொன்று குவித்தார்கள். ப.215

**102.** காடெட்டுகள்:- அரசியல் அமைப்புக்குகந்த ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள்; ரஷ்யாவில் மிதவாத-முடியாட்சி முதலாளித்துவத்தின் முக்கியமான கட்சி 1905 இல் அக்டோபரில் அமைக்கப்பட்டது; முதலாளிகள், நிலச்சுவான்தார்கள், முதலாளித்துவ அறிவாளிகள் ஆகியவர்களின் பிரதிநிதிகள் இதன் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

ஒரு குடியரசு வேண்டும் என்ற கோஷத்தைப் பகிரங்கமாக காடெட்டுகள் எதிர்த்தார்கள்; அரசியல் சட்ட அமைப்பிற்குட்பட்ட முடியாட்சி என்ற வடிவத்தில் நிலச்சுவான்தாரி முறையையும், ஜாரிசத்தையும், பேணிப் பாதுகாக்க முயற்சி செய்தார்கள்; புரட்சிகரமான இயக்கத்திற்கு எதிராக ஜார் நடவடிக்கை எடுத்து வருவதை அவர்கள் ஆதரித்தார்கள். முதல் உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, ஜார் சர்க்காரின் ஏகாதிபத்திய, பிறர் நாட்டை அபகரிக்கிற கொள்கைக்கு அவர்கள் ஆதரவு கொடுத்தார்கள்.

அக்டோபர் சோஷலிஸ்டு புரட்சிக்குப் பிறகு, காடெட்டுகள் சோவியத் சர்க்காரின் ஊர்ஜிதம் செய்யப்பட்ட எதிரிகளாக மாறினார்கள்; தலையீட்டுக்காரர்களின் எல்லா வகையான எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளிலும், இயக்கங்களிலும் கலந்து கொண்டார்கள். ப.215

**103.** மென்ஷ்விக்குகள்:- ரஷ்ய சமூக ஜனநாயக இயக்கத்தில் சிறு முதலாளித்துவ, சந்தர்ப்பவாதக் கருத்துப் போக்கின் பிரதிநிதிகள்; இவர்கள், தொழிலாளர் வர்க்கத்திடம் முதலாளித்துவத்தின் செல்வாக்கைப் புகுத்தினார்கள். (குறிப்பு-11-பார்க்கவும்).

தொழிலாளர் வர்க்க இயக்கத்தில் மென்ஷ்விக்குகள் ஒரு சந்தர்ப்பவாதக் கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். பாட்டாளி மக்களுக்கும், முதலாளித்துவத்திற்கும் இடையே ஓர் உடன்பாட்டிற்கு முயன்றார்கள்.

1917 இல் பிப்ரவரி புரட்சிக்குப் பிறகு, முதலாளித்துவ இடைக்கால சர்க்காரில் பங்கெடுத்துக் கொள்வதில் அவர்கள் சோஷலிஸ்டு புரட்சிக்காரர்களோடு சேர்ந்து கொண்டார்கள். அதன் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்தார்கள்; வளர்ந்து வலிமை பெற்றுவரும்

பாட்டாளி மக்களின் புரட்சியை எதிர்த்துப் போராடினார்கள். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு, அவர்கள் எதிர்ப்புரட்சிக் கட்சியாக மாறினார்கள்; சோவியத் ஆட்சிக்கு எதிரான சதிவேலைகளிலும், கலகங்களிலும் பங்கெடுத்தார்கள். ப.215

104. ஓர் எதிர்ப்புரட்சி ஸ்தாபனத்தின் தலைமையில் பெட்ரோ கிராடைச் சரணடைய வேண்டும் என்பதற்காக ஒரு சதித்திட்டம் நடைபெற்றது; சோவியத்துக்கு எதிராக தேசத்துரோக வேலையில் ஈடுபட்டிருந்த பல குழுக்களையும், இந்த ஸ்தாபனம் ஒருங்கிணைத்து செயல் பட்டது; இதையே லெனின் குறிப்பிடுகிறார். அதற்கு "ஒரு தேசிய மையம்" தலைமை தாங்கிற்று. 1919 இல் ஜூன் 12 ம் தேதி இரவில் பெட்ரோகிராடை நோக்கிச் செல்லும் பாதையில் உள்ள மிக முக்கியமான வலுவான கோட்டைகளில் ஒன்றான கிராஸ்நயா சோர்கா கோட்டையில் இந்த சதி வேலைக்காரர்கள் கலகத்தைக் கிளப்பினார்கள். இந்த எதிர்ப் புரட்சிக் கலகக்காரர்களை அடக்குவதற்காக கடற்கரை செம்படைப் பிரிவுகள், தொண்டர், படைப் பிரிவுகள், பால்டிக் கடல் கடற்படை, விமானங்கள் ஆகியவை அனுப்பப் பட்டன. ஜூன் 15-ஆம் இரவில் இந்தக் கலகம் அடக்கப் பட்டது. இந்தச் சதித் திட்டத்தை வகுத்துக் கொடுத்த ஸ்தாபனம் அம்பலப் படுத்தப்பட்டு, உடைத்தெறியப் பட்டது ப.215

105. பெர்ன் அகிலம்:- இரண்டாவது அகிலத்தை மீண்டும் அமைக்கும் நோக்கத்தோடு, 1919 இல் பிப்ரவரி மாதத்தில் பெர்ன் என்ற இடத்தில் சமூக அதிதீவிர சுயநாட்டு வெறி பிடித்தவர்கள், நடு நிலைமையாளர்கள் ஆகியவர்களின் கட்சிகள் ஒரு மாநாட்டில் இந்த அகிலத்தை அமைத்தார்கள். ப.218

106. ஸடோவா போர் (உஹ்ராடெச் கிராலோவ் சோனி கிராட்டா-என்ற நகரத்திற்கு அருகே, பொஹிமியாவில் ஒரு கிராமம்) 1866 இல் ஜூலை 3 இல் இந்தப் போர் நடைபெற்றது. ஆஸ்டிரியா முறியடிக்கப்பட்டது. ஆஸ்டிரியா—பிரஷ்ய யுத்தத்தின் முடிவை இது நிர்ணயம் செய்தது. ப.222

107. 1919 இல் மார்ச் மாதத்தில் நடைபெற்ற ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷ்விக்) எட்டாவது காங்கிரசில்

நிறைவேற்றப்பட்ட கட்சியின் செயல் திட்டத்தைக் குறிப்பிடுகிறார். ப.227

108. மார்க்ஸின் "மூலதனம்" தொகுப்பு I, மாஸ்கோ, 1959—பக்கம்—302—பார்க்கவும். ப.228

109. 1919 இல் மார்ச் மாதம் 16 ஆம்-தேதியில் நிறைவேற்றிய ஓர் உத்தரவின் மூலமாக, அமைச்சரவையானது உபயோகிப்பவர்களின் கூட்டுறவு சங்கங்கள், "உபயோகிப்பவர்களின் கம்யூன்கள்" என்ற பெயரில் திருத்தியமைக்கப்பட்டன. நாட்டின் சில பகுதிகளில், இந்தப் பெயர் தவறாக வியாக்கியானம் செய்யப்பட்டது; ஆகவே, 1919 இல் ஜூன் 30இல் அகிலரஷ்ய மத்திய நிர்வாகக் குழு எடுத்த முடிவின்படி, அந்த உத்தரவை ஏற்றுக் கொண்டு, மேலும் பிரபலமாக இருக்கும் "உபயோகிப்பவர்களின் கூட்டுறவு சங்கம்" என்று அந்தப் பெயரை மாற்றியமைக்கப்பட்டது. ப.233

110. அரசியல் நிர்ணய சபை 1918இல், ஜனவரி 5ஆம் தேதியன்று சோவியத் சர்க்காரால் கூட்டப்பட்டது. அக்டோபர் புரட்சிக்கு முன்பு, பெரும்பாலும் தேர்தல்கள் நடந்து முடிந்துவிட்டன. ஆகவே, மென்ஷ்விக்குகள், சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள், காடெட்டுகள் ஆகியவர்கள் கையில் அதிகாரம் இருந்த கால கட்டத்தை இந்த அரசியல் நிர்ணய சபை பிரதிபலித்தது. இந்த அரசியல் நிர்ணய சபையில் மென்ஷ்விக்குகள், சோஷலிஸ்டு புரட்சிக்காரர்கள், காடெட்டுகள் ஆகியவர்கள் பெரும்பாலோராக இருந்தார்கள்; ஆகவே, இவர்கள் முதலாளிகளுக்கும், குலாக்குகளுக்கும் சாதகமான கொள்கையைக் கடைப்பிடித்தார்கள்; இது, பெரும்பாலான மக்களின் விருப்பத்திற்கு விரோதமாக இருந்தது. சோவியத் ஆட்சி அமைக்கப் பட்டிருப்பதும், சோவியத் சர்க்காரின் பல்வேறு உத்தரவுகளும் பொது மக்களின் விருப்பத்தைப் பிரதிபலித்தன.

இந்த அரசியல் நிர்ணய சபையானது, உழைக்கிற, சுரண்டப் பட்ட மக்களின் உரிமைகள் பற்றிய போல்ஷ்விக்குகளின் பிரகடனத்தை விவாதிக்க மறுத்தது; மேலும், சோவியத்துகளின் இரண்டாவது காங்கிரஸ் சமாதானம், நிலம், சோவியத்துகளுக்கு அதிகாரத்தை மாற்றுவது ஆகியவை பற்றி நிறைவேற்றிய உத்தரவுகளை ஊர்ஜிதம் செய்ய மறுத்தது.

பிரகடனத்தைப் படித்த பிறகு, போல்ஷ்விக்குகள் அரசியல் நிர்ணய சபையை விட்டு வெளியேறினர்கள் ஏனெனில் உழைக்கும் மக்களின் நலனுக்கு எதிர்ப்பை இந்தச் சபை முழுமையாகத் தெரிவித்தது. 1918இல், ஜனவரி 7ஆம் தேதியன்று, அகில ரஷ்ய மத்திய நிர்வாகக் குழுவின் உத்தரவுப்படி, அரசியல் நிர்ணய சபை கலைக்கப் பட்டது. ப.250

111. எங்கல்ஸின் "ஆண்டி டூஹ்ரிங்" நூலில், மாஸ்கோ, 1954, பக்கம்—148-49—பார்க்கவும். ப.254

112. இந்தக் கட்டுரை, முடிவு பெறவில்லை. ப.254

113. ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்ஷ்விக்) மாஸ்கோ நகரத்தின் மாநாடு 1919இல் டிசம்பர் 20-21இல் நடை பெற்றது. அதன் நிகழ்ச்சி நிரலில், அகில ரஷ்ய கட்சி மாநாட்டைக் கூட்டுவது, எரிபொருள் பிரச்சினை, ஸுபோட்னிக்குகள், விஷஜுரத்தை எதிர்த்துப் போராட நடவடிக்கைகள், மாஸ்கோவில் உணவு நிலைமை, அனை வருக்கும் ராணுவப் பயிற்சி கொடுப்பது, விசேஷ பிரிவு களை அமைப்பது ஆகிய விஷயங்கள் அடங்கி யிருந்தன. ப.255

114. மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலம்: 1919இல், மார்ச் மாதத்தில் அமைக்கப்பட்டது! சர்வதேச புரட்சிகரமான பாட்டாளி மக்களின் ஸ்தாபனம். பல்வேறு நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டணி.

தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதிகளை அம்பலப்படுத்துவதில் இது மகத்தான பாத்திரத்தை வகித்தது; மேலும், பல்வேறு நாடுகளில் உள்ள உழைக்கும் மக்களிடையே தொடர்பை ஏற்படுத்து வதிலும் கம்யூனிஸ்ட் கட்சிகளை அமைப்பதிலும், அவை களைப் பலப்படுத்துவதிலும், மகத்தான பாத்திரத்தை வகித்தது. ப 255

115. 1919இல ஏப்பிரல் 11ஆம் தேதி எழுதப்பட்ட, "கிழக்கு முனையின் நிலைமை பற்றி" ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்ஷ்விக்) மத்திய குழுவின் ஆய்வுக் கட்டுரை"யைக் குறிப்பிடுகிறார் "புரட்சிகரமான முறையில் வேலை செய்வதில் ஈடுபடும்படி" எல்லாக் கட்சி ஸ்தாபனங்

களுக்கும், எல்லாத் தொழிலாளர் சங்கங்களுக்கும் விடுத்த வேண்டுகோள் இது. ப.261

116. சுப்ரீம் கமாண்டர் கோர்னிலாவ் என்ற தளபதியின் தலைமையின் கீழ் முதலாளிகளும், நிலச் சுவான்தார்களும் 1917 இல் ஆகஸ்ட் மாதத்தில் நடத்திய எதிர்ப் புரட்சிக் கலகத்தைக் குறிப்பிடுகிறார். பெட்ரோகிராடைக் கைப் பற்றுவது, போல்ஷ்விக் கட்சியை நசுக்குவது, சோவியத் துகளைக் கலைப்பது, ராணுவ சர்வாதிகாரத்தை அமைப் பது, எதேச்சாதிகாரத்தை மீண்டும் கொண்டு வருவ தற்குத் தயாரிப்புக்களைச் செய்வது ஆகியவை அவர்கள் நோக்கமாக இருந்தது.

போல்ஷ்விக் கட்சியின் தலைமையின் தொழிலாளர் களும், விவசாயிகளும் கோர்னிலாவின் கலகத்தை அடக்கி ஒடுக்கினார்கள். ப.267

117. நிலச்சுவான்தார் டபிள்யூ. காப், லுடன்டார்ப், ஸீட், லுட்விஸ் ஆகிய தளபதிகள் தலைமையில் ஜெர்மனியில் நடைபெற்ற முடியாட்சி வாதிகளின் திடீர் கலகத்தைக் குறிப்பிடுகிறார்; "காப் திடீர் கலகம்" என்று இதற்குப் பெயர். 1920இல் மார்ச் 13இல் காப்பிஸ்டுகளின் தலைமை யில் ராணுவப் பிரிவுகள் பெர்லினை நோக்கி முன்னேறிச் சென்றன; சமூக ஜனநாயக சர்க்கார் எதிர்ப்பே கொடுக்க வில்லை; அவர்கள் அந்த சர்க்கார் கலைக்கப்பட்டது என்று பிரகடனம் செய்து, ஒரு ராணுவ சர்வாதிகார ஆட்சியை அமைத்தார்கள். அதை எதிர்த்து, ஜெர்மனிய தொழி லாளர்கள், ஒரு பொது வேலை நிறுத்தம் செய்தார்கள்; மார்ச் மாதம் 17ஆம் தேதியன்று, தொழிலாள வர்க்கத் தின் நிர்ப்பந்தத்தின் கீழ், காப் சர்க்கார் வீழ்ச்சி யடைந்தது! சமூக ஜனநாயக வாதிகள் கைக்கு மீண்டும் அரசு அதிகாரம் போயிற்று. ப.267

118. ரஷ்ய இளம் கம்யூனிஸ்டு கழகத்தின் மூன்றாவது அகில ரஷ்ய காங்கிரஸ் 1920 இல் அக்டோபர் 2-10ஆம் தேதி களில் மாஸ்கோவில் நடை பெற்றது. அக்டோபர் மாதம் 2ஆம் தேதியன்று, அந்த காங்கிரசின் முதல் கூட்டத்தில் லெனின் உரை ஆற்றினார்.

லெனினின் ஆலோசனையின் அடிப்படையில், கீழ்க் கண்ட செயல் திட்டத்தைக் காங்கிரஸ் விசேஷமாக வலியுறுத்திற்று :-

"ரஷ்ய இளம் கம்யூனிஸ்டு கழகத்தின் முக்கியமான கடமை உழைக்கும் வாலிபர்களுக்குக் கம்யூனிஸ்டுக் கல்வியைப் போதிப்பதாகும்; பள்ளிக்கூடக் கல்வியைக் கற்பதோடு, நாட்டின் வாழ்வு, வேலை, போராட்டம், படைப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை இணைக்க வேண்டும். எல்லாத் துறைகளிலும் ரஷ்ய இளம் கம்யூனிஸ்ட் கழகத்தின் நடவடிக்கைகள் வாலிபர்களைக் கம்யூனிஸ்ட் முறையில் வளர்ப்பது, சோஷலிஸ்டு பொருளாதாரத்தைத் திறமையாகவும், சுறு சுறுப்பாகவும் அமைக்கிறவர்களைப் பயிற்றுவிப்பது, சோவியத் குடியரசைப் பேணிப் பாது காப்பவர்களாகவும், ஒரு புதிய சமுதாயத்தை நிர்மாணம் செய்கிறவர்களாகவும் பயிற்றுவிப்பது ஆகிய கடமைகளுக்குக் கீழ்ப்படிந்ததாக இருக்கவேண்டும். ப.270

119. "ஸுகாரெவ்கா"— மாஸ்கோவில் ஸுகாரெவ் ஸ்கயா சதுக்கத்தில் (இப்பொழுது கோல்கோ ஸ்நயா சதுக்கம்) ஒரு சந்தை, 1917-20இல் இது கள்ளச் சந்தைக்கு முக்கியமான இருப்பிடமாக இருந்தது. 1920இல் டிசம்பர் 13இல் மாஸ்கோ சோவியத்தின் தலைமைக் குழுவின் முடிவுப்படி, மூடப்பட்டது. ப.299

120. மாஸ்கோ மாநிலத்தில், 1920 நவம்பர் 14இல் வோலோக் உயெஸ்தில் கோலாஸ்க் காஷிநோ கிராமத்தில் மின்சார நிலையத்தைத் திறக்கும் விழாவில் விவசாயிகள் அழைத்ததால் லெனினும் என். கெ. குருப்ஸ்கயாவும் கலந்து கொண்டார்கள். ப.299

121. கிராமப்புறங்களில் கூட்டுறவு இயக்கம் பற்றிய லெனினின் கருத்துக்கள், 13 வது கட்சி காங்கிரசுக்கு "கூட்டுறவு இயக்கம்," "கிராமப்புறத்தில் வேலை செய்வது" ஆகிய தீர்மானங்களை வகுப்பதற்கு வழி காட்டும் கோட்பாடுகளாக அமைந்திருந்தன. "இந்தப் பிரச்சினையில் அடிப்படையான கட்சியின் கொள்கை கூட்டுறவு இயக்கம் பற்றி" என்ற லெனின் கட்டுரையில் வரையறுத்துக் கூறப்பட்டிருக்கிறது" என்று சுட்டிக் காட்டப்பட்டது. ஒரு விவசாய நாட்டில் சோஷலிஸத்தை அடைவதற்கு முக்கியமான சாதனம் என்ற நிலையில், விவசாயிகளைக் கூட்டுறவு சங்கங்களில் அமைப்பதற்கு லெனின் விரிவான திட்டத்தை அதில் வகுத்திருந்தார். நமது நாட்டில் இன்றைய நிலைமை லெனின் சுட்டிக் காட்டிய பாதை சரியானது என்பதைத் தெளிவாக

எடுத்துக் காட்டுகிறது. ஆகவே, சிறு உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதில் முதலில் முக்கியமான கவனத்தைக் கட்சி செலுத்த வேண்டும் என்று அறை கூவல் விடுத்தது. இது, சோஷலிஸத்தை நிர்மாணம் செய்வதில் மகத்தான பாத்திரத்தை வகிக்கும்". (சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு கட்சியின் காங்கிரஸ், மாநாடுகள் ஆகியவைகளின் தீர்மானங்கள் முடிவுகள்; மத்தியக்குழுவின் முடிவுகள் மாஸ்கோ பதிப்பு-1954 தொகுப்பு-II- பக்கம் 44-45) பார்க்கவும்). ப.303

122. புதிய பொருளாதாரக் கொள்கை: முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்திற்கு மாறிச்செல்லும் கால கட்டத்தில் பாட்டாளி மக்களின் அரசின் பொருளாதாரக் கொள்கை. 'யுத்தகால கம்யூனிஸத்திற்கு மாறானதாக புதிய பொருளாதாரக் கொள்கை என்று அழைக்கப்பட்டது. அன்னியநாட்டு ராணுவத் தலையீடு காலத்திலும் உள்நாட்டு யுத்தகாலத்திலும் (1918-1920) சோவியத் சர்க்கார் கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கையானது, தொழிலையும் வினியோகத்தையும் பெரும் அளவுக்கு மையப்படுத்துவது; சுதந்திரமாக சந்தையில் விற்பனை செய்வதைத் தடை செய்வதையும் உற்பத்தியில் உபரியைச் சர்க்காருக்கு நிர்ப்பந்தமாக விவசாயிகள் கொடுப்பதையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது.

புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ், சோஷலிஸ்டு தொழில்களுக்கும், சிறு அளவில் விவசாயிகள் பயிர் செய்வதற்கும் இடையே தொடர்பின் அடிப்படையான வடிவமாக அமைந்திருந்தது வியாபாரம். பொருள் வடிவத்தில் வரி கொடுக்கும் முறையை ரத்து செய்தவுடன், விவசாயிகள் தங்கள் விருப்பப்படி தங்களிடமுள்ள உபரிதானியத்தை விற்கமுடிந்தது. தங்கள் உபரி தானியத்தைச் சந்தையில் விற்று, தேவைப்பட்ட உற்பத்திப் பொருள்களை வாங்க முடிந்தது.

புதிய பொருளாதாரக் கொள்கை முதலாளித்துவ தொழிற்சாலைக்குச் சில சலுகைகளைக் கொடுத்தது; அதே சமயத்தில், பாட்டாளி மக்களின் அரசு அடிப்படையான பொருளாதார அந்தஸ்தைத் தன்னிடம் வைத்திருந்தது. புதிய பொருளாதாரக் கொள்கையானது, சோஷலிஸ்டு அம்சங்களுக்கும், முதலாளித்துவ அம்சங்களுக்கும்

இடையே போராட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டது! அதாவது, முதலாளித்துவ அம்சங்களைக் கட்டுப் படுத்துவது, வெளியேற்றுவது, இறுதியில் பூரணமாக நீக்குவது ஆகிய முறைகளை உத்தேசித்திருந்தது, இவ்வாறு செய்வதன் மூலமாகச், சிறு விவசாய, கைவினைஞர் பொருளாதாரத்தைச் சோஷலிஸ்டுப் பாதையில் திருத்தி அமைக்க உத்தேசித்திருந்தது. ப.303

123. "இடதுசாரி கம்யூனிஸ்டுகள்!' — புக்காரின் தலைமையில் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியில் (போல்ஷ்விக்) இருந்த ஒரு சிறு சந்தர்ப்பவாதக்குழு. பிரெஸ்ட் சமாதான உடன் படிக்கை விஷயமாக 1918இல் அது அமைக்கப்பட்டது. "புரட்சிகரமான யுத்தம் என்ற வேண்டுகோள்கள், இடது சாரி சொற்றொடர்கள் ஆகிய திரைக்குப் பின்னால், ஒரு குழு முரட்டுத் துணிச்சலான கொள்கையைப் பிரச்சாரம் செய்தது. இது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந் தால், ஏகாதிபத்திய ஜெர்மனியோடு, நிராயுதபாணியாக இருந்த சோவியத் குடியரசு ஒரு யுத்தத்தில் இழுத்துச் செல்லப்பட்டிருக்கும். அரசு நிலைத்திருப்பதற்கே பேராபத்து ஏற்பட்டிருக்கும். "இடதுசாரி கம்யூ னிஸ்டுகள்" ஒரு நபருடைய நிர்வாகத்தையும், தொழி லாளர்களின் கட்டுப்பாட்டையும், தொழிற்சாலைகளில் முதலாளித்துவ நிபுணர்களை நியமிப்பதையும் எதிர்த் தார்கள். லெனின் தலைமையில், "இடதுசாரி கம்யூனிஸ்டு களின்" கொள்கையைக் கட்சி முறியடித்தது. ப.309

124. என். ஸுக்கானேவ் என்ற பிரபல மென்ஷ்விச் எழுதிய "புரட்சியைப் பற்றிய குறிப்புகள்" என்ற புத்தகத்தின் மூன்றாவது, நான்காவது புத்தகங்களுக்குப் பதில் கொடுக்கும் முறையில் லெனின் எழுதினார். ப.314

125. "பிரான்ஸில் உள்நாட்டு யுத்தம்" என்ற புத்தகத்தில் பாரிஸ் கம்யூனை "மிகப் பெரிய அளவில் நெளிவு சுளிவான வடிவம்" என்று மார்க்ஸ் குறிப்பிட்டிருப்பதை இங்குக் குறிப்பிடுகிறார்; 1871இல் ஏப்பிரல் 12இல் குகெல்மானுக்கு எழுதிய கடிதத்தில் "பாரீஷியர்களின் நெளிவு சுளிவை" மார்க்ஸ் பாராட்டுகிறார் (மார்க்ஸ்) எங்கல்ஸ், தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள்—தொகுப்பு-1 மாஸ்கோ - 1962-பக்கம்-552-தொகுப்பு-II பக்கம்—463, பார்க்கவும்). ப.314

126. 1856இல் ஏப்பிரல் 16இல் எங்கல்ஸுக்கு மார்க்ஸ் எழுதியகடிதத்தைக் குறிப்பிடுகிறார். அதில் "ஜெர்மனியில் பாட்டாளி மக்களின் புரட்சியை, விவசாயிகளின் இரண்டாவது பதிப்பு ஆதரிப்பதைச் சார்ந்திருக்கிறது எல்லா விவகாரங்களும் அப்பொழுது, விஷயங்கள் அருமையாக இருக்கும்'' என்று கூறுகிறார். (மார்க்ஸ்எங்கல்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்ட கடிதப் போக்குவரத்துக்கள், மாஸ்கோ, 1655—பக்கம் 111-பார்க்கவும்). ப.315

127. குறிப்பு எண் 97-பார்க்கவும்- ப.319

128. குறிப்பு எண் 122-பார்க்கவும். ப.319

# பெயர்ப் பட்டியல்

## A

அட்லர் பிரீட்ரிக் *(1879-1960)*—ஆஸ்திரியா சமூக ஜனநாயகத் தலைவர்; ஆஸ்திரிய மார்க்ஸியத்தின் தத்துவாசிரியர். இவர் கொள்கை மார்க்ஸியச் சொற்ருெடர்களின் திரையில் புரட்சிகரமான மார்க்ஸியத்தையும், பாட்டாளி மக்களின் வர்க்கப் போராட்டத்தையும், நிராகரித்தது. ப.240

அலெக்சாண்டர் II (ராமனேவ்) *(1818-1881)* ரஷ்ய சக்கரவர்த்தி *(1855-1881)*. ப.72

அரெக்ரசயேவ், அலெக்சி ஆண்ட்ரேயே விச் *(1769-1834)* ஜாரின் படுமோசமான பிற்போக்கு ராஜ தந்திரி. அலெக்சாண்டர் I காலத்தில் யுத்த மந்திரியாக இருந்தார். போலீஸின் கொடுங்கோன்மை, மிருகத்தனமான ராணுவ ஆட்சி, உளவு வேலை செய்தல், வஞ்ச ஊழல், உணர்ச்சியற்ற அற்ப சம்பிரதாயங்கள் ஆகியவைகளின் நீண்ட காலத்தோடு இவர் பெயரும் இரண்டறக் கலந்திருந்தது. "அரெச்செயேவ் ஆட்சி" என்று அழைக்கப்பட்டது. ப.76

## B

பக்குனின், மைக்கேல் அலெக்சாண்ட்ரோவிச் *(1814-1876)* ரஷ்ய புரட்சிகரத் தலைவர்; இவர் அராஜக வாதத்தைப் பிரச்சாரம் செய்தார். ப.78

பெபல், அகஸ்ட் *(1840-1913)* ஜெர்மானிய சமூக ஜனநாயகக் கட்சி சர்வதேச தொழிலாளர் வர்க்க இயக்கம் ஆகியவற்றின் தலை சிறந்த தலைவர். ஜெர்மானிய தொழிலாளர் இயக்கத்தில் சீர்திருத்தவாதத்தையும், திருத்தல் வாதத்தையும் தீவிரமாக எதிர்த்தார். ப.131

பெலின்ஸ்கி, உஸ்ஸாரியான் கிரிகோரியேவிச் *(1811—1848)* ரஷ்ய புரட்சிகர ஜனநாயகவாதி; தலைசிறந்த இலக்கிய விமர்ச்சகரும், பிரசுரிப்பவருமாவார்! பொருள் முதல் வாதத் தத்துவ ஞானி. ப.116

பெர்ன்ஸ்டீன், எட்வேர்ட் (1850-1932)- ஜெர்மானிய சமூக ஜனநாயகக் கட்சியிலும், இரண்டாவது அகிலத்திலும் தீவிர சந்தர்ப்பவாதிகளின் தலைவர்; சீர்திருத்தவாதம், திருத்தல் வாதம் ஆகியவற்றின் சித்தாந்தவாதி. அவருடைய நூல் களில் புரட்சிகரமான மார்க்ஸீயத்தின் அடிப்படையான கொள்கைகளை எதிர்த்தார். அதாவது சோஷலிஸ்டு புரட்சி யின் தத்துவம், பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம், முதலாளித்துவத்திலிருந்து. சோஷலிஸத்திற்கு மாறிச் செல்வது, தவிர்க்க முடியாதது ஆகிய கொள்கைகளை எதிர்த்தார். ப.19

பைரன், ஏனர்ஸ்ட் ஜொஹான் (1690-1772) ரஷ்ய ராணி அன்னு ஐயோனேவ்னுவின் அன்புக்குப் பாத்திரமானவர், ரஷ்யாவில் ஒரு கொடுங்கோல் ஆட்சியை அமைத்தார். ரஷ்ய அரசு கருவிகளைப் பிரஷ்ய மயமாக்கினர். சர்க்கார் கஜானுவில் கை வைத்ததன் மூலயாகவும், லஞ்சம் வாங்கியதன் மூல மாகவும், உலகவாணிகத்தில் ஈடுபட்டதன் மூலமாகவும் அவர் தமது பதவியைத் தவறுகப் பயன்படுத்திக் கொண்டார். ப.76

பிஸ்மார்க், ஒட்டோ எட்வர்ட் லியோபால்ட் (1815—1898) பிரஷ்ய ராஜதந்திரியும்; அரசியல்வாதியுமாவார். ஜெர்மானிய சாம்ராஜ்யத்தின் முதல் முதலமைச்சர் (1871—90) பிரஷ்யா ஆதிக்கத்தின் கீழ் ஜெர்மனியைப் பலவந்தமாக ஒன்று படுத்தினர். சோஷலிஸ்டு எதிர்ப்பு சட்டத்தின் மூலவர் (1878—90) ப.120

பிராக்கே, வில்ஹெம் (1842-1880)—ஜெர்மானிய சமூக ஜனநாயக வாதி. ஜெர்மனியின் சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை அமைத்தவர்களில் ஒருவர்; அதன் தலைவர்களுள் ஒருவர். கட்சி இலக்கியங்களைப் 'பிரசுரிப்பதிலும்' வினியோகிப்பதிலும் முக்கியமான பாத்திரத்தை வகித்தார். ப.96

புக்காரின், நிக்கோலாய் இவானேவிச் (1888-1938) 1906இல் ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் சேர்ந்தார். மாஸ்கோவில் பல்வேறு மாவட்டங்களில் கட்சியின் பிரச்சார கராகப் பணியாற்றினர். அக்டோபர் புரட்சக்குப் பிறகு, கட்சியில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்தார். திரும்பத் திரும்ப கட்சியின் லெனினின் கொள்கையை எதிர்த்தார். இதற்காக 1937 இல் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார், ப.295

# C

செர்னெஸ்சோவ், பி. என். (பி—1883) சோஷலிஸ்டு புரட்சியாளர்; புள்ளி விவர நிபுணர். ப.237

செர்னேவ், உக்டோர் மிக்கைலாவிச் (1876-1952)—சோஷலிஸ்டு புரட்சிகரமான கட்சியின் ஒரு தலைவர். முதலாளித்துவ இடைக்கால சர்க்காரில் ஒரு விவசாய அமைச்சராக இருந்தார். 1917 இல் அக்டோபரில் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு, எதிர்ப்புரட்சியை அமைக்க உதவி செய்தார். 1920 இல் வெளிநாட்டிற்குக் குடியேறினர். வெளிநாட்டில் சோவியத்திற்கு எதிரான நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தினர். ப.106

செர்னிஷேவ்ஸ்கி நிக்கோலாய் காவ்ரிலோவிச் (1828-1889)—தலைசிறந்த ரஷ்ய புரட்சிகரமான ஜனநாயகவாதி, உட்டோபிய சோஷலிஸ்டு. எழுத்தாளர், இலக்கிய விமர்சகர், ரஷ்யாவில் 1850, 60ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற புரட்சிகரமான ஜனநாயக இயக்கத்தின் தலைவர், ரஷ்ய சமூக ஜனநாயக வாதிகளின் ஒரு முன்னேடி. ப.80

# D

டான், பியோடார் இவானேவிச் (1871-1947) — ஒரு மென்ஷ்விக் தலைவர். ப.127

டானியேல்ஸன், நிக்கோலாய் பிரான்ட்ஸெவிச் (1844-1918) — ரஷ்யப் பொருளாதார எழுத்தாளர். 1880-90-ஆம் ஆண்டுகளில் ரஷ்ய மிதவாத நரோட்னிஸத்தின் தத்துவாசிரியர். ப.30

டார்வின், சார்லஸ் ரோபர்ட் (1809-1882) மகத்தான ஆங்கில இயற்கை இயல் வல்லுனர். பரிணாமவாதத்தின் அடிப்படையில் விஞ்ஞான ரீதியான உயிர்நூலை அமைத்தவர். ப.16

டேவிட், எட்வேர்ட் (1863-1930)— ஜெர்மானிய சமூக ஜனநாயகவாதிகளின் வலதுசாரித் தலைவர், திருத்தல்வாதி; பொருளாதாரவாதி—தொழிலே அது. 1894 இல் கட்சியின் விவசாய செயல் திட்டத்தை வகுப்பதில் பங்கெடுத்தார். விவசாயப் பிரச்சினையில் மார்க்ஸியக் கருத்துக்களைத் திருத்த வேண்டும் என்று வாதாடினர். முதலாளித்துவத்தின் கீழ், சிறு விவசாயமுறை நிலையாக இருக்கும் என்பதை நிரூபிக்க முயன்ருர். 1903 இல் "சோஷலிஸமும், விவசாயமும்" என்ற புத்தகத்தைப் பிரசுரித்தார். இந்தப் புத்தகத்தை "விவசாயப்

பிரச்சினையில் முக்கியமான திருத்தல் வாதம்'' என்று லெனின் கண்டித்தார். ப.31

டெனிகின், ஆன்டன் இவானேவிச் *(1872-1947)* ஜாரின் தளபதி. உள்நாட்டு யுத்தம் நடைபெற்றபோது, ரஷ்யாவில் வடக்கில் எதிர்ப்புரட்சிப் படைகளுக்குத் தலைமை தாங்கினர். 1919 இல் கோடைக் காலத்தில், மாஸ்கோ மீது முன்னேறித் தாக்குதலைத் தொடுத்தவர்; ஆனல், 1920இல் துவக்கத்தில் செம்படையால் முறியடிக்கப்பட்டார். ப.289

டோப்ரோலியூபோவ், நிக்கோலாய் ஆலெக்சாண்ட்ரோவிச் *(1836-1861)* தலைசிறந்த ரஷ்ய புரட்சிகரமான ஜனநாயகவாதி. இலக்கிய விமர்சகர். பொருள் முதல்வாத தத்துவஞானி. செர்னிஷெவ்ஸ்கியின் நெருங்கிய நண்பர். ப.185

## E

எங்கல்ஸ், பிரெடரிக் *(1820—1895)*. ப.18

## F

ஃபியோ பிலக்டோவ், எ. ஒய். இடதுசாரி சோஷலிஸ்டு புரட்சிக் காரர். 1917 இல் நவம்பரில் நடைபெற்ற விசேஷ விவசாயி களின் பிரதிநிதிகளின் காங்கிரசுக்கு ஒரு பிரதிநிதி. ப.161

ஃபூயர்பாக் லுட்விக் ஆண்டிரயாஸ் *(1804-1872)* மார்க்ஸுக்கு முந்திய கால கட்டத்தில் தலைசிறந்த ஒரு ஜெர்மானிய பொருள்முதல் வாத தத்துவஞானி. ப.77

ஃபாக், பெர்டினன்ட் *(1851-1929)* பிரெஞ்சு தளபதி. முதல் உலக மகா யுத்தம் நடைபெற்றபோது, தலையாய ராணுவக் குழுவின் தலைவராகவும் (1917 மே மாதத்திலிருந்து) நேசப் படைகளின் தளபதியாகவும் (1918இல் ஏப்ரல் மாதத்தி லிருந்து) இருந்தார். 1918-20 இல் சோவியத் ரஷ்யாவுக்கு எதிராக தலையீடு யுத்தத்தை அமைத்தவர்களில் ஒருவர். ப.223

## G

ஜார்ஜ், ஹென்றி *(1839-1897)* அமெரிக்க முதலாளித்துவ பொருளாதார வாதியும், பிரசுரிப்பவருமாவார். முதலாளித் துவத்தின் கீழ்உள்ள எல்லா சமூக முரண்பாடுகளுக்கும் தீர்வு காணும் பொருட்டு, முதலாளித்துவ அரசு நிலத்தை தேச உடமையாக்க வேண்டும் என்று வாதாடினர். முதலாளித்துவ சீர்திருத்த வாதத்தை நோக்கி அமெரிக்க தொழிலாளர் இயக்கத்தை அழைத்துச் செல்ல முயன்றார். ப.93

ஜாக்கோபி, ஜொஹான் *(1805-1877)* ஜெர்மானிய பிரசு-கர்த்தா, அரசியல்வாதி. மருத்துவத் தொழில், பல விஷயங்களில் கருத்து வேற்றுமை இருப்பினும், பாட்டாளி மக்களின் இயக்கத்தில் சேர்ந்தார். ஒரு ஜனநாயகவாதி என்ற நிலையில் மார்க்ஸும், எங்கல்ஸும் அவருக்கு மதிப்புக் கொடுத்தார்கள். ப.222

# H

ஹெகல், ஜார்ஜ் வில்ஹெம் பிரீட்ரிச் *(1770-1831)* ஜெர்மானிய மூலதத்துவஞானி; எதார்த்தவாத எண்ணமுதல்வாதி; ஜெர்மானிய முதலாளித்துவத்தின் தத்துவஞானி; ஹெகல் எண்ண முதல்வாத தர்க்க இயலை விரிவுபடுத்தினர். இது, தர்க்க இயல் பொருள் முதல்வாதத்திற்கு தத்துவ ரீதியான ஊற்றுகப் பயன்பட்டது. ப.77

ஹெர்ட்ஸ், பிரீட்ரிச் ஒட்டோ *(பி—1878)* ஆஸ்திரிய சமூக ஜனநாயகவாதி, திருத்தல்வாதி. "சோஷலிசத்தின் கண்ணோட்டத்திலிருந்து விவசாயப் பிரச்சினைகளை" என்ற புத்தகத்தில் விவசாயப் பிரச்சினை பற்றிய மார்க்ஸியக் கொள்கையை எதிர்த்தார். ரஷ்ய மொழியில் இதை மொழிபெயர்த்து, மார்க்ஸிஸத்தை எதிர்ப்பதற்கு செர்னேவும், மற்ற முதலாளிகளும் இதைப் பயன்படுத்தினர்கள். ப.29

ஹெர்ஸன், அலெக்சாண்டர் இவானேவிச் *(1812-1870)*— ரஷ்ய புரட்சிகரமானவாதி, பொருள்முதல் வாத தத்துவஞானி; எழுத்தாளர், பிரசுரகர்த்தா. "ஹெர்ஸனின் நினைவாக" என்ற கட்டுரையில் லெனின் ரஷ்யாவில் விடுதலை இயக்கத்தில் ஹெர்ஸன் பாத்திரத்தை விவரிக்கிறார். ப.76

ஹிண்டன்பர்க், பால்வான் *(1847-1934)* ஜெர்மானிய அரசியல்வாதி; ஜெர்மானிய ராணுவத்தின் தளபதி ஜெர்மானிய ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் பிற்போக்கு, அதி தீவிர சுய நாட்டு வெறி பிடித்தவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தினர். ப.223

ஹோலியோக், ஜார்ஜ் ஜாகோப் *(1817-1906)* பிரிட்டனில் கூட்டுறவு இயக்கத்தின் ஒரு தலைவர், சீர்திருத்தவாதி. ப.118

# K

கோர்னெலிஸன், கிரிஸ்தியன்— டச்சு அராஜகவாதி. முதல் உலக மகா யுத்தத்தின் போது *(1914-18)* சமூக அதிதீவிர சுய நாட்டுப்பற்று வெறிக் கொள்கையைக் கடைப்பிடித்தார். ப.150

கே அலெக்சாண்டர் (பி. 1919) ரஷ்ய அராஜகவாதி. அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு, சோவியத் சர்க்காரை ஆதரித்தார். ப.150

கிரேவ் ஜீன் (1854-1939) பிரெஞ்சு சிறு முதலாளித்துவ சோஷலிஸ்டு. அராஜகவாதத்தின் சித்தாந்தவாதி முதலா" வது உலக மகா யுத்தத்தின்போது, சமூக அதி தீவிர சுய நாட்டுப்பற்று வெறிக் கொள்கையைக் கடைப்பிடித்தார். ப.150

காப், வுல்ப்காங் (1858-1922)—ஜெர்மானிய நிலப்பிரபு. 1920இல் மார்ச் மாதத்தில், ஜெர்மனியில் முடியாட்சி ராணுவத் திடீர் கலகம் தோற்றுப் போனவுடன் ஸ்வீடனுக்கு ஓடிப் போனுர். ப.267

கார்பின்ஸ்கி உ. எ. (வி. காலினின்) (1880-1965) சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு கட்சியில் தீவிரமாக செயல்பட்ட பழைய தலைவர்களில் ஒருவர். ஒரு கட்சி எழுத்தாளராகவும், பிரச்சாரகராகவும் பணியாற்றினுர். ப.61

காட்ஸ்கி, கார்ல் (1854-1938) ஜெர்மானிய சமூக ஜனநாயக கட்சி, இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் ஒரு தலைவர். ஒரு நிலைமை வாதத்தின் சித்தாந்தவாதி. இவ்வமைப்பு சந்தர்ப்ப வாதத்தின் மிகப் பயங்கரமான, ஆபத்தான ஒரு கிளை. ப.160

காவெலின், கான்ஸ்டன் டின்டிமித்ரேவிச் (1818—1885)—ரஷ்ய முதலாளித்துவ மிதவாத சரித்திர ஆசிரியர், ஒரு வழக்குரைஞர். 1861 இல் விவசாய சீர்திருத்தத்திற்கான தயாரிப்புக் காலத்திலும், அது நடைபெறும் தருணத்திலும் புரட்சிகரமான ஜனநாயக இயக்கத்தை எதிர்த்தார். ஜாரின் எதேச்சாதிகார பிற்போக்குக் கொள்கையை ஆதரித்தார். ப.81

கெரென்ஸ்கி, அலெக்சாண்டர் பியோடோரோவிச் (1881-1970)—சோஷலிஸ்டு புரட்சிக்காரர் 1917 இல் பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு, முதலாளித்துவ இடைக்கால சர்க்காரில் சேர்ந்தார். முதலில் சட்ட அமைச்சராகவும், பிறகு யுத்த அமைச்சராகவும், இறுதியில் முதலமைச்சராகவும், தளபதியாகவும் பதவிகளை வகித்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு, சோவியத் சர்க்காரை எதிர்த்துப் போராடினுர். 1918 இல் நாட்டை விட்டு ஓடினுர். ப.158

கோல்சாக், அலெக்சாண்டர் வாஸில்யேவிச் (1873-1920) ஜாரின் தளபதி. முடியாட்சிவாதி. அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு, ரஷ்யாவின் தனியாய தலைவர் என்று

பிரகடனம் செய்தார். ராணுவ, முதலாளித்துவ, நிலச் சுவான்தாரி சர்வாதிகார ஆட்சிக்குத் தலைமை தாங்கினார் சைபீரியா, தூரகிழக்கு, ஊரல்ஸ் ஆகிய இடங்களில் இந்த சர்வாதிகார ஆட்சியை அவர் அமைத்தார். 1920இல் தொடக்க காலத்தில் செம்படை அவர் துருப்புகளை முறியடித்தது. ப.289

கோர்னிலோவ், லாவர் ஜார்ஜியேவிச் (1870-1918)---ஜாரின் தளபதி; முடியாட்சிவாதி. 1917-18இல் ரஷ்யாவில் எதிர்ப்புரட்சிப் படையின் தளபதி. அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு, எதிர்ப்புரட்சித் தொண்டர் படைக்குத் தலைமை தாங்கினார். ப.127

காஸ்ட்ரோவ் (ஜோர்டானியா, நோய் நிக்கோலாயேவிச்)—(1870-1953)—சமூக ஜனநாயகவாதி. ஜார்ஜிய மென்ஷ்விக்குகளின் தலைவர். ப.69

குருபோட்கின், பியோதிர் அலெக்ஸேயேவிச் (1842-1921)—ரஷ்யாவில் புரட்சிகரமான இயக்கத்தின் ஒரு தலைவர். அராஜக வாதத்தின் தலையாய சித்தாந்தவாதி. முதலாவது உலக மகா யுத்தத்தின்போது (1914-18) சமூக அதி தீவிர சுய நாட்டுப் பற்று வெறிக் கொள்கையைக் கடைப்பிடித்தார். ப.150

கூசல்மான், லுட் விக் (1830-1902)—ஜெர்மானிய சமூக ஜனநாயக வாதி. மார்க்ஸின் ஒரு நண்பர். முதல் அகிலத்தில் ஓர் உறுப்பினர். ஜெர்மனியில் 1848-49 இல் நடைபெற்ற புரட்சியில் பங்கெடுத்தார். 1862 க்கும், 1874 க்கும் இடையே லண்டனில் வசித்து வந்த கார்ல் மார்க்ஸோடு கடிதத் தொடர்பு வைத்திருந்தார். ஜெர்மனியின் நிலைமையை மார்க்ஸுக்குத் தெரிவித்து வந்தார். ப.121

## L

லாரின். ஒய் (1882-1932)—ரஷ்ய சமூக ஜனநாயகவாதி மென்ஷ்விக் 1917-ல் ரஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியில் (போல்ஷ்விக்) சேர்ந்தார். ப.69

லாஸேல், பெர்டினண்ட் (1825—1864) ஜெர்மானிய சிறு முதலாளித்துவ சோஷலிஸ்டு, ஜெர்மானிய பொதுத் தொழிலாளர் சங்கத்தை அமைத்தவர். இது, தொழிலாளர் இயக்கத்தில் முக்கியமான பாத்திரத்தை வகித்தது. ஆயினும், தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட லாஸேல், சந்தர்ப்பவாதத்தை

நோக்கிச் சென்றார். மார்க்ஸும், எங்கல்ஸும், அவருடைய தத்துவரீதியான அரசியல் ரீதியான கருத்துக்களைக் கடுமையாக விமர்சனம் செய்தார்கள். ப.120

லெனின், (உல்யானோவ்) வி. இ. (1870—1924)

லென்ச்பால் ('873-1926)—ஜெர்மானிய சமூக ஜனநாயகவாதி முதலாவது உலக மகாயுத்தத்தின் போது (1914-18) சமூக அதிதீவிர சுயநாட்டுப் பற்று வெளிக்கொள்கையைக் கடைப்பிடித்தார். யுத்தத்திற்குப் பிறகு ரூர் முதலாளிகளின் பத்திரிக்கையான டூஷ் அலெக்மீன் ஜீடங் என்ற பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார். ப.125

லிப்னெட், வில்ஹெம் (1826-1900) ஜெர்மானிய, சர்வதேச தொழிலாளர் இயக்கத்தின் தலைசிறந்த தலைவர். ஜெர்மானிய சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர்களில், அதை அமைத்தவர்களில் ஒரு தலைவர். ப.120

லோங்கோஜீன், (1876-1938) பிரெஞ்சு சோஷலிஸ்டு கட்சி, இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் ஒரு தலைவர். ப.240

## M

மாக்டொனல்ட், ஜேம்ஸ்ராம்ஸே (1866-1937) பிரிட்டிஷ் அரசியல் வாதி, தொழிலாளர் கட்சியின் தலைவர்களில், அதை அமைத்தவர்களில் ஒருவர். கட்சியிலும், இரண்டாவது அகிலத்திலும் அதிதீவிர சந்தர்ப்பவாதக் கொள்கையைக் கடைப்பிடித்தார். வர்க்க ஒத்துழைப்பு, முதலாளித்துவம் படிப்படியாகச் சோஷலிஸத்தை நோக்கி வளர்ச்சியடையும் என்ற பிற்போக்குச் சித்தாந்தத்தைப் பிரச்சாரம் செய்தார். ப.240

மார்டோவ், எல். (செடர்பாம் யூலி ஒஸிபோவிச்) (1873–1923)— ஒரு மென்ஷ்விக் தலைவர். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு, சோவியத் சர்க்காரின் எதிரியானார். 1920 இல் ஜெர்மனிக்கு ஓடிப் போனார். ப,155

மார்க்ஸ், கார்ல் (1818-1883)

மிக்கேய்லாவ்ஸ்கி, நிக்கோலாய் கான்ஸ்டன்டினோவிச் (1842-1904)— ரஷ்ய சமூக இயல்வாதி; இலக்கிய விமர்சகர், பிரசுரகர்த்தா, மிதவாத நரோட்னியத்தின் தலையாய சித்தாந்தவாதி. 1892ஆம் ஆண்டுளுக்குப் பிறகு "ரூஸ்கோயி பொகாட்ஸ்வோ" பத்திரிகையின் ஆசிரியரானார் அந்தப் பத்திரிகையில் மார்க்ஸியத்தை கடுமையாகத் தாக்கி எழுதினார். ப.28

மில்யூகோவ், பேவல் நிக்கோலாயேவிச் *(1859-1943)—அரசியல் சட்டத்திற்குட்பட்ட ஜனநாயக வாதிகளின் மிதவாத முடியாட்சிக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். ரஷ்ய ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் முக்கியமான சித்தாந்தவாதி; சரித்திராசிரியர், பிரசுரகர்த்தா. ப.127*

மோஸ்ட், ஜொஹான் ஜோஸப் *(1846-1906)—ஜெர்மானிய சமூக ஜனநாயக வாதி. பின்னர் ஓர் அராஜக வாதியானார். ப.121*

# N

நெப்போலியன் I *(1769-1821)—பிரான்ஸின் சக்கிரவர்த்தி* (1804-*14-1815.) ப.319*

நெப்போலியன் III *(லூயிபோனபார்ட்) (1808-1873)* பிரான்ஸின் *சக்கரவர்த்தி (1852-70) முதலாவது* நெப்போலியனின் *மருமகன். ப.78*

# O

ஓவன், ராபர்ட் *(1771-1858)*-ஆங்கிலேய உட்டோபிய சோஷலிஸ்டு, *முதலாளித்துவ அமைப்பின் அடிப்படையான கோட்பாடுகளை கடுமையாக விமர்சனம் செய்தார்; ஆனால், முதலாளித்துவத்தின் கீழ்நிலையில் உள்ள முரண்பாடுகளின் உண்மையான அடிப்படைக் காரணங்களை வெளிப்படுத்தத் தவறி விட்டார். சமூகச் சமத்துவத்திற்கு முக்கியமான காரணம் அனைவருக்கும் கல்வி அறிவு இல்லாததே என்று கருதினார்; முதலாளித்துவ உற்பத்தி முறையே அதற்குக் காரணம் என்பதைக் காணத் தவறி விட்டார். அறிவொளியைப் பரப்புவதன் மூலமாகவும், சமூக சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டுவருவதன் மூலமாகவும் அதை நீக்கிவிடலாம் என்று கருதினார். சமூக சீர்திருத்தங்கள் சம்பந்தமாக அவர் ஒரு விரிவான செயல் திட்டத்தை வகுத்தார். ஆயினும், அவருடைய கருத்துக்களை அமுலுக்குக் கொண்டுவரத் தவறி விட்டார். ப.242*

# P

பெஷக்கோனேவ், ஏ. யு. *(1867-1933)—ரஷ்ய முதலாளித்துவ பிரமுகர், பிரசுரகர்த்தா. ப.109*

பிலிக்கானேவ், ஜார்ஜி வாலென்டினோவிச் *(1856-1918)—ரஷ்ய, சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலைசிறந்த தலைவர்*

ரஷ்யாவில் முதலில் மார்க்ஸியத்தைப் பிரச்சாரம் செய்தவர். ஆயினும், 1903இல் நடைபெற்ற ரஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குப் பிறகு சந்தர்ப்ப வாதிகளோடு சமரசமாகப் போகும் கொள்கையை அவர் பிரச்சாரம் செய்தார். பின்னர் மென்ஷ்விக்குகளோடு சேர்ந்தார். அக்டோபர் சோஷலிஸ்டு புரட்சியின்பால் அவர் எதிர்மறையான கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தார். ஆயினும் தீவிரமாக அவர் சோவியத் சர்க்காரை எதிர்க்க வில்லை. ப,20

போம்யோலோவஸ்கி, நிக்கோலாய் ஜெராஸிமோவிச் (1835-1863)—ரஷ்ய ஜனநாயக எழுத்தாளர். "வேத பாடசாலை வாழ்க்கையின் குறிப்புக்கள்" என்ற புத்தகத்தின் ஆசிரியர். ப.148

பிரியோபிராஷென்ஸ்கி ஒய். எ. (1886-1937)—1903இல் ரஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியில் சேர்ந்தார். 1917 இல் பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு, யூரல் பகுதியில் பணியாற்றி வந்தார். ப.295

புரிஷ்கேவிச், விளாடிமிர் மிட்ரோபானேவிச் (1870-1920)—பணக்கார நிலச்சுவான்தார்; முடியாட்சிவாதி; படுமோசமான பிற்போக்குவாதி; டூமாவில் யூதர்களுக்கு எதிராகப் பேசி வந்ததால், அவர் ரஷ்யாவில் பிரபலமானவர். ப.97

# R

ரகிட்னிகோவ், என். ஐ. (பி-1864)—நரோட்னிக் பின்னர், ஒரு சோஷலிஸ்டு புரட்சிக்காரர். ஒரு பத்திரிகை எழுத்தாளர். ப.95

ரெய்ட்டர்ன் (பி-1861)—ஜாரின் ராணுவத்தில் ஒரு தளபதி. வார்சாவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை நசுக்குவதில் பங்கெடுத்துக் கொள்ள விரும்பாததால். 1861 இல் தன்னைத் தானே சுட்டுக் கொண்டார். ப.85

ரோக்கிக்னி ரோபர்ட் டெ, (பி-1845)—பிரெஞ்சு முதலாளித்துவ பொருளாதார வாதி. விவசாய இன்ஷ்யூரன்ஸ், கூட்டுறவு பற்றிய புத்தகங்களை எழுதியிருக்கிறார். "விவசாயத்தில் சிண்டிகேட்டுகளும் அவைகளின் நடவடிக்கைகளும்" என்ற புத்தகத்தில் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கும்படி அவர் வாதாடினார். இதன் மூலமாக தொழிலாளர்களை முதலாளிகளோடு ஒன்று சேர்க்கலாம் என்று கருதினார். ப.54

ரோட்பெர்டஸ்-ஜாகெட்ஸோவ் ஜொஹான், கார்ல் *(1805-1875)—ஜெர்மானிய கொச்சையான பொருளாதாரவாதி. ஒரு அரசியல் பிரமுகர். ப.94*

ரோமனேவ்ஸ்—*ரஷ்ய ஜார்கள், சர்க்கரவர்த்திகள் ஆகியவர்களின் மரபு-இவர்கள் 1613ஆம் ஆண்டுக்கும் 1917ஆம் ஆண்டுக்கும் இடையே ஆட்சி புரிந்தார்கள். ப.83*

# S

ஷாப்பர், கார்ல் *(1812-1870)—ஜெர்மானிய, சர்வதேச தொழிலாளர் இயக்கத்தில் ஒரு பிரமுகர். கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்தியக் குழுவின் ஓர் உறுப்பினர். 1850இல் இந்தக் கழகம் பிளவுபட்ட போது, அதி தீவிர "இடதுசாரி" குழுவின் தலைவர்களில் ஒருவரானார். ப.119*

ஷுட்மான் பிலிப் *(1865-1939)—ஜெர்மானிய சமூக ஜனநாயகக் கட்சியின் அதி தீவிர சந்தர்ப்பவாத வலதுசாரிகளின் தலைவர். 1919இல் பிப்ரவரி-ஜூன் மாதங்களில் ஜெர்மானிய முதலாளித்துவ சர்க்காரின் தலைவராக இருந்தார். 1918-21இல் ஜெர்மனியில் தொழிலாள வர்க்க இயக்கத்தை மிருகத்தனமாக நசுக்கினார். ப.185*

ஷெர், வி. வி. *(1884-1940) ரஷ்ய சமூக ஜனநாயக வாதி. ஒரு மென்ஷ்விக். ப.237*

ஸெர்னோ-ஸோலோவியெவிச், அலெக்சாண்டர் அலெக்சாண்ட்ரோவிச் *(1838-1869)—1860ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற புரட்சிகரமான ஜனநாயக இயக்கத்தில் பிரமுகராக இருந்தார். "நமது வீட்டு விவகாரங்கள்" என்ற புத்தகத்தின் ஆசிரியர். மிதவாதத்தை நோக்கி ஹெர்ஸன் ஊசலாடியதை இந்தச் சிறு புத்தகம் கடுமையாக விமர்சனம் செய்தது. ப 81*

ஸோர்ஜ், பிரீட்ரிச் ஆல்பெர்ட் *(1828-1906)—ஜெர்மானிய சோஷலிஸ்டு சர்வதேச தொழிலாளர் வர்க்க இயக்கத்திலும், சோஷலிஸ்டு இயக்கத்திலும் பிரமுகர். கார்ல் மார்க்ஸ், பிடெரிக் எங்கல்ஸ் ஆகியவர்களின் நெருங்கிய நண்பர். ப 69*

ஸ்ட்ருவ், பியோதிர் பெர்ன்கார்டோவிச் *(1870-1944)—முதலாளித்துவ பொருளாதாரவாதி, பிரசுரகர்த்தா. 1890ஆம் ஆண்டுகளில் "சட்டபூர்வமான மார்க்ஸியத்தின்" பிரபல பிரதிநிதி. மார்க்ஸின் பொருளாதார, தத்துவக் உ. 24*

கொள்கைகளைப் பகிரங்கமாக "விமர்சனம்" செய்தார்' "திருத்த" வேண்டும் என்று வாதாடினார். முதலாளித்துவத்தின் நலனுக்கு உகந்த முறையில், மார்க்ஸியத்தையும் தொழிலாள வர்க்க இயக்கத்தையும் திருத்திமைக்க முயன்றார். பின்னர், காடெட் கட்சித் தலைவரானார். ப.124

ஸிக்கானோவ், என். (ஜிம்மா, நிக்கோலாய் நிக்கோலாயேவிச். (பி. 1882) — ரஷ்ய பொருளாதார வாதி. பிரசுரகர்த்தா) நரோட்னிக் பின்னர் மென்ஷ்விக்குகளோடு சேர்ந்தார். நரோட்னிஸத்தை, மார்க்ஸியத்தோடு இணைக்க முயன்றார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு, சோவியத் பொருளாதார நிறுவனங்களில் பணியாற்றினார். ப.314

ஸன்யாட்ஸன் (1866-1925)—சீனப் புரட்சிகரமான ஜனநாயக வாதிகளில் தலைசிறந்தவர். 1911-13-ல் நடைபெற்ற சீனப்புரட்சியின் தலைவர். 1911-12இல் சீனக் குடியரசின் இடைக்கால ஜனாதிபதி. சோவியத் ரஷ்யாவின் நண்பர். ப.87

5 DEC 1975 MADRAS

## T

டேலர் பிரீட்ரிக், வின்ஸ்லோ (1856-1915)—அமெரிக்க என்ஜினீயர். தொழிலாளர் ஸ்தாபனத்தின் முறையை அமைத்தவர். அதாவது, முடிந்தவரையில் வேலை நேரத்தை மிச்சப்படுத்தவும், கருவிகளையும், உற்பத்தி சாதனங்களையும் சிக்கன முறையில் உபயோகப்படுத்தவும் இந்த முறையால் முயன்றால், முதலாளித்துவத்தின் கீழ், உழைப்பாளி மக்களைச் சுரண்டுவதைத் தீவிரப்படுத்த உபயோகிக்கப்பட்டது. ப.181

டிஸெரெடெலி, இராக்லி ஜார்ஜியேவிச் (1882-1959) — ஒரு மென்ஷ்விக் தலைவர். 1917இல் முதலாளித்துவ இடைக்கால சர்க்காரில் உள்நாட்டு அமைச்சர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு, ஜார்ஜியாவில் எதிர்ப்புரட்சி மென்ஷ்விக் சர்க்காரில் தலைவர்களில் ஒருவராக இருந்தார். ஜார்ஜியாவில் சோவியத் ஆட்சி அமைக்கப்பட்டபோது (1921) எதிர்ப்புரட்சியாளராக, வெளிநாட்டுக்குப் போனார். ப,127

டுகான்-பாரனோவ்ஸ்கி, மைக்கேல் இவானோவிச் (1865-1919)— ரஷ்ய முதலாளித்துவ பொருளாதாரவாதி. 1890ஆம் ஆண்டுகளில் "சட்டபூர்வமான மார்க்ஸிஸ்டுகளின்" தலையாய பிரதிநிதி. பின்னர் காடெட் கட்சியில் சேர்ந்தார். ப.144

துர்கானேவ் இவான் ஸெர்கெயேவிச் *(1818-1883)* — ரஷ்ய மிதவாத எழுத்தாளர். ப.83

## V

விக்லாயேவ், பி. எ. *(1869-1928)* — மிதவாத நரோட்னிக் புள்ளி விவர நிபுணர். விவசாயத்துறை நிபுணர். ஜாரின் ரஷ்யாவில் விவசாயமுறை பற்றி பல புள்ளி விவரங்களைக் கொடுத்தார் விவசாயிகளிடையே வர்க்க வித்தியாசம் கிடையாது என்று எழுதினர். விவசாயிகளின் கம்யூனைப் பாராட்டினர். ப.106

வோரண்ட்ஸோவ், வாஸிலி பாவலோவிச் (வி. வி.) *(1847-1918)*— பொருளாதார வாதி, பிரசுரகர்த்தா. 1880-1890ஆம் ஆண்டுகளில் மிதவாத நரோட்னிஸத்தின் சித்தாந்தவாதி. பல புத்தகங்களை எழுதினர். அவைகளில், ரஷ்யாவில் எதிர் காலத்தில் முதலாளித்துவம் வளர்ச்சியடைவதற்கு வாய்ப்புக் கிடையாது என்று எழுதினர். சிறிய அளவில் உற்பத்தி முறையைப் பாராட்டினர். விவசாயிகளின் கம்யூனை லட்சியக் குறிக்கோளாக்கினர். பல நூல்களில் லெனின் இவருடைய கருத்துக்களைக் கடுமையாக விமர்சனம் செய்தார். ப.28

வில்லிச், ஆகஸ்ட் *(1810-1878)* பிரஷ்ய அதிகாரி. 1849இல் ஜெர்மனியில் புரட்சிகரமான இயக்கத்தில் பங்கெடுத்தார். 1850இல் கம்யூனிஸ்ட் கழகத்திலிருந்து விலகிச் சென்ற குழுவில் உள்ள முறட்டுத் துணிச்சல் வாத, அதிதீவிர "இடதுசாரி" தலைவர்களில் ஒருவர். ப.119

## Y

யுவான் ஷீ-கே *(1859-1916)* — சீனத்தளபதி; பிற்போக்கு சீன அரசியல் வாதி. 1911-13ஆம் வருட சீனப் புரட்சி முறியடிக்கப் பட்டபிறகு, சீனவின் ஜனதிபதியானர். ஒரு ராணுவ சர்வாதிகார ஆட்சியை அமைத்தார். ப.90

—:o:—